வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்

பதிப்பாசிரியர்
முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
முனைவர் ஜி. அழகர் இராமானுஜம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

வேதாத்திரியத்தில்
சமூகவியல் இறையியல் சிந்தனைகள்

பதிப்பாசிரியர்
முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
முனைவர் ஜி. அழகர் இராமானுஜம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாவது முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப்
பயிலக வளாகம், தரமணி, சென்னை – 600 113

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும்
உலக சமுதாய சேவா சங்க அறிஞர் குழுவும்
இணைந்து நடத்தும்

வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் கருத்தரங்கம்

நாள்: 26-11-2005, 27-11-2005

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	**Vētāttiriyattil Camukaviyal Iṟaiyiyal Cintaṉaikaḷ**
Editors	:	**Dr. S. Krishnamoorthy** Director International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus Tharamani, Chennai - 600 113 **Dr. G. Alagar Ramanujam** Secretary, Brain Trust Temple of Consciousness Aliyaru-642 101
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani Chennai - 600 113, ☎ 2254 2992
Language	:	Tamil & English
Edition	:	First
Year of Publication	:	2005
Publication No.	:	554
Paper Used	:	18.6 kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type Used	:	10 points
No. of Pages	:	viii + 438
No. of Copies	:	1000
Price	:	Rs.130/- (One hundred and thirty only)
Printing	:	United Bind Graphics 101-D, Royapettah High Road Chennai - 600 004
Subject	:	Social and Religious Philosophy of Vedathri Maharishi.

கட்டுரைக் கருத்துகட்குக் கட்டுரையாளரே பொறுப்பு

முனைவர் சா. கிருட்டினமூர்த்தி
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை-600 113

பதிப்புரை

உலக மக்களை நன்னெறிப்படுத்த அவ்வப்போது நல்லோர் பலர் தோன்றியுள்ளனர். அவ்வரிசையில் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் குறிப்பிடத்தக்கவராகத் திகழ்கிறார்.

எளியராய்ப் பிறந்து எளிய வாழ்க்கை வாழ்ந்து, வாழ்க்கையில் இன்ப துன்பங்களை அனுபவித்து, அவற்றிற்குக் காரணங்கள் எவை என்று உணர்ந்த மகரிஷி அவர்கள் கற்றோராலும், மற்றோராலும் பெரிதும் போற்றப்படும் வகையில் வாழும் ஞானியாகத் திகழ்கிறார். மனித வாழ்வில் செம்மையையும், நேர்மையையும், ஒழுங்கையும் கடைப்பிடித்தால் அவையே ஒரு மனிதனை உயர்நிலைக்குக் கொண்டு செல்லும் என்ற உண்மைத் தத்துவத்தை உணர்ந்து அதனை உலகிற்கு எடுத்துக் கூறிவருகிறார்.

தனி மனித வாழ்வு செம்மையானால் வீடு சிறக்கும்; வீடு சிறந்தால் நாடு சிறக்கும்; நாடு சிறந்தால் உலகம் சிறக்கும்.; உலகில் அமைதி பிறக்கும் என்ற உயரிய நோக்கத்தின் அடிப்படையில் தம்முடைய கருத்துகளை மக்களுக்கு எடுத்துக் கூறிவருபவர் மகரிஷி அவர்கள். உரைநடையிலும், கவிதையிலுமாக அறுபதிற்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். 20 , 21 ஆம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாற்றில் இவர்தம் படைப்புகள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறும் என்பதில் ஐயமில்லை. எளிய தத்துவம், இனிய கவிதைப் புனைவு, சீரிய கருத்தோட்டம், எளிமையாக விளங்க வைக்கும் பாங்கு, புரியாத தத்துவத்தையும் புரியவைக்கும் போக்கு இவை அனைத்தும் வேதாத்திரி மகரிஷி அவர்களின் படைப்புகளில் காணப்படும் குறிப்பிடத்தக்க கூறுகளாகும்.

இத்தகு பெருமைக்குரிய ஞானியைப் பற்றிப் பல பல்கலைக்கழகங்களும், ஆய்வு நிறுவனங்களும், கல்லூரிகளும் கருத்தரங்குகளையும், மாநாடுகளையும் நடத்தி இவர்தம் சிந்தனைகளை ஆய்வுநோக்கில் எடுத்துக்கூறி வருகின்றன. இவ்வரிசையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், உலக சமுதாய சேவா சங்க அறிஞர் குழுவும் இணைந்து **'வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்'** என்ற பொருண்மையில் ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்த ஏற்பாடு செய்தன. இக்கருத்தரங்கிற்கு மலேசியா, சிங்கப்பூர் போன்ற அயல்நாடுகளில் இருந்தும், தமிழகத்தில் இருந்தும் 34 பேராளர்கள் தத்துவ ஞானி வேதாத்திரி மகரிஷியின் கருத்துகளை, சிந்தனைகளை வெளிப்படுத்தும் வகையில் கட்டுரைகளை வழங்கியுள்ளனர்.

இக்கட்டுரைகள் **'வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்'** என்ற தலைப்பில் நூலாக்கம் செய்யப்பட்டு இந்நிறுவனத்தால் வெளியிடப் பெறுகிறது. இந்நூல் வேதாத்திரி மகரிஷி அன்பர்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்துத் தமிழ் ஆர்வலர்களுக்கும், இலக்கிய வரலாற்றுச் சிந்தனையாளர் களுக்கும், பல்துறை அறிஞர்களுக்கும் பெரிதும் பயனுடையதாக அமையும் என்பதில் ஐயமில்லை. இக்கருத்தரங்கை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடத்த இசைவளித்த **நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம் அவர்களுக்கும்,** உலக சமுதாய சேவா சங்க அறிஞர் குழுவிற்கும், அதன் பொறுப்பாளர் களுக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கருத்தரங்கை நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய சென்னை உலக சமுதாய சேவா சங்க அறிஞர் குழுத் தலைவர் திருமிகு எஸ்கேஎம். மயிலானந்தன் அவர்களுக்கும் அதன் அறிஞர் குழுவின் செயலாளர் முனைவர் ஜி. அழகர் இராமானுஜம் அவர்களுக்கும், உவக சமுதாய சேவா சங்கச் செயலாளர் திரு அருளானந்தன் அவர்களுக்கும் நிறுவனத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இக்கருத்தரங்க நூல் சிறந்த முறையில் வெளிவரத் துணைநின்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இலக்கியம் மற்றும் சுவடிப் புல இணைப்பேராசிரியர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கு என் நன்றிகள் உரியன. இந்நூலுக்கு மெய்ப்புத்திருத்தம் செய்து உதவிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் திட்டப் பணியாளர்கள் முனைவர் ஆ. தசரதன், செல்வி. பி ஜானகி, திருமதி ஜெ. சரசுவதி, செல்வி அ. சரசுவதி, முனைவர் பட்ட ஆய்வாளர்கள் செல்வி க.ஜெயந்தி, செல்வி. ரா. ராஜேஸ்வரி ஆகியோர்க்கு என் நன்றியும் பாராட்டுகளும்.

இந் நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து வருகின்ற **நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திருமிகு சி.வி. சண்முகம்** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத் துறைச் **செயலாளர் முனைவர் பு.ஏ. இராமையா, இ.ஆ.ப.,** அவர்களுக்கும், சிறப்புச் **செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.,** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

ஒளி அச்சுக்கோப்பு செய்த திரு ஸ். கோபிநாத், திருமதி என். இலட்சுமி, திருமதி இரா. வெண்ணிலா, திருமதி பி.கௌசல்யா ஆகியோருக்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை
22.11.05

இயக்குநர்

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

வாழ்த்துரை

சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், உலக சமுதாய சேவா சங்கத்தின் சிந்தனையாளர் (Brain Trust) கழகமும் இணைந்து **வேதாத்திரியத்தில் சமூகவியலும் இறையியலும்** எனும் பொருள் பற்றி ஒரு கருத்தரங்கம் நடத்தவிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். கருத்தரங்கம் சிறப்பாக அமைய எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

உலகில் உயிரினங்கள் தோன்றிப் பரிணாமத்தில் பல இனங்களாக வளர்ச்சி பெற்று முடிவாக அனைத்தியக்க ஆற்றல் களமாக வந்துள்ளதே மனித உருவம். பிரபஞ்ச ரகசியங்கள் அனைத்தும் மனிதனுக்குள் அடங்கி உள்ளன. மனிதன் அறிவை நோக்கி ஆராய்ந்தால் செயல்திறன் அடங்கியுள்ள ஒரு பெருநிதியே மனிதன்.

ஆகையால் மனிதகுலம் தோன்றிச் சிந்தனையாற்றல் வளர்ந்த காலம் முதற்கொண்டு தன்னைப் பற்றி அறிய வேண்டும் என்ற விருப்பம் எழுந்து, அதன் பலனாகப் பல ஆராய்ச்சியாலும் கற்பனையாலும் கொண்ட கருத்துகள் அனைத்தும் பிரித்தெடுக்க முடியாதபடி மனிதனுக்குள் ஒன்றுபட்டு இருக்கின்றன. வாழ்வின் வளங்கள் எவ்வளவு உயர்ந்து இருந்தபோதிலும் அவற்றுக் கெல்லாம் காரணமாகிய தன்னைப் பற்றியும் அறிய வேண்டும் என்ற எண்ணம் முடிவு பெறாமல் இருக்கிறது. இது ஒரு குறை அல்ல. வளர்ச்சி நிலையால் அடைந்துள்ள ஒரு நிலைமை. இதனால் ஏற்பட்ட அறிவின் தேக்கத்தினால் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் இருக்கின்ற தெளிவின்மையும், கற்பனையும் பழக்கத்தால் வந்த ஆற்றல்களும் ஒவ்வொரு மனிதனையும் தனித்தனியாகப் பிரித்து வைத்துவிட்டன.

ஆங்கிலத்தில் கிராவிட்டி (Gravity) என்ற வார்த்தையினால் வழங்கப்படுகிறது தெய்வநிலை. எது, எவ்வாறு உள்ளது, அதிலிருந்து பிரபஞ்சம் எப்படித் தோன்றியது, இயங்கிக் கொண்டிருக்கிறது, விளைவுகள் என்னென்ன?, என்றெல்லாம் அறியக்கூடிய ஆர்வம் ஒவ்வொருவரிடத்திலும் இருக்கிறது.

எண்ணத்திலோ வாழ்க்கைத் துறைகள் அனுபவத்திலோ ஒரு தேவை உணர்வு வந்தால் அது நிறைவு பெறும் வரையில் மனினுக்கு அமைதி இல்லை. இந்த அமைதி குலைந்த நிலையில் தேடும்போது அறிவின் நிலையில் பலவாறாக உள்ள மனிதர்கள் ஒவ்வொருவரும் அவர்கள் அனுபவங்களுக்கு ஏற்ப அவரவர் முடிவைச் சொல்வார்கள். இதையெல்லாம் கேட்டுக்கேட்டு அவற்றை அனுபவத்திற்குக் கொண்டு வரமுடியாத நிலையிலும், தேவையற்றது என்று தள்ளிவிட முடியாத நிலையிலும் மனித இன மனம் விஞ்ஞான உண்மைகளை அறியும் காலத்தில் இருந்த போதிலும் மனித இன வாழ்வில் குறைகளே தோன்றுகின்றன. இந்த நிலைமையை மாற்றி உண்மை விளக்கத்தை உலகில் உள்ள வயது வந்தோர் அனைவரும் அறிந்துகொள்வதும, அதனைச் செயல்முறையில் கொண்டு வந்து வாழ்க்கைப் பண்பாடாக்கிக் கொள்வதும், இக்காலத்தில் மனித இனத்திற்கு அவசியமாகிவிட்டது.

இறைநிலையே பிரபஞ்சமாகவும், அதிலுள்ள சடப் பொருள், உயிர்ப்பொருள்கள் அனைத்துமாகத் தன்மாற்றம் அடைந்திருப்பதனால் அனைவருக்குமே இந்த உண்மையை அறியா முன்னம் இருட்டில் வழிப்பயணம் செய்வது போலத் தடுமாற்றமும், தடமாற்றமும் ஏற்படுகின்றன. இந்த மயக்கத்தில் மனிதனைப் பற்றிய உண்மைகளை மனிதன் அறியாமையினால் மனிதனே மனிதனுக்குப் பகைவனாகி வாழ்வில் துன்பங்களை அதிகரித்துக் கொள்கிறான். இந்த நிலைமையை மாற்றியமைத்து மனிதப் பண்பாட்டின் உயர்வில் மனிதன் வாழ வேண்டும்; அதற்கு ஏற்றவற்றைத் தொண்டு அறிஞர்கள்தான் வகுத்து அமலுக்குக் கொண்டு வரவேண்டும்.

எங்கேயோ ஒருவருக்கு உண்மை விளக்கம் வந்தாலும் முழுமையாக மனிதகுலத்திற்குப் பரவாத முன்னம் அது தக்க பயன் அளிக்காது. முன்னோர்களுடைய அறிவு அவ்வளவும் இன்றும் நூல்கள் வடிவில் வேதங்களாக, சாத்திரங்களாக, புராணங்களாக, கலைகளாகப் பெருகி அமலுக்கு வந்துள்ளன; எனினும் நேரிடையாகப் பயிற்சி மூலம் விளக்கம் பெற்று முழுமையான பயன் அடைய இதுவரையில் எந்த முறையும் உருவாகவில்லை. இப்பொழுது இங்கு நாம் கூடியிருக்கிறோம். இன்றே, இப்பொழுதே இந்தக் குறைகள் அனைத்தையும் போக்கி நிறைவு காண அவசியமான தொண்டிற்கு வித்திடுவோம். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பிரபஞ்ச உண்மைகளை உணர்ந்து நல்வாழ்வு பெறத் தகுதியாகத் தன்னை அமைத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. இந்த உரிமையை நிறைவு செய்யக் கடமையும் உண்டு. எனவே

நாம் மனிதகுல அறிவின் பெருமையை உணர்ந்துவிட்டோம். அதன் மலர்ச்சியின் மூலம் உலகெங்கும் அதன் மணம் பரவி அனைத்து மக்களும் பயன்பெற வேண்டும். இதற்கென ஒரு இயக்க மையம் நிறுவனமாக அமைய வேண்டும். நாம் முன்னமே இத்தகைய தொண்டு இயக்கத்திற்குச் **சிந்தனையாளர் கழகம் (Brain Trust)** என்ற ஒரு நிறுவனத்தை அமைத்துத் தொண்டு செய்து வருகிறோம். இந்த அமைப்பின் மூலம் உலக மக்களுக்கு வழிகாட்ட ஒரு விளக்கை ஏற்றிடுவோம். அதிலிருந்து பல்லாயிரம் விளக்குகளாகத் தொடர்ந்து பரவி மனித குலத்திற்குத் தேவையான பயன் கிடைக்கட்டும்.

நாம் உலகுக்கு விளக்க வேண்டியன:

1. இறைநிலை விளக்கம்
2. இறைத்துகள்
3. சுழல் விரைவு – காந்த அலை
4. விண்

விண் கூட்டங்களினால் அமையும் பிரபஞ்சத் தோற்றத்தையும், சடப் பொருள், உயிர்ப்பொருள் இவற்றின் பரிணாமத்தையும் தெளிவாக விளக்க வேண்டும்.

இந்த உண்மைகள் அனைத்தும் புலன் உணர்வுகளுக்கு எட்டாததனால் மனித மனத்தால் தெளிவாக உணரமுடியவில்லை. அகத்தவத்தின் மூலம் நமது மன அலைச்சுழல் விரைவைச் சிறுகச் சிறுகக் குறைத்துக்கொண்டே வந்து டெல்டா அலை என்று சொல்லக் கூடிய நுண்ணலை இயக்கத்திற்கு நம் மனத்தை கொண்டு வந்து விட்டால், மனிதனாகிய நாமே இறைநிலைக்கு வந்து, அந்த நுண்மாண் நுழைபுலன் அறிவு நிலைக்கு நமது மன ஆற்றலைக் கொண்டு வந்து இறைநிலையே பிரபஞ்சமாகவும், அனைத்துப் பொருட்களாகவும், நாமாகவும் உள்ள உண்மையை அறிந்து அந்த இறைநிலையிலேயே அடக்கம் பெற்றுள்ள அறிவுத் திறனால் நாமும் உணர்வோம். உலகுக்கு அவ்வுண்மையை உணர்த்தி நிறைவு பெறுவோம். உள்ளதை உணரவும், உணர்ந்ததை உலகுக்கு உணர்த்தவும் இக்கருத்தரங்கம் வழிவகுக்குமாக.

வாழ்க வையகம்! வாழ்க வளமுடன்!

உலகநலத் தொண்டன்
வேதாத்திரி

அருள்நிதி எஸ்.கே.எம். மயிலானந்தன்
தலைவர்
உலக சமுதாய சேவா சங்கம்
சென்னை

தொடக்கவுரை

மனிதவள மேம்பாட்டிற்கு வேதாத்திரியம்

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்துவரும் மனிதகுல வரலாற்றில் செழுமையான, முழுமையான அமைதி என்பது வெறும் கானல் நீராகவே உள்ளது.

இயற்கையில் பூமி உட்பட பிரபஞ்சம் அனைத்தும் ஒழுங்கமைப்புடனும், அமைதியுடனும் தான் இயங்கி வருகின்றன. அமைதியும், அமைதியின்மையும் மனிதனால் உருவாக்கப்படுகின்றன.

இயற்கையின் ஒழுங்கமைப்பை அதன் வளங்களை, அதன் அழகை அழிப்பதும், சீர்குலைப்பதும், மனிதனின் வளமற்ற மனம்தான். தன் சுயநலத்திற்காக, சுகத்திற்காக, இயற்கையை, உயிரினங்களை, மனிதர்களைச் சீர்குலையச் செய்வதும், துன்புறுத்தவும், அழிப்பதுமான மனித மனமே இன்றைய அமைதியின்மைக்கு முக்கியக் காரணமாகக் கருதப்படுகிறது.

அமைதியை உருவாக்க வேண்டுமென்றால், மனித மனங்களைத் தூய்மைப்படுத்துவதும், நெறிப்படுத்துவதும், பண்படுத்துவதும், வளப்படுத்துவதும், ஒருமுகப்படுத்துவதும்தான் முக்கியப் பணியாக இருக்க வேண்டுமென்று அருட்தந்தை அவர்கள் கூறுகிறார்கள்.

தனிமனித அமைதி, குடும்ப அமைதி, உலக அமைதி என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, அருட்தந்தை அவர்கள் 1958-ஆம் ஆண்டு உலக சமுதாய சேவா சங்கத்தைத் தோற்றுவித்து, இன்றும் தனது 95ஆவது வயதிலும் அதற்காகவே அருட்தொண்டாற்றி வருகிறார்கள்.

ஒவ்வொரு மனிதனும் நாடுவது அமைதியைத்தான்; உலகம் முழுவதும் இறுதியாக நாடுவதும் அமைதியைத்தான். காரணம்! அமைதியில்தான், ஆனந்தம் இருக்கிறது. அன்பு மலர்கிறது.

அன்பிற்காகவும் ஆனந்தத்திற்காகவும் தான், ஒவ்வொரு ஜீவனும் ஏங்கிக் கொண்டிருக்கிறது. பல காரியங்களைச் செய்வதும், பொருளை ஈட்டுவதும் இதை அடையத்தானே.

மக்கள் அமைதியைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள். உலகம் அமைதி பெற வேண்டுமென்று மாநாடுகள் நடத்தப்படுகின்றன. தலைவர்கள் வெண் புறாக்களைப் பறக்க விடுகிறார்கள். இருந்தாலும், அமைதி ஏற்படவில்லை. பல நாடுகளில், வன்முறையும், தீவிரவாதமும், போர்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன. பெரும்பாலும் மக்கள் பய உணர்வோடுதான் வாழ வேண்டியிருக்கிறது.

ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் அதிகமான போர்கள், தீவிரவாதம் மதத்தின் பெயரிலேதான் நடந்திருக்கின்றன. தீவிரவாதம்கூட இறைவனுக்காக நடத்தப்படுகிறது என்று வெளிப்படையாகவே சொல்லப்படுகிறது. இதற்கெல்லாம் முக்கியக் காரணம் மக்களிடையே இறைவனைப் பற்றிய சரியான ஞானம் இல்லாததுதான்.

மதத்தை நிறுவிய மகான்கள், மனிதகுலம் அன்போடும் அமைதியோடும், ஒருவருக்கொருவர் ஒத்தும் உதவியும் வாழ வேண்டுமென்றுதான் போதித்தார்கள். இன்று பெரும்பாலும் மதத்தைச் சுயநலவாதிகள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள்.

எது எப்படியிருந்தாலும், கடவுளின் பெயரால், மக்களைப் பிரிப்பதும், வெறுப்பதும், சண்டையிடுவதும் கூடாது என்ற கொள்கையை இயன்றளவு மக்களிடையே பரப்ப வேண்டும். இதற்கு, முதலில் இறைவனைப் பற்றிய ஞானம் மக்களிடத்திலே குறிப்பாக, தலைவர்களிடத்திலே ஏற்பட வேண்டும்.

உலகிலுள்ள பொறுப்புடைய தலைவரெல்லாம்
உயிரறிவை உள்ளுணர்வாய்ப் பெறுதல் வேண்டும்

என்று அருட்தந்தை அவர்கள் உலக நல வேட்பாகக் கூறியுள்ளார்.

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் இவை நான்கும் இணைந்த பேராதாரப் பெருவெளியே தெய்வம் என்ற பேருண்மையை மக்களிடையே பரப்ப வேண்டும். வெளியாகிய ஒரே பரம்பொருள்தான்; பலவாகக் காட்சியளிக்கிறது; அனைத்திலும்

ஊடுருவி இருக்கிறது; அனைத்தையும் இயக்குகிறது; அனைத்துக் காரியங்களுக்கும் ஆதாரமாக இருக்கிறது.

நாம் இறைவனுடைய அங்கமாக இருக்கிறோம். அனைத்துத் தோற்றங்களிலும் இறைவனே அறிவாகவும் ஆற்றலாகவும் இருக்கிறான்.

வல்லாய் உடலில் இயக்கமவன்
வாழ்வில் உயிரில் அறிவுமவன்

என்பார் மகரிஷி. நமது உடல்களும், மனங்களும் மாறுபட்டிருந்தாலும் இறைவனால், ஆத்மாவால் அனைவரும் ஒன்றுபட்டு இருக்கிறோம் என்ற தெய்வீக உணர்வை முதலில் தலைவர்கள் உணர வேண்டும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் ஆழ்ந்த அமைதியை அடைவதுதான் முக்கியக் குறிக்கோளாக இருக்க வேண்டும்; வாழ்வின் பயனும் இதுவே என்று அருட்தந்தை அவர்களும், பல ஞானிகளும் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

நம்முள்ளே மையம் கொண்டிருக்கிற நம்மை இயக்குகிற அந்த இறைவனை உணர்ந்தால் மட்டுமே நமக்கு ஆழ்ந்த அமைதி கிடைக்கும் என்பது ஞானிகளின் வாக்கு. அந்த இறைவனை அடைவதற்கு, உள்நோக்கிய பயணத்தை நாம் தொடர வேண்டும்.

நம்முள்ளே இருக்கின்ற இறைவனை உணரப் பல தடைகள் இருக்கின்றன. மனத்தின் அலைபாயும் தன்மையும் அழுக்குகளும்தான் அத்தடைகள். இத்தடைகள் நம்முடைய முன்வினை காரணமாக இன்று நமக்கு ஏற்படுகின்றன. இத்தடைகளைப் பொறுமையோடு, தன்னம்பிக்கையோடு, இறையருளின் துணைகொண்டு, விடா முயற்சி செய்து ஒவ்வொன்றாக நாம் நீக்க முடியும். இதுவே, ஆன்மீகச் சாதனை என்று சொல்லப்படுகிறது.

மனத்தைத் தூய்மைப்படுத்துவதும், நெறிப்படுத்துவதும், உறுதிப்படுத்துவதும், பண்படுத்துவதுமே நம்முடைய சாதனையின் முக்கியப் பங்காக இருக்க வேண்டுமென்று அருட்தந்தை அவர்கள் கூறியுள்ளார். அப்படிப்பட்ட சாதனை மார்க்கமாகத்தான் மனவளக்கலையை உலகிற்குக் கொடுத்துள்ளார்கள்.

உடல் நலத்தோடு இருக்க எளிய உடற்பயிற்சி முறைகளையும், அலைபாய்ந்துகொண்டிருக்கிற மனத்தை அமைதிப்படுத்தி ஒருநிலைப்படுத்த அகத்தவமும், மனத்தைத் தூய்மைப்படுத்த அகத்தாய்வுப் பயிற்சிகளையும், கர்மயோக நெறிப்படி வாழ்ந்து, வாழ்க்கை அறவாழ்க்கையாக ஒழுக்கமும், கடமை உணர்வும், ஈகைப் பண்புகளும் நிறைந்ததாக அமைவதற்கான பயிற்சிகளையும் கொண்டதுதான் மனவளக்கலை. இப்பயிற்சிகள் அனைத்தும் மனித வளத்தை மேம்பாடடையச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

மனம், போதிய தூய்மையையும், நுட்பத்தையும், புண்புகளையும் அடையும்போதுதான், மனிதன் இறையுணர்வுப் பெற்று, முழு நிறைவோடு, அமைதியாக, அன்போடு, ஆனந்தமாக வாழ இயலும். இதற்கான பயிற்சிகளைக் கொடுத்து, இறைஞானத்தை விஞ்ஞான விளக்கங்களோடு, காந்த தத்துவத்தின் மூலமாக மகரிஷி அவர்கள் விஞ்ஞானிகளும் ஏற்றுக்கொள்கின்ற வகையிலே வடிவமைத்துக் கொடுத்திருக் கிறார்கள். தனது ஆழ்ந்த சிந்தனைகளில் விளைந்த கருத்துகளைத் தொகுத்து வேதாத்திரியம் என்ற 14 அம்சக் கோட்பாடுகளையும் மனிதகுலத்திற்குக் கொடுத்திருக்கிறார்கள்.

1. போரில்லா நல்லுலகம்
2. பொருள்துறையில் சமநீதி
3. நேர்மையான நீதிமுறை
4. நிலவுலகுக்கோர் ஆட்சி
5. சீர்செய்த பண்பாடு
6. சிந்தனையோர் வழிவாழ்வு
7. சிறப்புணர்ந்த பெண்மதிப்பு
8. தெய்வநீதிவழி வாழ்தல்
9. தேர்த்திருவிழா தவிர்த்தல்
10. சிறுவர்கட்கே விளையாட்டு
11. செயல்விளைவு உணர்கல்வி
12. சீர்காந்தநிலை விளக்கம்
13. பார்முழுவதும் உணவு நீர் பொதுவாக்கல்
14. பல மதங்கள் பல கடவுள் பழக்கம் ஒழித்துண்மை ஒன்றைத் தேர்ந்திடுதல்

உலக மக்களை ஒற்றுமைப்படுத்தி மனித வளத்தைப் பெருக்குகிற இத்தகைய வேதாத்திரியக் கருத்துகளை,

பள்ளிகளிலே, கல்லூரிகளிலே, பொது மக்களிடத்திலே, தலைவர்களிடத்திலே பரப்புவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு உலக சமுதாய சேவா சங்கம் ஆங்காங்கே இணைப்புப் பெற்ற மனவளக்கலை மன்றங்கள் மூலமாகத் தொண்டாற்றி வருகிறது.

மகரிஷியின் கருத்துகள் உலகம் முழுவதும் பரவ வேண்டும் என்ற நோக்கத்தில் இன்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், உலகச் சமுதாய சேவா சங்கத்தின் அறிஞர் குழுவும் இணைந்து, **வேதாத்திரியத்தில் சமூகவியல் – இறையியல் சிந்தனைகள்** என்ற தலைப்பில் இக்கருத்தரங்கை நடத்துவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். இதில் பன்னாட்டு அறிஞர் பெருமக்களும், தென்னிந்திய கல்லூரி, பல்கலைக்கழகங்களைச் சார்ந்த தமிழ் அறிஞர் பெருமக்களும் கலந்துகொள்கிறார்கள்.

அருட்தந்தை அவர்கள், 2000க்கும் அதிகமான கவிதைகளைப் பல்வேறு தலைப்புகளிலே எழுதியிருக்கிறார்கள். இக்கவிதைகள் அனைத்தும் அவரது இறையியல் சிந்தனைகளையும் சமூகவியல் சிந்தனைகளையும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

பெருவெளியே தெய்வம் என்ற கருத்தும், அந்த வெளியின் தன்மாற்றமே இப்பிரபஞ்சம் என்ற உணர்வும், வேதாத்திரிய இறைத் தத்துவத்தின் சிறப்பு அம்சங்களாகும். அனைவருக்குள்ளும் ஊடுருவி நிற்கிற மெய்ப்பொருள் ஒன்றேயாகையால் ஒருவருக் கொருவர் ஒத்தும் உதவியும் வாழவேண்டும் என்பதே வேதாத்திரிய சமூகவியல் சிந்தனையின் அடிப்படையாக அமைகிறது. வேதாத்திரிய இறைக்கோட்பாடுகளையும் சமூகவியல் சிந்தனைகளையும் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்து உலகமே மேம்பாடு அடையத்தக்க நல்ல பல கருத்துகளை எடுத்துரைக்கும் மன்றமாக இக்கருத்தரங்கு அமைய எனது வாழ்த்துகள்.

இக்கருத்தரங்கில் கலந்துகொள்கிற தமிழ் அறிஞர்களுக்கும், பிரதிநிதிகளுக்கும், அருட்தந்தை அவர்களின் அருளாசிகளோடும், உலகச் சமுதாய சேவா சங்கத்தின் சார்பிலும், எனது அன்பான வணக்கத்தையும், நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்து இவ்வுரையை நிறைவுசெய்கிறேன்.

வாழ்க வையகம்!

வாழ்க வளமுடன்!

பொருளடக்கம்

பக்கம்

1. வேதாத்திரி மகரிஷி - வாழ்க்கை விளக்கம் 1
முனைவர் பாக்யவதி சங்கரலிங்கம்

2. அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷி
படைப்புகளில் சமுக அணுகுமுறைகள் 19
எம். தியாகராஜன்

3. தனிமனித மேம்பாடும் சமுக உறவும் 29
உ. அனார்கலி

4. உலக அமைதிக்குக் குழந்தைகள் வளர்ப்பு முறை 41
வ. வீரராகவன்

5. வேதாத்திரியமும் புதிய சமுகமும் 53
முனைவர் பே. நடராசன்

6. அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷியின் சமுக நோக்கு 65
இரா. ஜான்ஸி ராணி

7. பசிப்பிணியற்ற சமுதாயம் காண அருள்தந்தை
வேதாத்திரி மகரிஷி காட்டும் வழிகள் 75
முரசு. நெடுமாறன்

8. வேதாத்திரியத்தில் சமுதாயச் சிந்தனைகள் 87
பொ. சத்தியபாமா

9. இருள் போக்கும் வேதாத்திரியின் சிந்தனைகள் 93
கே. கௌரிகந்தவேல்

10. வேதாத்திரியம் அல்லது வாழ்வனுபவங்கள் 102
கி. ஏழுமலை

11. உலக அமைதிக்குப் பெண்களின் பங்களிப்பு 111
கி. மைதிலி

12. திருக்குறளில் வேதாத்திரி மகரிஷியின் ஈர்ப்பு ஆற்றல் கோட்பாடு 121
முனைவர் சா. வளவன்

13. வேதாத்திரியம் தரும் இறைஞானம் 127
முனைவர் ஜி. அழகர் ராமானுஜம்

14. மனம் 148
முனைவர் ச.வே. சுப்பிரமணியன்

15. இளைய சமுதாயத்திற்கு வேதாத்திரியம் 165
பேராசிரியர் M.K. தாமோதரன்

16. வேதாத்திரியத்தில் இறையியல் வாழ்வியல் சிந்தனைகளின் வழி மனமது செம்மையானால்... 170
முனைவர் கமலாமுருகன்

17. மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் 186
முனைவர் பெ. சுயம்பு

18. வேதாத்திரியத்தில் இறைநிலை 200
முனைவர் அலமேலு மங்காள்

19. வேதாத்திரியத்தில் இறையியல் சிந்தனைகள் 208
முனைவர் க. திலகவதி

20. அறிவியல் நோக்கில் மகரிஷி கண்ட இறைவழிபாடும் சடங்குகளும் 225
முனைவர் கு. கதிரேசன்

21. மகரிஷியின் இறைச்சிந்தனைகள் 250
முனைவர் க. இளமதி சானகிராமன்

22. மகரிஷியின் மதக் கோட்பாடு 261
முனைவர் மா. இராமச்சந்திரன்

23. மகரிஷி உணர்த்தும் இறையும் சமயமும் 269
முனைவர் எம். பரமசிவம்

24. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வியல் இறைநெறி 275
பேராசிரியர் பா. வல்சகுமார்

25. வேதாத்திரி மகரிஷியின் இறையியல் சிந்தனைகளும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும் 285
முனைவர் இரா. சுதமதி

26. வேதாத்திரி மகரிஷியின் படைப்புகளில் நடையியல் சிந்தனைகள் 296
முனைவர் ஆர். வேல்முருகன்

27. வேதாத்திரி மகரிஷியின் கவிதைகள் : யாப்பு நலன்கள் 305
முனைவர் ய. மணிகண்டன்

28. கோளும் குறிக்கோளும் 325
க.ப. வித்தியாதரன்

29. சித்தர் பாடல்களும் வேதாத்திரி மகரிஷியின் பாடல்களும் 348
அருள்நிதி ப. பரமசிவம்

30. VETHATHRI MAHARISHI'S VIEWS ON SOCIAL CONTROL 352
Dr. T. Kamali

31. திருவாசகமும் வேதாத்திரியமும் 372
முனைவர் ச. சிவகாமி

32. மகரிஷியும் ஞானநெறியும் 390
ரெ. சொர்ணபிரபா

33. திருக்குறளும் வேதாத்திரி மகரிஷியின் கவிதைகளும் ஒப்பாய்வு 402
முனைவர் கஸ்தூரி ராஜா

34. மகரிஷி வாழ்க்கை காட்டும் வாழ்வியல் நெறிகள் 418
முனைவர் தி. மகாலட்சுமி

வேதாத்திரி மகரிஷி - வாழ்க்கை விளக்கம்

முனைவர் பாக்யவதி சங்கரலிங்கம்

வயது ஏழே ஏழு; உடலில் துள்ளும் இளமை; உணர்வு சீரிய கருத்தோடு எப்பொழுதும் இயங்குவது; விட்டது பள்ளிக்கூடக் கல்வி; தொடங்கியது வேலை மட்டுமன்று; சிந்தனையும் கூட; அதுவும் அகலமானது; ஆழமானது; கேள்விகள் தொடர்ந்து கொண்டே இருந்தன. தறியில் கை பின்னலை இயக்க, மனம் எண்ண மலைகளையும் சேர்த்தே பின்னியது. அவ்வெண்ணம் தன்னைப் பற்றியது அன்று; தன் குடும்பத்தைப் பற்றியதுமன்று; அகில உலகத்தையே பற்றியது. அது தொடரத் தொடர எழுந்த எண்ணமெல்லாம் எழுத்தாக மலர்ந்தன; மணம் பரப்பத் தொடங்கின. அவ்வழுத்தும் எண்ணமும் சீரோடும் சிறப்போடும் கடலலையாய் அகலமாய் ஆழமாய் இடைவிடாது பரவிக் கொண்டே இருந்தன; இருக்கின்றன. விளைவு? மெய்ஞ்ஞானம் வளர வளர விஞ்ஞானத்துடனும் அதற்குத் தொடர்பு உண்டென்பதை உணர்ந்தது. ஒவ்வொரு சமயத் தலைவரிடமும் ஏதோவொரு தனித்தன்மை உண்டு; ஆசான்களிடமும் அறிஞர்களிடமும் ஆழ்ந்த அறிவு உண்டெனத் தெளிந்தார் மகரிஷி. அவர்கள் அனைவரையும் தாமே நேரில் சென்று சந்தித்தார்; அவர்களுடன் நுணுக்கமாக அளவளாவினார். அறிவு புகட்டினார்; தம் அறிவையும் வளர்த்துக் கொண்டார். மனம் சொன்னவற்றை யெல்லாம் கை எழுதத்தொடங்கியது. எழுந்தன எண்ணற்ற நூல்கள். தாய் மொழி தமிழில் மட்டுமன்று; உலகத்தோடு தம்மை இணைப்பதற்கு உதவிய ஆங்கிலத்திலும் எழுதினார். அது

தமிழ்த்துறைத் தலைவர், செல்லம்மாள் மகளிர் கல்லூரி,
கிண்டி, சென்னை – 600 032.

இன்றும் தொடர்கின்றது; நாளையும் தொடரும். அவர் கூறும் கூற்றுகள்; எழுதும் எழுத்துகள்; ஆற்றும் பணிகள்; சுருங்கக் கூறின் அவர் வாழ்ந்து வரும் வாழ்க்கை நம்மை ஆற்றுப்படுத்தும்; நல்நெறிப்படுத்தும் ஆற்றலுடையதாய் விளங்குகின்றமையின் வாழ்க்கை விளக்கமாக அவரை ஆழ்ந்து நோக்குவோம்.

எந்த ஒரு செயலைத் தொடங்குமுன்னும் அன்னையையும், தந்தையையும், குருவையும் வணங்கி வாழ்த்திவிட்டுத் தொடங்குதல் நலம் என்ற மகரிஷி அவர்களின் கூற்றுக்கேற்ப அனைவரையும் வணங்கி வாழ்த்தியபின் கருத்துகளை எடுத்துரைக்கின்றேன்.

இறைநிலையும் வழிபாடும்

முதற்கண் இறைநிலையும் வழிபாடும் பற்றிக் காண்போம்.

அங்கிங் கெனாத்படி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளொடு நிறைந்தது எது? தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும் படிக்கு இச்சை வைத்து உயிர்க்குயிராய்த்
தழைத்தது எது?.....

என்ற தாயுமானவரின் பாடல் இவருக்குள் ஆழமாய்ப் பதிந்து விடை காணத் தூண்டிற்று. கடவுள்அரூபமானவன் என்பதும் ஆணித்தரமாக மனத்தில் பதிந்தது. உருவம் இல்லாதவனுக்குத் தாம் தாம் விரும்பிய வண்ணமே மனிதர்கள் உருவம் அளித்தனர். பெயர்களும் கொடுத்தனர் என உணர்ந்தார்.

இயற்கை என்பதே தெய்வம்; சுத்தவெளி; பூரணம்
இதுவேதான் பேராற்றல்; காலமுடன் பேரறிவுமாகும்

எல்லையற்ற இறைவெளியே தெய்வம் என்றார். அதனால் இறைவனையே அருட்பேராற்றல் என்று குறிப்பிடுகின்றார். எல்லா உயிர்களும் இறைவனே என்பதையும் உணர்ந்தார்.

வேதத்தையே யான் படித்ததில்லை ஆனால்
வேதத்தின் உட்பொருளாய் என்னைக் கண்டேன்
வாதத்தில் நான் கலந்து கொண்டதில்லை
வாதிப்போர் அனைவருக்கும் பொருளாய்
உள்ளேன்

பேதித்த அண்டங்கள் உயிர்கட்கெல்லாம்
பிறப்பிடமாய்க் கருப்பொருளாய் என்னைக்
கண்டேன்
சோதிப்பார் புலனறிவால் என்னைக் காணார்
சுயநிலையை அகத்துணர அவர் நான் என்றே

இதனால் யாரும் யாரையும் காலில் விழுந்து வணங்க வேண்டியதேயில்லை. வாழ்க வளமுடன் என்று வாயார வாழ்த்தினால் போதுமென்றார்.

ஆன்மிக விழிப்புணர்வும் ஞானமும்

அருட்பேராற்றல்தான் இறைவன் என்பதை உணர வேண்டுமானால் ஆன்மிகத் தேடல் தேவையாகின்றது. நாம் வந்தது எதற்காக? வாழ்வது எதற்காக? என்ற வழக்கு முடியுமுன்பே நமது வாழ்க்கை முடிந்து விடுகின்றது. எண்ணிப் பார்ப்போம்; ''மனிதனின் மகத்துவம் மனிதன் அறியாத மயக்கத்தின் விளைவு'' என்கிறார்.

மரத்தினிலே விதையும் அந்த வித்தினிலே மரமும் போல்
மனிதனுக்குள் தெய்வம் அந்தத்தெய்வத்துள் மனிதனாம்

பிறப்பைப்பற்றி, வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கச்சிந்திக்க உறுதி, நுட்பம், சக்தி இவை அதிகமாகும். ஆன்மிக ஆற்றல் பெருகும்.

இக்காலத்தில் மனித வாழ்க்கை முறையைப் பற்றி நாம் உண்மையாகச் சிந்திப்போம். பெரும் மதிப்பு வாய்ந்த ஆற்றலையும் நேரத்தையும் வீணாக்கித் துன்பத்தையும் அழிவையும் விளைவிக்கக் கூடிய பல செயல்கள் இவ்வுலகில் ஏன் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன? இந்த அழிவிலிருந்து மனித இனத்தைக் காப்பாற்றுவதற்கு இப்போது உலக விரிவான ஓர் ஆன்மீக விழிப்புணர்ச்சி உண்டாக்கப்பட வேண்டும்.

என்ற அவரது கூற்றும் சிந்திப்பதற்குரியதுதானே!

மதமும் தெய்வமும்

மனித வாழ்வின் வளம் பெருக்கி, நலம் காத்து, துன்பம் நீக்கி, இன்பத்தை அனுபவித்து, அறிவின் வளர்ச்சி பெறத்தக்க ஒரு போதனையும் சாதனையும் ஒன்றிணைந்த பயிற்சி தான் மதம்.

கடவுளை அறிவதோ அறநெறி நின்று வாழ்வதோ கடினமானதல்ல. எளிதானது; இயல்பானது; மனித அறிவுக்கும் ஆற்றலுக்கும் உட்பட்டது தான்.

இதை உணராத மனிதர்களால் மதங்கள் பெருகின. இன்று உலகில் எத்தனை மதமுண்டோ அதனினும் மிகுதியாகத் தெய்வங்கள்.

தெய்வத்தின் பெயரால் அழைக்கப்படும் மதம் ஒன்று கூட இல்லை.

தெய்வம் என்ற பேராற்றலைச் சிதைத்துப் பல தெய்வங்களாக்கி விட்டோம். ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றிய நம்பிக்கையும் கொண்டு மனித இனம் பிளவுபட்டு விட்டது. மனிதனுக்கு இனி ஒரு மதம் போதும்.

மதத்திற்கு அடிப்படையாகத் தெய்வநிலை ஒன்று போதும். தெய்வநிலை மிக உயர்ந்தது. சிறப்புடையது; மதிப்புடையது என்பது உண்மை தான். இப்பொழுது அது காந்த ஆற்றல்தான் என்று உணரும் போது மெய்ப்பொருளின் ஆழத்திற்கு அறிவை ஓட்டிச் செல்கிறோம். இந்த உண்மை விளக்கம் பரவலாகி மனித குல வாழ்க்கையில் பண்பாட்டின் சிறப்பாக அமைந்தால் அன்றே மனித குலச்சரித்திரம் மாறத் தொடங்கி விடும்.

ஒரே கடவுள் ஒரே அறநெறிமுறை என்ற உலகப் பொதுவான ஒரு மதத்தை உருவாக்கிக் கொள்ளலாம்.

மொழி, சாதி, இனம்

மொழி, சாதி, இனப்பாகுபாடுகள் மனிதனிடம் வேறுபாடுகளை வளர்த்துவிட்டன. போராட்டங்கள் மிகுந்து விட்டன.

ஒருவர் கருத்தைப் பிறருக்கு உணர்த்துவதற்கு
ஓங்கியதோர் ஆர்வமே மொழிகளாகிப்
பெருகி வந்துள; உலக மொழிகள் எல்லாம்
பேசுவதற்கு அனைவருக்கும் சொந்தமன்றோ!

அருவருப்பு எம்மொழியில் மேற்கொண்டாலும்
அறியாமை மயக்கத்தால் விளையும் கேடே
பெருநோக்கில் மனிதன்வரலாறறிந்து பிழைதிருத்தி
பெருநலமே கண்டு வாழ்வோம்"

கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளத்தானே மொழி. இதில் எதற்கு விருப்பு வெறுப்பு?

விஞ்ஞானம் இயந்திரங்கள் பெருகியபின் சாதி
வேற்றுமைகள் மனிதனிடை நீடித்தல் தீதே

மொழிதொழில் நாடு இனம் செல்வம் மதம் இவற்றால்
முன்னோர்கள் பிரித்தமுறை சாதியாச்சு
வழிவழியே தொடர்ந்து வந்த சாதிப்பற்று
வாழ்வினிலே விளைந்த தெல்லாம் துன்பமன்றோ

அதிலும் ஆட்சியதிகாரப் பேராசை கொண்டோரால் கொடுமைகளும் நிகழ்கின்றன அல்லவா? இவற்றிலிருந்து மனிதன் விடுபடவேண்டுமானால் இம்மாறுபாடுகளை மனத்தில் இருந்து விலக்கி எப்போதும் ஓரினம் 'மனிதஇனம்' என்பதை உணர்ந்து வாழ வேண்டும். 'பேரறிவாகிய பிம்பமே மனிதன்' என்ற அவரது கூற்றும் உண்மையாக வேண்டும்.

எண்ணமும் சிந்தனையும்

எண்ணம் சொல் செயல்களெல்லாம் ஒன்றுக் கொன்று
இணைந்துள்ள தன்மையதைக் காணும் போது
எண்ணமே அனைத்துக்கும் மூலமாகும்.....

"எண்ணமே பல விதமாய் மாறிநிற்கும்". "எண்ணமிறந்து அமைதி பெற்றால் அவனே ஞானி". இத்தகைய ஆற்றலுடைய எண்ணம் நல்லெண்ணமாய் அமைந்தால் ''தீதெங்கும் எவருக்கும் விளைவிக்காத திறமையுள்ள அறிவாட்சித் தரம் அமையும்" என்கிறார். எண்ணத்தின் சிறப்பு இத்தகையதென்றால் அதை ஆழப்படுத்துவது சிந்தனையன்றோ!

சிந்திப்பதும் எழுதுவதுமே வாழ்க்கையாகக் கொண்ட மகரிஷியின் படைப்புகளைக் கொண்டே சிந்திப்பதால் ஒருவர் அடையும் பயனை நன்கு உணர முடியும். இதுமட்டுமன்று; தாம்

திங்கள்தோறும் படைக்கும் 'அன்பொளி'யில் இடம்பெறும் அன்பு மடலில் அவர் 'சிந்தனையில் சிறந்த மனவளக் கலைஞர்களே' என்று குறிப்பதை வைத்துப் பிறரைச் சிந்திக்கத் தூண்டுபவரும் அவர் எனலாம். "சமுதாய நலமே விரும்பி இரவு பகலாகச் சிந்தித்து வருகின்ற உங்கள் சகோதரன் ஒருவன் எடுத்துக் காட்டுகின்றான். நமது சிந்தனையை உயர்முறையில் திருப்புகிறான் என்று எண்ணி உங்கள் ஆராய்ச்சியை உயர்த்திப் பெருநோக்கத்தில் செயல்புரிய நீங்கள் இன்றுமுதல் முயல வேண்டும்" என்று எல்லோரையும் அரவணைத்து வழி நடத்துகின்றார்.

இன்பத்தும் துன்பத்தும் இயற்கையும் கற்பனையும்
சிந்தித்து அறிபவன் சிறப்பாக வாழ்வான்

அகத்தவமும் அகத்தாய்வும்

தனக்குள் இறங்குவதே தவம். தன்னைத்தானே அறிமுகப் படுத்துவதே அகத்தாய்வு. 'கண்ணாடிபார்க்கக் காணலாம் உருவநிலை; உண்ணாடிபார்க்க உணரலாம் உயிர்நிலையை". உணர்ச்சிகளில் அறிவு இயங்க உயிர் விளக்கம் ஆகாது; உள்ளொடுக்க உயிர் உணர்வாம்; உயிர் ஒடுங்கத் தெய்வநிலை உணர்ச்சி, உயிர், பரம் மூன்றும் உணர வழி அகத்தவமே என்கிறார். செயல் புரியும் போதே மன அலைச்சுழல் குறைந்து கட்டுப்பாட்டோடு நடந்து கொள்கின்ற பக்குவத்தைத் தருவன அகத்தவமும் அகத்தாய்வும். "குடும்பத்தின் பாரத்தைத் தோளில் சுமந்து குடும்பத்துச் சிக்கல்களில் அலைமோதிக் கொண்டிருக்கும் ஒரு குடும்பத்தலைவனுக்கும் தலைவிக்கும் மனக்கட்டுப்பாடு அவசியம் வேண்டும்". எழுகின்ற பிரச்சினைகளுக்கு நடுவில் ஒரு மனிதன் மன அமைதியுடன் வாழ்வதற்கு ஒரே வழி அகத்தவமும் அகத்தாய்வும் தான்.

தன் மயமாய்த் தான் அதுவாய் தவறிடாது இயங்கும் உன்
தன்மையினை எண்ண எண்ணத் தவமது ஆனந்தமே

அன்பும் கருணையும்

இறையருளால் மனித உள்ளத்தில் ஆழமான அன்பும் கருணையும் நிறைந்திருக்கின்றன. ஆனால் மனிதனை மனிதனாய்

நடக்க விடாமல் அடைத்திருக்கும் அடைப்புகள் பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என்ற ஆறு குணங்கள். இவற்றை மனத்திலிருந்து அகற்றி "அனைத்துயிரும் ஒன்றென்று அறிந்த அடிப்படையில் ஆற்றும் கடமையெல்லாம் அன்பின் செயலாகும்". "அறிவறிந்த பெருநிலையே அன்பு நிலையாம்; அறத்தின் நெறியுணர்த்தும் நிறையதுவே நிவர்த்திக்கும் துன்பமெலாம்". அவ்வன்பு வழியில் இன்பம் பெருகும். கருணை ஊற்றெடுக்கும். உலகமே இணைந்து இயங்கும். இன்ப வெள்ளம் பெருகும்.

நட்பு நலம்

குடும்பத்தில் சமுதாயத்தில் நாட்டில் உலகில் எல்லா மக்களிடையேயும் நட்பு நலம் காக்க வேண்டியது மனித இன வாழ்வுக்கு மிகவும் அவசியம். எளிய வாழ்க்கை, இன்சொல், இன்முகம் காத்தல் மூன்றும் ஒருவரைச் சூழ்ந்துள்ளவர்கள் அனைவரையும் மனம் ஒத்த நண்பர்களாக்கும். நட்புக் கொள்ளும் போதும் பிறரது கருத்துகளை அறிந்தே நட்புக் கொள்ள வேண்டும்; ஏனெனில் சிலர் 'உட்பகையைச் சுயநலத்தை உள்வைத்து நடிப்பார்கள்' என்கிறார். நல்லோருடன் நட்புக் கொள்வது நலம் பயக்கும். வஞ்சகரோ நண்பராய் வந்தால் பெருந்தொல்லை. கயவர் கூட்டும் வேண்டாம் என்று நட்புக் கொள்வதிலும் அறிவும் வேண்டும் பொறுமையும் வேண்டும் என்று தெளிவு படுத்துகின்றார்.

இன்று எந்தன் மனநிலையோ வள்ளற் பெருமானார்
எந்தச் செயல் செய்யென்று உணர்த்துவாரோ அதுவே
நன்று எனக் கொண்டவற்றை நான் முடிக்கும் பேற்றால்
நல்லறிஞர் பலர் எனக்கு நட்பை அளிக்கின்றார்

பெண்மைக்கு மதிப்பு

பெண்ணின் பெருமை பற்றி நூலே எழுதிய திரு.வி.க. அவர்களுக்குப் பின் பெண்ணிற்குப் பெரும் மதிப்பை இவர் நல்குவதைக் காணலாம். தாயாக, துணைவியாக, உடன்பிறப்பாக, மகளாக என்று எந்த உறவானாலும் அவர்களுக்கு இவர் தரும் பெருமை குறிப்பிடற்குரியது.

ஆண்களும் பெண்களும் அநேகமாகச் சரிபாதியாக உள்ள மனிதகுலத்தில் அந்தப் பாதி எண்ணிக்கை யுடைய ஆண்களைப் பெற்று எடுத்தவர்கள் பெண்களேயாம். பெண்ணின் பெருமையினை உணர்வதற்கு இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும். எந்த ஒரு ஆணோ பெண்ணோ பிறக்க வேண்டும் என்றால் பெண்ணின் கருப்பையில் உருவாகி, அவள் ரத்ததையே உடலில் ஏழு தாதுக்களாக ஏற்றுக்கொண்டு முழு உருவம் பெற்று வெளிவருவது ஒரு வியப்பு அல்ல. இறைநிலையின் பெருமையை அதன் பேரறிவின் தன்மையை எடுத்துக் காட்டுகின்ற இயற்கையின் வெளிச்சுடர் பெண்மை ஆகும்.

ஒருவருக்கு ஒரு பெண் போதும் என்று கூறுகின்ற இவர், மனத்திற்கு ஒவ்வாத மணவாழ்க்கை அமையும் போது "திருமணம் மாற்றிக்கொள்ளும் தெய்வீக உரிமை தன்னை இருவருக்கும் தர வேண்டும்" என்கிறார். பெற்றோர் ஈட்டிய பொருளிலும் பெண்ணுக்குச் சம பங்கு ஈயும் புகழுள்ள சட்டம் வேண்டும் என்று கூறும் இவர்,

பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்த ஊரைவிட்டுப்
பிரிந்து வந்து, பெருநோக்கில் கடமை அறம் ஆற்றப்
பற்றற்ற துறவியெனக் குடும்பத் தொண்டேற்றுப்
பண்பாட்டின் அடிப்படையில் எனைப் பதியாகக்
கொண்டு என்
நற்றவத்தால் என் வாழ்க்கைத் துணையாகிப் பெண்மை
நலநோக்கில் அன்போடு கருணை இவை கொண்டு
மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான் மதிக்கின்றேன் வாழ்த்தி
மகிழ்கிறேன்

என்கிறார். தன் மனைவியின் பிறந்த நாளை (ஆகஸ்டு 30) 'மனைவி வேட்பு நாளாக' ஆண்மக்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளச் சொல்லித் தன் துணைவியருக்குப் பூச்செண்டு வழங்கி வாழ்த்தவும் வைக்கின்றார். இத்துடன் அவர்கள் பொருளீட்ட உரிமையும் தரும்படி கூறுகிறார்.

பெற்றோர்

அன்னையையும் தந்தையையும் தொழுத பின்னே எந்தச் செயலையும் தொடங்கும் இவர், அவர்களைத் தெய்வமாகவே வணங்குகிறார்.

பெற்றோர்கள் மனநிறைவாய் வாழ்வதற்கும்
பேரமைதியோடு உயிர் நீப்பதற்கும்
பெற்றோர்க்குப் பிள்ளைகளே கடமையாற்றும்
பெருநெறியை முன்னோர்கள் வகுத்துள்ளார்கள்

என்று கூறும் இவர், அப்பற்றும் பாசமும் குறிப்பிட்ட மனிதர் மாட்டும் நிலைத்து நினைவைக் குறுக்கும். எனவே பிறர் துன்பம் தீர்க்கும் புனித உள்ளம் உடையோராய் வாழ்ந்தால் கனிவு மிகும்; அருள் பெருகும்; உலகம் உய்யும்; பற்றற்று வாழும் பண்பே உச்சம் என்கிறார்.

குழந்தை வளர்ப்பு

குழந்தைகளை மக்கள் இனத்தின் உயர்ந்த குறிப்பான செல்வமெனக் கொண்டு விட்டோம்.

பெற்றோர்கள் குழந்தைகளை வளர்த்தல் இந்தப் பேருலகில் எங்கும் பழக்கமாச்சு.... பெற்றோரால் சாதி, மதம், மொழி இவற்றால் பேதங்கள் பிள்ளைகளைத் தொடர்ந்து நிற்கும். இது குழந்தைகளின் மனநலனையும் பாதிக்கிறது. உடல்நலனையும் பாதிக்கிறது. எனவே பெற்றோர் தம் மக்கள் தமைச் சமுதாயத்தின் பேரறிஞர் வளர்த்துவிட உலகம் சீராம்.

குழந்தைகள் ஐந்தாண்டு முதல் பேதமின்றிக் குருகுலத்தில் வளர்வதற்கோர் திட்டம் வேண்டும். சுகாதாரம், உளநூல் வல்லோர் குற்றமற வளர்த்துவிட உலகம் உய்யும். ஒழுக்கம், நீதி, இன்பம், நேர்மை, உயர்வு எனும் சொற்களைப் புரிந்து வளரும்படி அவர்களைப் பண்படுத்தவும் வேண்டும். பல கலைகளைப் பயிற்றுவிக்கவும் வேண்டும்.

என்றும் கூறியுள்ளார்.

ஒழுக்கமும் பண்பாடும்

தாம் சிறுவனாக இருந்த போதே ஒழுக்கத்தைத் கற்றுக் கொண்டு அதைக் கடைப்பிடித்தே வாழும் மகரிஷி,

வாழவேண்டும் என்றெண்ணி உலகமீது
வந்ததில்லை எனினும் நாம் பிறந்துவிட்டோம்

வாழ வேண்டும் உலகில் ஆயுள் மட்டும்
வாழ்ந்தோர்கள் அனுபவத்தைத் தொடர்ந்து பற்றி
வாழவென்ற உரிமை எல்லோர்க்கும் உண்டு
வாழ்வோர்க்குச் சாதகமாய் வாழுமட்டும்
வாழஉள்ள அனைவருமே ஒன்று கூடி
வகுத்திடுவோம் ஒரு திட்டம் வளமாய் வாழ

என்கிறார். ஒழுக்கம் இல்லையென்றால் பண்பாடும் இல்லாமல் போகும். பின் மனிதர்கள் உள்ளத்தால் இணைவது எப்போது? மனம் கலந்து இன்பமாய் வாழ்வது எப்போது?

ஒழுக்கமும் ஈகையும் உளத்தில் கொண்டால்
உயர்ந்து கொண்டே இருக்கும் அறிவுச் செல்வம்
அழுக்காறு அவா வெகுளி வன்சொல்லின்றி
அன்பூறும் பண்பாட்டின் எடுத்துக்காட்டாய்

புலால் விலக்கல்

மக்கள் எல்லோரும் அன்போடும் பண்போடும் ஒன்று கூடி வாழ வேண்டும் என்று விழைபவர் பிற உயிர்கள் மீதும் அன்பு நிரம்பியவர் என்பதில் வியப்பேது?

அம்மாவென அலற ஆருயிரைக் கொன்றருத்தி
இம்மானிடரெல்லாம் இன்புற்றிருக்கின்றார்
அம்மா வெனும் ஓசை கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்மா நரகமெனில் புசித்தவர்க்கென் சொல்வதே

என்கிறார். இயன்றவரை இறைச்சியை விட்டுவிடுதல் நன்று.

எளிமையான திருமணமுறை

காதல் மணத்தை வரவேற்கும் மனமுடையவர் மகரிஷி.

பெண்கள் தம் விருப்பம்போல் கணவன் தேர்ந்து
பிரியமுடன் காதல் வாழ்வெய்தல்நன்று.

ஆண்பெண் உளம் ஒன்றுபட்டு உலகில் வாழ
எண்ணத்தால் முடிவு கொண்டோ செயலில் கண்டோ
ஒருவர் ஒருவர்க்கு உடல்பொருளோ டாற்றல்
உவந்து அர்ப்பணித்த உளநிலையே காதல்

என்பவர் தங்கள் பெற்றோர்களின் விருப்பம்போல் மணந்தாலும் நன்று என்கிறார். மேலும் திருமணத்தை எளிமையான முறையில்

ஆடம்பரமின்றி வீண் செலவின்றி நடத்துதல் எல்லோருக்கும் நலம் பயக்கும் என்கிறார்.

இல்லறமும் துறவறமும்

புனிதமுள தாம்பத்திய உறவில் மட்டும் பொங்கி
எழும் மாற்றம் அனைத்தும் கண்டேன். இனியதனால்
இல்வாழ்வே அறிவின் பூரண இயல்பறியும்
வாய்ப்புளதாய் எவர்க்கும் சொல்வேன்

என்று இல்லறத்தின் இனிமையைக் கூறும் இவர் தன் முதல் துணைவியின் வற்புறுத்தலால் பிறிதொரு பெண்ணை மணக்கும் நிலையை அடைந்தவர்.

பஞ்சலோகங்களை உருக்கி ஒரு சிலையாகப்
பார்க்கும்போது எல்லா உலோகங்களும் ஒன்றிணைந்து
ஒளிவிட்டு அழகு தருவது போல எங்கள் மூவரின்
உள்ளங்களும் உருகி இணைந்திருந்தன

என்று மூவராய் வாழ்ந்த போதும் மனமொன்றி வாழ்ந்த இனிய வாழ்க்கை நம் மனதில் தான் உள்ளது என்பதைத் தெளிவுபடுத்து கின்றார். இந்த இனிமைக்கு இன்முகமும் பொறுமையும் தியாக உணர்வும் வேண்டும் என்றும் கூறுகின்றார். இந்தப் பண்புகள் நம்மிடம் இருக்குங்கால் துறவறமும் நம்மில் இயங்குகிறது என்கிறார்.

இல்லறமும் துறவறமும் வேறு வேறாய்
இதுவரையில் கருதி வந்தார் உலக மக்கள்
இல்லறத்தில் வழுவாது கடமை யாற்றி
எண்ணத்தைப் பண்படுத்தி எனையறிந்தேன்
இல்லறமே கடமைகளின் தொகுப்பு என்றும்
இன்பதுன்பம் உடலுயிர் தத்துவம் உணர்ந்து
இல்லறத்தைத் திறமையுடன் நடத்த ஏற்ற
எண்ண நிலை துறவறம் என்றும் உணர்ந்தேன்

இல்லத்தை விட்டோ, உறவை விட்டோ விலகாமலே தன் கடமைகளைச் செம்மையாகச் செய்து வருவதே துறவறம் என்று இதன்கண் விளக்கியுள்ளமையை உணரலாம்.

குடும்ப அமைதி

குடும்பத்தில் அனைவருக்கும் உடல் நலம் இருக்க
வேண்டும். மன வளம் இருக்க வேண்டும். போதுமான

செல்வவளம் இருக்க வேண்டும். அப்போது தான் நீங்கள் தேடும் அமைதி கிடைக்கும்; நிலைக்கும். ஆகவே குடும்பத்தில் அனைவர் உடல் நலத்திலும் கண்ணாய் இருக்க வேண்டும். அவர்களின் மனவளம் உயர்ந்ததாக அமையும்படியான சூழ்நிலையை வளர்த்து வர வேண்டும். குடும்பத்தின் அளவும் பொருளாதார வசதியும் சமமாக இருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும். கருத்து வேறுபாடு களையும் மனம்விட்டுத் தைரியமாகவும் வெளிப் படையாகவும் பேசி அன்போடு தீர்த்துக் கொள்ள வேண்டும்

என்கிறார்.

தொழில்

குடும்பத்தில் அமைதி வேண்டுமானால் தேவையான பொருள் வளமும் வேண்டும். எனவே அனைவரும் உழைப்பதற்கும் பொருளீட்டுவதற்கும் முன்வர வேண்டும். "இயற்கை விளைவுகளை வாழ்வின் வளமாக்கும் எச்செயலும் தொழிலாகும்" என்பவர் "உணவு, உடை, வீடு என்ற மூன்றைத் தோற்றும் உழைப்பாளரே முதல்வர் சமுதாயத்தில்" என்று விவசாயிகளையும் நெசவாளி களையும் கட்டடங்கள் கட்டுவோரையும் முன்வைத்துப் பாராட்டவும் செய்கின்றார். யாவரும் தொழிலில் ஈடுபடுவோம்; பொருள் ஈட்டுவோம்; வாழ்வில் உயர்வோம்.

கல்வி

தொழிலில் ஒருவர் ஈடுபட வேண்டுமானால் கல்வி அறிவு மிகமிக இன்றியமையாதது என்று கூறுபவர் "இலவசமாய் கல்விதனை எங்கெங்கும் பிறக்கின்ற உலகக் குழந்தைகளுக்கு ஊட்டும் முறை முதல் தேவை" என்கிறார். ஊர்தோறும் தொழிற் கல்வியும் உயிர் அறி கல்வியும் கற்பிக்கப்பட வேண்டும் என்கிறார். அத்துடன் மெய்விளக்கக் கல்வி அளித்தால்,

உளவியல் தத்துவம் பயின்றிடும் மாணவர்கள்
உயிர் ஆற்றலைத் தன்னுள் உணர்வாகப் பெற்று
அதன்
அளவிலா நன்மையை அறிவால் யூகித்துணர்ந்தால்
அவ்வப்போ ஆங்காங்கே அவரவர் எண்ணத்தில்

விளைவுகள் தொடர்விளைவு வினைப்பயன் விதிப்பயன்
விரிவாக ஆராய்ந்து விளக்கம் பெற்றுய்யலாம்
வளமொடு வாழ்ந்து பிறர் வாழ்விற்கும் வளம் தந்து
வறுமை நோய் அறியாமை வகைமூன்றை
ஒழித்திடலாம்

என்றும் உரைக்கின்றார்.

தேவைகள்

மனிதன் வாழ என்னென்ன தேவை என்பதை உணர்ந்து, அளவோடு தேவைகளைச் சுருக்கிக் கொண்டால் வாழ்க்கை நலமாய் அமையும் என்கிறார்.

தேவையற்ற பொருள்கள் தமைத் தேவையாக்கித்
தேவை பெருகித் துன்பம் மலியக் கண்டேன்
தேவைக்கு மேல் அதிகமாகத் துய்த்த
தீங்கு பஞ்ச பாதகங்கள் ஏழ்மை நோய்கள்
தேவையற்ற பொருட்கள் எவைஎனக்கண்டு இப்போ
திருப்பத் தோன்றா தொழித்துப் பலர் வாழ்விற்குத்
தேவையுள்ள பொருள் முடக்கும் தெளிவில்லாதோர்
செய்கைக்கும் முடிவு கட்ட வேண்டும் இன்று

தேவைகளை அடிப்படையாகக் கொண்டே வாழும் சிறப்பதனைச் சிந்தித்து உணர்ந்து கொள்வோம்.

நேர்மையான நீதிமுறை

மனிதவாழ்வின் பண்பாட்டிலும் வாழ்க்கைத் திறனிலும் வாழ்க்கை முறையிலும் சமுதாய ஒருமைப்பாட்டிலும் பல குழப்பங்கள் நிலவிவரக் காண்கின்றோம். இவை யனைத்தையும் சீர்திருத்திக் கொண்டு செம்மையாக வாழ வேண்டிய பொறுப்பு பொதுவாக இன்றுள்ள எல்லா மக்களுக்கும் தேவை. அதற்கு வேண்டிய முறையில் சிந்தனை செய்து நல்வாழ்விற்கான வழிகளை அமைத்துக் கொடுக்க வேண்டியது சமுதாயத்தின் தலைமை ஏற்றுள்ள அறிஞர்களின் பொறுப்பு

என்பவர், அதற்கொரு வழி காட்டலாகக்

கல்வி கற்கும் காலத்திலேயே, கல்வியின்
ஒருபகுதியாக நீதி உணர்வையும் உணர்த்த வேண்டும்

என்கிறார்.

இன்று வரையில் அப்பழுக்கற்ற நீதிமுறையும் அதைச் செயல்படுத்துகின்ற முறையும் உலகில் உள்ள எந்த நாட்டிலும் உருவாகவில்லை என்பவர், இந்தப் பெருங்குறையே மனித வாழ்வை அவ்வப்போது ஆங்காங்கே துன்பங்களில் ஆழ்த்தி வருகிறது. துன்பம் தவிர்த்த, நட்டம் தவிர்த்த வாழ்க்கையை உருவாக்க நினைக்கின்ற நாம், நேர்மையான நீதிமுறையைத் தேர்ந்தெடுத்து அமுல்படுத்தவும் வேண்டும் என்று கூறுகிறார்.

அரசியலும் ஆட்சியும்

இன்றைய அரசியலும் ஆட்சியும் சீர்குலைந்து நிற்பதை உணரும் மகரிஷி,

> ஒவ்வொரு நாட்டிலும் அரசியல் அமைப்பு உரிமைகளைச் செயல்படுத்துவதைத் தீர்மானிப்பதில் இரண்டு அரசியல் கட்சிகள் மட்டுமே போதுமானது. அரசியல்வாதி களுக்கும் அரசு நிர்வாகிகளுக்கும் கல்வி போதிக்கும் வகையில் பல்கலைக்கழகங்களில் தனியாக ஒரு துறை இருக்க வேண்டும். ஆன்மீகம், உளவியல், உடலியல், சமூகவியல், பொருளாதாரம், ஒழுக்கம், பண்பாடு, செயல்விளைவு தத்துவம் இவையனைத்தும் இக்கல்வி முறையில் அமைய வேண்டும். ஒருசில ஆண்டுகளில் இக்கல்வி கற்றவர்கள் மட்டுமே தேர்தலில் நிற்க வேண்டும் என்ற சட்டம் வரவேண்டும். அவர்களுக்குப் பிற வாழ்க்கைத் தொழில் பார்ப்பவர்களைப் போன்று நல்ல ஊதியம் வழங்கப்பட வேண்டும். மேலும் அரசியல் தொடர்புள்ள அவர்களுக்கு வேறு எவ்விதமான தொழிலில் ஈடுபடவும் வாய்ப்பு இருக்கக் கூடாது

என்கிறார். மகரிஷியின் இந்த அருமையான கருத்து மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைக்கு வந்தால் ஆட்சி உயர்வானதாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஓர் உலக ஆட்சி

> உலகம் என்றமண் மீது அனைவரும் பிறந்தோம்
> உயிர்காக்கும்ஒன்றே மூச்சு விடுவதற்கு
> உலகெங்கும் ஒளிவீசும் சூரியனும் என்றே
> உள்ள கடல் ஒன்றே நீர் ஆவியாகிப் பொழிய

உலகில் இன்று உள்ளோர் இதில் ஒன்றும் செய்ததில்லை
ஒவ்வொருவரும் பிறந்து வாழ்ந்து செத்துப் போவார்
உலகில் உள்ளோர் அனைவருமே உடன்பிறந்தோராவார்
ஒத்து உதவி வாழ செயல்விளைவு நீதி தோர்வோம்

அவரது இப்பார்வை உலகம் முழுவதையும் சேர்த்தே காணுமளவிற்கு விரிந்தே இருக்கின்றது.

இயந்திர, விஞ்ஞான, உலக மக்கள் எண்ணிக்கை இவை மிகுந்த இக்காலத்தில் அந்தந்த நாட்டவர் தம் எல்லை காக்க, அடுத்த நாட்டைத் தாக்க, சேனை வைத்து எந்தச் சமயத்திலுமே பயந்து கொண்டே இருப்பதெனில் மனிதரது வாழ்வென்னாகும்? இந்த நிலையை மாற்றி அறத்தைக் காக்க ஏற்படுத்த வேண்டும் ஓர் உலக ஆட்சி

என்கிறார். அந்த ஆட்சியும் குடியாட்சி முறையாக இருக்க வேண்டும் என்கிறார்.

குடியாட்சி முறை உயர்வாய்க் கொண்ட அறிஞர் ஒரு
குடியாட்சி பிற நாட்டைக் கொடுமை செய அனுமதியார்
குடியாட்சி பிற நாட்டால் குலைய விடாத ஓர் உலகக்
குடியாட்சி அமைப்பதிலே குறிப்பாகத் தொண்டு செய்வர்

இவ்வாறு ஆட்சி அமைந்தால்,

பார் முழுதும் ஏழ்மை போம்; பண்பாடு சிறந்தோங்கும்;
சீர்திருத்த வாழ்வு அப்போ சித்திக்கும் சிந்திப்பீர்.

மேலும்,

உலக ஆட்சியின் கீழ் அகில உலகப் பேரறிஞர்களைக் கொண்ட ஒரு தொண்டு நிலையம் அமைக்கப்படும். அது அவ்வப்போது மனித இன வாழ்வின் உயர்வுக்கான திட்டங்களை வகுத்துக் கொடுக்கவும் மக்களுக்குத் தொண்டாற்றவும் ஒரு பொது சமுதாய சீர்திருத்த இணைப்பு நிலையமாகப் பணி ஆற்றும். ஆன்மீகம், பொருளாதாரம், சுகாதாரம், விஞ்ஞானம், அரசியல் என்ற ஐந்து வகையையும் இணைத்து அறிஞர்களும் நிபுணர்களும் கூடிய ஆராய்ச்சிக் குழுவினரால் மக்கள் வாழ்வை அவ்வப்போது சீர்திருத்த, ஏற்றபடி வழிகளை வகுத்துக்காட்டும்

என்கிறார். இக்கனவு நனவானால் உலகமெங்கும் இன்பமயம் தான்.

உலக சமாதானம்

மேற்கூறிய உலக ஆட்சி ஒன்று அமைய வேண்டுமானால் உலக சமாதானம் அடிப்படைத் தேவையாகின்றது. அதற்கு முதற்படியாகக் கள்ளமிலா உள்ளங் கொண்ட குழந்தைகளைப் பண்படுத்துங்கள் என்கிறார்.

பேதமற்ற சமுதாயம் அமைக்க வென்று
பேசுகின்றீர் இதுவரையில் உங்கள்
ஆதரவுக் கேற்றபடி, அனுபவத்தில்
அனுசரித்த முறைகளெல்லாம் எடுத்து ஆய்வீர்
வேதமத ஜாதி இன வேறுபாட்டை
வேரோடு போக்கி உலகெங்கும் மக்கள்
சோதர்களாய் ஒன்றுபட்டு வாழ
சுருக்க வழி குழந்தைகளைப் பண்படுத்தல்

தொழில் தேடிக் கற்றறிந்தோரும் மற்றவரும் வேறுவேறு நாடுகளுக்குச் சென்று அவ்விடத்திலேயே தங்கள் இல்லங்களை அமைத்துக் கொண்டு வாழ்வது பெருகிக் கொண்டே வரும் இக்காலத்தில், இச்சமாதானம் மிகவும் தேவையான ஒன்று தான். குழந்தைகளைப் பண்படுத்தலும் பயன்தரும் முயற்சிதான்.

போரில்லா நல் உலகம்

வாழ்வதற்கு விரிந்த உலகம் இருக்கிறது. இயற்கை வளங்கள் யாவும் உள்ளன. ஒருவரோடு ஒருவர் ஒத்தும் உதவியும் இயற்கை வளங்களை அனுபவித்து இன்புற்று வாழ வேண்டும். உலகில் இதுவரையில் எத்தனையோ போர்கள் நடத்தப்பட்டன. என்ன நன்மை யாருக்கு விளைந்தது? இன்னும் போர் உலகுக்குத் தேவைதானா? நாளுக்கு நாள் அறிவு மேம்பட்டு வருகின்ற இக்காலத்திலும், விஞ்ஞான அறிவு ஓங்கியுள்ள இக்காலத்திலும் போர் தேவைதானா? என்ற வினாக்கள் அவர் மனத்தைத் துளைக்கின்றன.

உடலில் சிறு காயமோ உறுப்புகளில் அடியோ
ஒருவருக்கு ஏற்பட்டால் உடன் வாழ்வோர் எல்லாம்
கடலுலகில் படும் துன்பம் காண்கின் றோம் போரில்
கணக்கின்றி கணப்பொழுதில் மடிகின்றார் மேலும்

படமுடியா துயரோடு பரு உடலின் உறுப்பு
பல இழந்தும் பதைபதைத்துத் துன்பமுறக் காண்போம்
நடந்து செல்லும் பிணங்கள் அல்ல நாம் இவற்றைப் பார்த்து
நமது கடமை தேர்ந்து நலம் செய்யாதிருக்க

விழித்தெழுங்கள். வாழ வேண்டும் என்றெண்ணி உலகுக்கு நாம் யாரும் வந்ததில்லை. எனினும் பிறந்து விட்டதினால் வாழ்ந்தே ஆக வேண்டும். நாமும் வாழ்வோம். பிறரையும் மதித்து வாழ விடுவோம்.

சீராக வாழ்வோம்

மனிதன் என்ற உருவினிலே மாக்களுண்டு மக்களுண்டு
மனமறிந்த தேவருண்டு மதிநிலைத்த மனிதருண்டு
மனமறிந்து மனஇதமாய் மாக்களும் மக்களும்
மனமுவந்து தொண்டாற்றும் மாமுனிவன் முழுமனிதன்

மனிதன் மனிதனாக வாழ்வதே இயலாததாகிப்போன இவ்வுலகில் வேதாத்திரி அவர்கள் அருள்தந்தையாய், அருளாளராய், அருட்கவியாய், தற்காலச் சித்தராய், தத்துவஞானியாய், மகானாய், மகரிஷியாய் வாழ்ந்து வருபவர்.

அருள் வாழ்வுக்கென என்னை ஒப்படைத்துவிட்டேன். எனது கடமையை முடிந்த வரையில் ஆற்றியே ஆக வேண்டும். எனது உடலை எனக்குச் சொந்தமான கருவியென்று நான் கருதுவதில்லை. சமுதாயத்தால் வளர்க்கப்பட்டுக் காக்கப் பெற்று வருகின்ற ஒரு பொது நிதியாகவே நான் என்னைக் கருதுகின்றேன். அதனை முடிந்தவரை நல்ல முறையில் பேணிக்காக்க வேண்டியது எனது கடமைகளில் தலையாயது

என்பவர் மக்கள் மனத்தில்

எனது உழைப்பின் மூலமே வாழ்க்கை நடத்துவேன்
பிறருடைய மனதையும் உடலையும் எவ்வகையிலும்
வருத்த மாட்டேன்
பிற உயிர்களை உணவுக்காகக் கொல்ல மாட்டேன்
பிறருடைய வாழும் சுதந்திரத்தையும் பொருளையும்
பறிக்க மாட்டேன்
என்னால் முடிந்தவரை பிறர் துன்பம் போக்கத்
தொண்டு செய்வேன்

என்ற ஐந்தொழுக்கப் பண்பாட்டைப் பதிய வைக்கின்றார். மனவளக் கலைமன்றங்கள் அமைத்து அகத்தாய்வுப் பயிற்சியை நான்கு நிலைகளாக நடத்தும் இவர், அதன்பின் பிரம்மஞானமும், ஆசிரியர் பயிற்சியும் அளித்து அருள்நிதிகளாக்குகின்றார். அனைவருக்கும் எளிய உடற்பயிற்சியும், காயகல்பப் பயிற்சியும் அளிக்கும் இவர் ஆளுமைத்திறனுக்கப் பயிற்சியும் அளித்து வருகின்றார். அறிஞர்களை அவ்வப்போது அழைத்து நடத்தும் கருத்தரங்குகள் எண்ணற்றவை. உலக மக்களின் நல்வாழ்விற்காக மௌன விரதமும் மேற்கொள்ளும் இவர், எல்லோருக்கும் வழங்கிய வாழ்த்துரைகளில் மிக உயர்ந்ததும் உண்மையானதும் 'வாழ்க வளமுடன்' என்ற இரு சொற்களே.

அவர் காட்டும் வழியில் நாமும் மனம் விரும்பிச் சென்றால் சீராக வாழ்வோம்; சிறப்படைவோம்.

துணை நூல்கள்

1. **எனது வாழ்க்கை விளக்கம்**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
2. **ஞானக்களஞ்சியம் I & II**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
3. **வாழ்க்கை மலர்கள்**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
4. **வேதாத்திரியம்**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
5. **இறையுணர்வும் அறநெறியும்**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
6. **மதமும் மனிதனும்**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
7. **அறிஞர்களின் கடமை**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
8. **உலக சமுதாய வாழ்க்கை நெறி**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
9. **வாழ்க்கை வள உயர்வுப் படிகள் ஐந்து**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
10. **செயல் – விளைவுத் தத்துவம்**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
11. **சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள்**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
12. **தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி** - அழகர் ராமானுஜம்.
13. **அன்பொளி** (மாத இதழ்கள்).

அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷி படைப்புகளில் சமூக அணுகுமுறைகள்

எம். தியாகராஜன்

அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷி அவர்கள் சமுதாயம் நலம்பெறப் பல வகையான தத்துவங்களைக் கூறியுள்ளார். இத்தத்துவங்கள் மனித வாழ்வை மேம்பாடு அடையச் செய்திருக்கின்றன.

பலன்தரும்போதுதான் தத்துவங்கள் உயிர்பெறுகின்றன

என்ற கூற்று அவருடைய தத்துவங்கள் அனைத்தும் மனிதகுலம் நல்வாழ்வு வாழத் துணைபுரிந்துள்ளதன் மூலம் அறியலாம். மகரிஷி அவர்கள் சமுதாயம் இன்னும் இருட்டறையில் உள்ளதை எண்ணி அதை மாற்ற முனைந்துள்ளார். அத்தகைய மாற்றங்கள் சமூகத்திற்குத் தேவையானதாக இருந்துள்ளன. மகரிஷி அவர்கள் மனத்தை அறிந்து வாழ்வைச் சுருக்கும் கவலைகளில் இருந்து விலக உதவும் எளிமையான வழிகளை விளக்கியுள்ளார். இவர் பல நூல்களைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார். இத்தகைய நூல்களில் மனித சமூகம் எதிர் நோக்குகிற சிக்கல்களையும் அவற்றை நீக்கும் வழிமுறைகளையும் புதிய அணுகுமுறையில் அணுகி அதற்கான தீர்வுகளையும் புதிய சமூக அணுகுமுறைகளையும் கூறியுள்ளார். இக்கட்டுரையில் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் படைப்புகளில் அமைந்துள்ள சமூக அணுகுமுறைகளைக் காண்போம்.

சமூக அணுகுமுறை என்றால் என்ன?

தனிமனிதன் மற்ற மனிதர்களுடன் எவ்வாறு தன் உறவைக் கையாளுகின்றான் என்பதை ஆராய்வதே சமூக அணுகுமுறை

துணைப் பேராசிரியர், ஆசிய மொழியியல் மற்றும்
பண்பாட்டுத்துறை, தேசியக் கல்வி நிறுவனம்,
நான்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், சிங்கப்பூர் 637616.

யாகும். மனித அமைப்புகளை ஆராயும் அறிவியலாகத் திகழும் சமூகவியலுக்கு ஓர் நூற்றாண்டு வரலாறு உண்டு.

மனித சமுதாயத்தை உள்ளடக்கிய தனிமனிதர்கள் குழுக்கள் மற்றும் நிலையங்கள் ஆகியவற்றை ஆராய்வதே சமூகவியலாகும். இத்துறை மனித சமூக வாழ்வில் ஒரு மிகப் பெரும் பகுதியினை ஆராய முனைகிறது. சமூகவியல் ஆய்வாளர்கள் மனிதர்கள் எவ்வாறு ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்கின்றனர் என்பதனையும் தங்களுடைய சுற்றுச்சூழலுடன் மனிதர்கள் எவ்வாறு தொடர்பு கொள்கின்றனர் என்பதனையும் குறித்துக் கொள்வர். குழுக்களின் உருவாக்கம் பல்வேறு சமூகப் பழக்கங்களின் காரணங்கள் மற்றும் ஒரு சமூகத்தில் வழிபாட்டுத் தலங்கள் பள்ளிகள் மற்றும் சமூகத்திலுள்ள மற்ற அமைப்புகளின் பங்களிப்பைப் பற்றியும் சமூகவியல் ஆய்வாளர்கள் படிப்பர். சமூகவியல் என்பது சமூக அறிவியல் அது மனிதனின் சமூக நடவடிக்கைகளை ஆராய்ச்சிகளுக்கும் மனோவியலுக்கும் மற்ற சமூக அறிவியலுக்குள்ளும் அதிகமாக ஊடுருவுகிறது. இவ்வாறு சமூக அணுகுமுறையென்றால் என்ன என்பதற்கு ரோலாண்ட் கெமிலிரி (Roland Camilleri www.pointask.com) என்பவர் விளக்கம் கூறுகிறார்.

இனி மகரிஷி அவர்களின் படைப்புகளில் சமூக அணுகுமுறையென்றால் என்ன என்பது ரோலாண்ட் கெமிலிரி என்பவர் கூறியுள்ள விளக்கத்திற்கு ஏற்ப அமைந்துள்ளதா என்று காண்போம்.

அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷி அவர்கள் சமுதாயம் நலம்பெற என்ன செய்யவேண்டும் என்று எண்ணிய எண்ணத்தின் விளைவுதான் தனிமனித வாழ்வின் மேம்பாட்டிற் கான திட்டங்களாகவும், உலகச் சமுதாய மேம்பாட்டிற்குரிய சீர்திருத்த வாழ்க்கைமுறைகளாகவும் மலர்ந்திருக்கின்றது. அதோடு இயற்கையின் ஆற்றலையும், இறைநெறியின் ஆற்றலையும் இணைத்துத் தம் ஆன்மீக அறிவியல் சிந்தனைகள் மூலம் அரிய கருத்துகளை வழங்கி வருகிறார்கள்.

அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷியின் உயர்ந்த குறிக்கோள்

இன்றைய சமுதாயம் அறிவியலில் முன்னேற்றம் கண்டுள்ள சமுதாயம். அறிவியலையும், ஆன்மீகத்தையும் இணைத்துப்

பார்க்கும்போது தான் சமுதாயம் புதிய புதிய சிந்தனைகளைப் பெற்று உயரும். இயற்கையின் சுழற்சியும், மானுட வாழ்வின் சுழற்சியும் ஒன்றையொன்று சார்ந்திருப்பதை இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் நமக்குக் காலந்தோறும் உணர்த்தி வருகின்றன. இத்தகைய கருத்துகளை உலக மக்கள் பின்பற்றி வாழவேண்டும் என்று கூறியுள்ளார்கள்.

மனிதகுலம் குழுவாகப் பிரிந்து வாழ்ந்தாலும் உள்ள ஒருமையினால் ஒரே குலமாக வாழலாம் என்பது அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷி அவர்களின் உயர்ந்த குறிக்கோளாகும்.

மானுட வாழ்க்கையில் வெற்றிக்கு மன நலமும், வினை நலமும் வேண்டும். மன நலம் மன்னுயிர்க்கு ஆக்கம். வினைநலம் வேண்டியன எல்லாம் தரும் என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப வாழ்ந்தவர். மனநலம்-வினைநலம் இரண்டும் வாழ்வின் இரு நெறிகளாக இரு கண்களாகக் கொண்டு வாழ்ந்தால் உலகம் ஒளிபெற்றுத் திகழும்; ஞான ஒளி பெற்றுத் திகழும் என்ற உயர்ந்த சிந்தனையை உடையவர் சுவாமி வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

வாழ்வின் வெற்றிக்கு அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷி அவர்கள் முன்னையோரின் பல் நூற்றாண்டுக் கால வாழ்க்கையின் பட்டறிவு அருள்தந்தையின் ஒரு நூற்றாண்டுக் கால வாழ்வில் ஒளியாகத் திகழ்கின்றது. மானுடத்திற்கு வழிகாட்டும் ஞானஒளி விளக்காகவும் இவருடைய கருத்துகள் திகழ்கின்றன.

மனித சமுதாயம் உயர்வு பெறும் வழிகள்

இக்காலத்தில் விஞ்ஞான அறிவு வளர்ச்சி பெற்று வருகிறது. மக்களும் சிந்தனையாற்றலில் மேம்பட்டுக் காணப்படுகிறார்கள். இத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்தி நாம் மனிதகுலத்திற்கு வேண்டிய சமுதாய ஒழுக்கங்களை நடைமுறையில் செயல்படுத்தி, மனிதவாழ்வில் உள்ள சிக்கல்கள் அனைத்தையும் படிப்படியாகக் குறைத்து நிறைவும் அமைதியும் உடைய வாழ்க்கை வாழலாம் என்று அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறுகின்றார். இந்த நோக்கம் நிறைவேற வேண்டுமானால் முதலில் சிந்தனையாற்றலை மக்களிடம் தூண்டிவிட வேண்டும் என்று கூறுகிறார். இதுவே தினசரி வாழ்விலும் கல்வி முறையிலும் மனித குலத்திற்கு வழிகாட்டியாய் அமையவேண்டும். இந்த அடிப்படையில் சிந்தித்துத் தேவையற்ற செயல்களை, சடங்கு

முறைகளை ஒதுக்கிவிட்டு வாழ்க்கைத் திட்டங்கள் முறையாக வகுத்துக் கொண்டு வாழவேண்டிய அவசியத்தைச் சிந்தித்து உணரும்போது மனித சமுதாயம் உயர்வு பெறும் என்று அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறுகின்றார்.

போரில்லாத உலகம், பொருள் துறையில் சமநீதி, நேர்மையான நீதி முறை, நிலவுலகுக்கோர் ஆட்சி, சீர் செய்த பண்பாடு, சிந்தனையோர் வழி வாழ்வு, சிறப்புணர்ந்த பெண்மதிப்பு, தெய்வநீதி வழி வாழ்தல், தேர்த் திருவிழா தவிர்த்தல், சிறுவர்கட்கே விளையாட்டு, செயல் விளைவு உணர்வு கல்வி, சீர்காந்த நிலை விளக்கம், பார் முழுவதும் உணவு நீர் பொதுவாக்கல், பல மதங்கள், பல கடவுள் பழக்கம் ஒழித்து உண்மை ஒன்றைத் தேர்ந்திடுதல் இந்தப் பதினான்கு திட்டங்களை எடுத்துக் கொண்டு அவற்றிற்கேற்பப் போதனை, சாதனை முறைகளை மனித இன நல்வாழ்வுக்கு ஒத்தபடியும் மனிதனுடைய ஆற்றலுக்கும் அறிவுக்கும் பொருந்துமாறும் செயல்முறைகளை வகுத்துக் கொண்டு செயல்பட்டால் மனித சமுதாயம் உயர்வு பெறும் என்று அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறுகின்றார்.

வினா-விடை முறையில் அமைந்த கருத்து

முதலில் எடுத்துக்கொள்ளும் திட்டம் போரில்லா நல்லுலகம். முதலில் ஒரு வினாவைக் கேட்கச் சொல்கிறார். அதாவது போர் என்பது மனித குலத்திற்குத் தேவை தானா? மனித குலத்திற்குத் துன்பம் நீங்கிய, வீண் விரயம் அற்ற, அமைதியான வாழ்க்கையே தேவை என்று விடை பகர்கின்றார். மனிதனை மனிதன் பகைத்துக்கொண்டு, துன்புறுத்திக் கொன்று விடுவது என்ற கொலை பாதகச் செயலே போர் ஆகும். இதுவரையில் எத்தனையோ போர்கள் உலகில் நடந்துவிட்டன. அத்தனைப் போர்களின் துன்ப விளைவுகளையும் அனுபவித்த மனித இனம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய காலம் இது. குழு குழுவாகப் பிரிந்து நின்று, மனிதனை மனிதன் கொன்று குவிப்பதே போர் எனப்படுகிறது. இதுவரை அத்தனைப் போர்களினால் வந்த இலாபங்களும், நட்டங்களும், துன்பங்களும் எவ்வளவு? என்று சிந்தித்தால், "ஐயோ! போர் என்பது வேண்டவே வேண்டாம்" என்ற தீர்வு அனைவருக்கும் கிடைத்து விடும் என்று அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறுகின்றார்.

மனித வாழ்வில் விஞ்ஞானமும் தத்துவமும் இருகண்கள்

ஆழ்ந்த சிந்தனையோடு அணுகும்போது இயற்கையின் முக்கியப் பரிணாமங்களில் நமக்குத் தெளிவு கிடைக்கும். புலன்களால் உணரமுடியாத இயற்கையின் ஆற்றல்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். 1) பிரபஞ்சத்தின் ஆதி நிலை, 2) நுண்விண் துகள், 3) காந்தம், 4) காந்தத்தின் தன்மாற்ற நிலைகள். இந்த நான்கு தத்துவங்களையும் அறியாத விஞ்ஞானமோ அல்லது மெய்ஞ்ஞானமோ தெளிவான விளக்கத்தையோ அல்லது தத்துவக் கருத்துத் தொகுப்பையோ அளிக்க முடியாது. எனவே தான் இந்நான்கு தத்துவங்களின் மீது அறிவைச் செலுத்துமாறு அருள்தந்தை கல்வியில் உயர்ந்த அறிஞர்களை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறார்.

இயற்கையில் அமைந்த எந்தப் பொருளையும் ஆற்றலையும் தத்துவ ஞானத்தின் அடிப்படையில் தனது சிந்தனை ஆற்றலைக் கொண்டு ஆக்கமுறையில் வாழ்வின் வளத்திற்குப் பயன்படுத்தும் விளக்கமும் அதற்கேற்ற செயல்களும் விஞ்ஞானமோ, விஞ்ஞானத்தைப் புறக்கணித்த தத்துவமோ முழுப்பயன் தராது. ஆதலால் இரண்டும் நம் இரு கண்கள் போன்றவை என்று கூறுகின்றார்.

பொருளாதார ஏற்றத் தாழ்வுக்குக் காரணமும் அதன் தீர்வும்

பின்னால் நிகழக்கூடிய விளைவைப்பற்றித் தகுந்த விழிப்பு நிலையோ உண்மையான அக்கறையோ காட்டாது பழக்கத்தின் காரணமான செயல்களில் சிக்கிக் கொண்டு தவறான ஆனால் வரையறைகளுக்கு உட்பட்ட கொள்கைகளைப் பற்றிக் கொண்டு செயல்படுவது தான் பொருளாதார ஏற்றத் தாழ்வுச் சிக்கலுக்கான காரணம் என்று குறிப்பிடுகிறார் அருள்தந்தை. ஒவ்வொரு செயலையும், ஆசைகளையும் மதிப்பிடுகையில் ஒருவர் தன்னுடைய அறிவை விழிப்புணர்வுடன் கடந்த கால அனுபவங்கள், தற்காலச் சூழ்நிலைகள், வருங்கால விளைவுகள் ஆகிய மூன்று திசைகளில் செலுத்த வேண்டும். இரண்டாவது, விழிப்புணர்வை 1) தான், 2) சமுதாயம், 3) இயற்கை இவற்றைப் பக்கங்களாகப் பெற்றுள்ள வாழ்க்கை முக்கோணத்தில் ஒரு பகுதியே 'தான்' என்பதில் செலுத்த வேண்டும். இந்த விழிப்புணர்வினால் ஒவ்வொருவரும் சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுத்தல், தியாகம் ஆகியவற்றைத் தம் பண்பில் பெற்றுவிடுகின்றன. எனவே இவ்வாறு அமையும்

வாழ்க்கையின் போக்கு பொருளாதாரச் சமத்துவத்தை ஏற்படுத்தும் என்று பொருளாதார ஏற்றத் தாழ்விற்குக் காரணமும் கூறி அதற்கான தீர்வையும் கூறுகிறார் மகரிஷி அவர்கள்.

எல்லாம் வல்ல இறைநிலையை உணர்தல்

மெய்ப்பொருள் பற்றிய அறிவு விஞ்ஞானத்திற்குத் தொடர்பு இல்லாதது என்றோ, அப்பாற்பட்டது என்றோ யாரும் நினைக்க வேண்டியதில்லை. மெய்ப்பொருளைப் பற்றி அறிவதும் விஞ்ஞானத்தின் மறைபொருட் பகுதியேயாகும். இதை ஆராய்வதற்கும் உணர்வதற்கும் கருவியாக இருப்பது புலன்களுக்குப் புலப்படாத தத்துவமாகிய 'மனம்' ஆகும். மனம், பேரறிவு, மெய்ப்பொருள் இவற்றை உணர்தல் என்பது ஒரே செயலாகும். மறைபொருளை உணர்வதற்கான சரியான முறை அகத்தவத்தின் மூலம் மன அலைச் சுழலைக் குறைத்து மனத்தை அமைதி நிலைக்கு எடுத்துச் செல்வதே ஆகும். இதை முன் அனுபவம் உள்ள ஒருவரிடமிருந்து தான் கற்றாக வேண்டும். இந்த மனப்பயிற்சியை அளித்து ஆயிரக்கணக்கான ஆசிரியர்களை உலக சமுதாய சேவா சங்கம் உருவாக்கியுள்ளது. அவர்கள் எளியமுறைக் குண்டலினி யோகம் (Simplified Kundalini Yoga) என்ற பெயரில் கற்பித்து வருகிறார்கள்.

எல்லாம் வல்ல இறைநிலையின் இருப்புத்தன்மை நமது புலன்களால் உணரமுடியாத ஒன்றாகும். எப்பொருளிலும் எவ்விடத்திலும் நுண்ணிய அலை வடிவில் ஊடுருவிப் பாய்ந்தறியும் வியத்தகு ஆற்றல் ஆன மனத்தால் தான் இதை யூகம் செய்யமுடியும்.

இறைநிலை, நுண்விண்துகள்கள், காந்தம், காந்தத்தின் ஆறுவகைத் தன்மாற்றங்கள் ஆக நான்கு மறை பொருட் களையும் தெளிவாகப் புரிந்துகொண்டால் இறைநிலையின் இருப்புத் தன்மை, பிரபஞ்சத் தோற்றம், செயல் ஒழுங்குமுறைகள், இவற்றை நாம் நன்குணர்ந்து கொள்ளலாம். எவ்வாறு எனில், எங்கும் நிறைந்த எல்லையற்ற பெரு வெளியானது பூரணம், பேராற்றல், பேரறிவு என்னும் மூன்று தன்மைகளையும் அடக்கமாகப் பெற்ற தன்னிறுக்கச் சூழ்ந்தமுத்தும் பேராற்றலாகும். இதுவே பிரம்மம், தெய்வம், கடவுள் என்று வழங்கப்படுகின்றது.

பிறரை மதியாத நிலையைப் போக்குவதற்குரிய வழி

இயற்கையின் எல்லாவற்றையும் அறியும் பேரறிவின் உள்ளார்ந்த நோக்கத்தின் தூண்டுதலினாலேயே எல்லாப் பொருட்களும் ஒழுங்கான அமைப்பில் தோன்றுகின்றன. பிரபஞ்சத்தின் எல்லா வெளிப்பாடுகளும் இயக்கங்களும் என்றும் தவறாத செயல் விளைவுத் தத்துவத்திற்கு உட்பட்டவையே ஆகும். மன அலைச்சூழல் விரைவைக் குறைப்பதற்கான தியானப் பயிற்சியை உள்ளடக்கிய மெய்ஞ் ஞான தத்துவ அறிவைச் சிந்திக்கும் வயது வந்த எல்லாருக்கும் கிடைக்குமாறு செய்ய வேண்டும். அப்போதுதான் ஒவ்வொரு மனிதனும் பிற மனிதர்களையும் உயிரினங்களையும் உண்மையாகவே மதித்து வாழ ஆரம்பித்துப் பிறர்க்குத் துன்பம் கொடுக்காது முடிந்தவரை எல்லா வகைகளிலும் ஒத்து உதவி வாழ்வதைத்தான் வாழ்க்கையின் புனிதமான கடமையாகக் கொள்வான். இதுவே, தற்காலத்தில் உள்ள பிறரை மதியாத நிலையைப் போக்குவதற்கான ஆய்வுத் தீர்வாகும். அறியாமை என்னும் இருளிலிருந்து விடுபட்டு உதிக்கும் சூரியனைப் போலப் பிரகாசிக்க இந்த அறிவின் தெளிவு ஒளியூட்டும் என்கிறார் அருள் தந்தை அவர்கள்.

எது தெய்வீகமாகும்?

இயற்கையின் உண்மைகளை மக்களுக்கு விளக்கித் தெளிவுபடுத்தும் காலம் வரையில், போலியான ஆன்மீகத் தலைவர்கள் இறைவன், சொர்க்கம், நரகம், மறுபிறப்புப் போன்ற மறைபொருள்கள் பற்றித் தவறான கருத்துகளைப் போதித்து மக்களைக் குழப்பியும் பயமுறுத்தியும் தான் வருவார்கள். இன்றைய நிலையில் உலக மக்களில் பெரும்பாலானவர்கள் இன்னும் இந்தத் தவறான கொள்கைகளின் பிடியில்தான் இருக்கிறார்கள். தன்னலம் பற்றி ஆணவமும் கொண்டு ஏமாற்றும் நபர்கள் பலர் தங்களைத் தெய்வீக அவதாரம் என்றும் ஆன்மீகத் தலைவர்கள் என்றும் வெளிப்படுத்தி வருகிறார்கள். ஒரு குறிப்பிட்ட மனிதன்மீது தெய்வீகம் எங்கே இருக்கிறது? ஒவ்வொருவரும் அவரவர் தாயின் கருப்பையில் உற்பத்தியாகி வளரத் தொடங்குகின்றனர். ஒரு மனிதன் தெய்வீகமாக இருக்க வேண்டுமானால் அது அவனுடைய அறிவிலும் செயல்களில் மட்டும்தான் முடியும். இறைநிலையின் தெய்வீகத் தன்மையையும் எல்லா இடங்களிலும்

அதன் செயல் ஒழுங்கையும் தெளிந்து உணர்ந்து ஒவ்வொரு பொருளுடனும் பிற மனிதனுடனும் சரியான முறையில் தொடர்பு கொண்டு மதித்து வாழ்வதே தெய்வீகமாகும். தெய்வ நிலை இதுதான் எனும் உண்மையைத் தெளிவாக உணராமை யினால் உண்டாகும் சமயத் தொடர்பான சகிப்புத்தன்மை யின்மை பற்றி அருள்தந்தை மகரிஷி அவர்கள் மிகத் தெளிவாக உரைத்துள்ளார்.

"மனவளக்கலை" பாடத்திட்டம்

மனித வாழ்வு சீர்பட வேண்டுமானால் இளையர் மனத்தை மாற்ற வேண்டும். இத்தகைய மாற்றத்தைத் தனியொருவரால் செய்துவிட முடியாது. ஆதலால் அரசாங்கம் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் படிக்கும் மாணவர்களின் பாடத்திட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். புதுமையைப் புகுத்த வேண்டும் என்னும் நோக்கில் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் விரும்பினார். சமூகத்தைப் புதிய நோக்கில் சிந்திக்க வைத்தார். அதன் விளைவே மனவளக்கலைப் பாடத்திட்டமாகும்.

வாழ்க்கைப் பிரிவுகள் பலவற்றைக் கொண்ட கல்லூரி களின் பாடத்திட்டங்களில் "மனவளக்கலை" எனும் பிரிவு சேர்க்கப்பட வேண்டும். மற்ற எல்லாப் பிரிவு கல்விகளுக்கும் இந்த மனவளக்கலைப் பிரிவு ஆன்மீக உயிரூட்டம் அளித்து உலகில் மனித இனப்பண்பாட்டினையே உயர்த்திச் சிறப்பளிக்கும் என்கிறார் மகரிஷி அவர்கள்.

தேவையற்ற செலவுகளை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?

சமயத் திருவிழாக்களையும், நடைமுறைச் சடங்குகளையும் சுருக்கி அதன் விளைவாகப் பெரும் மதிப்புள்ள ஆற்றலையும், நிதியையும் சேமிக்கலாம். பின்விளைவுகளைத் தெரிந்தோ அல்லது தெரியாமலோ இடத்திற்கும் காலத்திற்கும் தகுந்தவாறு தவிர்க்க முடியாத தேவைகளின் உந்துதலால் குறிப்பிட்ட சில சடங்குமுறைகள் உருவாகிவிட்டன. இதனால் பெரிய அளவில் பணமும் ஆற்றலும் வீணாக்கப்படுகின்றன. இத்தேவையற்ற செயல்கள் பண, ஆற்றல் இழப்புகளோடு கூட மனப் பிணக்கையும் உடல்நல இடையூறுகளையும் தோற்றுவித்து உடல்நலக் கேட்டை உண்டாக்கி நட்பையும் குலைத்துவிடுகின்றன.

ஆதலால் சமயத் திருவிழாக்களையும், நடைமுறைச் சடங்குகளையும் சுருக்கி அதன் விளைவாகப் பெரும் மதிப்புள்ள ஆற்றலையும், நிதியையும் சேமிக்கலாம்.

திருமணங்களை முன்னிட்டு ஏற்படும் தேவையில்லாத செலவுகளைப் பற்றி நீண்டகாலமாக மகரிஷி ஆழ்ந்து சிந்தித்து, இறுதியாக உலகம் அனைத்திலும் உள்ள எல்லாத் தரப்பட்ட மக்களுக்கும் பொருந்துமாறு ஒரு சீர்திருத்த நெறி சார்ந்த திருமண முறையை வெளியிட்டுள்ளார். இவ்விதத் திருமணங்கள் பொதுமக்கள் முன்னிலையில் மணமகனும் மணமகளும் ஒருவரையொருவர் வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக் கொள்ளச் சம்மதிக்கிறோம் என்பதை ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட ஆவணத்தை உரக்கப்படித்து உறுதி செய்து விட்டுக் குழுமியுள்ள உறவினர் மற்றும் நண்பர்கள் முன்னிலையில் அதில் கையொப்ப மிட வேண்டும். இதைத் தொடர்ந்து இந்தத் திருமணத்திற்குத் தங்கள் ஒப்புதலை மனப்பூர்வமாகத் தெரிவிக்கும் விதத்தில் மணமக்களின் பெற்றோர் சபையின் முன் வந்து தம்பதியரை வாழ்த்த வேண்டும். பெற்றோர்கள் அந்த ஆவணத்தில் சாட்சி களாகக் கையெழுத்திட வேண்டும். பின் அதில் திருமணத்தை முன்னின்று நடத்தி வைக்கும் ஆச்சாரியாரும் கையொப்பமிட வேண்டும். இறுதியாகக் கூடியிருப்போரில் ஐவர் சமுதாயத்தின் சார்பாகச் சாட்சிகளாகக் கையொப்பமிட வேண்டும். அடுத்துத் தம்பதியர் மாலைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். திருமணத்தில் கலந்து கொள்ளும் எல்லோரும் வாழ்த்துக்கள் கூற வேண்டும். இத்துடன் திருமணம் இனிதே முடிவடைகிறது. பகல் கொள்ளையாகிய வரதட்சணை இங்குக் கிடையாது. பெற்றோர்களும் நண்பர்களும் அவரவர் விருப்பத்திற் கேற்றவாறு அன்பளிப்புகள் வழங்கலாம். இந்தத் திருமணத்திற்குச் சில நாட்கள் முன்போ பின்போ திருமணத்தை அரசாங்கத்தில் பதிவு செய்துகொள்வது மிகவும் பாதுகாப்பான முறை. இந்த வகைத் திருமணத்தில் மூன்று முக்கிய அமிசங்கள் அடங்கியுள்ளன.

1) தம்பதியர் ஒருவரையொருவர் விரும்பி ஏற்றுக் கொள்கின்றனர்.

2) பெற்றோர்கள் மனமுவந்து தங்களது ஒப்புதலை அளிக்கின்றனர்.

3) இந்தத் திருமண உறவைச் சமுதாயமும் ஒத்துக் கொள்கிறது.

கடந்த சில ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 200க்கும் மேற்பட்ட எளியமுறைத் திருமணங்கள் இவ்வாறு நடைபெற்றுள்ளன. இன்றும் நடைபெற்று வருகின்றன. நாளடைவில் இம்முறைத் திருமணம் உலகிலுள்ள பிற பகுதிகளுக்கும் படிப்படியாய்ப் பரவும் என நம்புகிறார் மகரிஷி.

முடிவுரை

அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷி அவர்கள் சமுதாயம் நலம்பெறப் பல கருத்துகளைச் சமுதாயத்திற்கு வழங்கியுள்ளதைக் கண்டோம். தவறான பழக்கங்களை நிறுத்தப் பயன்படும் எளிமையான வழிகளையும் விவரித்துள்ளார். இவற்றை முறையாக மனத்தில் செலுத்தினால் கவலை அலைகள் ஓயவும், தீய பழக்கங்கள் நீங்கும், குடும்ப வாழ்வு சிறக்கும், கல்வி தொழில் முதலியவற்றில் பெரிய வெற்றி கிட்டும்; அறிவைத் தீட்டி ஒழுங்குபடுத்தும். ஆதலால் நாம் இவருடைய நூல்களை வாசிப்போம்; சமுதாயத்தை நேசிப்போம். அருள்தந்தையின் கூற்றுப்படி அனைவரும் "வாழ்க வளமுடன்" என்று கூறுவோம்.

துணை நூல்கள்

1. **எனது வாழ்க்கை விளக்கம்,** அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
2. **ஞானமும் வாழ்வும்,** அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
3. **உலக சமுதாய சேவா சங்கம்,** அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
4. **இறையுணர்வும் அறநெறியும்,** அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
5. **செயல் விளைவுத் தத்துவம்,** அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
6. **உலக சமுதாய வாழ்க்கை நெறி, தத்துவஞானி** வேதாத்திரி மகரிஷி.
7. **சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத்தீர்வுகள்,** அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.
8. Roland Camilleri, www.pointask.com

தனிமனித மேம்பாடும் சமூக உறவும்

உ. அனார்கலி

மகான்கள் காலத்தின் கட்டாயங்கள். மகான்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அத்திபூத்தாற்போல் வந்தாலும் அந்தச் சிலரின் எண்ணங்கள்தாம் உலக மக்கள் அனைவரையும் அரவணைத்துச் செல்கின்றன.

சுவாமி விவேகானந்தர் மகான்களைப் பற்றி

They are brave, bold, they will think beyond their present time declaring the noblest truths to the Mankind without fear and compromise.

என்கிறார். அதன்படி கடந்த 50 ஆண்டுகளாக நமது நாட்டுச் சித்தர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் வழிநின்று விஞ்ஞானத்தையும் நிறைவாகச் சேர்த்து இறைநிலையோடு ஒன்றித் தான்பெற்ற அதி உன்னத உண்மைகளை இந்த உலகிற்கு எவ்வித அச்சமும் தயக்கமும் இன்றி எடுத்துக் கூறி வருகின்றார் அருள்தந்தை யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி.

சமுதாயத்தில் முழுமையும் மகிழ்ச்சியும் அமைதியும் பொங்கித் ததும்ப வேண்டுமெனில், ஒவ்வொரு தனிமனிதனும் தனக்கென்று சில கடமைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்துக் கொள்ளவேண்டும். இந்தக் கடமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் தொகுப்புகளை நாம் மதிப்புகள் அல்லது விழுமியங்கள் (values) என்றும், நெறிகள் என்றும் கூறுகின்றோம். மதிப்புகளை நாம் மதிக்கின்ற அளவே நம் வாழ்க்கையின் உயர்வு அமைகிறது. மதிப்புகளை மதிக்காத

தேர்வுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை,
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி.

வாழ்க்கையை யாரும் மதிப்பது இல்லை. மதிப்புகளை அறிவது அறிவின் வளம்; அதைப் பின்பற்றுகிற பக்குவத்தைத் தருவது நமது மனத்தின் வளம். மனத்தின் வளத்தைப் பெருக்கும் கலையே அறவியல் கல்வியாகும்.

எண்ணங்களை ஆராய்தல்

தனிமனித மேம்பாடும் சமூக உறவும் மனவள அடிப்படையில் அமைந்தவை. மனிதர் இரண்டு கால்கள், இரண்டு கைகள், ஒரு முகம் கொண்ட நெடிய உருவம் மட்டுமல்லர்; மனம் என்னும் அகம் கொண்டவர். அகம் சீரோடு, சிறப்போடு அமையும்பொழுது மனிதம் மலர்கிறது. மனிதம் மலர மலர மனித வளம் பெருகுகிறது. மனிதவளம் பெருகப்பெருக அது மேம்பாடு அடைகின்றது. மனிதவள மேம்பாட்டினால் சமுதாயம் உயருகிறது. சமுதாயம் உள்ளடங்கிய நாடு முன்னேற மனிதவளம் மேம்பாடு அடைவது அவசியமாகிறது. மனிதவளம் மேம்பாடு அடைகின்ற பொழுது அது பூரணம் அடைந்து தெய்வ நிலைக்கு உயருகிறது. மனிதவள மேம்பாட்டினால் சமூக உறவு நல்லிணக்கம் கொண்டதாய் அமையும்; தனிமனித வாழ்வும், சமூக வாழ்வும் இனிமையாய் மென்மையாய் அமைய இயலும். மனித வளமும், சமூக உறவும் தனிமனித மனத்தை மையமாகக் கொண்டமைவன. தனிமனித மனம் நலம் எனில் அனைத்தும் நலமாம். அது சீர்கெடின் அனைத்தும் பழுதுபடும்.

தனிமனித மேம்பாட்டிற்கும் சமூக உறவிற்கும் மகரிஷி அவர்கள் சில எளிய கருத்துகளைச் சுவைபட இனிமையாக எடுத்துக் கூறியுள்ளார். ஒவ்வொரு மனிதனும் அவர் கூறிய கருத்துகளை நெறிப்படுத்துவானேயானால் தனிமனித மேம்பாடும் சமூக உறவும் மேம்படும் என்பது திண்ணம். கண்ணால் பார்க்க இயலாது; இது அதன் இடம் எனச் சுட்டிக் காட்ட முடியாது. இப்படி இருக்கும் எனச் சொல்ல முடியாது. இதுவே மனம். அது நன்றும், தீதுமாய் நிரம்பிக் கிடக்கும் புதிர். அதன் வெளிப்பாடே எண்ணம், செயல், சொல். மனிதன் பல்வேறு பருவங்களாலும், உறவுகளாலும், பதவிகளாலும் வாழ்கின்றான். அதனால் அவனின் எண்ணங்கள் பல்வேறு தரப்பட்டனவாய்த் தகுதிப்பாடு உடையவனாய் அமைகின்றன. மனிதன் தன்

எண்ணங்களை வரிசைப்படுத்த, சீரமைக்க மனத்தைக் கட்டுக்குள் கொண்டு வருதல் அவசியமாகிறது. இச்செயல்பாடே மனத்தை ஆள்தல் என்று கூறப்படுகிறது. மனம் ஆளுமை மனிதன் என்ற தரத்தைத் தருகிறது. மன ஆளுமைத் தன்மையால் மட்டுமே அஃறிணை வாழ்விலிருந்து உயர்திணை வாழ்விற்கு இட்டுச் செல்ல முடியும். மனிதனை மையப்படுத்தி அறிவியல் வளர்ச்சி என்றால் மனத்தை மையப்படுத்தி மனிதவாழ்வு அமைகிறது.

ஆக்கல் அழித்தல் சக்தி மனத்துக்கு உண்டு. ஞானம் வளர அகந்தை அழிய ஆற்றல் ஓங்கும். ஓங்கி நிற்கும் ஆற்றல் மனிதனை ஞானியாக்கி, பின் குருவாக்கிக் குருவைத் தெய்வமாக்கும். மனம் மிதவாதம், தீவிரவாதம் எனும் இரண்டு எதிர்நிலைச் சிந்தனை, செயலாக்கம் கொண்டதாக அமைந்துள்ளது. பிராய்டு உள்ளிட்ட உளவியலாளர்கள் மனத்தை நனவு மனம், நனவிலி மனம் என்றும் நனவிலி மனதில் இச்சை உணர்வு (ID), தான் என்னும் உணர்வு (Ego, Super Ego) எனப்படும் மனச்சான்றுகள் விளங்குவதாகக் குறிப்பிடுகின்றனர். இத்தகைய அமைப்புக் கொண்ட மனம் ஐம்புலன், ஐம்பொறிவழிப் பெரும்பாலும் இயங்குகின்றது. இச்சை உணர்வு அகற்றி மனிதமனவழி ஒழுகி மனச்சான்றின் வழித் தெய்வமனம் பெற்று வாழ மனித மனத்திலிருக்கும் சில வேண்டாத குணங்களை அகற்றுதல் அவசியம் என்கிறார். மனவளம் பற்றிக் குறிப்பிடும் போது

> **பேரியக்க மண்டல நிகழ்ச்சியில் மிகவும் மதிப்புடைய அறிவின் இயக்கக்களம் மனம் என்பதாகும்... பேரறிவு என்னும் எல்லாம் உணரும் ஆற்றல்தான் அதன் முழுமையில் அலை இயக்கமாகி (மனித மனமாக)த் திகழ்கின்றது.**

மனவள மேம்பாடும் அதன் வழிச் சமூக உறவு மேம்பாடும் பற்றி மகரிஷி வேதாத்திரி அவர்கள் அறிவியல் அறத்தோடு வாழ்வியல் விழுமியங்களைக் கூறிச் செல்கிறார்.

வாழ்க்கையின் விளைநிலமாகிய மனத்தில் எண்ணம், சொல், செயல் ஆகிய முத்தொழிலும் பிறக்கின்றன. எங்கும் செல்லும் வல்லமையுடைய எண்ணத்தைத் தூய்மையாக வைத்திருத்தல் அவசியம்.

எண்ணம் உணர்ச்சிவயப்படும்போது அதுவே ஆசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால் கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகிய ஆறு குணங்களாக விளங்குகிறது. எண்ணம் தனது நிலை உணர்ந்து முழுமை பெறும்போது நிறைமனம், சகிப்புத்தன்மை, ஈகை, கற்பு, சமநோக்கு, மன்னிப்பு, அன்பு, அருள் என்ற நற்குணங்களாக மிளிர்கின்றது.

எண்ணத்தின் அளவை ஒட்டியே மனத்தின் தரமும், உயர்வும் அமைய அவ்அடிப்படையில் மனிதனின் தரமும் உயர்வும் அமைகின்றன. இதைத்தான் வள்ளுவரும்,

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு

என்கிறார்.

ஐம்புலன் அடக்கம்

எண்ணங்கள் வலிமை மிகுந்தவை, எண்ணங்களே செயல்களாகப் பரிணமிக்கின்றன

என்கிறார் எம்.எஸ். உதயமூர்த்தி. எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்றும் வேறுபாடின்றி அமைதல் அவசியம். ஆனால் ஐம்புலன்களின் செயல்பாட்டால் இவை திரிதலுக்கு உட்பட்டவையாகிவிடுகின்றன. ஐம்புலன்களை அடக்கி ஆட்கொள்வோமேயானால் நிலைத்த, நீடித்த இன்பமாய் உலக வாழ்க்கை அமையும் என்கிறார் வேதாத்திரி அவர்கள். ஐம்புலன்களை அடக்கும்பொழுது உள்ளக்கழிவு வெளியேற்றப் படுகின்றது.

அடுவன பூதங்கள் ஐந்தும் உடனே
படுவழி செய்கின்ற பற்றற வீசி
விடுவது வேட்கையை மெய்நின்ற ஞானந்
தொடுவது தம்மைத் தொடர்தலு மாமே

என்கிறார். இக்கருத்தைத் திருமூலர்

பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன

மேய்ப்பாரும் உண்டாய் வெறியும் அடங்கினாற்
பார்ப்பான் பகஜந்தும் பாலாய்ச் சொரியுமே

என்கிறார்.

ஆசைகளைச் சீரமைத்தல்

மனித மேம்பாட்டிற்கு ஆசைகளைச் சீரமைத்தல் முதல் படியாகும். எண்ணத்தைத் திடமாக வலுவாகச் சீராக வைத்துக் கொண்டால் ஆசைகளைச் சீரமைக்க முடியும். உலக வாழ்வில் பொருள், மக்கள், பால் (Sex), புகழ், செல்வாக்கு என்ற ஐவகைப் பற்று ஏற்படுவது இயல்பே.

> கடமை உணர்வோடும் அளவு, முறை அறிந்தும் விழிப்போடு இப்பற்றுக்களை வளர்த்துக் காத்துக் கொள்ள வேண்டியது பிறவிப் பயனை எய்த அவசியமானது.

அவர் குறிப்பிட்ட கடமை உணர்வு அளவு முறை மிக மிக அவசியமாகும். மேற்குறிப்பிட்ட தளங்களின் கட்டுக்குள் ஆசைகளை அமைத்துக் கொள்ளும்போது மனிதனின் சுதந்திரம் காக்கப்பெறும்.

ஆசைக்கோர் அளவில்லை அகிலமெல்லாம் கட்டியாளினும்
கடல்மீதிலே ஆணை செலவே நினைவர்
அழகேசன் நிகராக அம்பொன் மிக வைத்தபேரும்

என்பார். ஐம்புலன் அடக்கத்தினாலேயே ஆசையை ஒரு கட்டுக்குள் கொண்டு வரமுடியும்.

ஐந்தில் ஒடுங்கில் அகலிட மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவ மாவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பத மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே

என்று ஐம்புலன் அடக்குவதால் உண்டாகும் சிறப்புகள் எடுத்துக் கூறப்படுகின்றன.

ஆசைகளைக் கட்டுக்குள் கொண்டுவரவில்லையெனில் அவை பேராசையாக உருப்பெற்று மன அமைதியைக் கெடுத்து விடும்.

அனுபோகப் பொருட்கள் மிக மிக உடல்நலம் கெடும் சொத்துக்களின் எண்ணிக்கை மிக மிக மன அமைதி கெடும். குடும்ப உறுப்பினர்கள் எண்ணிக்கை மிக மிக சுதந்திரம் கெடும்

என்கிறார் மகரிஷி. எனவே அறிவியல்வழி உணர்வோடு ஆசையைச் சீரமைக்க வழிவகுக்கிறார்.

ஆசையை அடக்கினால் அது பிதுங்கிக் கொண்டு வெவ்வேறு துன்பங்களாக உருவாகும். ஆனால் அதை ஆராய்ந்தால் பிறந்த இடத்திலேயே அது ஒடுங்கும். ஆசை நிறைமனமானால் மற்ற எல்லா நலன்களையும் பெறுவது எளிதாகச் சாத்தியமாகி வாழ்வின் இலட்சியமே நிறைவேறிய ஓர் உணர்வு உண்டாகும்.

ஆசை தடைப்படும் போது சினமும், பொருளின் மீது கடும் பற்றும் மோகமும் அதைத் தொடர்ந்து மதமும் அதன் தொடர்ச்சியாக வஞ்சமும் உருவாகும் என்கிறார். ஆசையின் இயல்பு அறிந்து அதை நலமே விளைவிக்கத்தக்க வகையில் பயன்படுத்தி ஒழுங்கு படுத்திவிட்டால் அதுவே ஞானமாகவும். மலரும். தனிமனித மேம்பாடு அடைய அறிவுவழி ஆசையைச் சீரமைக்க வேண்டும். ஆனால் அடக்கக் கூடாது என்கிறார். இதையே திருமூலரும்,

ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசைப் படப்பட ஆய்வரும் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே

என்கிறார். அடங்காப் பேயுருவாய் எழும் ஆசையை அடக்குவதை விட ஆராய்ந்தால் போதுமென்ற ஞானம் உண்டாகும்.

சினம் தவிர்த்தல்

தனிமனித மேம்பாட்டிற்குத் தடையாக இருப்பவற்றில் ஒன்று சினம். கொடிய தீயாகிய சினம் தனிமனித மேம்பாட்டை மட்டுமின்றிச் சமுக உறவையும் கெடுக்கக் கூடியது.

சீரமைக்கப்படாத ஆசை செயலாகாமல் தடைபடும் போது அத்தடையை நீக்க எழும் ஆர்வமே சினம். சினம் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று.

> தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
> தன்னையே கொல்லும் சினம்

என்கிறார் வள்ளுவர். வள்ளலாரும்,

> அருளா! நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிதல் வேண்டும். அணுத்துணையும் சினம் காமம் அடையாமை வேண்டும்.

என்கிறார். பாரதியும்,

> சினம் கொள்வார் தம்மைத்தாமே தீயால்சுட்டுச் செத்திடுவார்க்கு ஒப்பாவார்

என்கிறார். ஆசையைச் சீரமைத்து நிறைமனத்ததாக்கிய அதே நேரத்தில் சினம் ஒழித்துப் பொறுமை நிலைமையை மனம் அடைய வேண்டும். ஏனெனில் நிறை வாழ்க்கைக்குப் பொறையுடைமை இன்றியமையாதது. அதனால் தான் மகரிஷி

> சினத்தால் உடலிலே உள்ள உயிர்ச்சக்தி விரைவு கொள்கிறது, குருதி அழுத்தம் ஏற்பட்டு இரத்த வேகம் அதிகரிக்கின்றது, கண்கள் சிவக்கின்றன. நரம்புகளில் படபடப்பு ஏற்பட்டு அவை பலவீனம் அடைகின்றன

என்றும்,

> சினம் எழும்போது நமது ஜீவகாந்த சக்தியானது அதிகமாக வெளியேற்றப்படுகிறது. ஜீவகாந்த சக்தி அதிகமாக வெளியேற்றப்பட்டால் அது உடலையும் தாக்கும் மனதையும் கெடுக்கும்

என்று சினத்தின் பொல்லாத் தன்மையை எடுத்துக் கூறுகின்றார். உடல்மனம் இரண்டையும் கெடுக்கும் சினம் தனிமனித மேம்பாட்டையும் பழுதுபடச் செய்யும் என்கிறார். கோபம் மனிதனைப் பாவியாக்கி விடுகிறது. கோபம் ஒரு தற்காலிகப் பைத்தியக்காரத்தனம்; சினத்தால் பொறுமை போய்விடும்.

கவலையை ஒழித்தல்

தனிமனித மேம்பாடு அடைய மனிதன் கவலையை ஒழித்தல் வேண்டும் என்கிறார் மகரிஷி. கவலை என்பதற்கு மகரிஷி கீழ்க் காணுமாறு விளக்கம் கொடுக்கிறார்.

> கவலை என்பது ஒருவகை உள்நோய், தனது இயலாமையை உணர்ந்து நினைத்து அல்லது கற்பித்துக் கொண்டு வருந்தி அமைதி இழந்து இயங்கும் மனோநிலைதான் கவலை

என்றவர் கவலைக்கான காரணத்தையும் விளக்குகிறார்.

> நினைப்பதற்கும் நடப்பதற்கும் இடையே காணும் முரண்பாடுதான் கவலைக்கு அடிப்படைக் காரணம்... இயற்கை ஒழுங்கமைப்பை உணராத அறிவில் எழும் தப்புக் கணக்குத்தான் நினைப்பில் தவறாக விளங்குகிறது, கவலையை உண்டுபண்ணுகிறது

என்கிறார். ஒரு ஜீவனின் தனியாற்றலாக விளைந்துள்ள முயற்சியானது பேராசை, அறியாமை இரண்டின் காரணமாக முரண்பட்டு ஆற்றும்போது அதன் விளைவாகத்தான் பெரும் பாலும் துன்பங்களும் அவற்றைத் தொடர்ந்து கவலைகளும் வருகின்றன. சிந்தனைத் திறன் மூலம் கவலையை ஒழிக்க முடியும் என்று வேதாத்திரி குறிப்பிடுகின்றார். சிந்தனைத் திறனை வளர்க்க மூன்று இணைப்பு முறைகளைப் பின்பற்றக் கூறுகிறார். 1. திட்டமிட்டுச் செயல்புரிதல், 2. விழிப்புநிலை, 3. தற்சோதனை. விளைவைக் கணித்து அதற்கு ஏற்ற அளவிலும் முறையிலும் மனம், மொழி, செயல்களைப் பயன்படுத்துதல், திட்டமிட்டுச் செயல்புரிதல் தேவை. பழக்கம், சூழ்நிலை இவற்றால் உணர்ச்சி வயப்படாது தன்னையும் தான் அடைய வேண்டிய பயனையும் மறவாத விழிப்பு நிலையிலே செயலாற்றும் திறன் விழிப்பு நிலை. ஒவ்வொரு செயல் முடிவிலும் விளைவைக் கணித்துத் தான் செய்த முறை, அதில் விளைந்த தவறுகள் அல்லது நன்மைகள் இவற்றைச் சிந்தித்து உணரவேண்டும். இவ்வாறு அகத்தாய்வு செய்வதன் மூலம் கவலையை ஒழிக்கலாம் என்கிறார் மகரிஷி.

இறையுணர்வு

மனிதவள மேம்பாட்டிற்குத் தடையாக இருக்கும் சிக்கல்களை நடப்பியல் மற்றும் அறிவியல் நோக்குடனும் ஆராய்ந்து அவற்றிற்கான சிக்கல் தீர்வுகளை அறிவியல் நோக்கோடு கூறியிருப்பது மகரிஷியின் சிறப்புக் கூறுகளில் ஒன்று. சிக்கல்களைத் தனித்து நின்று ஆராயாது வாழ்க்கையோடு

ஒட்டியே சுட்டிக் காட்டியுள்ளார். வாழ்க்கை என்பது சிக்கல் நிறைந்த மனப் போராட்டம். சிக்கல் இல்லாத வாழ்வு ஒரு மனிதனுக்கு அமையாது. அப்படி அமைந்தாலும் ஏதேனும் ஒரு சிக்கலை உருவாக்கிக் கொண்டு தவிக்கும் வகையில் எந்த மனிதனும் சும்மாயிருக்கமாட்டான் என்று வாழ்வியல் உண்மையை எடுத்துக் கூறுகிறார். தன்னிலை அறிந்து, இறைநிலை உணர்ந்து, அந்தத் தெளிவோடு ஒழுக்கம், கடமை, ஈகை என்னும் அறநெறி காத்து வாழும் ஒரு தேர்ந்த மனவளத்தைப் பெற்றவனுக்கு எவ்விதத்திலும் கவலை வர வாய்ப்பில்லை என்று கூறுகிறார். இதையே வள்ளுவரும்

> தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
> மனக்கவலை மாற்றல் அரிது

என்றும்

> வேண்டுதல் வேண்டாமை இலான்அடி சேர்ந்தார்க்கு
> யாண்டும் இடும்பை இல

என்றும் கூறுகிறார். இறையுணர்வு என்பது பெருமதிப்புடைய அறிவின் முழுமைநிலை. பேரியக்க மண்டல உற்பத்தி, இயக்க நியதி, விளைவுகள், பயன் இவையனைத்தும் அறிந்த அறிவின் முழுமைப் பேறாகும். இத்தகைய அறிவில்தான் மனத்தூய்மையும், வினைத் தூய்மையும் ஒன்றிணைந்த அறநெறி இயல்பாக மலரும். தானே அதுவாகிப் பெறுகின்ற அனுபவ நிலையிலே உணரப் பெறுவதுதான் இறையுணர்வு. மகரிஷி அவர்கள் இறைநிலையை எழுத்தின் மூலமோ, பேச்சின் மூலமோ உள்ளவாறே விளக்கவும், விளங்கிக் கொள்ளவும் முடியாது என்கிறார்.

வித்தையென்றால் பிரம்மவித்தை உயர்வு ஆகும்
வேதாந்தம்பேசுவதால் கிட்டிடாது
அத்துவிதமாகி அவன் எங்குமாகி
அணுமுதலாய் அண்டங்களாகித் தாங்கும்
சுத்தவெளி சூனியமாய் நிறைந்த தன்மை
சூட்சுமமாய் அனுபவமாய் அறிந்து நிற்கும்
தத்துவத்தின் முடிவான தானேயான
தனையறிந்த வித்தையது தர்க்கம் வேண்டாம்

என்கிறார். எல்லாம் வல்ல பூரணப் பொருளே இறைநிலை என்று இறைநிலையை இயற்கை என்றும் சொல்லலாம் என்பவர் இயற்கையை 1. உயிர் உள்ள ஜீவன்கள், 2. பிரபஞ்சத்தில் உள்ள கோள்கள், உலகம், 3. விண்துகளின் கூட்டு அல்லது பரமாணு, 4. இருப்பு நிலையாக உள்ள இறைவெளி என்று நான்காகப் பிரித்துக் காட்டுகிறார். கவலை தன்னால் மட்டுமின்றிப் பிறராலும் தோற்றுவிக்கப்படும் என்று கூறும் மகரிஷி எதிர்கொள்ளும் முறையையும் குறிப்பிட்டுச் சொல்கிறார்.

சிக்கலைக் கண்டு மிளிரக் கூடாது. சிக்கல் ஏன் வந்தது? காரணம் யார்? சிக்கலின் தன்மை, சிக்கலினால் வரப்போகும் துன்பம் ஆகியவற்றை ஆராய வேண்டும் என்கிறார். மேலும் வாழ்க்கையை எளிமையாக்க உண்மைகளின் அடிப்படையில் கவலைகளை 1. அனுபவித்தே தீர்த்தாக வேண்டியவை, 2. தள்ளிப் போடப்பட வேண்டியவை, 3. அலட்சியப்படுத்திவிட வேண்டியவை, 4. உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியவை என வகைப்படுத்திச் சிந்திக்க வழிசெய்து வாழ்க்கையைக் கவலையின்றி வாழ வகுத்துத் தருகிறார்.

மனிதவள மேம்பாட்டிற்கு மனநலம், வினைநலம் வேண்டும். மனநலம் மண்ணுயிர்க்கு ஆக்கம் தரும் - வினை நலம் வேண்டியன எல்லாம் தரும். இருநலமும் வாழ்க்கையில் கொண்டால் மனித மேம்பாடும் சமூக ஒற்றுமையும் திறன் பெறும். மனநலம், விளைநலம் நலமாய், தெளிவாய், வலிமையாய் இருக்க ஆன்மீக உணர்வு அவசியம் என்கிறார்.

> **ஆன்மீக வெளிச்சம் குறைவாக இருக்கும் தனி மனிதனோ, குடும்பமோ, ஊரோ, நாடோ, சமுதாய முழுமையுமோ வாழ்வில் வளமும் நலமும் காக்க முடியாது.**

என்கிறார்.

> **ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்**
> **தெய்வத்தோடு ஒப்பக் கொளல்**

என்கிறது வள்ளுவம்.

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் எனும்
வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வம்

என்ற எளிய, புதிய விளக்கம் கொடுத்து உள்ளத்திலிருக்கும் இறைவனை அடையாளம் காட்டுகிறார்.

தனிமனித மேம்பாடு இருக்குமேயானால் மனிதனுக்கு மனிதன் அன்பு பாராட்டி இணங்கி வாழ முடியும். புறவாழ்வில் நல்லொழுக்கங்களைக் கற்று முன்னேறி வாழ்வைப் பயன்படுத்திச் சமுதாய முன்னேற்றம் பெற முடியும். ஒருவருக்கொருவர் உதவி இயற்கை வளங்களை அனுபவித்து நட்பு நலன் பாராட்டுதல் அவசியம். வரவு செலவுக் கணக்கில் லாப நட்டம் இருப்பு இவற்றைக் கணிப்பது போலத் தனிமனித வாழ்விலும் அவனுக்கு எத்தனைப் பேர் நண்பர்கள் எத்தனைப் பேர் விரோதிகள் என்பதைக் கணக்கெடுத்தால் மனிதவளம் எவ்வளவு அதிகம் என்பதை உணர முடியும். நட்பு நலத்தில் அன்பும் கருணையும் இன்ப ஊற்று என்கிறார் மகரிஷி.

அன்பும் கருணையுமாய் அகன்ற நிலையிலுள்ளாய்
என்மனத்தைவிரித்து இணைத்துக் கொண்டாய்
உன்னுள்ளே
கன்ம விதைகள் எல்லாம் கழிந்தன உணர்கிறேன்
உன்னை உணர்ந்து உய்ய உலகோர்க்குத் தொண்டு
செய்வேன்

என்கிறார். அன்பும் கருணையும் கொண்டால் ஒருவர் மற்றவரை உளமாற வாழ்த்துவர்.

வாழ்த்து என்றாலே அது நினைக்குந்தோறும், சொல்லுந்தோறும் மனதிலே ஓர் அமைதியான இயக்கம் ஏற்படும். ஏனென்றால் பிறர் நலமாக வாழ வேண்டும் என்னும் கருத்தோடு எழும் ஒலியே வாழ்த்து என்ற வாழ்த்தாகும். அந்த வாழ்த்தோடு வாழ்க வளமுடன் என்று சேர்த்துக் கூறினால் எல்லாப் பேறுகளையும் உங்களுடைய வாழ்க்கை யிலேயே பெற்றுச் சிறப்பாக வாழவேண்டும் என்ற விரிந்த ஆழ்ந்த கருத்தினை உடையதான வாழ்த்தாக

அமையும். எனவே நாம் எப்போதும் பிறரை வாழ்த்திக் கொண்டிருக்கும் ஒரு நல்ல பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

என்கிறார்.

முடிவுரை

எண்ணங்களை ஆராய்ந்து ஆசைகளைச் சீரமைத்துச் சினம் தவிர்த்துக் கவலை ஒழித்து இறைநிலை உணர்ந்தால் தனிமனித மேம்பாடும் சமூக உறவும் மேன்மை அடையும். இறை வழிபாடு நமது உடலைப் பாதுகாக்கச் செய்யும் செயல். மற்றவரைப் பாதுகாக்க நாம் செய்யும் செயலும், உதவியும் இறை வழிபாடுதான் என்கிறார் மகரிஷி அவர்கள். இதனால் மனநிறைவு ஏற்படும். பொருள், புகழ், அதிகாரம், புலன் இன்பம் ஆகியவற்றில் நிறை நிலைபெற்று மனித வளம் ஓங்கிச் சமுதாயத்தோடு இணக்க உறவு கொள்ள முடியும் என்கிறார். தனிமனிதன் தன் மனத்தை அறிந்து அதனுள் உள்ள எண்ணங்களை உணர்ந்து ஆசைகளைச் சீரமைத்துக் கவலைகளை ஒழித்து இறைநிலை உணர்வானே யானால் மனிதவள மேம்பாடும் சமூக உறவும் செம்மையுறும் என்பது மகரிஷியின் கருத்தாகும்.

உலக அமைதிக்குக் குழந்தைகள் வளர்ப்பு முறை

வ. வீரராகவன்

உலகில் நெருக்கடி மிகுந்துவருகிறது. மக்களுக்குள் பிரிவினை வளர்ந்து வருகிறது. எண்ணங்களும் செயல்களும் நெருக்கடியை வளர்த்துக் கொண்டிருக்கின்றன. அமைதியை மக்கள் விரும்பினால் அவர்கள் வெகுதூரம் பின்னோக்கி நடந்தாக வேண்டும். உயரச் சென்றவர்கள் இறங்கிவருவது அவ்வளவு எளிதன்று. இருக்கும் தலைமுறையினர் இயந்திர வாழ்க்கையால் நெருக்கடிக்கு ஆளாகி இருப்பதால் அமைதிக்குரிய வழியை ஆராய முடியாமல், பின்பற்ற முடியாமல் தவிக்கின்றனர். இயற்கையைச் சிதைத்து வாழவும் இயற்கையோடு இணைந்து வாழவும் தெரியாமல் இடையூறுகளை விளைத்துக்கொண்டு தடுமாறுகின்றனர். இனி உலக அமைதிக்கு அடுத்த தலைமுறையின் தொடக்கத்திலிருந்து பயிற்றுவித்து வாழவைப்பதுதான் சிறந்த வழி என்று வேதாத்திரி மகரிஷி கருதுகின்றார். அதற்குரிய திட்டங்களை ஆராய்ந்து வகுத்திருக்கின்றார். அவற்றை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குழந்தைகளைப் பொதுச் சொத்தாக்குதல், அவர்களைப் பொது இடத்தில் வளர்த்தல், பொதுக் கல்வியைத் தருதல், பொதுக் கல்வியில் உடற்கல்வியும் அறிவுக்கல்வியையும் கற்பித்தல், பொதுமொழியைக் கற்பித்தல், தொழிற்கல்விகளான வேளாண்மை, நெசவு, சமையல், கட்டடப்பணி, அறிவியல் கருவிகளின் நுட்பங்கள் ஆகியவற்றையும் கற்பித்துப் பழக்குதல் முதலிய மகரிஷியின் திட்டங்களை விளக்க முற்படுகிறது இக்கட்டுரை.

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை பச்சையப்பன் கல்லூரி, சென்னை – 600 030.

சிறப்பான ஓர்ஆட்சி உலகோர் எல்லாம்
சேர்ந்தமைத்து, எங்கெங்கும் உலக மீது
பிறக்கின்ற குழந்தைகளைப் பொதுச் சொத்தாக்கி,
பெற்றோர் மக்கள் பாசம் எழாமல் செய்து,
இறக்கின்றோர் சொத்தும், முதியோர், நோயுற்றோர்,
இவர்களையும் பொது ஆட்சி ஏற்றுக்கொண்டு
அறப்பணிக்கே தகுதியாகக் குழந்தைகட்கு
அறிவு, தொழில், கல்விகளைப் புகட்டவேண்டும்

எல்லா நாடுகளிலுமுள்ள மனிதர்களும் ஒன்று சேர்ந்து, சிறப்பான ஒரே உலகப் பொது ஆட்சி நிறுவுவதற்கு உலகம் மீது எங்கெங்கும் பிறக்கின்ற உலகச் சமாதான வித்தாகிய குழந்தைச் செல்வங்களைப் பொதுச் செல்வமாக்க வேண்டும்.

பொதுமை உலகை உருவாக்க உலக மக்கள் தங்களுக்கு உரிமை என்று எண்ணிக் கொண்டிருக்கும் சகல சொத்து களையும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் அப்படியே துய்க்க விட்டு, இறந்தபிறகு ஒவ்வொருவருடைய முழுச் சொத்துகளும் பொது ஆட்சியைச் சேரவேண்டும். முதியோரையும் நோயாளி களையும் அரசு ஆதரவில் கொண்டுவர வேண்டும்.

உயரிய நன்னோக்க முறையில் எதிர்காலத்தில் வாழத் தகுதியாக எல்லாக் குழந்தைகட்கும் அறிவு, தொழில், கல்வி ஆகியவற்றைப் புகட்டிப் பொதுமை நோக்கும் போக்கும் செயல் பாடுகளும் உடையவர்களாக அவர்களை உருவாக்க வேண்டும்.

எடுத்த எடுப்பிலேயே - உடனே தாங்கள் சம்பாதித்துச் சேமித்து வைத்திருக்கும் செல்வத்தை யாருமே பொது உடைமையாக்க உடன்பட மாட்டார்கள். அதனால் இறந்து விட்டபின், அவர்கள் சொத்துகள் பொதுஉடைமையாக வேண்டும் என்று திட்டமிடுவதால், எவருக்கும் அதிர்ச்சியோ, வருத்தமோ ஏற்படாது. பிறக்கும் குழந்தைகள் பொதுச் சொத்தாகி விடுவதால், ஒருவர் இறந்தால் அவருடைய சொத்து முழுவதும் பொது உடைமையாவதைத்தவிர வேறு வழியில்லை. இம்முறையால் அதிகச் சிக்கலும் துன்பமும் இன்றிச் சில ஆண்டுகளில் படிப்படியாகச் சொத்துகள் பொது உடைமையாகும்.

மக்கள், பெற்றோர் என்ற இருதரப்பினர் இடையே தோன்றும் பாசத்தை மட்டும் அறுத்துவிட்டால், இந்த உலகத்தில் மனித இனத்தைத் துன்புறுத்தும் பலவிதமான பேதங்களும், குறுகிய நோக்கங்களும், ஒழிந்து போகும். தகுந்த முறையில் உலகில் உள்ள எல்லாக் குழந்தைகளும் சமதர்ம ஆட்சியினால் வளர்க்கப்பட்டு அவர்களின் எதிர்காலம் வளம் பெறுவதோடு, எல்லாருமே எழுத்து, தொழில், கல்விகளில் சிறந்தவர்களாக விளங்குவர். ஒழுக்கங்களும் நிலைத்துநிற்கும். உலக மனிதருக்கு மிகத் தேவையான இத்திட்டம், செயலாக்கத்திற்கு வரும்போது உலக சமாதானம் எளிதில் ஏற்படும்.

சாதி, மதம், இனம், மொழி, செல்வம் இவற்றைப் பற்றி எழும் பேத உணர்ச்சிகள் அனைத்தும், பெற்றோர்களே குழந்தைகளை வளர்ப்பதால் தொடர்ந்து வந்துகொண்டு இருக்கின்றன. இதற்குப் பெற்றவர்களின் பாசமே காரணம் எனலாம். இதனால் எண்ணிறந்த குழந்தைகள் சமூக வாழ்விற்குப் பயனற்றவர்களாக ஆகிவிடுகிறார்கள்.

எடுத்துக்காட்டாக, ஒருவருக்கு நல்ல வருமானம் இருக்கிறது. அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் இருக்கின்றன. அக்குழந்தைகளுக்கு நகைகள் பூட்டி, பட்டுடுத்தி, அலங்காரம் செய்து, அதிகச் செலவு செய்து தின்பண்டங்கள் கொடுத்துப் பழக்கிவிடுகிறார்கள். அலங்காரத்திலும் அதிகச் சுவையிலும் பழக்கிவிடப்பட்ட குழந்தைகளின் உள்ளம் செம்மையடைவதில்லை.

உடல் உழைப்புப் பழக்கமின்மையால், அதை அக் குழந்தைகள் துன்பமாகவே கருதுகிறார்கள். இப்படியே இத்தகைய மனப்பான்மையும், சோம்பேறித் தனமும் வளருகின்றன. இத்துடன் மற்றக் குழந்தைகளைவிடத் "தான் வசதி உள்ளவன்" என்ற தன் முனைப்பும் ஏற்படுகிறது. இந்த வகையில் வளர்க்கப்படும் குழந்தைகள் வயதுவந்தபின், சமூக வாழ்விற்கு ஏற்றவர்களாக இருக்க மாட்டார்கள். சமுதாயத்தில் வறுமையை உற்பத்தி செய்யும் உருவங்களாக மாறி விடுகிறார்கள்.

தான் உழைக்காமல் பிறர் உழைப்பைக் கொண்டே வாழ்க்கை வ்சதிகள் பெறவேண்டிய மன இயல்புகள் உடையவர்களாகி விடுகிறார்கள். இத்தகையோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போனால், தனிமனிதன் வாழ்விலும்

உலக மக்களின் கூட்டு வாழ்க்கையிலும் சமாதானம் இருக்க இடமில்லை என்பது நன்கு விளங்கும். ஆகையால் குழந்தை வளர்ப்பானது சமூகப் பொறுப்பில் இருக்க வேண்டுமென்று மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.

ஐந்து அறிவுடைய விலங்குகள், பறவைகள் கூட, அவை பெற்ற குட்டி குஞ்சுகளைப் பாதுகாத்து வளர்த்து வாழும்போது, பகுத்தறிவு பெற்ற மனிதர்கள் மட்டும் தாங்கள் பெற்ற குழந்தைகளை வளர்த்தல் தவறா? என்று வினாவும் எழுப்பி விவாதமும் செய்வீர்கள். ஆனால் பலர் எண்ணிலடங்காத் தெய்வங்களைத் தோற்றுவித்து, கற்பனையால் துன்பங்களைப் பெருக்கிக் கொண்டு, அன்றாட வாழ்விற்கு வேண்டிய வசதிகள் கிடைக்காமல் துன்பங்கொண்டு, அவ்வாழ்க்கை வசதிகளைப் பெறவேண்டிப் புலனுணர்வின் வழியே மயங்கி, அறிவு குறுகி, கொலை, களவு, விபச்சாரம், கள்ளுண்ணல், சூது ஆகிய துன்பமே பெருகும் முறை தவறான செயல்களைச் செய்யப் பழகிக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய பழக்கவழக்க மனோபாவங்களிலிருந்தும், அவற்றின் விளைவால் ஏற்படும் துன்பங்களிலிருந்தும் விடுதலை பெற வேண்டுமானால், குழந்தை வளர்ப்பு என்பதைச் சீரான முறையில் செயல்படுத்த வேண்டும்.

மனித இனம் ஒன்றாக இருந்தும் பலவிதமான தெய்வ வழிபாடுகளால், கற்பனைகளுக்கு உட்பட்டு, வெவ்வேறு திசையில் நினைவைப் பழகிக் கொண்டு, ஒன்றை ஒன்றாக மாற்றிக் கருதும் மயக்க மனப்பான்மை வளர்ந்து, அதன் விளைவாக, மனிதனை மனிதனே வேறாக - பகையாக - கருதுவது வழக்கமாகி விட்டது. இதுபோன்ற பல பேத உணர்ச்சிகளே வாழ்க்கைப் போட்டியாகி, எவ்வளவு வசதிகள் இயற்கையாலும் செயற்கையாலும் பெருகி இருந்தும், வாழ்க்கையில் வறுமை, நோய் இவற்றால் துன்பம் பெருகி வருகிறது.

மனிதன் தன்னிலை அறியாத குறைபாட்டால், அறிவு சலனப்பட்டு, பேதப்பட்டு, காமம், பேராசை, சினம், கடும்பற்று, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் ஆகிய ஆறு தீய குணங்கள் கொள்கிறான். அவற்றின் விளைவாக அதிகமான துன்பங்களைத் தரும் பொய், சூது, கற்புநெறி பிறழ்தல், கொலை,

களவு ஆகிய ஐந்து பெருந் தவறான செயல்களைச் செய்து வருகிறான். கூட்டு வாழ்க்கையைச் சமுதாயத்தில், இந்தக் கேடுகள், அவர்கள் வளர்க்கும் குழந்தையின் பழக்கத்திலும், அறிவிலும், நிலைத்துச் செயலிலும் பெருகிவிடும். இதனைப் போக்க மனிதன் தான் பெற்ற குழந்தைகளை, அறிவு உடல் தத்துவமறிந்த அறிஞர்களின் திட்டப்படி, சமூகப் பொறுப்பில் வளர்க்க வேண்டும் என்பதை வற்புறுத்துகிறார்.

கூடி வாழும் முறையில் குழந்தைகளைப் பொதுவாக்கி வளர்க்க விலங்குக்குத் தெரியாது. அவற்றால் முடியாது. ஆனால், மனிதன் இதனைச் சிறப்பாகச் செயல்படுத்த முடியும். இயற்கையின் இயல்பறிந்து, செயற்கையில் வாழ்க்கை முறையைச் சீர்திருத்தி வாழும் மனிதகுலத்தின் இறுதி இலட்சியம் குழந்தை வளர்ப்பைப் பொதுச் செல்வமாக்குவதாக இருக்க வேண்டும் என்பதே வேதாத்திரி மகரிஷி அவர்களின் எண்ணம். சமூகப் பொறுப்பில் குழந்தைகளை வளர்க்கும் ஒரு சிறந்த முறையால்தான், எதிர்காலத்தில் மனித இனம் உயர்வடைய முடியும். குழந்தைகளைப் பொதுச் சொத்தாக்க வேண்டும் என்று மகரிஷி கூறும் கருத்தை ஊன்றி அறியாமல், அவர் பெண்ணினத்தின் மதிப்பையே உணராதவர் என்று எண்ணுவதும் கருதுவதும் தவறாகும். இந்த உலகில் பிறந்து வாழுகின்ற மனிதர் எல்லாருமே, பெண்ணினத்தின் அன்பளிப்பே என்ற தெளிவான உண்மையை உணர்ந்தே யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி உலகச் சமாதானத்துக்குத் தேவையான அடிப்படைக் கருத்துகளைக் கூறியுள்ளார்.

பெண்ணினமே உலக மக்களை எல்லாம் உருவாக்கிப் பெற்று, வளர்த்து வாழவைத்துள்ளது என்று அவர் கூறுவதன்மூலம் பெண்ணினத்தின் பெருமையை உணர்ந்தே உலகப் பொது நோக்குத் திட்டத்தை வலியுறுத்தியுள்ளார் என்பதை அறிந்து கொள்ளலாம்.

இன்றைய உலகச் சூழ்நிலையில், பெண்கள் தாம் பெற்ற மக்களைப் பிறர் வளர்க்கச் சம்மதிக்க மாட்டார்கள்; மனமும் பொறுக்கமாட்டார்கள். எனினும் பெண்ணினத்திற்கு முழு விடுதலையும், இந்தப் பரந்த உலக மக்கள் வாழ்வில் உள்ள எல்லாத் தொல்லைகளையும் ஒழித்து அமைதியான வாழ்வையே,

மனித இனம் பெறவேண்டியிருப்பதால், குழந்தை வளர்ப்பைச் சமூகம் ஏற்கச் சம்மதிக்கும் ஒரு தியாகத்தைத் தாய்மார்கள் செய்தே ஆக வேண்டும். உலக மக்களின் வாழ்வின் நன்மைக்கு அடிப்படையான இந்தத் திட்டத்தில் அவர்கள் பொறுப்பேற்றுத் தியாகம் செய்ய வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார்.

பெண்களின் பொறுப்பை விளக்கிக் கூறும்போது ஒன்று இரண்டு குழந்தைகளைப் பெற்றுச் சமூகத்திற்குக் கொடுத்து விட்டு, உலகில் உள்ள குழந்தைகளை எல்லாம் தம்முடையதாகக் கருதிப் பெண்கள் வாழ வேண்டும். அனைத்துக் குழந்தைகட்கும் உடலுக்கும் அறிவிற்கும் தேவையான அனுபோகங்கள் சமமாகக் கிடைக்க உலக சகோதரிகள் தங்கள் மக்கள் என்ற பாசத்தைத் துறக்க வேண்டிய தேவையை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

சமுதாயப் பொறுப்பில் எல்லாக் குழந்தைகளும் வளர்ந்தால், கல்வி முறை, வாழ்க்கை வசதிகள், ஒழுக்கங்கள் எல்லாம் நன்கு அமையும். ஒவ்வொருவருக்கும் உலகமே வீடாகவும், சமூகமே பெற்றோர்களாகவும், உழைப்பே கடமையாகவும், சிந்தனை, ஆராய்ச்சி ஆகியன பொழுது போக்காகவும் அமையும் பரந்த மனப்பான்மை உண்டாகும்; உலக மக்கள் யாவரும் அமைதியாக, அன்பாக, இன்பமாக வாழ்வார்கள். இத்தகைய நல்விளைவுகளைக் கருத்தில் கொண்டு, பெண்கள் தம்மக்கள் என்ற பாசத்தைத் தியாகம் செய்ய வேண்டியுள்ளது எனக் குறிப்பிடுகிறார்.

எந்த வயதினரும், ஆணானாலும், பெண்ணானாலும் குழந்தை வளர்ப்பு விடுதிகளுக்குச் சென்று, எந்தக் குழந்தையுடனும் விளையாடலாம்.

ஐந்து முதல் இருபது வயதுடைய சிறுவர்கள் எப்போதுமே அவர்கள் கல்வி நேரம் போக, மீதி நேரங்களில் மற்ற குழந்தைகளுடனேதாம் வளர்வார்கள். ஆகையால் எந்த வயதிலும் யாரும் குழந்தைகளின் தொடர்புடன் வாழலாம்.

ஓய்வு நாட்களில், ஒவ்வொருவரும் தங்களுக்கு விருப்பமான குழந்தைகளை வெளியே எடுத்துச் செல்வதோடு, 'தன் குழந்தை' என்ற குறுகிய நினைவை ஒழித்துக் குழந்தைகளிடம் பெற்றோருக்கு இருக்க வேண்டிய பொறுப்பையும், கடமையையும் எந்த வகையிலும் குறைத்துக் கொள்ளாமல் இருக்க வழிகண்டுள்ளார்.

எதிர்காலத்தில் வையகத்தைச் சூழ்ந்திருக்கும் அபாயங்களான அணுகுண்டின் பெருக்க விளைவுகளையும், அடுத்தடுத்து வந்துகொண்டே இருக்கும் போர்களின் விளைவுகளையும் எண்ணி, மனித வாழ்க்கைப் போட்டியின் காரணமாக ஏற்பட்ட ஏற்பட இருக்கும் தீமைகளை அடியோடு ஒழிக்க வேண்டுமென்றால், உலகம் முழுவதும் ஒரே ஆட்சியின் கீழ் வர வேண்டும். அவ்வாட்சியும் குழந்தைகளைப் பொதுச் சொத்தாகக் கொள்ளும் திட்டத்தின்கீழ் வகுக்கப்பட வேண்டும்.

இல்லாவிடில் இன்றுள்ள சாதி, மத, தேச, இன, மொழிப் பேதங்களும், தனியுடைமைப் பற்றும் நீங்கவே நீங்கா. இவை இருக்கும்வரையில் மனிதரின் வாழ்வில் அமைதி என்பதே இராது; ஏற்படாது. உலக மக்களைத் துன்பங்களிலிருந்து விடுவிக்கவும், ஒற்றுமையாய் வாழவும் 'தம் மக்கள்' என்ற பாசத்தைத் துறப்பதே பெற்றோர்களின் கடமையும் பொறுப்புமாகும்.

வாழ்க்கையில் சம உரிமை, சம அந்தஸ்து பெண்கள் பெற வேண்டுமெனில், குழந்தை வளர்ப்பின் பொறுப்பைச் சமூகம் ஏற்றுக்கொள்ளப் பெண்கள் முன்வரும்போதுதான் பெண் விடுதலை பெற முடியும் எனப் பெண் விடுதலைக்கு வித்திடுகிறார்.

குழந்தைகளைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்கு, உலக நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஒரு நல்ல - உயர்வான - திட்டம் வகுத்துவிட்டால், அப்பொழுது பெண்ணினத்திற்கு வாழ்வில் அமைதி கிடைக்கும்.

அவர்கள் பெறும் குழந்தைகள், எதிர்காலத்தில் எல்லாவித நல்லாற்றல்களையும் பெற்று, ஒழுக்கமுடைய குடிமக்களாகவும், வல்லவர்களாகவும், நல்லவர்களாகவும் உருவாவதற்கு ஒரு திட்டம் வகுத்துச் செயலாற்ற முற்பட்டால், குழந்தைகளைப் பொதுச் சொத்தாக்கத் தாய்மார்கள் மனம் ஒத்து, இந்தத் திட்டத்திற்கு ஆதரவு அளிப்பார்கள், ஒத்துழைப்பார்கள். இதனை ஆழ்ந்து சிந்தித்து, இயற்கை வேக விளைவுகள், செயற்கை ஆற்றல் விளைவுகள் என்ற இரண்டையும் நன்றாகக் கருத்தில் கொண்டு அதற்கேற்பச் செயல்திட்டத்தை அறிஞர்கள் வகுக்கவேண்டும் எனக் குறிப்பிடுகிறார்.

இன்று பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையே உள்ள பாசம் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறது. சில

பெண்கள் இன்று குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே போவதற்குக் கூடக் கூச்சப்படுகிறார்கள். சிலர் தாய்ப்பாலே கொடுக்காமல் வளர்க்கின்றனர். சிலர் சிறு குழந்தையைத் தொட்டிலிலிட்டு யாரையேனும் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டுத் திரைப்படத்திற்கோ, பணிக்கோ சென்றுவிடுகின்றனர். வளர்ந்த சில பிள்ளைகள், பெண்களுடனும் தாய்மார்களுடனும் வாய்ச்சண்டை, கைச் சண்டை, நீதிமன்ற வழக்குகள் என அலைந்து வருகின்றனர். வேறு பல சூழ்நிலைகளால் பிள்ளைகளை வளர்ப்பது சுமையாகவே அன்னையருக்குப் பல இடங்களில் இருக்கின்றது.

இம்முறையில் தாய்-சேய் பாசம் பலரிடம் குறைந்தே வருவதைக் கொண்டு ஆராய்ந்தால், எதிர்காலப் பெண்கள் அடுத்து வரும் தலைமுறையிலேயே குழந்தைகளைப் பொதுச் சொத்தாக்கும் திட்டத்தை மிகவும் மனம் ஒத்து ஏற்றுக் கொள்வார்கள் என்று கூறியுள்ளார்.

குருகுலங்கள் ஆங்காங்கு ஏற்படுத்தி,
குழந்தைகளை நன்முறையில் வளர்ப்பதற்கும்,
பருவமதற் கேற்ற உணவுடற் பயிற்சி
பண்பாட்டுக் குகந்த செயல், மனோபழக்கம்
தருவதற்கும், சுகாதார முடன் விஞ்ஞானத்
தத்துவங்கள் அறிந்தோரை நியமித்து, ஆண்பெண்
இருபாலரும் பத்து வயது தாண்டில்,
எக்கலையும் கற்க ஆண்பெண் பிரிவமைப்போம்.

என்று குழந்தைகள் வளர்க்கும் முறை பற்றிக் கூறியுள்ளார்.

வெயில், மழை, காற்று, பனி ஆகிய இயற்கையின் கூறுகளால் ஏற்படும் துன்பங்களையும் அண்ட கோள்களின் இயக்கங்களால் உடலில் வேதியியல் மாற்றங்கள் உண்டாகி அவற்றால் ஏற்படும் துன்பங்களையும், கூடுமான வரையில் முயற்சியினால் போக்கிக் கொள்ள வேண்டும்.

இடம் பொருளுக்கேற்ப, அறிவின் திறத்தால், உடல் இயக்கப் பயிற்சியால், இயற்கைத் துன்பங்களுக்குரிய வேகத்தையும் விளைவையும் செயற்கை முறையில் எதிர்க்கவும், ஒத்துப் பயனாகக் கொள்ளவும் அறிந்து வாழ்க்கையைச் சிறப்பித்துக் கொள்ளும் உடற்பயிற்சியும், அறிவாராய்ச்சித்

திறனும் ஊட்டும் மிகப் பயனுடைய கல்வி முறையை எதிர்கால மக்களுக்கு வகுப்பதே மகரிஷி அவர்களின் எண்ணம்.

விவசாயம், துணி நெய்தல், சமையல் செய்தல்,
வீடுகட்டல், இயந்திரங்கள் இயக்கல் – செய்தல்,
தவறாமல் அனைவரும் கட்டாய மாகத்
தக்க வயதிருபதுக்குள் கற்க, மேலும்
எவரெவர்க்கு எக்கலையில் திறமை ஆர்வம்
இயற்கையாய் அமைந்துளதோ அதையும் கண்டு
நவ உலக வாழ்க்கையினை இனியதாக்க,
நாம் வகுக்கும் தொழில்கல்வி அமைய வேண்டும்.

விவசாயம், நெசவு, சமையல், வீடுகட்டல், இயந்திரங்கள் அறிவியல் கருவிகள் இவற்றின் நுட்பங்கள் அறிந்து அவற்றை இயக்குதல், உற்பத்தி செய்தல் ஆகிய ஐந்து அடிப்படைத் தொழில்களையும் அனைவரும் கற்கும் வகையில் தொழில் கல்வி முறையை வகுக்க வேண்டும். இவற்றோடு அவரவர்களின் சிறப்புத் திறமை, ஆர்வம் இவற்றுக்கேற்பக் குறிப்பான வேறு தொழில்கள் அல்லது கலைகளைக் கற்கவும் வசதி செய்ய வேண்டும்.

ஒவ்வொரு குழந்தையும், தொழில் கல்வி கற்கும் காலத்தில் மனோதத்துவம், உடல்நலம், பொருளாதாரம், அரசியல், அறிவியல் ஆகிய ஐவகை வாழ்க்கைத் தத்துவங்களையும் வயதுக் கேற்றபடி அறிந்து, உயர் நோக்கச் செயல் திறமைகளுடையவர் களாக வேண்டும்.

மனித இனத்திற்கு வாழ்க்கை - அறிவும், செயல் திறமையும் தான் செல்வமாகும். அந்தச் செல்வம் குழந்தைகளிடத்திலே சிறுவயது முதலே வளர வேண்டும். இதுவரையில் மனிதன் அடைந்துள்ள முன்னேற்றங்களின் இறுதிப் பயனாக இருக்க வேண்டியது உயர்தர முறையில் குழந்தைகளை வளர்ப்பதேயாகும்.

ஐந்து முதல் பத்து வயதிற்குள், குழந்தைகளுக்கு எழுத்துக் கல்வி முடிந்துவிடும். பின்னர் வாழ்விற்குத் தேவையான தொழிற் கல்விகளைக் கற்க, பதினொரு வயது முதல் இருபது வயது வரை ஒதுக்கிவிட வேண்டும். தொழிற்கல்விக் காலத்தில் குழந்தைகள் உலகில் பல நாடுகளில் மாறிமாறி ஆங்காங்குள்ள இயற்கை வளங்களுக்கேற்றபடி தொழில் கற்றுக் கொள்ளும்படியான திட்டம் அமைக்க வேண்டும்.

இந்த முறையால் 'இது எங்கள் ஊர், இது எங்கள் நாடு' என்று எண்ணவும் சொல்லவும் முடியாதபடி 'இவ்வுலகமே நமக்கு உரியது' என்று எண்ணியும் போற்றியும் வாழும் வாய்ப்பையே எல்லாக் குழந்தைகளும் பெறுவர்.

எல்லாக் குழந்தைகளும் எல்லா நாடுகளையும் சுற்றித் தொழில் கற்க வேண்டுமானால், அதற்குத் தகுந்த போக்குவரவு சாதனங்கள் அதிகம் தேவைப்படும். முதலிலேயே எல்லா வசதிகளும் செய்ய முடியாவிட்டால், உள்ள வசதிகளைக் கொண்டு தொடங்கிப் படிப்படியாக வளர்த்து, இறுதியில் எல்லா வசதியும் நிறைந்ததாக ஆகும்படி இந்தத் திட்டம் முழுமையும் அமல் நடத்தலாம் என்று தம் எண்ணத்தை வெளிப்படுத்தி யுள்ளார்.

ஒருமொழியே மனிதருக்கு வாழப்போதும்
உள்ள மொழி பலவற்றுள் முன்னோர் சொன்ன
அருமைக்கலைகள் அனைத்தும் மொழிபெயர்த்து
ஆண்டு முப்பதுக்குள்ளே எழுதிக்கொள்வோம்.
ஒருமைத் தத்துவம் உணர்ந்து அன்பாய்வாழ
உள்நாட்டப் பயிற்சி வயதடைந்தோர் கொள்ள,
நிருவிகற்ப சாதனை மன்றங்கள் என்ற
நிலையங்கள் ஆங்காங்குத் தோற்றுவிப்போம்

மனிதர் ஒருவர் கருத்தை ஒருவர் அறியக் கொண்ட வேகமே மொழியாகத் தோன்றியது. எல்லா வகையிலும் இந்த மொழிதான் மனித இன முன்னேற்றத்திற்கு அடிப்படையாக அமைந்திருக்கிறது. அவ்வாறு தோன்றிய மொழி பலவாக நம்மிடையே நிலவி வருகிறது.

மனித குலம் ஒன்றே என்றும், அகில உலக மக்களும் ஒன்று கூடியே வாழ வேண்டும் என்றும், இப்போது விரும்புகிறோம். அது அவசியமுமாகிவிட்டது.

ஆகையால் இனிப் பலவிதமான மொழிகள் தேவையில்லை; நாம் வாழ ஒரு மொழியே போதுமானது. மனிதர் வாழ்வதற்கு, ஒருவருக்கொருவர் கருத்தறிந்து கொள்வதற்கு, மொழி தேவையே தவிர, மொழிகளைக் கற்பதோ - பல மொழிகளைக் கற்றுக் காலத்தை வீணாக்குவதோ - வாழ்க்கை இலட்சியமல்ல.

அனைத்து நாடுகளில் தலைவர்களும், ஆராய்ச்சியாளர் களும், பல மொழிவல்லுநர்களும் சேர்ந்து மக்கள் எளிதாகப் பேச, கற்க, எழுதத் தகுதியான ஒரு மொழியைத் தேர்ந்தெடுத்து, அதைக் குழந்தைகளுக்கெல்லாம் கற்றுக் கொடுக்க வேண்டும்.

உலக சமாதான ஆட்சி தொடங்கியபின், முப்பது ஆண்டுகளில் வாழ்க்கைத் தத்துவங்கள், கலைகள் அனைத்தையும் மொழிபெயர்த்து அகில உலக எதிர்கால மொழியில் எழுதிக் கொள்ள வேண்டும்.

பல கோடி உருவங்கள் அனைத்திலும், பேதமற்று ஊடே தொடர்ந்து நிறைந்து அரூபமாய், இடங்களுக்கேற்றபடி மௌனமாய், இயக்கமாய், முயற்சியாய் இருக்கும் ஒரு சக்தியை- இயற்கை வேகத்தை அறிந்து கொள்ளும் ஆற்றலையும் ஆர்வத்தையும் நுட்பத்தையும் தரும். உள்நாட்டப் பயிற்சியை, உற்ற வயது வந்தவர்கள் அனைவரும் அறிந்து கொள்ள, பழகிக்கொள்ள, வாய்ப்பு அளிப்பதற்காக உலகில் எங்கெங்கும் "நிர்விகற்ப சாதனை மன்றங்கள்" என்ற ஆலயங்களை ஏற்படுத்த வேண்டும்.

ஆறுவகையாக - கிளைகளாக- இயங்கும் அறிவானது புலன்களின் மூலமாக ஐந்து வழிகளில் பெரும்பாலும் பயன்படுத்தப் படுகிறது. ஆனாலும் நிலையாக உள்ள தன்னிலையறியும் உச்ச வேகம் உடைய அறிவானது தகுந்தபடி பயன்படுத்தப்படாததால், அது பலவிதமான கற்பனை மயக்கங்களில் ஈடுபடுகிறது. அதன் விளைவாக வாழ்க்கையில் பல இன்னல்கள் விளைகின்றன.

ஆகையால் உள்நாட்டப் பயிற்சியின் மூலம் இந்தக் குறையைப் போக்கி மனித குலம் வாழ்வில் முழு வெற்றியைக் காண வேண்டும்.

மலைப்பின்றி எளிதாய் எழுத, கற்க,
மழலைகளும் தெளிவாய் உச்சரிக்க, ஏற்ற
தலைசிறந்த ஒரு மொழியே எதிர்காலத்தில்
தனித்து நிற்கும் உலகில் ஒரு பொதுமொழியாய்
கலைச்சொற்கள் அம்மொழியில் இப்போது இல்லாக்
காரணத்தால் மயங்காதீர்! அவை வழக்கில்
நிலைச் சொற்களாயிருக்கும் மொழியைக் கொண்டே
நேராக லிபி மாற்றி எழுதிக் கொள்வோம்.

இன்று உலகில் உள்ள மொழிகளில் எளிதாக எழுதவும் படிக்கவும், குழந்தைகள்கூடத் தெளிவுடன் ஒலிக்கவும் ஏற்ற தனிச் சிறப்புடைய ஒரு மொழியையே எதிர்கால உலகப் பொது மொழியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பன்மொழிப் புலமையும், மனிதஇனம் நல்வாழ்வு அடைய வேண்டும் என்ற நோக்கமும் உடைய அறிஞர்கள் கூடி, கூர்ந்து பற்றற்று ஆராய்ந்து, ஒரு சிறந்த பொது மொழியைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

பேதமற்ற சமுதாயம் அமைக்க வென்று
பேசுகிறீர், எனினும் இதுவரையில் உங்கள்
ஆதரவுக் கேற்றபடி, அனுபவத்தில்
அனுசரித்த முறைகளெல்லாம் எடுத்து ஆராய்வீர்
வேதமத, ஜாதி இன, வேறுபாட்டை
வேரோடு போக்கி, உலகெங்கும் மக்கள்
சோதரர்களாய் ஒன்றுபட்டு வாழ,
சுருக்கவழி; குழந்தைகளைப் பண்படுத்தல்

எல்லாப் பேதங்களையும் ஒழித்துச் சமரச வாழ்வளிக்கும் ஒரு சமுதாயத்தை ஏற்படுத்த சாதி, மத, இன, தேச, பேதங்களை ஒழித்து, உலக மக்கள் சகோதரர்களாக ஒன்றுபட்டு வாழ குழந்தைகள் வளர்ப்பு முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி அவர்களைப் பண்படுத்த வேண்டும் என்று யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறுகிறார். இக்கருத்து ஏற்றுப் போற்றப்பட வேண்டிய ஒன்றேயாகும்.

வேதாத்திரியமும் புதிய சமூகமும்

முனைவர் பே. நடராசன்

மனிதகுலத்தின் மாபெரும் உடைமையும், மானிட வர்க்கத்தின் ஜீவாதாரமான பிறப்புரிமையுமான சுதந்திரம் மறுக்கப்படுகின்ற நிலையில் அடிமை நிலை ஆரம்பமாகின்றது. ஆரம்பக் காலங்களில் எல்லா நாடுகளிலும் சர்வாதிகார ஆட்சி இருந்தது. ஏதாவதொரு வர்க்கத்திற்குச் சுதந்திரம் மறுக்கப்பட்டும் வந்திருக்கின்றது. அது மனிதகுலத்தின் பொதுவான வரலாறு. மனித குலம் என்று எண்ணும்பொழுது அதில் ஆண்களும், பெண்களும் அடங்குவர். சமுதாயம் மேம்பட ஆன்மீக நெறியாளர்கள் காலந்தோறும் வாழ்வின் பட்டறிவையும், சிந்தனைகளையும் அள்ளித் தருகின்றனர். வள்ளுவர் முதல் வள்ளலார் வரை அரிய பெரிய கருத்துகளை மானிட சமுதாயம் வளம்பெறத் தந்துள்ளனர். தத்துவத்திலும் அறிவியலிலும் சிறந்து விளங்கும் தத்துவ ஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் உலகம் மேன்மையடைய அரிய கருத்துகளை வழங்கி வருகின்றார். அறிவியலும், ஆன்மீகமும் ஒன்றையொன்று சார்ந்து இருக்கின்ற பொழுதுதான் சமுதாயம் புதிய சிந்தனைகளைப் பெற்று உயர்வு பெறும். மனித குலம் குழுவாகப் பிரிந்தாலும் உள்ள ஒருமையினால் ஒரே குலமாகவும் வாழலாம் என்பது அருள் தந்தை வேதாத்திரி மகரிஷியின் குறிக்கோள் ஆகும். மனித குலத்தில் சரிபாதியாக இருக்கின்ற ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்குச் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டுமென்பதும் அருள் தந்தையின் எண்ணம் ஆகும்.

சங்க காலத்துப் பெண் கல்வி

சங்க காலத்தில் பெண் கல்வி ஓங்கிய நிலையில் இருந்திருக்கின்றது. சங்க காலத்தில் ஔவையார், பெருங்கோப்பெண்டு

விரிவுரையாளர், தமிழியல் துறை
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி 627 013

போன்ற பெண்பாற் புலவர்கள் பலர் இருந்திருக்கின்றனர். காப்பிய காலத்தில் கண்ணகி பிறந்த இடத்தை விட்டு வெளியேறி வேற்று ஊருக்குச் சென்று மன்னனுடன் விவாதிக்கும் அளவுக்குத் திறன் பெற்றிருந்தாள். பக்தி இலக்கியக் காலத்தில் பெண்களின் மதிப்பு தாழ்ந்த நிலையில் இருந்தது. மண்ணாசை, பொன்னாசை ஆகியவற்றைக் கைவிட வற்புறுத்தப்பட்டது. "பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசம்", "மருவு பெண்ணாசை கொள்ளலாகாது" என்று பட்டினத்தடிகள் எடுத்துரைக்கின்றார். பொன்னாசை கொண்டோர்க்குக் கண்ணும் இல்லை" என்கிறார் கவியரசு கண்ணதாசன். வேதநாயகம் பிள்ளை (1828-1889)யின் பிரதாப முதலியார் சரித்திரம், பெண்மதிமாலை, ராஜம் அய்யரின் கமலாம்பாள் சரித்திரம், இந்திய விதவைகளின் பரிதாப வாழ்க்கையைச் சொல்லும் "முத்து மீனாட்சி" போன்ற நாவல்கள் பெண் விடுதலையை முன்னிறுத்திய இலக்கியப் படைப்புகளாகும்.

பெண்ணின் பெருமை

பெண்மையின் மேன்மையை உணராமல் இருத்தல் பெரிய தவறாகும். ஆண் இன்றிப் பெண்ணின் தோற்றம் கிடையாது. பெண் இன்றி ஆணும் தோன்ற முடியாது. இதை ஒருவர் சரியாகப் புரிந்துகொண்டால், இருபாலர்களையுமே சமமாகக் கருதத் தோன்றும்.

பெண் வயிற்றில் உருவாகிப்
பெண் பாலுண்டே வளர்ந்தாய்
பெண்ணின் துணையால் வாழ்கின்றாய்
பெண்ணின் பெருமை உணர் *(1.92)*

என்ற பாடல் பெண்ணின் பெருமையை வலியுறுத்துகின்றது. இறைவனால் கொடுக்கப்பட்ட இனப்பெருக்கம் செய்யும் பேறு பெண்ணினத்திற்கு மட்டுமே உரியதாகும். "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை" என இறைவனுக்கு இணையாகப் போற்றப் படுகின்றாள் பெண். அன்பு, பரிசு, பிறர்க்கு உதவி செய்தல், பிறர் செய்கின்ற தவறை மன்னிக்கும் மனப்பாங்கு இவை யாவும் ஆண்களைவிடப் பெண்களிடமே அதிகமாகக் காணக்கிடக்கின்றன.

எல்லையற்ற இறைவன் திரு உள்ளமென்ன
எவ்வுயிரும் தோன்றுதற்கு ஏற்றதொரு திருவழியாய்
வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே
வாழுகின்ற மக்களில் இவ்வளம் அறிந்தோர் எத்தனை பேர்
(1.94)

பெண்களுக்குச் சொத்து, சமய ஈடுபாட்டில் உரிமை மறுத்தல், தனது சொந்த மகளைத் திருமணம் செய்து கொடுத்த பின்னர் எந்தவிதமான உரிமையையும் தாய், தந்தை கொண்டாட முடியாத அவல நிலைகள் உள்ளன.

மணவினை நிகழும்போது மகள்தனைப் பெற்றோர் நின்று
கணவனென் றொருவனுக்குக் கையினில் நீரை வார்த்து
பணமதை ஈந்தோ பெற்றோ பலர் காணத் தத்தம் செய்வார்
குணமெனும் நிலை கண்டோரும் இதை கொடுமையென்
றெண்ணவில்லை (1.96)

சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம்

சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கம் பண்டைக் காலத்தில் இந்தியாவில் இருந்திருக்கின்றது. கணவன் பிணத்தை எரிக்கும் சிதையில் ஒரு பெண் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ளக் கட்டாயப்படுத்தப்பட்ட செயலே "சதி" ஆகும். இவ் எரியூட்டு நிகழ்ச்சியைக் கிராமத்து மக்கள் விழாவாகக் கொண்டாடி மகிழ்ந்திருக்கின்றனர். "இராஜஸ்தானத்து மல்லர் - நாட்டின் கொடி மானத்தைக் காக்கும் வீரர்" என்று பாரதி பாடினான். ஆனால் வண்ணமிகு அரசர் புகழ் இராஜஸ்தானியர், இன்றும் இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்திலும் ரூப்கன்வர் போன்ற நங்கையரால் சதிப் பெருமையை நிலை நாட்டியுள்ளனர். கணவனுடன் உடன்கட்டை ஏறும் பெண் மூன்று பரம்பரையினரின் பாவத்தைக் கரைத்து விடுவாளாம். (1) தன் தாய்வழிப் பரம்பரை, (2) தன் தந்தை வழிப் பரம்பரை, (3) புகுந்த வீடாகிய கணவன் பரம்பரை. இவை யாவும் சமயவாதிகளால் அறிவுறுத்தப்பட்ட பெண்களுக்கு எதிரான வாசகங்களாகும். இராஜாராம் மோகன்ராய் இந்த உடன்கட்டை ஏறும் வழக்கத்தை ஒழிக்க அரும்பாடுபட்டார். ஆனாலும் வடமாநிலத்தில் ஆங்காங்கே ஒரு சில நிகழ்வு நடைபெறுவதைச் செய்தித் தாள் வாயிலாக அறிய முடிகிறது. அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் டில்லியில் தங்கியிருந்து குண்டலினி யோகத்தைக் கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்த வேளையில், சமயத் தலைவர்கள் சிலர் சதி வழக்கத்தை மீண்டும் கொண்டு வர முயற்சித்தனர். அருள்தந்தை அவர்களிடம் இத்தீர்மானத்திற்கு ஆதரவு கேட்டனர். "உங்கள் எல்லோரின் வற்புறுத்தல் காரணமாக நான் இந்தச் சட்டத்திற்கு ஒரு சிறிய

திருத்தமுடன் சம்மதிக்கிறேன். அந்தத் திருத்தமானது, பெண்கள் சதியை மேற்கொள்வதுபோல் ஆண்களும் மனைவியின் சிதையில் விழுந்து தங்களைத் தியாகம் செய்ய வேண்டும் என்றார்". அவரது கூற்று ஆண்களுக்கு இணையாகப் பெண்கள் போற்றப்பட வேண்டும் என்பதாகும். இறுதியில் பாராளுமன்றத்தில் இந்த உடன்கட்டை ஏறும் மசோதா தோல்வி அடைந்தது.

மகளிர் மன்றங்கள்

வரதட்சணை எனும் கொடிய பழக்கம் இன்னும் இந்நாட்டில் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. வரதட்சணைக்கு எதிரான சட்டங்கள் இருந்தாலும்கூட, முழுமையாக நடைமுறைப்படுத்திட முடியவில்லை. பெண்சிசுக் கொலை என்னும் பழக்கம் தமிழ்நாட்டில் சேலம், தருமபுரி, உசிலம்பட்டி போன்ற இடங்களில் ஆங்காங்கே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. குழந்தை வளர்ப்பு, விளையாட்டு, படிப்புப் போன்றவற்றில் ஆண் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுப் பெண்களுக்கு முன்னுரிமை மறுக்கப்படுகின்ற நிலையைக் காண முடிகின்றது. கருவிலே என்ன குழந்தை என்பதை (Scan) நிழல் ஒளி காணல் மூலம் அறிந்து அழிக்கும் அவலநிலை வருந்துதற்குரியது. பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு என்பது வாயளவில் மட்டுமே பேசப்படுகிறது. நடைமுறையில் கொண்டுவரக் காலதாமதம் ஆகி வருகின்றது. பள்ளி கல்லூரிகளில் ஈவ்டீசிங் நடைபெறக் கூடிய வன்முறைகள், இவற்றிற்கு எதிராக மகளிர் மன்றங்கள் போராடி வருகின்றன. அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் மகளிர் அமைப்புகள் உருவாகி, மேற்கண்ட சூழ்நிலைகளைத் தவிர்த்திட வேண்டுமென விரும்புகின்றார்.

உலகச் சமுதாய வாழ்க்கை நெறி

வாழ்வில் உயர் வெற்றிக்கு அருள்தந்தை வேதாத்திரி மகிரிஷி அவர்கள் அரிய பதினான்கு திட்டங்களை வழங்குகிறார். அவையாவன:

1. உலகச் சமுதாய வாழ்க்கைநெறி
2. போரில்லா நல்லுலகம்

3. பொருள்துறையில் சமநீதி
4. நேர்மையான நீதிமுறை
5. சீர்செய்த பண்பாடு
6. சிந்தனையோர் வழி வாழ்வு
7. சிறப்புணர்ந்த பெண் மதிப்பு
8. தெய்வ நீதி வழி வாழ்தல்
9. தேர்த் திருவிழா தவிர்த்தல்
10. சிறுவர்கட்கே விளையாட்டு
11. செயல்விளைவு உணர் கல்வி
12. சீர்காந்த நிலை விளக்கம்
13. பார் முழுவதும் உணவு நீர் பொதுவாக்கல்
14. பல மதங்கள், பல கடவுள் பழக்கம் ஒழித்து உண்மை ஒன்றைத் தேர்ந்திடுதல்

மனிதர் ஒருவருக்கொருவர் பகைத்துக்கொண்டு, துன்புறுத்தி வாழ்வது கொடுமையான செயலாகும். உலகில் எத்தனையோ போர்கள் நிகழ்ந்துள்ளன. அதன் விளைவுகளை அறிவோம். ஜப்பானிலுள்ள ஹிரோசிம்மா, நாகசாகி போன்ற நகரங்களில் அணுகுண்டினால் ஏற்பட்ட சேதங்கள் கணக்கிலடங்கா. போரைப் பற்றிய சிந்தனை ஏற்பட்டால், உலகில் இனிமேல் போரே வேண்டாம் என்ற சிந்தனை தோன்றி விடும்.

"உடலில் சிறு காயமோ உறுப்புகளில் அடியோ ஒருவருக்கு ஏற்பட்டால் உடன் வாழ்வோர் எல்லாம் கடனுலகில் படும் துன்பம் காண்கின்றோம். போரில் கணக்கின்றிக் கணப்பொழுதில் மக்கள் மடிகின்றார். படமுடியாத துயரோடு பருவுடலின் உறுப்பு பல இழந்தும் பதைப்பதைத்துத் துன்பமுறக் காண்போம். நடந்து செல்லும் பிணங்களல்ல நாம் இவற்றைப் பார்த்து நமது கடமை தேர்ந்து நலம் செய்யாதிருக்க". ஐக்கிய நாடுகள் சபை (United Nations) என்ற அமைப்பைப் பலப்படுத்திப் போரில்லா உலகைப் படைக்க வேண்டும் என்பது அருள்தந்தையின் எண்ணமாகும்.

அறிஞர்களின் கடமை

அருள்தந்தை மகரிஷி அவர்களின் அறிஞர்கள் கடமை என்னும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரைகள் சிந்திக்கத்தக்கவை.

போர் 1) இந்நாட்டிற்குப் போர் தேவைதானா?
2) பொருள் துறையில் நிறைவு
3) எது தெய்வம்?
4) நேர்மையான நீதிமுறை
5) காந்தஞானம்
6) கரு மையம்
7) பெண்மையின் மதிப்பு
8) மனிதனும் இறைநிலையும்

என்ற நிலைகளில் விரிவாக ஆராய்ந்துள்ளார். நிலம், நீர், வெயில், காற்று இவை யாவும் மனிதன் உண்டாக்கியது கிடையாது. இவை யாவும் இயற்கையின் கொடை. இயற்கையினைச் சீண்டும் பொழுது துன்பத்திற்கு ஆளாகிறான். இந்த மண் யார்க்கும் சொந்தம் கிடையாது. ஒரு தனி நபரோ, ஒரு நாடோ என்று இந்த மண் எனக்கு உரிமையுண்டு என எல்லைக்கோடு போட முற்படுகிறதோ, அன்றே பகையும், பிரச்சினையும் உருவாகி விடுகிறது. நிலத்தின் மீது உரிமை கொண்டாடுவதை விட்டுவிட வேண்டும். பொருளாதாரத் துறையில் எல்லோரும் ஒன்றுபட வேண்டியதுதான் அறிவுடைமையாகும். "தனியொருவனுக்கு உணவில்லையெனில் சகத்தினை அழித்திடுவோம்" என்ற பாரதியின் வாக்கிற்கேற்ப, எந்தப் பொருள் எங்கு உற்பத்தியானாலும் அனைவருக்கும் கிடைக்க வேண்டும் என்பது தான் பொது நியதியாகும்.

மனிதருக்கு உணவு உடை வீடு வேண்டும்
மற்றவர்கள் கருத்தறிய மொழியும் வேண்டும்
இனியும் ஒருவர் உற்ற வயதடைந்தால்
ஏற்றபடி வாழ்க்கைக்கோர் துணையும் வேண்டும்
தனிமனிதன் சக்திகளை ஒழுங்கு செய்து
சகலவிதமாம் வாழ்க்கை வசதியெல்லாம்
புனித முறையில் பகிர்ந்து துய்த்து வாழப்
பொதுவான கூட்டாட்சி முறையும் வேண்டும்

இவற்றையெல்லாம் உள்ளடக்கிய மனித உரிமைச் சாசனம் இயற்றப்பட வேண்டும் என விரும்பினார். இயற்கையின் பேராற்றலால் உருவாகின்ற நதிநீர் அனைத்து மாநிலங்களுக்கும் கிடைக்க வேண்டும். இதனை யாரும் தடை செய்யக் கூடாது. இதனைத் திட்டமாகக் கொண்டு வர வேண்டும் என அருட்தந்தை விரும்பினார். அவர் கண்ட கனவு விரைவில் நனவாகக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உலகச் சமுதாய சேவா சங்கம்

உலகச் சமுதாய சேவா சங்கம் கண்டெடுத்த வழியே வாழ்க்கை வள உயர்வுப்படிகள் என்னும் ஐந்து நெறிக் கொள்கைகளாகும். அவையாவன: 1. உடல்நலம், 2. மனவளம், 3. நட்பு நலம், 4. கருமையத் தூய்மை, 5. பிரம்மஞானம்.

உடம்பார் அழியின் உயிரார் அழிவர்
திடம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்த்தும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பி னுள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்பினுள் உத்தமன் கோவில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே (திருமூலர்)

உடம்பைப் பற்றியும், உடம்பினுள் இருக்கும் உத்தமன் பற்றியும் திருமூலர் மேற்கண்ட பாடல்களின் வாயிலாகக் குறிப்பிடுகிறார். வாழ்வின் நோக்கத்தையும் வளமான வாழ்வைப் பற்றியும் மகரிஷி அவர்கள் கீழ்க்காணும் பாடலில் குறிப்பிடுகிறார்.

வாழவேண்டும் என்றெண்ணி உலகமீது
வந்ததில்லை வினைத் தொடராய்ப் பிறந்துவிட்டோம்
வாழவேண்டும் உலகில் ஆயுள் உள்ள மட்டும்
வாழ்ந்தோர்கள் அனுபவத்தைத் தொடர்ந்து பற்றி
வாழவென்ற உரிமை எல்லார்க்குமுண்டு
வாழ்வோர்க்குச் சாதகமாய் வாழுமட்டும்
வாழ உள்ளோர் அனைவருமே ஒன்று கூடி
வகுத்திடுவோம் ஒரு திட்டம் வளமாய் வாழ

- உலக சமாதானம் 9

அனைவரும் ஒன்றுகூடி வாழ வேண்டுவதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறார். இறைமாட்சி என்னும் அதிகாரத்தில் உள்ள

படை குடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு (381)

(He is a lion among kings who has a powerful army A loyal subject, infinite resources, for seeing Ministers, Good Friends and imregnable fortifications.)

என்னும் குறளால் அரசனுக்குரியனவாக ஆறு உறுப்புகள் கூறப்படுகின்றன. அவற்றுள் ஒன்று நட்பாகும். திருவள்ளுவர் நட்பு (79) என்னும் அதிகாரத்தில் உண்மை நட்பையும், போலி நட்பையும் கூறுகிறார். (81) பழைமை என்னும் அதிகாரத்தே பழைய நண்பர்களைப் பற்றிக் கூறுகிறார். மேலும் தீ நட்பு, கூடா நட்புப் பற்றியும் எடுத்தியம்புகிறார். உடல்நலம், மனவளம், மனித வாழ்வுக்கு மிக முக்கியம் என்பது போல நட்பு நலமும் அவசியமானதாகும் என அருள்தந்தை குறிப்பிடுகிறார். நட்பு கெடுவதற்குச் சுயநல உணர்வும், நன்றியுணர்வு இன்மையும் காரணங்களாகின்றன.

மனிதரிடம் அமையும் எழுவகைப் பேறுகள்

மனிதன் இவ்வுலகில் நிறைவோடு வாழ வேண்டுமானால் ஏழு வகைப்பேறுகள் அமைய வேண்டும் அவையாவன:

1. உருவ அமைப்பு
2. குணம்
3. அறிவின் உயர்வு
4. புகழ்
5. உடல் வலிவு
6. உடல்நலம்
7. செல்வம்

இவ் ஏழு வகையான அமைப்பும் ஒருவருக்கு அமைந்திருப்பது போல் இன்னொருவருக்கு அமைந்திருப்பது கிடையாது என அருள்தந்தை மகரிஷி குறிப்பிடுகிறார். இதற்கெல்லாம் "மக்களிடையே காணும் வேறுபாடுகளுக்கு இயற்கையின் பரிணாம நியதியே காரணம்" என்ற உண்மையேயாகும். மனிதன் வாழ்வில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல், பொறுமை, தியாகம் போன்ற பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும் எனக் கூறுகிறார். மேலும் மனித நலத்தை உயர்த்தவல்ல பணிவு, கனிவு,

துணிவு போன்றவற்றைப் பயிற்சியின் மூலம் பெருக்கிக் கொள்ள வேண்டும். கடவுள் வழிபாடு என்ற பெயரில் நடைபெறும் தேர்த் திருவிழாக்களை எதிர்க்கிறார். விஞ்ஞான யுகத்தில், மதத் தலைவர்கள் ஒன்று கூடி ஆராய்ந்து "கடவுள் எதுவென்று தீர்வு கண்டு மக்களுக்கு விளக்கமளித்துச் சில தலைமுறைகளில் இக்குறையைப் போக்கிவிடலாம்" என்கிறார்.

அனைத்தியக்கப் பேராற்றல் பிரம்மம் தெய்வம் என்போம்
அறிந்தவர் அவ்வாற்றல் வழிவாழ்ந்தோரெல்லாம்
முனைப்பொழித்த முனிவரென்றும் பிரம்மஞானியென்றும்
முன்னோர்கள் சொல்லியுள்ளார் முற்றுணர்ந்த
தெளிவால்
வினைப்பதிவின் தீமைகளை வேரறுத்து வாழ்வில்
விலங்கினத்தின் செயலொழித்து விஞ்ஞானம் தேர்ந்து
அனைத்துலக மக்களும் மெய் அறிவுடனே வாழும்
அந்தப் பெரும் நன்னாளை வாழ்த்தி வரவேற்போம்
(பிரம்ம ஞானம் ப. 120)

மனைவி நல வேட்பு நாள்

உலகம் முழுவதும் இன்று முதியோர் தினம், குழந்தைகள் தினம், நண்பர்கள் தினம், காதலர்கள் தினம் எனக் கொண்டாடப்படுகின்றன. இவையாவும் உறவை வலியுறுத்திக் கொண்டாடப்படும் விழாக்களாகும். ஒவ்வொரு ஆடவனின் வெற்றிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறாள் என்பர். பெற்றோர்கள் பெண்களை அன்பு காட்டி வளர்த்து வருகின்றனர். புகுந்த வீட்டிற்குப் பெண்கள் சென்றவுடன், சில வீடுகளில் மாமியார்கள் மருமகள்களை அடிமையாக நடத்து வதனைக் காணமுடிகிறது. புகுந்த வீட்டிலும் பெண்களுக்குச் சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும். மாமியார் தன் மகளிடம் காட்டும் அன்பு போன்று மருமகளிடம் அன்பு காட்ட வேண்டும். சில வீடுகளில் மருமகளிடமும் குறைபாடுகள் காணக் கிடக்கின்றன. தன் வீட்டின் பெருமைகளைப் புகுந்த வீட்டில் பெருமையாகப் பேசிக் கொள்வது தவறான செயலாகும். மாமனார், மாமியார், கணவன், நாத்தனார் இவர்களிடம் காணும் சிறப்புகளைப் பற்றிப் புகழ்ந்து பேசுவது மருமகளுடைய வாழ்வின் வளத்தை உயர்த்தும். மருமகளின் அன்பும், அரவணைப்பும் சொந்த மாமியார்களை அன்னையாகவே

மாற்றிவிடக்கூடும். பாவேந்தர் பாரதிதாசன் பெண் கல்வியைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது பெண், கல்வி கற்காவிட்டால் களர் நிலத்திற்கு ஒப்பாவாள் என்கிறார். ஆகவே பெண் கல்வி என்பது பெண்களுக்கு அவசியமானதாகும்.

மகளின் திருமணத்திற்காக வறுமையுற்ற தந்தையார் படும் கடன் இன்னல்கள் மன வேதனையை அளிக்கக் கூடியனவாக இருக்கின்றன. திருமண விழாவின் போது மணமகன் இவையெல்லாம் அறிந்து மணமகளை இல்லற வாழ்விற்கு வாழ்த்தி வரவேற்க வேண்டும்.

பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்த ஊரைவிட்டுப்
பிரிந்து வந்து, பெருநோக்கில் கடமையறம் ஆற்ற,
பற்றற்ற துறவியெனக் குடும்பத்தொண்டேற்று
பண்பாட்டின் அடிப்படையில் எனைப்பதியாய்
கொண்டு என்
நற்றவத்தால் என் வாழ்க்கைத் துணையாகிப் பெண்மை
நல நோக்கில் அன்போடு கருணை இவை கொண்டு
மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான் மதிக்கின்றேன் வாழ்த்தி
மகிழ்கின்றேன் (பிரம்மஞானம் 89)

'மனைவி நல வேட்பு நாள்' நடத்த வேண்டியது அவசியம் என்பதை அருள்தந்தை மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார். மனவளக்கலை மன்றம் மூலம் இந்நிகழ்ச்சி ஆங்காங்கே நடைபெற்று வருகின்றது. நெல்லை மாவட்டம், வீரவநல்லூரில் மனவளக்கலை மன்ற மனைவி நல வேட்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் திருமணத் தம்பதியர் ஒருவருக்கொருவர் நேராக உட்கார்ந்து இருந்தனர். கணவன் மனைவியைப் பார்த்து, "தாய், தந்தையைப் பிரிந்து, கணவன் நலமே தன் நலம் என எண்ணி ஏற்றம் பெற உழைக்கும் உன்னை நேசிக்கிறேன்" என்ற வார்த்தைகளைச் சொல்லிவிட்டு ரோஜாப் பூக்களை மனைவிக்குக் கொடுக்கிறான். இதன் பொருள் உன்னைப் பூப்போலக் காப்பாற்றுவேன் என்பதாகும். மனைவி மாறாக நான் என்றும் இனிப்பாய் இருப்பேன் என்பதற்கு அடையாளமாகப் பழங்களைக் கொடுக்கிறாள்.

கருமணியிற் பாவாய்நீ போதாய்யாம் வீழும்
திருநுதற்கு இல்லை இடம் (குறள் 1123)

என்ற வள்ளுவனின் வாக்கிற்கு இணங்கக் கணவன், மனைவிக்கு முக்கியத்துவம் கொடுத்து வாழ வேண்டும். மேலும் பெண்களுக்குக் கல்வி, வேலை வாய்ப்பு, சமயத்தில் உரிமை போன்றவை வழங்கப்பட வேண்டும் என அருள்தந்தை மகரிஷி வற்புறுத்துகிறார்.

திருமண ஒப்பந்தம்

சமுதாயத்தில் திருமணங்கள் இன்று ஆடம்பரமாக நடைபெற்று வருகின்றன. இதனால் பெற்றோர் வறுமை நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். எளிமையான திருமணங்கள் சமுதாயத்தில் நடைபெற வேண்டும் என்பதே அருள் தந்தையின் எண்ணமாகும். தற்பொழுது உலகச் சமுதாய சேவா சங்கத்தின் மூலமாக எளிமையான முறையில் திருமணங்கள் நடத்தி வைக்கப்படுகின்றன அந்தத் திருமண ஒப்பந்தத்திற்கு (1) பெற்றோர்கள் அனுமதி வேண்டும். (2) மற்றவர்கள் ஒத்துக் கொள்ள வேண்டும். (3) மணமக்கள் ஒருவரையொருவர் ஒத்துக் கொள்ள வேண்டும். இவை யாவற்றிற்கும் சமுதாயம் சாட்சி அளிக்க வேண்டும். அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் புனிதமான திருமணத்தில் மேலும் மாற்றங்கள் பல கொண்டு வர விழைகிறார். "வாழ்க்கை ஒப்பந்தப் பதிவு செய்வதற்கான நமூனாக்களைப் (Form) பூர்த்தி செய்து சாட்சிகளோடு தபால் அலுவலகத்தில் முத்திரை போட்டு வாங்கி, ஒன்று அரசாங்கத் திற்கும், இரண்டு தபால் அலுவலகத்திற்கும், மூன்றாவது பிள்ளை வீட்டாருக்கும், நான்காவது பெண் வீட்டாருக்குமாக வைத்துக் கொண்டு அதன் பின் மணமக்கள் இருவரும் புகைப்படம் எடுத்துக் கொண்டு தாய் தந்தையர் கையெழுத்துப் போட்டுத் தந்து விட வேண்டும் (4.168).

தாய்சேய் நலம் பாராட்டல்

கணவன், மனைவி தாம்பத்திய வாழ்வில் அன்போடு இருக்கும் நிலையில் பெண் கர்ப்பம் தரிக்கிறாள். பிறக்கும் குழந்தை ஊனம் இல்லாமல் அறிவோடு பிறக்கும். "அஸ்வினி முத்திரை" என்னும் பயிற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால், தாய் வயிற்றில் குழந்தை நலமாய் வளரும் என மனவளக் கலை மூலம் அறிவுறுத்தப்படுகின்றது. "அண்ணாமலையார் சதகம்" என்னும் நூலில் பௌர்ணமி நாளன்று பெண் கர்ப்பம் தரித்தால் தாயையும், சேயையும் பாதிக்கும் எனக் கூறப்பட்டுள்ளது. இவை

யாவும் முன்னோர் கண்ட ஆராய்ச்சி எனக் கவனத்தில் கொள்ள வேண்டும் என அருள்தந்தை கோடிட்டுக் காட்டுகிறார்.

முடிவுரை

மனைவி நல வேட்பு நிகழ்ச்சியின் மூலம் பெண்களுக்கு நன்றி பாராட்ட வேண்டும். மகளிர் மன்றங்களின் பணிகளையும் உலகச் சமுதாய வாழ்க்கை நெறி என்னும் அடிப்படையில் பதினான்கு திட்டங்களையும், அனைவருக்கும் உணவும், நீர் ஆதாரங்களும் கிடைக்க வழி வகை செய்ய வேண்டும் என்பதையும், உடல் நலம், மன வளம், மனித வாழ்வுக்கு மிக முக்கியம் என்பது போல நட்பு நலமும் அவசியம் என்பதையும், கணவன், மனைவி இருவர்களிடையே ஏற்படுத்திக் கொள்கின்ற திருமண ஒப்பந்த நிகழ்வையும், தாய்சேய் நலம் பாராட்டும் தன்மையும் அறிவுப்பூர்வ மாகக் கண்டுணர்ந்து தனது தீர்க்க தரிசனத்தின் மூலம் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் உலகிற்கு வலியுறுத்திச் சொல்கிறார்.

துணை நூல்கள்

1. **சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத்தீர்வுகள்**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், முதல் பதிப்பு: 1998.
2. **ஞானக் களஞ்சியம்** 1, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு: 2000.
3. **காலந்தோறும் பெண்**, ராஜம் கிருஷ்ணன், நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா, முதல் பதிப்பு: 1994.
4. **வாழ்க்கைவள உயர்வுப்படிகள் ஐந்து**, அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஏழாம் பதிப்பு: பிப்ரவரி 2003.
5. **உலக சமுதாய வாழ்க்கை நெறி**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், முதற்பதிப்பு: 2003.
6. **வேதாத்திரியம்**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், இரண்டாம் பதிப்பு: ஜூலை 2001.
7. **அறிஞர்களின் கடமை**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், முதற்பதிப்பு: 2002.
8. **இலக்கியத்தில் பெண் அடிமையும், பெண் விடுதலையும்**, நீலபத்மநாபன், நண்பர்கள் வட்டம்.

அருள்தந்தை சுவாமி வேதாத்திரி மகரிஷியின் சமூக நோக்கு

இரா. ஜான்ஸி ராணி

'மனிதப் பிறவி' என்பது கிடைப்பதற்கரிய பேறு. மனிதனாகப் பிறந்தவன் அதன் மகத்துவத்தைப் போற்றி வாழத் தெரியாமல், பலவகைச் சிக்கல்களைத் தனக்கும், மற்றவர் களுக்கும் ஏற்படுத்தி உழன்றுகொண்டிருக்கின்றான். மனிதப் பண்புகளை மறந்து, இயற்கையோடியைந்த வாழ்வைப் புறக்கணித்துக் குறிக்கோளில்லாமல் அலைந்து கொண்டிருக் கிறான். 'முறையற்ற வாழ்க்கை நெறியற்றுப் போகும்' என்பதை உணராமல் தான்தோன்றித்தனமாய்த் திரியும் மனிதன் நெறிப்பட்டு வாழ - மனிதகுலம் மேம்பட - உலகம் இன்புற அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் உலகளாவிய நிலையில் ஆய்ந்து, அனைத்துலகும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் பொருத்தமான முடிவுகளைத் தந்துள்ளார்கள். அருள்தந்தை அவர்களின் சமூக நோக்கினை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

போட்டி, பந்தயங்களில் பொருள் விரயங்கள்

வறுமைக்கோட்டிற்குக் கீழ் எண்ணற்ற மக்கள் வாழ்ந்து கொண்டிருக்க, பல்வேறுபட்ட போட்டி விளையாட்டுப் பந்தயங்களில் பெரும் அளவில் மக்களின் பணமும், ஆற்றலும் வீணாக்கப்படுகின்றன. முந்தைய காலத்தில் ஒவ்வொரு ஆண் மகனும் நேருக்கு நேர் மோதிச் சண்டையிடும்போது அவனுக்கு உடல்வலிவுத் தகுதி தேவைப்பட்டது. இந்த நவீன காலத்தில் அதற்குத் தேவையே இல்லை. எவ்வளவு திறமையான உடற்பயிற்சிப் போட்டியாளராக இருந்தாலும் துப்பாக்கியின்

விரிவுரையாளர் (தமிழ்த்துறை), கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி, திருச்செந்தூர் – 628 215, தூத்துக்குடி மாவட்டம்.

முன், மிரட்டுதலில் இருக்கும் ஒருவரைக் காப்பாற்ற இயலாது. எனவே கல்வி நிலையங்களில் சிறார்களுக்கு மட்டுமே போட்டி விளையாட்டுகள் உடல்வளம் காக்கப்படுவதற்காக வைக்கப்பட வேண்டும். வயது வந்தவர்கள் உடல்நலம் பேண, உடற் பயிற்சிகளைச் செய்து வரலாம் என்று கூறுகிறார் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

தற்கால விளையாட்டுகளில் போட்டி, பொறாமை விளைவதோடு பணம் உள்நுழைந்து சூதாட்டக் களமாகவும் விளையாட்டு நிறுவனங்கள் மாறிவருவதைக் காண்கிறோம். பொருள் உற்பத்தி முறையில் விளையாட்டில் ஈடுபட்டால் சமுதாய வாழ்வு சிறப்பிழந்து போகும்.

வேறுபாடற்ற சமயம்

'மதம்' என்பது மனிதனை நெறிப்படுத்த வேண்டும். மனிதன் படைத்த மதத்தின் பெயரால் இன்று மதவெறி கொண்டு ஒருவரோடொருவர் மோதி அழிந்து போகிறார்கள். போலியான ஆன்மீகத் தலைவர்கள் சிலர் இறைவன், சுவர்க்கம், நரகம், மறுபிறப்புப் பற்றித் தவறான கருத்துகளைப் போதித்து மக்களைக் குழப்பியும், பயமுறுத்தியும் வருகிறார்கள். ஆன்மீகச் சான்றோர்கள் வாழும் மடங்கள், குற்றவாளிகளின் புகலிடமாக விளங்குகின்றன.

சமயத் திருவிழாக்கள் ஒற்றுமையுணர்விற்குப் பதிலாக வேறுபாடுகளையும், பொருள் விரயங்களையும், கால விரயங்களையும் ஏற்படுத்துகின்றன. இத்தகைய திருவிழாக்களில் பொருள்கள் உற்பத்தி விற்பனைதான் முதன்மையானதாகக் காணப்படுகிறதே தவிர, தெய்வ பக்தியோ, அறநெறி உணர்வோ ஏற்பட அதிக வாய்ப்பில்லை.

"பொருள் விரயம் எந்தச் சமுதாயத்தில் இருந்தாலும் அந்தச் சமுதாயம் வாழ்வில் முன்னேற முடியாது" என்ற அருள்தந்தையின் கூற்று இங்கு ஆராயத்தக்கதாகும்.

சிறந்த சமயத் தலைவர்களையும், விஞ்ஞானிகளையும், அறிவாளிகளையும் உள்ளடக்கிய அகில உலகளவிலான ஓர் உயர்ந்த குழுவை ஏற்படுத்தி, சகிப்புத்தன்மையின்மை எனும் சிக்கலை முழுமையாக நீக்கும் வகையில் சமயத்தின்

இன்றியமையாத தன்மைகளைக் கூட்டாக ஆராய்ந்து அனைத்துலக மக்களின் அறிவுக்குப் பொருத்தமானதும், பொதுவானதுமான அறநெறி சார்ந்த வாழ்க்கை முறையை வடிவமைக்க வேண்டும். இக்கூட்டுக்குழு, இயற்கையின் உண்மையை வலியுறுத்திக் கூறினால் எல்லாச் சமயத்திலுள்ள சிந்தனையாளர்களும் ஒருவருக்கொருவர் போராடுவதிலிருந்து விலகி, இதனால் "ஒருலகச் சமயம்" தோன்றலாம் என்று சமயச் சிக்கலுக்குத் தீர்வு காணுகிறார் அருள் தந்தையவர்கள்.

இதனையே திருமூலர் என்னும் தமிழுலகச் சித்தர்,

ஒன்றே குலம், ஒருவனே தேவன்

என்று கூறினார். அருள்தந்தையும், ஓரிறைக் கோட்பாட்டினைப் போற்றி,

எண்ணிறந்த மதங்கள் உண்டு மனிதருக்கு
எனினும் தெய்வம் என்பது ஒன்றேயாகும்

என்று கூறிச் சமயச்சண்டைகளுக்குச் சமாதானம் கோருகிறார்.

திரைப்படத்துறையில் ஒழுக்கக் குறைபாடு

'தனிமனித ஒழுக்கம்' என்பது மனிதன் கடைப்பிடிக்கக் கூடிய தலையாய கொள்கை ஆகும். சமுதாயத்தில் பெருகிவரும் ஒழுக்கச் சீர்கேட்டிற்குத் திரைப்படத்துறையும் காரணமாக அமைகிறது.

சமுதாயம் மேம்படுவதற்குரிய கொள்கைகளையும், கோட்பாடுகளையும் எடுத்துக்காட்ட வேண்டிய கடமையும், பொறுப்பும் உள்ள திரைப்படத்துறை, சிதறடிக்கப்பட்ட ஒழுக்கப் பண்புகளைக் காட்டுகிறது. நம் பண்பாடு, கலாச்சாரம் அனைத்தையும் கேலிக் கூத்தாக்குகின்ற வகையில், பார்ப்பவர்களைக் கவர வேண்டும், அதிக இலாபம் சம்பாதிக்க வேண்டும் என்பவற்றையே குறிக்கோளாகக் கொண்டு, இளைஞர்களின் கவனத்தைத் திசை திருப்பும் நிலையில் செயல்படுகின்றனர். "மக்களின் ரசனை மாறிவிட்டது; இவற்றைத் தான் மக்கள் விரும்புகிறார்கள்" என்று கூறித் திரைப்படத் துறையினர் சமுதாயத்தின் மீது எளிதாகப் பழி சுமத்திவிட்டு நழுவி விடுகின்றனர்.

'இலாபம்' சம்பாதிப்பதை மட்டும் குறிக்கோளாகக் கொள்ளாமல், சமுதாய நலனில் அக்கறை கொண்டு, சமுதாய முன்னேற்றத்திற்கு வழி செய்வதாக எடுக்கப்படும் தரமுடைய திரைப்படைப்புகள் வரவேற்கத்தக்கதாகும். வேதாத்திரி மகரிஷி அவர்கள், "பொழுதுபோக்கிற்காகப் பயன்படுத்தும் அதே நேரத்தில் பல வகைகளில் கல்வி கற்பிக்கும் போதனைச் சாதனமாகவும் அற்புதமான முறையில் பயன்படுத்தலாம்" என்று கூறுகிறார்.

சமூகச் சீர்கேடுகள்

புகை, மது, மதி மயக்கும் மருந்துகள் போன்றவை மனிதன் உயிர் வாழ்வதற்கு மிக அத்தியாவசியமான பொருள்களல்ல. இவற்றினால் கிடைக்கும் வரிப்பணத்தைப் பெரிதாகக் கொண்டு, இத்தகைய பொருள்களைப் பயன்படுத்துதல் உடல்நலத்திற்குத் தீங்கானது என்ற வாசகங்களோடு இவற்றை விற்பதற்கு இன்றைய அரசுகள் அங்கீகாரம் அளித்துள்ளன.

புகைபிடிப்பதும், மது அருந்துவதும், போதைப் பொருள்களைப் பயன்படுத்துவதும் மனித சமுதாயத்திற்கே சாபக்கேடு' ஆகும். இத்தீய பழக்கங்களை மேற்கொள்வதால் மனிதனின் உடல், உள நலங்கள் பாதிக்கப்பட்டு, அறிவு, சிந்தனை மழுங்குகின்றன. செயல்கள் தடம்புரளுகின்றன.

ஒவ்வொரு மனிதனின் அறிவும், ஆற்றலும் சமுதாய மேம்பாட்டிற்குத் தேவைப்படுகின்ற நேரத்தில் இவற்றை அழிக்கின்ற இப்பழக்கங்களை முழுமையாகச் சமுதாயத்திலிருந்து நீக்கிவிட்டால் மனிதனின் ஆரோக்கியம் சிறக்கும்; அறிவு மேம்படும்; செயல்கள் சீரடையும் இவற்றைத் தொழிலாகக் கொண்டு பணம் சம்பாதிப்பவர்கள் உள்ளம் மாறி, இத்தொழிலை அடியோடு ஒதுக்கிவிட்டால் சமுதாயம் வளம்பெறும்.

பாலியல் சமத்துவம்

பெண்ணாகப் பிறந்த ஒவ்வொருவரும் 'தெய்வாம்சம் பெற்ற திருவுருவங்கள்' என்ற நம்பிக்கையும், மதிப்பும், மரியாதையும் நமது தேசத்தில் பழங்காலந்தொட்டே நிலவி வருகின்றன.

தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை

என்பது முதுமொழி. சமுதாயத்தில் ஆணையும் பெண்ணையும் இரு கண்களாகக் கருத வேண்டும். ஆணின்றிப் பெண்ணோ, பெண்ணின்றி ஆணோ இல்லை. இதனைச் சரியாகப் புரிந்து கொண்டால் இரு பாலர்களையுமே சமமாகக் கருதத் தோன்றும்.

ஆணைவிடச் சிறந்தவள் பெண்ணே

ஆணுக்கு இல்லாத சிறப்பான 'தாய்மைப் பேறு' என்னும் அரிய பேற்றினை இயற்கை பெண்ணுக்கு மட்டும் அளித்துள்ளது.

> **எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன் திருஉள்ளமென்ன**
> **எவ்வுயிரும் தோன்றுவதற்கு ஏற்றதொரு திருவழியாய்**
> **வல்லமையாய் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே**

என்று வியந்து போற்றுகிறார் வேதாத்திரி மக்ரிஷி.

"ஆண்கள் செய்யக் கூடியதைக் காட்டிலும், பெண்கள் அதிகமாக நல்ல காரியங்களையே செய்ய விரும்புகிறார்கள். ஏனெனில் வாங்கும் சக்தி அதிகம் இருக்கிறது" என்று பெண்களின் செயல்திறனைப் பாராட்டுகிறார் எஸ். நடராஜன் (ஆன்றோரின் அமுதமொழிகள்).

பெண்சிசுக்கொலை

> மங்கையராய்ப் பிறப்பதற்கே
> நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா

என்று பெண்பிறப்பைப் பெருமைப்படுத்திப் பேசினார் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

இன்றைய காலக்கட்டத்தில், திருமணத்தால் ஏற்படும் செலவுப் பளுவினால், பல பெற்றோர்கள் பாதிக்கப்பட்டுப் பெண் குழந்தையைப் பெற்றெடுப்பதையே பாவமான - வாழ்நாள் முழுவதும் கடன் தொல்லையைக் கொடுக்கக்கூடிய நிகழ்ச்சியாக எண்ணி அச்சம் கொள்கிறார்கள்.

சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமை, அவமதிப்பு இவற்றின் பின்விளைவுகளாலும், பெண்ணினத்தின் மீது சமுதாயம் கொண்டுள்ள எதிரிடை எண்ணத்தினாலும், வசதியான குடும்பத்திலும் கூட நிழல் ஒலி காணல் (Scan) பரிசோதனை மூலம் பால்வகையை அறிந்து பெண்ணாக

இருப்பின் அழித்து விடுகின்றனர். பெண் சிசுக்களுக்குக் கருவறையே கல்லறை ஆகின்ற நிலை, சமுதாயமே வெட்கித் தலைகுனியக் கூடியதாகும்.

பெண்ணடிமை

சிறப்பு வாய்ந்த தனி வகையாகக் கருதி உயர்வளிக்க வேண்டிய பெண்ணினம், பாவப்பிறவியாகக் கருதப்பட்டு எல்லாத் துறைகளிலும் இரண்டாந்தரக் குடி உரிமையாளராக நடத்தப்பட்டு வருகின்றது. சமயச்சடங்கு என்ற போர்வையில் ஓர் ஆண்மகனுக்குப் பெண்ணைத் திருமணம் செய்து கொடுத்துவிட்டுச் சிறிதளவுகூட இரக்க உணர்வின்றிக் கணவனாக வந்துள்ள ஆண்மகனுக்குக் கைகளில் நீரை வார்த்துத் தத்தம் செய்து கொடுத்துவிடுகிறார்கள். அதன் விளைவாக ஒரு கணவன், திருமணம் என்ற பெயரில் தனக்கு அவளை உரிமம் வழங்கிவிட்டதாக நினைத்து, அவனது தற்போக்கு மனம் போகிறபடி நடத்தலாம் என எண்ணிவிடுகிறான். இதனைத் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

கணவனென் றொருவனுக்குக் கையினில் நீரைவார்த்து
பணமந்த ஈந்தோ பெற்றோ பலர் காணத் தத்தம் செய்வார்
குணமெனும் நிலை கண்டோரும் இதைக் கொடுமை
யென்றெண்ணவில்லை

என்று கூறி மனம் வெதும்புகிறார்.

மீண்டும் 'சதி'

பெண்ணினத்திற்கு இழைக்கப்பட்டு வந்த கொடூரச் செயலான 'சதி' என்னும் வழக்கம் கூடாது எனச் சட்டம் வந்த பின்பும் அவ்வழக்கத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்று சில சமயத்தலைவர்களின் மனிதாபிமானமற்ற தூண்டுதல் பாராளுமன்றத்தில் வாக்கெடுப்புக்குச் செல்லும் நிலைக்கு வந்துவிட்டதை வேதாத்திரி மகரிஷி குறிப்பிடுகிறார். இது குறித்து இவரிடம் ஆதரவு கேட்க வந்தபோது "சதிக்குச் சம்மதிக்கிறேன்... ஒரு சிறிய திருத்தமுடன், பெண்கள் சதியை மேற்கொள்வதுபோல் ஆண்களும், மனைவிகளின் சிதையில் விழ வேண்டும்" என்று கூற, வந்தவர்கள் சுவாமிஜியின் சமநீதித் தத்துவத்தைக் கண்டு வியந்து, மனம் மாறிச் சென்றார்கள்.

இந்நிகழ்ச்சி மீண்டும் ஆண்வர்க்கத்தின் திமிர், ஆதிக்கம், பெண்களைத் துன்புறுத்தும் எண்ணம் ஆகியவை இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

வேண்டும் மனைவியர் தினம்

உறவுமுறைகளைப் பாராட்டும் வகையிலும், கொண்டாடும் வகையிலும் தந்தையர் தினம், குழந்தைகள் தினம், அன்னையர் தினம், முதியோர் தினம் போன்ற விழாக்கள் உலகம் முழுவதும் நடைபெற்றுவர, ஒரு நாட்டில் கூட மனைவியைப் பாராட்டும் வகையில், 'மனைவி நல வேட்பு நாள்' கொண்டாடு வதில்லை. இது பெண்ணினப் புறக்கணிப்பைக் காட்டுகிறது. மனைவியர்க்குப் பெருமையளிக்கும் வகையில் ஆகஸ்டு மாதம் 30 ஆம் தேதியை மனைவியர் நல வேட்பு நாளாகக் குறித்து மனவளக்கலை மன்றங்கள் மூலம் நடத்தி வருகிறார் வேதாத்திரி மகரிஷி.

அருள்தந்தை காட்டும் திருமணமுறை

இருமனங்கள் இணைகின்ற திருமணப் பந்தத்தில் இரு வீட்டாரும் செலவுகளைப் பகிர்ந்து கொள்வதே நேர்மையான செயலாகும். பெண்ணுக்கு 'வரதட்சணை' என்ற பெயரில் பொன்னும், பொருளும் வாரி இறைத்தது போதாதென்று திருமணம் தொடர்பான எல்லாவிதமான ஆடம்பரச் செலவுகளையும் பெரும்பாலும் பெண்ணின் பெற்றோரே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஓர் அவல நிலை இருந்து வருகிறது. இந்தியாவைப் பொறுத்தமட்டில் 80% பெற்றோர்கள், தங்களின் மகளின் திருமணத்தை முன்னிட்டுச் சொத்துக்களை இழந்து கடனுக்குள் தள்ளப்படுகிறார்கள்.

சமூகச் சீர்திருத்த சிற்பியான வேதாத்திரி மகரிஷி அவர்கள், உலகம் அனைத்திலும் உள்ள எல்லாத்தரப்பட்ட மக்களுக்கும் பொருந்துமாறு ஒரு சீர்திருத்த நெறி சார்ந்த திருமணமுறையை - தேவையற்ற செலவுகள் அறவே இல்லாத திருமண முறையைத் தருகிறார்.

இங்கே பகல் கொள்ளையாகிய வரதட்சணை கிடையாது. இதைப் போன்ற சீர்திருத்த முறைத் திருமணங்கள் அங்கொன்றும் - இங்கொன்றுமாக நடந்து கொண்டிருக்கின்றன

என்றாலும் பரவலான முறையில் இத்திருமணங்கள் எல்லா இடங்களிலும் நடைபெற்றால் வீணான செலவுகள் குறையும். பெண்ணின் பெற்றோரும் மன அமைதி பெறுவர்.

பெண்ணடிமைக்குத் தீர்வு

கடவுளுக்கு அடுத்த நிலையில் அமையும் பெண்மையை - பெண்ணினத்தின் பெருமையை மனித இனம் உணர்ந்தும் - மதித்தும் வாழ வேண்டியது மிகவும் அவசியமாகும். மனிதர் அனைவரின் உடலில் ஓடும் இரத்தத்திற்குப் பெண் மக்களுடைய இரத்தம் தானே மூலதனம். அன்பு, பரிவு, பிறருக்காகத் தன்னையே தியாகம் செய்தல் போன்ற மனம் சார்ந்த போற்றுவதற்குரிய மதிப்புமிக்க பண்புகள் ஆண்களைவிடப் பெண்களிடமே அதிகமாக உள்ளன. எனவே பெண்களுக்கு, பொருளாதார வலுவை நிலைநாட்டும் விதத்தில் அரசு, உறுதிவாய்ந்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். கல்வி, வேலைவாய்ப்பு, மரபு வழி உரிமைகள், அரசியல் போன்றவற்றில் சமவாய்ப்புக் கொடுத்து ஊக்கமளிக்க வேண்டும்.

வாழ்க்கையை அதன் போராட்டங்களுடன் சந்திக்கும் துணிவை நாம் பெண்களுக்கு அளிப்போம். அப்போதுதான் அவர்களது கனவுகளும், இலட்சியங்களும் கைகூடும். இது பெண்கள் கண்ணீர் விட வேண்டிய காலமில்லை. காரியத்திலேயே கண்ணாக இருந்து சாதனைகள் புரிய வேண்டிய சகாப்தம்.

பொருளாதார ஏற்றத்தாழ்வுக்கான காரணங்கள்

மனிதன் முதலில் இயற்கையின் வல்லமையைத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். இயற்கைத் தத்துவத்தையும், அதற்கேற்ற முறையில் வாழும் விஞ்ஞானத்தையும் அறிந்து கொள்ளாதவரை வாழ்க்கையின் ஒவ்வொரு செயலும் சிதறிய தாகவும், குழப்பமடைந்ததாகவும் தோன்றும். மனித அறியாமையின் இந்த இரண்டும்கெட்ட நிலையே பொருளாதார ஏற்றத்தாழ்வாக உருவெடுத்துள்ளது. பின்னால் நிகழக்கூடிய விளைவைப் பற்றித் தகுந்த விழிப்பு நிலையோ, உண்மையான அக்கறையோ காட்டாது வரையறைகளுக்குட்பட்ட கொள்கைகளைப் பற்றிக் கொண்டு செயல்படுவதுதான் பொருளாதார ஏற்றத்தாழ்வுச் சிக்கலுக்கான காரணமாகும். காலம், இடம், பிறப்பு, நோய்,

விஞ்ஞான வளர்ச்சி, தொழில், கல்வி, அரசியல் ஆகியவற்றிற்குத் தகுந்தவாறு பொருளாதார நிலை அளவுகள் வேறுபடுகின்றன. துவக்கத்தில் ஒவ்வொரு பொருளாதாரக் கொள்கையும் திருப்தி அளிப்பதுபோல் தோன்றினாலும் மிகக் குறுகிய காலத்திற் குள்ளாகவே குறைகளும், சிக்கல்களும் அறிய முடியாத விதத்தில் உருவெடுக்கின்றன. மனித குலத்தில் ஏழ்மை என்பது இருந்தால் நிர்வாகத் துறையில் ஒழுக்கப் பழக்கங்களில் உள்ள குறைபாடுகளே காரணமாகும்.

பொருளாதாரத் தீர்வு

துன்பத்தையே அளிக்கும் வண்ணங்களையும், செயல் களையும் தவிர்த்து, எல்லோரும் நல்லதையே செய்து, உலகில் வெற்றியும், அமைதியும், இன்பமும் நிலவ உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

என்னும் புறநானூற்றுப் புலவரான கணியன் பூங்குன்றனாரின் கூற்றுப்படி, 'மனித இனம் ஒன்றுதான்' என்று இணைந்து நோக்கும் அன்பும், பிறருக்கு உதவி செய்யும் கருணையும் கூடிய அருளாதாரமே பொருளாதாரம் என்னும் கோட்டைக்குக் கடைக்கால் ஆகும்.

சாதி, சமய, இன, மொழி என்ற வேறுபாட்டை மறந்து, பிறர் வாழ நாம் வாழ வேண்டும் என்று எண்ணி வாழ்ந்தால் பொருளாதாரத்தில் நிறைவினைப் பெறலாம்.

குலமுதலாய் பேதங்கள் கொள்ளும் நிலைமாற்றி
பலரும் கூடி உழைத்துப் பங்கிட்டு வாழ்ந்திடுவோம்

என்ற பொதுவுடைமை பற்றிப் பேசுகிறார் வேதாத்திரி மகரிஷி.

ஐந்தாண்டுத் திட்டங்கள், பத்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கிச் செயல்படுத்தியும் அகற்ற இயலாத பொருளாதாரச் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வாக, "பொருளாதாரக் கொள்கைகளை அணுகும் முறையின் அடிப்படைப் பண்பை மட்டும் மாற்றியாக வேண்டும். வயது, கல்வி, தொழில் திறம், உடல்நாலம், பிறர் உதவி ஆகிய வேறுபாடுகளை உணர்ந்து, தனது உடல், மன ஆற்றல்களைச் சமுதாய மக்களோடு சகோதர உணர்வோடு வாழத்தக்க அறிவுப் பண்புதான் தேவை. பணம் மட்டுந்தான்

பொருளாதாரத்தின் முக்கிய ஆக்கக்கூறு என்பதே ஒரு போலி நம்பிக்கை ஆகும். உண்மையில் உழைப்பின் ஊதியமே பணம் ஆகும்" என்று கூறுகிறார் வேதாத்திரி மகரிஷி.

ஒவ்வொருவரும் சகிப்புத்தன்மை, விட்டுக் கொடுத்தல், தியாகம் ஆகிய பண்புகளைப் பெற்று வாழும் வாழ்வு, பொருளாதாரச் சமத்துவத்தை ஏற்படுத்தும். ஒவ்வொரு மனிதனும் சமுதாயத்தின் சொத்தாக இருக்கின்றான். எனவே ஒவ்வொரு மனிதனையும் தகுந்த பாதுகாப்போடு பேணிக் காக்க வேண்டும்.

கல்வி முறையிலேயே வாழ்க்கைக்குத் தேவையான பொருள் உற்பத்தி முறையை (தொழிற்கல்வி)க் கற்கச் சமுதாயத்தில் வசதிகள் அமைத்துத் தர வேண்டும். உழைக்கத் தெரியாத முதலாளிகளுக்குப் பெருமளவில் பணம் சேரும் முறையைத் தவிர்க்க அரசு செயல் திறமையோடு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

தவிர்க்க வேண்டியது போர்

'நாகரிகக் காலம்' என்று சொல்லக்கூடிய இக்காலத்தில் சமுதாயத்தில் பகை, போர், பிணக்கு, பறித்துண்ணல், வஞ்சம் போன்ற கொடுமைகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

மனிதனை மனிதன் பகைத்துக் கொண்டு, துன்புறுத்திக்
கொன்றுவிடுவது என்ற கொலை பாதகச் செயலே போர்

என்பது வேதாத்திரி மகரிஷியின் கருத்தாகும் இதனை,

குற்றமற்ற உழைப்பாளப் பெருமக்கள் தம்மைக்
கொன்றுகுவித்திடும் கொடிய கொலைக்களம்போர்
அன்றோ?

என்று கூறுகிறார்.

போர் சட்டவிரோதம்; சமூக விரோதம்; இயற்கைக்கு விரோதம்; நீதிக்குப் புறம்பானது. என்வே அது எந்த இடத்திலும் மக்களிடம் எழக்கூடாது என்னும் வலுவான ஓர் ஆட்சிச்சட்டம் வேண்டும். உலக மக்கள் கூடிய வல்லமையுள்ள ஓர் ஆட்சியினால்தான் இதைச் செய்து முடிக்க முடியும்.

உலகப்பாதுகாப்புத் திட்டம்

உலக நாடுகளிடையே ஆயுதக் கலாச்சாரம் பெருகி வரும் நிலையில் போரை நிறுத்துவது என்பது எளிதான செயலன்று. ஐக்கிய நாட்டு சபை போன்ற ஒரு கூட்டான மத்திய சபையினால் உலகிலுள்ள அனைத்து நாடுகளுக்கும் ஒரு பொதுப் பாதுகாப்புச் சட்டம் அமையும்வரை போரைத் தடுக்க இயலாது.

ஐ.நா. சபையை வல்லமையுடைய உலகக் கூட்டரசின் மைய அமைப்புக்குரிய மக்கள் மாமன்றமாக மாற்றம் செய்ய வேண்டும். பயங்கரமான ஆயுதங்களைத் தயாரித்து விற்பனை யெய்யும் ஒரு சில நாடுகளுக்கு அளிக்கப்பட்டுள்ள நிராகரிப்பு அதிகாரம் (Veto Power) முதலில் நீக்கப்பட வேண்டும். உலகிலுள்ள அனைத்து நாடுகளையும் கட்டுப்படுத்தவும், மேற்பார்வையிடுவதற்கும், எல்லை மீறி நடந்து அமைதியைக் குலைக்கும் நாடுகளுக்கும் தகுந்த தண்டனையை வழங்குவதற்கும் உரிய முழு அதிகாரமும் ஐ.நா சபைக்கு அளிக்கப்பட வேண்டும்.

எல்லைப் பாதுகாப்பு என்பது எந்த நாட்டிற்கும் தனியே இல்லை என்றும், எல்லா நாட்டு எல்லைகளையும் பாதுகாக்கும் பொறுப்பை ஐ.நா.சபை ஏற்றுக் கொண்டால் அதன்பின் போர் எழுமா? என வினவுகிறார் வேதாத்திரி மகரிஷி.

அரசியல் தீர்வு

அரசு என்பது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் கூட்டை உள்ளடக்கியதாகும். தங்களைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்த மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது அரசியலாளர்களின் கடமையாகும். 'மக்களுக்காகவே அரசு' என்பதை வேதமாகக் கொண்டு 'அரசியல் பதவி' என்பது மக்களுக்குச் சேவை செய்வதற்காகத் தனக்குக் கிடைத்திருக்கும் ஓர் அரிய வாய்ப்பாக எண்ணி நாட்டினை அமைதிப் பூங்காவாக மாற்ற வேண்டும்.

மக்கள் எதிர்பார்க்கும் நியாயம், நேர்மை, அரசியல் வாதிகளின் நடைமுறைச் செயல்களுக்கும் இடையே ஏமாற்றம் அளிக்கும் அளவில் பெரிய இடைவெளி இருக்கிறது.

ஒவ்வொரு நாட்டிலும் அரசியலமைப்பு உரிமைகள் செயல்படுவதைத் தீர்மானிப்பதில் 2 அரசியல் கட்சிகள் மட்டுமே போதுமானதாகும். அரசியல்வாதிகளுக்குக் கல்வி போதிக்கும் வகையில் பல்கலைக்கழகங்களில் தனியாக ஒரு துறை இருக்க வேண்டும். ஆன்மிகம், உடலியல், உளவியல், சமூகவியல், பொருளாதாரம், ஒழுக்கப்பண்பாடு, செயல்விளைவுத் தத்துவம் இவையனைத்தும் இக்கல்விமுறையில் அமைய வேண்டும். ஒரு சில ஆண்டுகளில் இக்கல்வி பெற்றவர்கள் மட்டுமே தேர்தலில் நிற்க வேண்டும் என்ற சட்டம் வரவேண்டும் அரசியல்வாதிகள் வேறு தொழிலில் ஈடுபட வாய்ப்புகள் இருக்கக்கூடாது.

மைய அரசின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டசபை மட்டும்போதும். அரசியலமைப்பு உரிமைகளை நிலைநாட்டவும், சட்டம், ஒழுங்கைப் பராமரிக்கவும் ஆட்சிப்பணி அதிகாரங்கள் அடங்கிய ஒரு நிர்வாகக் குழு போதுமானதாகும். நேரிடை அதிகாரம், நிதி கையாளுதல் ஆகியவற்றிற்கு முழுப்பொறுப்பு எந்த அமைச்சரிடமும் இருக்கக்கூடாது.

சட்டத்திருத்தம்

சட்டம் செய்பவர்களுக்கும், நிர்வாகம் செய்பவர்களுக்கும் ஒழுக்கப் பண்பாடு தேவை. கொலைக்குத் தண்டனை கொலை என்பது நீண்ட காலமாகச் சமுதாயத்தில் தொடர்ந்து வரும் நீதியாகும். சிந்தனையாளர்கள், சமுதாயம் நலம் காக்க வேண்டிய முறையில் சட்டங்களை, தேவையான இடத்தில் திருத்தம் செய்வது அவசியமானதாகும்.

நதிநீர் இணைப்புத் திட்டம்

மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்படுவதால், தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படும்போது ஒரு மாகாணத்திலிருந்து மற்றொரு மாகாணத்திற்கு நீரை நிரவி வருவதால் சிக்கல்கள் பல தோன்றுகின்றன.

மாகாண எல்லைக் கட்டுப்பாடுகளைத் தாண்டி, அனைவருக்கும் நீர் கிடைக்க அந்தந்த நாட்டு ஆறுகளை இணைக்க வேண்டும். இதற்குப் பணச்செலவு அதிகமானாலும், அவையனைத்தும் நதிநீர் இணைப்புத் திட்டத்தில்

ஈடுபடுத்தப்படும் உழைப்பாளிகளுக்கே போய்ச் சேர்வதால் அந்த நாட்டுக்கும், மனித சமுதாயத்திற்கும் வீண் விரயம் இல்லை.

தற்காலச் சமூகம்

இன்று பல்வேறு தீவிரவாத அமைப்புகளால் உலகமே அச்சத்தோடு இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒருவர் நண்பரா அல்லது பகைவரா என இனங்காண முடிவதில்லை. இம்மாதிரியான இக்கட்டான சூழ்நிலையில் நமது வாழும் முறையில் முற்றிலுமான சீர்திருத்தத்தை நாம் கண்டாக வேண்டும். சகிப்புத்தன்மையையும், நற்பண்புகளையும் கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதற்கு, இயற்கையை முறையாக மதித்து, தம்முடன் வாழும் மக்களிடம் அன்பும், பரிவும் காட்டி ஆழமாகச் சிந்திக்க வேண்டும். சீர்திருத்த சமுதாயம் மலர ஆண்டுகள் ஆகலாம். ஆனால் நாம் நமது கடமையை மெய்ஞ்ஞான ஒளியோடு காலம் தாழ்த்தாமல் ஆரம்பிக்க வேண்டும். எதிர்காலத்தில் இந்த ஒளி தொடர்ந்து சுடர்விட்டுக் கொண்டிருக்கும் என்று கூறுகிறார் வேதாத்திரி மகரிஷி.

நிறைவுரை

சமுதாய மேம்பாட்டில் அக்கறை கொண்ட எழுத்தாளன் கண்முன்னே காணும் சமூக அவலங்களைச் சுட்டிக் காட்டிவிட்டுச் சென்றால் அவன் சிறந்த எழுத்தாளன் அல்லன். சமூக அவலங்களைத் தீர்ப்பதற்கு - முழுமையாக அகற்றுவதற்கு நடைமுறைக்கு ஒத்துப்போகும் தீர்வுகளை ஆராய்ந்து வழங்க வேண்டும். அந்தமுறையில் சமூகச் சீர்திருத்தவாதியான வேதாத்திரி மகரிஷி அவர்கள், சமுதாயத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் ஆராய்ந்து நேரிய முறையில், உலகளாவிய வகையில் சிறந்த தீர்வுகளை அளித்துள்ளார்கள்.

''தேவையில்லாத பழக்கங்களையும், சமயச் சடங்கு களையும் கட்டிக் கொண்டு, பழைய கொள்கையில் வாழ்ந்து கொண்டிருப்பதற்குப் பதிலாகப் பொறுப்புள்ள மக்கள் புதியன படைக்கும் ஆற்றலுடன் கூடி வெற்றிப் பாதையில் வாழும் வாழ்க்கை முறைகளுக்கு மாறுவதற்குத் தூண்ட வேண்டும்.'',

''நான் எடுத்துக் கூறியவற்றில் ஒத்துக்கொள்ள முடியாத கருத்துக்களைப் புறக்கணித்துவிட வேண்டும்.... அவற்றில் புதுமை

படைக்கும் ஆற்றலுடையவை என்றும் மதிப்புள்ளவை என்றும் தோன்றும் கருத்துக்களை எவரும் பயன்படுத்திக் கொள்ளலாம்" என்னும் மகரிஷியின் கூற்று சமுதாயத்தின் மீது அவருக்குள்ள அக்கறையையும் அவரது தன்னடக்கப் பண்பையும் காட்டுகிறது.

அடிகளார் காட்டும் செவ்விய நெறியில் மனித சமுதாயம் மாண்போடு நடந்து சென்றால் மனித வாழ்க்கை இன்புறும்; மனித நேயம் தழைக்கும்; மனித சமுதாயத்தின் சாதனை விண்ணைத் தொடும்.

துணை நூல்கள்

1. **உலக சமுதாய வாழ்க்கை நெறி**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், முதற்பதிப்பு: 2003.

2. **சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத்தீர்வுகள்**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், முதல் பதிப்பு: 1998.

பசிப்பிணியற்ற சமுதாயம் காண அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி காட்டும் வழிகள்

MURASU. NEDUMARAN

உலகம் உய்ய அவ்வப்போது சான்றோர்கள் தோன்றி வழிகாட்டி வந்துள்ளனர். திருவள்ளுவர் முதலாய எத்தனையோ சான்றோரைத் தமிழ் உலகம் கண்டுள்ளது. அவ்வரிசையில் வந்த சான்றோர்களுள் ஒருவர் அருள்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

உலக உயர்வுக்கு வழிகாட்ட வந்தோரில் அறிவியல் கற்ற விஞ்ஞானிகள் உளர்; மெய்யியல் கற்ற மெய்ஞ்ஞானிகள் உளர்; சமயச் சான்றோர் உளர்; அரசியல் அறிஞர் உளர்; இலக்கியச் செல்வர் உளர். அவரவரும் அவரவர் வழியில் கருத்துச் செல்வங்களை வழங்கிவிட்டுச் சென்றுள்ளனர். இவ்வரிசையில் அருள்தந்தை அவர்கள் மாறுபட்டுத் திகழ்கிறார்கள்.

உலகில் விஞ்ஞானிகள் சொல்வதை மெய்ஞ்ஞானிகள் ஏற்பதில்லை; மெய்ஞ்ஞானிகளின் கருத்து விஞ்ஞானிகளுக்கு வேடிக்கையாகத் தோன்றும். இலக்கியம்வல்லார் வழிமுறைகள் அரசியல்வல்லார்க்கு ஏற்புடையனவாய் இரா. அருள்தந்தை அவர்கள் அறிவியல் கற்ற விஞ்ஞானியாகவும், அறவியல், சமய, ஆன்மிகவியல் கற்ற மெய்ஞ்ஞானியாகவும், அரசியல் பேரறிவும், இலக்கியப் புலமையும், படைப்பாற்றல் திறனும், ஒருங்கே கூடியவராகவும் விளங்குகிறார். மேலும் பலதெய்வ வழிபாட்டை, சமயத் திருவிழாக்களை ஒப்பாதவர் எனினும், இறைமறுப்பாள ராய் இல்லை. உலகை நடத்தும் ஓர் ஆற்றலை நம்புபவராகவும் உள்ளார் அச்சான்றோர். அதனால், அனைத்தையும் ஆராய்ந்து தெளிந்து உலகிற்குப் புதுவழி காட்டமுடிகிறது.

5-BA, Solok Pulai, Off Jalan Teluk Pulai. 41100 KLANG,
SEL.D.E., Malaysia.

அச்சான்றோர் 40 நூல்கள் வரை படைத்துள்ளார். 'உலகச் சமுதாய வாழ்க்கை நெறி' (2003) என்ற நூலில் அன்னார் காண விழையும் சமுதாயம் பற்றிய கருத்துகளைத் தொகுத்து ஒரு களஞ்சியமாகத் தந்துள்ளார்.

1. உலகச் சமுதாய வாழ்க்கை நெறி
2. போரில்லா நல்லுலகம்
3. பொருள் துறையில் சமநீதி
4. நேர்மையான நீதிமுறை
5. சீர்செய்த பண்பாடு
6. சிந்தனையோர் வழிவாழ்வு
7. தெய்வநீதி வழி வாழ்தல்
8. சிறப்புயர்ந்த பெண் மதிப்பு
9. தேர்த்திருவிழா தவிர்த்தல்
10. சிறுவர்கட்கே விளையாட்டு
11. செயல்விளைவு உணர்கல்வி
12. சீர்காந்த நிலை விளக்கம்
13. பார் முழுதும் உணவுநீர் பொதுவாக்கல்
14. பல மதங்கள், பல கடவுள் பழக்கம் ஒழித்து உண்மை ஒன்றைத் தேர்ந்திடுதல் (ப. 15)

என்பவையே அக்கருத்துக் கருவூலங்கள்.

இக்கருத்துக் கருவூலங்களின் அடிநாதமாய்த் திகழ்வது, மக்கள் அனைவரும் ஏற்றத்தாழ்வின்றிப் பசிப்பிணியற்றும், பகையுணர்வற்றும் நிறைவான வாழ்க்கை வாழவேண்டும் என்பதே. அப்பேர்ப்பட்ட வாழ்வுக்கு வழிகாட்டும் அருள்தந்தையின் ஒரு சில கருத்துகள் பற்றி எண்ணமிடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

மாந்த வாழ்விற்கு அடிப்படையான தேவைகள் உணவு, உடை, உறையுள். இவை பரவலாக எல்லாருக்கும் கிட்டாத நிலை ஏற்படும்போதே சமுதாயத்தில் சிக்கல்கள் தோன்றுகின்றன. இது குறித்து அருள்தந்தை அவர்கள்,

மனித வாழ்வுக்கு உணவு, உடை, வீடு இவை மூன்றும்தான் முதன்மையான தேவைப்பொருட்கள். இவையாவும் மனித உழைப்பினாலேயே, இயற்கை யமைப்பைக் கொண்டும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவை தேவைக்கு ஏற்ற அளவு கிடைக்கவில்லை யானால், அதைத்தான் வறுமை என்றும், ஏழ்மை நிலை என்றும் கூறப்படுகிறது. (ப.27)

உலகில் வறுமை ஏன் ஏற்படுகிறது? அது தவிர்க்க முடியாததா? எல்லாரும் எல்லாம் பெறும்வண்ணம் இயற்கையமைப்பு இல்லையா? இதுகுறித்து அருள்தந்தை என்ன எடுத்துரைக்கிறார்?

இயற்கையை நோக்கி நாம் ஆராய்ந்து பார்த்தால், எந்த ஜீவனாலும், அது பிறக்கும் முன்னமேயே அதன் வாழ்வுக்குத் தேவையான அனைத்தும் இருப்பு வைத்து, எடுத்துக்காட்டி வாழ வைப்பதுதான் இயற்கையின் கருணை. எனவே, மனித குலத்தில் ஏழ்மை என்பது இருக்கவே கூடாது. அப்படி இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் மனித சமுதாயத்தில் நிர்வாகத்துறையில் ஒழுக்கப் பழக்கங்களில் உள்ள குறைபாடுகளே ஆகும் (ப. 27)

என்பது அச்சான்றோர் வாய்மையாகும்.

உலகில் பஞ்சம் பட்டினி என்பன இயற்கையல்ல; மனம் பண்படாத மாந்தச் செயல்களே அவற்றிற்குக் காரணங்கள். எனவே தான் சான்றோர்கள் இயற்கையைத் திட்டாமல் மாந்தரையே திட்டித் தீர்க்கிறார்கள்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகுஇயற்றி யான்! (குறள்: 1062)

என்று திருவள்ளுவர் குமுறுகிறார்.

தனியொரு மனிதனுக்கு உணவில்லையெனில்
சகத்தினை அழித்திடுவோம்

என்று பாரதியார் கொதிக்கிறார்.

ஓரறிவு உயிரான புல்லுக்கும் நீர் கிட்டாத வறுமை ஏற்படக் கூடாது என்னும் பொருளில்,

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்

என்று இரங்குகிறார் வள்ளல் பெருமான். பசித்தோர்க்கு உணவளிக்க அப்பெருமானார் மூட்டிய அடுப்பு இன்றும் எரிந்து கொண்டிருப்பது ஈண்டு எண்ணத்தக்கது.

உலகில் வறுமை ஏன் ஏற்படுகிறது? அதற்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. அருள்தந்தை அவர்கள் 'போரே' அதற்கு முதற்காரணமென்கிறார்.

'போர்' என்பதனை இருகூறாகப் பிரிக்கலாம். ஒன்று ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்குமிடையே நடக்கும் போர். மற்றது தனிமாந்தர், குழுவினரிடையே நடக்கும் போர். எத்தனையோ நூற்றாண்டுகளாக அறிவு விரிந்து பண்பட்டும் இன்னும் மாந்தத் தன்மைக்குரியவனாய்ப் பண்படாததே அதற்குக் காரணம். இது குறித்து அருள்தந்தை கூறும்போது,

> *அந்தக் காலத்திலிருந்து இன்றுள்ள அறிவு விளக்கக் காலம் வரையில் மனிதனைக் கூர்ந்து ஆராய்ந்தால், ஆதிகால மனித வாழ்வு என்ற ஒரு பண்பாடு விளங்கும். இப்பண்பினால் விலங்கின வாழ்க்கைக்கும் மனிதனாக வந்த அறிவின் சிறப்பான வாழ்க்கைக்கும் உள்ள வேறுபாடுகளை நன்கு உணர்ந்துகொள்ளலாம். எனினும், விலங்கினங்களின் கருமையத் தொடர்பாக வந்த தன்மைகள் முழுவதும் மாறிடவில்லை. இதனால் மனிதகுல வாழ்வின் பகை, போர், பறித்துண்ணல் என்ற செயல்கள் உருவாகி அவையே வாழ்க்கைப் பண்பாடாகவும் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன*
>
> *(ப.13)*

என்கிறார்.

பண்படாத மனங்களில் உள்ள இவ்விலங்குணர்வைப் போக்க எத்தனையோ மேன்மக்கள் வழிவகுத்துத் தந்துள்ளனர். அவ்வழிகளைப். புரிந்து நடைபோடாமல் தப்பான திசை நோக்கிச் செல்வதால் போர்கள் வெடிக்கின்றன.

> பொருளாதாரம், ஆட்சிப்போட்டி, புகழ் இவற்றால் மக்கள் பிளவுபட்டு அதன்வழியே மதத்தாலும் அரசியல் முறையாலும், பொருள் உடைமை யினாலும் அறிவின் சிறப்பான புகழாலும் மனிதர்கள் இன்று குழுக்குழுவாக வேறுபட்டிருக்கிறார்கள் (ப.14)

என்னும் அருள்தந்தை அவர்கள்,

> மக்கள் இனம், ஜாதி என்ற முறையில் பிரிந்து விட்டது. அக்குழுக்களிடையேயும், தனிமனிதர்க் கிடையேயும் பகை, போர், பிணக்கு, பறித்துண்ணல், வஞ்சம் என்ற கொடுமைகள் சமுதாயத்தில் வளர்ந்து விட்டன? (ப.4)

என்கிறார்.

ஆட்சிமுறை

சரியான நிருவாக ஆட்சி அமைப்புமுறை இன்மையே சமுதாய அவலங்களான போர், பூசல்கள், வஞ்சகம், பகை என்பன போன்றவற்றுள் தொடர்ச்சிக்குக் காரணம் என்னும் அருள்தந்தை, அன்றுமுதல் இன்றுவரை தொடரும் ஆட்சிமுறை எதுவுமே மக்களை மக்களே ஆளும் தகுதியைப் பெறவில்லை என்பதனை ஆராய்ந்து எடுத்துக்காட்டுகிறார்.

> பொருளுடைமை என்ற முதலாளித்துவ முறையை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கைமுறைதான் போர்களைத் தோற்றுவித்தது. மேலும் நீடிக்கச் செய்கிறது. இந்த வாழ்க்கைத் தொடர் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும் தடியாட்சி, முடியாட்சி, சர்வாதிகார ஆட்சி, சமுதாய நல ஆட்சி, பொதுவுடைமை ஆட்சி என்று வளர்ந்து மக்கள் அனைவரும் சேர்ந்து தங்கள் பொருளை உற்பத்தி செய்யவும் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டிய சுதந்திரமான ஆட்சிமுறை உண்டாயிற்று

என்று கூறும் அருள்தந்தை,

> குடியாட்சி முறையில் மக்கள் நல நோக்கும் அடிப்படை உரிமைப் பாதுகாப்பும், சட்டங்கள்

> மூலமாக அமைந்தாலும், சட்டம் செய்பவர்களுக்குப் போதிய தகுதியை அதற்குரிய கல்வியின் மூலம் அமைத்து நடத்தவில்லை. உதாரணமாகக் குடியாட்சி முறை என்றால் எல்லா மக்களும் சமம் என்ற உணர்வு தொக்கி நிற்கிறது. இந்தப் புனிதமான ஆட்சிமுறையில் கட்சிகளின் ஆட்சிமுறையை நுழைத்து விட்டிருக்கிறார்கள். (ப.31)

என்கிறார். மேலும்,

> கட்சி என்றால் சமுதாயத்தில் சிறுபான்யைான மக்கள் கூட்டமாகும். இந்தச் சிறுபான்மையோர் ஆட்சிக்கு வந்தால் பெரும்பான்மையோராக உள்ள சமுதாய மக்கள் அனைவரையும் சட்டத்தின்மூலம் தங்கள் விருப்பம்போல் அடக்கியாள வாய்ப்பாக அமைந்துள்ளது (ப. 31)

என்கிறார். கட்சிகளால் ஆளப்படும் குடியாட்சியை அறிஞர் மு. வரதராசனார் போன்ற பேராசிரியர்கள் குழு ஆட்சி என்றே கூறுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. குடியாட்சியில் காட்டாற்று வெள்ளம் போல் கரைபுரண்டோடும் கையூட்டுக் கொடுமை சொல்லுந்தரமன்று. எத்தனையோ வகைகளில் மக்கள் சமுதாயம் முழுமைக்கும் பயன்பட வேண்டிய பணம், உருத்தெரியாமல் போய் விடுகிறது. பலர் உழைத்துத் திரட்டிய செல்வம் சிலர் உயரவே பயன்படுகிறது.

காய்ந்து கிடக்கும் ஏழ்மை வயலுக்கு நாட்டுப் பொதுச் செல்வமான நீர் பாய்வதே இல்லை. நீர் பள்ளம் நோக்கிப் பாயும் இயல்புடையது. ஆட்சியுலகில் செல்வமோ மேல்நோக்கியே பாய்ந்து கொண்டிருக்கிறது.

மக்களிடையே வறுமை ஒழியாமைக்கு வேறுசில காரணங்களையும் அருள்தந்தை எடுத்துரைக்கிறார். மக்கள் 'ஒன்றே கடவுள்' என நம்பாமல், அவர் உடலும் குடலும் அற்றவர்; அருவமாக உள்ளவர்; எதனையும் எதிர்பாராதவர் என்று தெளியாமல் சமயத்தின் பெயராலும், சடங்குகள் பெயராலும் திருவிழா என்னும் பெயராலும் வீண் செலவுகள் செய்வதாலும் செல்வ இழப்பும், மனித ஆற்றலும் வீணடிக்கப் படுகின்றன என்கிறார். பல கடவுள் நம்பிக்கையும் சமய

வேதாத்திரியத்தில் சமுதாய சிந்தனைகள்

பொ. சத்தியபாமா

உலகில் பல மகான்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அத்திபூத்தாற் போல் வந்திருக்கின்றனர். அவர்களின் எண்ணம் தான் சமுதாயச் சிந்தனையாக மலர்ந்தது. அந்தச் சிந்தனைதான் உலக மக்கள் அனைவரையும் அரவணைத்துச் சென்றது. உலகச் சமுதாய வாழ்வில் நலம் காண வேண்டும் என்று இரவு பகலாக உழைத்துவரும் அறிஞர் பெருமக்களும் சிந்தனையாளர்களும் அருந்தொண்டர்களும் வாழ்கின்ற இக்காலக்கட்டத்தில் நம் அருள்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியும் குறிப்பிடத் தக்கவர். வாழ்க்கைக்கு அவர் வழிகாட்டும் சமுதாயச் சிந்தனையை அவர் பார்வையில் பார்ப்பது இன்றியமையாத ஒன்று. எனவே மகரிஷி படைத்த நூல்களின் வாயிலாக அவர் காட்டும் சிந்தனையைப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கட்டுரைத் தரவுகள்

வேதாத்திரியத்தில் சமுதாயச் சிந்தனைகள் என்னும் இக்கட்டுரைத் தலைப்புக்கு ஏற்ற வகையில் மகரிஷியின் நூல்களாகிய 1. சமூகச் சிக்கலுக்கான ஆய்வுத் தீர்வுகள், 2. மதமும் மனிதனும், 3. இறையுணர்வும் அறநெறியும், 4. செயல்-விளைவுத் தத்துவம், 5. அறிஞர்களின் கடமை, 6. உலகச் சமுதாய வாழ்க்கை நெறி, 7. வாழ்க்கை வள உயர்வுப்படிகள் ஆகிய ஐந்து நூல்களே இக்கட்டுரைக்கு முதன்மைத் தரவுகளாகின்றன. இக்கட்டுரை ஐந்து பகுப்புகளாகப் பகுக்கப்படுகின்றது.

சமுதாயம்

சமுதாயம் என்பது, மனிதனின் கூட்டு வாழ்க்கை ஆகும். விலங்கியல்புள்ள மனிதன் தனித்து வாழும் ஆற்றல் அற்றவன்.

விரிவுரையாளர் (தமிழ்த்துறை), மீனாட்சி மகளிர் கல்லூரி, சென்னை.

சிறப்புயர்ந்த பெண்மதிப்புயரும்
தெய்வ நீதிவழியிலான வாழ்வுமுறை வாய்க்கும்
தேர்த்திருவிழா இன்றி உள்ளார்ந்த வழிபாட்டுமுறை ஓங்கும்
சிறுவர்க்கே விளையாட்டென்னும் சீர்மை பிறக்கும்
செயல் விளைவு உணர்கல்வி கால் கொள்ளும்
சீர் காந்த நிலை விளங்கும்
பார்முழுதும் உணவு, நீர் பொதுவாகும்
பல மதங்கள், பல கடவுள் பழக்கங்கள் ஒழிந்து ஓரிறைக் கோட்பாட்டில் உலகம் உய்யும்

அருள்தந்தை கூறும் நெறிகள் - மெய்ம்மைகள் நாளையே நடைமுறைக்கு வந்துவிட முடியாது. அந்தப் பண்பட்ட நிலை மலரக் காலம் கனிய வேண்டும். "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்று கணியன் பூங்குன்றனார் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்கூறிய பொன்மொழியின் சிறப்பை உலகம் இப்பொழுது தானே உணர்ந்து மதிக்கிறது. இதுவரை சான்றோர்கள் பல்வேறு காலங்களில் கூறிவந்த கருத்துகளின் சாரமாக, புதிய ஒளிகாட்டும் கலங்கரை விளக்கமாக அருள்தந்தை வகுத்துள்ள நெறிகள் விளங்குகின்றன.

முடியாட்சி, சர்வாதிகார ஆட்சி, சமுதாயநல ஆட்சி என்று வளர்ந்து இன்று குடியாட்சி பரவலானது போல், இவ்வாட்சி முறையிலும் உள்ள குறைகள் நீங்க ஓர் உண்மையான ஆட்சிமுறை ஏற்படக் காலம் வழிவகுத்தே தீரும். அதற்கு அருள்தந்தையின் சிந்தனைகள் அடித்தளமாக விளங்கும்.

கடவுள் கொள்கையிலும் அன்றிலிருந்து எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டு வந்துள்ளன. ஓரிறை என்ற உண்மையும் ஒருசாராரால் ஒப்புக் கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் தொடரும் பழக்க வழக்கங்களை, நம்பிக்கைகளை விட முடியாத நிலை உள்ளது. காலம் இதிலும் ஒரு தெளிவை ஏற்படுத்தி எல்லாரும் ஒரு கடவுள் கொள்கையை ஏற்று ஒரு நெறியில் ஒன்றும் நிலை மலரலாம்; இதற்கும் அருள்தந்தையின் சிந்தனைகள் பேருதவி புரியும்.

வேதாத்திரியத்தில் சமுதாய சிந்தனைகள்

பொ. சத்தியபாமா

உலகில் பல மகான்கள் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அத்திபூத்தாற் போல் வந்திருக்கின்றனர். அவர்களின் எண்ணம் தான் சமுதாயச் சிந்தனையாக மலர்ந்தது. அந்தச் சிந்தனைதான் உலக மக்கள் அனைவரையும் அரவணைத்துச் சென்றது. உலகச் சமுதாய வாழ்வில் நலம் காண வேண்டும் என்று இரவு பகலாக உழைத்துவரும் அறிஞர் பெருமக்களும் சிந்தனையாளர்களும் அருந்தொண்டர்களும் வாழ்கின்ற இக்காலக்கட்டத்தில் நம் அருள்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியும் குறிப்பிடத் தக்கவர். வாழ்க்கைக்கு அவர் வழிகாட்டும் சமுதாயச் சிந்தனையை அவர் பார்வையில் பார்ப்பது இன்றியமையாத ஒன்று. எனவே மகரிஷி படைத்த நூல்களின் வாயிலாக அவர் காட்டும் சிந்தனையைப் பார்ப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கட்டுரைத் தரவுகள்

வேதாத்திரியத்தில் சமுதாயச் சிந்தனைகள் என்னும் இக்கட்டுரைத் தலைப்புக்கு ஏற்ற வகையில் மகரிஷியின் நூல்களாகிய 1. சமூகச் சிக்கலுக்கான ஆய்வுத் தீர்வுகள், 2. மதமும் மனிதனும், 3. இறையுணர்வும் அறநெறியும், 4. செயல்-விளைவுத் தத்துவம், 5. அறிஞர்களின் கடமை, 6. உலகச் சமுதாய வாழ்க்கை நெறி, 7. வாழ்க்கை வள உயர்வுப்படிகள் ஆகிய ஐந்து நூல்களே இக்கட்டுரைக்கு முதன்மைத் தரவுகளாகின்றன. இக்கட்டுரை ஐந்து பகுப்புகளாகப் பகுக்கப்படுகின்றது.

சமுதாயம்

சமுதாயம் என்பது, மனிதனின் கூட்டு வாழ்க்கை ஆகும். விலங்கியல்புள்ள மனிதன் தனித்து வாழும் ஆற்றல் அற்றவன்.

விரிவுரையாளர் (தமிழ்த்துறை), மீனாட்சி மகளிர் கல்லூரி, சென்னை.

இந்நிலையில் தன் உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றைப் பெறுவதற்காகவும் மற்றும் உடல், உயிர், உடைமை ஆகியவற்றின் பாதுகாப்பின் பொருட்டும் மனிதன் கூட்டமாக வாழத் தொடங்கினான். இவ்வாறு தோன்றிய மக்களின் வாழ்க்கை சமுதாயம் எனப்படும். இத்தகைய சமுதாய வளர்ச்சிப் போக்கில் மற்றும் அமைப்பில் பொருளாதாரம் அல்லது உற்பத்தி அடிப்படையாகவும் மதம், மொழி, அரசியல் ஆகியவை மேல்நிலைக் கட்டுமானங்களாகவும் அமைந்துள்ளன. இவ்வடிப்படைச் சமுதாயச் சிந்தனையை ஒட்டியே மகரிஷியின் சமுதாயச் சிந்தனை மக்களின் வாழ்வியல் முறை அறியாமை நிறைந்ததாக விளங்குகின்றது. எனவே அதனைச் சீர்திருத்தும் பொறுப்போடு இவர் சிந்தனைக் கருத்துகள் விளங்குகின்றன.

பொருளாதாரச் சிந்தனைகள்

ஒரு நாட்டின் பொருளாதாரம் அங்குள்ள மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் இருப்பதுதான். இந்தக் கருத்தை மகரிஷி வலியுறுத்தியுள்ளார். இந்நிலை ஏற்பட முதலாளித்துவம் ஒழிக்கப்படவேண்டும் எனக் கருதினார். முதலாளித்துவச் சமுதாயம் நீடிக்கும் வரை ஏழையின் அழுகுரலுக்கு முடிவு ஏற்பட முடியாது என்கிறார். இதற்கு இவர் கூறும் சமுதாயச் சிந்தனை பிற பொருளாதாரச் சிந்தனையாளர் களினின்றும் பேறுபட்டு விளங்குகின்றது. மேலும் தனிப்பட்டவர்களின் நல்வாழ்வும் ஒரு சிலரின் சுகபோகமும் அதற்கான சட்ட திட்டங்களும் இன்று இருக்கின்றன. இந்நிலை மாற அவர் மக்களின் சிந்தனையைத் தூண்டுகின்றார். பொருளாதாரத்தை எது தீர்மானிக்கிறது? இயற்கையின் அருட்செயலுக்கும் மனித உணர்வுகளுக்கும் இடையேயுள்ள இசைவும், வேறுபாடுமே பொருளாதாரத்தைத் தீர்மானிக்கின்றன. பணம் மட்டும்தான்

> **பொருளாதாரத்தின் முக்கிய ஆக்கக்கூறு என்பதே ஒரு போலி நம்பிக்கை ஆகும். உண்மையில் உழைப்பின் ஊதியமே பணம் ஆகும்'**

இச்சிந்தனை பெறுவதற்கு அணுகும் முறையில் அடிப்படைப் பண்பை மட்டுமே மாற்றியாக வேண்டும் என்கிறார்.

> **வயது, கல்வி, தொழில் திறம், உடல்நலம், பிறர் உதவி இவை ஒவ்வொருவருக்கும் வேறுபட்டே இருக்கும்**

என்பது இயற்கையமைப்பாகும். இவ்வேறுபாடுகளை உயர்ந்து தனது உடல் மன ஆற்றல்களைச் சமுதாயத்திற்கு அர்ப்பணித்து, சமுதாய மக்களோடு, சகோதர உணர்வோடு வாழச் செய்கிறார்.[2]

மேலும் இவர்,

குலமுதலாய், பேதங்கள் கொள்ளும் நிலைமாற்றி
பலரும் கூடி உழைத்துப் பங்கிட்டு வாழ்ந்திடுவோம்
உலகில் பிறந்துவிட்ட ஒவ்வோர் மனிதனுக்கும்
நில உலகம் சொந்தமென்ற நீதிநிலை நாட்டுவோம்[3]

என்று பொருளாதார வளத்தைச் சீர்செய்ய வேண்டிய வழிகளையும் கூறுகிறார். கல்வியும் தொழில்களும் சமூக நிர்வாகமும் படிப்படியாகச் சீரமைக்கப்பட வேண்டும் என்கிறார். அவர் கூறும் ஆறு வகையான பொருளாதாரச் சிந்தனை பற்றிக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

தன் முனைப்பு ஆறுகுணம் பஞ்சமனாபாவம்
தறுக்குற்று பிறருடைய சுதந்திரம் பறித்தல்
வன்முறைகள் ஏழ்மை பிறர்பொருள் கவர்தல் மேலும்
வாழ்வினிலே பெண்ணினத்தை வருந்தவிடல்

என இவற்றைக் காக்கும் முறை ஒன்றே சமுதாயச் சிந்தனையாக இருக்க வேண்டும் என்கிறார்.

மதத்தில் சிந்தனை

மதம் அல்லது சமயம் மனிதனுக்கான வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்த்து வைப்பதாக அமைய வேண்டும். மாறாக மதமே மனிதனுக்கு ஒரு பிரச்சினையாக ஆகிவிடக் கூடாது என்கிறார். இவற்றை மகரிஷியே பல சந்தர்ப்பங்களில் குறிப்பிடுகிறார். மதம் என்பது மனித வாழ்வுக்குப் பயன்படுவதற் கென்றே உருவானது. மதமானது மனிதனுக்கு ஒழுக்கத்தையும் தர்மத்தையும் நீதி நேர்மையையும் கற்பிக்கிறது என்றால் காவல்துறை, நீதித்துறை தேவையில்லை. எனவே மனிதனுக்குப் பல மதம் தேவையா? என்ற கேள்விக்குப் பல சிந்தனையை முன்வைக்கிறார் நம் அருள்தந்தை மகரிஷி அவர்கள். விஞ்ஞானம் வளர்ந்து வரும் இந்நாளில் மெய்யான ஞானத்தையும் நல்லவைகளையும் மனிதன் எடுத்துக்கொண்டு பொய்யான

ஞானத்தைத் தரும் மதத்தையும் விட்டொழிக்க வேண்டும் என்கிறார்.

> மனிதனுக்கு இனி ஒரு மதம் போதும். மதத்திற்கு அடிப்படையாக தெய்வநிலை ஒன்று போதும்[4]

என மதத்தின் நிலையை மக்களை உணர வைக்கிறார். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் கருத்தை நாம் நினைவில் கொள்ள வேண்டும் எனினும் 'மதம்' என்பது ஒரு முக்கியமான வாழ்க்கை என்கிறார். இதற்கு இவர் கூறும் விளக்கம் பொருத்த முடையதாக உள்ளது.

> வாழ்க்கை ஒழுக்கங்களைத் தொகுத்தவர்கள் பெயர்களைக் கொண்டுதான் மதங்களின் பெயர்கள் வழங்கப்பெறுகின்றன[5]

எனவே அனைத்து மதங்களும் கூறுவது ஒன்றுதான். பெயரால் பிரிவினையையும் வெறுப்பையும் வளர்க்காமல் மக்களிடையே ஒற்றுமையையும் அன்பையும் பரப்பவேண்டும் என்பதே இவர் காட்டும் சமுதாய நெறியாகும்.

அரசியல் சிந்தனை

இக்காலத்தில் மனித வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் அரசு என்பது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் செல்வாக்கு உடையதாகவும் உள்ளது. உயர்வாக மதிக்கப்பட்டும், பாராட்டப்பட்டும் வரும் அரசியலில் இடம்பெற்றுள்ளவர்கள் அனைவரும் எல்லா நிலைகளிலுமுள்ள மக்களைத் திறமையாகப் பாதுகாக்கவும் உதவவும் வேண்டும் என்கிறார். ஓர் அரசிலுள்ள உறுப்பினர்களின் தன் முனைப்பு, பேராசை, சினம் அல்லது வஞ்சம் போன்ற ஒவ்வொரு பண்புக் குறைவும் சமுதாயத்தின்மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்கத்தை உண்டு பண்ணக்கூடாது என்பதைச் சுட்டுகிறார்.

அரசியல் ஒழுக்கப் பண்பில் மாற்றம் உண்டாவது என்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல என்கிறார். இதற்கு அவர் காட்டும் வழி கல்வி முறையால் சீர்திருத்தம் கொண்டு வருவது ஒன்றுதான் என்கிறார். ஒவ்வொரு தனிமனிதனும் சமுதாயத்திற்கும் பயனுள்ளவற்றைப் படைக்கும் திறன் பெற்றிருத்தல் வேண்டும் என்கிறார். அரசியல் மாற்றம் உருவாக்க

வேண்டும் என்றால் ஓர் அரசியல்வாதியின் நன்னடத்தை சரியாக ஒழுங்காக இருக்கவேண்டும் என்கிறார்.

ஓர் அரசியல் எப்படி இருக்கவேண்டும் என்றால் நம்முடன் வாழும் மக்களிடம் அன்பும் பரிவும் காட்டி ஆழமாகச் சிந்திக்க வேண்டும் என்கிறார். அதற்கு முதலில் தன்னுள் ஒரு குறிக்கோளை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்கிறார். அதற்கு அவர் கூறும் விளக்கம் அனைவராலும் ஏற்றுக்கொள்ள கூடியதாக உள்ளது.

> மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களோ அல்லது அரசு அதிகாரிகளோ பணம் அதிகாரம் ஆகியவற்றில் தொடர்புகொண்டு ஈடுபடக்கூடாது[7]

என்பதே இவர் கூறும் சிந்தனையாகும். இக்காலத்தில் அரசியல்வாதிகளுக்கு எவ்விதத் தகுதிகளும் வரையறுக்கப்பட வில்லை என்பதைத் துணிந்து சுட்டுகிறார். அரசியல் பிரதிநிதிகளுக்கு ஆன்மீகத்திலும் சமூக விழிப்புணர்விலும் பயிற்சி அளிப்பதற்கான தனிக்கல்வி நிறுவனங்கள் வேண்டும் என்கிறார். எனவே அரசியல் மூலமாக உலகச் சமுதாயமாகிய நாம் நமது சிக்கல்களுக்கு நிலைத்திருக்கக் கூடிய ஒழுங்கான தீர்வுகளைக் கண்டு அவற்றைத் தைரியத்துடனும் விடாமுயற்சியுடனும் செயல்படுத்த வேண்டும்.

இறையுணர்வில் சிந்தனை

இறை நிலையை விஞ்ஞான அறிவின் மூலம் மக்கள் விளங்கிக் கொள்ளுகின்ற காலம் வந்துவிட்டது. இல்லையானால் தெய்வம், உயிர், அறிவு, சீவகாந்தம் இவற்றை மக்கள் அறிய வழியே இல்லை. இறைநிலைத் தெளிவு ஏற்படவில்லையானால் மக்கள் சமுதாயத்தில் அறநெறி நிலைக்காது என்கிறார். எனவே மக்களில் சிந்தனையாற்றல் பெற்றவர்கள் அனைவரும் தெய்வம், உயிர், அறிவு, சீவகாந்தம் என்ற நான்கு மறைப் பொருட்களையும் உணர வைக்கிறார். அதாவது இறையுணர்வு இல்லையானால் அறநெறி சரியாக விளங்காது என்கிறார்.

ஒவ்வொரு மனிதரும் உடலைப் பாதுகாக்க வேண்டும் என்கிறார். உடலைப் பேணும்போது ஆன்மா அமைதி அடைகிறது. ஆன்மா அமைதி அடையும்போது அன்பும் கருணையும் பிறக்கிறது என்கிறார். அதனால் மக்கள் நலம்

காண்கிறார்கள். இதுவே ஒரு சமுதாயத் தொண்டுதான் என்கிறார். மனவளக் கலையில் உயிரை மேலே எழுப்பி அதன்மீது மனம் வைத்துப் பழகுவதுதான் குண்டலினியோகம். குண்டலியா சக்தியைப் பெற்றால் மனம் அமைதி அடைகிறது. அதனால் மக்களிடம் அன்பும் பிறக்கிறது என்கிறார். எனவே இறை நிலையிலும் சமுதாயச் சிந்தனையைப் பார்க்கிறார்.

முடிவுரை

மேற்கூறிய மகரிஷியின் சமுதாயச் சிந்தனைகளிலிருந்து பல கருத்துகள் பெறப்படுகின்றன. மதம் மனிதனுக்குத் தேவையா என்கிறார். தேவை என்றால் பல மதங்கள் வேண்டாம் என்கிறார். இதை நோக்குமிடத்து மக்கள் உள்ளத்தில் மதம் என்றால் என்ன? என்ற சிந்தனை எழும்புகிறது. பின் மதத்தால் ஒழுக்கங்களைப் பின்பற்ற வைக்கிறார். பொருளாதாரத்தின் மூலம் பகிர்ந்துண்ணும் தன்மையைக் கூறுகிறார். இயற்கையின் அருட்செயலுக்கும் மனித உணர்வுகளுக்கும் இடையே உள்ள இசைவும் வேறுபாடுமே பொருளாதாரத்தைத் தீர்மானிக்கின்றன என்கிறார். உண்மையான அரசியல்வாதி எப்படி இருக்க வேண்டும் என்பதில் அரசியல் பற்றிய சிந்தனையை மக்கள் மனதில் தூண்ட வைக்கிறார். இறையுணர்விலும் அன்பும் கருணையும் நிலைத்திருக்க வேண்டும் என்கிறார். எனவே மகரிஷியின் சமுதாயச் சிந்தனைகளை நாமும் சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. வேதாத்திரி மகரிஷி, **சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள்**, ப. 49.
2. மேலது, ப. 50.
3. மேலது, ப. 54.
4. வேதாத்திரி மகரிஷி, **மதமும் மனிதமும்**, ப. 76.
5. மேலது, ப. 75.
6. வேதாத்திரி மகரிஷி, **சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள்**, ப. 97.
7. மேலது, ப. 730.

இருள் போக்கும் வேதாத்திரியின் சிந்தனைகள்

கே. கௌரிகந்தவேல்

சென்னைக்கு அருகிலுள்ள கூடுவாஞ்சேரி கிராமத்தில் 1911ஆம் ஆண்டு எளிய நெசவாளிக் குடும்பத்தில் பிறந்தவர் வேதாத்திரி மகரிஷி. தன்னுடைய ஆழ்ந்த சிந்தனையினாலும், சுய முயற்சியாலும் வாழ்க்கையில் முன்னேறியவர் இவர்.

தான் கண்ட வாழ்க்கைத் தத்துவங்களையும், யோகப் பயிற்சிகளையும் பாமர மக்களுக்குப் புரியும்படியாக எளிமையாகப் போதித்து வருகிறார். மனித குலம் உயர்வதற்காகப் பாடுபட்டு வருகிறார்.

1958-ஆம் ஆண்டில் 'உலகச் சமுதாய சேவா சங்கம்' நிறுவினார். இதன் கிளைகள் இன்று உலகம் முழுவதும் பரவிச் சேவையைத் தொடர்ந்து வருகின்றன. இந்தியா, மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் தனது சேவையைச் செய்து உலகச் சமாதானத்திற்கான பயிற்சியை அளிக்கிறார். தற்போது தனது 94வது வயதிலும் தளராத பொதுச் சேவையில் ஈடுபட்டு வருபவர் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.

மக்களால் தத்துவஞானி என்றும், யோகிராஜ் என்றும், அருள்தந்தை என்றும் அன்புடன் அழைக்கப்படுகிறார்.

உலக மக்களுடைய மனத்தின் இருளைப்போக்கக் கூடிய அரிய சிந்தனைக் கருவூலமாகத் திகழ்கிறார் தத்துவஞானியான வேதாத்திரி மகரிஷி.

மானுட வாழ்க்கையில் வெற்றிக்கு மன நலமும், வினை நலமும் வேண்டும். மன நலம் மன்னுயிர்க்கு ஆக்கம். வினை நலம்

விரிவுரையாளர் (தமிழ்த்துறை),
ஏ.வி.எஸ். கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
19-ஜ, கும்புசாமி தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்-636 002.

வேண்டியன எல்லாம் தரும். மனநலமும், வினைநலமுமே வாழ்க்கையின் இரு நெறிகளாக - இரு கண்களாகக் கொள்ள வேண்டும். அவ்வாறு கொண்டால் உலகம் ஒளிபெற்றுத் திகழும்; ஞான ஒளி பெற்றுத் திகழும் என்கிறார்.

பண்பாடு

ஆதி கால மனிதனின் வாழ்க்கையிலிருந்தே பண்பாடு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அன்று முதல் இன்றுவரை பல இலட்சம் ஆண்டுகள் கடந்துவிட்டன. அன்றைய வாழ்க்கைப் பண்பாட்டிற்கும், இன்றைய வாழ்க்கைப் பண்பாட்டிற்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கின்றன. உணர்வு, தொழில் திறன், மனித வளம் காக்கும் பொறுப்பு, விஞ்ஞான அறிவு என்ற பலதரப்பட்ட சூழ்நிலைக்கும் ஏற்பக் காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டே வருகிறான். இதுதான் வாழ்க்கைச் சீர்திருத்தம் என்று சொல்லப்படுகிறது.

ஐந்தொழுக்கமாக மகரிஷி கூறுவது யோசிக்கத்தக்கது

ஒவ்வொரு மனிதனும் மனித சமுதாயத் தேவையை முடிக்கக் கூடிய ஒரு பொருளை உற்பத்தி செய்வது நமது தவிர்க்க முடியாத பொறுப்பு.

இரண்டாவது, தன் வாழ்நாள் முழுவதும் பிறருக்கு மனத்தாலோ உடலாலோ துன்பம் தராமல் வாழ்வது

மூன்றாவது, உணவுக்காகப் பிற உயிர்களைக் கொல்லும் கொடிய செயலைக் கைவிட வேண்டும்.

நான்காவது, பிறருக்கு உரிமையானதையோ, பிறர் வாழ்க்கைச் சுதந்திரத்தையோ பறிக்கக் கூடாது.

ஐந்தாவது, பிறர் துன்பம் போக்கும் அன்பு மிக்கவராக வாழ வேண்டும்.

இவ் ஐந்து ஒழுக்கங்களையும் ஒரு மனிதன் தன் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்வானேயானால் துன்பங்களைத் தவிர்த்து உடல்நலம் மன நலத்தோடு வாழலாம் என்கிறார் மகரிஷி.

நீதிமுறை

யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறும் நீதிமுறை நம் அனைவரையும் சிந்திக்க வைக்கக்கூடியதாக இருக்கிறது.

இவ்வுலகில் எல்லா ஜீவராசிகளும் இயற்கை நியதியை ஒட்டி வாழ்ந்து வருகின்றன. ஆனால் மனிதன் தன் எண்ணம், செயல்களால் இயற்கைக்கு முரணான பல சிக்கல்களையும் துன்பங்களையும் ஏற்படுத்துகிறான்.

மனித வாழ்க்கை என்பது அனைத்து நிலையிலும் நாகரிகம் நிறைந்ததாக இருக்க வேண்டும். நாகரிகம் என்பது சிந்தனை, சொல், செயல் அனைத்தும் முரண்படாமல் ஒன்றுபட்டு இயைந்து இயங்க வேண்டும் என்பதாகும்.

இது முரண்பட்டு இயங்கினால் அவன் இயற்கைக்கு விரோதி; சமுதாயத் துரோகி; தன்னுடைய வாழ்க்கையின் நலன் களையே அழித்துக் கொள்கிறான். அதனால் நாகரிகத்தோடு மனிதன் வாழ வேண்டும் என்று மகரிஷி கூறுகிறார்.

இந்த அடிப்படையில் வகுக்கப்பட்டதுதான் அனைத்து நாடுகளிலும் உள்ள அரசியல் சட்டங்கள். ஒரு குற்றவாளியைப் போதிய சாட்சி இல்லாததாலேயோ, வேறு சில பொருத்தமான காரணங்களினாலேயோ தண்டிக்காமல் விட்டுவிடலாம். ஆனால் எந்தக் காரணத்தினாலும் குற்றம் செய்யாதவரைத் தண்டிப்பது கூடாது. அது நீதிக்கு விரோதம். மக்களின் குல வாழ்வுக்கே துரோகம். இந்த நியதியை உணர்ந்து இது பற்றித் தெளிவுள்ள மக்கள்தான் நீதிகளை வகுக்க வேண்டும்.

இக்காலத்தில் சட்டத்தை உருவாக்குபவர்கள் நாடாளுமன்றம், பாராளுமன்றம் என்ற இரு சட்டமன்றங்களிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள்தான்.

ஒரு குமாஸ்தா வேலைக்குக்கூட சில தகுதிகளை எல்லா நாடுகளிலும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அனால் மனிதகுலத்தைப் பாதுகாக்கச் சீரமைக்க அவ்வப்போது புதிய திட்டங்களை வகுக்கும் நாடாளுமன்றம், பாராளுமன்றம் இவற்றில் பொறுப்பேற்பவர்கள் இத்தகைய கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ளார்களா?

சட்டம் வகுப்பவர்களுக்கும், அதை நிர்வாகம் செய்பவர்களுக்கும் ஒழுக்கப் பண்பாடு என்பது அவசியம். ஆட்சிப் பொறுப்பேற்க வரும் முக்கியமான பதவியாளர்கள்

நான் யாரிடமும் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ, மற்றவர்கள் மூலமாகவோ, எந்த இடத்திலும்

இலஞ்சம் வாங்க மாட்டேன் என்பதை என் மனதையே சாட்சியாக வைத்து உறுதி அளிக்கிறேன்

என்று உறுதிமொழி ஏற்கவேண்டும்.

வாணிப முறை

விவசாயம், துணி நெய்தல், வீடு கட்டுதல், சமையல் செய்தல், விஞ்ஞானக் கருவிகளைச் செய்தல், இயக்கல் இவற்றை அனைவரும் கற்றுக்கொள்ளவேண்டும். இச்சமுதாயத்தில் உற்பத்தி செய்வது, அனுபவிப்பது, பிறர் அனுபவிக்கும் பொருளை ஏதோ ஒரு வழியில் பண்டமாற்று செய்து அனுபவிப்பது போன்ற வாணிபமுறைதான் பரவி இருக்கிறது. அதனால் மேலே சொன்ன தொழிலை அனைவரும் கற்க வேண்டும்.

செல்வ நிலையில் ஏற்படும் ஏற்றத்தாழ்வை மனித குலத்தை விட்டு அகற்ற வேண்டும். இந்தியாவில் செல்வ வளம் ஏற்படப் பேரறிஞர்கள் பலர் முன்வரவேண்டும்.

சிந்தனையாளர்களே நல்வாழ்வு வாழ்வர்

இன்றைய காலக்கட்டத்தில் மனிதன் அறியாமை, அலட்சியம், உணர்ச்சிவயப்படுதல் என்ற மூன்று காரணங்களால் பல தவறுகள் செய்கிறான். அதனால் பல துன்பங்களைச் சந்திக்கிறான். இதற்குக் காரணம் வாழ்க்கையில் சிந்திக்காமல் முடிவெடுப்பதுதான் என்கிறார் மகரிஷி. இதற்கு இவர் கூறும் வழி சுருதி, யுக்தி, அனுபவம் என்பதாகும்.

சுருதி என்பது நூல் வழியாகச் சிந்தனையாளர்களின் கருத்துகளை அறிவது.

யுக்தி என்பது ஆறாவது அறிவால் சிந்திக்கும் பொழுது மனம் இறையுணர்வை நோக்கிச் செல்வது. அத்தகைய முறை மூலம் பல சிக்கலான தீர்வுகளுக்கும் விடை காணமுடியும் என்கிறார்.

அனுபவம் என்பது நம் புலன்களைக் கொண்டும் அனுபவ அறிவைக் கொண்டும் நல்லது கெட்டதை அறிதல்.

இத்தகைய அறிவை வளர்த்து மனிதர்கள் வாழ்வில் அமைதியும், நிம்மதியும் பெறுங்கள் என்கிறார் அருள்தந்தை.

பெண் மதிப்பு

பெண்களை அடிமையாக நடத்தும் தவறான எண்ணம் இவ்வுலகை விட்டு மறைய வேண்டும். உலக மக்கள் தொகையில் சரிபாதி பெண்கள். ஒவ்வொரு ஆணையும் பெற்றுப் பாதுகாப்பையும், பராமரிப்பையும் தருவது பெண்தான்.

இறைவனுடைய அற்புதமான ஆற்றல் பெண்களுக்குதான் உண்டு. ஒரு கருவைச் சுமந்து, பாதுகாப்பாகப் பெற்றெடுப்பவள் பெண்தான்.

பெண்ணுக்குத் தையலர் என்ற பெயரும் உண்டு. தையலர் என்றால் இணைப்பு என்று பொருள். குடும்பத்தை ஒன்றிணைத்துத் தெய்வீக இணைப்பை வாழ்வில் கொண்டு வருவது பெண்தான்.

திருப்பாவையில் பெண்களை "நேரிழையாள்" என்பர். ஒரு துணியை நெய்ய வேண்டுமானால் நேரிழை என்ற பாவு முதலாவதாக வேண்டும். அந்த நேரிழையின் குறுக்கே செலுத்தப்படும் நூலிழைக்கு 'ஊடு இழை' என்று பெயர். ஆடையில் முதல் பொருளாக இருப்பது நேரிழை.

அதுபோல உலக மக்கள் குலத்தில் நேரிழைகளாக இருப்பவர்கள் பெண்கள். அவர்களை முன்வைத்து ஊடு இழைகளாக விளங்குபவர்கள் ஆண்கள்.

பெண் அன்னையாகவும், சகோதரியாகவும், மனைவியாகவும் இருந்து இவ்வுலகத்தைக் காப்பவளாக விளங்குகிறாள். பெண்களின் உதவியின்றி இச்சமுதாயத்தில் மகிழ்ச்சியோ, பாதுகாப்போ இருக்க முடியாது. இதை அனைவரும் உணர்ந்து மதிப்பளித்து, பாதுகாத்து, மனஅமைதியையும், நிறைவையும் தர வேண்டும். அது நம் கடமை என்கிறார் ஞானியான வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

மனிதனின் இன்ப துன்பத்திற்குக் காரணம்

மனிதன் தன் மனத்தின் செயல்பாடுகளை அறியாமல், மதிக்காமல் இருப்பதுதான் அவன் இன்பதுன்பங்களுக்குக் காரணம் என்கிறார் மகரிஷி.

ஒவ்வொரு மனிதனுடைய மனத்தின் செயலிலும் சீவகாந்தம் நிறைந்துள்ளது. அது மனித இனத்திலிருந்து விரிந்து ஒவ்வொரு உயிரினத்திலும் பரவியுள்ளது.

ஒவ்வொரு மனிதனுடைய உடலும் காந்த செல்களால் ஆனது. ஒவ்வொரு செல்லும் இரு காந்தத் துருவங்களைக் கொண்டுள்ளது. சீவகாந்தம் சிறப்பாக இயங்குகிறது. ஒரு துருவம் காந்தத்தைப் பெறுவதற்கும், மற்றொரு துருவம் உபரியான காந்தத்தை வெளியிடுவதற்கும் பயன்படுகிறது.

மனிதனின் உடல் முழுவதும் ஓடிக் கொண்டிருக்கும் நுண்விண் துகள்கள் வேதான்களின் தொகுப்பே ஆகும். அதுவே உயிர். இந்த நுண்விண்துகள் நம் உடலில் உருவாக உணவு, நீர், காற்று என்பவற்றை நாம் உட்கொள்ள இரத்தம், சதை, கொழுப்பு, எலும்பு, மஜ்ஜை, ரசம், சுக்கிலம் என்பதாக மாற்றம் பெறுகிறது. இதிலிருந்து நுண்விண்துகள் பிரிந்து உடல் முழுவதும் ஓட ஆரம்பிக்கிறது.

இத்தகைய வேதான்களின் இடைவிடாத சுழற்சியால் இறைவெளியில் உராய்வு ஏற்பட்டுக் காந்த அலை உண்டாகிறது. அணுக்களும், வேதான்களும் கூட்டாகத் தோற்றுவிக்கும் காந்த அலைகளே சீவகாந்தம் ஆகும்.

சீவகாந்தம் உடலில் சுழன்று ஓடிக்கொண்டிருப்பதால் சுழல் மையம் உண்டாக்கப்பட்டு அதனால் சீவகாந்தம் வலிமை அடைகிறது. இவ்வாறு வலிமை பெற்ற மையமே கருமையம் ஆகும்.

கற்பனைக்கு எட்டாத தன்மைகளைக் கொண்டுள்ளதே மனம் ஆகும். இதை யாரும் மறுக்க முடியாது. ஏனெனில் இதன் வடிவத்தையோ இதில் உள்ள குறிப்புகளைக் குறிப்பதற்கோ எவ்விதமான வழியும் இல்லை. இதுவரை வரையறுக்கப்படவும் இல்லை. வாழ்க்கையின் அனுபவக் குறிப்புகளே மனத்தில் பதிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் இதில் அடங்கியுள்ளவை தனிமங்களா?, பாய்மமா?, வாயுவா?, அலையா?, எனும் கேள்விகளுக்கு இதுவரை பதிலில்லை.

தத்துவம் சார்ந்த மரபு நூல்களைப் படிப்பதாலும், படித்த கருத்துகளைப் பிறருடன் வாதிட்டு மேலும் பல கருத்துகளை ஐயமில்லாமல் அறிவதன் மூலமும், ஆராய்ச்சியாளர்களின் சொந்த வாழ்க்கை அனுபவங்களை ஏற்பதன் மூலமும் மனத்தைப் பற்றி அறிந்து கொள்ள இயலும்.

தீங்கு விளைவிக்கக் கூடிய செயலிலிருந்து விடுபடுவோம்

❖ பல்வேறுபட்ட போட்டி, விளையாட்டுப் பந்தயங்களால் பெருமளவில் மக்களின் பணமும் ஆற்றலும் வீணாக்கப் படுகின்றன. வலிமை வாய்ந்த வீரர்களை உருவாக்குவதே விளையாட்டின் நோக்கமாகும். ஆனால் இன்றைய நவீன காலத்தில் அதற்குத் தேவையில்லை. எவ்வளவு திறமையான, உடற்பயிற்சிப் போட்டியாளராக இருந்தாலும் துப்பாக்கியின் முன் மிரட்டுதலில் இருக்கும் ஒருவரைக் காப்பாற்ற இயலாது. போர் வீரர்களுக்கு நவீனப் போர்க் கருவிகளைப் பற்றிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. எனவே கல்வி நிலையங்களில் மட்டும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தலாம். வயது வந்தவர்கள் உடல் நலம் காக்க உடற்பயிற்சிகள் செய்யலாம். வாழ்க்கையின் தொழிலாக விளையாட்டுப் போட்டி நடத்துவதால் காலமும் பணமும் அதிகளவில் வீணாகின்றன.

❖ கடவுளின் பெயரைச் சொல்லிச் சமயத் திருவிழாக்களையும் நடைமுறைச் சடங்குகளையும் நடத்தி அதிகளவு பணத்தை வீணாக்குகிறார்கள். இதெல்லாம் தவிர்க்கப்பட்டால் பெருமளவு மனித ஆற்றலையும் நாட்டின் நிதி வளத்தையும் சேமிக்கலாம்.

இறைவனுக்கு உடலுமில்லை, குடலுமில்லை. எனவே கடவுளுக்கு மனிதன் உணவு கொடுக்க வேண்டியதில்லை. ஆடை அலங்காரங்கள், விலையுயர்ந்த நகைகள் அணிவிப்பதும் தேவையில்லை. கடவுளுக்குத் திருமணம் செய்து வைப்பது போன்ற விழாக்கள் பணத்தை வீணாக்கும் கேலிக்கூத்தை நிறுத்தி அனைத்துச் சமயத்தலைவர்களும் ஒன்று கூடி மக்கள் புரிந்து கொள்ளும் விதத்தில் எல்லாம் வல்ல இறைவனின் இறைநிலை பற்றிய ஒரு தெளிவான பொதுக் கருத்தை உருவாக்க வேண்டும்.

❖ பாலியல் ஒழுக்கப் பண்பு மனித வாழ்விலே ஒரு மதிப்பு மிக்க செல்வம். ஆனால் தற்காலத்திலே திரைப்படத்துறை தன் இழிவான தன்மையினால் இதைக் கேலிக்குரியதாக ஆக்கிவிட்டது. திரைப்படத்தைப் பொழுதுபோக்கிற்காகப் பயன்படுத்தும் நேரத்தில் கல்வி போதிக்கும் சாதனமாகவும் பயன்படுத்தலாம்.

❖ புகை பிடித்தல், மது அருந்துதல் மற்றும் பலவிதமான மதி மயக்கும் மருந்துகள், உடலுக்கும் மனத்திற்கும் தீங்கு விளைவிக்கக் கூடியன. பலரின் உடல்நலத்தைக் கெடுத்துப் பழிபாவத்திற்கு அஞ்சாது சில மனிதர்கள் இவற்றைத் தொழிலாகச் செய்து பணம் சம்பாதிக்கிறார்கள். இவற்றையும் மாற்ற வேண்டும்.

❖ திருமண அங்கீகாரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ற வகையில் பல சடங்குகள் உண்டாக்கப்பட்டன. இத்தகைய வாழ்க்கை ஒப்பந்தத்தைச் சான்றோர்கள் முன்னிலையில் எளிமையாக நடத்தப்பட்டால் சிக்கனமும், பாதுகாப்பும் இருக்குமே!

❖ அறிவைப் பகிர்ந்து கொண்டு தன் மனத்தை தெளிய வைக்கும் ஆசிரியர்கள் இருவகையாக உள்ளனர். கல்லூரி, பள்ளி ஆசிரியர்கள் முதல்வகை உயர் நிலைக்குக் கொண்டு செல்லும் ஆன்மீகக் குரு அடுத்தவர் வாழ்க்கையின் எந்தப் பரிணாமத் திலும் ஒவ்வொரு மனிதனும் அறிவுக் கண்ணைத் திறந்தவரும் ஆன்மீக அறிவை வளர்த்தவருமான குருவை வணங்கியே தொடங்க வேண்டும். அதுவே நன்று.

பொருளாதார ஏற்றத்தாழ்வு

பிறந்தது முதல் இறக்கும் வரை இவ்வுலகில் பிறந்த அனைத்து உயிருக்கும் உணவும் உறைவிடமும் வேண்டும். விலங்கினங்களை எடுத்துக் கொண்டால் வலிமை கொண்டது, வலிமையற்றது என இரண்டாகக் கூறலாம். இதில் வலிமைபெற்ற மிருகம் வலிமை குன்றிய மிருகத்தை அடித்துத் தனது உணவாக்கிக் கொள்கிறது. தனது இனத்திற்குத் தகுந்தவாறு புதர்களையோ, குகைகளையோ, மரங்களையோ தானாகக் கட்டிய கூடுகளிலோ வாழ்கிறது. இவற்றிடையே ஏற்றத் தாழ்வு என்பது இல்லை. வறுமையையோ, வேறு துன்பத்தையோ உணர்வதில்லை.

வாழ்க்கையில் எல்லாச் சிக்கல்களையும் நீக்கி மகிழ்ச்சி யாகவும், வெற்றிகரமாகவும் வாழவே இயற்கை மனிதனுக்கு ஆறாவது அறிவைக் கொடுத்து உள்ளது. ஆனால் பொருளாதார ஏற்றத் தாழ்வினால் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. இடம், வரலாற்றுக் காலம், மக்கள் பிறப்பு, நோய் பற்றிய புள்ளிவிவரம், விஞ்ஞான வளர்ச்சி, தொழில் நுணுக்கம், கல்வித் தரங்கள், அரசு

நிர்வாக முறைகள் இவற்றுக்குத் தகுந்தவாறு பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் நிலவி வருகின்றன. எனவே கடந்த பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக உலகம் முழுவதற்கும் ஒரே தத்துவக் கொள்கையை உருவாக்க முடிவதில்லை. அவ்வாறு உருவாக்கினாலும் நிலைக்காமல் மறைந்து வருகிறது.

பொருளாதார ஏற்றத்தாழ்வு என்பது உண்மையில் எதனால் வருகிறது. பணம் மட்டும்தான் பொருளாதாரத்தின் முக்கிய ஆக்கக்கூறு என்பதே போலி நம்பிக்கை. உழைப்பின் ஊதியமே பணம். தேவைகளை உணர்ந்து, அதற்கே திட்டமிடுதல் மனமே. அறிவுக் குறைபாட்டினால்தான் உண்மையாகவே பொருளாதார ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது.

இவ்வுலகில் நிலம், நீர், காற்று, ஆகாயம் என்ற நான்கும் அனைவருக்கும் பொதுவானவை. இதை யாரும் உருவாக்கவும் இல்லை யாராலும் அழிக்கவும் முடியாது.

ஒவ்வொருவரின் உழைப்பும், உற்பத்தியும் பிறரின் நலனுக்காகப் பரவலாகப் போய்க்கொண்டிருக்கின்றன.

ஆனால் மனிதன் ஒன்றை உணர வேண்டும். செரிக்கும் அளவுக்கு மேல் உணவை உண்ண முடியாது. தாங்கும் பளுவிற்கு மேல் உடை உடுத்த முடியாது. ஒருவர் இறக்கும்போது எவ்வளவு சொத்துக்கு அதிபதியாக இருந்தாலும் அவையெல்லாம் சமுதாயத்திற்கே போய்ச்சேரும். ஆனால் அதற்குள் முதலாளித்துவம் தலைதூக்கிப் பொருளாதார ஏற்றத்தாழ்வை உண்டாக்குகிறது. பொதுவுடைமை, சமுதாயக் கூட்டுரிமை அழிந்து விடுகிறது.

முடிவுரை

அருள்தந்தை தத்துவஞானி யோகிராஜ் ஸ்ரீ வேதாத்திரி மகரிஷியின் சிந்தனைகள் நம் அனைவரையும் சிந்திக்க வைக்கக் கூடியன. அனைத்தும் நடைமுறைப்படுத்தக் கூடியன. அவர் கூறும் ஆதாரப்பூர்வமான கருத்துகள் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியன.

வேதாத்திரியம் அல்லது வாழ்வனுபவங்கள்

கி. ஏழுமலை

நாம் வாழ்வதற்கு அக்ன்ற நிலம் இருக்கிறது. இதனால் மனித சமுதாயம் தொடர்ந்து வாழ்கிறது. வாழ்க்கைக்கு வேண்டிய பொருளும் எப்போதும் இருக்கிறது. ஆனால் மனிதர் மட்டும் மாறிக் கொண்டே இருக்கின்றனர். வாழ்வதற்கு நிலம், நீர், காற்று, ஞாயிறு, பொருள், அறிவு அனைத்தும் இருக்கின்றன. நாம் செய்ய வேண்டியது இயற்கையில் விளையும் துன்பங்களைக் குறைத்துக் கொள்ள முயலவேண்டும். இன்பங்களைப் பாதுகாக்க வேண்டும். செயற்கையால் துன்பங்களை ஏற்படுத்திக் கொள்ளாமலும் இருக்க வேண்டும்.

சமுதாயம் மானுடத் தோற்றம் கண்ட தொடக்கக் காலத்தில் பொதுமையான வாழ்நெறியைக் கொண்டிருக்கக்கூடும். காலமும் வரலாறும் மனித சமுதாயத்தைப் பல்வேறு நிலைகளில் மாறுபாடு கொண்டுள்ளவையாக மாற்றி இருக்கின்றன. சமயம், ஆட்சி, பொருள், புகழ் ஆகிய கூறுகளால் மானுட நேயம் மாசுபட்டுள்ளது. மானுடத் தோற்றத்தின் ஒருங்கிணைப்புத் தன்மையை இன்று இழந்து பெரிதும் துன்புற்றுக் கொண்டுள்ளது.

உணர்வுகள்

உலகில் தோன்றிய உயிர் வகைகளில் முதலாவது தாவரம். இது ஓரறிவுயிர். பின்னர்ப் புழு, வண்டு, ஊர்வன, நடப்பன என்ற வகையில் ஐந்து உணர்கருவிகளோடு பரிணாமமடைந்தவையே ஐயறிவு படைத்த விலங்கினங்கள். ஐயறிவு விலங்கினத்திலிருந்து இயல்பூக்கச் சிறப்பாய் உருவான ஓர் உயர்ந்த சீவ இன நிலைதான் மனிதன். பேரியக்க மண்டலப் பரிணாமம், இறைநிலையில் தொடங்கி, மனிதனுடைய ஆறாவது அறிவில்தான் நிறைவு

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
பச்சையப்பன் கல்லூரி, சென்னை – 600 030

பெற்றிருக்கின்றது. ஆகவே, மனிதனிடம் எல்லாச் சடப் பொருள்களின் சிறப்புகளும் பலகோடி உயிரினங்களின் தன்மைகளும், சிறப்புகளும் அடங்கியுள்ளன. மேலும் இவற்றையெல்லாம் மனத்தை விரித்தும், குவித்தும், கூர்ந்தும் அறியக் கூடிய பேரறிவும் மனிதனிடம் சிறந்து விளங்குகின்றது. எனவே இத்தகைய பேரறிவானது வாழ்க்கை அனுபவங்களால் சிறப்படைய மனித உடலே முழுமையான அமைப்புடைய கருவியாகும்.

இயற்கை வளங்களை உடல் கருவிகளையும் அறிவின் ஆற்றலையும் கொண்டு வாழ்வின் வளங்களான உணவையும் உறைவிடத்தையும், வாழ்க்கைத் தேவைகளையும் நிறைவு செய்து கொள்ள ஏற்ற திறமை அமைந்த சிறந்த உயிரினம்தான் மனிதன். வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொள்வதற்காகப் பிறந்தது முதல் 15 வயது வரையிலும், 60 வயதுக்கு மேல் முடிவு வரையிலும், மத்திய காலங்களில் கூட நோயுற்ற போதும், உறுப்புகள் செயலற்ற போதும் மனிதன் தன் திறமையை மட்டும் நம்பி வாழ முடியாது. பிறர் உதவியைக் கொண்டே தான் வாழ வேண்டும்.

நட்பு நலம்

மேலும் மனித குலத்திற்குத் தேவையான பொருட்கள் எண்ணிறந்தன. அவற்றைச் சமுதாய மக்கள் அனைவருமே ஆங்காங்கே உற்பத்திசெய்து, பலரும் பல நாட்டவரும் பங்கிட்டுக் கொண்டுதான் வாழவேண்டும். இந்தத் தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் சமுதாயத்திலுள்ள மக்கள் எல்லாருடைய நட்பையும் பாதுகாத்துக் கொள்ளும் பொறுப்பினை மனிதன் ஏற்றுக்கொள்ள வேண்டியவனாகிறான். எவருடனும் பகை, வெறுப்பு, பிணக்கு இவை எழாமல் அவன் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும். வரவு செலவுக் கணக்கில் இலாபநட்டம் இருப்பு இவற்றைக் கணிப்பதுபோலத் தனிமனிதன் வாழ்விலும் அவனுக்கு எத்தனை பேர் நண்பர்கள் எத்தனை பேர் பகைவர் என்பதைக் கணக்கெடுத்தால் மனிதவளம் எவ்வளவு அதிகம் என்று எளிதில் உணரலாம். எனவே மனிதனுக்கு நட்பு நலம் என்பது வாழ்வுக்கு மிகவும் உறுதுணை என்பதை அனைவரும் அறிய வேண்டும். ஆகையால் உடல்நலம், மனவளம், மனிதவாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதன என்பதுபோல நட்பு நலனும் மிகவும் தேவையாகும்.

மனிதவாழ்வில், எண்ணம், சொல், செயல் ஆகிய மூன்று வகையான செயல்கள் உள்ளன. அவற்றிற்கேற்ற விளைவுகளும் உண்டு. மீண்டும் மீண்டும் அவற்றையே செய்ய எண்ணமும் செயல்களும் எழும். இவையாவும் பதிவுகளாகி அறிவாட்சித் தரமாக அமைந்துவிடும். அறிவாட்சித் தரமே ஒருவர் வாழ்வில் இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் ஆகிய அனைத்தையும் அளிக்கவல்லது. எனவே ஒவ்வொருவரும் தனது கருமையத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ள வேண்டியது தேவையாகும். எண்ணம் ஆராய்தல் என்னும் தற்சோதனைப் பயிற்சி மூலமும், உடலில் உள்ள நோய்கள் மூலமும் கருமையத்திலுள்ள களங்கங்களை ஓரளவு தெரிந்து கொள்ளலாம். பிறகு அக் களங்கங்களைத் தூய்மை செய்வதற்கு ஆசை சீரமைப்பு, சினம் தவிர்த்தல், கவலையொழித்தல் ஆகிய பயிற்சிகளை மேற்கொண்டு, அப்பயிற்சிகளின் வழியே பெற்ற விளக்கத்தின் படியே வாழ்க்கையை நடத்தி வரவும் வேண்டும். பொதுவான மனிதகுல நீதியான எவருக்கும் துன்பம் எழாத முறையில் செயல்புரிந்து ஒழுக்கமாக வாழ்வதோடு பிறர் துன்பங்களை முடிந்தவரை தனது உடல் பொருள் ஆற்றல் இவற்றைக் கொண்டு போக்கிவரவும் வேண்டும்.

மனிதன் அனுபவமும் முயற்சியும்

மனிதன் இதுவரையில் கண்ட அனுபோகம், அனுபவம் ஆராய்ச்சி இவற்றால் அடைந்த பயன்களை எல்லாம் சேர்த்துப் பார்த்தால் அதில் இன்பம் துன்பம் என்ற இரண்டும் தான் இருக்கின்றன. இவ்விரண்டும் மனிதனுக்கு மாறிமாறிக் கிடைத்துக் கொண்டே இருந்தாலும், அவனுடைய முயற்சி துன்பத்தைக் குறைத்து இன்பத்தைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறது. கூர்ந்து பார்த்தால் இன்பத்தை விடத் துன்பத்தைத்தான் அதிகமாக அடைகிறான்; அனுபவிக் கிறான். அவன் வாழ்க்கையில் இன்ப துன்ப வரைவு கணக்கில் துன்பமே அதிகம் என்று கூறுகிறார் வேதாத்திரி மகரிஷி.

உளநலம், உடல்நலம், பொருளாதாரம், அரசியல், அறிவியல் ஆகிய ஐந்து வகையாலும் அறிவுத் துறையில் முன்னேறி நேர்மை - ஒழுக்கம் என்ற உயர்வையறிந்த மனித இனத்தின் வாழ்வில் நெருக்கடியான பல துன்பங்கள் அடிக்கடித்

தோன்றுகின்றன. அவ்வாறு தோன்றி வருவதற்கு என்ன காரணம் என்று அறிய யூகத்திற்கெட்டிய வரையில் கடந்த காலத்தை நினைவுபடுத்தினால் ஆதியில் ஒன்றுமில்லாமலிருந்து பின் அணுமுதல் அண்டங்கள், உயிர்கள், அறிவு, அறிவின் முன்னேற்றம் என எப்போதும் இலாபமே கூடி வந்திருக்கிறது. அறிவின் மயக்கத்தாலும் சமய சந்தர்ப்பங்களாலும் கொள்ளப்பட்டுத் தொடர்ந்துவரும் சாதி, மதம், நாடு, மொழி, இனம் ஆகிய பேத உணர்ச்சிகளினாலேயும் தனியுடைமைப் பற்றினைக் கொண்டும், உரிமை கொண்டாடி மனத்தைக் குறுக்கிக் கொண்டிருப்பதால் மனிதர்களின் அறிவின் ஆற்றலும் உடலின் ஆற்றலும் பல வழிகளில் பயனற்று வீணாகிப் போவதை நன்றாக அறிய முடிகிறது.

ஓட்டை அல்லது பொத்தல் உள்ள ஒரு பாத்திரத்தில் தண்ணீரைச் சேமித்து வைத்தால், அந்தப் பொத்தலின் அளவிற்குத்தக்கபடி நீர்ப் போக்கு ஏற்பட்டுச் சேமிக்கும் தண்ணீர் குறைந்துவிடுகிறது. அதைப் போலவே எண்ணம், சொல், செயல்களில் கொண்டுள்ள ஒழுக்கமுறைக்கு மாறான பழக்க வழக்கங்களே வாழ்வின் இன்பங்களைக் குறைக்கும் பொத்தல்களாயும், துன்பங்களை அதிகரிக்கச் செய்யும் பொத்தல்களாயும் இருந்து வருகின்றன. இயற்கையாலும் செயற்கையாலும் கிடைக்கும் - ஏற்படும் இன்பங்கள் இந்தப் பொத்தல்கள் மூலம் வீணாகிவிடுகின்றன.

ஐம்புலன்கள், உடல் கருவிகள் இவற்றின் உயர்தரமான அமைப்பைக் கொண்டு, புதுப்புது முறைகளில் பலவிதத் துணைக் கருவிகள், இயந்திரங்கள் செய்துகொண்டு, மனிதர் வாழ்கின்றனர். வாழ்க்கையில் முன்னேற்றம், உளநலம், உடல்நலம், பொருளாதாரம், அரசியல், விஞ்ஞானம் முதலிய ஐந்து துறைகளில் மேலும் மேலும் மேன்மை அடைந்து அறிவும் உயர்ந்து கொண்டே போகிறது. ஆனால் இந்த ஐந்து வகையில் முன்னேற்றம் அடைந்து வரும் மனிதன் இவை ஒன்றுக்கொன்று பாதிக்காமல் ஒன்றால் மற்றவை பாதிக்கப்படாமல் இருக்கும் முறையை இதுவரையில் வகுத்தானிலன். ஆகையால், பொருளாதாரத் துறையில் அடையும் முன்னேற்றம் - உடல்நலம் முதலிய நான்கில் ஒன்றுக்கோ, பலவற்றிற்கோ, சிறிய அளவிலோ,

பேரளவிலோ பாதகமாகத் தெரிகிறது. இப்படியே மற்ற வகைகளிலுள்ள முன்னேற்றங்களும் ஒன்றையொன்று பாதிப்பதால், வாழ்க்கையில் பல சிக்கல்கள் தோன்றித் துன்பங்கள் பெருகியிருக்கின்றன.

இம்மையும் மறுமையும்

உருவெடுத்து அறிவியங்கிக் கண்டஎல்லாம்
உடலழியும் மட்டே தான் நிலைத்திருக்கும்
உருவியக்கி அறிவாற்றல் பயன்படுத்தி
உலகினிலே செய்தசெயல் விளைவனைத்தும்
உருவெடுத்து வாழ்ந்துவரும் மனிதர் வாழ்வில்
உண்டு பண்ணும் நன்மைதீமை அளவிற்கேற்ப,
உருவழிந்துவிட்ட பின்னும் உலகமீது
உள்ளவர்களைத் தொடர்தல் கண்டு வாழ்வோம்

மனிதன், உடலியக்கம் அறிவியக்கம் இவற்றால் கண்ட உணர்ச்சி, அனுபவம், ஆராய்ச்சி, முடிவு ஆகிய இவையெல்லாம் அவன் உடல் அழியுமட்டும் மரணகாலம் வரைக்குமே நிலைத்திருக்கும். ஆனால் உடல் சக்தி, அறிவின் திறமை ஆகியன கொண்டு ஒருவன் உலகத்தில் மனிதரிடையே செய்த செயல்கள் யாவும் மக்கள் வாழ்வில் விளைக்கும் நன்மை தீமைகளுக்கேற்ற படியும், அவற்றின் அளவுக்கு ஏற்றபடியும், அவன் இறந்த பின்னரும் கூட அழியாது மக்களிடையே நிலைத்துத் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

வாழ்ந்தே ஆக வேண்டும்

வாழவேண்டும் என்றெண்ணி மனிதனாக
வந்ததில்லை, எனினும் நாம் பிறந்துவிட்டோம்
வாழவேண்டும் உலகில் ஆயுள்மட்டும்
வாழ்ந்தவர்கள் அனுபவத்தைத் தொடர்ந்துபற்றி
வாழவென்ற உரிமை எல்லோருக்கும் உண்டு
வாழ்வோர்க்குச் சாதகமாய் வாழும் மட்டும்
வாழ உள்ளோர் அனைவருமே ஒன்று கூடி
வகுத்திடுவோம் ஒரு திட்டம் வளமாய் வாழ.

உலகில் யாருமே பிறக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பிறக்கவில்லை. பரிணாம வேக விளைவாய்ப் பிறந்துவிடுகிறார்கள்.

பிறந்துவிட்டபின், ஆயுள் மட்டும் வாழ்ந்தேயாகவேண்டும். உலகில் தொன்றுதொட்டு வாழ்ந்தவர்களின் அனுபவங்களைத் தொடர்ந்தும், இன்றுள்ள மக்களின் ஒற்றுமையையும் கூட்டுழைப்பின் விளைவையும் கொண்டும் ஒவ்வொருவரும் வாழ்ந்தேயாக வேண்டும். இது தேவையாகிவிட்டது. வாழும் மக்களுக்குச் சாதகமாக வாழும் வரையில் வாழவேண்டிய உரிமை இவ்வுலகத்தில் அனைவருக்கும் உண்டு. ஆகையால் வாழ வேண்டிய - வாழ்ந்து கொண்டிருக்கும் அனைவரும் ஒன்று கூடி, ஒருவருக்கொருவர் சாதகமான முறையில் வளமான வாழ்வை எய்த, வாழ, ஒரு பொதுவான சிறந்த திட்டத்தை வகுத்திடுவோம் என்கிறார் வேதாத்திரி மகரிஷி.

ஒவ்வொருவரும் இவ்வுலகில் பிறக்கிறோம். மனித இனம் வாழ்ந்து கண்ட அனுபவம், வாழும் மக்களின் கூட்டுறவு, இவற்றின் துணையும் பயனையும் கொண்டு வாழ்கிறோம். இன்ப துன்பம் அடைகிறோம். பின்னர் இறந்தும் விடுகிறோம். இந்த நியதி எல்லோருக்கும் பொது; இந்த உண்மையை மறக்காது விழிப்புடன் இருக்கும் அறிவின் பண்பாட்டுடன், அறிவையும் உடலையும் பண்படுத்தி - பயன்படுத்தி - உலக வாழ்க்கையைச் சிறந்த முறையில் அனுபவிப்பதற்காக, இயற்கைக்குப் பொருத்தமான வாழ்க்கை முறையை வகுத்து முழு அமைதிபெற முயற்சி செய்வோம்.

பிறந்துவிட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் இந்த உலகம் முழுதும் சொந்தம்; அதில் எங்கும் வாழ அவனுக்கும் உரிமை உண்டு. இந்த உரிமை இறந்துவிடும் வரையில் எல்லோருக்கும் உண்டு. எக்காரணத்தாலும், எவராலும் எவருக்கும் இந்த உரிமையை மறுக்க முடியாது. அதாவது "நீ இந்த ஊரில் இந்த நாட்டில் நுழையவோ, வாழவோ கூடாது" என்று யாராவது யாரையாவது தடுப்பது அநீதியே ஆகும்.

இந்த நீதியையும், மனிதர் வாழ்க்கையின் உரிமையை மறந்துவிட்டு - மனிதனை மனிதன் தடுத்துத் துன்புறுத்தும் அறிவின் மயக்க அநீதியையும், தெளியவைக்க உலக அறிவாளிகள் முயல வேண்டும். மனிதர்கள் அனைவரும் பேதமற்றுச் சிறந்த முறையில் வாழவும் உலகத்தில் எங்கு வேண்டுமானாலும் செல்லவும், தொழில் புரியவும், தகுந்த உலகப் பொது ஆட்சியை

அவர்கள் வகுக்க வேண்டும். பிறப்பது, வாழ்வது, மரிப்பது என்னும் வாழ்க்கைத் தத்துவத்தை நன்றாக ஆராய்ந்து பார்த்தால், இந்த உலகில் எந்தத் தனிப்பட்ட பொருளும் இடமும் ஒரு தனி மனிதனுக்குச் சொந்தம் என்று சொல்வதற்கில்லை. இதுவரையில் மனித இனம் தொன்றுதொட்டு வாழ்ந்து கண்ட அறிவின் ஆராய்ச்சி, அனுபவங்கள், செயல் திறமையின் விளைவுகள் என்பனவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்த பிறகே, இந்த உலகில் எந்தப் பாகத்திலும் மனித இன வாழ்வின் இன்பத்திற்குத் தடை இடையூறு இல்லாத வழியில் வாழ உலகில் பிறந்துவிட்ட ஒவ்வொரு மனிதனுக்கும் உரிமை உண்டு என்பது இங்கு அழுத்தமாகச் சொல்லப்படுகிறது.

உண்டு, உலாவி, உறங்கி, செயலாற்றி, இன்பதுன்பங்களில் உழன்று, சிந்தித்து வாழ்ந்து வரும் அனுபவத்தினால், மேலும் மேலும் அறிவிற்குத் திறமையும் நுட்பமும் கூடிவிட்டன. அத்தகைய அறிவின் திறமையைக் கொண்டு, இனி வாழ்க்கையை மேலும் மேலும் வளம்பெறச் செய்யும் வழிகளைத் தெரிந்து, துன்பங்களைப் போக்க நமது அனுபவங்கள் அனைத்தையும் மூலதனமாகக் கொள்ளவேண்டும். நமது மூலம், முடிவு என்ற இரண்டையும் ஆராய்ந்து, அதற்குத் தக்கபடி வாழவேண்டும். மனித உடலின் அமைப்பு (சுகாதார தத்துவம்), அறிவின் இயல்பு இயக்க விளைவு (மனோதத்துவம்), பூமியின் அமைப்பு (விஞ்ஞானம்) ஆகிய இம்மூன்றை ஒவ்வொன்றாகவும், ஒன்றுடன் ஒன்று பொருத்தியும் ஆராய்ந்து பார்த்து, இனி நாம் ஒரு திட்டம் தயாரிக்க வேண்டும். அதனால் எப்போதும், எந்த இடத்திலும் எவருக்கும் வாழ்க்கையிலே துன்பம் அதிகரிக்காமல், மனித இனம் ஒரே கூட்டுறவு முறையில், மேலான நோக்கத்துடன் உடல் சக்தி, அறிவுத்திறமைகளை ஒன்று சேர்த்து இயக்கி, அவற்றின் விளைவைக் கொண்டு எல்லாருடைய வாழ்க்கைத் தேவைகளையும் நிறைவு செய்யும் திட்டமாக, அது இருக்க வேண்டும்.

பண்பாட்டுச் சீர்மை

மனிதகுல வாழ்வின் தொடக்கம், ஆதி மனிதன் வாழ்க்கைப் பண்பாட்டில் தொடங்கியது. அன்றுமுதல் இன்று வரையில் பல

இலட்சம் ஆண்டுகள் கடந்துவிட்டன. இதனால் அன்று இருந்த வாழ்க்கைப் பண்பாட்டிற்கும், இன்றைய வாழ்க்கைப் பண்பாட்டிற்கும் எவ்வளவோ வேறுபாடுகள் உணரப்படுகின்றன. தேவை உணர்விலும், தொழில் திறனிலும், மனிதவளம் நலம் காக்கும் பொறுப்பிலும், விஞ்ஞான அறிவிலும் மனிதன் காலத்திற்குக் காலம் மாறிக் கொண்டே வருகிறான். ஆயினும் அத்தகைய சூழ்நிலையின் கட்டாயத்திற்கு மனிதவாழ்வின் வளத்தை அல்லது வாழ்க்கைப் பண்பாட்டை மாற்றிக் கொண்டேதான் வரவேண்டும்.

எந்தெந்தக் காலத்தோ இடம் காலம் தேவை
இவையொப்பத் தோன்றியன எத்தனையோ செயல்கள்
அந்தச் செயல் அக்கருத்து இன்று சிந்தனைக்கோ
அனுபவத்திலோ துன்பம் அளிக்குமெனில் தவிர்ப்போம்

இந்த நீதிதான் வாழ்க்கைச் சீர்திருத்தம் என்று கூறப்படுகிறது.

மனித வாழ்வில் ஒவ்வொருவரும் பலப்பல சிக்கல்களாலும், துன்பங்களாலும் வருந்திக் கொண்டிருக்கிறார்கள். இயற்கையின் நியதிகளை அறிந்து கொண்டு செயல் விளைவுகளை அறிந்து பேரறிவால் ஒழுக்கம், கடமை, ஈகை ஆகிய செயல்களால் தன்னை முறைப்படுத்திக் கொண்டு, மனிதன் வாழ முற்பட்டால் வாழ்க்கையில் துன்பங்களும் இல்லை; குறைகளும் இல்லை; ஒருவருக்கொருவர் பகையும் இல்லை. இத்தகைய உண்மைகளை அறிந்துகொண்டு வாழ்வைச் சீரமைத்துக் கொள்ள வேண்டியது ஒவ்வொரு மனிதனுடைய கடமையாகும்; அனைத்து மக்களும் இணைந்த உலக சமுதாயத்தின் கடமையாகும்.

மனிதகுலம் முயன்றால் வாழ்விலே அமைதியும், மகிழ்ச்சியும், மனநிறைவும் உண்டாகும். இந்த அடிப்படையை மனத்தில் வைத்துக் கொண்டு வாழவேண்டும்.

அனுபவம் என்பது நாமே நம் புலன்களைக் கொண்டும், இன்ப துன்பங்களை அனுபவித்தும், வாழ்க்கையில் நேர்முகமாக அறியப்படும் உண்மைகளாகும். இம்மூன்று வழிகளையும் மனிதன் மதித்துப் பின்பற்றி நடக்க வேண்டும்.

மனிதனுக்கு வாழ்வில் செல்வம் ஏழு தேவையாக உள்ளது. உருவ அமைப்பு, குணம், அறிவின் உயர்வு, புகழ், உடல்வலிமை, சுகம், செல்வம் ஆகிய இவை ஏழும் மனிதனுக்குப் பிறந்தது முதல் இறக்கின்ற வரையில் தேவையாக உள்ளன என்றாலும் கூர்ந்து கணித்துப் பார்த்தோமேயானால் மனிதனுக்கு மனிதன் ஏழு சம்பத்துக்களில் பலவேறுபாடுகளைக் கொண்டிருப்பதைக் காண்கிறோம். இங்குதான் மனித மனம் அறிவை நோக்கிப் பயணம் செய்யத் தொடங்குகிறது என்கிறார் வேதாத்திரி மகரிஷி. அறிவை நோக்கிச் செயல்படுமானால் பிற யாவும் ஆரவாரத் தன்மைகள் உடையன என்பதை அறிந்துகொள்ள முடியும்.

எல்லா அறங்களிலும் சிறந்த அறன் மனத்துக்கண் மாசிலனாதல் என்றார் வள்ளுவர். மனம் அறிவை நோக்கிச் செயல்படுவதே உலக அமைதிக்கு அடிப்படை என்கிறார் மகரிஷி.

உலக அமைதிக்குப் பெண்களின் பங்களிப்பு

கி. மைதிலி

உலகம் அமைதியாக இயங்க வேண்டும்; இயற்கை நிலையிலிருந்து மாறுபடாது இருக்க வேண்டும். அதனால் மக்கள் வாழ்வு மகிழ்வுடையதாகும். மக்கள் இயற்கை நிலையில் இருந்து விலகிச் செயற்கையான வாழ்வு முறைகளுக்கு மாறிக் கொண்டு இருக்கிறார்கள். இவற்றால் இயற்கை சிதைகிறது; மாறுபடுகிறது. மக்களுக்கு நெருக்கடி முற்றுகிறது. நோய் நொடியுடன் போர் பற்றிய அச்சமும் மிகுந்து வருகின்றது. மீண்டும் இயற்கையோடு இயைந்து வாழ, உலக அமைதி சிறந்து விளங்க மக்கள் முனைய வேண்டும். ஆடவர்க்கென்று, பெண்களுக்கென்று, குழந்தைகளுக்கென்று பல கடமைகள் உள்ளன. பல்வேறு பொறுப்புகளில் இருப்போர் தம் பொறுப்பு களோடும் பொறுப்புகளின் வழியேயும் உலக அமைதிக்காகத் தியாகங்கள், பணிகள் ஆற்றவேண்டியவர்களாக இருக்கின்றனர்.

உலகின் சரிபாதியாக விளங்கும் பெண்கள் உலக அமைதிக்குத் தம் பங்காக ஆற்றவேண்டியவற்றை ஆராய்ந்து உரைத்திருக்கிறார் யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி. உலக அமைதிக்கு முதலில் பெண்கள் ஒரு தியாகம் செய்ய வேண்டும் என்கிறார். அந்தத் தியாகத்தால் உலக அமைதியின் தொடக்கத்திற்கு உதவுவதோடு தமக்கும் விடுதலை கிட்டுவதை உணர்வார்கள் என்கிறார். பெண் விடுதலைக்குத் தேவையான அந்தத் தியாகம் தாம் பெற்ற குழந்தைகளைப் பொதுச் சொத்தாக்குதல்; அக்குழந்தைகளைப் பொது இடத்தில் வளர்க்க உடன்படல்; தம் நோயோடு குழந்தைகளை வளர்க்காதிருத்தல்; குழந்தைகளை வளர்க்கும் முறையில் ஆர்வத்தை விட முடியவில்லையானால் அதனை விரிவாக்கிப் பல

இணைப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை – 600 030.

குழந்தைகளையும் வளர்க்கிற வாழ்க்கைத் தொழிலாக்கிக் கொள்ளுதல் ஆகிய வழிகளைக் காட்டுகின்றார். வளர்க்கிற முறையையும் விளக்கி இருக்கிறார். குழந்தைகளின் உடலுக்கும் அறிவுக்கும் தேவையான அனுபோகங்கள் அனைவருக்கும் சமமாக வேண்டும் என்னும் நோக்கத்துடன் வளர்க்க வேண்டும் என்று கூறுகின்றார். இவற்றை ஆராய முற்படுகின்றது இக்கட்டுரை.

பெண்ணியம் பேசுபவர்

தொடக்கக்காலப் பெண்ணினத்தின் அடிமைத்தனத்தையும் அவலத்தையும் கண்ட இன்றைய பெண்ணினம் தேவையற்ற மரபுகளைப் புறம்தள்ளித் தற்காலச் சூழலுக்கும் தேவைக்கும் ஏற்புடையவற்றைத் தேடுகின்றது. அறிஞர் பலரும் பெண்ணினத்தின் பெருமைகளையும் அவர்களின் மேம்பாட்டுக்கான வழிகளையும் ஆராய்ந்து கூறியுள்ளனர். அவர்களுள் வேதாத்திரி மகரிஷி குறிப்பிடத்தக்கவர். அவரின் 'வாழ்க வளமுடன்', 'வாழ்க வையகம்' என்னும் அருள்வாக்கு பெண்ணியத்தை உள்ளடக்கியது. 'பெண்ணியம்' என்னும் முத்திரையில்லாமல் பெண்ணியவாதம் பேசுபவர் அவர்.

மனிதகுல வளர்ச்சிக்கு ஆணும், பெண்ணும் வேறுபட்ட உடற்கூறுகளோடு படைக்கப்பட்டுள்ளனர். "பேருலகில் வாழுகின்ற மக்கள் அனைவரும் பெண்ணினத்தின் அன்பளிப்பே" என்று பெண்மையின் தாய்மை வடிவைப் போற்றுகிறார்.

இன்று மகளிர் முன்னேற்றத்திற்குப் பாடுபடும் பெண்ணிய அமைப்புகள் பல தோன்றி உள்ளன. அவ்வமைப்புகளின் பெண்ணியச் சிந்தனைக் கருத்துகளோடு வேதாத்திரி மகரிஷியின் மகளிர் மேம்பாட்டுச் சிந்தனையும் கருத்துகளும் பெரிதும் ஒத்துள்ளன. "பெண்ணானோம் பெண்மையோம்" என்று ஆழ்வார்கள் பாடுவதைப்போன்று பெண்குலத்தின் பல துன்பங்களை மகரிஷி உணர்வுபூர்வமாக அணுகியுள்ளார். பெண்ணியம் என்பதற்குப் பல விளக்கங்களை ஆராய்ந்து அது சமுதாயத்தையே மாற்றி அமைக்கின்றது என்று குறிப்பிடுகிறார். சமுதாயத்தில் பெண்களின் நிலையை மேம்படுத்தும் சமுதாய இயக்கமாக மகரிஷி அவர்களின் அணுகுமுறை அமைந்துள்ளது.

பெண்ணுக்குக் கல்வி, பொருளாதார உரிமை வேண்டும் எனப் பெண்ணியக் கோட்பாடுகள் வற்புறுத்துகின்றன. திருமண வாழ்க்கையில் இன்பத்தைத் தவிர்த்துப் பெண்கள் துன்பப் படுவது, உணவு, உடை என்னும் அடிப்படைத் தேவைக்கான அடிமை வாழ்க்கை வாழ்வதை மகரிஷி விரும்பவில்லை.

..... ஒருபெண் தன் உடலினையே அர்ப்பணித்து
உணவு உடை வாடகைபோல் பெற்றுலாவும்
ஒரு இழிந்த அடிமை நிலை பெண்ணினத்திற்கு
உலகினிலே இனி வேண்டாம்; ஒவ்வோர் பெண்ணும்
ஒரு தொழிலைச் செய்து பொருள் ஈட்டிக் காத்து
உண்டுடுத்துக் கடமை செய்யும் உரிமைவேண்டும்

என்பது மகளிருக்கு அவர் வேண்டும் பொருளாதாரச் சுதந்திரமாகும்.

நீக்க வேண்டிய சடங்கு

மண், பெண், பொன் ஆகிய மூவாசைகளைப் பற்றியும் அவற்றைத் துறப்பது பற்றியும் மகரிஷிக்கு மாற்றுக் கருத்து உண்டு. பொன்னாசை பல சிக்கலுக்கு மூலம் என்பதால் அதைத் தவிர்த்துவிட்டு, மண், பெண் இரண்டையும் முறையாகப் பயன்படுத்த வற்புறுத்துகிறார். 'பெண் இல்லை எனில் பேசும் நீயே ஏது?' என்ற வினாவை அவர் முன்வைத்து ஒரு சடப்பொருள் போன்று பெண்ணைக் கன்னிகாதானமாகக் கொடுப்பது கொடுமை என்று கூறுவார்.

மணவினை நிகழும்போது மகள் தனைப் பெற்றோர் நின்று
கணவனென் றொருவனுக்குக் கையினில் நீரை வார்த்து
பணமதை ஈந்தோ பெற்றோ பலர்காணத் தத்தம் செய்வார்
குணமெனும் நிலை கண்டோரும் இதைக் கொடுமை
என்றெண்ணவில்லை

மதச் சடங்கு மீண்டும் மீண்டும் பெண்ணை ஓர் அடிமைப் பொருளாக்குகின்றது. அந்த மரபுக் கட்டுகளிலிருந்து பெண்ணினம் விடுதலையடைய வேண்டும் என்ற மகரிஷியின் விழைவை இத்தொடர்கள் வெளிப்படுத்துகின்றன.

பொதுவில் வைப்போம்

கற்புநெறியை ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருங்கே வலியுறுத்துகிறார். மறுமணம் செய்து கொள்வதில் ஆண்-பெண் சமத்துவம் தேவை என்பதை,

ஆண்களோ பெண்டிழந்தால் அவர் மறுமணம் கொள்வார்
வீண்பழி சொல்வார் இந்த விதமதைப் பெண்கள் செய்தால்

என்று பெண்களுக்காக வாதம் செய்கிறார். பெண்ணை ஒதுக்குகின்ற துறவறத்திற்கு மாறாய்ப் "பெற்றோரை, பிறந்த அகத்தை, பிறந்த ஊரை விட்டுப்பிரிந்து வந்து, பெருநோக்கில் கடமை அறம் ஆற்றுகின்ற" பெண் பற்றற்ற துறவி போன்றுதான் செயல்படுகிறாள் என்பது மகரிஷியின் வாதம். "இல்லறத்தைத் திறமையுடன் நடத்த ஏற்றதொரு எண்ணநிலையே துறவறம்" என்று தாம் உணர்ந்ததை உலகுக்கு உணர்த்தவும் செய்கின்றார். உலகச் சமாதானத்துக்குப் பெண்கள் தியாகம் செய்யவும், தொண்டு செய்யவும் வலியுறுத்துகின்றார்.

தானே ஏற்படுத்திக் கொண்ட தடையிலிருந்து விடுபடல்

பெண்ணினம் தனது ஆளுமையை உணர்வதற்குத் தடையாக அமைவது சமூகச் சூழல். பதினெட்டாம் நூற்றாண்டு இறுதியில் பெண்ணியப் பார்வையின் முன்னோடியாகச் செயல்பட்ட மேரிவுல்ஸ்டன் கிராஃப்டின் கருத்தை ஒட்டி மகரிஷி "எந்தக் காலம் வரை தன்னைக் கவர்ச்சியாக அழகுபடுத்திக் கொண்டு ஆண்களைக் கவரவேண்டும் என்ற எண்ணமும் அதற்குரிய நடையுடை பாவனைகள் நகைகள் அணிவதும் இருக்கின்றனவோ அக்காலம் வரை சம உரிமை ஏற்படுவது சிரமம்" என்று குறிப்பது எண்ணிப் பார்க்க வேண்டிய ஒன்று. தானே விதித்துக் கொண்ட தடையிலிருந்து விடுபட வேண்டும். பெண்ணியவாதிகள் வலியுறுத்துகின்ற கல்வி, பொருளாதாரம், திருமணம், மறுமணம், சொத்துரிமை ஆகியவற்றில் சமஉரிமை என்பதை மகரிஷியும் வற்புறுத்துகின்றார். இவற்றை இயல்பாக ஏற்றுக்கொள்ளும் ஒரு சமூக மாற்றமே அவரின் விருப்பம். சமூகமாற்றம் அடையும்போது உலக மாற்றமும் உலகச் சமாதானமும் தாமே பிறந்துவிடும். பெண்கள் சமஉரிமை பெற்றுப் பெண் விடுதலையும் கிடைத்துவிடும்.

ஆண் பெண் ஒருவர் மதிப்பை ஒருவர் உணர்ந்து, அதற்கு ஏற்றவாறு ஒத்தும் உதவியும் வாழ வேண்டும். இந்த நிலை சமுதாயத்தில் பண்பாடாக வளரப்பெண்ணின் பெருமையையும் இயற்கையாக அவர்களிடம் அமைந்துள்ள மதிப்புகளையும் ஆண் உணர வேண்டும். பெண்ணும் உணர வேண்டும்.

பெண் தனக்கு இயற்கையாக அமைந்துள்ள உடலமைவுக்கு ஏற்ப வாழ்க்கையில் உள்ள தன் கடமை, பொறுப்பு இவற்றை உணர வேண்டும். ஆண், பெண்மையின் பெருமதிப்பை உணர்ந்து அதற்கு ஏற்றவாறு தன் செயலையும் மனநிலையையும் உயர்த்திக் கொள்ள வேண்டும். ஆண் பெண் இருவரில் பெண்மையின் மதிப்பை உணர வேண்டிய பொறுப்பு ஆணுக்கு இக்காலத்தில் அதிகம் தேவைப்படுகிறது.

எல்லையற்ற ஆற்றல் உள்ள இறைவன் திருவுள்ளமென்ன!
எவ்வுயிரும் தோன்றுவதற்கு ஏற்றதொரு திருவழியாய்
வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே
வாழுகின்ற மக்களில் இவ்வளவுமறிந்தோர்
எத்தனைபேர்?

என வினாவாகத் தொடுத்து விடை உணர வைக்கின்றார்.

எந்த உயிரினமானாலும் பெண் வயிற்றில் உருவாகி அந்தப் பெண்ணின் உடலில் ஓடுகின்ற இரத்தத்தையே தனது உடலுக்கு வேண்டிய ஏழு தாதுக்களாக மாற்றிக் கொண்டு, பிறந்த பின்னும் அந்தப் பெண் என்ற தாயின் பாதுகாப்பில், அரவணைப்பில் வாழ்ந்து வரும் உண்மையினைச் சிந்தித்து உணர்ந்து நன்றியுணர்வோடு போற்றி வாழ வேண்டும்.

பொதுவாக மனித இனத்தின் வாழ்வுக்கு வேண்டிய பொருட்கள், வளங்கள் அனைத்தும் பெண்கள் மூலமே கிடைப்பதையும், அதன் மூலம் சமுதாயம் தொடர்ந்து நலம் பெற்று வாழ்வதையும் உணர வேண்டும்.

பெண்ணிடமே மிகுதி

பொதுவாக மனிதனுக்கு அன்பும் கருணையும் இறைவனால் அளிக்கப்பட்ட பெருநிதி. அன்பு என்பது தனக்கு ஒத்ததாக உள்ளதைத் தன்னோடு ஒத்ததாக இணைத்துக் கொள்வது. கருணை என்பது ஓர் உயிர் வாழ்வதற்குரிய எல்லா வசதிகளையும் அளித்துக் கொண்டே இருக்கின்ற செயல். இத்தகைய அன்பும் கருணையும் மனிதனுக்குப் பொது என்றாலும், பெண்களிடமே அதிகமாக அவை ஊற்றெடுத்து அவர்கள் வாழ்க்கை நெறியாகவே அமைந்து இருக்கின்றன.

இத்தகைய அன்பாலும் கருணையாலும் ஒரு பெண் தனக்குரிய பொருட்களையும், தன் ஆற்றல்களையும் பிறருக்கு, அன்போடு அளித்துக் கொண்டே இருக்கிறாள். இந்த அன்பின் உச்சகட்ட நிலைதன்னைத் தன் வாழ்க்கைத் துணைவருக்கு அர்ப்பணித்து விடுகிறாள். இந்த மனோ நிலையைத் தங்களுக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டு, எண்ணிறந்த ஆண்கள், பெண்களை அடிமைகளாக நினைப்பதும் நடத்துவதுமான போக்கானது மனிதப் பண்பாட்டினை உருக்குலைத்து விடுகிறது.

ஆட்சிமுறையிலும் திருத்தம்

வாழ்வில் எந்த ஒரு மனிதனும் ஏழ்மை, அறியாமை, வன்முறை, பறித்துண்ணல் முதலிய காரணங்களால் துன்பப்படாது பார்த்துக் கொள்ள வேண்டியது குடியாட்சி முறையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு வாழுகின்ற எல்லா நாடுகளின் பொறுப்புமாகும். ஆட்சியில் அனைவருக்கும் சம பங்கு உண்டு என்பதை வரையறை செய்கின்றது குடியாட்சி முறை. இக்காலத்தில் குடியாட்சி முறை செயல்படுவதற்கு அரசியல் கட்சிகளை ஏற்படுத்திக் கொள்கின்றார்கள்.

கணவன் மனைவி உறவானது அன்பும் கருணையும் கொண்டதாக இருக்க வேண்டுமானால், சமூகத்தில் உள்ள ஆட்சி முறை கூட உணர்ந்து தெளிந்த அறிஞர்களைக் கொண்டதாகவே இருக்க வேண்டும். பெண்ணினத்தின் பெருமையை உணர்ந்து, மனித குலத்தின் பண்பாட்டை உயர்த்த நினைக்கின்ற சிந்தனையாளர்கள் எல்லாம் ஆட்சி முறையைச் சீர்திருத்த வழிகாண வேண்டும்.

வாழத்தெரியாதோர் பெரும்பாலும் வாழ்நாட்டில்
ஆளத்தெரியாதோர் ஆட்சியே நடைபெறும்
கோழை, கயவர், கொலைகள், தடியர்கள்
ஏழை, நோயுற்றோர் எங்குமே காட்சியாம்

என்கிறார் மகரிஷி. இவர்களிடமிருக்கிற ஆட்சி மாறவேண்டும்.

மக்களாட்சி முறை மனித இனத்திற்கு மிகவும் சிறந்தது, உயர்ந்தது என்றாலும் ஆட்சி முறையில் வாழ்வில் துன்பங்கள் மலிந்துவருகின்றன. எனவே பெண்களின் பெருமையை உணர்ந்து எதிர்காலத்தில் மக்கள் குலம் அமைதியாக வாழ வேண்டும்

என்றால் அறிஞர்களெல்லாம் கூடிப் பெண்ணினத்தின் பெருமையினை உணர்ந்துகொள்கின்ற அறச்செயலைப் போற்றி மதிக்க வேண்டும்.

பெண் வயிற்றி லுருவாகிப்
பெண் பாலுண்டே வளர்ந்தாய்
பெண் துணையால் வாழ்கின்றாய்
பெண்ணின் பெருமை உணர்

என்று கடிந்தே பேசுகிறார் மகரிஷி.

பொது வளர்ப்பு முறை

பெண் பெருமைப்படுத்தப்பட்டு முன்னேற்றமடைந்தால் சமூக மேம்பாடு, உலகச் சமாதானம் தாமே தோன்றிவிடும் என்று குறிப்பிடுகிறார். எதிர்கால உலகச் சமாதான வித்தாய் திகழ்வது குழந்தை. அக்குழந்தை வளர்ப்பில் மாற்றத்தை ஏற்படுத்தவும் உலக அமைதியின் தொடக்கத்திற்கு உதவி செய்யவும் நமக்கு விடுதலை கிட்டவும் பெண் தான் பெற்ற குழந்தைகளைப் பொதுச் சொத்தாக்குவதற்குத் தன் பாசத்தைத் துறந்து பெண் விடுதலைக்கும் உரியதான அந்தத் தியாகத்தைச் செய்ய வேண்டும்.

பிறக்கின்ற குழந்தைகளைப் பொதுச் சொத்தாக்கி,
பெற்றோர் மக்கள் பாசம் எழாமல் செய்து,
இறக்கின்றோர் சொத்தும், முதியோர், நோயுற்றோர்,
இவர்களையும் பொது ஆட்சி ஏற்றுக்கொண்டு,
அறப்பணிக்கே தகுதியாகக் குழந்தைகட்கு
அறிவு, தொழில், கல்விகளைப் புகட்டவேண்டும்

என்கிறார். இந்த மனநிலை ஒவ்வொருவர்க்கும் வாய்க்குமானால் மக்கள் முந்தைய இயற்கை நிலைக்குத் திரும்புவர்.

சாதி, மதம், இனம், மொழி, செல்வம் இவற்றைப் பற்றி எழும் பேத உணர்ச்சிகள் அனைத்தும், பெற்றோர்களே குழந்தைகளை வளர்ப்பதால் தொடர்ந்து வந்துகொண்டு இருக்கின்றன. பெற்றவர்களின் பாசத்தால் எண்ணிறந்த குழந்தைகள் சமூக வாழ்விற்குப் பயனற்றவர்களாக ஆகி விடுகிறார்கள்.

அலங்காரத்திலும் அதிகச் சுவையிலும் பழக்கி விடப்பட்ட குழந்தைகளின் நெஞ்சு வழியே அறிவு இழக்கப்படுகிறது. உடல் உழைப்புப் பழக்கமின்மையால், அதை அக்குழந்தைகள் துன்பமாகவே கருதுகிறார்கள். அவர்களுக்குள் இத்தகைய மனப்பான்மையும், சோம்பேறித்தனமும் வளர்கின்றன. இத்தகையோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போனால், உலகம் எந்த நிலை அடையும் என்று ஆராய்ந்தால், தனி மனிதன் வாழ்க்கையிலும் உலக மக்களின் கூட்டு வாழ்விலும் அமைதி இராது. ஆகையால் குழந்தை பொது வளர்ப்பு முறையில் வளர்க்கப்பட வேண்டும் என்பதை மகரிஷி வலியுறுத்துகிறார்.

அறிவு உடல் தத்துவமறிந்த அறிஞர்களின் திட்டப்படி பொது முறையில் வளரும் குழந்தையால்தான் எதிர்காலத்தில் மனித இனம் சிறப்புற்று வாழ முடியும் என உறுதியாக நம்புகிறார்.

ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்றுத் தந்து,
உலகிலுள்ள குழந்தைகளை உமதாய்க்கொண்டு

வாழ்வதே சிறந்தது என்கிறார்.

ஒன்று இரண்டு குழந்தைகளைப் பெற்றுச் சமூகத்துக்குக் கொடுத்துவிட வேண்டும். உலகில் உள்ள குழந்தைகளை எல்லாம் தம்முடையனவாகக் கருதிக் குழந்தைகளை வளர்க்கும் முறையில் ஆர்வத்தைப் பெருக்கிக் கொள்ளவும் பல குழந்தைகளை வளர்ப்பதையே வாழ்க்கைத் தொழிலாக்கிக் கொள்ளவும் வழிகளைக் காட்டுகின்றார்.

இதனால் உலக மக்கள் எல்லாரும் அமைதியாக, அன்பாக, இன்பமாக, வாழவும் மனித இனத்தின் இறுதி இலட்சியமான உலகச் சமாதானமும் பற்றற்ற வாழ்வும் பெறலாம். இந்த நல்விளைவுகளைக் கருத்தில் கொண்டு, பெண்கள் தம்மக்கள் என்ற பாசத்தைத் தியாகம் செய்ய வேண்டும் என்று பல இடங்களிலும் வற்புறுத்துகின்றார்.

இன்பமும் அமைதியும்

மாலை நேரங்களிலே எவரென்றாலும்,
மழலை மொழிக் குழந்தைகளின் இருப்பிடம் ஆம்–

சோலை சூழ்நிலையங்கட்கென்றும் சென்று,
சுதந்திரமாய்க் குழந்தைகளோடு ஆடலாகும்

'தன் குழந்தை' என்ற குறுகிய நினைவை ஒழிப்பது தவிரக் குழந்தைகளிடம் பெற்றோர்களுக்கு இருக்க வேண்டிய பொறுப்பையும் கடமையையும் மகரிஷி அவர்கள் எந்த வகையிலும் குறைத்துக் கொள்ள அவர்களை வற்புறுத்தவில்லை.

நல்ல முறையில் குழந்தைகளை வளர்க்க
நாடனைத்தும் சேர்ந்து ஒருதிட்டம் கண்டால்,
அல்லல் படும் தாய்மார்கட் கமைதி கிட்டும்

குழந்தைகளைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்கு, உலக நாடுகள் அனைத்தும் சேர்ந்து ஒரு நல்ல உயர்வான திட்டம் வகுத்துவிட்டால், அன்றுதான் பெண்ணினத்திற்கு வாழ்வில் அமைதி கிடைக்கும்.

பொது வளர்ப்புமுறை வெற்றிபெறும்

பெண்கள் சிலர் இன்று குழந்தையைக் கையில் எடுத்துக் கொண்டு வெளியே போவதற்குக் கூடக் கூச்சப்படுகிறார்கள். சிலர் தாய்ப்பாலே கொடுக்காமல் வளர்க்கிறார்கள். பல சூழ்நிலைகளால் பிள்ளைகளை வளர்ப்பது சுமையாகவே தாய்மார்க்குப் பல இடங்களில் இருக்கிறது.

தாய்-சேய் பாசம் பலரிடம் குறைந்து வருவதைக் கொண்டு சிந்தித்தால், எதிர்காலப் பெண்கள் அடுத்து வரும் தலைமுறை யிலேயே இந்தத் திட்டத்தை மனம் ஒத்து ஏற்றுக் கொள்வார்கள் என்று நம்புகின்றார்.

முடிவுரை

உலகம் அமைதிகயாக இயங்குவதற்குப் பெண்களால்தான் முடியும் என உறுதியாக நம்புகின்றார். அக்கருத்தினைத் துணிவாகவும் முறையாகவும் விவரித்துள்ளார் வேதாத்திரி மகரிஷி அவர்கள். இயற்கையோடு இயைந்த வாழ்வைப் பெரிதும் பின்பற்றுபவர் பெண்டிரே என்பதும் அவர்தம் கருத்தாகும். தியாக வாழ்வை வாழ்வதும் துறவுநிலையில் வாழ்வதும் பெண்டிர் என்பன அவரால் உணர்ந்து உரைக்கப்பட்ட கருத்துகளாகும். பெண்ணியம் என்னும் தொடரை ஆளாமல் பெண்ணியம் பேசுபவர் அவர்.

கன்னிகாதானம் முதலிய சடங்குகளைக் கொடுமையானவை எனக் கூறி அவற்றை நீக்க வேண்டும் என வலியுறுத்துகின்றார். இல்லறத்தைத் திறமையுடன் நடத்த ஏற்றதொரு எண்ண நிலையே துறவறம் என்னும் சிந்தனையை முன்வைத்து இல்லறத்தில் இருந்துகொண்டே துறவறம் மேற்கொள்ளும் பழைய நெறிக்குரிய உண்மை விளக்கத்தினைக் கண்டறிந்து கூறியிருக்கின்றார். பெண்தன் ஆளுமையை உணர வேண்டும்; உணர்ந்தால் உலக அமைதிக்குச் சரியாகப் பங்காற்ற முடியும்; அதற்குத் தாமே ஏற்படுத்திக் கொண்ட தடையிலிருந்து பெண்கள் விடுபட வேண்டும் எனக் கூறுகிறார். அன்பும் இரக்கமும் பெண்களிடமே மிகுதியாக உள்ளமையை எடுத்துக்காட்டி ஆட்சிமுறையிலும் இவை அமையப் பெண்களே உதவ முடியும் என விளக்குகின்றார். குழந்தைகளைப் பொது வளர்ப்பு முறையில் வளர்க்கப் பெண்கள் துணிவார்களானால் உலக அமைதி மிக எளிதில் கைகூடும் என்னும் கருத்தினை முன்மொழிந்திருக்கின்றார். தன் குழந்தையாய் இன்பமும் அமைதியும் கிட்டுவதை உணரும் பெண்கள் எல்லாக் குழந்தைகளாலும் கிட்டும் என்பதை விளங்கிக் கொள்ள வேண்டுகிறார். இன்றைய சூழலில் தனித்தனியே தாயர்தம் பிள்ளைகளை வளர்ப்பதில் இடர்ப்படுவதைக் காட்டி, பொது வளர்ப்பு முறை விரைவில் வெற்றிபெறும் என்றும் உறுதிபடக் கூறுகின்றார். அவர்தம் ஆய்வுச் சிந்தனையைப் போற்றும் முதற்கட்டம் வருமானால் பிற எளிதில் அமையும்.

திருக்குறளில் வேதாத்திரி மகரிஷியின் ஈர்ப்பு ஆற்றல் கோட்பாடு

முனைவர் சா. வளவன்

வேதாத்திரி மகரிஷி அவர்கள் வாழ்க்கை நெறியை வகுப்பதில் சிறந்து விளங்குகின்றார். சிந்தனையாற்றல் மிக்க பெரியோர் தக்க வழிகளைக் காட்டி வந்துள்ளனர். நாம் வாழும் காலத்தும் வழிகாட்டக்கூடிய பெருமக்கள் இருப்பது பெருமைக் குரியதாகும். வாழ்க்கை நெறியைப் பலரும் விளக்கிய பின்பும் நெருக்கடிகள் வாழ்வில் இருக்கின்றனவே என்னும் வினா நெருடுவது உண்டு. ஆய்வு, தெளிவு, பயிற்சி, வெற்றி ஆகிய நான்கு வகையிலும் திறன் பெற்ற அறிஞர்கள் கூறும் வழிகளை அவரளவு உயர்வதற்கு முயல்கின்றவர் அந்நெறிக்குச் செல்லமுடியும். மெய்ப் பொருளை விளங்கிக் கொள்வதிலேயே இடையூறு நேர்ந்துவிடக் கூடும். அதனால் நெருக்கடிக்குத் தீர்வில்லாமல் மக்கள் அல்லலுறுகின்றனர். மனமும் அறிவும் இரு எல்லைகளில் நிற்பதால் நெருக்கடிகள் மிகுகின்றன. மனம் அறிவைநோக்கிச் செல்லவேண்டும் என்னும் கொள்கையுடைய மகரிஷி, திருக்குறள் வாழ்க்கை நெறியை வகுத்த நூல்களுள் தலைசிறந்தது என்னும் கருத்துடையவர். திருக்குறளை முறையாக அறிந்தாலே உலக வாழ்க்கை அமைதிப்படும்; இன்பம் சிறக்கும் என உறுதியாக நம்புகின்றார்.

மெய்ப்பொருள் விளக்கங்களைக் கொண்டவை முதல் நூல்களாகும். அவற்றை வேதங்கள் என்பர். வாழ்க்கை அனுபவங்களைக் கூறுவனவற்றை வழிநூல்கள் என்பர். அவை சாத்திரங்களாகும். மெய்ப்பொருள் விளக்கநிலையால் முழுமை பெற்ற அகன்ற அறிவோடு வாழ்க்கை அனுபவங்களைச் சேர்ந்து வாழ்க்கை நெறியை வகுக்கும் நூல்களே இன்றைய நிலையில்

இணைப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை – 600 030

மக்களுக்குத் தேவையானவையாகும். அத்தகுநூல்கள் உலகிலேயே மிகச் சிலவே உள்ளன. அவற்றுள் உயர்ந்த நூல் திருக்குறள் என்று உறுதிபடக் கூறுபவர் மகரிஷி. அவர் சில குறட்பாக்களுக்கு மட்டும் உரைகண்டுள்ளார். அவற்றுள் ஒரு குறளுக்குக் காந்த ஆற்றல் கோட்பாட்டினைக் கொண்டு மிகச் சிறந்த விளக்கம் அக்குறளுக்கு வழங்கிட முனைந்துள்ளார். அதனை விளக்கிக் கொள்ள முயன்றதின் விளைவே இக்கட்டுரை.

சுவையொளி ஊறுஓசை நாற்றமென்று ஐந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு

என்னும் குறள் மகரிஷிக்கு மிகப் பெரும் கட்டுரையை எழுத வைத்துள்ளது. "சுத்தவெளியாக சிவமாக அமர்ந்து அனைத்தையும் தாங்கிக் கொண்டிருக்கும் அருட்பேராற்றலே தனக்குள் அறிவாக விளங்குகிறது" என்னும் உண்மையை இக்குறள் விளக்குவதாக மகரிஷி கருதுகின்றார். சித்தர்கள் இந்த உண்மையை உணர்ந்திருந்தனர். அதனை வெளிப்படுத்தினர். திருமூலரோடு திருவள்ளுவர், தாயுமானவர், வள்ளலார் ஆகியோரும் இந்த உண்மையை உரைத்தனர் என்கின்றனர். தம் அனுபவத்தைக் கூட்டித் தாமும் உரைக்கத் தொடங்கியுள்ளார். மனத்தை அறிவுநிலைக்குக் கொண்டு சென்று நம்மை உணருமாறு செய்யும் முயற்சியை மேற்கொண்டிருக்கின்றார். இந்த உண்மை நம்மால் உணரப்படுமானால் வாழ்க்கை நெறியை உணர்ந்து வாழத் தொடங்கி உலகினை அமைதியுறச் செய்ய முடியும். அதற்கான பெருமுயற்சியில் மகரிஷி தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்றார்.

மேற்குறித்த குறளுக்கு விளக்கம் எழுதுமுன் மெய்ப்பொருள், விண், காந்தம், அறிவு, பருவுடல் ஆகிய ஐந்து சொற்களுக்கு விளக்கம் தர முனைகின்றார். இவை தத்துவச் சொற்கள் என உணர்ந்து விளங்கிக் கொண்டு மனத்தில் பதித்துக் கொள்ள வலியுறுத்துகின்றார். மெய்ப்பொருள் என்பதே மறைபொருள். இம்மெய்பொருளை மனம் எவ்வாறு உணர வேண்டும் என்றால் 'சுத்தவெளி' என்று உணர வேண்டும். இந்தச் சுத்தவெளி எல்லையில்லாதது; முழுமுதற்பொருள்; ஆதி; அநாதி; இறைநிலை என்றும் வழங்கப்பெறும். இந்தச் சுத்த வெளியுள் அடங்கியிருப்பன சிவம், பூரணம், பிரம்மம், உண்மை, நித்தியம், முற்றறிவு ஆகியன. இவற்றின் வலிமைகளைக் கொண்டிருப்பது சுத்தவெளி.

விண்ணுக்குள்ளும் விண்களுக்கு இடையேயும் பேரியக்க மண்டலத்திலும் இது நிறைந்திருக்கும். பேரியக்க மண்டலத் தோற்றங்களை எல்லாப் பக்கத்திலிருந்தும் அழுத்துவது. அழுத்துவதோடு தான் இயங்கிக் கொண்டிருப்பதும் இந்தச் சுத்தவெளி. இதனுள் அறிவு, விரைவு ஆகிய இரு தன்மைகள் உள்ளன. இவற்றையெல்லாம் மனத்தால் உணர்ந்து கொள்ள வேண்டும்.

விண் என்பது மிகமிக நுட்பமான ஒரு கூறாகும். இது இயக்க மூலக் கூறாகும். இதைவிடச் சிறியது இல்லை. ஆனால் பேரியக்க மண்டலத்தின் எல்லா இரகசியங்களையும் அடக்கிக் கொண்டிருப்பது. இத்துகள்கள் இணைந்து தொகுப்பாகத் தோன்றும். விண் என்னும் இந்தக் கூறினை (துகளினை) உயிர், சக்தி, சூக்குமம், பரமாணு, ஆகாசம், ஆவி ஆகிய பெயர்களால் வழங்கி வருகின்றனர். முன்னர்க் குறித்த மெய்ப்பொருள் என்னும் இருப்பு நிலையிலிருந்து பிளவுபட்டு வரும் கூறு இது. சுழல் விரைவோடு இயங்குவது. மிக நுண்ணிய சூழல் அலை இது. விரைவு என்னும் தன்மை மெய்ப்பொருளில் அடங்கியிருந்தது; விண் என்னும் துகளில் பூரித்து எழுந்தது. பேரியக்க மண்டலத் தோற்றங்களை அழுத்துவதும் சுத்தவெளியே என்பதால் விண் எனும் துகள் பிளவுபட்டு வந்தாலும் சுத்தவெளியின் அழுத்தத்தில் இருந்து விடுபடமுடியாது. அதன் அழுத்தத்தால் விரைவாகவும் இடைவிடாமலும் சுழன்று கொண்டே இருக்கும் அந்த விண் எனும் கூறு சுத்த வெளியிலிருந்து பிளவுபட்டு ஒரு விண் மட்டும் வருவதில்லை; பல கூறுகள் வரும். ஒவ்வொன்றும் சுத்தவெளியின் அழுத்தத்தால் சுழன்றுகொண்டே இருக்கும். ஒவ்வொரு கூறின் சுழற்சியால் அலை பிறக்கும். அந்த அலையின் தள்ளு ஆற்றலால் மற்றொரு விண் எனும் கூறு குறிப்பிட்ட தொலைவிலேயே நிறுத்தப்பட்டுவிடும். இந்த விண் எனும் கூறினுள்ளும் சுத்தவெளி உள்ளது. இந்த விண் சுழலுவதால் அதன் மையத்தில் இன்னும் நுண்ணியதான பகுதி விரைவே இல்லாமல் சுத்தவெளியாக இருக்கும். இந்த மையப்பகுதி வெளியே உலவும் அல்லது மோதும் அலைகளை இழுக்கும் ஆற்றலைக் கொண்டதாக விளங்குகிறது. விண் தள்ளும் ஆற்றலைக் கொண்டிருக்கிறது; அதன் மையப் பகுதி கொள்ளும் ஆற்றலைக் கொண்டிருக்கிறது. தள்ளும் ஆற்றலைச் சக்திநிலை (இயக்கம்) என்றும் கொள்ளும் நிலையை சிவநிலை (இருப்பு)

ஏன்றும் கொள்ள வேண்டும்; விண்ணைச் சுற்றியுள்ள சுத்தவெளியின் அழுத்தத்தால் விண் எனும் கூறின் மையப் பகுதி சிறிது சிறிதாக விரிவடையும். இதன் விளைவாகச் சுழலும் விண்ணின் வேகம் குறையும்; அதனால் தள்ளும் ஆற்றல் குறையும்; பல விண்துகளும் நெருங்கத் தொடங்கிவிடும். ஆனாலும் நெருங்கியவை மிக நெருங்காமல் ஓர் எல்லையில் நின்று சுழலுமாறு பக்கவாட்டில் உள்ள சுத்த வெளியால் (இருப்பு நிலை அல்லது சிவநிலை) ஒழுங்குபடுத்தப்படுகிறது. விண்துகள்களின் சூழ்வேக வேறுபாட்டினால் விண்துகள் கூடவும் கூடிய சில பிரியவும் நிகழ்கின்றன. கூடிய துகள்கள், பிரிந்த துகள்கள் கோடிக்கணக்காக இருக்கின்றன. சுத்தவெளியின் அளவிற்கு விண்துகள்களின் எண்ணிக்கைக்கும் உள்ள விகிதவேறுபாட்டின் காரணமாகப் பேரியக்க மண்டலத்தில் வேறுபட்ட தோற்றங்கள் அமையும் பேரியக்க மண்டலத்தில் இருப்பன இவை இரண்டே (அதாவது சுத்தவெளியும் விண்துகள்களும்).

பேரியக்க மண்டலத்தின் தோற்றம் பலவாக மாறிக் கொண்டிருப்பதற்கு விண்துகள்களின் சுழல்வேகமும் சுத்த வெளியின் அழுத்தமும் காரணங்களாகும். விண்துகளின் பக்க வாட்டில் இருக்கிற சுத்தவெளியைத் தன் அழுத்தத்தால் பிரியும். பிரிவது நெருங்குவதும் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டே இருப்பதாலும் சேர்ந்தவை சேர்ந்தவையோடு மீண்டும் சேராமல் வேறு சிலவற்றோடு சேர்வதாலும் பிரிவதாலும் பேரியக்க மண்டலத்தில் தோற்றங்கள் பலவாக இருக்கின்றன. அவை மாறிக் கொண்டே இருக்கின்றன. ஆனால் அவற்றிலும் ஒருவகை ஒழுங்கு இருக்கின்றது. அதற்குச் சுத்தவெளியின் அழுத்தமே காரணம்.

காந்தம் எனப்படுவது விண்துகளில் இருந்து சுழல்வதால் ஏற்படும் விரிவு அலை பக்கவாட்டிலுள்ள சுத்தவெளியில் ஊடுருவி இணைந்து இரண்டும் சேர்ந்த கூட்டு ஆற்றலாக விளங்குவதாகும். சுத்தவெளியும் இருக்கும். கூட்டு ஆற்றலான காந்தமும் இருக்கும். விண்துகள்களும் இருக்கும். சுத்தவெளியில் விண்களுக்கிடையில் பேரியக்க மண்டலத்தில் இந்தக் கூட்டு ஆற்றலான காந்தம் இருக்கும். இதனையே வான்காந்தம் என்கிறார் மகரிஷி. இதே கூட்டு ஆற்றல் உயிருடலுக்குள் எல்லைகட்டி இயங்குவதால் அதனைச் சீவகாந்தம் என்கிறார். கூட்டு ஆற்றலாக காந்தம் விளைந்தது. அந்தக் காந்தத்தில் இருந்து மேலும் சில

விளையும். அவை அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் ஆகியன. காந்த ஆற்றல் குவிந்து அழுத்தம் பெறும் அதே இடத்தில் காந்த ஆற்றல் சமனடையும். காந்த ஆற்றல் அழுத்தம், மின்சக்தி, வேதித்தல் (இரசாயணம்) என்னும் மூன்று தன்மைகளைப் பெறுகிறது. அழுத்தம் கொள்ளும் ஆற்றல், தள்ளும் ஆற்றல் என இருவகையாக விளங்கும். மின்சக்தி, ஒலி ஒளி என இரண்டாக இயங்கும். வேதித்தல், சுவை மணம் என இரண்டாகப் பிரிந்து இயங்குகிறது.

அறிவு என்பதற்கு உண்மை என்று பொருள் கூறுகின்றார். உணர்ச்சி, சிந்தனை, இன்ப துன்ப அனுபவமாக உள்ளவற்றை அறிவு என்பர். இவை மனநிலைகள். இம் மனநிலைகளுக்கு முன்னமே விண் முதல் கதிரவன் வரை உள்ள இயக்க ஒழுங்காற்றலாகத் திகழ்வது அறிவு. முன்னரே விளக்கப் பெற்ற விண்துகளின் இயக்கமற்ற நடுப்பகுதியை அறிவு எனலாம். இந்த இருப்புநிலை அல்லது அறிவில் அதைச் சுற்றிச் சுழலும் வேகம் மோதுகிறது. இந்த 'வேகம்' உணர்த்துகிறது; இருப்பு (அறிவு) உணர்கிறது. இந்த உணர்வு விண்ணைச் சுற்றியிருக்கும் அகன்ற நிலையில் ஊடுருவித் தொடர்பு கொள்ளும். பரமாணுவின் அசைவை சீராக்கி இயங்க உதவுகின்றது.

பரமாணு சீராக இயங்கும் நிலை அந்தப் பரமாணுவுக்குக் குறிப்பிட்ட பருமன், விரைவு, வேகம், காலம், விண்களுக் கிடையே இடைவெளி ஆகியவற்றுக்கு அறிவு உதவுகிறது. விண் என்கிற நுண்ணிய இயக்கத்திலேயே அமைப்பு, தன்மை, இயக்க ஒழுங்கு ஆகியவற்றோடு அறிவும் உள்ளது. பரமாணு என்பது விண்ணின் கூட்டுச் சேர்க்கை. இதனால் ஏற்படும் தோற்றம் எதுவும் பரமாணுக்களின் எண்ணிக்கைக்கும் அவற்றிடையே உள்ள சுத்தவெளியின் அளவுக்கும் ஏற்ப அமைப்பு, தன்மை, இயக்க ஒழுங்கு ஆகியன சிறிதும் மாறுபடாமல் இயங்கும். இவற்றால் பரமாணு முதல் கதிரவன் வரை எல்லாம் மேற்குறித்த மூன்றும் அறிவோடு நெறிபிறழாமல் விளங்கும்.

இவற்றைத் தொகுத்து நோக்கும்போது சுத்தவெளி (சிவம்), பரமாணு (சக்தி), காந்தம், காந்தத்தின் தன்மாற்ற நிலைகள் ஆகிய நான்கு வகை இயற்கை ஆற்றல்கள் புலன்களால் உணர முடியாதவை என அறியலாம். காந்தத்தின் தன்மாற்ற

நிலைகளான அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் ஆகியவற்றை வள்ளுவர் தம் குறளில் மறைபொருளாகக் குறிப்பிட்டுள்ளார் என அறியலாம். இவற்றோடு மனம் என்னும் இயக்க நிலையையும் விளங்கிக் கொள்ளவேண்டும் என வலியுறுத்துகின்றார் மகரிஷி. புலன்களுக்கு அப்பாற்பட்ட ஆற்றலை அறியவும் மதிக்கவும் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் எல்லாரிடமும் எல்லாவற்றிடமும் முறையான தொடர்பு கொண்டு வாழமுடியும். உடலையும் உள்ளத்தையும் மேன்மைப் படுத்திக் கொள்ள முடியும். மனத்தின் அலைச் சூழலின் வேகத்தை முழுமையாகக் குறைத்துத் தூய அமைதி நிலையை அடையலாம். அதனால் மறைபொருள் உணர்வு உள்ளுணர்வாகக் கிட்டும். பரமாணுவிலிருந்து மனித இனம் வரையிலான பரிணாம வளர்ச்சியையும் விளங்கிக் கொள்ளமுடியும்.

காந்தம் ஒரு பொருளை ஈர்த்துச் சுருக்கிக் கொள்ளவும் சுருக்கி வைத்ததைப் பெருக்கிக் காட்டவும் செய்யும். சுத்த வெளியோடு துணைத்துகள் கரைந்து கலப்புற்றுக்கிடைக்கும் விளைவினைக் காந்தம் என்பர். காந்தம் எல்லா இடமும் பரவியுள்ளது. வானில் இருப்பது வான் காந்தம். மனிதருள் இருப்பது சீவகாந்தம். எல்லாப் பொருள்களிலும் காந்த ஆற்றல் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் விளைவுகளாகத் தன் மாற்றம் பெறுகின்றன என்றார் வள்ளுவர். மகரிஷி மனம் என்னும் ஒன்றையும் கூட்டி ஆறு விளைவுகளாகக் காந்த ஆற்றல் தன்மாற்றம் அடைகின்றது என்கிறார். தொடர்ந்து குறளையும் மனித மனத்தையும் அறிவையும் ஆராய்ந்து வரும் மகரிஷியின் ஆய்வினை விளங்கிக் கொள்வதும் விளக்க முற்படுவதும் மேலும் ஆராயத் தூண்டுவதும் தேவையாகும். திருக்குறளால் உணரும் ஈர்ப்பு ஆற்றல் கோட்பாட்டினை மேலும் குறட்பாக்களுக்குப் பொருத்தி ஆராய்வதும் தேவையாகும்.

வேதாத்திரியம் தரும் இறைஞானம்

முனைவர் ஜி. அழகர் ராமானுஜம்

இறையைப் பற்றிய மகரிஷியின் பார்வை முற்றிலுமான ஒரு விஞ்ஞானப்பார்வை. சொன்னால் மட்டும் நம்பாதே, சுயமாய் சிந்தித்தே தெளிவாய் என்பது அவரது அறிவுரை. மகரிஷியின் இறைத்தத்துவம் சுத்த அத்வைதம். இனிமையாகவும் எளிமை யாகவும் தூய தமிழில் சொல்லப்பட்டிருக்கிறது. வேதாந்தம் என்றும், சைவசித்தாந்தம் என்றும், சித்தர்கள் நெறி என்றும் நாம் காண்கிற பல்வேறு தத்துவங்களின் சாரத்தைப் பிழிந்து அறிவியலோடு கலந்து மகரிஷி படைக்கும், ஆன்மீக விருந்துதான் இவரது சுத்தவெளித் தத்துவம்.

தத்துவத்திற்கு விஞ்ஞானப் பார்வை தருவது அவ்வளவு எளிதல்ல. தத்துவத்தை விஞ்ஞானப்பூர்வமாக உணரும் துணிவும், மெய்ஞ்ஞானத்தைத் தத்துவார்த்தமாக அலசி ஆராய்கிற அறிவுத் திறனும் கொண்ட ஒரு மகான்தான் இந்த இணைப்பைத் தர முடியும். அதைத் தருபவரே வேதாத்திரி மகரிஷி. வேதாத்திரியம் நமக்கு ஆதிசங்கரரை மட்டுமல்ல; ஆல்பர்ட் ஐன்ஸ்டைனையும் அடையாளம் காட்டுகிறது.

வேதாந்தம் இந்திய நாட்டின் பலம். அது முறையாக உணர்ந்து முறையாகப் பரப்பாது முடக்கிவைக்கப்பட்டது இந்த நாட்டின் பலவீனம். பலத்தைத் தக்கவைத்துக் கொண்டு, பலவீனத்தை அகற்றுகிறது வேதாத்திரியம். முடக்கி வைக்கப் பட்டதின் முடிச்சுகளை அவிழ்க்க முனைந்து அதைத் தாராள மயமாக்கிய பெருமை வேதாத்திரியத்தைச் சாரும்.

சத்தியங்களைச் சந்திக்கிற உரிமை சகலருக்கும் உண்டு. சந்தித்த சத்தியத்தைச் சிந்தித்துச் சிந்தித்துத் தங்களுடன் தக்க

வைத்துக் கொள்கிறார்களா என்பது அவரவரைப் பொறுத்த விஷயம். யாரிடம் சத்தியம் தழைத்தோங்கும், யாரிடம் அது சருகாய்ப்போய்விடும் என்று தீர்மானிக்க நாம் யார்? பாமரத்தனமான தமிழ்ப் பாக்களின் மூலமாகத் தத்துவத்தை அனைவருக்கும் தாராளமாக்குகிறார் மகரிஷி.

மகான்கள் காலத்தின் கட்டாயங்கள்

மகான்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக அத்திப்பூத்தாற் போல் வந்தாலும் அந்தச் சிலரின் எண்ணம்தான் உலக மக்கள் அனைவரையும் உயர்த்தி அரவணைத்துச் செல்கிறது.

யாரை நாம் மகான் என்பது?

சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்:

They are brave, bold, they will think beyond their present time declaring the noblest truths to the mankind without fear and compromise.

அதன்படி, கடந்த ஐம்பது ஆண்டுகளாக நமது நாட்டு வேதாந்தங்கள், சைவசித்தாந்தங்கள், சித்தர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் வழிநின்று, அவர்களது சாரத்தோடு விஞ்ஞானத்தையும் நிறைவாகச் சேர்த்துத் தான் பெற்ற அதி உன்னத உண்மைகளை, இந்த உலகிற்கு எந்தவித அச்சமுமின்றித் தயக்கமுமின்றி எடுத்துக்கூறி வருகிற அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் - இந்த நூற்றாண்டின் ஒரு தலைசிறந்த மகான்.

மெய்ஞ்ஞானத்தை நேரிழைப் பாவாகவும், விஞ்ஞானத்தை ஊடுபாவாகவும் அமைத்து மகரிஷி தயாரித்த தெய்வீக ஆடைதான் இவரது இறைத்தத்துவம். உலக மக்கள் யாவருக்கும் இந்த ஆடை பொருந்தும். நாம் துயரென்ற குளிரில் வாடி வதங்கும் போதெல்லாம் இந்த ஆடை நமக்குத் தேவை. இதன் முறை தவறா இறைநீதி, நமக்கு முழுமையான சாந்தியைத் தரவல்லது.

மனிதகுல வரலாற்றில், ஒரு சில காலக்கட்டங்களில், இயற்கையின் சரித்திரச் சத்தியங்கள் ஒரு தனிமனிதரின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைக்கப்பட்டு விடுகின்றன. அந்தக்

காலக்கட்டத்தில்தான், இறைச்சத்தியம் அந்த மனிதரின் அனுபவமாக, மகா வாக்கியமாக, உலகிற்கு உணர்த்தப்படு கின்றது. கால, இடத்தைப் பொருத்தும், மொழியைப் பொருத்தும், சத்தியம் வெவ்வேறு நாமங்களை அடைகின்றது. இந்தச் சத்தியம் தான் புத்தரின் தம்மபதமாகவும், ஆதிசங்கரரின் அத்வைதமாகவும், ஏசுவின் பைபிளாகவும், நபிகளின் குரானாகவும், வள்ளலாரின் அருட்பாவாகவும், சென்ற நூற்றாண்டுகளில் நம்மை வந்து அடைந்தது. அதே இறைச் சத்தியம் இந்த நூற்றாண்டில் வேதாத்திரியின் இறைஞானமாக நம்மை அடைகின்றது.

சிந்தையும் செயலும் இணைந்ததே மனிதம் என்பார்கள். சிந்தைக்கு வேண்டியது ஒருமைப்படுத்துகிற இறைநெறி. செயலுக்கு வேண்டியது அன்பில் விளைந்த அறநெறி. சிந்தை மூலத்தை நினைக்க வேண்டும். செயல் ஞாலத்தை நினைக்க வேண்டும். சிந்தையின் ஞானமே செயலின் சத்தியம். மூலத்தை பற்றிய முழுமையான அறிவு சிந்தையில் இல்லையேல், ஞாலத்தைப் பற்றிய ஞானம் கிடைத்தல் அரிது. ஞானமில்லாத வாழ்வு இருட்டறையில் நடப்பது போன்று, 'கண்டது கடியதுடன் நாமாகச் சென்று மோதிக்கொண்டிருப்போம்'.

ஞானமின்மையே சிக்கலின் ஆரம்பம்; ஏமாறுவோம் அல்லது ஏமாற்றுவோம். ஞானம் சிக்கலின் முடிவு; ஏமாறுவதுமில்லை; ஏமாற்றுவதுமில்லை.

அருமையான இருசக்கர வாகனத்தில் அமர்ந்து அலுவலகம் செல்கிறேன். விரைவாகச் செல்லும்போது உள்ளேயிருக்கின்ற ஒரு கம்பி சற்று விலகிவிடுகிறது. வாகனம் நின்று விடுகின்றது. அதைப்பற்றிய ஞானமிருந்தால், சற்றுப் பிரித்துப் பார்த்து, உள்ளே ஏற்பட்ட விலகலை விலக்கிவிட்டால், வண்டி மறுபடியும் ஓட ஆரம்பித்துவிடும். ஆனால் எனக்கு ஞானமில்லாத போது, வண்டியைத் தள்ளிக்கொண்டு பணிமனைக்குப் போகிறேன். காலதாமதம் காரியதாமதம் ஆகிறது. மாலையில் வாருங்கள் சரிசெய்து வைத்திருக்கிறேன் என்கிறது ஒரு பிஞ்சுக்குரல். இன்னும் காரியதாமதம். மாலையில் வருகிறோம். ஒரு கணிசமான செலவு நமக்காகக் காத்திருக்கிறது. இப்போது வீண் பொருள் விரையம்.

எனது வண்டியைப் பற்றிய ஞானம் எனக்கு இல்லையென்றால், எனது வண்டியை வைத்துக்கொண்டே என்னை ஏமாற்றிவிடுவார்கள். வண்டி வேண்டும்; அதோடு அதைப் பற்றிய ஞானமும் வேண்டும். வண்டியைக் குறைகூறக் கூடாது. அதைப் பற்றிய ஞானம் இல்லாததே உண்மையான குறை. மனைவியைப் பற்றிய ஞானமில்லாததால், மனைவியினால் ஏமாற்றமும் தொல்லையும். மகனைப் பற்றியோ அல்லது மகளைப் பற்றியோ ஞானமில்லாதபோது, அவர்களால் சஞ்சலப்படுகிறேன். மொழியைப் பற்றிய ஞானமில்லாததே மொழித் தகராறுக்குக் காரணம். மதத்தைப் பற்றிய ஞானமின்மையே மதக்கலவரங்களுக்கு காரணம். நான் வணங்குகிற தெய்வத்தைப் பற்றி எனக்கு ஞானமில்லையேல், நான் வணங்குகிற தெய்வத்தை வைத்தே என்னை ஏமாற்றி விடுவார்கள். மூலத்தைப் பற்றிய ஞானத்தைத் தருகிற மகரிஷியின் இறைத் தத்துவம் சிந்தனையைப் பெருக்கிச் சிக்கல்களைப் போக்கவல்லது.

சுயமான சிந்தனையின் மீது சுகமாக அமைகிறது மகரிஷியின் இறைத்தத்துவம். ஒரு விதத்தில், இது பாரதியை இந்தப் பாருக்கு அடையாளம் காட்டுகிறது.

..... பலப் பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது
பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியல் ஒளியுறும் அறிவாம்

என்ற பாரதியை வணங்கி நாம் மேலே செல்வோம்.

ஞாலத்தின் முழுமுதற்காரணத்தை, அதன் மூலத்தை தெய்வம், இறைவன், இறைநிலை, கடவுள், அல்லா, பிதா, பிரம்மம், சிவம், அருட்பெருஞ்சோதி எனப் பலப்பல மகான்கள் உணர்ந்தார்கள். அவர்கள் வாழ்ந்த காலத்தை ஒட்டிப் பேசிய மொழியைப் பொறுத்து அவர்கள் உரைத்த வார்த்தைகள் வித்தியாசப்பட்டாலும், அனைவரும் ஒரே குரலில் ஏகமனதாகக் கூறியது ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அந்த ஒன்று எது? "எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்திருப்பது எதுவோ அதுவே தெய்வம்" என்ற சத்தியமே அது. இந்த சத்தியம்தான் மகரிஷியின் இறைத்தத்துவத்தில் மூலத்தைத் தொடுகிற ஏணியின் முதல்படி.

எந்த ஒன்று எல்லா இடத்திலும் இருக்கிறதோ அதுதான் தெய்வம் என்ற சத்தியத்தின் சாரத்தை உணர்ந்தபின் அடுத்த கேள்விக்கு வருகிறோம். எல்லா இடத்திலும் தெய்வம் இருக்கிற தென்றால், எல்லா இடத்திலும் இருப்பதைக் கண்டுபிடிப்பதில் என்ன சிரமம்! வாழ்க்கையில் ஏதாவது சுலபமான வேலை ஒன்று உண்டென்றால் அது தெய்வத்தைக் கண்டுபிடிப்பதாகத்தானே இருக்க வேண்டும். அதுதான் எல்லா இடத்திலும் இருக்கிறதே! ஒரு நண்பனிடமிருந்து நேற்று வந்த கடிதத்தைத் தேடுவதில் அர்த்தம் இருக்கிறது. அதை எங்கோ வைத்துவிட்டேன். வைத்த இடத்தில்தான் அது இருக்கும். ஆகவே அதைத் தேட வேண்டும். எல்லா இடத்திலும் இருக்கின்ற ஒன்றைத் தேட வேண்டிய அசியம் என்ன? அவசியம் இல்லை. இருப்பதை உணரத்தான் வேண்டும் என்கிறார் மகரிஷி. எல்லா வல்ல தெய்வமது; எங்கும் உள்ளது நீக்கமற. நீக்கமற இருப்பதை ஐயம்திரிபற உணர்வதே மகரிஷி தரும் இறைத் தத்துவத்தின் மாண்பாகும்.

இறைத் தேடலை இறையுணர்வாக மாற்றியது மகரிஷியின் பெருமை. எங்குமிருக்கிற இறையை எவ்வாறு உணர்வது?

இந்தக் கேள்வியை மனத்தில் அசைபோட்டுக் கொண்டு, இந்தப் பிரபஞ்சத்தை அண்ணாந்து பார்க்கிறோம். எத்தனை விதமான அமைப்புக்கள், எத்தனை வியத்தகு செயல்கள்! சூரியன் என்றும் சந்திரன் என்றும் நட்சத்திரம் என்றும் பறவை பாம்பு மனிதன் என்றும் எத்தனையோ அமைப்புகளை நாம் பார்க்கிறோம். அத்தனை அமைப்புகளிலும் நாம் ஒரு ஒழுங்கைப் பார்க்கிறோம். ஒரு நியதியைக் காண்கிறோம். சரியாகக் காலம் தவறாது சூரியனைச் சுற்றிவருகின்றன கோள்கள். ஞாயிற்றுக்கிழமை என்றால் பூமி ஓய்வு எடுத்துக்கொள்வதில்லை. திங்கள் கிழமை என்றால் திமிறிக் கொண்டு படுவேகமாக ஓடுவதும் இல்லை. அதன் ஓட்டத்தில் ஒரு நியதியும் ஒழுங்கும் இருக்கின்றது. சரியாக இருபத்தேழரை நாட்களில் பூமியைச் சுற்றிவரும் சந்திரன், அதே இருபத்தேழரை நாட்கள் நமது பெண்மையோடு இணைந் திருக்கிற ஒரு பாங்கு. இந்த ஒழுங்கிற்கும் நியதிக்கும் காரணம் யார்?

சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவது எவராலே?

காரிருள் வரவை மின்மினி போல்
கண்ணில்படுவன அவை என்ன?
யாரிதற்கெல்லாம் அதிகாரி? – அதை
நாம் எண்ணிட வேண்டாமா?

நாமக்கல் கவிஞருடன் நாமும் இணைந்து சிந்திக்கிறோம். "யாரிதற் கெல்லாம் அதிகாரி?"

மறுபடியும் இந்த மகத்தான பிரபஞ்சத்தைப் பார்க்கின்றோம். சிறிதும் பெரிதுமாக எத்தனையோ அமைப்புகள் இருந்தாலும் அவற்றின் ஊடே ஒரு பொதுவான உண்மை இழையோடுவதை நாம் காணலாம். எந்த ஒரு அமைப்பும் நிலையாக இருப்பது இல்லை என்பதுவே அந்த உண்மை. பூமியின் இடம் வினாடிக்கு வினாடி மாறுகிறது. நேற்று நாம் பார்த்த செடி இன்று இல்லை. இன்றைய நாள் நாளைக்கு மாறுகிறது. பிரபஞ்சத்தில் ஒவ்வொரு அங்கமும் அசைந்தும், நகர்ந்தும் கொண்டிருக்கின்றன. சதா காலமும் மாறிக்கொண்டே இருக்கின்றன. "ஹைராக்லிடஸ்" என்ற கிரேக்கச் சிந்தனையாளரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

எல்லாமே மாறுகிறது என்றால் இங்கு எது நிரந்தரம். மாற்றமே நிரந்தம். Change alone is permanent என்றார் அந்த மேதை.

நம்மில் ஒரு மாற்றம் எப்பொழுதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மாற்றம் எதை நோக்கி நம்மை நகர்த்துகிறது. நமது முடிவை நோக்கி அந்த மாற்றம் நம்மை நகர்த்துகிறது.

நாம் ஒரு துளியாக ஆரம்பித்தபோது அந்த மாற்றம் ஆரம்பித்து நமது முடிவை நோக்கி நம்மை அது நகர்த்துகிறது. எங்கெல்லாம் மாற்றம் இருக்கிறதோ அந்த அமைப்பு ஒரு காலக் கட்டத்தில் பிறந்து, மாற்றம் அடைந்து இன்னொரு காலக் கட்டத்தில் முடியவும் செய்யும். அப்படி என்றால் இந்தப் பிரபஞ்சமே எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கிறதே. ஆகவே இந்தப் பிரபஞ்சம் ஒரு காலக்கட்டத்தில் தோன்றி இன்னொரு காலக்கட்டத்தில் முடியவும் செய்யும். ஆகவே இப்போது கேள்வி. இந்தப் பிரபஞ்சம் தோன்றுவதற்கு முன்பு இங்கு என்ன இருந்தது?

வெற்றிடம் என்று சொல்லலாமா? கூடாது. ஏனென்றால் வெற்றிடம் என்று சொல்லிவிட்டால் எப்படி வெற்றிடத்தில் இருந்து இத்தனையும் தோன்றியிருக்க முடியும்? Nothing can come out of nothing என்றார் சேக்ஸ்பியர். நாம் பார்க்கின்ற பறவைகள், தொடுகின்ற மண், மணக்கின்ற மல்லிகை, சுவையான சுக்கு இத்தனையும் தோன்றுவதற்கு மூலகாரணமாக ஒரு ஆதி நிலை இருந்திருக்க வேண்டும். அந்த ஆதி இருப்பு நிலைதான் சுத்தவெளி. இங்குதான் மகரிஷியின் இறைத்தத்துவம் ஆரம்பமாகிறது.

சுத்தவெளியின் தன்மைகள் என்ன? இந்தக் கேள்வியைச் சுமந்து கொண்டு, ஒரு பெரிய மாமரத்தைப் பார்க்கிறோம். எத்தனை பெரிய மரம். அடிமரம்; அடர்ந்த கிளைகள். எங்கும் தொங்குகின்ற மாங்கனிகள். இத்தனைப் பெரிய மரமும் ஒரு காலக்கட்டத்தில் சின்னஞ்சிறிய விதைக்குள்தானே இருந்தது. ஒரு விதத்தில் இந்த சிறிய விதை என்பது முழுமையான மாமரம் தானே? இப்போது, அந்த விதையை இரண்டாக வெட்டி உள்ளே பார்த்தால் அங்கே மாம்பழம் இருக்காது; மாவிலை அங்கே இருக்குமா? இருக்காது. ஆகவே, இப்போது கேள்வி, அந்த விதைக்குள் என்னதான் இருக்கிறது? அந்த மரத்தை இவ்வாறுதான் வளர்க்க வேண்டும் என்ற அறிவு அங்கேதான் இருக்கவேண்டும். விதை நம்மைக் கேட்டு வளர்வதில்லையே. அறிவு மட்டுமல்ல, மண்ணை மேலே தூக்கி, முண்டி முளைவிடுவதற்கு அந்த விதைக்கு ஆற்றலும் இருக்கவேண்டுமே! அதைப் போலவே இந்தப் பிரபஞ்சத்தின் மூலம் சுத்தவெளி. இந்தப் பிரபஞ்சத்தை இவ்வாறுதான் உருவாக்க வேண்டும் என்ற பேரறிவும், இந்தப் பிரபஞ்சத்தை உருவாக்குவதற்கான பேராற்றலும் சுத்தவெளியில்தானே இருந்திருக்க வேண்டும்? ஆகவே சுத்தவெளி என்பது பேரறிவுடையது. பேராற்றல் உடையது. முழுமையானது. ஒருமையாக இருந்த சுத்தவெளி பலவாறாகப் பெருகியது. அப்படி பெருகுவதே அதன் "ஸ்வதர்மம்"; அதன் இயல்பு. இந்த இயக்கப் பெருக்கத்தின் விளைவே பிரபஞ்சம்.

எந்த ஒரு மகானின் மீதும் அவருடைய சமகாலச் சமுதாயத்தில் நிலவுகின்ற எண்ணங்கள் மற்றும் கருத்துக்களின்

தாக்கம் இருக்கத்தான் செய்யும். மகரிஷியும் இதற்கு விதிவிலக்கல்ல.

இருப்பு நிலையாகிய சிவம் அசைவற்றது. அசைந்தால் அதுவே சக்தி என்று தொன்றுதொட்டு நிலவி வருகிற கருத்தொக்க, சுத்தவெளி அசைவற்றது என்ற கருத்தை நாம் மகிரிஷியிடம் காண்கிறோம். ஆனால் ஒரு காலக்கட்டத்தில் மகரிஷியிடம் ஒரு கேள்வி எழுகிறது. சிவத்தில் இல்லாத ஒரு அம்சம் எப்படிச் சக்தியில் இருக்கமுடியும்? சிவத்தில் "அவ்யக்தமாக" இருப்பதுதானே சக்தியில் "வ்யத்தமாக" அமைய முடியும். இக்கேள்வி மகரிஷியின் மனத்தில் ஒரு புயலையே கிளப்புகிறது. புயலின் முடிவில் ஒரு சத்தியம் மலர்கிறது. சுத்தவெளிக்குத் தன்னால் தன்னில் உருவான அவ்யக்தமான அதிர்வுகள் உண்டு. அகண்ட நிலையில் உள்ள இந்த அதிர்வுகளால், சுத்தவெளிக்குக் காலம் என்ற தன்மையும் உண்டு. இந்த அதிர்வுகள்தான் சக்திகளத்தில் உள்ள ஒவ்வொரு பொருளின் அசைவாக வெளிப்படுகிறது.

இருப்பு நிலையும் இறைத்துகள்களும்

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் எனும் வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே ஞாலத்தின் மூலமாகும். வெளியின் அதிர்வு, அழுத்தம் எனும் இயக்க விளைவாக இறுக்கிய நொறுங்கிய துகள்களே இறைத்துகள்கள். அதிர்வு தொடர்ந்து இயங்குகின்ற காரணத்தால், இறைநிலையானது, தன்னிறுக்கத்தால் தானே நொறுங்கித் தற்சுழற்சியுடைய இறைத் துகள்களாக (Formative dust) மாறுகிறது. இறைத்துகளை பரமாணு அல்லது நுண்விண் என்றும் சொல்லலாம். எல்லையற்ற சுத்தவெளி எல்லையுடைய கருவிகளுக்குக்கூடப் புலப்படாத பரமாணுவாகவும் பலப்பல அமைப்புகளாகவும் மாறுகிற அதன் தன்மையை அதனுடைய 'மாயை' என்று வேதாந்தம் கூறுகிறது.

எண்ணிலடங்கா இறைத்துகள்கள் இறைவெளியின் சூழ்ந்தழுத்தத்தால் ஒன்று சேர்க்கப்பட்டு ஒரு துகளாகத் தற்சுழற்சி பெற்று இயங்கும்போது அது ஆகாஷ் துகள் அல்லது வேதான் அல்லது விண் என அழைக்கப்படுகிறது.

இயற்கை என்பதே தெய்வம் சுத்தவெளி பூரணம்
இதுவேதான் பேராற்றல் காலம் பேரறிவும் ஆகும்
இயற்கையதன் தன்மைதான் தன்னிறுக்க அழுத்தம்
இவ்வழுத்த விளைவாம் நுண்ணதிர்வு காலமாச்சு
இயற்கை அழுத்தம் அதிர்பு எனும் இயக்க விளைவாக
இறுக்கி நொறுங்கிய துகளே பரமாணு நுண்விண்
இயற்கை ஒன்றே விண்ணாகி பலப்பலவாய் பெருகி
இணைந்தும் பிரிந்தும் இயங்கும் இயல்பே
பிரபஞ்சமாம்

விண்ணிற்குள் சிறைப்பட்ட இறைத்துகள்களைச் சுத்தவெளி அழுத்த, இவ்வழுத்தத்தின் விளைவாக அவற்றின் தற்சுழற்சி அதிகரிக்கிறது. அதிவேகத் தற்சுழற்சியடைந்த இறைத் துகள்கள் உள்ளே இருக்க முடியாமல் தெறித்து விண்ணைவிட்டு வெளியேற, அவ்வாறு வெளியேறிய இறைத்துகளை நிழல்விண் அல்லது யோகான் என அழைக்கிறோம். விண்ணைவிட்டு வெளியேறிய இறைத்துகள்கள் (அல்லது யோகான்கள் அல்லது நிழல்விண்கள்) சூழ்ந்திருக்கும் சுத்தவெளியில் விழ, அவை கரைந்து சுத்தவெளியில் அலையை உருவாக்குகின்றன. இந்த அலையை நாம் காந்த அலை என்கிறோம். இந்த அலை நிலையோடு ஒடுங்குகிறபோது, எந்த அளவிற்கு ஒடுங்குகிறதோ அந்த அளவிற்கு அந்தக் காந்த அலை அது செல்லுகிற ஊடகத்தைப் பொறுத்து அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணமாக தன்மாற்றம் அடைகிறது. இதுவே பஞ்சதன்மாத்திரை எனப் பேசப்படுகிறது.

ஒன்றாக இருந்த ஆதி ஏன் பலவாக மாற வேண்டும்? என்ற கேள்வி வேதகாலம் தொட்டு இருந்து வருகிறது. வேதாத்திரியத்தில் முடிவடைகிறது. சுத்தவெளியின் தன்னிறுக்க சூழ்ந்தழுத்தும் விசைதான் பரிணாமத்தின் மூல காரணம் என்று இந்தக் கேள்விகளுக்குத் தெளிவான விடை தருகிறார் மகரிஷி. இந்த மூலவிசையை Unified Force அல்லது Gravity என்று ஆங்கிலத்திலும் ஒருங்கிணைப்புப் பேராற்றல் என்று தமிழிலும் அழைக்கிறார் மகரிஷி.

பரிமாணத்தின் ஆரம்ப நிலையில் சுத்தவெளி மட்டுமே இருப்பதால் சுத்தவெளி துகளாக மாறுவதற்கான காரணம்

சுத்தவெளியில்தான் இருக்கவேண்டும். துகளின் அல்லது துகள்களின் கூட்டான அனைத்து அமைப்புகளின் உபாதன காரணமும் (Matierial Cause) சுத்தவெளியே. நிமித்தக் காரணமும் (Efficient Cause) சுத்தவெளியே. மூலத்தைப் பிரம்மம் என்றழைக்கிற வேதாந்தம், உபாதான காரணத்தை பிரகிருதி (பேராற்றல்) என்றும், நிமித்தகாரணத்தை புருஷ (பேரறிவு) என்றும் கூறுகிறது.

The Svetasvatara Upanisad says:

know Maya as Prakrti and Brahman associated with Maya as the great Isvara' (who imparts existence and consciousness to it and guides it). It is He who creates the world.

Svetasvatara Up. 4.10. Prakrti is the material cause of the world, in the sense that names and forms which distinguish one thing from another and thereby create diversification are the creation of Maya

இங்குக் கம்பரை நினைவு கூர்வது பொருத்தம்

உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கிலா
அலகிலா விளையாட்டுடையான் அவர் தலைவர்
அன்னவருக்கே சரண் நாங்களே

கம்பர் கூறும் தலைவர் சுத்தவெளியே.

சுத்தவெளி தன்னைத்தானே மாற்றிக்கொண்டதுதான் - இந்த உலகம் என்ற கருத்தில் அமைந்த சொற்றொடர்தான் "'தாமுள ஆக்கலும்" என்பது குறிப்பிடத்தக்கது.

நெருப்பு ஆணா, பெண்ணா? காற்று ஆணா, பெண்ணா? ஆணும் அல்ல; பெண்ணும் அல்ல அன்றி அலியுமல்ல. அதேபோலத் தான் சுத்தவெளி.

பேரறிவாகவும் பேராற்றலாகவும் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிற சுத்தவெளியை இறைவன் என்று ஆண்

பாலாகவோ, பெண்பாலாகவோ சொல்வதை விட இறைநிலை என்று சொல்வதுதான் சாலப் பொருத்தம். இந்த இறைநிலையை பிரம்மம், சிவம், அல்லா, பிதா, அருட்பெருஞ்சோதி, ஜெஹோவா எனப் போற்றுகிறோம்.

பேரியக்க மண்டலத்தின் ஆதி மூலமாக விளங்குவது தூயவெளியான சுத்தவெளி. காண்பவரின் மூலமும் சுத்தவெளியே! அவர் காண்கின்ற இன்னொரு பொருளின் மூலமும் சுத்தவெளியே! ஆகவே, காண்பவரும் அவர் காண்பதும் ஒன்றுதான் என்ற மகரிஷியின் இறைத்தத்துவம் ஒரு அழகான, ஆழமான ஒருமியத் தத்துவமாகும் (Monism). The Observer becomes the Observed என்ற ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி இதனையே உலகெங்கும் உணர்த்தினார்.

பிரபஞ்சத்தில் காணும் பல்வேறு பொருள்களும் சுத்தவெளியின் பல்வேறு பரிணாம நிலைகளே.

ஒவ்வொரு உருவும் பரம்முதலாய்
அவ்வுரு வரையில் வந்த கதை
செவ்விய சிறு சொல் பரிணாமம்

அலை கடலின் ஒரு பகுதியே. கடலே அலையாகிறது; அந்தக் கடலே அலையைத் தாங்கவும் செய்கிறது. அதைப் போன்று, பிரபஞ்சம் சுத்தவெளியின் ஒரு பகுதியே. சுத்தவெளியே பிரபஞ்சம் ஆகிறது; அந்த சுத்தவெளியே பிரபஞ்சத்தைத் தாங்கவும் செய்கிறது. எப்படிக் கடலின் ஈரம், அலையின் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிறதோ, அதைப் போல சுத்தவெளியின் அம்சங்களாகிய அறிவும், ஆற்றலும், பிரபஞ்சத்தின் ஒவ்வொரு துகளிலும் உண்டு. (துகளின் ஆற்றலைக் கணக்கில் எடுத்துக் கொள்ளும் இன்றைய விஞ்ஞானம், துகளிலுள்ள அறிவைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை).

எந்த ஒன்று இந்தப் பிரபஞ்சமாக தன்மாற்றம் அடைகிறதோ, எது இந்தப் பிரபஞ்சத்தைத் தாங்குகிறதோ, அதுவே சுத்தவெளி. சுத்தவெளி பிரபஞ்சத்தின் முழுமுதற் காரணம். அதுவே ஆதி. ஆதிக்கு முந்தைய "தாய் தந்தை" இல்லாததால் அது அநாதி. எல்லையுடைய எந்த ஒன்றிற்கும் பிறப்பும் இறப்பும் உண்டு. எல்லையுடைய பல பொருள்கள்

இணைந்தால் பிறப்பு; இணைந்தது பிரிந்தால் இறப்பு. சுத்தவெளி எல்லையற்றதால் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை. அது நிரந்தரம். அலையை அலை என்ற குறுகிய கண்ணோட்டத்தில் பார்க்கும்போது, இப்போது இருக்கிற அலை பிறிதொரு பொழுது இல்லாமல் போகலாம். ஆகவே அலைக்கு பிறப்பும் உண்டு, இறப்புமுண்டு. ஆனால் அலையைக் கடலின் ஒரு பகுதியாகப் பார்த்தால், அது எப்போதும் கடலின் ஒரு பகுதிதான். ஆகவே இந்தப்பார்வையில் 'அலை' என்பதே கடலின் எழுச்சி நிலைதான். அலை எழுந்தாலும், விழுந்தாலும் கடலின் ஒரு பகுதியாக இருக்கத்தானே செய்யும் என்ற பார்வையில் அலை நிரந்தரமாகிவிடுகிறது. இதேபோல் எந்த ஒரு அமைப்பையும் சுத்தவெளியின் ஒரு பகுதியே என்று பார்த்தால், அந்தப் பார்வை அந்தப் பொருளுக்கு ஒரு நிரந்தரத்தைக் கொடுத்துவிடுகிறது. இந்தப் பார்வையே வள்ளலார் கண்ட மரணமிலாப் பெருவாழ்வு.

அறிவு என்பது பிறருக்குக் கொடுக்கக் கொடுக்க நம்மிடம் மேலும் மேலும் வளருமே தவிர, அது நம்மை விட்டுப்போகாது. ஆகவே அறிவு என்பது நம்மைவிட்டுப் 'போகாத புனல்'. எந்தப் பொருளை வேகவைத்தாலும், வெந்து அது அதைவிட மென்மையான பௌதீகப் பொருளாக மாறிவிடும். ஆனால் அடிப்படைத்துகளான விண்களின் கூட்டத்தை வேகவைத்தால், அதுவே அடிப்படையாதலால் அது இன்னொரு பௌதீக நிலைக்கு மாறாது. ஆகவே வேகவைக்க முடியாத விண்களே "வேகாக்கால்". சுத்தவெளி என்ற இறைநிலை நிரந்தரமாதலால் அது "சாகாக்கால்" எனப்படுகிறது.

அறிபவனும் சுத்தவெளியே, அறியப்படும் பொருளும் சுத்தவெளியே. அறிவதற்குக் கருவியாக இருப்பதுவும் அதே சுத்தவெளியின் அறிவுதான் என்ற சுத்த அத்வைதக் கருத்தே மகரிஷியின் இறைத்தத்துவம். இந்த மூன்று அம்சங்களையும் உள்ளடக்கி, "மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றார் வள்ளுவர். மெய்ப்பொருளைக் காண்கின்ற செயல் அறிவு, மெய்ப்பொருளைக் காண்பதற்கான சாதனம் அறிவு, மெய்ப் பொருளாக நாம் காண்பது அறிவு என்ற முப்பொருளும் இணைந்து இழையோடுவதை நாம் வள்ளுவரின் வாக்கில் காணமுடிகிறது.

நாம் காணும் அனைத்தும் சுத்தவெளியின் தன்மாற்ற நிலைதான். அவை எல்லாமே சுத்தவெளியில்தான் அசைந்து திரிகின்றன. அனைத்துப் பொருளிலும் சுத்தவெளியின் அம்சம் உண்டு. அனைத்தும் சுத்தவெளியில்தான் உண்டு. இந்தக் கருத்தை மகரிஷி அவர்கள் ஒரு சிறிய உதாரணம் கூறி விளக்குவார்கள். தண்ணீரில் ஒரு கைப்பிடி உளுத்தம்பயறுகளைப் ஊறப் போடுகிறோம். ஒவ்வொரு பயறுள்ளும் தண்ணீர் உண்டு. அத்தனைப் பயறுகளும் தண்ணீரில் உண்டு. இதே கருத்தை பகவத் கீதையில் நாம் பார்க்கிறோம். ஒரு கற்பனையான சம்பாஷணைக்கு வருகிறோம்.

நாம்: சுத்தவெளியே நீ எங்கிருக்கிறாய்?

வெளி: நான் அத்தனைக்குள்ளும் இருக்கிறேன்; அவைகளுக்கு புறமும் இருக்கிறேன்.

நாம்: அனைத்தும் எங்கே இருக்கின்றன?

வெளி: என்னில்தான் இருக்கின்றன.

நாம்: "அனைத்துக்குள்ளும் சுத்தவெளி இருக்கிறது. அனைத்தும் சுத்தவெளியில் இருக்கிறது" என்பதை ஒருவர் உணர்ந்துவிட்டால்?

வெளி: ஆதியாகிய என்னோடு அவர் சரிசமமாகி, சமாதி (சம+ஆதி) நிலையை அடைகிறார்.

''நாம்'' என்பதை அர்சுனானாக்கி, சுத்தவெளியை "கிருஷ்ணன்" ஆக்கி வியாசர் படைத்த விருந்துதான் பகவத் கீதை.

எந்த ஒன்று எல்லாவற்றிலும் இருக்கிறதோ, எந்த ஒன்றில் எல்லாமே இருக்கிறதோ அந்த ஒன்றாகிய சுத்தவெளிக்குப் பகவத் கீதையில் வியாசர் வைத்த பெயர் கிருஷ்ணன். ஆகவே கிருஷ்ணன் என்பது சுத்தவெளியைத்தான் குறிக்கிறது. கிருஷ்ணம் என்றாலே கருப்பு என்றுதான் பொருள். ஒளிகூட தோன்றாதபோது இருந்த மூலநிலையாகிய சுத்தவெளியை இருட்டாகப் பாவிக்கலாமல்லவா. இருள் கருப்புத்தானே. ஆகவே சுத்தவெளி கிருஷ்ணம் எனப்பட்டது.

யோ மாம் பச்யதி ஸர்வத்ர ஸர்வம் ச மயி பச்யதி
தஸ்யாஹம் ந ப்ரணச்யாமி ஹ ச மே ந ப்ரணச்யதி

(பகவத்கீதை 6:30)

யார் என்னை எல்லாவற்றிலும், எல்லாவற்றையும் என்னிடத்திலும் காண்கிறானோ அவன் காட்சியினின்று நான் மறைவதில்லை; அவனும் என் காட்சியினின்று மறைவதில்லை. கிருஷ்ணனின் வாக்கு இறைவாக்கே.

மண்ணில் பிறந்து வாழ்ந்த ஒரு மனிதராக கிருஷ்ணன் மகாபாரதத்தில் சித்திரிக்கப்பட்டிருப்பதால், எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற சுத்தவெளியாகிய கிருஷ்ணனை மனிதரைப் போன்று ஒரு உருவத்தில் பட்டாடை உடுத்தி, நீண்ட நெடிய மாலையை அணிவித்துப் புல்லாங்குழல் ஏந்திய ஒரு அழகிய அரசனாகப் படைக்கவேண்டிய நிர்பந்தம் வியாசருக்கு ஏற்பட்டது.

இன்று கிருஷ்ணன் என்றவுடன் புல்லாங்குழல் ஏந்திய உருவம்தான் கண்முன் வருகிறதே தவிர, எங்கும் நீக்கமற வியாபித்திருக்கிற சுத்தவெளி என்ற கருத்து நினைவுக்கு வருவதில்லை. கிருஷ்ணனைச் சுத்தவெளியாக உணர்வது தடம்புரளாத தத்துவம்; ஆழமான ஆன்மீகம். உருவத்தில் பார்ப்பது உண்மை குறைந்த மந்த நாயம்;

அவஜானந்தி மாம் மூடா மானுஷீம் தனுமாச்ரிதம்
பரம் பாவமஜானந்தோ மம பூதமஹேச்வரம்

(பகவத் கீதை 9:11)

நாஹம் ப்ரகாச: ஸர்வஸ்ய யோகமாயாஸமாவ்ருத:
மூடோ அயம் நாபிஜானதி லோகோ மாமஜமவ்யயம்

(பகவத் கீதை 7:25)

"என்னுடைய பரசொரூபத்தையும், நான் உயிர்களுக்கெல்லாம் ஈசனாயிருப்பதையும் அறியாத மூடர்கள், ஒரு மானுட வடிவம் எடுத்தவன் என்றெண்ணி என்னை அவமதிக்கின்றனர். யோக மாயையினால் நன்கு மூடப்பட்டுள்ள நான் எல்லாருடைய அறிவுக்கும் எட்டுகிறதில்லை. பிறவாத அழியாத என்னை இந்த மூட உலகம் அறிகிறதில்லை" என்ற செய்தி கிருஷ்ணன் நமக்கு விடுக்கும் எச்சரிக்கை.

பிறவாத அழியாத கிருஷ்ணனுக்கு ஏது ஜெயந்தி!

வேதங்கள், உபநிடதங்கள், தரிசனங்கள், பாஷ்யங்கள், பகவத் கீதை என்று தத்துவங்கள் தழைத்தோங்கி நின்ற இந்தப் புண்ணிய பூமியில் காலத்தின் போக்கில் சுத்தவெளிக்கு ஆயிரமாயிரம் நாமங்களும், ரூபங்களும் தோன்றிப் பிறிதொரு காலத்தில் ஒவ்வொரு நாமமும் ஒவ்வொரு தெய்வம் என்று தத்துவங்கள் தடம்புரண்டு தாறுமாறாகிச் சொர்க்கம் என்றும் நரகம் என்றும் கவைக்குதவாத கற்பனைகள் கலந்து, நாம் கற்பித்த நாமங்களும், ரூபங்களுமே சத்தியமென்று நம்பி உண்மையான சத்தியத்தைக் கோட்டைவிட்டு, மதச்சகதியில் சிக்கித் தவித்துச் சீரழிகின்ற இன்றைய சமுதாயத்தைப் பார்த்துப் பாரதியார் கூறிய வார்த்தைகளை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆயிரம் தெய்வங்கள் உண்டு என்று தேடி
அலையும் அறிவிலிகாள் – பல்
ஆயிரம் வேதம் அறிவு ஒன்றே தெய்வம்
உண்டாம் எனல் கேளீரோ?

ஒரே இறைவனுக்குப் பல நாமங்கள் என்று ஆரம்பித்துப் பிறகு அந்த ஆரம்பத்திலிருந்து சற்று நழுவி, ஒவ்வொரு நாமமும் ஒரு தெய்வம் என்று எப்போது நாம் எண்ண ஆரம்பித்தோமோ, அன்று தொடங்கியது மனிதகுல சங்கடங்கள். இந்தச் சங்கடங்கள் தீர ஒரே வழிதான் உண்டு. எத்தனை நாமங்கள், ரூபங்கள் இருந்தாலும், அவை உணர்த்துகிற தெய்வம் ஒன்றுதான் என்ற சத்தியம் நம்மில் மேலோங்க வேண்டும். அனைத்து மதங்களிலும் உண்மை இருக்கிறது என்ற நமது அறிவு நிலையை இன்னும் உயர்த்தி, அனைத்து மதங்களும் ஒரே உண்மையைத் தான் கூறுகின்றன என்ற தெளிவு நம்மில் பிறக்க வேண்டும்.

நாம் வாழ்கின்ற இப்பிரபஞ்சம் முழுமையுமாகி, அதற்கு அப்பாலும் எல்லையற்று விரிந்து, பேரறிவாகவும், பேராற்றலாகவும் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற இறையாற்றலுக்கு எந்த ரூபத்தை நாம் கொடுப்பது? மண்ணானதும் அதுவே, மரம் ஆனதும் அதுவே; மனிதனானதும் அதுவே என்றால் அதனுடைய சுயரூபம் எது? அதன் சுயரூபம்

நமது கற்பனைக்கும் அப்பாற்பட்ட விஷயம்! நமக்கு அப்பாற்பட்டதை, அப்பாற்பட்டதுதான் என்று ஆமோதித்து அமைதி பெறுவது ஆன்மீகம்.

உருவமற்றதற்குப் பின் எப்படி உருவங்கள் தோன்றின? சூரியனைப் பற்றி ஆசிரியர் பாடம் நடத்த வேண்டும். வகுப்பறைக்குள் சூரியனைக் கொண்டு வரமுடியுமோ? முடியாது. ஆனால் அதே சமயத்தில் வெறுமனே பேசிக்கொண்டேயிருந்தால் மாணவர்களுக்குக் கற்றுக்கொண்ட நிறைவு இருக்காது. அவர்களது சிந்தனையும் சிதறும். ஆகவே ஆசிரியர் ஒரு வட்டத்தைக் கரும்பலகையில் வரைந்து அதன் மீது சூரியன் என்று எழுதுகிறார். அந்த வட்டத்தை வைத்துக்கொண்டு பாடம் நடத்துகிறார். அந்த வட்டம் உண்மையான சூரியனில்லை என்பது ஆசிரியருக்கும் தெரியும்; மாணவர்களுக்கும் தெரியும். உலகெங்கிலும் எத்தனை ஆசிரியர்கள், எத்தனை விதமான வட்டங்கள்; எத்தனை விதமான நிறமுள்ள வட்டங்கள்; அத்தனையிருந்தாலும் சூரியன் ஒன்றுதானே. அதைப்போல சிறுவர்கள் நிலையில் சுத்தவெளி என்றால் மட்டுமே போதாது. அதற்கு ஒரு உருவம் கொடுத்துப் பிரார்த்தனை செய்யவேண்டும். ஆயிரமாயிரம் உருவங்கள் கொடுத்திருக்கலாம், இப்போதும் கொடுக்கலாம், வருங்காலத்திலும் இன்னும் கொடுக்கலாம். ஆனால் சுத்தவெளி ஒன்றுதானே என்பதை மட்டும் மறக்கக் கூடாது.

நாமங்களும், ரூபங்களும் நாம் கொடுத்தது. ஒரு ரூபத்தை வணங்கும்போது, அந்த ரூபத்திற்குப் பின்னால் இருக்கிற இறைநிலையை வணங்குகிறோம் என்ற உணர்வு வேண்டும்.

இன்றைய கல்லூரியும், பல்கலைக்கழகங்களும் தரவேண்டிய ஒரு ஞானக் கல்வியாக மகரிஷியின் இறைத்தத்துவம் அமைகிறது.

படிப்பைப் பெறப் பள்ளிக்கூடத்திற்கும், அருளைப்பெற ஆலயங்களுக்கும் செல்கிறோம். படிக்க வேண்டியவற்றை எந்த அளவிற்கு மனதைச் செலுத்திப் படிக்கின்றோமோ அந்த அளவிற்கு மதிப்பெண் பெறுகிறோம். அதே மாதிரி அருள்வேண்டி எந்த அளவிற்கு மனம் உருகி வேண்டிக் கொள்கிறோமோ அந்த அளவிற்கு நமக்கு அருள் கிட்டுகிறது.

அன்றாடம் பள்ளிக்கூடம் போவதால் மட்டுமோ அல்லது பள்ளியின் நிர்வாகத்திற்குப் பணத்தை வாரிப் கொடுப்பதாலோ அதிக மதிப்பெண்கள் பெற்றுவிட முடியாது. அதே போன்று ஆலயங்களுக்கு அன்றாடம் போவதாலோ அல்லது ஆலய நிர்வாகத்திற்குப் பணத்தை வாரி இறைப்பதாலோ அருளைப் பெற்றுவிட முடியாது.

நகைபோட்டு அலங்காரம் செய்துகொள்ளச் சுத்தவெளிக்கு உடலில்லை. உணவை உண்டு உயிர் வளர்க்கச் சுத்தவெளிக்குக் குடலுமில்லை. நான் அணிவிக்கிற அலங்காரத்திற்காக எல்லாம் வல்ல எங்கும் நீக்கமற இருக்கிற தெய்வம் ஏங்கிக் கிடக்கிறது என்று எண்ணுவதும், நான் உணவிட்டுத்தான் அதன் பசி தீர வேண்டும் என நான் நினைப்பதும் முறையான இறையுணர்வு ஆகாது.

நமது சிந்தைக்கு இறையுணர்வு வேண்டும். வற்றாயிருப்பாக, பேராற்றலாக, பேரறிவாக, காலத்தின் பிறப்பிடமாக உள்ள சுத்தவெளியின் தன்மாற்றமே நாம் என்ற சத்தியம் நமது சிந்தையில் நிறைந்திருக்க வேண்டும். ஆனால் நமது செயலோ, நம்மைச் சார்ந்த உயிரினங்களிடம் அமைதல் வேண்டும். ஆகவே வள்ளற்பெருமாள் பாடினார்.

அப்பா நான் வேண்டுதல் கேட்டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்க்கெல்லாம் நான் அன்பு செயல்வேண்டும்

God is love என்றுரைத்த இயேசுபிரான் Love God என்று சொல்லவில்லை. மாறாக Love thy neighbour என்றுரைத்துச் செயல் சமுதாயத்தை நோக்கி இருக்கவேண்டும் என்று வலியுறுத்தினார்.

நமது செயலுக்கும் தெய்வத்திற்கும் ஒரு உறவு இருக்கிறது. நமது ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டல்லவா! அந்த விளைவுதான் தெய்வநீதி.

கல்லார் கற்றார் செயல் விளைவாய்க்
காணும் இன்ப துன்பவமன்

என்கிறது வேதாத்திரியம். கண்ணாடிப் பாத்திரத்தைக் கரடுமுரடான தரையில் போட்டால் உடையும். உடையும்

என்பதுதான் தெய்வநீதி. தெய்வநீதியை யாராலும் மாற்றவோ, மறுக்கவோ, அதிலிருந்து தப்பித்துக் கொள்ளவோ முடியாது.

ஒரு செயலைச் செய்வதற்கு முன்பாக அந்தச் செயலின் விளைவறிந்து விழிப்பு நிலையில் செயலாற்ற வேண்டும். ஒரு செயலைச் செய்வதா, வேண்டாமா என்று தீர்மானிக்க நமக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் அதன் விளைவு இப்படித்தான் இருக்கவேண்டுமென்று சொல்ல நமக்கு அதிகாரமில்லை. அதைத் தீர்மானிப்பது தெய்வமாகிய இயற்கை விதிகள். கர்மாவைச் செய்; ஆனால் பலன் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்காதே என்பதுவே பகவத் கீதையின் சாரம். இந்தச் சாரம் காலத்தால் சற்று மருவி "கர்மாவைச் செய்; பலனை எதிர்பார்க்காதே" என்று மாறிவிட்டது.

இன்பதுன்ப விருப்பு வெறுப்பு இவை கடந்த தெய்வநிலை யாகிய சுத்தவெளிக்கு, நேற்றைய மழையில் இன்று முளைத்த காளானாகிய நான் எதைக் கொடுக்கமுடியும்? ஊத்துக்குளி அர்பன் வங்கி உலக வங்கிக்குக் கடன் கொடுக்க முடியுமா? முடியவே முடியாது? பல கோடி அண்டங்களை அதனதன் பாதையில் இயக்குகிற அந்தப் பேராற்றலுக்கு நான் என்ன கொடுக்கமுடியும்? நானும் கொடுக்க முடியும். யாருக்கு? என்னைப் போன்ற சகமனிதர்களுக்கு நான் கொடுக்க முடியும்; கொடுக்க வேண்டும்; யாருக்கும் என்னால் கொடுக்க முடியுமோ அங்கே கொடுக்காமலும், யாருக்கு கொடுக்க முடியாதோ, அவருக்கு நான் கொடுப்பதாக நினைத்து இறுமாப்பு எய்துவதாலும் இன்று உலகெங்கும் சிக்கல்கள் பெருகிவிட்டன. உண்மையை உணர்த்திச் சிக்கல்களைக் குறைக்கும் சீரிய மார்க்கமே மகரிஷி தரும் இறைத்தத்துவம்.

உண்மையான இறைவணக்கத்திற்கு வேண்டியது உருக்கமுள்ள மனதே தவிர, ஊரை அடித்து உலையில் போட்ட பணம் அல்ல.

யாவர்க்குமாம் ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயறுகு

எனத் திருமூலரும்,

பாவித்தல் ஒன்றே போதுமடா
பரமநிலை எய்துதற்கே

எனப் பாரதியாரும் இந்த எளிமையைத்தானே சொன்னார்கள்.

இறைநிலையின் ஒரு துளிதான் மனிதன்; என்றாலும், ஏன் தவறு செய்கிறான் - மனிதகுல வாழ்வில் இன்று மலிந்துள்ள துன்பங்களுக்குக் காரணமென்ன? மனம் என்பது என்ன?, மனத்தின் மாண்பிற்கு அகத்தவம், செயலின் நேர்மைக்கு அகத்தாய்வு, மனிதனின் ஒவ்வொரு செயலுக்கேற்ப, தாம் வாழும் நாட்களிலேயே எவ்வாறு இன்பதுன்ப விளைவுகள் ஏற்படுகின்றன - அந்த விளைவுகள் எவ்வாறு அவனது சுரு மையத்தையும், சுற்றியுள்ள சமுதாயத்தையும் பாதிக்கின்றன - என்பன போன்றவற்றை யாவரும் எளிதில் புரிந்துகொள்ளும் வண்ணம், இவரது இறைத்தத்துவம் மேலும் விரிகிறது.

வேதாத்திரியம் தரும் இறைஞானமும் அறநெறியும் பழக்கத் திற்கும் விளக்கத்திற்குமிடையே தத்தளித்துக் கொண்டிருக்கும் இன்றைய இளைஞர்களுக்கும், சாதாரண மனிதராகப் பிறந்து, சரித்திர புருஷர்களாக மாற விரும்பும் நல்ல உள்ளங்களுக்கும்; உலகெங்கும் தோன்றிய ஞானக் களஞ்சியங்களை எளிய தமிழில் அறிய விரும்பும் பாமரர்களுக்கும், இல்லத்தரசிகளுக்கும் தத்துவத்தின் பல பரிமாணங்களையும், அவற்றின் அகல, நீள, ஆழங்களையும் தொட்டுவிடத் துடிக்கும் தத்துவஞானிகளுக்கும்; நாளுக்கு நாள் சிக்கல்கள் பெருகுவதால் மனமுடைந்து விரக்தியில் வாழ்கின்ற விஞ்ஞானிகளுக்கும்; புதிய புதிய படையல்களைக் காணத்துடிக்கும் இலக்கியவாதிகளுக்கும்; சாக்கடையென்றாலும் சற்றும் சலிப்படையாது அதைச் சந்தனமாக மாற்றிவிடத் துடிக்கும் சமுதாயச் சீர்திருத்தவாதிகளுக்கும்; தாவரத்தின் தியாகத்தையும், தொழிலாளர்களின் பெருமையையும், பெண்ணின் பெருமதிப்பையும் உணரத்துடிக்கும் உத்தமர் களுக்கும் என்றென்றும் உறுதுணையாக நிற்கும்.

அறிவாகவும், ஆற்றலாகவும் எல்லையற்றதாகவும் உள்ள வெட்ட வெளியின் தன்னிறுக்கத்தால் எழுந்த முதல் தன்மாற்றமே பரமாணு; பரமாணுக்களின் கூட்டே பிரபஞ்சம் என்ற மகரிஷியின் அகக்காட்சி, எந்த ஒன்று பிரபஞ்சமாகத்

தன்மாற்றம் அடைந்தது என்ற கேள்விக்கு விடையாக மட்டுமல்ல அந்த ஒன்று எப்படித் தன்மாற்றம் அடைந்தது என்ற கேள்விக்கும் விளக்கமாக அமைகிறது. இந்த விளக்கம் தத்துவத்தை முழுமையாக்குகிறது.

பொருள்கள் ஒன்றுக்கொன்று நெருங்கி வருவதற்குக் காரணம் வெட்டவெளியின் தன்னிறுக்கமே என்ற மகரிஷியின் கூற்று நியூட்டனின் ஈர்ப்பு விசையை வெளியின் இறுக்க விசையாக மாற்றுகிறது. இந்த மாற்றத்தில் விஞ்ஞானம் விரிவடைந்து பல சிக்கல்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிறது.

தான் உணர்ந்த சத்தியங்களையும் அகக்காட்சிகளையும் மகரிஷி எழுத்துக்களாக வடித்தபோது தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் கவிகளையும் பல உரைநடை நூல்களையும் பெற்றுத் தலைநிமிர்ந்து நிற்கிறது. மகரிஷியின் வரவால் தத்துவமும், விஞ்ஞானமும், இலக்கியமும் ஏற்றம் பெற்றது இந்த நூற்றாண்டின் தனிச்சிறப்பாகும்.

தத்துவத்தையும், விஞ்ஞானத்தையும், இலக்கியத்தையும் உயர்த்திய கையோடு உடல், உயிர், மன வளங்களை உயர்த்தும் தனிமனித தர்மங்களை மட்டுமல்லாது, இந்தத் தரணிக்கே பொதுவான நீதிநெறிகளை, உள் மன அமைதியிலிருந்து உலக அமைதி வரை; சீரான பொருள்துறை முதல் சிறுவர்கள் விளையாட்டு வரை; மெய்ஞ்ஞான ஆழத்திலிருந்து விஞ்ஞான உச்சிவரை அலசி ஆராய்ந்து அவை ஒவ்வொன்றும் எப்படி அமைதல் வேண்டுமென்ற வரையறைகளையும் உருவாக்கினார் வேதாத்திரி மகரிஷி. மனித குலப் பண்பாட்டின் அடித்தளமான இந்த வரையறைகள் மனிதகுலமெங்கும் சென்றடைய மகரிஷி உருவாக்கிய செயல்திட்டமே உலக சமுதாய சேவா சங்கம்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் இல்லத்தில் அவரது விருந்தினர் அறையில் இரண்டே இரண்டு புகைப்படங்கள் தொங்க விடப்பட்டிருந்தன. ஒன்று நியூட்டன், மற்றொன்று மகாத்மா காந்தி.

மகாத்மா காந்தியின் ஒப்பற்ற வாழ்வைப் பற்றி ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் ஒரு முறை கூறியது:

Generations to come, will scarcely believe that such a man ever walked on this earth in flesh and blood

மகாத்மா காந்திக்குப் பொருந்துகிற இந்த வாசகம் மகரிஷிக்கும் பொருந்தும். வாழ்க்கையின் எல்லா அடித்தளங் களையும் பற்றி அலசி ஆராய்ந்து, அவற்றிற்கான தீர்வுகளையும் தருகிற மகரிஷியின் தீர்க்க தரிசன சத்தியங்கள், வரும் சந்ததியினரைச் சென்றடையும்போது, இப்படியொரு மனிதர் இந்த மண்ணில் வாழ்ந்தாரா? என்ற கேள்வியும், திகைப்பும் எழத்தான் செய்யும். ஆனால் இப்படியொரு மனிதர் நம்மோடு வாழ்கிறாரா என்று இக்காலச் சமுதாயம் ஒரு கேள்வியை எழுப்பாதது ஒரு விந்தைதான்.

வையமெல்லாம் வாழட்டும் வாழ்க்கைவளம் காத்தினிதாய்
வளரட்டும் மெய்யறிவு வாழ்க்கை இன்பம் துய்த்தலிலே
உய்ய மெய்ப்பொருள் நாட்டம் உலகெங்கும் மக்களிடம்
ஓங்குக மேலோங்குக நம் உள்ளங்கள் ஒன்றுபட

- வேதாத்திரி மகரிஷி.

மனம்

முனைவர் ச.வே. சுப்பிரமணியன்

உலக மனிதர் அனைவருக்கும் வாழ்க்கை மூன்று வகைப்படும். ஒன்று உடல்வாழ்க்கை, இரண்டு உளவாழ்க்கை அல்லது மன வாழ்க்கை, மூன்று உயிர் வாழ்க்கை. எல்லா உயிரினங்களுக்கும் உயிர் உண்டு. உடலும் உண்டு. உளமும் உண்டு. அதனைச் செயல்படுத்துகிற திறன் மனிதத்திற்கே உரியது, உயிர்தான் அடிப்படை. அந்த உயிர் உறைவதற்கு ஒரு உடல் தேவை. எல்லா உயிர்களுக்கும் உடல்உண்டு. உயிர்கள் ஆறு வகைப்படும். இது அறிதலின் அடிப்படையில் அமைந்துள்ளது. இதனைத் தொல்காப்பியர் மிக அழகாக ஒரு நூற்பாவில் தருகின்றார்.

ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே
இரண்டு அறிவதுவே அதனொடு நாவே
மூன்று அறிவதுவே அவற்றோடு மூக்கே
நான்கு அறிவதுவே அவற்றோடு கண்ணே
ஐந்து அறிவதுவே அவற்றோடு செவியே
ஆறு அறிவதுவே அவற்றோடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே (தொல். 1526)

மரம், செடி, கொடிகள் போன்றவை ஓர் அறிவின. நத்தை, சிப்பி, சங்கு, சில கடல்வாழ் உயிரினங்கள் இரண்டு அறிவை உடையன. எறும்பு, கறையான் போன்றவை மூன்று அறிவு உடையன. வண்டு, தும்பி போன்றவை நான்கு அறிவு உடையன. விலங்கினங்கள் அனைத்தும் மனிதர்களில் விலங்காக இருப்போரும் ஐந்துஅறிவு உடையன. மனத்தால் அறிகின்ற அறிவுடையோர் ஆறு அறிவு உடையவர். மனத்திற்கு அறிதல் என்பது தொழிலாகின்றது. நிலம், நீர், காற்று, தீ, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களால் ஆயது உலகம். அதே போன்று ஐம்பூதங்களால் ஆயது உடம்பு. இதனைத் தொல்காப்பியரும், வள்ளுவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

மதிப்புறு இயக்குநர், உலகத் தமிழ்க் கல்வி இயக்கம்,
தமிழ்ர் – 627 808.

ஐம்பூதங்களால் ஆகிய ஐம்பொறிகளை மனம் அடக்கி ஆளுதல்வேண்டும். மனத்தைமீறி ஐம்பூதங்கள் செல்லும்போது வாழ்க்கையில் அமைதி குலைகிறது. சில பெரியவர்கள் பிறருக்குத் தெரியாது என நினைத்துத் தவறுகள் செய்கின்றனர். ஆனால் நம் உடலிலே இருக்கின்ற ஐம்பூதங்களும் வஞ்சமனமுடைய அந்த மனிதனைப் பார்த்துச் சிரிக்கின்றன என்று பேசுகிறார் வள்ளுவர்.

வஞ்ச மனத்தான் படிற்று ஒழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும் (குறள். 281)

மனிதனால் தான் சிந்திக்கவும், எழுதவும், எடுத்துக் கூறவும் இயலும். விலங்கினங்களுக்கும் மொழி உண்டு. மனிதனுக்கும் மொழி உண்டு. உலகில் பல மொழிகள் இருக்கின்றன.

> **மேன்மையான ஆறாவது அறிவின் சிறப்பைக் கொண்டு மனத்தூய்மையும் வினைத்தூய்மையும் பெற்று இறையுணர்வு அடைந்து பிறவிக்கடல் கடந்து உய்ய வேண்டும் என்ற இடைவிடாத முயற்சியில் பலப்பல சிரமங்களை ஏற்று வாழ்ந்து கொண்டிருப்பதே மனித இனம்.**[1]

சில விலங்கினங்கள் மனிதனைக் காட்டிலும் அறிவுடையவை யாக இருக்கின்றன. சான்றாக, நாயைக் கூறலாம். அதனுடைய நுகர்ந்து பார்க்கும் மோப்பச் சக்தியால் கொலை, களவு, செய்தோரை அதன் உதவியுடன் கண்டுபிடித்து விடுகிறோம். ஆனால் மோப்பச் சக்தியுடைய மனத்தை அறிகின்ற தன்மை மனிதத்திற்கு இருந்தாலும் அவனால் நாய் போன்று செயலாற்ற இயலவில்லை. அதற்குக் காரணம் நாயின் மோப்பச் சக்தி ஒரு வழி செல்கிறது. இவன் பலவழி செல்கிறான். அதனால் இவனுக்கு அதுபோன்று செயல்பட இயலவில்லை. இங்கு மனிதனைக் காட்டிலும் அறிவுடையது நாய் என்று சொல்லலாம். அதில் தவறு இல்லை. அது மோப்பச் சக்தி என்ற அறிவு.

மனிதத்திற்கு மிக இன்றியமையாதது மனம். மனம் இல்லையெனில் மனித வடிவத்தால் உயிரும் உடலும் இருந்தும் பயனற்ற வாழ்க்கையாகின்றது. இன்று உலகில் ஏறத்தாழ கோடிக்கணக்கில் மனநிலைப் பாதிக்கப்பட்டோர் உள்ளனர். அவர்களால் அவர்களுக்கும் பயனில்லை. சமுதாயத்திற்கும் பயனில்லை.

சமுதாயம் அவர்களைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் உள்ளது. உயிர் இல்லை என்றால் மனம் இல்லை என்பது உண்மை. ஆனால் உயிர் இருந்தும் மனம் செயல்படவில்லை யென்றால் அந்த உயிருக்கும் பயன் இல்லை. அதனால் உடலைக் காட்டிலும், உயிரைக் காட்டிலும் மிக முக்கியமானது மனம்.

மனம் என்ற சொல், மன் என்ற சொல்லின் அடிப்படையில் தோன்றியுள்ளது. மன் என்றால் நிலைபெறுதல் என்று பொருள், மனத்தால் தான் மனிதர்கள் நிலைபெறுகின்றனர். மனம் அறிவை வழிநடத்திச் செல்லவேண்டும்.

மனம் என்ற சொல்லை அதன் செயல்தன்மைகளுக்குத் தகப் பல பெயர்களால் அழைத்தனர். 1. மனம், 2. உள்ளம், 3. நெஞ்சம், 4. அகம், 5. சித்தம், 6. இதயம், 7. புந்தி, 8. உன்னம், 9. புத்தி, 10. மதி, 11. அகங்காரம், 12. முன்னம் என நாமதீப நிகண்டு சொல்கிறது.

உறுப்புகளும் மனமும்

மனித உறுப்புகளில் புறப்புற உறுப்புகளாக நகம், முடி, போன்றவற்றைச் சொல்லலாம். அவை தேவைப்படும்போது நீக்கப்படுகின்றன. நகம் மிகுதியாக வளர்ந்தால் உண்பதற்கு நகத்தின் அழுக்குகள் தொல்லையாக இருக்கும். அதனால் நீக்கி விடுகிறோம். முடியும் அதுபோன்றதே.

புற உறுப்புகளாகக் கண், மூக்கு, கை, கால், செவி, வாய் போன்றவற்றைச் சொல்லலாம். தேவைப்பட்டால் கண் ஊனமாகும்போது அக்கண்ணை எடுத்துவிட்டு மற்றொரு கண்ணைப் பொருத்தலாம். ஐம்பொறிகளாக அமைகின்றவை புற உறுப்புகளாக அமைகின்றன என்று சொல்லலாம்.

அகப்புற உறுப்புகளாக அகத்தில் உள்ளன, ஆனால் புறத்தில் எடுத்துவிடலாம், கர்ப்பப்பை, மூளை, மூத்திரப்பை, இவற்றையெல்லாம் உள்ளே இருந்தாலும் எடுத்துவிட்டு மற்றொரு உறுப்பை வைக்கலாம். இதனை அகப்புற உறுப்புகள் என்று சொல்கிறோம்.

அக உறுப்பாக மனம், அறிவு, உயிர் போன்றவற்றைச் சொல்லலாம். இவையனைத்தும் உருவமற்ற அருவப்பொருள்கள். மனம் இன்னும் ஆழமாக அக அகவுறுப்பாக ஆன்மாவாகிப்

பின்பு அவ்வான்மா இறைநிலை அடைகிறது. இதனைத்தான் இரண்டு ஒன்றாகிறது என்று கூறுகின்றனர். இறைவன், நான் என்ற இரண்டும் நான் என்ற ஆணவமாகிய அகங்காரம் முழு நிலையில் நீங்கும்போது அவனாகி விடுகிறது. அல்லது இறைத் தன்மை அடைகிறது.

மனத்தின் செயல்கள்

சங்க இலக்கிய முதல் பாரதியார் வரையுள்ள கவிஞர்கள் தம் பாடல்களுள் தமக்கு ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு, மனத்தின் செயல்களைக் கருதி உள்ளனர். அவற்றுள் நல்ல செயல்களும், தீயசெயல்களும் அடங்கியுள்ளன. அவற்றின் அடைச் சொற்களைக் கொண்டு பார்க்கும்போது நமக்குச் சில செயல்களை ஓரளவுக்குக் கணிக்கலாம்.

1. அவவுக்கொள்மனம்
2. அவிழும் மனம்
3. அன்பு கலந்த மனம்
4. ஆர்வமனம்
5. அன்பிழைத்த மனம்
6. அற்றம் நீத்தமனம்
7. ஆய்வுறுமனம்
8. அறம் திகழுமனம்
9. ஓர்ந்தமனம்
10. உருகிய மனம்
11. உவக்கின்ற மனம்
12. களித்த மனம்
13. கரவிலா மனம்
14. காதல்செய் மனம்
15. கோணா மனம்
16. குளிர்மனம்
17. களிப்புறு மனம்
18. செம்மை மனம்
19. செயல்படு மனம்
20. குறையாமனம்
21. சாந்த மனம்
22. துள்ளுமனம்
23. துளக்கமில் மனம்
24. தூயமனம்
25. தோன்றிவிரிபு மனம்
26. நல்லமனம்
27. நீள்மனம்
28. நேயமனம்
29. தெய்வமனம்
30. நசையறுமனம்
31. பரந்தமனம்
32. பரவுமனம்
33. புரைபடாமனம்
34. மன்மனம்
35. மையறு மனம்
36. மறுவிலாமனம்
37. மனமெனும் தோணி
38. மனவிளக்கு
39. மனமே கோயில்
40. விரிந்த மனம்
41. வஞ்சமிலா மனம்
42. வெள்ளைமனம்
43. உன்னுமனம்
44. கனி மனம்

இவை போன்றன.

மனத்திற்கு வேண்டாத தன்மைகளும் பல காணப்படுகின்றன.

1. அழுக்கு மனம்	2. அடிமை மனம்
3. அற்ப மனம்	4. அறிவில் சிறுமனம்
5. இரங்கா மனம்	6. இரும்பு மனம்
7. இருள்உறுமனம்	8. ஈனம் பழுத்த மனம்
9. உழலுமனம்	10. ஓடுகின்ற மனம்
11. கல்மனம்	12. கல்லினையொத்த வலியமனம்
13. கரியமனம்	14. கள்ளமுள்ள மனம்
15. கல்லாமனம்	16. கருங்காமனம்
17. கதவுமனம்	18. கன்றிய மனம்
19. கொடுமைசெயு மனம்	20. கொடியமனம்
21. கொதிக்கும் மனம்	22. கறுத்த மனம்
23. கவர் மனம்	24. கட்டுங்கடங்கா மனம்
25. காழ்த்த மனம்	26. குரங்கு மனம்
27. சவலை மனம்	28. சிறு மனம்
29. சஞ்சலப்படு மனம்	30. செற்றமனம்
31. சோகமனம்	32. திருந்தா மனம்
33. துன்புறுத்த மனம்	34. துன்று மனம்
35. தொடக்கறா மனம்	36. தெருளுடைமனம்
37. தேட்டுகடங்காமனம்	38. பாழான மனம்
39. பாழ்த்த மனம்	40. புல்லிய மனம்
41. பேய் மனம்	42. பொறாமை மனம்
43. பரிவிகத்த மனம்	44. பேதை மனம்
45. பித்தேறியுழல் மனம்	46. பாவி மனம்
47. புரைசேர்மனம்	48. பித்த மனம்
49. புழுங்கு மனம்	50. பேயாயுழல மனம்
51. மனமெனும் தீ	52. மனப்பேய்
53. மனப்பாம்பு	54. மனவஞ்சகமாகக் கடல்
55. மனக்கருங்கல்	56. மனக்குகை
57. மனப்பம்பரம்	58. மனம் பிள்ளைக்குரங்கு
59. மனங்கங்குல்	60. மனமான சிறுவன்
61. மனப் பீடம்	62. மனச்சிறுபுள்
63. மாயாமனம்	64. மையல் கொள்மனம்
65. மருளார் மனம்	66. மாயங்கலந்த மனம்
67. மருவிய மனம்	68. மையலுள்ள மனம்
69. மலங்கழிகின்ற மனம்	70. மையல் கூர்மனம்

71. மனம்பொழி மனம் 72. முரட்டுக்கடை மனம்
73. மருள்வலையிலகப்பட்ட மனம்
74. மருள் நிறைந்த மனம் 75. வஞ்சமனம்
76. விலங்குமனம் 77. மும்மலமடஞ்செறிமனம்
78. மால்கொள்ளும்மனம் 79. வணங்காமனம்
80. வேகின்ற மனம் 81. வினைமனம்
82. வெறுப்புமனம் 83. வெங்கதம் மனம்
84. வீசியமனம் 85. வீண்செலவு மனம்
86. வாதுநினைக்கு மனம் 87. வேகாத மனம்

இவ்வாறு பல உண்டு. மனம் நல்லதைச் செய்வதைவிடத் தீமையை மிகுதியாகச் செய்கிறது என்பதை இதிலிருந்து உணர்கிறோம்.

திருவள்ளுவர்

திருவள்ளுவர் சமுதாயவியல் அறிஞர், சமுதாயத்தில் வாழ்வதற்கு எவை தேவை என்பதுதான் அவருடைய நோக்கமாக இருந்தது. தத்துவமும், அறிவியல் நோக்கமும், இக்காலத்து வளர்ந்த நிலையில் அக்காலத்து வளரவில்லை. அதனால் அதைப் பற்றி அதிகமாகச் சிந்திக்கவில்லை.

மனம் என்ற சொல் திருக்குறளில் இருபது இடங்களில் வருகிறது. அறத்துப்பாலிலும், பொருட்பாலிலும் 108 அதிகாரங்களுக்கு இருபது இடங்கள். மனம் என்ற சொல் இன்பத்துப்பாலில் இல்லை. இன்பத்திற்கு மனம் நெஞ்சு ஆகி நெகிழ வேண்டும் என்பது வள்ளுவர் கருத்து. அவர் அறம் என்பதை விளக்கும்போது மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தும் அறன், ஏனையவை அறன் ஆகா என்று அவர் கருதுகிறார். 108 அதிகாரங்களில் மனம் என்ற சொல் இருபது இடங்களில் வந்தாலும் ஒரே அதிகாரத்தில் மனம் என்ற சொல் ஏழு இடங்களில் வருகிறது. காரணம் சிற்றினம் சேர்ந்தால் மனம் கெட்டுப்போகும் என்பதை அவர் உணர்ந்து சிற்றினம் சேராமை (46) என்ற அதிகாரத்தில் ஏழு இடங்களில் தருகின்றார்.

1. மனத்தானும் மாந்தர்க்கு உணர்ச்சி இனத்தானான்
இன்னான் எனப்படும் சொல் (குறள் 453)

2. மனத்துளது போலக்காட்டி ஒருவருக்கு இனத்து
உளது ஆகும் அறிவு (குறள் 454)

3. மனம் தூய்மைசெய் வினைத்தூய்மை இரண்டும்
இனம்தூய்மை துவா வரும் (குறள் 455)

4. மனந் துயார்க்கு எச்சம் நன்றாகும் (குறள் 456)

5. மனம் நலம் மன்னுயிர்க்கு ஆக்கம் (குறள் 457)

6. மனநலம் நன்குடையராயினும் சான்றோர்க்கு
இனநலம் ஏமாப் புடைத்து (குறள் 458)

7. மனநலத்தின் ஆகும் மறுமை (குறள் 459)

குறளில் மனம் என்ற சொல் பயிலும் இடங்கள் 7, 34, 253, 278, 295, 317, 371, 453, 454, 455, 456, 457, 458, 459, 661, 822, 823, 825, 884, 920.

மனம், நெஞ்சு, அகம், உள்ளம் போன்ற பல சொற்கள் மனத்தைக் குறிப்பிட்டாலும் செயற்பாடுகளுக்குத் தகச் சொற்கள் அமைகின்றன. அதில் உள்ளம் என்ற சொல் வினை அடிப்படையில் தோன்றிய சொல். உள்ளுதல் என்றால் நினைத்தல் என்று பொருள். உள்ளி, உள்ளினான், உள்ளுவான், உள்ளல், உள்ளப்படும், போன்ற சொற்கள் திருக்குறளில் வினை அடிப்படையில் வந்துள்ளன. மனத்தின் உறுதியைக் காட்டுவது உள்ளம் என்றசொல். உள்ளம் என்ற சொல் திருக்குறளில் அறத்துப்பாலில் ஒரு இடத்திலும், பொருட்பாலில் எட்டு இடங்களிலும், இன்பத்துப்பாலில் ஐந்து இடங்களிலும் வருகிறது. பொருள் ஈட்டுவதற்கு உள்ளம் தேவை. அதனால் பொருட்பாலில் எட்டு இடங்களில் வருகிறது.

உள்ளம் உடைமை உடைமை பொருள் உடைமை
நில்லாது நீங்கி விடும் (குறள் 592)

வெள்ளத்து அனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு (குறள் 595)

திருமூலர்

உள்ளம் பெருங்கோவில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத்தெளிந்தார்க்கு சிவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காணா மனிவிளக்கே (திருமந்திரம்)

மனம் உறுதியான நிலையிலும் தெளிவான நிலையிலும் உள்ளம் ஆகிறது. உள்ளம் அறிவோடு இணைந்து இறைநிலை அடைகிறது. அதனைத்தான் தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம் என்று கூறுகிறார். இதனை இன்னும் விளக்கமாக யோகிராஜ் மகரிஷி அவர்கள் இவ்வாறு கூறுகிறார்.

> மனதை அதன் அலை விரைவைச் சிறுகச்சிறுகக் குறைத்து நிலைப்படுத்தி, அறிவாக உள்ள தானே அதுவாகி காண்பது மெய்யுணர்வு. தானே அதுவாகி அறிந்துகொள்ளக்கூடிய நிலையில்தான் அவனே நான், நானே அவன் என்று உணரக்கூடிய தெளிவு உண்டாகிறது.
>
> மனதுக்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பு என்ன என்றால் அலையும், நிலையும் போன்றதே அந்தத் தொடர்பு, மீண்டும் அதை ஆழமாக நினைவு கொள்வோம்.
>
> அசையாத நீராக இருக்கக்கூடிய நிலையிலே இறை நிலை என்று சொல்கிறோம். அசையுமிடத்திலே அலை என்கிறோம். அங்கே நிலைத்த நிலையில் அறிவு. இங்கே அலையும் செயலில் மனம்.[2]

திருநாவுக்கரசர்

பக்தி இலக்கியத்தில் இறைவனை எண்ணுகின்ற உணர்வு மிகுதியாக இருப்பது இயல்பு. வாழ்க்கை என்பது மிகப்பெரிய கடல் அல்லது நீர்த்தேக்கம். அதில் மனிதம் பயணம் செய்கிறது. மனம் தோணியாகிறது. தோணியைச் செலுத்தக் கோலைப் பயன் படுத்துகிறோம். அது அறிவாகிறது. ஐம்பொறிகளால் ஏற்படும் இன்பத்திற்கு இடையூறு வரும்போது கோபம் ஏற்படுகிறது. ஐம்புலன்கள் காரணமாக ஆணவமும் ஏற்படுகிறது. ஆணவம் என்பது கடலில் உள்ள மிகப்பெரிய பாறையாக உள்ளது. ஆணவம் காரணமாகத்தான் அனைத்தும் அழிகின்றன. அவ்வாறு ஆணவம் ஏற்படும்போது இறைவனை நினைத்து அவ்வாணவத்தை நீக்குகின்ற உணர்வைத் தரவேண்டும் எனக் கேட்கிறார் நாவுக்கரசர்.

> மனம் எனும் தோணிபற்றி மதி எனும் கோலை ஊன்றிச்
> சினம் எனும் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும்போது

மதன் எனும் பாறை தாக்கி மறியும்போது அறியஒண்ணாது
உனை உனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடையகோவே
(நாவுக்கரசர் - தேவாரம் - 4613)

இராமலிங்க சுவாமிகள்

இராமலிங்க சுவாமிகள் முழுநிலை பெற்றவர், உலகத்தில் சமாதி இல்லாத சித்தர். ஐம்பூதங்களால் ஆய உடலை ஐம்பூதங்களோடு இணைத்துவிட்டாரோ என்று இன்றும் நம்பும் நிலையில் அவர் இறுதி அமைந்துள்ளது.

அவர் மனம் பற்றித் தொடக்கக் காலத்தில் பல செய்திகளைத் தருகிறார். மனம் இறைவனை உணராத காரணத்தால் இறைவனைப் பற்றிக் கூறுகின்ற தனது குருவையும் மதிக்கமாட்டான். இறைவனாகிய உன்னுடைய பெருமைகளைப் பேசுகின்ற கல்வியையும் கற்க மாட்டான். சும்மாவும் இருக்க மாட்டான். உள்ளத்தில் காம எண்ணங்களை நினைத்துக் கொண்டு அதில் கிடந்து துன்புறுவான். கோபம் என்னும் கொடிய நீரில்லாத காட்டில் துன்புறுவதைப் போலத்தான் துன்புறுவான். பேராசை காரணமாகப் பிறருக்குக் கொடுக்காமல் குறுகிய புத்தியுடன் குகைக்குள் வாழ்வதுபோன்று வாழ்வான். ஆசை, மயக்கம் காரணமாக வாழ்க்கையை இருளாக்கி அங்குச் சொல்வான். மனிதர் உருவாக்கிய மதம் என்ற செய்யப் பட்ட குன்றில் ஏறிக் கீழே விழுவான். அதனோடு தொடர்புடைய பொறாமை, பகைமை, ஆகிய படுகுழியில் உள்ளே இறங்குவான். நான் சொன்னதைக் கேட்கமாட்டான், எனது செயலுக்குள் அடங்கமாட்டான், அதற்கு நான் என்செய்வேன், அதனால் அத்தகைய மனத்தை அடக்கி ஆள்வதற்குத் துணைபுரிக எனக் கந்தகோட்ட கந்தனிடம் வேண்டுகிறார் இராமலிங்க சுவாமிகள்.

மனமான ஒரு சிறுவன் மதியா குருவையும்
மதித்திடான் நின் அடிச்சீர்
மகிழ்கல்வி கற்றிடான் சும்மாஇ ரான்காம
மடுவினிடை வீழ்ந்துசுழல்வான்
சினமான வெஞ்சுரத் துழலுவன் உலோபமாம்
சிறுகுகையி னூடுபுகுவான்
செறுமோக இருளிடைச் செல்குவான் மதம்எனும்
செய்குன்றில் ஏறிவிழுவான்
இனமான மாச்சரிய வெங்குழியின் உள்ளே
இறங்குவான் சிறிதும் அந்தோ

என்சொல்கே ளான்எனது கைப்படான் மற்றிதற்
கேழையேன் என்செய்குவேன்
தனநீடு சென்னையில் கந்தகோட்டத்துள்வளர்
தலம்ஓங்கு கந்தவேளே
தண்முகத் துய்யமணி உண்முகச் சைவமணி
சண்முகத் தெய்வமணியே (அருட். 22)

சுவாமி சிவானந்த பரமஹம்சர்

அவருடைய சித்தவேதம் என்ற நூல் ஒன்பது பதிப்புகள் வந்துள்ளன. அதில் அவர் கூறியுள்ள மனம் பற்றிய எண்ணங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இங்குக் குறிப்பிட்ட பக்கங்கள் சித்த வேதம் ஆறாம் பதிப்பு 1995 உள்ளபடி கொடுக்கப் பெற்றுள்ளது.

மனமே குரு

1. அவனவனுக்கு அவனுடைய மனதே குருவாகும். வேறு குரு இல்லை என்கிற நிலைமை இல்லாததாகும். மனது இல்லையெனில் யாதொன்றும் இல்லை. எல்லாம் மனதிலிருந்து தான் உண்டாகின்றன. (ப. 10)

2. மனம் காரணமும் மற்றெல்லாம் காரியமும் ஆகின்றன. ஆகையினால் காரணம் என்பது அவனவனுடைய மனமும், காரியம் என்பது உலகமும் ஆகிறது (ப. 24).

3. அதனால் தான் பந்தத்திற்கும் மோட்ஷத்திற்கும் மனமே காரணம் என்றும் குரு சிஷ்யன் என்கிற நிலைமை இல்லை என்றும் சொல்லக் காரணம். அவனவனுக்கு அவனவன் மனமே குருவாகும்.

மனத்தின் தோற்றம்

4. மனம் ஜீவனிலிருந்து உண்டாகின்றது (பக். 29-30).

மனத்தின் இருப்பிடம்

5. மனத்துடைய இடம் புருவமத்தியம். புரு என்று சொல்வது இரண்டு கண்களுடைய புருவங்கள். அதனுடைய மத்தியத் திற்கே புருவமத்தியம் என்று சொல்வது. அதுவே ஆகும் மனத்தினுடைய இடம். அந்த இடத்திற்கே இருதயம் என்று பெயர் (ப. 33).

6. புண்ணியபாவங்கள் மனத்திலிருந்தே உண்டாகின்றன (ப. 57).

மனமே திரி

7. சடமாயிருக்கின்ற விளக்கில் கருமமாய் வாயுவாய் இருக்கின்ற தைலத்தை நிறைத்து அதில் மனமாயிருக்கின்ற திரியை போட்டு ஆத்மாவாகின்ற தீபத்தினால் எரிந்துகொண்டிருக் கின்றதாகும் இக்காணுகின்ற உலகம் (ப. 50).

மனமே சந்திரன்

8. சந்திரன் என்பது மனமாகும். சந்திரமண்டலமென்று சொல்லப்படுகின்ற மனோமண்டலம் ஆகும் (ப. 61).

9. பிராணன் என்பது சூரியனும், அபானன் என்பது சந்திரனும் ஆகும். அவ்விதம் அபானனாயிருக்கின்ற சந்திரனாகும் மனம். அதனால் பிராணயிருக்கின்ற சூரியனும் மனமாகின்ற சந்திரனும் ஐக்கியமாகின்றதாகும். ஹடயோகம் (ப. 322).

மனமே விஷ்ணு

10. விஷ்ணுவாயிருக்கின்ற மனமும், விஷ்ணுவாகிய மனதிலிருந்து கீழ் முகமாய் அதாவது அடிப்பாகத்தில் பிருதிவியாயிருக்கின்ற பிரம்மா அந்தகரமாயும் கெட்டியாயுமிருக்கின்ற அகங்காரமும் ஆகும் (பக். 117-119). விஷ்ணுவான மனமும் (ப. 209), அந்த மனமாகும் விஷ்ணு (ப. 210). அந்த விஷ்ணுவாகின்ற மனமாகும் விஸ்வத்தை அதாவது உலகத்தை பரித்து அதாவது ஆண்டு கொண்டு இருக்கிறது. விஸ்வம் என்பது உலகு, இந்த உலகம் மனதாகின்ற விஷ்ணு இல்லையேல் உண்டாகிறதில்லை (ப. 227).

மனமே நீர்

11. ஜலமாகிய மனமாய் (ப. 115).

மனமே சக்தி

12. நம்மில் புருஷனாக சிவனாக இருக்கின்ற ஜீவன் வெளியே வியாபித்து சலனம் உண்டானபோது சக்தியாகித் தீருகின்றது. அந்த சக்தியாகும் மனம். அந்த மனமாகின்ற சக்தியிலிருந்துயாகும் மனம், நான் என்றும் அபிமானிக்கின்ற அகங்காரமாகிய நபும் கஸம் அதாவது

அலியின் உற்பவம் (ப. 167), சர்வமும் தன்னுடைய ஜீவசக்தியாய் இருக்கின்ற மனமென்று அறியப்படும், அப்போது அந்த ஜீவசக்தியாகின்ற மனம் தன்னில் தானே அடங்கித் தானாயிருக்கும்.

மனமே சுக்கிலம்

13. அந்த மனம் தான் சுக்கிலம். அச்சுக்கிலத்திலிருந்துதான் சிருஷ்டி. அந்த சிருஷ்டி உருவம். அந்த உருவமே விசாரம்.

14. பிரம்மாவிற்கு நான்கு முகங்கள், அவை மனம், சித்தம், புத்தி, அகங்காரம். இந்த நான்கும் இல்லாமல் யாதொன்றும் உண்டாவதற்கு முடியாது (ப. 215).

மனமே பரமாத்துமா

15. அந்த ஜீவன் தன்னிலிருந்து வெளியினுள்ளில் வாயு ரூபமாகச் சலித்துகொண்டிருப்பதுக்கு பரமாத்துமா என்று பெயர். அந்த பரமாத்துவேயாகும் மனம். அந்த மனமாகும் விஷ்ணு. மனமாகிய பிம்பத்தில் பிரதி பிம்பத்துக் காணப்படுவன எல்லாம் நம்முடைய ஜீவனே ஆகும்.

அருட்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி

இவர் வாழ்க்கை வள உயர்வுப்படிகள் ஐந்து என்ற நூலில் மன வளம் பற்றித் தெளிவாக அறிவியல் நோக்கிலும், தத்துவ நோக்கிலும் தம் கருத்துகளைத் தருகிறார். மகரிஷி யோகி தன்மன்றத்திற்கு மனவளக்கலைமன்றம் என்றே பெயர் தந்துள்ளதிலேயே அவர் மனத்திற்குக் கொடுத்துள்ள முக்கியத்துவம் தெரிகிறது.

> பேரறிவு என்னும் எல்லாம் உணரும் ஆற்றல்தான். அதன் முழுமையின் அலை இயக்கமாகி மனித மனமாகத் திகழ்கின்றது. இருப்பு, இயக்கம் என்னும் இரண்டு தத்துவங்களாக இயற்கை விளங்குகின்றது. இருப்பு நிலையில் உள்ளதுதான் இறைவழி. இதுவே சிவம், தெய்வம், பிரம்மம் என்றும் வழங்கப்படுகிறது. எல்லாத் தோற்றங்களுக்குள்ளும் அலைநிலையில் உள்ள காந்தம்தான் அழுத்தம், ஒளி, சுவை, மனம் என்ற சிறப்பு நிகழ்ச்சிகளாகத் தன் மாற்றம் பெற்று விளங்குகின்றது.[3]

உடலுக்கும், மனதுக்கும் இயக்க ஆற்றலாக இருப்பது சீவ காந்தம் ஆகும். சீவ காந்தம் என்பதோ இறை நிலை அதன் நுண்ணியக்க மூலமாகவேதான் மூலம் தோன்றிய அலையும் சேர்ந்த ஒரு கூட்டு ஆற்றல்தான். இந்தப் பேராற்றலானது கருமையம் எனும் மூலாதாரத்தில் மையம் கொண்டு, உடல் முழுவதும் அலையலையாகப் பரவிப் புலன்கள் மூலம் வெளியேறிக் கொண்டிருக்கும் நிலையில் மனமாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. இதே மனத்தை அதன் இருப்பு நிலையான இறைநிலையை நோக்கக் கூடிய ஓர்மைநிலையே அகத்தவம் ஆகும்.[4]

மனம் என்ற மதிப்புக்குரிய மாபொருளை மனதால் உணரவேண்டும். மனம் என்பது காந்த அலையாக இருப்பதால் அது இயக்கத்தில் சுழற்சி அலைகளை உடையதாக இருக்கிறது. அறிவியல் அடிப்படையில் மனத்தின் சுழற்சியில் அளக்கின்ற கருவியைக் கொண்டு ஆராய்ந்தபோது அது வினாடிக்கு ஒன்று முதல் நாற்பது சுழல் வரையில் இயங்கிவரும் உண்மையை விஞ்ஞானிகள் கண்டுள்ளனர்.[5]

மனிதமனம் ஜீவகாந்த ஆற்றலின் அலை இயக்கமென்று உணர்ந்தோம்.[6]

மனத்துக்கு அடித்தளம் இறையாற்றல்.[7]

மன இயக்க வகைகளாகத் தூக்கம், கனவு, வருங்காலம் உணர்தல் என்ற மூன்று நிலையில் தருகிறார்.

மனத்தின் அலைசுழற்சிகள் நான்கு நிலைகளில் அமைகின்றன. அவை.

1. பீட்டா அலை
2. ஆல்பா அலை
3. தீட்டா அலை
4. டெல்டா அலை

பீட்டா அலை என்ற நிலை வினாடிக்குப் பதினான்கு முதல் நாற்பது வரையில் சுழல்விரைவு அமைகிறது. இதனை உணர்ச்சி நிலை என்று சொல்லலாம்.[8]

அமைதி அலை என்னும் ஆல்பா அலை வினாடிக்கு எட்டு முதல் பதின்மூன்று வரையில் நடைபெறுகிறது. புலன்களைக் கடந்து பிரபஞ்சம், இறைநிலை, மனநிலை, இவைகளை

நினைந்து மனித மனம் இயங்கும்போது ஆல்பா அலையில் தான் இயங்கும். இந்த நிலையில் நிற்கப் பழகிக்கொண்டால் மனம் உணர்ச்சி வயப்படாது. ஆராய்ச்சி வழியிலேயே வாழ்வு அமையும்.

தீட்டா அலை ஒரு வினாடிக்கு நான்கு முதல் ஏழு வரையில் ஓடிக்கொண்டிருக்கும். இந்த மனநிலையை அடைந்தவர்களுக்கு விஞ்ஞானம் மற்றும் மெய்ஞ்ஞானம் ஆராய்ச்சிகளை நடத்துவதற்குச் சுலபமாக இருக்கும்.

பிரபஞ்சம் என்பது எல்லாக் கோள்களும் சூரிய மண்டலங்களும் ஒன்றிணைந்த பெருங்கோளம் ஆகும். இவை அனைத்தையும் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் அழுத்திப் பிடித்துக் கொண்டு இருப்பது இறைவெளி என்னும் பேராற்றல் ஆகும். மனதை விரித்து இந்த நிலையிலேயே நின்று ஒருமையில் பழகி வரவர, படிப்படியாக மனச்சுழல் வேகம் குறைந்து வினாடிக்கு ஒன்று முதல் மூன்று வரையில் ஆன டெல்டா அலையில் அமைந்தியங்கும்.

மனமதுதன் மயக்கநிலை தெளிந்துஅதன் மூலம்
மறைபொருளாம் இறைவெளியே அறிவுஎனக்கண்டால்,
மனம்சிறந்து அறிவாகும் இறையாம் அவ்விரிவில்
மயக்கமெலாம் ஒழிந்தறிவு பேரொளியாய்த் திகழும்
மனம்என்னும் புதினத்தை எல்லாரும் உணர
மனம்மீது மனம் வைக்கும் குண்டலினி யோகம்
மனம்விரும்பும் அனைவருக்கும் கற்றுத்தருகின்ற
மனவளக் கலைக்கல்வி உருவாக்கி உள்ளேன்.[9]

மனம் புலன் உணர்வினில் மயங்கிட மாயை ஆகும்
மனம் உயிர் வெளியினில் மருவித் தோய்த்திட
மனம் விரிந்தறிவெனும் மகாபதம் எய்திடும்,
மனம் அறிவாகிய மனிதனும் தெய்வமே
மனம் மாய என்பார்க, மனநிலை மாற்றத்தை
மனம் மாய்வதே இல்லை, மனம் மெய்ப்பொருளாகி
மனம் அறிவாக மறுபிறப்பு எய்திடும்
மனம் அறிவானபின் மரணமில்லாநிலை
மனம் இயற்கையின் மாபெரும் நிதியலோ
மனமதைத் தாழ்த்திட மயக்கத்தால் துன்பமே
மனமதை உயர்த்தினால் மட்டில்லா இன்பமாம்
மனதிலே உள எல்லாம் மற்றெங்குத் தேடுவீர்?[10]

மனம் அலை, அதன் அடித்தளம் அல்லது உட்பொருளோ இறைநிலை. இறைநிலையைத் தொடும் அலையானது இறைநிலையோடு இணைந்து பரவி ஊடுருவிப் பேரியக்க மண்டலம் முழுமைக்கும், அதற்கும் மேலாகச் சுத்தவெளியாகிய இருப்பு நிலைக்கும் செல்லவல்லது. எனவே, மனம் ஊடுருவ முடியாத இடமோ, பொருளோ இல்லை. மேலும் அலைஇயக்கத் தத்துவப்படி அந்த மன அலையில் என்ன கருத்து அடங்கி உள்ளதோ, அதே கருத்தை அது மோதும் இடத்திலும் தூண்டி செயலை விளைவிக்கும்."

இங்கு நாம் பழங்காலத்தில் கூறப்பட்ட அட்டமா சித்திகள் பற்றியும் நினைக்கலாம். அட்டமாசித்திகள்: 1. அணிமா, 2. லகிமா, 3. மகிமா, 4. பிராப்தி, 5. கரிமா, 6. பிராகாமியம், 7. ஈசத்துவம், 8. வசியத்துவம்.

1. ஓராண்டு சமாதியில் பழகினால் அணிமா சித்தி கை கூடும். இதில் கைவந்தவன் பஞ்சைக்காட்டிலும் இலேசானவனாக இருப்பான். அவனை வெல்லமுடியாது.

2. லகிமா என்பது மிக லேசான தன்மை. இந்தச் சித்தியை அடைந்தவன் பாலைப்போன்ற வெண்மையான பொருளாய் எங்கும் பரவி உண்மைப்பொருளை உணருவான்.

3. மகிமா என்பது பிரகிருதியைப் பூசித்தால் ஆகாயம் போல் தேகம் விரிந்து பெரிதாதல். இது சித்தித்தவர் ஞானம், உலகம், பொருள், எல்லாம் தன் வழியாகவே தழைத்திடும்.

4. பிராப்தி என்பது எல்லாவற்றையும் இருந்த நிலையிலிருந்து கொண்டே அமையும்.

5. கரிமா என்பது போவதும் வருவதும் இன்றிப் பூதங்கள் எல்லாவற்றையும் தன்னுள் அடக்கித் திண்மையாதல்.

6. பிராகாமியம் என்பது விளக்கொளி எங்கும் ஊடுருவுவது போலப் பூமியில் முழுகி எழுதல் முதலிய இச்சித்த காரியங்களை முடித்தல்.

7. ஈசத்துவம் என்பது இறைவனைப்போல் ஐந்தொழில் செய்தல்.

8. வசித்துவம் என்பது எல்லாவற்றையும் தன்வசப்படுத்தி அணுகும் தன்மை. எங்கும் தானாய் மலருள் மணம்போல் வாழ்வார். அவருக்கு நமன் இல்லை.

மனமது செம்மையால் மந்திரம் செபிக்கவேண்டா
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்தவேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்தவேண்டா
மனமது செம்மையானால் மந்தாரம் செம்மையாமே

(அகத்தியர் ஞானம் - 1)

அடிக்குறிப்புகள்

1. வாழ்க்கை வள உயர்வுப்படிகள் ஐந்து, ப.
2. இறையுணர்வும் அறநெறியும், 5ம் பதிப்பு, 2003, ப. 9.
3. வாழ்க்கை வள உயர்வுப்படிகள் ஐந்து, ப. 21.
4. மேலது. ப. 30
5. மேலது. பக். 3-4
6. மேலது. ப. 39
7. மேலது. ப. 40
8. மேலது. ப. 41.
9. மேலது. ப. 33.
10. மனம், ப. 44.
11. செயல் - விளைவுத் தத்துவம், ப. 55.

துணை நூல்கள்

1. **மனம்**, யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, முதற்பதிப்பு, 1999.
2. **மதமும் மனிதனும்**, தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், 2ஆம் பதிப்பு, 2002.

3. **சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள்**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், 2ஆம் பதிப்பு, 2002.

4. **உலக சமுதாய வாழ்க்கை நெறி**, தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், 2ஆம் பதிப்பு, 2002.

5. வாழ்க்கை வள உயர்வுப்படிகள் ஐந்து, அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், 7ஆம் பதிப்பு, 2003.

6. அறிஞர்களின் கடமை, தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், முதற்பதிப்பு 2002.

7. செயல் - விளைவுத் தத்துவம், யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், நான்காம் பதிப்பு, 2002.

8. இறையுணர்வும் அறநெறியும், யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஐந்தாம் பதிப்பு, 2003.

9. சித்தவேதம், சிவானந்த பரமஹம்சர், சித்தசமாஜம் வடகரை, கேரளம், 9ஆம் பதிப்பு, 2005.

10. தமிழர் கண்ட மனம், கரு. நாகராசன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், முதற்பதிப்பு, 1980.

11. மனிதம், ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழ்க் கல்வி இயக்கம், தமிழூர், 1995.

12. மனமும் உயிரும், ச.வே. சுப்பிரமணியன், சைவப்பிரகாசச் சபை, திருவனந்தபுரம், 1996.

13. உடல் உள்ளம் உயிர், ச.வே. சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 108, 2004.

கட்டுரைகள்

1. திருக்குறளில் உள்ளம், அன்னிதாமசு, பக். 21-45, திருக்குறள் முழக்கம், 2002.

1. திருக்குறளில் நெஞ்சம், ச. சிவகாமி, பக். 46-61, திருக்குறள் முழக்கம், 2002.

இளைய சமுதாயத்திற்கு வேதாத்திரியம்

பேராசிரியர் M.K. தாமோதரன்

உலகம் அறிவியலின் உச்சம் காண விழைகிறது. அதில் மக்கள் அமைதியும், நிறைவும், பெற்று வாழ இன்றைய இளைய தலைமுறை தயாராக வேண்டும். அவர்களுக்குக் கொடுக்கப் பெறும் கல்வி எதிர்காலச் சூழ்நிலையை எதிர்கொள்ளும் ஆற்றல் பெற்றதாக அமைய வேண்டும். எழுத்தறிவு, தொழிலறிவுடன், உடல் நலத்தையும், உயர்ந்த மனவளத்தையும் பெறுகின்ற கல்வியாக இருக்க வேண்டும். மனித வாழ்வில் நட்பு நலம் காத்து வாழ இளம் வயதிலேயே ஒழுக்கம், கடமை, ஈகை என்ற அறநெறியை உள்ளுணர்வாகப் பெற்று வாழத் தன்னை அறியும் கல்வி வேண்டும்.

பருவத்தே பயிர் செய்தல் அவசியம். தீய பழக்கங்களை இளமைப் பருவத்தில் பழகிய பிறகு "பட்டுத்திருந்துதல்" என்பது கால விரயமாகும். அதனால் சமுதாயத்திற்கு நன்மை விளையாது. ஆன்மாவும் தூய்மை கெட்டு வினைப்பதிவுகளைப் பெருக்கிக் கொள்ளும். காலத்தால் அங்கே திருத்தம் செய்தாலும் மனம் அதை ஏற்க முடியாமல் வருத்தமுற்று, பழக்கத்திற்கும் விளக்கத்திற்கும் இடையே போராடிக் கொண்டு இருக்கும். மாணவர்களை இளமையிலேயே மனத்தூய்மை பெறச் செய்வது களிமண்ணில் எழுதுவதைப் போன்று எளிதன்றோ!

தன் இளைய சதோரனைத் துன்புறுத்தி இயற்கைக்கு மாறாக இன்பம் காணும்போக்கு, சில மாணவர்களிடையே 'ரேக்கிங்' என்ற பெயரில் பரவலாகக் காணப்படுகின்றது.

ஒருவர் சினவயப்பட்டால் அது மற்றவருக்கும் பற்றிக் கொள்வது போல, ஒரு மாணவனுக்கு எழுச்சி பெறும் இந்த ஐந்தறிவின் குணம் மற்ற மாணவர்களுக்கும் எளிதில் பற்றிக்

துணைத் தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்

கொள்ளும். ஆரம்பத்தில் விளையாட்டாகக் கொள்ளும் இந்தக் குணம் மனத்தின் இயல்பறியாத அவர்களின் கருமையத்தில் பதிவாகி வாழ்க்கை முழுவதும் வழித்துணையாக வரும்! பிற்காலத்தில் சூழ்நிலையின் காரணமாக இக்குணம் எழுச்சி பெறும் போதெல்லாம் எளியோரையும், ஏழ்மையையும், சிறுமைப்படுத்தி வார்த்தைகளால் மற்றவர்கள் மன்தை வருத்தும் குணமாக மாறிவிடும்!

அதற்கு ஆட்படும் மாணவருக்கு உடலிலும், உள்ளத்திலும், உண்டாகும் மாற்றம், பயம், கோழைத்தனம், பழிவாங்கும் உணர்ச்சி இவை மனதில் பதிவாகி இருப்பாகி விடும். எதிர்காலத்தில் இதன் வெளிப்பாடாக முன்கோபம், பிறர் துன்பத்தில் இன்பம் காணல், ஆணவம் போன்ற குணங்களைச் சூழ்நிலைக்கேற்பத் தோற்றுவித்து மனித உள்ளத்தில் இயல்பாக மலரும் அன்பையும், கருணையையும், வற்றச் செய்துவிடும்! இன்றும் சில இளைஞர்கள் வளரும் பருவத்தில் அறிவைக் கெடுக்கின்ற போதைப் பொருள், புகைப்பிடித்தல் மற்றும் மதுவிற்குப் பழக்கப்படுகிறார்கள். பலர் இன்பம் காண உடலுக்கு ஆதாரமான உயிர்ச்சக்தியை, அதன் பெருமையையும், மதிப்பையையும் அறியாமல் வீணடித்துக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு மாணவரையும் குடும்பத்திற்கும், சமுதாயத் திற்கும், பயன்படத்தக்க மேலோனாக மாற்றுவது சமுதாய நலம் விரும்பும் கல்வியாளர்கள், அறிஞர்கள், சிந்தனையாளர்களின் கடமையாகும்.

"மக்களின் ஆன்மீக லௌகீகக் கல்வியைப் பற்றியே கனவுகண்டு அதைப்பற்றியே சிந்தித்து அதைப்பற்றியே பேசிவரும், ஒருவரது உதாரண வாழ்க்கை, ஒழுக்க நெறி, விஞ்ஞானத்தோடு கூடிய ஆன்மீகம் இவை இணைந்த கல்விதான் நம் நாட்டிற்குத் தேவை" என்றார் சுவாமி விவேகானந்தர்.

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி என்ற ஒரு தெய்வீகப் புருஷரின் உதாரண வாழ்க்கையுடன் கூடிய வழிகாட்டுதலோடு அமைந்ததுதான் உலக சமுதாய சேவா சங்கம். இச்சங்கத்தின் மூலம் உலகம் முழுவதும் பரவிவரும் வாழ்க்கைக் கல்விதான் மனவளக்கலை. இக்கலை உடல்நலம், மனவளம், நட்புநலம் கருமைத் தூய்மை, பிரம்மஞானம் என்ற ஐந்து படிநிலைகளாக அமைந்துள்ளது.

1. உடல் நலம்

நாம் இவ்வுலகில் வாழும் காலம் வரை இயற்கை அளித்த இவ்வுடலைக் கொண்டுதான் வாழ வேண்டும். இன்றைய விஞ்ஞான உலகிற்கு இன்றும் புதிராகத் தோன்றும் பல சிக்கலான அமைப்பைப் பெற்றுள்ள இவ்வுடலை இயக்குகின்ற, பாதுகாக்கின்ற கலையை நாம் முறையாகக் கற்றோமில்லை. தவறான இயக்கத்தின் விளைவே பிற்காலத்தில் உடலில் நோய்களாகவும், வாழ்வில் துன்பமாகவும் விளைகின்றது.

உடல்நலம் கெடாமல் வாழ, சிறுவயதிலிருந்தே உடல் இயல்புகேற்ற முறையில் அமையும் உடற்பயிற்சியையும், உணவு முறைப் பழக்கத்தையும், மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். மனவளக் கலையில் எட்டு வயது முதல் எண்பது வயது வரை செய்யக்கூடிய எளிய மறை உடற்பயற்சித் தொடரை மகரிஷி அவர்கள் அமைத்துக் கொடுத்துளளார்கள். இதில் கைப் பயிற்சியிலிருந்து உடலைத் தளர்த்துதல் வரையில் ஏழு வகையான பயிற்சிகள் அமைந்துள்ளன. இப்பயிற்சிகள் நோய் வராமல் தடுப்பதுடன் மாணவப் பருவத்தில் அறிவு வளர்ச்சியைத் தூண்டுவதாக அமைந்துள்ளன. உதாரணமாக நுரையீரல் பயிற்சியால் நுரையீரலை எல்லாப் பக்கங்களிலும் விரித்து விடுவதால் நாள் முழுவதும் அது தானே நன்றாகச் சுருங்கி விரியும். இதனால் இரத்தத்தில் ஆக்ஸிஜன் நிரம்பி இருப்பதுடன், மூளை செல்களையும் சுறுசுறுப்புடன் இயங்க வைக்கும். சோம்பி இருத்தல், வகுப்பில் தூங்கி வழிதல் போன்ற வியாதிகள் மாணவர்களிடையே ஏற்படாது. நினைவாற்றல் பெருகும்.

அக்குபிரஷர், உடலைத் தளர்த்தல் போன்ற பயிற்சிகள், மனஇறுக்கம் (Tension) இல்லாமல் தேர்வில் வெற்றி பெற உதவும். கருவழியே (Heridictory Imprints) வரும் நோய்கள் எதிர்காலத்தில் வராமல் தடுக்கும் இந்த உடற்பயிற்சித் தொடரைத் தினந்தோறும் செய்ய 30 நிமிடங்களே போதும்.

2. மன வளம்

மனவளம் பெற எளிய முறை தியானப் பயிற்சி வேண்டும். இப்பயிற்சியின் மூலம் முதுகுத் தண்டின் கீழ் மூலாதாரத்தில் இயங்கும் உயிராற்றலின் ஒரு பகுதி அவருடைய அறிவின் மையமாகிய புருவ மையத்தில் (Pitutary Gland) குவிக்கப்படுகிறது. சாதாரணமாக 14-40 htz/sec என்ற அளவில் இயங்கும் பீட்டா

மன அலை (Beta Wave) மனிதனை உணர்ச்சி வயப்பட்ட நிலையில் நிறுத்தித் தவறு செய்யத்தூண்டும். ஆனால் ஆக்கினையில் மனதை நிறுத்தித் தவம் செய்யும்பொழுது 8-13 htz/sec என்ற அளவில் இயக்கும் ஆல்பா மன அலை (Alpha wave) புலன்களை அறிவிற்குக் கட்டுப்பட்டு இயங்க வைக்கிறது. சிந்தனை ஆற்றல் வளர்கிறது. மனஓர்மை, அறிவுக்கூர்மை, நினைவாற்றல் இவை மிகுகின்றது. தவறான பழக்கங்கள் மனதை ஈர்க்க முடியாத விளைவறிந்த விழிப்பு நிலையை அறிவு பெறுகிறது. உயிராற்றல் அறிவின் மையத்தில் குவிவதால் முழு இயக்கம் பெறாத (Dormant) மூளை செல்களும் விழிப்பு நிலை (Awareness) பெறுகிறது. மனம் விரிவடைகிறது. எந்தக் கல்வியையும் இயற்கையோடு இணைந்து, உணர்ந்து கொள்ளும் ஆற்றல் மிகுகிறது. 14 வயது நிரம்பிய மாணவர்கள் இதைக் கற்றுக் கொண்டு தின்தோறும் காலை, மாலை சுமார் 20 நிமிடங்கள் செய்து வந்தால் நலம் தரும்.

தியானத்திற்கு முன் பீட்டா

ஆக்கினை தியானத்தில் ஆல்ஃபா

3. உயிர் வளம்

உயிர் வளம்பெறக் கருமையத் தூய்மை வேண்டும். ஒரு பெரிய மரம் அதன் சிறு வித்தில் சுருங்கியிருப்பது போல மனிதனுடைய பதிவுகள் அனைத்தும் அவன் ஜீவகாந்த கருமையத்திலேயே இருப்பாக உள்ளது. கருமையம் என்பது ஆன்மாவைக் குறிக்கும். ஆன்மாவைத் தூய்மை செய்கின்ற பயிற்சிதான் காயகல்பம் என்ற சித்தர்களுடைய கலை.

மாணவப் பருவத்தில் உயிர்ச் சக்தியின் மூலமான விந்துநாதத்தைப் பல வழிகளில் வீணாக்கி விடுவதால் உடலில் ஜீவகாந்த சக்தியில் அழுத்தம் குறைந்துவிடுகிறது. இதன் விளைவாக மூளை செல்கள் பாதிக்கப்படுகின்றன. நினைவாற்றல் குறைகிறது. பாலுணர்வு எண்ணம் மனதில் தோன்றி ஆக்கப் பூர்வமான சக்தி அனைத்தும் உடலில் வீணாகி விடுகிறது.

விந்து நாதத்தைத் தூய்மைப்படுத்தி அதன் உற்பத்தி ஸ்தான மான மூளையுடன் இணைக்கும் சித்தர் கலைதான் காயகல்பமாகும்.

4. குணநலம்

வாழ்க்கை வெற்றிகரமாக அமையச் சமுதாயத்தில் பலரோடு ஒத்தும் உதவியும் வாழ்வது அவசியம். இதில் தேர்ச்சி

பெறுவதற்கு அகத்தாய்வு என்ற சிந்தனை மனோதத்துவ முறையில் பயிற்சியாக அளிக்கப்படுகின்றது. இதில் வாழ்வின் விளை நிலமான எண்ணத்தை ஆராயும் பயிற்சியால், எண்ணத்தின் ஆற்றல் உணர்ந்து, மாணவப் பருவத்திலேயே, தீய எண்ணங் களுக்கு இடம் கொடுக்காமலும், உயர்வான எண்ணங்களையே மனதில் மிதக்க விடவும் உதவும். எண்ணமே ஒருவரது வாழ்வை வளமாக்கும் சிற்பி என்பதால், இள வயதிலேயே உயர்ந்த எண்ணங்களை மனதில் விதைத்து, வாழ்வில் உன்னத நிலையை அடைய அடித்தளம் இங்கு அமைக்கப்படுகிறது.

"ஆசை சீரமைத்தல்" என்ற பயிற்சியால், இளமையில் கற்பனையான எண்ணங்களில் மிதப்பதைத் தவிர்த்துக் காலத்தை வீணடிக்காமல் ஆக்கப்பூர்வமான சிந்தனைகளிலும், புலன் களிலும் அளவுமுறையும் காண வழி வகுக்கப்படுகிறது.

''சினம் தவிர்த்தல்'' என்ற பயிற்சியால் வாழ்வில் இனிமையும், மகிழ்ச்சியும் பெற்று அவனைவரிடமும் நட்பு நலம் காத்து வாழ வழி அமைகிறது.

"கவலை ஒழித்தல்" என்ற பயிற்சியால், அச்சத்தை விட்டு மனநலமும், உடல் நலமும், காக்கப்படுகிறது.

5. இறையுணர்வு

இறைநிலைத் தெளிவு பெற இறையுணர்வை ஒவ்வொரு மனிதனும் பெற வேண்டும். குண்டலினி தவத்தின் மூலம் உயிரை உணர்ந்து, தன்னை அறிந்து, அதற்கும் மூலமான இறைநிலையை உணர பிரம்மஞானம் கற்பிக்கப்படுகிறது. இங்கு உடல், உயிர், மனம், அறிவு, பிரபஞ்சம், இறைநிலை பற்றி விளக்கம் பெறலாம்.

மதங்களிலெல்லாம் சொல்லப்படுகின்ற இறைவனும், விஞ்ஞானம் தேடிக் கொண்டிருக்கின்ற எல்லாம் வல்ல ஒருங்கிணைப்புச் சக்தியும் (Unified Fource) ஒன்றே என்ற தெளிவை மனவளக்கலையில் பெறலாம். இந்த மனவளக்கலைப் பயிற்சியை மாணவப் பருவத்திலே கற்றுக் கொண்டால் உடல் நலம், மனவளம், குணநலம், கருமையத்தூய்மை இவற்றுடன் இறை நிலைத் தெளிவும் பெற்று வாழ்வில் எல்லாத் துறைகளிலும் வெற்றியும், மேன்மையும் பெற்று வாழ முடியும் என்பதற்கு இன்று உலகில் ஆயிரக்கணக்கான மக்கள் சாட்சியாக உள்ளார்கள்.

வேதாத்திரியத்தில் இறையியல் வாழ்வியல் சிந்தனைகளின் வழி மனமது செம்மையானால்.....

முனைவர் கமலாமுருகன்

"மனமே எனை நீ வாழ்வித்திடுவாய்" என்பார் பாரதியார். எவர் ஒருவர் தம் மனத்தைச் செம்மையாக அமைத்துக் கொள்கின்றாரோ அவரது வாழ்வு வளமும் நலமும் நிறைந்தமையும் என்பதை நன்கு உணர்ந்த வேதாத்திரி மகரிஷி அவர்கள் தம்முடைய எல்லாச் செய்திகளிலும் மனத்தினையே தொடர்புபடுத்தி உரைக்கின்றார்.

மகரிஷி அவர்கள் மக்கள் அனைவரும் சமாதானத்தோடும் மகிழ்ச்சியோடும் மன நிறைவோடும் வாழ வேண்டும் என்று விரும்புகின்றார். அதற்கான வழிமுறை தேடிய செயலின் விளைவே அவரது சிந்தனை மலர்களாகி நம் கரங்களில் தவழும் அவரது நூல்கள். அந்நூல்களில் உள்ள வாழ்வியல் இறையியல் சிந்தனைகளின் வழி 'மனமது செம்மையடைதல்' பற்றி ஆய்ந்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கம்.

மனம் ஓர் அறிமுகம்

உண்மையில் பெரும்பாலோரின் சிந்தனையில் ஒரு கேள்வி எழுந்தபடியே உள்ளது. அது மனம் என்பது என்ன என்பதுதான். இதற்கான விடைகாணும் முயற்சியினையும் பலர் செய்துள்ளார்கள். ஆயினும் சிலருக்கு மட்டுமே நிலையான பதில் கிடைத்துள்ளது. "மனசு மாதத்துவ ஞானிகளாலும், விஞ்ஞானிகளாலும் இதுவரையில் முழுமையாக விளங்க முடியாத புதிராகவே இயங்குகின்றது. உண்மையில் மன நிலைக்கு அடித்தளம் இறைநிலையாகும். இறைநிலையானது 'இருப்பு நிலை' அல்லது 'மெய்நிலை'யாகும். மனநிலையோ, 'இயக்க அலை,

தமிழ் விரிவுரையாளர், எஸ்.ஐ.வி.இ.டி. மாலைக் கல்லூரி,
கௌரிவாக்கம், சென்னை 601 3302

மனநிலை உயிர்' என்றும் வழங்கப்படுகின்றது. ஆகவே, இறை நிலையும் மனநிலையும் பொருளில் ஒன்றுதான். இருப்பு நிலையான மெய்ப்பொருள் இயக்கநிலையாகச் சிறப்படைந்து விளங்கும் அலையே மனம்" என்று மகரிஷி அவர்கள் செயல் வினைத் தத்துவம் நூலில் (ப. 4) மனத்திற்கு விளக்கம் தந்துள்ளார்.

அவரே சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள் நூலில் "கற்பனைக்கு அப்பாற்பட்ட இருப்பு இயக்கத் தன்மைகளைக் கொண்டுள்ளதும், புலன்களால் உணர முடியாததுமான தத்துவமே 'மனம்' ஆகும். இதனை இல்லை என்று யாரும் மறுக்கவும் முடியாது. மனம் என்பது மனிதனின் ஒவ்வொரு தன்மையும் அவனது வாழ்க்கை அனுபவங்களும்தான். வேறொன்றும் இல்லை" என்றும் கூறுகின்றார்.

இதன்மூலம் மனம் என்பது ஒரு அலை நிலை. இதனைக் கொண்டு நாம் நம் வாழ்க்கையை மட்டுமல்ல, சமுதாயத்தினரின் நலனையும் உயர்த்த இயலும் என்பதனையே உணர்த்துகின்றார்.

மனங்கள் பலவிதம்

மனிதர்கள் பலவிதம், அதில்
ஒவ்வொன்றும் ஒரு விதம்

என்றார் கவிஞர். மனிதர்கள் பலவிதமாக அமைவதற்கான முக்கியக் காரணியாக அமைவது மனம்தான். காரணம் மனிதனும் மனமும் வேறு வேறல்ல. 'மனம் உடையவன் மனிதன்' எனப் பட்டான். அவ்வகையில் பலவேறுவிதமான மனநிலைகளுடைய மனிதனும் பலவகைப்பட்டதும் அவ்வழியே.

அறிவியல் அடிப்படையில், உளவியல் நோக்கில் மனத்தை மூன்றாகப் பிரித்தார் 'பிராய்டு'. அவை நனவுநிலை (Conscious), இடைப்பட்ட நிலை (Subconscious), நனவிலிநிலை (Unconcious) என்பனவாகும்.

நனவுநிலை வெளிப்படையான சிந்தனைகளைக் கொண்டுள்ளது. இடைப்பட்ட நிலை நினைவுகளை நினைவு கூர்வது. சற்றுக் கடினமான நிலை. நனவிலிமனம் கட்டுப்பாடுகளற்ற மனப்பான்மையும் உள் உணர்ச்சிகளும் கொண்டமையும் என்று அவைகளை விளக்குகின்றார். எதுவாயினும் மனத்தின் செயல்பாடுகளை ஒட்டியே மனிதனின் வாழ்க்கை நகர்கிறது.

மனம் – பல்வேறு தோற்றம்

உண்மையில் மனம் என்பது எவ்வகை வடிவமும் இல்லாதது என்பதனை அறிவோம். அவ்வகையிலான மனம் ஆய்வு நிலையில் மனித வாழ்வோடு தொடர்பு கொண்டு நோக்கும் போது பல்வேறு வகையான தோற்றங்களில் நமக்குக் காட்சி அளிக்கின்றது. அதாவது, 'மனம் - எண்ணம் - சிந்தனை - நினைவு - அறிவு' இவை அனைத்தும் பிரித்தறிய முடியாத நிலையில் ஒரே தன்மையில் உள்ளன. ஆனால் நாமாகவே இவை வேறு வேறு என்பதாக எண்ணுகின்றோம். ஆனால் இவை அனைத்தும் ஒன்று என்பதனை மகரிஷி அவர்கள் நிறுவு கின்றார்கள். அறிவியலும் இதனையே உண்மையாகக் காட்டுகின்றது.

'ஒவ்வொரு செயலையும் ஊடுருவி உணர்ந்து கொள்ளக் கூடிய உட்பொருள்தான் அறிவு. அந்த அறிவுதான் உண்மைப் பொருள். அதன் அலை நிகழ்ச்சிதான் மனம்' என்பார் மதமும் மனமும் (ப.43) நூலில்.

அவ்வாறே எண்ணங்களின் பதிவிடமான மூளையும் மனித இயக்கக் களமான மனத்துடனேயே இணைகிறது. உதாரணத்திற்கு நம் அன்பில் நிறைந்த ஒருவரை என் நினைவில் எப்பொழுதும் நீயே உள்ளாய். மனசு எப்பவும் உன்னையே நினைக்கிறது என்றெல்லாம் பேசுகின்றோம். பேச்சு வழக்கில் இதயம் என்பதையும் மனதாகத்தான் எண்ணிப் பேசுகின்றனர். இராமாயணத்தில் ஒரு காட்சி, அனுமன் தன் சிந்தை முழுவதும் இராமனையே எண்ணி, இதயம் (மனசு) முழுவதும் அவனுருவையே நிறைத்ததாகக் காட்ட இதயத்தைக் கிழித்து அதில் இராமனைக் காட்டியதாக உள்ளது. இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கின்ற போதும், ''விஞ்ஞானம் மூளையை எடுத்துக் கொண்டு அக்குவேறு ஆணிவேறாக விளக்க முயன்று கொண்டிருக்கிறது. மனதின் இயக்கக் களம்தான் மூளை என்கிறது'' என்ற டாக்டர் தாமோதரன் கருத்தும் அதனையே ஒத்தமைகின்றது.

இதன்மூலம் மனம்-எண்ணம்-சிந்தனை-அறிவு-நினைவு இவை அனைத்தும் பெயரளவில் மாறுபட்டுத் தோன்றினும் செயலால் ஒத்தமைந்துள்ளதனை அறிய இயலுகின்றது.

இதனையே "மனம் விரிந்தறிவெனும் மாபதம் எய்திடும்" என்று 'மனம்' நூலில் (44) பேசுகின்றார் மகரிஷி அவர்கள். மேலும் "பேரியக்க மண்டல நிகழ்ச்சிகளில் மிகவும் மதிப்புடைய அறிவின் இயக்கக்களம் 'மனம்' என்பதாகும்" என்று வாழ்க்கை வள உயர்வுப் படிகள் ஐந்து (ப. 21) நூலில் பேசுகின்றார்.

கருமையமும் காந்த அலைகளும்

விண்ணிலிருந்து பரவி இந்த உலகம் முழுவதும் உள்ள எல்லாப் பொருட்களையும் நிறைத்துச் செல்வதான துகள்கள் எனப்படும் ஒருவித மான அலைகள் இயங்கிக் கொண்டிருக் கின்றன. இதனை மகரிஷி அவர்கள், 'ஜீவகாந்த அலைகள்' என்று பேசுகின்றார். இந்த அலைகள் மூலம் உடலில் உள்ள ஐம்பூதங்கள் பல்வேறுவிதமான உணர்வுகளையும் பதிவு செய்யும் இடம் 'கரு மையம்' எனப்படுகின்றது. இதனை,

"உடலியக்கத்தாலும் உணர்வுகளாலும் எண்ணங்களாலும் ஏற்படும் அலைகள் அனைத்தும் சுருங்கி இயல்பாக உள்ள இடம் கருமையமாகும். பரிணாமத் தொடர்பில் விண் முதலாக மனிதன் வரையில் வந்த இயற்கையின் சரித்திரம் முழுவதும் அலை வடிவில் சுருங்கி இருப்பதாக இருக்கும் தெய்வீகப் பெட்டகம்தான் கருமையம்" என்று வாழ்க்கை வள உயர்வுப் படிகள் நூலில் விளக்குகிறார் மகரிஷி அவர்கள். காந்த ஆற்றல் பெற்ற துகள்களின் கூட்டமான நிலையை 'யோகன்' என்று அறிவியல் பேசுகின்றது.

'ஒரு வோல்ட் (Volt) பத்து இலட்சத்தில் மன அலை என்கிறார் ஹேன்ஸ் பெர்ஜர்' என்று டாக்டர் தாமோதரன் (மனதை அளக்கும் கருவி ப. 9) கூறுகின்றார். மேலும் ECG மூலம் மன அலை வேகத்தை அளப்பதற்கு அடிப்படை அலகுகளை அமைத்துள்ளனர். இதனை மகரிஷி அவர்களும் விளக்குகிறார்.

இந்த அலை வேகத்திற்கு ஏற்ப மனப்பதிவுகளும் பிற செயல் விளைவுகளும் நிகழ்கின்றன. 'நாம் கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் நட்பு' பற்றிப் புறப்பாடல்களில் கேட்கின்றோம். இது எப்படிச் சாத்தியம் என்று ஆராய்ந்தால் இந்த மன அலைகளிலே உணர முடியும். நாம் அன்புகொண்ட ஒருவரைப் பற்றிச் சில நாட்கள் பார்க்காமல் பேசாமல் இருந்து, திடீரென்று, அவரைப் பார்த்துப் பேசி நாட்களாகிறதே பார்க்க வேண்டும்,

பேசவேண்டும் என்று நாம் நினைத்த சில மணிநேரங்களிலேயே திடீரென்று அச்செயல் நடந்து நம்மை அதிசயப்படச் செய்யும். 'காலையில்தான் உங்களை நெனச்சேன்' என்று வியந்து போவோம். இதற்கும் காரணம் எண்ண அலைகளே.

மனப்பதிவும் செயல் விளைவும்

அவ்வாறே மனப்பதிவும் அலைகளோடு முக்கியப் பங்கு வகித்துள்ளது. அனைத்தும் பதிவான நிலையில் கருமையம் மற்ற செயல்வளர்ச்சிக்கு உதவுகிறது. ஒவ்வொரு மனிதனின் வளர்ச்சி நிலையிலும் பெற்றோரும் சமுதாயமும் பெரும்பங்கு வகிக்கின்றனர்.

அவ்வகையில் கருவிலிருந்து தொடங்கி இம் மனப்பதிவு நிகழ்கிறது. பின் நாம் வளரும்போது செயலாகப் பரிணமிக்கிறது. எடுத்துக்காட்டாகத் தாயின் கருவிலேயே குழந்தைக்குத் தாயின் உணர்வுகள் பதிகின்றன. இதனை இரணியன் கதையும், அபிமன்யு கதையும் கூட உணர்த்துகின்றன. இன்றைய அறிவியலும் ஏற்கின்றது. 'பகத்சிங்' இறந்தபோது அவன் உடல் எரிந்த சாம்பலை எடுத்துப் பெண்கள் தங்கள் வயிற்றில் பூசி எங்களுக்கும் இப்படிப் பட்ட வீரமகன்கள் பிறக்க வேண்டும் என்று வேண்டினார்களாம். இதனை மகரிஷி, செயல் விளைவுத் தத்துவம் என்ற நூலிலும் (38) மனவளக்கலை நூலிலும் ஏற்றுரைக்கின்றார்.

இதனடிப்படையில் பெண் கருவுற்ற காலத்திலிருந்து ஏற்படும் சூழல்கள் மற்றும் வளரும் சூழல்களிலும் பல்வேறு விதமான நற்சிந்தனைகளின் வழியதான மனமோ அல்லது பெற்றோர் சமுதாயத்தில் ஏற்பட்ட பாதிப்பில் மனநிலை குன்றிய குழந்தையோ அமைய ஏதுவாகின்றது. பின்னது துயரநிலையே. அதனால் தேவையானது ஆரோக்கியமான ஆளுமையை உடைய மனநிலையே ஆகும்.

''மன ஆரோக்கியத்தின் மூலமே ஒருவனுடைய ஆளுமையை நாம் முன்னேற்றச் செய்ய முடியும்" என்று டி.வி. கெலின் கூறுகின்றார்.

எனவே, மனப்பதிவு என்பதும் கருவுற்ற நாளில் தொடங்கி வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து நடைபெற்று முக்கியப் பங்கினைப் பெறுகின்றது. என்வே காந்தி சொன்னபடி, 'தீயதைப் பாரோம், தீயதைக் கேளோம், தீயதைப் பேசோம்' என்ற முப்பெரும் வேதவாக்கும் நமக்கு அவசியமான ஒன்றே.

எண்ணியதை அடைதல்

மனித வாழ்க்கையின் உயர்ந்த இலட்சியம் அவரவர்களும் எண்ணியதை அடைய வேண்டும் என்பதே. அது கடுகோ, கடலோ; மண்ணோ, மலையோ; எதுவாகினும் அதனை அடைதல். இந்நிலையை அடைய யார் உதவுவார்கள்? என்றால், 'மனம்' என்பதுதான் அதற்கான பதில், இதில் மனத்தின் பங்கு என்ன? என்பதுதான் கேள்வி.

பெரியோர்கள் வாழ்த்தும்போது 'மனம்போல் மாங்கல்யம்' என்றும், 'மனம் போல வாழ்' என்றும் வாழ்த்து கின்றனர். ஏன்?

"மனம்தான் மனித வாழ்க்கையின் விளைநிலம். மனத்தின் தன்மை எதுவோ அதுதான் மனிதனுடைய தன்மை. மனத்தின் மாண்புதான் மனிதனின் மாண்பு. மனத்தின் உயர்வுதான் மனிதனுடைய உயர்வு" (ப.12) என்கிறார் மகரிஷி. இதனையே வள்ளுவரும்,

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு

என்று பேசுகின்றார். நம்முடைய எண்ணம் வலுவடைந்தால் செயல் தெளிவு பெறும். அதன் மூலம் நாம் எண்ணியதை அடைய முடியும். 'நான் கல்வியில் உயர்நிலையை அடையும் வரை தளராமல் படிப்பேன் என்று யார் உறுதியாக எண்ணு கின்றாரோ அவர் பல பொருளாதார சமுதாயத்தடைகள் ஏற்படினும் அதனைக் கண்டு அஞ்சாமல் தன் படிப்பில் உயர் நிலையை அடைவர். இது சாதாரணமான நிலை, உயர்நிலையில் இறைவனைப் பற்றிய சிந்தனையால் இறைவனை அடைதல் கிட்டும். 'இரணியன் - பிரகலாதன்' கதையை நாம் கேட்டதுண்டு 'பிரகலாதன்' எங்கும் நிறைந்தவன் இறைவனே. அவனே உயர்ந்தவன் என்கிற உயர்நிலையில் இறைவனை மனத்தில் ஆராதனை செய்ததனாலேயே அவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் என்ற அவனது நம்பிக்கை செயல் நிலையிலும் வென்றது. இதன் காரணமாகவே 'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்றார் வள்ளுவர். அவரே 'உள்ளத்தால் உள்ளலும் தீதே, பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வே மெனல்" என்றும் சுட்டிக்காட்டி எண்ணத்தின் ஆற்றலை நமக்கு உணர்த்துகின்றார்.

இதனையே, "எண்ணம், சொல், செயல் என்ற மூன்றிலும் மனிதன் செயல் புரிகிறான். எண்ணத்திற்கு எப்படி விளைவு வரும்? என்று சிலர் ஐயுறலாம். பலதடவை ஒன்றை எண்ணி, அந்த எண்ணம் வலுவடைந்துவிட்டால் அதுவே, அந்தப் பழக்கமே, செயலைச் செய்து விடும். அதனால் எண்ணத்திற்கும் தக்க விளைவு உண்டு. இதனை வாழ்வின் அனுபவங்களால் எல்லோரும் நன்கு உணர்ந்து கொள்கிறோம்" என்று 'உலகச் சமுதாய வாழ்க்கை நெறி" (ப. 68) நூலில் மகரிஷி சுட்டிக் காட்டுகின்றார். 'நான் யார்' (ப. 59 முதல்) நூலிலும் இதனைப் பேசுகின்றார். மேலும்,

மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்திலும் (ப. 4)

உண்மையில் எதிரி உனக்கு உண்டு எனில்
உள்ளத்திலெழும் ஒழுங்கற்ற எண்ணமே

என்றும் பேசுகின்றார். எனவே நல்லெண்ணம் நற்பலன்களையும் தீய எண்ணம் தீய பயன்களையும் தரும் என்பதில் எந்த ஐயமுமில்லை. இதனையே, வள்ளுவர் நமக்கு மறைமுகமாக,

மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

என்ற குறட்பாவில் உணர்த்துகின்றார்.

எனவே நமது எல்லாச் செயல்களும், மனத்தின் அடிப் படையிலேயே நிகழ்கின்றன. நமது மனம் நலமில்லாது இருப்பின் செயல்கள் யாவும் விரும்பத்தகாத நிலையில் அமையும். இயல்பான நடத்தை இல்லாத பல மனிதர்களை நாம் சமுதாயத்தில் பார்க்கின்றோம். இவர்கள் தங்களுக்கும் இன்பமின்றிச் சமுதாயத்திற்கும் பயனின்றி வாழ்பவர்கள். இந்நிலைக்கு அவர்களது மனமே காரணம்.

எனவேதான் மகரிஷி அவர்கள் மனதை அறியவும், அடக்கவும், பழக்கவும் நம்மை வலியுறுத்துகின்றார்.

உடற்பயிற்சியின் அவசியம்

முன்னம் உடம்பினை இழுக்கென்றிருந்தேன்
உடம்பினை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே

என்று உடலோம்புதலின் அவசியத்தைத் திருமூலர் உணர்த்து கின்றார். உடல் நலம்தான் உள்ள நலனையும் அளிக்கும். இதனை

ஒட்டியே நாம் மட்டுமின்றி நம் வாழ்வு மட்டுமின்றி நம்முடைய சந்ததியினரின் உடல்நலமும் சீர்படும் என்பது மகரிஷியின் கருத்து.

"நாம் வாழும் காலத்தில் உடலையும் மனத்தையும் சரிபடுத்திக் கொண்டால் நமக்குப் பின்னாலே பிறக்கக் கூடிய குழந்தை ஆரோக்கியமான கட்டமைப்புக் (Structure) கொண்டதாகத் திகழும். உடலுக்குக் கொடுக்கக் கூடிய உடற் பயிற்சி, மனதிற்குக் கொடுக்கக் கூடிய தியானப் பயிற்சி, உயிர்க் குறுதி அளிக்கும் காயகல்பப் பயிற்சி இம்மூன்றும் உடலையும் உள்ளத்தையும் உயிரையும் மேன்மைப்படுத்தி, தூய்மைப்படுத்தி மனிதன் வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிவகுப்பவையாகும்" என்று வாழ்க்கை மலர்களின் (ப.7) ஆசிரியர் கூறுகின்றார்.

உடற்பயிற்சியின் மூலம் உடலைக் கட்டுப்படுத்தி அதனால் உணடாகும் மன் அழுத்தத்தையும் நாம் வெகுவாகக் குறைக்க முடியும். இதனால் உடல் மட்டுமின்றி மனமும் சீர்பெறும்.

"உடலில் ஏற்படும் ரசாயன மாற்றத்தில் நம் எண்ணம் பெரும்பங்கு வகிக்கின்றது. நல் எண்ணம் ஒருவிதமாகவும் தீய எண்ணங்கள் வேறுவிதமாகவும் மாற்றம் பெற்று முன்னது ஆரோக்கியத்திற்கும் பின்னது நோய்க்கும் காரணமாகின்றன" (மனவளக்கலை, தொகுதி 2) (ப. 5) என்று மகரிஷி கூறுகின்றார். இதற்கு, "கோபம் என்கிற உணர்வு, டென்ஷன் மூலம் மன அழுத்தம், ரத்த அழுத்தம் இதயவலி போன்ற பல நோய்களை உண்டாக்குகின்றது." எனவே, உடலைக் கட்டுப்படுத்துவதன்மூலம் மனத்தையும் சீர்நிலைபெறச் செய்து வாழ்வாங்கு வாழ இயலும்.

மனவளக் கலையின் முக்கியப் பங்கு

உடற்பயிற்சியின் அடுத்த நிலையும் முக்கிய நிலையும்தான் மனதைப் பழக்கும் நிலை. அதனையே மகரிஷி அவர்கள் மனவளக் கலை என்று தம் செய்திகளில் பேசுகின்றார்.

மனதை யடக்க வழியுண்டோ
அறிகிலேன் யான்

என்று கந்தகுரு கவசம் மனதை அடக்கும் வழியைத் தேட வேண்டியதை உணர்த்துகின்றது. மனவளக்கலையில் தியானம் முதல் படியாக அமைகின்றது.

"தொடர்ந்து தியானம் செய்யும் போது மனம் நுண்ணிய நிலையை அடைந்து விடும். எனவே மனத்தை ஒருமைப் படுத்தவும் முடியும்" (வாழ்க்கை மலர்கள், ப. 9) என்று தியானத்தின் வலிமையைப் பேசுகின்றார் மகரிஷி. மனவளக் கலையே மனத்தைச் செம்மையும் பிரகாசமும் அடையச் செய்யும் என்பதையும் உணர்த்துகின்றார்.

எனவேதான், 'மனம்' நூலில் (ப. 54) "அனைத்துலக மக்களையும் நான் கைகூப்பி வேண்டிக் கொள்கிறேன். நீங்கள் உங்களுடைய சக்திக்கு உட்பட்ட அளவில் மனம் விளக்கக் கல்வியில் தொண்டாற்றுங்கள் என்று வேண்டி இந்த நூலை நிறைவு செய்கிறேன்" என்று வேண்டுகின்றார் அனைவரையும்.

மனவளக்கலையின் பயன் நம்வாழ்வு வளம்பெறும் என்பதே. இதனை, "கரு மையத்தில் களங்கத்தைப் போக்க மன இயக்கத்தைச் சீர் செய்ய வேண்டும். செயல்களின் ஒழுக்கத்தை நடைமுறைப்படுத்தினால்தான் மன இயக்கம் ஒழுங்குறும். இதன் மூலம்தான் மனிதன் மனத்தாலும் குணத்தாலும் சீர்மை பெற்று இயற்கை வழி நின்று அறவாழ்வு பின்பற்றி அமைதியோடும், மகிழ்ச்சியோடும் வாழ முடியும். இதனை அடையும் வழியே மனவளக் கலை" என்று 'வாழ்க்கைவள உயர்வுப் படிகள் ஐந்து' (ப. 24) நூலில் கூறுவதன் மூலம் மனவளக் கலையின் முக்கியத் துவத்தை உணர்ந்து அனைவரும் பின்பற்றி உயர்வடைய வழியும் காட்டும் உயர்ந்த ஞானியாகவே மகரிஷி திகழ்கின்றார்.

உடல் நலக்குறைவினால் உடலும் மனமும் பாதிப்படைவதை மாற்றி மனம், உடல், உயிர் இம்மூன்றிலும் ஒற்றுமையான இயக்கத்தைப் பாதுகாக்கும் ஒரு சாதனமாகவே மனவளக்கலைத் திகழ்கிறது என்பதே மகரிஷியின் முடிவு.

மனமது செம்மையானால்

"மனமது செம்மையானால் மந்திரம் ஜெபிக்க வேண்டாம்" என்பார் திருமூலர். நம்முடைய மனத்தினையும் நாம் உடற்பயிற்சி மற்றும் உளப்பயிற்சியான மனவளக் கலையின் மூலம் ஒரு நிலைத்த தன்மைக்குக் கொண்டுவர வேண்டும். அதுவே ஆரோக்கியமான நிலை, அவசியமான ஒன்று.

மன ஆரோக்கியம் என்பது ஒரு அறிவியல் செயல். அது ஒவ்வொரு மனிதனும் பல வகைகளில் தன்னையே அறிந்து

கொண்டு அதன் மூலம் தன்னுடைய வாழ்க்கையை அமைதி யாகவும் மகிழ்ச்சியாகவும் அமைத்துக் கொள்ள உதவுகிறது.

'மனம்' நூலின் முகவுரையில் மகரிஷி, "புறத்தே உள்ள அனைத்தையும் அறிவது மனம். அனைத்தையும் அறிகிற மனம் தன்னை அறியாது போனால் அறிவு முழுமை பெறாது. மனம் தன்னையும் அறியும்போதுதான் ஞானம் முழுமையடைந்து, அந்த முழுமையின் ஆனந்தத்தை உணர்ந்து பேரானந்தம் அடைகிறது" என்று மனம் பக்குவப்பட்டால் அடையும் பெரும்பயன் பற்றிக் கூறுகின்றார். 'மனத்தைச் செம்மையடையச் செய்தலின் முதல் படிநிலையே சிலை வணக்கம்' (மதமும் மனமும், ப. 47). ஆனால் அவ்வாறு மனத்தை அடக்குதலும் தன்னையே அறிதலும் மிகப்பெரிய செயல். எனவேதான் வள்ளலார்,

தன்னை அறிந்து இன்பமுற வெண்ணிலாவே
ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே

என்று வேண்டுகின்றார். கவிஞர் கண்ணதாசனும், 'உன்னையே நீ அறிவாய்' என்ற நூலின் மூலம் தன்னை அறிதலை முக்கியத்துவப்படுத்துகின்றார். அவரது ஒரு பாடல்,

கண்போன போக்கிலே கால் போகலாமா
கால்போன போக்கிலே மனம் போகலாமா
மனம்போன போக்கிலே மனிதன் போகலாமா

என்று கேட்பார். எனவே நம்முடைய எண்ணத்திற்கு ஏற்ப மனம் செயல்பட வேண்டும். மனம் எண்ணியபடி வாழ்ந்தால் அது சிறப்பான வாழ்வாகாது.

"தன்னுடைய மன அலைச் சுழலை அகத்துவத்தின் மூலம் தனக்கு வேண்டியபோது பொருத்தமான அளவில் இயங்கச் செய்ய ஒரு மனப்பயிற்சியைப் பழக வேண்டும். இதன் இறுதியில் தூய மனநிலையில் மறை பொருள் உணர்வு உள்ளுணர்வாகக் கிட்டும்" (சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வு, ப. 3) என உணர்த்துகின்றார்.

மனவளக் கலையின் மூலம் மனத்தை உயர்த்தி மனதின் மூலமான இறைநிலையை எய்தினால் அதாவது செம்மை நிலையானால் மனிதனும் தெய்வமும் தரத்தில் ஒன்றாகிறது. இதனையே மனம் செம்மையடைதலின் பயனாக நாம் பெற முடியும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்ற வள்ளுவரின் வாக்கு, தன்னையே தெய்வமாக உயர்த்தும் நிலையே ஆகும். இது மனத்தாலும் செயலாலும் அமையும்.

தானே தெய்வமான பின் பிற தெய்வ வணக்கமும் வழிபாடும் ஏன்? இதனையே சிவவாக்கியர்,

நட்டகல்லும் பேசுமோ
நாதன் உள்ளிருக்கையில்

என்று கேட்டு இறைவன் உள்ளத்தில் உள்ளான் என்பதை உணர்த்துகின்றார். இந்நோக்கிலேயே நின்று வள்ளல் பெருமானும்,

எத்துணையும் பேதமுறாது
எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி
. . . . . .
அவர் உளம்தான் சுத்தசித்தசத்துருவாய்
எம்பெருமான் நடம்புரியும்
இடம் என நான் தேர்ந்தேன்

என்று கூறுகின்றார்.

மனம் பண்படும்போது அறிவு நிலை விழிப்படையும். இதன் மூலம் புலன்களை அறிவால் இயக்கி அதன் மூலம் வாழ்வில் அமைதி பெறலாம். அவ்வகையில் எந்த வேறுபாடும் பிற உயிர்களிடம் காட்டாத மனப்பாங்கு கொண்டவர்கள் மனம் தெய்வம் விரும்பி நிற்கும் இடம் ஆகும். இதனையே 'மகரிஷி' அவர்கள் தம் நோக்கிலே "காந்த ஆற்றல் துகள்கள், அழுத்தம், ஒலி முதலிய அலைகள் மாறினால் அதோடு அவை இறைநிலையாகி விடும். அருட்பேராற்றலோடு இணைந்துவிடும். இந்த பேருண்மைகளையெல்லாம் உணர்ந்து கொள்ளக்கூடிய மனித அறிவு தனது முழுமை நிலையை அடைந்து விட மனிதனே தெய்வம்தான்" (இறை நிலை அறிவு, ப.25) என்று விளக்குகின்றார்.

மனம் அமைதி நிலையில் தேடுபவனாகி இறைநிலையை அடையும்போது தேடுபவனும் தேடப்படுபவனும் ஒன்றாக நிற்கும்பேறு கிட்டும். இதுவே மனம் செம்மையடைதலின் பயன்.

தொல்காப்பியம் ''நோக்குவை எல்லாம் அவையே போறல்" என்ற அக உணர்வு பண்பட்ட மனத்திற்கும் பொருந்தும்.

பாரதியார் மனத்தின் தன்மைகளைப் பல இடங்களில் பேசுகின்றார். 'மனதில் உறுதி வேண்டும்' என்பார். அவரே,

காக்கைச் சிறகினிலே நந்தலாலா – நின்றன்
கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா – நின்றன்
பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா . .

என்று பாடுவார். இதன் மூலம் மனதில் நிறைந்த கண்ணனின் உருவம் மனம் செம்மையடைந்ததனால் பார்க்கும் பொருள்களி லெல்லாம் தெரிகிறது. இது பாரதிக்கு மட்டுமல்ல. அவனுக்கு முன்வந்த ஆழ்வார்களுக்கும்தான்.

திண்ணும் சோறும் பருகும் நீரும் எல்லாம்
கண்ணன் எம்பெருமான்

என்று பேசுகிறார்கள் அவர்கள்.

மிகவும் கொடியவனான துரியோதனன் கூட நட்பு என்று வந்தபோது முழுமனத்தோடு கர்ணனிடம் ஈடுபாடு கொண்டிருந்ததனால்தான் தன் மனைவியின் மேகலை கர்ணனின் கரம்பட்டு அறுந்தபோதும் கோபம் கொள்ளாது, 'எடுக்கவா, கோக்கவா' என்று சமநிலை மனத்தோடு நின்ற காட்சியை 'மாபாரதம்' காட்டுகின்றது.

பெரியபுராணம், மனத்தில் கோயில் கட்டியதாகப் பாவனையில் வாழ்ந்த பூசல்நாயனாரின் மனக் கோயிலில் இறைவன் எழுந்தருளியதாகப் பேசுகின்றது.

மேற்சொன்ன இத்தகைய அரிய நிகழ்வுகள் அலையும் மனத்தில் கிட்டாது. மன அலைகளைப் பக்குவப்படுத்தி, ஒருமுகப்படுத்தி மனத்தைப் பண்பட்ட செம்மையான நிலமாக மாற்றும்போது விளையும் பயன்களாகும். இதனால், தான் மட்டுமின்றித் தன்னைச் சூழ்ந்த சமுதாயத்தையும் வளப்படுத்த இயலும்.

தான் அதுவாக ஒன்றாகும் நிலை

மனிதர்கள் அனைவரும் மனத்தைப்பற்றி அறிவது அவசியம். இதனையே, "மனதைப் பற்றி அறியாத மனித வாழ்வு 'கயிறு அறுந்த காற்றாடி' போல நிலையில்லாது அலைய வேண்டியதாகும். எனவே வாழ்வு வளம்பெற, வெற்றியோடு வாழ,

அமைதியும் மகிழ்ச்சியும் வாழ்வில் நிலவ வயது வந்த அனைவரும் மனதைப் பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாததாகும்" என்கிறார் 'செயல் விளைவுத் தத்துவம்' (ப. 415) நூலில் மகரிஷி அவர்கள்.

மேலும் மனம் வேறு, தான் வேறு, இறைவன் வேறு, சமுதாயம் வேறு என்ற நிலை கிடையாது. இவை தனித்து நின்றாலும் மனத்தின் பக்குநிலையில் ஒன்றாகக் காணும் நிலையை அடைய முடியும். இதனையே, 'மனிதனானவன் தனது மனதை ஆளத் தெரிந்து கொண்டபின் அவனே தெளிந்த அறிவில் 'பிரம்ம ஞானியாகவும்', 'செயல் விளைவுத் தத்துவ ஞானியாகவும் சிறந்து விளங்குகிறான்" என்றும் 'செயல் விளைவுத் தத்துவத்தில்' (ப.47) பேசுகின்றார்.

உலக இயற்கையின் இரகசியத்தில் முக்கியமானது இறை நிலையே. அதனை அறிந்து கொண்டால் எளிதாகத் தானும் அதுவாகவே உயர முடியும். இதனை,

மனம் இல்லா மனிதனும் இல்லை
மனத்தை அறிந்த மனிதனும் இல்லை

என்ற பழமொழி உணர்த்துகிறது. இதனையொட்டி ஆராய்ந்து மனதுக்கும் அறிவுக்கும் உள்ள தொடர்பை அறிந்தால் நன்கு உணர்ந்து தெரிந்து கொண்டால் பிரபஞ்சத் தத்துவங்கள் அனைத்தும் எளிதாக விளங்கிவிடும்" என்று ஆன்மீக விளக்கில் (ப.26) இறை இரகசியம் அறியும் வழிமுறை என்று சொல்கிறார் மகரிஷி. மேலும் இதனையே காந்த ஆற்றலின் அலைகள் மூலம் அறியும் 'அகத்தவம்' அதாவது குண்டலினியோகம் என்ற நிலையிலும் விரித்துப் பேசுகின்றார்.

இத்தகைய காந்த ஆற்றலில் துகள் ஐம்பூதங்களில் மாற்றம் பெற்றுத் தான் அதுவாக உதவுகின்றது என்பதனையும், இறைநிலையில் தான் அதுவாகும் நிலையை உணர்த்துகின்றார். இதனையே திருமூலர்,

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே

என்று பேசுகின்றார். இந்நிலையே 'மனமே கடவுள்' என்கிற நிலை.

"கடவுளை வணங்கும்போது கருத்தினை உற்றுப்பார் நீயே கடவுளாய்க் கருத்தே நிற்கும் காட்சியைக் காண்பாய் அங்கே" என்று (மனவளக்கலை தொகுதி-2, ப. 193) கூறுகின்றார் மகரிஷி. எனவே மனத்தின் சக்தியை உணரும்போது எல்லாம் வல்ல இறைசக்தியே ஊடுருவி இயங்கிக் கொண்டிருக் கின்ற முறையிலே மனிதனிடத்திலே மனமாக இருக்கின்றது.

வாழ்த்தும் முறையும் பயனும்

உயிரினங்கள் ஒன்றை ஒன்று
வாழ்த்திடும் போது – அதன் உள்ளிருந்து
வாழ்த்துவது உன்னருளன்றோ முருகா உன்னருளன்றோ

என்று கவிஞர் 'சொல்லச் சொல்ல இனிக்குதடா' பாடலில் உரைத்துள்ளார். மனம் செம்மையான நிலையில் இறைநிலை யாதலும் இதுவேதான். அப்படி உயர்ந்து நின்ற மனம் மற்றவர்களை வாழ்த்த வேண்டும்.

'வாழ்த்து' என்பது மனித வாழ்வில் முக்கியமான ஒன்றாக நின்றாலும், "மனதார வாழ்த்துதல்" என்பது அரிதாகவே உள்ளது. எனவே உளப்பூர்வமான வாழ்த்து பிறரை மட்டுமின்றி நம்மையும் வாழ வைக்கும். வாழ்த்தினால் மற்றவர்கள் தானே நலம் பெறுவர் நாம் எப்படி என்றுதானே ஐயம் உங்களுக்கு? மேலே நாம் மனத்தின் அலைகள் பற்றிப் பார்த்தோமல்லவா. அந்த அலைகள் நம் மனத்திலிருந்து புறப்பட்டு இந்த விண் முழுவதும் உள்ள காந்தத்துகள் அலைகளில் நிறைகிறது. மீண்டும் விண்ணில் உள்ள காந்தத் துகள் அலைகள் சுழற்சியில் நம்மையே அடைகின்றன. இதனை உணர்த்தவே மகரிஷி, 'வாழ்க வளமுடன்' என்ற ஒலிக்கூட்டத்தை உண்டாக்கினார். வாழ்த்தும்போது மனம் ஒரு நுண்ணிய நிலைக்கு வருகின்றது. அதனால் மனத்திற்கு வலுவும் தெளிவும் ஏற்படுகின்றது. நம்முடைய வியாபசம் விரிந்து பலரோடு ஊடுருவி நிறைந்து உயிர்க்கலப்பு ஏற்படுகின்றது. ஒரு செடியைப் பார்த்துக்கூட 'வாழ்க வளமுடன்' என வாழ்த்தும் போது அந்தச் செடியில் உள்ள பலவீனம் நீங்கி நன்கு வளரும்" என்று மணிமொழிகளில் (பக். 41,42) கூறுகின்றார்.

மற்றவர்கள் நலம் பெற வேண்டும் என்று நம் மனத்தில் தோன்றும் எண்ண அலைகள் விரிந்து சென்று நாம் நினைப்பவரையும் மற்றவர்களையும் அடைகிறது. அவர்கள் வளம்பெற்று வாழ்வர். மீண்டும் அந்த அலைகள் சுழற்சி

முறையில் நம்மையே அடையும்போது நம் வாழ்வும் சிறக்கும். அதோடு மட்டுமின்றி மேற்சொன்ன செம்மையான மனமும் எல்லோரும் நலம் பெற வேண்டி நிற்பதனால் நாடும் சமுதாயமும் சேர்ந்து நலம்பெற, வாழ்த்துதல் உதவுகின்றது.

நிறைவுரை

"சிந்தையிலே களங்கமற்றுச் சிந்தை தெளிந்திருப்பவனே சித்தன்" என்று சித்தர்களைக் கூறுவார்கள். 'மனம் ஒரு குரங்கு' என்ற நிலையில் உள்ள அலையும் மனத்தை அடக்கும் உபாயம் பல சித்தர் கூறியுள்ளதே ஆகும்.

மனம் எனும் மாடு அடங்கின் தாண்டவக் கோனே– முக்தி
வாய்த்ததென்று எண்ணேடா தாண்டவக்கோனே

என்று இடைக்காட்டுச் சித்தர் பேசுகின்றார்.

மனமெனும் குதிரையை வாகனமாக்கி
மதியெனும் கடிவாளம் வாயினில் பூட்டிச்
சினமென்னும் சீனியின் மேற் சீராய் ஏறித்
தெளிவிடம் சாரிவிட்டு ஆடு பாம்பே

என்று பாம்பாட்டிச் சித்தரும்,

பாபஞ் செய்யாதிரு மனமே – நாளைக்
கோபஞ் செய்தே யமன் கொண்டோடிப் போவான்

என கடுவெளிச் சித்தரும் மனத்தின் முக்கியத்துவத்தையும் அடக்குதலின் அவசியத்தையும் பேசுகின்றனர்.

அவர்களின் வழி நின்றும் விஞ்ஞானத்தின் வழி நின்றும், மகரிஷி அவர்களும் மனத்தின் தன்மையையும் அதனைச் செம்மையடையச் செய்யும் மனவளக் கலையின் அவசியத்தையும் உணர்ந்து தாம் மட்டுமின்றி இவ்வையம் யாவும் பேரானந்தம் எய்திடத் தம் சிந்தனைகளை விரித்துள்ளார்கள்.

நல்ல விதை நல்ல கனிகளைத் தருவது போன்று மனிதன் தூய எண்ணங்களை விதைத்தால் செயல்களும் நற்பலனைத் தரும்.

துணை நூல்கள்

1. மனவளக் கலை 1, வேதாத்திரி மகரிஷி.
2. மனவளக் கலை 2, வேதாத்திரி மகரிஷி.
3. மனவளக் கலை 3, வேதாத்திரி மகரிஷி.
4. மனம், வேதாத்திரி மகரிஷி.
5. இறைநிலை அறிவு, வேதாத்திரி மகரிஷி.
6. ஆன்மீக விளக்கு, வேதாத்திரி மகரிஷி.
7. செயல் வினவுத் தத்துவம், வேதாத்திரி மகரிஷி.
8. மதமும் மனமும், வேதாத்திரி மகரிஷி.
9. சமூகச் சிக்கலுக்கான ஆய்வுத் தீர்வுகள், வேதாத்திரி மகரிஷி.
10. வாழ்க்கை வளஉயர்வுப் படிகள் ஐந்து, வேதாத்திரி மகரிஷி.
11. மகரிஷியின் மணி மொழிகள், வேதாத்திரி மகரிஷி.
12. மாக்கோலமாய் வளைந்த மதிவிருந்து, வேதாத்திரி மகரிஷி.
13. வாழ்க்கை மலர்கள், வேதாத்திரி மகரிஷி.
14. உலகச் சமுதாய வாழ்க்கை நெறி, வேதாத்திரி மகரிஷி.
15. நான் யார்.
16. கம்பராமாயணம்.
17. திருக்குறள்.
18. பெரிய புராணம்.
19. மனதை அளக்கும் கருவி, டாக்டர் தாமோதரன்.
20. மகாபாரதம்
21. சித்தர் பாடல்கள்
22. கந்தகுரு கவசம்
23. கண்ணதாசன் பாடல்கள்
24. வள்ளலார் திருவருட்பா.
25. நாலாயிர திவ்வியப் பிரபந்தம்.
26. பாரதியார் கவிதைகள்.
27. புறநானூறு.
28. தொல்காப்பியம்.

மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்

முனைவர் பெ. சுயம்பு

மனிதப் பிறவி

'அரிது அரிது மானிடராதல் அரிது'. உயிரினங்களின் உயர்ந்த படிநிலையாக மனிதப் பிறவியை அறிவியல் அறிஞர்கள் விவரிக்கின்றனர். உயிரின் உச்ச படிநிலையான இறைநிலையை (அழியாமை, தெய்வீகம், அமரத்துவம்) எய்துதற்கு உகந்த கருவியாக மனிதப் பிறவியை மெய்யறிஞர்கள் கருதுகின்றனர்.

புல், பூண்டு, பறவை, விலங்கு முதலான உயிரினங்கள் படைப்புக் காலத்தில் இருந்தது போலவே இன்றளவும் எவ்வித மாற்றமும் இன்றி உள்ளன. அவை ஒவ்வொன்றும் தனது உடல் இன்பத்தை நிறைவு செய்து கொண்டு, தனி நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆனால் மனிதனோ உடல் இன்பம், மட்டுமன்றி, அதற்கும் மேலாக மனவுணர்வுகளின் வெவ்வேறு நிலைகளை நிறைவு செய்பவனாகவும் காணப்படுகிறான். மானம், மரியாதை, புகழ், வசை, மதம், கல்வி, பதவி என மனிதனது மனவுணர்வின் நிலைகள் பரந்து விரிந்து கொண்டே போகின்றன. இந்த மனவுணர்வின் ஆற்றலே மனிதன் சமுதாயமாகக் கூடி வாழ்வதற்குக் காரணமாகிறது. மனிதனது வாழ்க்கையின் வேகம் தனது தேவைகளை நிறைவு செய்தலோடு அமையாது, தான் சார்ந்துள்ள சமுதாயத்தின் தேவைகளை நிறைவு செய்தலையும் அடக்கிக் கொண்டு அதிகரிக்கிறது.

மனிதன் கூட்டமாக வாழ்தலால் அவனது அறிவு மேம்படுகிறது. அதனால் அவன் பிரபஞ்சம் முழுவதற்குமே அதிகாரி என்ற அளவில் உயர்ந்துள்ளான். இப்பிரபஞ்சத்தை நரகமாவும் இறைநிலை உடைய சொர்க்கமாகவும் அவனால் உருவாக்க முடியும்.

தமிழ் இணைப்பேராசிரியர், ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர்

இறைநிலை

இறைநிலையை இருப்புநிலை என்றும் வெளி (விண்) என்றும் மகரிஷி குறிப்பிடுகிறார். எல்லாப் பொருள்களும் தோன்றி, மறைந்து, தங்குகிற இடமாகவும் (ஆதாரமாகவும்) எல்லாவற்றினுள்ளும் நீக்கமற ஊடுருவி நிறைந்திருக்கும் ஆற்றலாகவும் எல்லாவற்றையும் ஒடுக்கிக் குறைத்த பின்னர் எஞ்சியிருக்கிற இருப்பு ஆற்றலாகவும் விளங்குவது வெளியே. இவ்வெளி மேலோட்டமாகக் காணும் போது சூன்யம் (பூஜ்யம்) ஆகத் தோன்றும். ஆனால் ஆழ்ந்து உற்று நோக்கும்போது பெருமதிப்புடைய பொருளாக உணரத் தகுந்தது. பெரிய பருப்பொருள் அனைத்திற்கும் நொய்மையான இலகுவான வடிவமாக இந்த வெளியாகிய இருப்புநிலை விளங்குகிறது.

> இறை நிலையைப் பற்றிச் சிந்தித்தோமானால் நாம் விளங்கிக் கொள்வது என்ன? ''எல்லையற்ற இறைவெளியே தெய்வம்' என்பதாகும். முற்காலத்தில் வாழ்ந்த தத்துவ ஞானிகள், அகத்தவச் சாதனையால் உள்ளுணர்வு பெற்றுச் "சுத்த வெளியான இறை வெளியே எல்லாம் வல்ல தெய்வம்'' என்று கூறினார்கள். பிற்காலத்தில் வந்தவர்களான புலனியக்க எல்லைக்குள் அறிவைச் சுருக்கிக் கொண்டவர்கள், அந்தப் பேராதாரப் பெரு வெளியைச் "சூன்யம்" என்றும் "பூஜ்யம்" என்றும் ஒதுக்கி விட்டார்கள்.
>
> எண்களில் 'பூஜ்யம்' மதிப்பிலாத ஒன்று என்ற கருத்தில், தத்துவத்தில் 'இறைவெளி' மதிப்பில்லாத ஒன்று என்று கருதினார்கள். உண்மையில் பூஜ்யம் தான் நிறைவாக உள்ள எண். ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்கள் குறையுடையனவே. ஒன்று என்ற எண்ணை எழுதி, அதன் முன்பக்கம் பூஜ்யத்தைப் போட்டால், அதே ஒன்று, பத்து என்ற மதிப்பைப் பெறுகிறது. அதே பூஜ்யத்தை ஒன்றுக்குப் பின்பக்கம் போட்டால் பத்தில் ஒன்றாகத்தான் அதற்கு மதிப்பு ஏற்படுகின்றது. அது 10 (பத்து) இது 01 (பத்தில் ஒன்று 0.1) இவ்வாறு பேராற்றலான இறைவெளியைச் 'சூன்யம்' என்று ஒதுக்கிவிட்ட தத்துவ ஞானிகளும், அறிவியலும், ஆராய்ச்சி நிலைகளிலும் நிலை கொள்ளாது தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.
>
> (செயல் - விளைவுத் தத்துவம், பக். 9-10)

தெய்வம், இறைநிலை, கடவுள், பரம்பொருள், பிரம்மம் எனும் சொற்கள் யாவும் பிரபஞ்சத்தின் மூலப்பொருளான ஒரே தத்துவத்தைக் குறிப்பன ஆகும். நுண்ணணு முதலாக அவற்றின் கூட்டுத் தோற்றங்கள் அனைத்தையும், ஒரு சேரக் குறிக்கும் வார்த்தை தான் பேரியக்க மண்டலம்..... மரம் என்ற ஒரு தோற்றத்தைப் பகுத்துணர்வால் அடித்தண்டு, கிளைகள், இலைகள், பூக்கள், காய்கள், பழங்கள் என்று பல பெயர்களால் அழைக்கிறோம். இவை யெல்லாம் மரம் என்ற ஒரே தோற்றத்தின் உறுப்புகளேயாகும். அவையனைத்தையும் சேர்த்து முழுமையாக ஒரு சொல்லில் கூறும்போது மரம் என்று கூறுகிறோம். இதே போன்று அணுக்கள், பஞ்சபூதம், கோள்கள், சூரியன், உலகம், உயிர்கள் என்று கூறுவதெல்லாம் ஒரே ஒரு இறைநிலையின் பரிணாமத்தால் மலர்ந்துள்ள பேரியக்க மண்டலத்தின் கூறுகளேயாகும்.

(வாழ்க்கை வள உயர்வுப் படிகள் ஐந்து, ப. 61)

இறைநிலையை இவ்வாறு விளக்குகிற யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி,

ஆழ்ந்தகன்று ஓங்கி உயர்ந்து முடிவில்
பெரும் பாழேயோ

என்னும் ஆழ்வாரின் பாசுரத்தையும்

வெட்ட வெளிதன்னை மெய்யென் றிருப்போர்க்கப்
பட்டயம் ஏதுக்கடி

என்னும் குதம்பைச் சித்தரின் சிந்தனையையும் தம் கருத்திற்கு முன்னோர் மொழி பொருளாகச் சான்று காட்டுகிறார். இறை நிலை குறித்த மகரிஷியின் விளக்கம் பாரத நாட்டு யோக நெறியைச் சார்ந்ததாகும்.

மெய்யறிவு

வெவ்வேறு உருவங்களாக வேறுபட்டுத் தோன்றுகிற உயிரினங்களையும் அவற்றை அடக்கியுள்ள பிரபஞ்சத்தையும் ஒரே இறைவனின் தோற்றங்கள் என்று உணர்வதே ஆன்மீக அறிவு

ஆகும். இத்தகைய இறைநிலையைத் தெளிவாக ஐயமறத் தெரிந்து உணர்தலே மெய்ஞ்ஞானம் என்பதனை 'ஒன்றாகக் காண்பதே ஞானம்' என்று ஔவையார் குறிப்பிடுகிறார்.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

பொருட்கள் புற அளவில் எத்தகைய வடிவம், நிறம், சுவை முதலிய தன்மைகளை வெளிப்படுத்தினாலும், அவற்றினுள்ளே ஆதாரமாகவும் மாறாத இருப்பு நிலையாகவும் இருக்கிற உண்மைத் தன்மையினை உணர்ந்து கொள்ளுதலே உண்மையான அறிவாகும் என்பதனை வள்ளுவரும் விவரிக்கிறார்.

மெய்யறிவினை முதிர்ந்த அனுபவத்தினாலும் நூலறிவினாலும் உணர்ந்த பட்டினத்தடிகள் எளிமையான எடுத்துக்காட்டுகளின் வாயிலாகச் சிறப்பாக விவரிக்கிறார்.

நுரையும் திரையும் நொப்புறு கொட்பும்
வரையில் சீகர வாரியும் குரைகடல்
பெருத்தும் சிறுத்தும் பிறங்குவ தோன்றி
எண்ணிய வாகு இருங்கடல் அடங்கும்
தன்மை போலச் சராசரம் அனைத்தும்
நின்னிடைத் தோன்றி நின்னிடை அடங்கும்
(கோயில் நான்மணி மாலை, 24)

நுரைகளும் அலைகளும் குமிழ்களும் பெரியனவாகவும், சிறியனவாகவும் கடலில் தோன்றி, அக்கடலினுள்ளேயே அடங்கும். மேலெழுந்த நிலையில் காணும்போது நுரை வேறு, அலை வேறு, குமிழ் வேறு, பெரியன வேறு, சிறியன வேறு என்ற தோற்றமே தெரியும். ஆனால் நுணுகி நோக்கும் போது அவையாவும் நீர் என்னும் ஒரே பொருளின் வெவ்வேறு நிலையற்ற தோற்றங்களே என்பதும் நீர் என்ற ஒரு பொருள் மட்டுமே இருப்புநிலை உடையது என்பதும் வேறுபாடுகள் யாவும் ஒரே இருப்பு நிலையினை ஆதாரமாகக் கொண்டே தோன்றுகின்றன என்பதும் தெளிவாகின்றன. இதனை அவர் மற்றொரு எடுத்துக் காட்டு வாயிலாகவும் புலப்படுத்துகிறார்.

கட்புலன் தெரியாது கொட்புறும் ஒருவற்குக்
குழிவழி யாகி வழிகுழி யாகி
ஒழிவின் றொன்றின் ஒன்றுதடு மாற

வந்தாற் போல வந்த தெந்தைநின்
திருவருள் நாட்டம் கருணையின் பெறலும்
யாவையும் எனக்குப் பொய்யெனத் தோன்றி
மேவரும் நீயே மெய்யெனத் தோன்றினை
ஓவியப் புலவன் சாயல்பெற எழுதிய
சிற்ப விகற்பம் எல்லாம் ஒன்றித்
தவிராது தடவினர் தமக்குச்
சுவராய்த் தோன்றும் துணிவுபோன் றனவே

(திருக்கழுமல மும்மணிக்கோவை, 10)

சிறந்த ஓவியன் ஒருவன் சுவரில் வரைந்த ஓவியங்கள் பல்வேறு உருவங்களில் விழிகளுக்குத் தோன்றும். அந்த ஓவியங்களைக் கைகளால் தடவும் போது, அவற்றைத் தாங்கியுள்ள ஆதாரமான சுவர் மட்டுமே கைகளுக்குத் தட்டுப்படும். அவ்வாறே விழிகள் குருடாகி அறியாமையால் சிக்கித் தவித்த போது குழிகள் வழிகளாகவும் வழிகள் குழிகளாகவும் தெரிந்தன. இறைவனின் அருளாகிய மெய்யறிவு விழிகள் பெற்ற நிலையில், ஊன் விழிகளுக்குப் பலவாகித் தெரிந்த பொருட்கள் யாவும் வெறும் பொய்த் தோற்றங்கள் ஆயின; இறைவன் ஒருவனே உண்மையான இருப்பு நிலை ஆயினான்.

மெய்யறிவின் திறத்தை மகரிஷி யோகிராஜ்,

அழுத்தம் எனும்உந்து ஆற்றல் ஒன்றைக் கொண்டே
அணுமுதலாய் அண்டகோடி யனைத்து மாக்கி
வழுத்தும் ஓரறிவு முதல்ஐந்தும் ஆறும்
வகைவகையாய் உயிரினங்கள் தோற்றுவித்த
முழுத்திற னுடன்காத்து முடிக்கும் மேலாம்
முழுமுதற் பொருளே நம்அறிவாய் ஆற்றும்
பழுத்துவரும் வரையில் நாம் 'நீ' 'நான்' என்போம்
பதமடைந்தோம் ஒன்றானோம் பரமானந்தம்

என்று பாடுகிறார். முழுமையாகப் பக்குவம் பெற்ற மெய்யறிவு எய்தப் பெறாத நிலையில் 'நீ' என்றும் 'நான்' என்றும் வெவ்வேறு பொருட்களாக எண்ணும் பொய்யுணர்வு உருவாகிறது. அப்பொய்யான உணர்வு காரணமாகப் பிரபஞ்சத்தில் போராட்டம் உண்டாகி, அமைதி கெடுகிறது. ஆனால் எல்லாம் ஒரு முழுமுதற் பொருளின் தோற்றங்களே என்று உணரும் மெய்யறிவு பெற்றதும், போராட்டம் ஒடுங்கி, நிலையான

பேரின்பம் மனிதர்களிடையே மட்டுமன்றி, பிரபஞ்சம் முழுவதிலும் நிலவுகிறது. இப்பேரின்பமே (பரமானந்தமே) வீடு பேறு அல்லது மோட்சம் என்று ஆன்மீக அறிஞர்களால் கூறப்படுகிறது.

வினைக் கோட்பாடு

பாரத ஆன்மீக அறிஞர்கள் கண்டறிந்த உண்மைகளுள் வினை பற்றிய கோட்பாடு முதன்மையானது. இது உலகில் அமைதியை நிலைநாட்டி, உயிரினங்களை அழியாது காத்தற்கு உகந்த ஓர் வரமாகும். இறைவன் பற்றிய கோட்பாட்டினை ஏற்காத சமயத்தவரும் இந்த வினைக் கோட்பாட்டினை ஏற்று விவரிக்கின்றனர்.

உயிர்கள் செய்கின்ற செயல்களின் பயன்கள் அழியாது பதிந்து விடுகின்றன. இந்தப் பயன்களை அனுபவித்துத் தீர்க்க வேண்டிய கட்டாயம் அந்தந்த உயிர்களுக்கு உளது. வினைகளின் (செயல்களின்) பயன்களை அனுபவிப்பதற்கு ஏற்ற உறுப்புகளைக் கொண்ட உடலுடன் அவ்வுயிர்கள் பிறப்பு எடுக்கின்றன. இந்தச் சிந்தனையையே மறுபிறவி என்று கூறுகின்றனர். இதன்படி ஓர் உயிர் புல், மரம், புழு, பறவை, விலங்கு, மனிதன் என வெவ்வேறு வகையான உடலை எடுத்திட நேரிடும். எனவே உலகில் காணப்படுகிற அனைத்து உயிரினங்களும் ஆன்மீக அளவில் மிக நெருங்கிய உறவு உடையனவே. ஆழ்வார்கள், நாயன்மார்கள், சித்தர்கள், ஏனைய இறையன்பர்கள் எனப் பல திறப்பட்ட மெய்யறிஞர்களும் இந்த ஆன்மநேய ஒருமைப்பாட்டினைத் தம் படைப்புகளில் சுட்டிக் காட்டியுள்ளனர்.

வினைக் கோட்பாட்டை உணர்ந்தவர்கள் பிரபஞ்சத் தையும் அதில் வாழ்கிற அனைத்து உயிரினங்களையும் தமக்கு நெருங்கிய உறவினர்களாகவே கருதுவர்.

> *வினைப் பதிவுகளின் கூட்டு மலர்ச்சியே மனிதன் என்ற தோற்றம். மனிதனுக்கு மனிதன் என்ன வித்தியாசம் என்றால் வினைப் பதிவினாலான அவன் தன்மைகள்தான் உருவ அமைப்பு, குணம், அறிவிலுயர்வு, கீர்த்தி, உடல்வலிவு, சுகம், செல்வம் இந்த ஏழில்தான் மனிதனுக்கு மனிதன் வேறுபட்டு இருப்போம்!*
>
> *(இறையுணர்வும் அறநெறியும், பக். 35-36)*

என வினைக்கோட்பாட்டை இவ்வாறு மகரிஷி விவரிக்கிறார்.

மனிதன் தன்னைப் பிரபஞ்சத்திலிருந்தும், ஏனைய உயிரினங்களிடமிருந்தும் மனிதர்களிடமிருந்தும் தனிமைப் படுத்தி, அவற்றிடமிருந்து தான் வேறானவன் என்று எண்ணும் போது, அவன் இயற்கைக்கும் பிற மனிதர் மற்றும் உயிரினங் களுக்கும் பகைவனாகிறான். தன்னலப் பேராசையால் உந்தப் படுகிறான். தனது வாழ்வைத் தானே உயர்த்துகிற வல்லவனாக எண்ணிக் கொள்கிறான். அதனால் அவன் செய்கிற அனைத்துச் செயல்களிலும் தற்சார்பான பற்றினை ஏற்படுத்திக் கொள்கிறான். இப்பற்று, செயல்களை ஏனைய உயிரினங்களைப் பாதிக்கிற தீய வினைகளாக உருவாக்குகின்றன. இத்தகைய தீவினைகளையே கைவிடுதல் வேண்டும் என்றும் மெய்யறிவாளர்கள் வலியுறுத்து கின்றனர்.

பிரபஞ்சத்தின் உண்மை நிலையை உணர்ந்த யாரும் செயல்களின் விளைவுகளில் பற்று வைத்தல் இயலாது. ஏனெனில் இப்பிரபஞ்சத் தோற்றம் முழுவதுமே செயல்களின் உருவாக்கம்; செயல் புரிவது உயிரினங்களின் தவிர்க்க இயலாத நியதி என்று அவர்கள் உணருகின்றனர். அதனால் பயனை எதிர்பாராமல் செய்கிற தொண்டு புரிவதே இயற்கையில் உறைந்து கிடக்கிற நெறி என்கின்றனர். இத்தொண்டு அல்லது வினைப் பயனில் தியாகம் செய்வதன் வாயிலாக மனிதர்கள் இறை நிலையை எய்திட இயலும்; உலகம் முழுவதையும் இறைநிலை நிறைந்த சொர்க்கமாக உருவாக்க இயலும் என்பதில் மெய்யறிவாளர் களுக்கு அசைக்க இயலாத நம்பிக்கை உள்ளது.

மனிதர்கள் இறைநிலை என்னும் மெய்யறிவு பெறுதற்கு முன்னால் தீவினைகளைச் செய்கின்றனர். அவற்றின் விளைவு களிலிருந்து எவ்வாறு நீங்குவது? மகரிஷி வேதாத்திரி இதற்குரிய வழிமுறைகளைப் பின்வருமாறு கூறுகிறார்.

> **நல்லது வளர்ந்தால் அல்லது மறையும். நன்மை செய்வதற்குத் தீமையை அகற்றி நன்மை செய்ய வேண்டும் என்பது தேவையே இல்லை. நன்மையைக் கருத்திலும் செயலிலும் நிரப்பிக் கொண்டால் தீமை இருக்க இடமே யில்லை.**
>
> (இறையுணர்வும் அறநெறியும், ப. 34)

தீமை தரும் செயலை ஒரு முறை செய்து அதன் பதிவைப் பெற்றுவிட்டால், அதை மாற்றி அமைக்காமல் விட்டு

விட்டோமானால், அங்கேதான் ஆரம்பமாகிறது துன்பம். நலம் இல்லாததை எண்ணி, அதைச் செய்து துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இருந்து மீள வேண்டுமானால் அதற்குப் பயிற்சி வேண்டும். இதைத்தான் திருமூலர் ஒரே கவியின் மூலம் கொடுக்கிறார்.

திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி
இளைப்பினை நீக்க இருவழி யுண்டு
கிளைக்கும் தனக்கும் அக்கேடில் முதல்வன்
விளைக்கும் தவம்அறம் மேற்றுணை யாமே

என்று திளைக்கும் வினைக்கடல். ஒவ்வொருவரும் வினைக் கடலாகத்தான் இருக்கிறோம்.

இதுவரை செய்த செயலின் தொகுப்பே மனிதன். தீய வினைப்பதிவுகள் அவ்வப்போது வாழ்வில் துன்பங்களை உண்டு பண்ணிக் கொண்டே இருக்கின்றன. ஆகவே இந்தக் கடலை, வினைச் சுமையை, நீக்கிக் கொள்வதற்காகவே வாழ்க்கை என்ற தோணியில் போய்க் கொண்டுள்ளோம். ஆனாலும் அதைக் கடக்க முடியாமல் சோர்வுறு கிறோம். திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி இளைப்பினை நீக்க இரு வழியுண்டு. இரண்டு வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்று குறிப்பிடு கிறார். கிளைக்கும் என்றால் இவனுக்குப் பின்னால் வரும் சந்ததிகளுக்கும். நன்மையே பெற வேண்டு மானால் தவம், அறம், இறைநிலை உணருவதற்காகச் செய்யக் கூடிய அகத்தவம் பயிற்சி (உளப் பயிற்சி). அறம் – முயற்சியையும், செயல்களையும் நலமே விளைப்பனவாக மாற்றும் பயிற்சி. ஆகவே தவம், அறம் என்ற இரண்டு வழிகள்தான் மனிதனை உய்விப்பதற்கான வழி என்பது திருமூலர் வாக்கு.

(இறையுணர்வும் அறநெறியும், ப. 40)

தீவினைப் பயனாகிய பாவத்திலிருந்து நீங்குதற்குக் கருத்திலும் செயலிலும் நன்மையை நிரப்பிக் கொள்ள வேண்டும் என்பது வேதாத்திரியக் கருத்தாகும். 'சிந்தையின்றிச் செய்தொழில் இல்லை' எனவே மனத்தின் எண்ண அலைகள் யாவுமே நன்மை அலைகளாகத் தூய்மை பெற வேண்டும் என்கிறார். எல்லா அறங்களுக்கும் ஆதாரமாக இருப்பது மனத்தூய்மையே. 'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்'

என்று வள்ளுவர் இதனையே அறத்திற்கு வரைவிலக்கணமாகக் (Definition) கூறுகிறார்.

அகத்தவப் பயிற்சி

தவம் என்பதற்கு வள்ளுவர்,

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு

என்று விளக்கம் தருகிறார். அகத்தவம் எனப்படும் உள்ளப் பயிற்சிக்கும் அடிப்படை நோக்கம் அஹிம்சை நெறியைப் பேணுதலே ஆகும். ஏனெனில் அஹிம்சை மட்டுமே உலக உயிரினங்களிடையே நட்புறவைப் பெருக்கி, அமைதியை நிலை நாட்டவல்லது.

'சித்த சலனம் சம்சாரம்', 'மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்' என்பன போன்ற அனுபவ மொழிகள் உலக வாழ்க்கையில் மனத்திற்கு உள்ள முதன்மை யான இடத்தைப் புலப்படுத்துகின்றன. இத்தகைய மனத்திற்கும் மனிதனுக்கும் உள்ள உறவினையும் மனம் குறித்த விளக்கத்தையும் பாரத நாட்டு யோகிகள் விரிவாகத் தெளிவுபடுத்தியுள்ளனர். மனத்தை வளப்படுத்துவதன் வாயிலாகத் தனி மனிதனின் உலக, ஆன்மீக வாழ்க்கையிலும் பிரபஞ்ச உயிரினங்களின் வாழ்க்கை யிலும் வளத்தையும் நலத்தையும் பேரின்பத்தையும் மேம்படுத்த இயலும் என்பது யோகிராஜ் வேதாத்திரி மகரிஷியின் திடமான நம்பிக்கையாகும். அவரது சிந்தனைகள் அடங்கிய வேதாத்திரி யத்தின் உயிர்நாடிக் கொள்கையும் இதுவே ஆகும்.

மனம் ஒரு நிலையில் அமைந்து அடங்காது அலைந்து கொண்டிருக்கும் இயல்பினை உடையது. மன அலைவுகளே சொல்லாகவும் செயல்களாகவும் எண்ணங்களாகவும் உருவெடுக்கின்றன. இதுவே 'சித்த சலனம் சம்சாரம்' என்ற மொழியின் பொருள். மனம் ஏதேனும் ஒரு பொருளைப் பற்றியே எண்ணத்திலேயே ஒடுங்கி ஒருமைப்பட்டு அடங்கும்போது, மனிதன் இறைநிலையை உணர்கிறான். அதன் காரணமாக எல்லாவற்றிடமும் சமநோக்கும் வினைப்பயனில் விருப்பின்மை யும் உண்டாகி, இயற்கையோடு இயைந்த வாழ்விற்கு உட்படுகிறான்; உடலுடன் வாழ்ந்த போதிலும் அவ்வுடலுக்குரிய உணர்வினை ஒழித்து, உணர்ச்சிகள் செத்த உடலுடையவனாகி,

மண்ணில் உடல் விழும் வரை தொண்டாற்றுதலைத் தன் கடமையாகக் கொள்கிறான். இந்நிலையே வீடுபேறு, மோட்சம், ஜீவன் முக்தி என்று கூறப்படுகிறது. வாழ்க்கையின் ஒட்டுமொத்த உயிர் நாடியாக மனம் இருத்தலை ஆன்மீக அறிஞர்கள் திறம்பட விவரித்துள்ளனர்.

மனிதனின் மனம் குறித்து யோகிராஜ் கீழ்க்காணுமாறு விவரிக்கிறார்.

மனிதன் என்ற உருவில்,

> *1. பருஉடல், 2. நுண்ணுடல், 3. காந்தம் எனும் அலைச் சுழல் மூன்றும் ஒன்றில் ஒன்றாக இணைந்து இயங்கிக் கொண்டிருக்கின்றன. சிறுசிறு செல்களால் இணைக்கப் பெற்ற ஒரு முழுமையான கட்டுக் கோப்புத் தோற்றமே பரு உடல் (Physical Body). அந்தப் பரு உடலுக்குள் நுண்ணுடல் என்பது ஒன்றுடன் மற்றது நெருங்காத நுண்–விண் துகள்களின் ஓட்டச் சுழல். இதுவே சூக்கும உடல் (Astral body). சூக்குமமாகக் கருதப்படும் வேதான் எனும் நுண் விண்ணானது அதனைச் சுற்றியுள்ள இறைவெளியால் சூழ்ந்த ழுத்தப்படும் போது இறைவெளியிலிருந்து வெளி யாகும் சிற்றலைகளே 'காந்தம்' ஆகும்.*
>
> *உயிர் உடல்களில் உண்டாகிச் சுழன்றியங்கிக் கொண்டிருக்கும் இந்தக் காந்த அலைதான் 'சீவகாந்தம்' ஆகும். பஞ்சபூதக் கலவையான பரு உடலில் சீவகாந்தமானது அழுத்தமாக, ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக மாற்றம் பெற்று இயங்கும்போது, அந்தத் தன்மாற்றத்தின் முழுமைப் பேறாகவும் 'மனமாகவும்' சீவகாந்தம் இயங்குகின்றது. எனவே 'மனம்' என்பது 'சீவகாந்த' அலையன்றி வேறு ஒரு தனிப் பொருள் அன்று.*
>
> *(செயல்-விளைவுத் தத்துவம், பக். 17-18)*

அழுத்தம் (தொடு உணர்வு) முதலான ஐம்புலன்களும் மனத்தோடு நெருங்கிய தொடர்புடையன என்பதை மகரிஷி சுட்டிக்காட்டுகிறார். 'மனத்தான்ஆம் மாந்தர்க்கு உணர்ச்சி' என்கிறார் வள்ளுவரும்.

அறிவு, செயல் என எல்லாவற்றிற்கும் நெருக்கமாக இருத்தலால் மனத்தை வளப்படுத்துதல் மிக இன்றியமையாததது என்பதனால், அதனை 'அகத்தவம்' என்று மகரிஷி குறிப்பிடு கிறார். இந்த அருஞ்செயலை எளிதாகவும் இனிய உணர்வுடனும் மேற்கொள்ள வேண்டும். இதனாலேயே மனத்தை வளப்படுத்துகிற பயிற்சியை 'மனவளக் கலை' என்று ஒரு கலையாகக் கருதுகிறார்.

மனவளக் கலை

மனத்தை வளப்படுத்தும் பயிற்சியை மகரிஷி நான்கு உறுப்புக்களாகப் பகுத்து விவரிக்கிறார்.

> **பழக்கத்திற்கும் விளக்கத்திற்கும் இடையே போராடிக் கொண்டு இருக்கக் கூடிய மனிதன், பழக்கத்தை முறையாக மாற்றிக் கொண்டு விளக்கத்தை நல்விளக்கமாகப் பெற்று, அந்த விளக்கத்தின் வழியே வாழ்க்கையை மாற்றி கொண்டு வாழ்வதற்கு ஒரு முறையான பயிற்சி எதுவோ அதைத்தான் மனவளக் கலை என்று சொல்லுகின்றோம். மனவளக் கலையின் நான்கு அங்கங்களான தவம், அகத்தாய்வு, குணநலப்பேறு, முழுமைப்பேறு ஆகிய நான்கிற்கும் மனமே விளைநிலம். மனம் தன் திறமையையும் வல்லமையையும் பெருக்கிக் கொள்ளும் பயிற்சியே தவமாகும். மனம் தன்னைத் தூய்மை செய்து கொள்ள எடுத்துக் கொள்ளும் முயற்சியே அகத்தாய்வாகும். அந்தத் தூய்மையில் மேலும் மேலும் மனம் தன்னை உறுதிப்படுத்திக் கொள்வதே குணநலப் பேறு ஆகும். தூய்மையில் பூரணத்தை அடைந்து அமைதியாக இருப்பதுவே முழுமைப் பேறு ஆகும்.**
>
> *(மனவளக் கலை, ப. 23)*

தனிமனிதனும் அவன் சார்ந்துள்ள சமுதாயமும் அவனோடு இறைநிலையில் உறவுடைய பிரபஞ்சமும் உறுப்பும் உடலும் போன்ற நெருக்கம் கொண்டவை. பிரபஞ்சம் உடல் என்றால் மனித சமுதாயம் உறுப்பு. சமுதாயம் உடல் என்றால் மனிதன் உறுப்பு. உடலும் உறுப்பும் நலத்தோடும் வளத்தோடும்

இருந்தால்தான் அமைதியான இன்பம் நிலைக்கும். இந்தச் சுழற்சிநிலை தனி மனிதனின் உடலுக்கும் உயிருக்கும் பொருந்தும்.

குணநலப் பேறு

மனிதனின் உடல் நலமும் உயிர் நலமும் அவனது மன வளத்தைப் பொருத்து அமையத் தகுந்தவை. தன்னை இயற்கையின் ஓர் உறுப்பு என்றும் இலகுவான (எளிய) இறைவனின் சுடர் என்றும் உணர்ந்து வாழ்வதன் வாயிலாக மனவளம் எளிதில் சிறப்படையும். உலகில் வாழ்தற்குத் தேவையான உணவு, உடை, உறைவிடம் என்ற அத்தியாவசிய நுகர்ச்சியை மட்டுமே உரிமையாக்கிக் கொள்வதன் வாயிலாக மனிதன் பிற மனிதருக்கும் உயிரினங்களுக்கும் இயற்கை வளத்திற்கும் கேடு விளைவிக்காமல் இன்பமாக வாழ இயலும். அவற்றுக்குக் கேடு விளைவித்து - அவற்றின் நுகர்ச்சிக்குத் தடையாக வாழும் போதுதான் மனித வாழ்வில் போராட்டம் நிகழ்கிறது. அவ்வாறே வீண் ஆடம்பர - நாகரிகக் கேளிக்கை களுக்காக இயற்கை வளத்தைக் குறைக்கும் போது, இயற்கை அமைப்பே சீறி எழ நேரிடுகிறது. இயற்கை வளக் குறைப்பு என்பது மனித உடலில் ஏதேனும் ஒரு சத்துப் பொருள் குறைவுக்கு இணையானது. சத்துக் குறைவினால் மனத்தளவிலும் உடலளவிலும் நோய் உண்டாகும். இயற்கையிலும் நில நடுக்கம், பேரலை, பெரும்புயல் போன்ற அழிவுச் சீற்றங்கள் நிகழும். எனவே இறைநிலையை உணர்ந்து இன்பமாக வாழ முயல்வோர் முதற்படியாக எளிமையாக வாழப் பயில வேண்டும். மகாத்மா காந்தியடிகள் எளிய வாழ்வு, உடலுழைப்பால் வாழ்தல் என்று வலியுறுத்துதல் இது பற்றியே.

அன்புடைமை, அருளுடைமை, பொறுமை, நட்புணர்வு, கொல்லாமை (அகிம்சை), பிறர்க்கு உதவுதல் என இணக்கமான உறவை வளர்க்கிற பண்புகள் யாவும் குணநலப் பேறு என்று கூறப்படுகின்றன. இப்பண்புகள் அனைத்தையும் பெற்றவருக்கே இயற்கையையும் மனித சமுதாயத்தையும் பேணுதலுக்கான எளிய வாழ்க்கையை மேற்கொள்ள இயலும்.

மனக் கட்டுப்பாடு

தனிமனிதர்கள் சிறப்பாக வாழ்ந்தால்தான் அவனது சமுதாயம் போரின்றி அமைதியாக வாழ இயலும். எனவே

உலகில் இறைநிலையை உருவாக்கி நிலைப்படுத்துதற்குத் தனி மனிதர்களின் வாழ்வை வளப்படுத்தியாக வேண்டும். மனிதனை அனைத்து நிலைகளிலும் வளப்படுத்தி, நலமாக்கிட யோகிகள் சில வழிகளைப் பரிந்துரைக்கின்றனர்.

மனிதனிடம் எல்லாச் சடப்பொருட்களின் சிறப்புகளும் பலகோடி உயிரினங்களின் தன்மைகளும், சிறப்புகளும் அடங்கியுள்ளன. மேலும் இவற்றையெல்லாம் மனதை விரித்தும், குவித்தும், கூர்ந்தும் அறியக் கூடிய பேரறிவும் மனிதனிடம் சிறந்து விளங்குகின்றது. எனவே, இத்தகைய பேரறிவானது வாழ்க்கை அனுபவங்களால் சிறப்படைய மனித உடலே முழுமையான அமைப்பு உடைய கருவியாகும்.

ஆகவே மனித உடலை மதிப்போடு போற்றிக் காக்க வேண்டும். இந்தப் பெரு நோக்கைத்தான் அறிஞர் திருமூலர். ''உடம்பினுள் உத்தமன் கோயில் கொண்டானென்று, உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே" என்று திருவாய் மலர்ந்துள்ளார். பெருமதிப்புடைய மனித உடல் இறையாற்றலால் மிகச் சீர்மையோடு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதையறிகிறோம். எனினும், ஓரறிவு முதல் ஆறறிவு வரையில் பலகோடி தலைமுறைகளில்,

..... அறியாமை,

..... அலட்சியம்,

..... உணர்ச்சி வயம்,

இவற்றால் உடலும் மனமும் அமைப்பிலும், இயக்கத்திலும் சில பல சீர்கேடுகள் அடைந்துள்ளன. அதனால் தான் மனிதனின் வாழ்வில் உடலிலும், மனத்திலும் நோய்கள் பெருகிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய நிலைமாற்றம், திசைமாற்றம், குழப்பங்களுக்கேற்ப மனிதருடைய கருமையங்களும் களங்கப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் மனிதன் தான் சிந்தித்து உணர்ந்து திருத்திச் சீர்படுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய இயற்கையின் வரலாற்றில் மனிதகுல வாழ்வைச் சீரமைக்க வேண்டுமானால் ஐவகைச் சிறப்புத் திருத்தங்கள் வேண்டியுள்ளன. அவை.

1. உடல் நலச்சீர்மை
2. மனவளச் சீர்மை
3. நட்புநலம் காக்கும் அறநெறி
4. கருமையத் தூய்மை (தீயவினைகளின் பதிவினைத் தூய்மை செய்தல்)
5. இறையுணர்வு (பிரம்மஞானம்)

எனபனவாகும் (வாழ்க்கை வள உயர்வுப்படிகள் ஐந்து, பக். 13-14).

உடல், உயிர், மனம் என்னும் மூன்றின் ஒருங்கிணைப்பே மனிதன் என்ற வடிவமாகும். இம்மூன்றனுள் வளமும் நலமும் பொருந்திய உடலில்தான் நிறைவும் வளமும் கொண்ட உயிரும் மனமும் இயங்க இயலும். இதனாலேயே 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று திருமூலர் உள்ளிட்ட யோகியரும் சித்தர்களும் உடம்பை வளர்க்கும் நெறிகளைக் கூறியுள்ளனர்.

மனிதனை வளப்படுத்திட உணவுக் கட்டுப்பாடு, உணர்ச்சிக் கட்டுப்பாடு, மூச்சுக்கட்டுப்பாடு, உடற்பயிற்சி என்னும் நான்கும் இன்றியமையாதன. இந்த நான்கு நிலைகளையும் உள்ளடக்கியதே யோகநெறியாகும். இவையாவும் மனத்தை ஒரு நிலைப்படுத்துவதாகிய மனக்கட்டுப்பாடு உடையவர்க்கே வாய்க்கவல்லது.

மனிதன் மனித சமுதாயத்தினுடைய வாழ்வில் மட்டுமன்றி, பிரபஞ்சத்தின் முழு இயக்கத்திலும் முதலிடம் பெற்றுள்ளான். அவனது இயக்கம் அவன் பெற்றுள்ள மனத்தின் நலத்தை ஒட்டி அமைகிறது. தனி மனிதன், மனித சமுதாயம், பிரபஞ்சம் யாவும் நரகமாக அமைதலும் சொர்க்கமாக அமைதலும் மனிதனின் மனநலத்தை ஒட்டியே அமைகின்றன. நிலைபெற்ற உயிருக்கு ஆக்கமாகிய இறைநிலையை அளிப்பதும் மனத்தின் நலமான இயக்கமே ஆகும். இதனாலேயே வள்ளுவர் 'மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்..... தரும்' என்று மொழிகிறார் யோகிராஜ் வேதாத்திரி மகரிஷியும் மனத்தின் சிறப்புக் கருதியே மனத்தை வளப்படுத்தும் கலையை மனித குலத்தில் பரப்பி இறைப்பணியாற்றி வருகிறார்.

வேதாத்திரியத்தில் இறைநிலை

முனைவர் அலமேலு மங்காள்

உடல் உயிர் மனம் மூன்றும் சேர்ந்ததுதான் "நான்" என்பதாக ஒலிக்கிறது. இந்த மூன்றில் நான், யார்? எல்லாமே சேர்ந்து தான் "நானா"? இந்த வினாவிற்கான விடை எளிமையாகக் கிடைக்கக்கூடியது தான். எளிய முறை யோகத்தின் மூலமாக நடைமுறையாக (Practical) வெளிப்படையாக அனுபவமாகப் புரிந்து கொள்ளக்கூடியது தான் நான் யார் என்ற விளக்கமும். இதற்கு விடை கிடைத்தால் தெய்வத்தை அறியலாம், தெய்வ நிலை அறியலாம், மெய்ப்பொருள் என்பதை உணரலாம். இதனால் அறிவு என்ன என்பது உணரப்படும். இவ்வகையில் அறிவை அறிதல், தெய்வநிலை அறிதல் இப்பிரபஞ்சத்திற்கு மூல காரணமாக உள்ளதை அறிதல் எல்லாமே ஒன்றுதான்.

புலனைக் கடந்து விஞ்ஞான அறிவுக்குப் போக வேண்டும். ஒவ்வொரு தோற்றத்தையும் பிரித்துக் கொண்டே போனால் கடைசியில் எல்லாமே "விண்" என்ற ஆதாரத் திறனுடைய கூட்டு அல்லது கூட்டமேயாகும்.

எந்தத் தோற்றமானாலும் எந்தப் பொருளானாலும் அதைப்பிரித்துப் பார்ப்போமேயானால் கடைசியில் நிற்பது நுண்துகளாக உள்ள 'விண்'. அந்த 'விண்' என்பதை உணர்ந்து கொண்டோமேயானால் அது தான் 'சிவம்' என்ற பூரணம். அந்தப் பூரணமே தன்னைத் துண்டுபடுத்திக் கொண்டு சக்தியாக இயக்கமாக வந்தது.

அந்த சக்தி என்ற விண் 'பரமாணு' என்று தமிழிலும் 'ஆகாசம்' என்று வடமொழியிலும் குறிப்பிடப்படுகிறது. 'Ether' என்று ஆங்கிலத்தில் சொல்கிறோம்.

தமிழ் விரிவுரையாளர், மீனாட்சி மகளிர் கல்லூரி, கோடம்பாக்கம், சென்னை - 600 024

பௌதிகப் பிரிவு என்று பார்த்தால் முதலில் விண்தான். அந்த விண் சிறிது கூடும்போது காற்று. அதற்கு மேல் இன்னும் சற்று அழுத்தமாகக் கூடும்போது நெருப்பு. நெருப்பு, காற்று இரண்டுமே காற்றுத்தூள். இது அழுத்தக்காற்று, லேசான காற்று அவ்வளவுதான். இந்த இரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்து ஒரு இடத்தை நிரப்பிக் கொண்டால் அதுவே நீர். அதற்குமேல் இன்னும் நெருங்கிக் கெட்டியானால் மண். இவையே ஐந்து பூதங்கள் என்று சொல்லப்படுகின்றன.

அந்த ஐந்து பூதங்களாக உள்ள விண், காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகிய எல்லாமே விண்ணினுடைய கூட்டுத்தான் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். விண் என்பது மூலக்கூறு, நாம் பிரபஞ்சத்தில் பார்க்கக்கூடிய எல்லாமே விண் என்பது தான். ஆனால், கூட்டாகப் பார்க்கின்றோம்.

நமக்குத் தீமை செய்தவரையும் ஏன் வாழ்த்த வேண்டும் என்றால், அவர் அறியாமையினாலேதான் அவ்வாறு செய்தார். நம்முடைய வினைச்சுமையின் விளைவு அவரைத் தீமை செய்ய இயக்கியது. எனவே அவர் செய்தார். அவருக்குள்ளாக இயங்கிக் கொண்டிருப்பதும் எல்லாம் வல்ல முழுமுதற் பொருளே. எனவே, அவரை மனதார வாழ்த்தி எனது தீய பதிவு ஒன்றை அகற்ற உதவிய அவருக்கு நன்றியும் செலுத்துவேன் என்ற தத்துவ விளக்கம் நம் செயலுக்கு வந்து அதுவே இயல்பாகிவிட்ட தென்றால், நாம் ஆன்மீகப் பாதையில் திடமாக முன்னேறிச் செல்கிறோம் என்பதற்கு அதுவே அறிகுறியாகும்.

அறிவும் சிவமும்

'சக்தி' என்பதன் இயக்கத்தை நிறுத்திவிட்டால் சிவம். சிவம் என்பது இயங்கும் போது சக்தி.

அதாவது இயங்கும் சிவம்தான் சக்தி; இது தான் தத்துவ ஞானம், மெய்ஞ்ஞானம்.

எது இயங்கிக் கொண்டே இருக்கிறதோ, எது மாறிக் கொண்டே இருக்கிறதோ அது நிகழ்ச்சி. அந்த மாற்றத்தையோ இயக்கத்தையோ கழித்துவிட்டால், எது நிலையாக நிற்கிறதோ அதுதான் பொருள்.

அப்போது இயங்கிக் கொண்டே இருப்பதுதான் அணு. அதை நிறுத்திவிட்டோம் என்றால் அது சிவம். அதுதான் பூரணம்; நிகழ்ச்சியின் போது அணு, நின்றுவிட்டால் பொருள்.

சிவம், பூரணம். பொருள் என்ற நிலையிலே, சிவமாக இருக்கிறது. இதுவே 'மெய்ப்பொருள்' அதுதான் மெய் (Truth) என்று சொல்லப்படுவது.

ஆக 'மெய்ப்பொருளாக இருப்பது சிவம்', அதனுடைய அசைவாக இருப்பது பரமாணு. அதனுடைய கூட்டமாக இருப்பது தோற்றம். எந்தப் பொருளிடத்திலும் நாம் காணக் கூடிய எல்லாப் பொருட்களிலும் எல்லாம் வல்ல இறைவனே அணுவாகி வந்ததனால், அங்கே முற்றறிவாக இருந்த சிவமே இங்குச் சிற்றறிவாக அந்தப் பொருளவிலேயே அறிவாகத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது இயக்கநியதி என்ற பெயரில் இரசிக்கக்கூடியவனும் எண்ணக் கூடியவனுமான என்னை ஆக்கியவன் யார்? என்று தன்னையே திரும்பிப் பார்க்கிறான்; இது தான் ஆறாவது அறிவு. அறிவையே அறிந்து கொள்ளக் கூடிய அறிவின் உயர்நிலை ஆறாவது அறிவு.

ஆறு கரை உடைந்தால் தன் மூலமாகிய கடலை நோக்கியே விரைந்தோடும். கடலை அடையும் வரை அதற்கு ஓய்வு அமைதி இல்லை. இது போன்றே மெய்ப்பொருளே (பிரம்மமே) அணுவாகி, பஞ்சபூதமாகி, ஜீவனாகி மனிதனாக இருக்கிறது. அவையெல்லாமே இடைநிலைதான்.

இனி, மனிதன் ஆறாவது அறிவு மேலோங்கப் பெற்று அவன் தன்னிலையை, தான் பிரம்மம் என்ற நிலையை அடைந்தாக வேண்டும். அதுவரை மனிதனுக்கு அமைதி கிட்டாது.

மரத்திற்கும் பழத்திற்கும் உள்ள தொடர்பைப் பார்ப்போமேயானால் எல்லாம் வல்ல இறைநிலைதான் இந்தப் பழம். அதைவிடுத்துப் பழத்தை மட்டும் பார்த்தால் அஞ்ஞானம், இது அணுக்களால் ஆனது என்று பார்க்கும்போது விஞ்ஞானம். எல்லாம் வல்ல இறைவனே தான் அணுவுமாகி அதன் கூட்டிலே பழமாக இருக்கிறான் என்று தெரிந்து கொண்டால் மெய்ஞ் ஞானம்.

அறிவே சிவம், சிவமே அறிவு

பழத்தை எடுத்துக் கொள்வோம். பழம் என்பது என்ன? இறைவன் என்பது யாது? கண் மூலமாகப் பார்க்கக் கூடியது பழம். அந்தக்காட்சி கடந்தால் விஞ்ஞான அறிவுக்குப் போகும் போது அணு. அதற்கு மேல் மெய்ஞ்ஞானம் போகும் போது இந்த அணு என்பதாக ஒன்றும் இல்லை. எல்லாம் வல்ல இறைவனே இயங்கு நிலையில் அணுவாக இருக்கிறான்; கூடிய நிலையிலே பழமாக இருக்கிறான். பழத்திலே இப்போது சிவத்தைக் காண்கிறோம். சிவமே, பிரம்மமே, மெய்ப்பொருளே, தெய்வமே அசைவிலே அணுவாகி, அணுக்கள் கூட்டிலே ஆப்பிளாகக் காட்சியளிக்கிறது. இப்போது பழத்திலே நாம் இறைநிலையைக் காண்கிறோம். அது மாத்திரமா? எந்தப் பொருளை எடுத்துக் கொண்டாலும் இந்த மூன்று உண்மைகளை ஒரே நேரத்தில் பார்க்கக் கூடிய பழக்கம் வேண்டும். 'எப்பொருள் எத்தன்மைத்தாயினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு''. பொருள், தோற்றம் இரண்டும் ஒன்றுதான். ஒரு பேனாவை எடுத்துக் கொள்ளுங்கள், அல்லது ஒரு மனிதனை, ஒரு மிருகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். உருவத்திலேதான் பேனா, மனிதன், மிருகம். ஆனால், அதைக் கடந்து விண்ணறிவுக்குப் போனால் அணு, அணுவைக் கடந்து போனால் சிவம். அந்த மூன்றாவது படிக்குப் போய்விட்டால், எந்தப் பொருளுமே சிவம்தான். இறைநிலையேதான், இறைவனேதான். அசைவிலே அணுவாகி, கூட்டிலே காட்சியாக இருக்கிறான். கீதையிலே கண்ணன் சொல்வதாக ஒரு கவி வருகிறது.

எந்தப் பொருளிலும் என்னைக் காண்பவன் எவனோ
அவனை எப்போதும்நான் நீங்குவதில்லை
அவன் என்னைவிட்டு நீங்குவதில்லை

ஏதேனும் ஒரு பொருளை எடுத்துக் கொள்ளுங்கள். அது பலகோடி அணுக்கள் இணைந்து அப்பொருளை இயக்கிக் கொண்டிருக்கிறது. உருவத்திற்கு, கண்ணுக்கு, புலனுக்கு அது அப்பொருள். ஆனால் விண்ணறிவுக்கு அணு. எல்லாம் வல்ல இறைவனே எழுச்சி பெற்று இயங்கிய நிலையில்தான் அணு. வேறு ஒன்றும் இல்லை. ஆக ஆதி என்ற அந்தப் பரம் பொருளை அணு என்ற நிலையடைந்து அணுக்கள் கூடிப்பொருளாக

இருக்கிறான். அப்பொருளிலேயே அவனைக் காணலாமா? இல்லையா? காணலாம். கதவிலே காணலாம். மலரிலே காணலாம், நிலவிலே, தூணிலே, துரும்பிலே, விண்ணிலே எல்லாவற்றிலும் காணலாம். இந்த உண்மையை நாம் உணர்ந்து கொண்டால் நாம் பார்க்கும் பொருள் எல்லாம் அவனாகவே காட்சி அளிக்கும். பார்க்கும்போது கண் பார்வையிலே ஒளி தடுக்கிறது, தட்டுகிறது. அதனால் இதைப் பொருள் என்கிறோம். ஆனால் அதற்கும் மேலாக மனம் தடுக்கிறது. அந்த விண்ணையும் கடந்து பரம்பொருளாக உள்ள அதனுடைய மூல நிலைக்குப் போகும்போது மனத்திற்குக் கட்டுப்பாடு இருக்கிறதா, இல்லையா?

அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி
அருளோடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குள்ளே
அகிலாண்ட கோடியெல்லாம்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க்குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாமல் நின்றதெது

என்று சொன்னார் தாயுமானவர். அதுவே கருத்துக்கிசைந்தது என்பது அவர் வாக்கு. மனவாக்கினில் தட்டாமல் நின்றது எது? இப்போது கண் பார்வைக்கு இந்தக்காட்சி தட்டுகிறதே! விண்ணறிவுக்கு விண் என்பது மனத்திற்குத் தட்டுகிறது. மனம் வேறு, விண்வேறு என்று இருக்கிறது. ஆனால் சிவத்தை நினைக்கும்போதோ தட்டவே இல்லை. ஏன்? அவனேதான் இங்கு அறிவாக இருப்பதால் அறிவும் அவனும் ஒன்றாக இருப்பதால், எங்குத் தட்டும்? இதைக் கொண்டுதான் அவனேதான் அறிவாக இருக்கிறான். சிவமே அறிவாக, பிரம்மமே அறிவாக இருக்கிறது என்ற விளக்கத்திற்குக் கொண்டு வந்துவிடுகிறார்கள்.

காலத்தால் எழுந்த தத்துவ ஞானத்திலே இரண்டு பிரிவுகள் உள்ளன. முதலில் எல்லாப் பொருட்களும் அணுக்கள். அணுவாக இணைந்தவைதான் எல்லாப் பொருட்களும்; எல்லாமே ஒன்று தான், சிவம்தான் என்று கண்டுபிடித்தார்கள். 'தத்துவமஸி' என்ற வார்த்தை அப்போது வந்தது. பிற்காலத்தில் சித்தர்கள் அகத்தவம் புரிந்து மனமே புறமனத்திலிருந்து நடுமனம்

சென்று அங்கிருந்து இறைநிலையோடு ஒன்றி அவனேதான் அறிவாக இருக்கிறான் என்றபோது 'அகம் பிரம்மாஸ்மி' என்று சொன்னார்கள். அவன்தான் மாற்றம் பெற்றுக் கொண்டே வந்த நிலையிலே இன்று மனிதனாக இருக்கிறான். இடையிலே தொடர் எங்கேனும் எள்ளளவேனும் விட்டுப் போயுள்ளதா, அறுந்து போயுள்ளதா என்று பார்த்தால் கிடையவே கிடையாது. இப்பொழுது 'நான் யார்'? இறைவனேதான் நானாக இருக்கிறான். ஆனால் 'நானே இறைவனாக இருக்கிறேன்' என்று சொல்லும் இடத்திலே இந்தச் சிறிய ''நான் (the little self) கழிந்து போகவில்லை. இதைக் கேட்கும் இன்னொருவர், "அவர் தன்னை இறைவன் என்று அறிவித்துக்கொண்டு விட்டாரே! நான் இன்னும் சாதாரண மனிதனாகத்தானே இருக்கிறேன்" என்று பயபக்தியோடு நடந்துகொள்ளும் நிலையில் நமக்கு நம்மை யறியாமலே தன்முனைப்பு (Ego) மிஞ்சி ஒருவகை மயக்கத்திலே, குழப்பத்திலே நம்மைக் கொண்டு நிறுத்த வாய்ப்பிருக்கிறது. 'இறைவனே நானாக இருக்கிறான்' என்ற உண்மையைத் தெளிவாக உணர்ந்த நிலையிலே தன்முனைப்பு எழவே எழாது. இங்கே அந்தச் சிறிய 'நான்' முழுவதுமாக அற்றுப்போகும்.

இறைவன் அறிவாக இருக்கிறான்; அறிவே 'பிரம்மம்' என்பது இந்த நாடு கண்டுபிடித்த உண்மை. இந்த இடத்திலே இதை உணர்ந்தவர்கள் இந்த அறிவே இல்லாத பொருட்கள் பிரபஞ்சத்திலே ஒன்றுமே இல்லை என உணர்ந்தார்கள்.

அறிந்தது சிவம் மலர்ந்தது அன்பு

'நான் யார்' என்று ஒரு கேள்வியைக் கேட்டுக் கொள்வோம். நான் உடலா, உயிரா, அறிவா? இந்த உடலில் உயிர் இயங்கிக் கொண்டிருக்கிறதே அது எப்படி வந்தது? எனப் பார்ப்போம்.

மூலப்பொருளாக உள்ள சுத்த வெளி, சிவம், பூரணம் - தனது உள்ளமைந்த விரைவால் எழுச்சி பெற்று விண் என்ற பரமாணுவாகியது. அதனையே ஆகாசம் என்று சொல்கிறோம். அந்தப் பரமாணுக்களின் திரட்சி நிலை வேறுபாடுகளே பேரியக்க மண்டலமாகவும் பஞ்சபூதங்களாகவும் விளங்குகின்றன. இந்தப் பஞ்சபூதக் கலவையினால் ஆன இந்த உடலில் நுண்துகளாக உள்ள விண் என்ற ஆகாசமே உயிராகச் செயலாற்றுகிறது.

இதனைச் சிதாகாசம் என்கிறோம். இந்தச் சிதாகாசமென்ற உயிரானது விரிந்து புலன்கள் மூலமாகப் படர்கை நிலையிலே இயங்கிக் கொண்டிருப்பதை மனம் என்று குறிப்பிடுகிறோம்.

அந்த மனத்தை உள்முகமாக, அகம் நோக்கித் திருப்பி, உயிர் மேல் மனம் வைத்துத் தவம் ஆற்றுபவன், நுண்ணுணர்வு நிலை அடைந்து விண்தான் உயிராக இருக்கிறது என்பதை உணர்கிறான். இந்த உணர்ந்த உணர்வைக் கொண்டு உயிரின் மூல நிலையைக் காணும்போது முழுமுதற் பொருளாக உள்ள சிவம், பிரம்மம் என்ற தெய்வநிலை அடைகிறான், அறிகிறான். அந்நிலை அடைந்த போதுதான் 'அவன் வேறு நான் வேறு இல்லை. அவனே நானாக இருக்கிறேன் என்ற மெய்விளக்கம் பெறுகிறான். இந்த நிலைதான் சமாதி எனப்படுகிறது. சமாதி என்ற வார்த்தை சம + ஆதி என்ற கூட்டுச்சொல். இது, ஆதிக்குச் சமமாக அறிவு நிற்கிற போது இரண்டுமே ஒன்றாக அதாவது நான் வேறு ஆதிநிலை வேறு இல்லை, பரம் பொருளே தான் நானாகவும் உள்ளது; வேறு வித்தியாசம் இல்லை என்று உணரும் நிலையாகும்.

அன்பு வேறு சிவம் வேறு அல்ல. சிவத்தை உணர்ந்தால் அன்பாக மலர்ந்தது. அப்போது கருணை என்பது எங்கு பிறக்கும் என்றால், உண்மையிலே மெய்ப்பொருளை உணரும் போதுதான் கருணை பிறக்கும். அந்த நிலையிலே ஒவ்வொருவரும் பார்ருங்கள். நான் என்பது உடலா, உயிரா, அறிவா? அறிவுதான் கூறுகிறது. நான் என்று ஆனால் எங்கிருந்து? உயிராக இருந்து கொண்டு கூறுகிறது. அந்த உயிர் என்பது என்ன? உடலிலே இருந்தாலும், எல்லாம் வல்ல இறைநிலையே பரமாணு என்ற வடிவம் எடுத்தால், அந்தத் தொடரில் வந்து இப்போது கூறுகிறது என்றால் இறைவனும் அணுவாக இருந்து கொண்டு உயிர் என்ற நிலையிலே அறிவாகப் புலன்கள் மூலமாகக் காட்சி வடிவத்தில் எல்லாவற்றையும் கண்டு கொண்டு இருக்கிறான் என்றால் நான் யார்? அவனேதான் நான். அவனன்றி நான் அல்ல என்ற முடிவுக்கு வருகிறோம். இதைத் தெரிந்து கொண்டால் மடடும் போதாது. எல்லாம் அவனேதான், நான் அவனேதான் என்று சொல்லிக் கொண்டே இருந்து வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும், எப்படி? குடும்பத்தில் கணவன், மனைவி, குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுக்குள்ளாக இறைவனைக் காண

வேண்டும். அப்போது அந்த இடத்தில் இறைவன் அந்தத் தோற்றத்தில் இருக்கிறான். அதற்கு அந்த இறைவனுக்கு என்ன செய்ய வேண்டும்? என்ன உதவி செய்ய முடியும்? துன்பம் இழைக்காமல் இருப்பது ஒன்று, துன்பத்தைப் போக்கி உதவுவது இரண்டு. இரண்டே வேலைதான், தன்னை உணர்வதற்குத் தவம் வேண்டும். உயிர்களுக்குக் கடமை செய்வதற்கு அறம் வேண்டும். அந்த அறம் துன்பத்தைப் போக்கும் ஒரு வழி. ஒழுக்கம் என்ன என்றால் துன்பம் தராமல் நாம் வாழ்வது. துன்பத்தைப் போக்குவது ஈகை, ஆக ஒழுக்கம், ஈகை என்ற இரண்டே வேலைகள். இது பிறக்க வேண்டும் என்றால் எல்லா உயிர்களிடத்திலும் அவனைக்காண வேண்டும்.

இந்த விளக்கத்தை மனத்தில் வைத்துக் கொண்டு நாளுக்கு நாள் சிந்தனை செய்துசெய்து இறைநிலையோடு ஒன்றிக் கலந்து நீங்களும் இறைநிலையின் மறுவடிவந்தான் என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்டு பிறவிப்பயன் எய்துவீர்களாக.

வேதாத்திரியத்தில் இறையியல் சிந்தனைகள்

முனைவர் க. திலகவதி

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் உலகில் உள்ள மானுட சமுதாயம் நலமாகவும், வளமாகவும் வாழ வேண்டும் என்பதற்காக 'வாழ்க வளமுடன்' என்னும் தத்துவத்தையும், ஊர்தோறும் 'மனவளக்கலை' மன்றங்களையும், 'உலக சமுதாய சேவா சங்கத்தையும்' (1958) அமைத்து, உலக மக்களின் மனத்தைச் செம்மைப்படுத்தி, உலக அமைதிக்கு மக்களின் மன அமைதிக்கு வழிகாட்டி வருகிறார். இவருடைய வாழ்வே உலக மக்களுக்கு ஒரு தத்துவமாக நின்று வழிகாட்டுகின்றது எனலாம். உலக சமுதாய சேவாசங்கம் இன்று இந்தியா, மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா, சிங்கப்பூர் போன்ற உலகின் பல நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகின்றது. ஆதிசங்கரர், திருமூலர், வள்ளுவர், வள்ளலார், தாயுமானார், சித்தர்கள் கண்ட தத்துவத்தின் விளக்கமாக இவருடைய இறையியல் சிந்தனைகள் பரிணமிக்கின்றன. நியூட்டன், ஆல்பர்ட் ஐன்ஸ்டைன், ஸ்டீபன் ஹாக்கின்ஸ் போன்ற விஞ்ஞானிகளின் தெளிவு பெற முடியாத சில விஞ்ஞானக் கோட்பாடுகளுக்குத் தீர்வு காணும் விஞ்ஞான விளக்கமாகவும் இவருடைய கோட்பாடுகள் அமைந்துள்ளன. இவருடைய இறையியல் சிந்தனைகள் 'மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் கலந்த ஞானக் கலவை' என்றால் அது மிகையாகாது. மெய்ஞ்ஞானி, விஞ்ஞானி, பகுத்தறிவுவாதி என அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கோட்பாடு இவரது இறையியல் கோட்பாடு. அதனாலே 'பாமர மக்களின் தத்துவஞானி' எனப் போற்றப்படுகின்றார். ஏறத்தாழத் தமிழில் நாற்பது நூல்களையும், ஆங்கிலத்தில் இருபதிற்கும் மேற்பட்ட

இலக்கியத்துறை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 005

நூல்களையும் எழுதி உலகச் சமுதாயம் நலம்பெறும் பொருட்டு, தமிழ் உலகிற்கு, ஞான உலகிற்கு அருட்கொடையாக அளித்துள்ளார்.

சிறுவயதிலிருந்தே மகரிஷி அவர்களுக்குக் கடவுள் யார், உயிர் என்றால் என்ன? என்ற கேள்வி எழுந்தது. வேதாத்திரி இக்கருத்தினை, 'எனது வாழ்க்கை விளக்கம்' என்ற நூலில் மிகத் தெளிவாகக் குறிப்பிடுவார். அக்கேள்விக்கான விடைகளைக் கண்டுத் தானும் உணர்ந்து உலகிற்கும் உணர்த்தி வருகிறார். எளிய முறை உடற்பயிற்சி, குண்டலினியோகம், தளராத தற்சோதனை, அறுகுணச் சீரமைப்பு, காயகல்பயோகம் போன்ற வாழ்க்கை நெறிமுறைகளைக் கற்பித்து உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் மேலோங்கி வாழ வாழ்த்துகின்றார், வழிகாட்டுகின்றார்.

இறை, உயிர், வினை, மதம், சடங்கு, வழிபாடு ஆகியவற்றைக் குறித்து வேதாத்திரி மகரிஷி விளக்கும் இறையியல் சிந்தனைகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

இறை விளக்கம்

பரம் என்ற மெய்ப்பொருள் இருப்புநிலையில் வெளி, சிவம் என்றும், தெய்வம் என்றும் வழங்கப்பெறும் ஆதிநிலை. அதுவே இயங்கும் நிலையில் அணு. இதனைச் சக்தி என்றும் வழங்குவர். சிவம் வேறு சக்தி வேறு அல்ல. பரம் சக்தியாகிப் பராசக்தியாயிற்று. இதனால் அது 'பரமாணு' எனப்படுகின்றது. விஞ்ஞானிகள் இதனை அணு (Atom) என்று அழைப்பர்.[1] இறை என்பது அரூபமான பேராதாரச் சக்தி, மாபெரும் பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும் மூலமானதும் புலன்களைக் கொண்டு வேகம், காலம், பருமன், தூரம் என்ற நான்கு அளவைகளாலும் கணிக்க முடியாததும், அறிவு புலன்களின் மூலமாகத் தேடும்போது இல்லையென்றும், தனது ஆறாவது நிலையின் உயர்விலே ஆராயும்போது உண்டு என்றும் உணரக்கூடியதுமான உண்மைநிலை எதுவோ அதுவே 'தெய்வம்' என்று வழங்கப்படுகிறது.[2]

மனித மனத்திற்கு ஒன்றுமே இல்லாத சுத்த வெளியாகவும், எங்கும் நீக்கமற நிறைந்ததாகவும், எல்லையற்ற விரிவுடைய

தாகவும் உள்ள இறைவெளிதான் அனைத்தியக்க அருட்பேராற்ற லாகும். இதனைப் 'பிரம்மம்' என்று வடமொழி அறிஞர்களும், 'தெய்வம்', கடவுள், சுத்தவெளி என்று தமிழ்மொழி அறிஞர்களும் கூறுகின்றனர்.[3] விஞ்ஞானிகள் கிராவிட்டி (Gravity) என்ற வார்த்தையின் மூலம் பிரபஞ்சத்தின் மூல ஆற்றலைக் குறிப்பிடு கின்றனர். எல்லாப் பொருட்களிலும் ஊடுருவி அனைத்தையும் தன்னில் இணைத்துக் கொண்டு எங்கும் நீக்கமற நிறைந்தும் உள்ள இணையற்ற ஒரே பொருள்தான் அனைத்தியக்க அருட்பேராற்றல் என்னும் தெய்வம் ஆகும். இறைநிலையானது பிரபஞ்சமாக (உலகமாக) மலர்வதற்கு முன்னர் அனைத்தையும் இறுக்கி, சுருக்கி மரம் வித்தில் இருப்பது போல வைத்திருந்தது. அந்த ஆதிநிலையே இருப்புநிலையாகும். இருப்பு நிலையில் பூரணம் (வற்றாயிருப்பு Plenum), பேராற்றல் (Energy), பேரறிவு (Consciousness), காலம் (Time) என்ற நான்கு தன்மைகளும் ஒன்றிணைந்து இருந்தன. அதுவே தனது இயக்க நிலையில் பரிணாமம், இயல்பூக்கம், கூர்தலறமாக விரிவடைந்தன. விண் முதல் அண்ட கோடிகள், உயிரினங்கள் இவையாகப் பரிணாமம் அடைந்தும் (Evolution), ஒவ்வொரு பரிணாமத்திலும் அதற்கு வேண்டிய ஊக்கமும் ஆக்கமும் பொருந்திய இயல்பூக்கச் சிறப்பாகவும், பொருட்களோ, அலைகளோ ஒன்றோடு ஒன்று மோதும் போதும், கூடும்போதும் தக்கதோர் விளைவுதரும் இறைநீதி எனப் போற்றப்படும் கூர்தலறம் (Cause and Effect) ஆகவும் மலர்ந்து சிறப்படைந்திருக்கின்றது. இயற்கையை அதன் ஆதிநிலையான இறைவெளியிலிருந்து மனிதமனம் வரையில், அறிந்து கொள்ளும் சுயசரித்திரம்தான் பிரம்மஞானம். இதனை, மகரிஷி பிரம்மஞானம் என்ற தம் நூலில் (ப. 21)

எந்த ஒன்று அறிந்திடில் இறைவன் முதல் உயிர்வரை
எல்லாவற்றையும் உணர்த்துமோ அதுவே
காந்தமாம்
முந்தையோர்கள் அகத்தவத்தால் முற்றுணர்ந்த போதிலும்
மொழிவதற்கு உவமையின்றி முட்டி மோதி
நின்றனர்
இந்த நாள் விஞ்ஞானமோ ஏற்றம் பெற்றதாலதை
இயங்கிடும் மின்சாரம் மூலம் எல்லார்க்கும்
உணர்த்தலாம்

அந்தமாம் மெய்ஞ்ஞானத்தோடு அணு விண் ஞானம்
இரண்டையும்
அறிந்து உய்ய பாலம் போன்ற ஆக்க ஞானம் காந்தமே

என்று மெய்ஞ்ஞானத்தையும், விஞ்ஞானத்தையும் இணைத்து வான்காந்தத் தத்துவத்தை விளக்குகின்றார். இறைநிலையை,

வற்றாயிருப்பு பேராற்றல் பேரறிவு காலம் எனும்
வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே
தெய்வமாம்
வற்றாத இந்நான்கும் விண்முதல் ஐம்பூதங்கள்
வான்கோள்கள் உலகம் உயிரினம் ஓரறிவு முதல்
ஆறாம்
வற்றாது பெருகிவரும் வளர்ச்சியே தன்மாற்றம்
வந்தவை அனைத்திலும் சீரியக்கம் இயல்பூக்கம்
வற்றாது பெருகும் பேரண்டத்தில் உயிர்வகையில்
வழுவாத செயல்விளைவு நீதியே கூர்தலறம்
உண்மை, உண்மை

எனக் கூறுகிறார். இயற்கையின் சரித்திரத்தில்,

1. அனைத்தியக்கப் பேராற்றலான இறைவெளி, பிரம்மம் (Gravitational Basic Force)

2. அதன் நுண்பகுதி வேதான் என்னும் நுண்-விண், முதல்வகை விண், பரமாணு (Primary Energy Particle) வடமொழியில் ஆகாசம்

3. வேதானின் சுழல் விரைவினால் தோன்றும் யோகான் எனும் நுண்விண், இரண்டாம் வகை விண் (Secondary Energy Particle)

4. காந்தம் - இறைவெளியும் யோகானும் ஒன்றிணைந்த களம் காந்தத்தின் தன் மாற்றங்களின் வெளிப்பாடுதான் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் எனும் ஐந்து தன் மாத்திரைகளும், உயிரினங்களில் உணரும் ஆற்றலாக இயங்கும் மனமும் ஆகும்.

இக்கருத்தைத் திருவள்ளுவரும்

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்று ஐந்தின்
வகைதெரிவான் கண்ணே உலகு (குறள். 27)

எனக் குறிப்பிடக் காணலாம்.

மகரிஷி அவர்கள், செயல் விளைவுத் தத்துவம் என்னும் நூலில் (ப. 7)

அனைத்தியக்கப் பேராற்றல் பிரம்மம் தெய்வம் என்போம்
அறிந்தவர்கள் அவ்வாற்றல் வழி
வாழ்வோரெல்லாம்
முனைப்பொழிந்த முனிவரென்றும் பிரம்ம
ஞானியென்றும்
முன்னோர்கள் சொல்லியுள்ளார் முற்றுணர்ந்த
தெளிவால்
வினைப்பதிவில் தீமைகளை வேரறுத்து வாழ்வில்
விலங்கினத்தின் செயலொழித்து விஞ்ஞானம் தேர்ந்து
அனைத்துலகும் மக்கள் மெய்யறிவுடனே வாழும்
அந்தப் பெரும் நன்னாளை வாழ்த்தி
வரவேற்போம்

என்று உலக மக்கள் இறை உணர்வுடன் ஒன்றி வாழ உணர்த்துகின்றார். பிறவித் துன்பமும், அதற்குக் காரணமான வினைப்பதிவுகளும் கடலைப் போன்றவை. அதை எப்படிக் கடக்க வேண்டும் என்பதைத் திருமூலர்,

திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி
இளைப்பினை நீக்க இருவழியுண்டு
கிளைக்கும் தனக்கும் அக்கேடில் முதல்வன்
விளைக்கும் தவம் அறம் மேற்றுணையாமே

என அகத்தவத்தையும், இறையுணர்வையும், அறநெறியையும் உணர்த்துகின்றார். பிரம்மம் என்ற பேராதார நிலையை ஐயமின்றி உணர்ந்த மகான்கள் 'தத்துவம் அசி', 'அகம் பிரம்மாஸ்மி', 'அயனாம்சம் பிரம்மம்', 'பிரக்ஞானம் பிரம்மம்' என்று பிரம்ம ஞானத்தை உலகோர்க்கு விளக்கியுள்ளார்கள். இதனை மகரிஷி,

உன்னிலே நானடங்க என்னுளே நீ விளங்க
உனது அருள் ஒளிர எனதுள்ளம் தூய்மை
பெற்றேன்
இன்னும் வேறென்ன வேண்டும் இப்பேறு பெற்ற பின்னர்
(பிரம்மஞானம், ப.68)

எனக் குறிப்பிடுவர்.

உலகம், நீர்வளம், காற்று, சூரியன், நிலவளம் மற்றும் இயற்கை வளங்கள் அனைத்தும் இறையாற்றலின் பரிணாமமே. இவை ஒருவர்க்கு மட்டும் சொந்தம் அல்ல. உலகில் பிறந்த அனைவரின் வாழ்வுக்கும் சொந்தமானது.

உலகு – உடல் – வினை நுகர்ச்சி

மனித உடலின் உறுப்புகளும், புலன்களும் எவ்வாறு ஒரே சீராக இயங்கி வருகின்றதோ, அதே போல்தான் பேரண்டத்திலும் நட்சத்திரங்களும், கோள்களும் இயக்கச் சீர்மையுடனும், ஒழுங்குமுறையோடும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பேரியக்க மண்டலத்தில் உருளல், ஈர்ப்பு, தள்ளல் ஆகிய மூன்று இயக்கத் தன்மைகள் உண்டு. நிலஉலகம் பரமாணு என்னும் விண்ணின் கூட்டு இயக்கத்தால் உருவாகியது. அந்தந்த பொருளும் அதன் எடை அளவு, ஆற்றல், இரசாயன குணம் இவற்றிற்கு ஏற்ப காந்தவெளியில் மிதந்து, உருண்டு, ஓடி 'துல்லிய சமதளசீர்மை' (Specific Gravity Principle) நிலையில் இயங்கும். எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் இந்தத் துல்லியச் சமதளச் சீர்மை நெறி பிறழாது. இதே தத்துவ அடிப்படையில்தான் வினைப் பதிவுகளும், அதன் விளைவுகளும் காலத்தையும் இடத்தையும் பொருளையும் அறிந்து நுகர்வு பெறச் செய்கின்றன. விளைவில்லாத செயல் இல்லை. செயல் இல்லாத விளைவு இல்லை. இறைநிலையில்லாது மனம் இல்லை. Cause, Effect and Result என்ற இம்மூன்றும் இயற்கையின் தொடர் நிகழ்ச்சியாகும்.[5]

இயற்கை என்னும் இறையாற்றல் எல்லா இடங்களிலும் எல்லாச் செயல்களிலும் பொருட்களிலும் அளவோடும் முறையோடும் இயங்கி, இந்தப் பிரபஞ்சத்தில் இருக்கும் உயிரற்ற உயிருள்ள அனைத்தையும் காப்பதில் அன்பும் கருணையும் கொண்டு விளங்குகிறது. யார் அவ்வாற்றலை அலட்சியம் செய்து அதன் இயற்கை நியதிகளுக்கு எதிர்ப்பாகச் செயலாற்றினாலும் அந்த அளவு அவருக்கு வீழ்ச்சியும், துன்பமும், சிக்கலும் ஏற்படும். அவரவர் செயல் பதிவுகளுக்குத் தக்கவாறு சமுதாயத்தில் பொருத்தமான இடத்தில் மேலாகவோ கீழாகவோ தக்கபடி நிறுத்திவைக்கும். அவரவர் செய்யும் செயல்களின் விளைவுகளே அவரைத் தக்க இடத்தில் வைக்கின்றதே தவிர, பிறர் ஏதேனும் செய்து ஒருவரை உயர்த்துவதோ தாழ்த்துவதோ இல்லை. இந்த

இறைநீதியை உணர்ந்து ஒழுகிவாழும் மனிதன் தனது வாழ்வில், அறிவில், சமுதாய மதிப்பில் என்றும் உயர்ந்து கொண்டே இருப்பான்.

உயிர்

நில உலகம் பஞ்சபூதங்களின் கூட்டாக அமைந்துள்ளது. நில உலகில் பஞ்சபூதக் கலவையில் முறையான அணு அடுக்குகளும், அவற்றில் காந்தத் துருவ அமைப்பும், அதனால் உணர்வுச் சிறப்புடைய மனம் இயங்கும் உடல் - உயிர் கூட்டுச் சிறப்பியக்கம் உயிரினம் என்பர் வேதாத்திரி. தொல்காப்பியர் இதனை,

> **நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும்**
> **கலந்த மயக்கம் உலகம்** (தொல்.மரபியல்.நூ.91)

எனக் கூறுவது நோக்கத்தக்கது. மணிவாசகர் 'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்' என்பர். அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் என்ற கூற்றும் இதனையே குறிக்கும். பிரபஞ்ச உயிர் (மகா ஆகாசம் -Universal life) என்றும், காற்று, வெப்பம், நீர், நிலம் ஆகிய நான்கு பூதங்களிலும் உள் நிறை ஆற்றலாக அமைந்து முறையே ஒலி, ஒளி, சுவை, மணம் என்பனவாக, விளைவுகளாக நடக்கும் இயக்க நிகழ்ச்சி பூதஆகாசம் (Physical life) என்றும், விண் உணர்ச்சி என்ற சிறப்பாற்றலாக மிளிர்தல் சிதாகாசம் - சித்த ஆகாசம் (ஜீவன்) என்றும் அழைக்கப்படும். உயிராகிய சீவன், அறிவின் நிலைகளாகிய புத்தி, சித்தம், பேரறிவு, தெய்வ நிலை என்ற நான்கு நிலைகளில் செயல்படும் சீவனின் மனநிலை குணம் எனப்படும். இது ஆறு வகைப்படும். அவை 1. காமம் (ஆசை), 2. குரோதம் (சினம்), 3. லோபம் (கடும்பற்று), 4. மோகம் (பால் கவர்ச்சி), 5. மதம் (ஒரு தலைப்பட்ட உயர்வு தாழ்வுக் கருத்து), 6. மாச்சரியம் (வஞ்சம்) என்பனவாகும். இவற்றைச் சீரமைப்பதன் மூலமும், அகநோக்குப் பயிற்சியின் மூலமும் இனிதுவாழ முடியும். இந்தப் பயிற்சிக்கு உயிர்ச்சக்தியான மனித காந்தசக்தியினை உணர வேண்டும். இந்தச் சக்தியைப் பக்தர்களும், மந்திரவாதிகளும் தேவதா சக்தி என்றும், மனோதத்துவ நிபுணர்கள் மனித காந்த சக்தி என்றும், யோகிகள் குண்டலினி சக்தி என்றும் குறிப்பிடுவர்.[6]

ஐவகை உணர்வுகளான ஊறு, சுவை, மணம், ஒளி, ஒலி இவைகளை உணரத்தக்க கருவிகளாக முறையே தோல், நாக்கு,

மூக்கு, கண், காது இவை அமையும் நிலைமைக்கேற்ப, சீவன்கள் ஓரறிவு முதல் ஐயறிவு வரையில் கணக்கிட்டுப் பேசப்படுகின்றன. ஐயறிவு வரையில் பரிணாமம் அடைந்த உயிரினங்களுக்கு உணவு உற்பத்தி செய்துண்டு வாழத் தெரியாது. அதனால் தாவர இனம் தவிர மற்ற உயிரினங்கள் வேறு உயிரினங்களைக் கொன்று, உண்டு வாழ்கின்றன. ஆறு அறிவுடைய மனித இனம் ஐயறிவுடைய விலங்கினத்தின் வித்துத் தொடராகவே பரிணாமம் அடைந்துள்ளான். மனிதனிடத்தில் ஓரறிவு முதல் ஐயறிவு வரையுள்ள எல்லா உயிரினங்களின் தேவையுணர்வு, செயல் முறைகள், வாழ்க்கை வழி அனைத்தும் மரபுவழிப் பதிவுகளாகத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. தொல்காப்பியர் மரபியலில் உயிரினப் பாகுபாட்டை,

> ஒன்றறிவதுவே உற்று அறிவதுவே
> இரண்டறிவதுவே அதனொடு நாவே
> மூவறிவதுவே அவற்றொடு மூக்கே
> நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
> ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
> ஆறறிவதுவே அவற்றொடு மனனே
> நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே (மரபியல்.நூ. 27)

எனக் குறிப்பிட்டுள்ளது ஒப்புநோக்கத்தக்கது. மாணிக்க வாசகரும் பல பிறவிகளாகப் பிறந்து மனிதராய்த் தேவராய் விளங்கும் நிலையைச் சிவபுராணத்தில்,

> புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
> பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
> கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
> வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
> செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
> எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் (சிவபுராணம்)

எனக் குறிப்பிடுகின்றார்.

பேரியக்க மண்டலத்தில் காணும் அனைத்துத் தோற்றங்களும் விண்துகள்கள் சேர்ந்த கூட்டுதான். இயற்கையின் இருப்பு ஆற்றல்களான பூரணம், விரைவு, அறிவு மூன்றையும் பரிணாமம், இயல்பூக்கம், கூர்தலறம் (செயல் விளைவு என்னும்

இறைநீதி) எனும் மூன்று சிறப்புக்களையும் ஒருங்கே எடுத்துக் காட்டும் ஒரு இயக்க நிலையமே சீவன் எனும் உயிருடல் எனலாம். உயிருடல் மூன்று அடுக்குகள் உடையது.

1. பரு உடல்
2. நுண்ணுடல் (வேதான் துகள்களின் ஒட்ட இயக்கம்)
3. யோகான் துகள்களின் விளைவான சீவகாந்த அலையியக்கம்[7]

உயிரினத் தோற்றங்களின் இறுதிப்பயனே மனித மனத்தின் மூலம் தனது முழுமையை அறியவேண்டும் என்பர் வேதாத்திரி மகரிஷி. 1. கருமையம் (Genetic Centre), 2. சீவகாந்தம் (Bio-Magnelism), 3. உயிராற்றல் (Astral Body), 4. சீவவித்துக் குழம்பு (Sexual vital fluid), 5. மூளை (Brain), 6. மனம் (Mind) என்ற ஆறு தத்துவங்களை அறிந்தால்தான ஒருவன் ஆன்மாவைப் பற்றிப் புரிந்து கொள்ள முடியும்.

கருமையம்

வேதான் விண்துகள், கோள்கள், உயிர்வகைகள் ஆகிய எல்லாவற்றிலும் மனிதனிடம் அமைந்துள்ள கருமையம் எல்லை யற்ற ஆற்றல் உடையது. பேரியக்க மண்டலத்தில் ஆதிநிலை, முதல் பரமாணு, பஞ்சபூதங்கள், பஞ்சதன் மாத்திரைகள், அண்டங்கள், ஓரறிவு முதல் ஆறறிவு வரையிலான உயிரினங்கள், மனிதன் வரையில் நடைபெற்ற எல்லா இயக்கங்களும் காந்த அலைகளேயாதலால் அவையனைத்தும் இறுகிய பதிவுகளாகத் தொடர்ந்து வந்து மனிதனிடம் இருப்பாற்றல்களாக உள்ளன. அரூபமான (கண்ணுக்குத் தெரியாத) எல்லையற்ற இறை யாற்றலின் அலை வடிவிலான இயக்கங்கள் அனைத்தும் உருவத் தோற்றங்களில், சிறப்பான மனிதனிடம் உள்ள 'கருமையத்தில்' அடங்கியுள்ளன. கருமையம், உடலின் காந்த ஆற்றலின் மையத் துணிவு, வேதான் துகள்களின் மைய இறுக்கம், வித்து ஆகிய மூன்றும் கூடிய கூட்டியக்க நிலையமாகும். இறைநிலையின் பேரியக்க மண்டலப் பரிணாம இரகசியங்கள் அனைத்தும் அடங்கிய இதனை வேதாத்திரி மகரிஷி 'சூப்பர் கம்பியூட்டர் சிப்' என்று ஒப்பிடுவர்.[8]

கருமையத் தூய்மை

மனிதன் உடலுக்கும் மனத்திற்கும், தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையே, மனிதனுக்கும் வான்கோள்களுக்கும் இடையே, மனிதனின் முன்பிறவிக்கும் பின்பிறவிக்கும் இடையே, மனிதனுக்கும் பிரம்மம் எனும் அருட்பேராற்றலுக்கும் இடையே பாலம் போல அமைந்து இறை, உயிர், மனம் எனும் மூன்று மறைபொருட்களுக்கும் இருப்பிடமான மகாமறைபொருள்தான் கருமையம். இந்தக் கருமையத்தைத் தூய்மையாகவும், வளமாகவும் வைத்துக் கொள்ள அறிந்தவனும் அதற்கு ஏற்ற தகுதி பெற்றவனும் மனிதனே என்பர் வேதாத்திரி.[9] வேதங்கள், மதங்கள், இலக்கியங்கள், சமுதாய நல நோக்கமுடையோர் அனைவரும் கூறும் அறிவுரைகள் அனைத்தும் மறைமுகமாக கருமையத் தூய்மையையே ஆகும். மனநிலைக்கு அடித்தளம் இறைநிலையே யாகும். இறைநிலை இருப்புநிலை, மெய்நிலை என்றும், மனநிலை இயக்க அலை, உயிர் என்றும் வழங்கப் படுகின்றன. இறை நிலையை அறியும் அறிவும், அதற்கேற்றபடி வாழும் நெறிமுறைகளும் கருமையத் தூய்மை எனப்படும். அதை அடைய உதவும் படிநிலைகள் பின்வருமாறு:

1. மனித உருவில உலகில் பிறந்துள்ளது முதல் படியாகும்.
2. விலங்கினப் பதிவுகளைப் போக்குதல் இரண்டாம் படியாகும்.
3. பல பிறவிகளில் விளைவறியாது செயலாற்றிக் கருமையத்தில் சேர்த்துக் கொண்டுள்ள பதிவுகளைத் தவமும் அறமும் இணைந்த ஆன்மீக வாழ்வின்மூலம் தூய்மை செய்து கொண்டு மனிதன் வாழும் அமைதிநிலை மூன்றாவது படியாகும்.
4. இறைநிலை உயர்ந்து, பிறவிக்கடல் கடக்க அன்பும் கருணையும் கொண்டு உயிர்களுக்குத் துன்பம் அளிக்கா மலும், துன்பப்படும் உயிர்களுக்கு இயன்றவரையில் உதவி செய்தும் வாழ்வது நான்காவது படியாகும்.[10]

இன்றைய உலகில் மனித குலத்தில் துன்பங்கள், நோய்கள், வாழ்க்கைச் சிக்கல்கள், பிணக்குகள், போர்கள், தீவிரவாதம், பிறருடைய உயிர், பொருள், சுதந்திரம் இவற்றை விலங்கினத் தன்மையோடு பறித்து உண்டு வாழ்தல் போன்ற எண்ணற்ற

விரும்பத்தகாத சூழ்நிலைகள் உருவாகி, வேகமாகப் பரவிவருகின்றன. இதற்குக் காரணம் கருமையம் களங்கப் பட்டிருத்தலேயாகும். ஆன்மிக அறிவுடன் செயல்பட்டுக் கருமையத்தைக் காத்தல் வேண்டும்.

பிறப்பு – புதிய பிறவி

பிறப்போ அல்லது மறுபிறப்போ இனப்பெருக்கச் செயலின்படி பெற்றோரின் வித்துக்களிலிருந்து மட்டும்தான் நடைபெறுகிறது. தாய் தந்தை என்ற பெற்றோர்களின் இரு ஆன்மாக்களின் இணைப்பினால் உருவாக்கப்பட்ட தனிமையான ஆன்மாதான் ஒவ்வொரு உயிரினமும் ஆகும். இந்த உயிரினத்தில் விளங்காப் புதிரான செயல்களையும், உடல் உறுப்புக்களையும் கொண்ட பருவுடல் அமைக்கப்படுகிறது. கருவில் இருக்கும் நிலையில் பருவுடல் இல்லாத ஆன்மாவோ அல்லது ஆன்மா இல்லாத பருவுடலோ இருக்கவோ, வளர்ந்து வரவோ முடியாது. பிறப்பின்போதும் இறப்பின்போதும் இயற்கையின் செயல் ஒழுங்குப்படி, அறிவு செயல்படும் முறையினால் ஆன்மா உணர்ச்சி நிலைகளைத் தாண்டி ஆழ்நிலைக்குச் சென்றுவிடுகிறது. இந்த நிலை ஒருவிதமான அறிதுயில் செயலற்றநிலை அல்லது உயிரற்றது போன்றநிலை ஆகும். எவரும் தன்னுடைய பிறப்பு அல்லது இறப்பை உணர்வோடு அனுபவித்து அதை நினைவுபடுத்திப் பார்க்கவோ அல்லது பிறருக்கு எடுத்துக்கூறவோ முடியாது.

உயிரினங்கள் எதுவாயினும், அது வாழும் காலத்தில் வித்துவின் மூலம் கருமையப் பதிவுகளும் பிரதி எடுக்கப்பட்டு, புதிய உயிர் பல தோன்றலாம். இறந்த பிறகு அந்த ஆன்மா கருப்பத்தில் வளரும் குழந்தைக்குள் புகுந்துகொள்ளும் என்பது பழங்காலக் கற்பனை. இறந்தவர்களே புதிய பிறவி எடுக்கிறார்கள் என்றால் உலகில் ஜனத்தொகை அதிகரிக்காது. உலகில் வாழும் மக்கள் அனைவரும் இறைவனின் பரிணாமத் தொடராக வந்த வேகம், விவேகம் என்பதின் பிரதிபலிப்புகளேயாகும். தெய்வீகத் திருஉருவங்களே ஆகும் என்பர்."

இறப்பு – மரணம்

வள்ளுவர் இறப்பை

உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு *(குறள். 339)*

என்று குறிப்பிடுவர். பிறப்புண்டேல் இறப்பும் உண்டு. இது இயற்கை நியதி. எந்த உயிரினமும் இதற்கு விதிவிலக்கல்ல. உடல் செல்களின் கூட்டியக்கம் - உயிரியக்கம் எனும் சூக்கும உடலியக்கம் - சீவகாந்த இயக்கமாகிய கருமைய இயக்கம் - இவை மூன்று வகையும் முறையாக ஒன்று மற்றதற்கு ஒத்துழைப்பாக இயங்கும் வரையில்தான் ஒரு உயிரினத்துக்கு வாழ்வு அமைகின்றது. இவற்றில் ஒரு பிரிவு இயக்கம் நின்று விட்டாலும் அதைத் தொடர்ந்து மற்ற இரண்டும் இயக்கம் அற்றுவிடும். இந்த நிலைதான் மரணமாகும்.[12] இந்த நிகழ்ச்சியில் வினைப்பதிவுத் தொடரான காந்த ஆற்றல் திவலை அலைத் திணிவு வெளியேறிவிடும். உடலை விட்டு ஆன்மா வெளியேறிய பின் மூளை செல்கள் செயலற்றுவிடும். பருஉடல் எவ்விதமான மனம் சார்ந்த செயலையும் செய்யமுடியாது. ஆன்மா இல்லாத வாழும் உடலும் உடலில்லாது உணர்வு நிலையான ஆன்மாவும் தனித்து இருக்க முடியாது. இதனை மகரிஷி சமூகச் சிக்கல் களுக்கான ஆய்வுத் தீர்வுகள் என்ற நூலில் (ப. 89)

உயிர் உடலைவிட்டுப் பல
உயிர்களிலும் விண்ணகத்தும் கலந்துபோகும்
உயிர் உடலைவிட்ட பின்னர்
உணர்ச்சியோ இன்ப துன்ப உணர்வோ ஏது?
உயிர் உடலை விட்ட பின்னர்
ஒவ்வொன்றாய் அணுஅணுவாய்ப் பிரிந்துபோகும்
உயிர் உடலைவிட்ட பின்னர்
உயிருக்குப் பின் பிறவித்தொடரே இல்லை

எனக் குறிப்பிடுவர். மரணத்தால் உயிர்த்துகள் போய், உடலும் போய்விடும். ஆனால் வினைப்பதிவுப் பெட்டகமான காந்தக் கருமையம் வெளியேறி, வான்காந்த அலையில் மிதந்து கொண்டிருக்கும். பிறகு இந்தப் பதிவுகளுக்கு ஒத்தபடி இருக்கும் கருமையத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு நபரோடு இறையாற்றலின் சூழ்ந்தழுத்த ஆற்றலால் இணைந்து கொள்ளும்.

சொர்க்கம் – நரகம்

இறந்த பிறகு சொர்க்கம் - நரகம் என்பது மனிதனுக்கு ஆசை காட்டியும் அச்சமூட்டியும் மக்களை நல்லதே செய்யத் தூண்டும் பழங்காலக் கற்பனைக் கதைகளாகும். உடலிருந்து வெளியேறிய ஆன்மாவில் பதிவுகள் உள்ளன. ஆனால் இன்ப,

துன்ப உணர்ச்சிகள் கிடையாது. இந்தத் தத்துவத்தைப் பற்றி மகரிஷி அவர்கள், Life Before Birth and After Death என்ற ஆங்கில நூலில் தெளிவாக விளக்கியுள்ளார்கள்.

வினைகள்

விளைவுகளின் தன்மைகளைக் கொண்டு வினைகளை 4 வகையாகப் பிரிக்கலாம் என்பர் வேதாத்திரி மகரிஷி. சைவ சித்தாந்தமும் இவ்வினைக் கோட்பாட்டை விரிவாகப் பேசுகின்றது.

1. முன்பிறவி வினை (சஞ்சிதகர்மம்)	-	பெற்றோர் செய்ததைத் தான் அனுபவித்தல்
2. இப்பிறவி வினை (பிரார்ப்த கர்மம்)	-	தன் செயலுக்குத் தானே அனுபவித்தல்
3. பின் பிறவிக்குரிய வினை (ஆகாமிய கர்மம்)	-	தன் செயல் தன்னைப் பாதிக்காமல் தனது வித்துவைப் பாதித்தல், தனக்குப் பின்வரும் பரம்பரையைப் பாதித்தல்
4. சமுதாய வினை	-	அரசாங்கத்தாலோ, சமுதாயக் கட்டுப்பாடுகளாலோ ஏற்படும் விளைவுகள்

ஆகாமிய கர்மத்தைப் புகுவினை என்றும், சஞ்சித பிரார்ப்த கர்மங்களைப் பழைய வினை அல்லது முன்வினை என்றும் தமிழ் நூல்கள் குறிப்பிடும்.[13] இவ்வினைகளைத் தீர்க்க ஞானிகள் உலகோர்க்கு இரு உயர்வழிகளைக் காட்டியுள்ளார்கள். அவை

1. அறம் 2. தவம்	-	ஒழுக்கம், கடமை, ஈகை

ஒழுக்கம் : எண்ணம், சொல், செயல் ஆகியவற்றால் தனக்கோ, பிறருக்கோ துன்பம் விளைவிக்காமல் அளவோடு முறையாக வாழும் செயல்நெறி ஒழுக்கம் எனப்படும்.

கடமை : கடன் + மை; ஒவ்வொருவரும் சமுதாயத்திற்கு அளிக்க வேண்டிய கடன். கடமை அறத்தில் தான், குடும்பம், சுற்றம், நாடு, உலகு என்னும் ஐவகைக்கும் ஒரு மனிதன் ஆற்றவேண்டிய கடமைகள் உண்டு.

ஈகை: பிற உயிர் படும் துன்பம் தீர்த்தல், இயலாதவர்களுக்கு இயன்றவர் உதவி செய்தல்

தவம் : அகநோக்குப் பயிற்சியில் ஈடுபட்டுத் தன்னைப் பற்றியும், இயற்கை விதியைப் பற்றியும், சமுதாய அமைப்பைப் பற்றியும் அறிந்து கொள்வது தவம் அல்லது யோகம் எனப்படும். இது இரண்டு கட்டங்களையுடையது.

1. மனத்தைப் புலன்களிலிருந்து விடுவித்து ஆன்மாவில் வயப்படுத்தல்
2. ஆன்மாவைப் பரத்தில் வயப்படுத்தல்

மதம்: இறையுணர்வையும், அறநெறியையும் இணைத்து மனித வாழ்வுக்கு வழிகாட்டும் ஆன்மீக விளக்கமே மதம் ஆகும். உலகம் அனைத்தும் உள்ளது ஒரே மதம்தான். எல்லா மதங்களும் நல்வழியில் வாழ வழிகாட்டவே தோன்றின. நோக்கம் ஒன்றே. வழிமுறைகள்தான் (சடங்குமுறை, சிலை வணக்கம்) வேறாக உள்ளன.

சிலை வணக்கத்தில் உருவங்களை யந்திரமாகவும், சொல் ஓசைகளை மந்திரமாகவும் வேண்டல்களைத் தந்திரமாகவும் இணைத்து வைத்துள்ளார்கள். உண்மையான இறைநிலையை அறியமுடியாத அறிவின் ஆரம்பநிலையில் உள்ளவர்களுக்கு இது பயனளிக்கும். இது பக்திநெறி. பக்தியின் முதல்படி ஞானவழி தான் முடிவான வாழ்க்கைநெறி.[14] இறைநிலையை உணர நமது முன்னோர்கள் போதனைகளையும், சாதனைகளையும், பக்திவழிமூலம் நூல்களாகத் தொகுத்துத் தந்துள்ளார்கள். அவை 1. இலக்கணம் - மொழி ஒழுக்கம், 2. இலக்கியம் - வாழ்க்கை ஒழுக்கம், 3. சரித்திரம் - பிரபஞ்ச நிகழ்ச்சிகளை உள்ளது உள்ள வாறே எடுத்துக் கூறுவது. இலக்கியங்களில் உயர்ந்த வாழ்க்கை விளக்கங்களை எடுத்துச் சொல்லும்போது தெய்வத்தின் பெயராலேயே விளக்கினர். கடவுளே அவதாரம் எடுத்து இவ்வாறு வாழ்ந்தார் என்று கூறும்போது மனிதனுக்கு நம்பிக்கை ஏற்படு கின்றது. இறைநிலை பற்றிய தோத்திரங்களிலும் அருச்சனை களிலும் வருகின்ற செய்திகள் அனைத்தும் இறைநிலையின் தன்மையை விளக்குவனவாகும். அறிவின் மேல்நிலையில் ஆராய்கின்ற போது இவையெல்லாம் உண்மையல்ல, கற்பனை என்று தெளிகிறோம். ஆனால் அவ்விலக்கியங்கள் கூறும் நெறிப்படி

வாழ்ந்தால் பயன்கிட்டுவதை அறியலாம். மனித மனத்தைச் செம்மையுறச் செய்ய எடுத்த முயற்சியுள் ஒரு பிரிவு தான் சிலை வணக்கம். மனிதன் ஏழு செல்வங்களையும் பெற வேண்டும் என்று அடிக்கடி நினைந்து வருவதற்குச் சங்கல்பங் களையும் (வேண்டுதல், பிரார்த்தனை, உறுதிமொழி) செயல்முறைகளையும் உருவாக்கினார்கள். இம்முயற்சியில் விளைந்தவைதான் உருவ வழிபாடுகளும் அதையொட்டிய கதைகளும், இலக்கியங்களும் ஆகும் என்கிறார்.[15]

இடம், காலம், சமயம் இவற்றிற்குத் தகுந்தவாறு குறிப்பிட்ட சடங்குமுறைகள் சமயத் திருவிழாக்கள் உருவாகி விட்டன. தற்காலத்தில் பழக்கத்தினாலும் உணர்ச்சி வயத்தி னாலும் எண்ணிறந்த சடங்குமுறைகள் பரவி மூட நம்பிக்கை யுள்ள கொள்கைகளுடன் இணைந்துவிட்டன. இவ்வேண்டாத மூடநம்பிக்கைகள், பழக்கங்கள் சமுதாயத்தையும் தனிமனிதனை யும் பாதிக்கின்றன. தன்மீது தானே திணித்துக் கொண்ட ஆழ்ந்த அறிதுயில் நிலையிலிருந்தும், மனவியல் தொடரிலிருந்தும் மாறவேண்டும். இதனால் பண்மும், ஆற்றலும் விரயமாவது தடுக்கப்படும். மனப்பிணக்கு, உடல் கோளாறு, நீங்கி, ஒத்தியைவும் (Harmony) நட்புச் சூழலும் ஏற்படும்.[16] இதன்மூலம் தேர்த்திருவிழாக்களையும், சிலை வணக்கத்தையும் தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்துகின்றார்.

ஆதலால் பல மதங்கள் பல கடவுள் பழக்கம் ஒழித்து உண்மை ஒன்றைத் தேர்ந்திடுதல் வேண்டும். பல மதங்களை ஒன்று சேர்த்து ஒரே மதமாக ஆக்கும் திட்டத்தை வேதாத்திரி மகரிஷி வலியுறுத்துகிறார். உலகம் அனைத்தும் ஒரே கடவுள், ஒரே அறநெறிமுறை என்று **உலகப் பொதுவான ஒரு சமயத்தை** உருவாக்க வேண்டும் என்கிறார். இதன்மூலம் சிந்திக்கும் ஆற்றலுள்ள மக்கள் அனைவரும் அறிவில் ஆன்மீக உணர்வு பெற்றுப் பிறவிப்பயனை அடையமுடியும். இந்த விளக்கம் இல்லாமையால் உலகில் மதங்களின் இடையே ஏற்பட்ட பகை, பிணக்கு, போர்கள் எவ்வளவுச் சீரழிவை, உயிரிழப்பை, பொருள் இழப்பை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதைச் சரித்திரங்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

மடங்கள்

மனித குலத்தில் இறையுணர்வையும், அறநெறியையும் போதனை மூலமாகவும், சாதனை மூலமாகவும் உணர்த்தி

மக்களை வழிநடத்தும் அறிஞர் ஒருவரைத் தலைமையாகக் கொண்டு நடத்தப்படும் தெய்வீக ஒழுக்க நிலையங்களே, மதங்களைப் போதிக்கும் மடங்கள் எனப்படுகின்றன.[17] மடாதிபதியாக விளங்கும் ஒவ்வொருவரும் இறைநிலை உணர்ந்தவராகவும், அறநெறி வாழ்க்கை உடையவராகவும் இருத்தல் வேண்டும். இன்று பக்தியோடு மதத்தைப் பாராட்டிக் கடவுளை மறந்து விடுகிறார்கள். இறைநிலைக்கும் மனிதனுக்கும் உள்ள தொடர்புகளை மறந்துவிட்டுச் சடங்குகளையும் மதங்களின் பெருமைகளையும் பேசி வருவதால் பயன் இல்லை.

எனவே, எல்லாச் சமயத் தலைவர்களும் ஒன்றுகூடி மக்கள் புரிந்துகொள்ளும் விதத்தில் எல்லாம் வல்ல இறைநிலையைப் பற்றிய ஒரு தெளிவான பொதுக் கருத்தை உருவாக்க வேண்டும். உலகப் பேரறிஞர்கள், சிந்தனையாளர்கள், படிப்படியாகப் பல திட்டங்களை வகுத்து, உலக மக்கள் அனைவருக்கும் உலகப் பொது அருள்நெறிச் சமயத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.[18] அதுவே மனிதகுலம் உய்வதற்கு ஏற்றதாக அமையும். இறைஉணர்வும், அறநெறியும் பரவி உலகெங்கும் மக்கள் குலம் தழைத்து ஓங்கட்டும்.

வேதாத்திரி மகரிஷி இறைநிலை, மதம் குறித்து,

இத்தகைய உயர்சமய நெறி வகுத்து உள்ளேன்
இது உலகப்பொதுவாம் அருள்நெறிசமயம் ஆகும்
ஒத்ததிது உலகெங்கும் வாழ்மக்கட்கெல்லாம்
ஒரே தெய்வம் சுத்தவெளி; உயர் அருட் பேராற்றல்
சுத்தசன் மார்க்கநெறி ஒத்துதவி வாழும்
தூய காந்த தத்துவமே இதற்கு வேதமாகும்
எத்தகைய உயிர்கட்கும் இன்பநிலை காத்து
இறைநிலையோடு இணைந்து அறம் ஆற்றி
வாழும்பேறு

எனவும், இத்தகைய புனிதமான வாழ்க்கைநெறி சீர்திருந்த ஐந்தொழுக்கப் பண்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் வழிகாட்டுகின்றார். இறை, உயர், உலகு, வினை, குறித்து இவர் கூறும் கருத்துக்கள் புதுமையானவை. சிந்திக்க வைப்பதோடு ஒரு புதிய பார்வையைத் தருகின்றன. சுருங்கக் கூறினால் வேதாத்திரி மகரிஷி உலக நோக்கோடு, உலக மக்களுக்கே வழிகாட்டியாக விளங்குகிறார். இறைவனை நேசிப்பதைப் போல்

மனிதனையும் நேசித்துவாழ அறிவுறுத்துகின்றார். பொது நோக்குப் பார்வையோடு இறையியல் கருத்துக்களை வெளிப் படுத்தி உள்ளார். அத்வைதம், விசிட்டாதுவைதம், துவைதம் போல இவருடைய சித்தாந்தம் வேதாத்திரியமாக உலகெங்கும் பரவி ஒளி காட்டும்.

அடிக்குறிப்புகள்

1. ஞானமும் வாழ்வும், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், 1964, ப. 13.
2. மேற்படி, ப. 43.
3. பிரம்மஞானம், வேதாத்திரி மகரிஷி, 1996, ப. 1.
4. செயல்விளைவுத் தத்துவம், வேதாத்திரி மகரிஷி, 1997, ப. 58.
5. பிரம்மஞானம், வேதாத்திரி மகரிஷி, பக். 71-72.
6. ஞானமும் வாழ்வும், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், பக். 19-27.
7. பிரம்மஞானம், வேதாத்திரி மகரிஷி, பக். 41-42.
8. மேற்படி, பக். 48-49.
9. மேற்படி, ப. 55.
10. செயல்விளைவுத் தத்துவம், வேதாத்திரி மகரிஷி, பக். 5-6.
11. பிரம்மஞானம், வேதாத்திரி மகரிஷி, ப. 51.
12. மு.நூ., ப. 53.
13. ஞானமும் வாழ்வும், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், பக். 29-32.
14. பிரம்மஞானம், வேதாத்திரி மகரிஷி, ப. 102.
15. மதமும் மனிதனும், வேதாத்திரி மகரிஷி, 2002, பக். 45-46.
16. சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள், வேதாத்திரி மகரிஷி, பக். 38-39.
17. உலகச் சமுதாய வாழ்க்கை நெறி, வேதாத்திரி மகரிஷி, ப. 77.
18. அறிஞர்களின் கடமை, வேதாத்திரி மகரிஷி, பக். 11-12.

அறிவியல் நோக்கில் மகரிஷி கண்ட இறைவழிபாடும் சடங்குகளும்

முனைவர் கு. கதிரேசன்

மனிதன் ஆறாவது அறிவான பகுத்தறிவைப் பெற்றவன். ஆயினும் பெரும்பாலோரின் சமயம், கோட்பாடு, வழிபாடு, பண்பாட்டுச் சடங்குகள் தொடர்பான பல நம்பிக்கைகளும் செயல்பாடுகளும் பகுத்தறிவிற்கு மாறானவையாகவே அமைந்திருக்கின்றன. வழிபாட்டையும் சடங்குகளையும் காரண காரிய அடிப்படையில் சிந்தித்துச் செயல்படும் நிலை இல்லை. அதனால் மனித இன வளர்ச்சியில் சில தடைக்கற்கள் ஏற்பட்டுள்ளன. மனித வாழ்க்கையில் ஏற்படும் இத்தடைக் கற்களை நீக்கி, அறிவியல் பூர்வமான ஆற்றலைப் பெருக்கும் அழகிய வாழ்விற்கு வழிகாட்டுவதற்காகப் பல மகான்கள் தோன்றினர்; போதித்தனர். மனித இன மேம்பாட்டிற்காகத் தவம் செய்து இறையருள் பெற்று பல தத்துவங்களை எடுத்துக் கூறி அருள் செய்தனர். அவ்வாறு இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகான்கள் பலர் உண்டு. அவர்களில் தலைசிறந்த அறிவு ஞானியாகவும் ஆன்மீக மேதையாகவும் திகழ்ந்து வாழ்வாங்கு வாழ்பவர்தான் யோகி வேதாத்திரி மகரிஷி. அவர் இந்நூற்றாண்டில் வாழும் இணையற்ற அறிவியல் ஆன்மிகச் சித்தர் என்றே கூறலாம். மனித இனத்தை - அவன் பின்பற்றும் வழிபாடு மற்றும் சடங்குகளைப் பற்றி மிகத் தீர்க்கமாகச் சிந்தித்து நவீன அறிவியல் உலகிற்கேற்ற கருத்துகளை எடுத்துக் கூறியிருக்கிறார். அவற்றை ஆராய்ந்து அறிவதன் வாயிலாக மகரிஷி கண்ட இறை வழிபாட்டுக் கருத்துகளையும் சடங்கு களையும் காரண காரிய விளக்கத்தையும் இனம் காணலாம். அந்த வகையில் மனிதனின் இறைக் கோட்பாடு இயற்கையே

தமிழ்த்துறை, ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர் – 628 216.

இறைவனின் அடிப்படை, மதமும் மகரிஷியும், மகரிஷி அறிவுறுத்தும் தெய்வ வழிபாடு, மகரிஷி கண்ட ஆலய வழிபாடு, உருவ வழிபாடு பற்றிய மகரிஷியின் கோட்பாடு, மகரிஷி கண்ட வழிபாட்டுத் தத்துவம், சடங்குகளும் அறிவியல் கோட்பாடுகளும் என்னும் நிலைகளில் ஆராய்ந்து அவரது அறிவியல் - ஆன்மீகக் கோட்பாடுகளை வெளிக்கொணரும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

மகரிஷியின் இறைக்கோட்பாடு

அறிவியலும் ஆன்மீகமும் போட்டியிட்டு வளர்ந்து வரும் இன்றைய சூழலில் இறைவன் பற்றிய கருத்தாக்கம் பெரும்பாலும் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டு வருவதை உணர முடிகிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் அறிவார்ந்த நிலையிலோ அறிவுக்கு நேர்மாறாகவோ இறைவனைப் பற்றிய கருத்தாக்கத்தைப் பெற்றுள்ளனர். இயற்கைச் சின்னங்களாகவோ, எண்ணங்களாலான யோக தியான நெறியாகவோ, படிமமாகவோ, படிமம் அல்லாத வெற்றிடமாகவோ மூதாதையர் வடிவமாகவோ கொண்டு பல்வேறு நம்பிக்கைகளை ஏற்றிச் சடங்குகளை நிகழ்த்தி வழிபட்டு வருகின்றனர். பல்வேறு புராணக் கூறுகளை உருவாக்கிப் படிமக் காட்சியுடன் பொருத்திப் பார்த்துக் கற்பனையாக ஒரு நம்பிக்கை அடிப்படை வழிபாட்டு முறையைப் பின்பற்றி வருகின்றனர். இந்தப் பின்னணியில்தான் மனிதன் ஆலயங்கள் எழுப்பி ஆலய வழிபாடு நிகழ்த்தினான். பல்வேறு படிமங்களை உருவாக்கி உருவ வழிபாட்டிற்கு வழி வகுத்தான். மூட நம்பிக்கைகளுடன் சடங்கு சம்பிரதாயங் களையும் வழக்காறுகளையும் கடைப்பிடித்தான். அறியாமையில் அகப்பட்டு அல்லல்பட்டான். இந்தச் சூழ்நிலையில் பாதை தவறிப்போகும் மனித இனத்தை மீட்டெடுக்க மகான்கள் பலர் காலம்தோறும் தோன்றிப் பணியாற்றி வந்திருக்கின்றனர். அவர்கள் ஆன்மீகம் தழைக்கவும் மனித இனம் மேம்படவும் தம் வாழ்வை அர்ப்பணித்துத் தியாக உணர்வு கொண்டனர். அன்பு நெறியை ஆண்டவனாகக் கையாண்டு தவ வாழ்க்கை மேற்கொண்டனர்.

இந்த வரிசையில் இன்றைய நவீன காலத்தில் ஆன்மீகத்தை அறிவியல் அடிப்படையில் சிந்திப்பவர் வேதாத்திரி மகரிஷி ஆவார். இவர் மற்றவர்களைக் காட்டிலும் வேறுபட்டு

இறைக்கோட்பாடுகளை வகுத்திருப்பதை அறிய முடிகிறது. அதனை அறிவது இன்றைய அறிவுத் தேடல் உலகிற்குப் பயனளிக்கும். அதோடு ஆன்மீகத்தை அறிவார்ந்த நிலையில் உணர்ந்து மூட நம்பிக்கையற்ற உண்மையான அன்பு நெறிப் பட்ட வழிபாட்டையும் சடங்கையும் பின்பற்றுவது அமைதியாக வாழ்வதற்கு உதவும். அதற்கு மகரிஷியின் இறைக்கோட்பாடு வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

இறைவனை நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனப் பஞ்சபூதங்களாகக் கொண்டு வழிபட்டனர். இது இந்து சமயத்தின் அடிப்படையான இயற்கைச் சமயப் பண்பாட்டை எடுத்தியம்புவதாக அமைகிறது. இறைவன் இன்ன உருவம், இன்ன வடிவம், இன்ன ஆற்றல், இன்ன அருட்கருணை என வரையறுத்துக் கூற முடியாதவாறு எல்லையற்ற அருட் பேராற்றலாக அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது.

இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்த
பரிபூரண ஆனந்தம்

என்பது தாயுமானவரின் கருத்து, அதோடு

எங்கெங்கே பார்த்தாலு மெவ்வுயிர்க்கு மவ்வுயிரா
யங்கங்கிருப்பது நீயன்றோ பராபரமே

என்று பாடுமிடத்து அவர் இறைவனை எல்லாவற்றிற்கும் புலனாகா உயிராகவே உணர்வது புரிகிறது. இறைவன்,

விறகினில் தீயினன் பாலிற் படு நெய் போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்

என்பது திருநாவுக்கரசர் குறிப்பிடும் இலக்கணம்.

..... ஐம்புலன்களார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே

என்பது மாணிக்கவாசகர் காட்டும் இறைவனின் அடையாளம்.

மந்திர நான் மறை ஆகி வானவர்
சிந்தையுள் நின்றவர் தம்மை ஆள்வன

என்கிறார் திருஞானசம்பந்தர்

உடம்பினுக்குள்ளே யுறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான்

என்கிறார் திருமூலர்.

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

என்பது இராமலிங்க சுவாமிகள் கண்ட இறைவனின் கோட்பாடு.

'ஆதிஅந்தமில்லா அருட்பெருஞ்சோதி' இறைவன் என்பது மாணிக்கவாசகரும் வள்ளலாரும் சேர்ந்து பெற்ற முடிவு. இறைவன் அருவமாகவும், உருவமாகவும் அருவ உருவமாகவும் விளங்குகின்றான். அதனால்தான் இறைவன், தூணிலும் இருப்பான், துரும்பிலும் இருப்பான் என்னும் கருத்துத் தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருகிறது. கண்ணால் காண முடியாத ஆனால் கருத்தால் உணரக்கூடிய மிகப்பெரிய ஆற்றல் வாய்ந்த பரம்பொருளே இறைவன் என்று கொள்ளலாம். அதனால்தான் மகரிஷி அருட்பேராற்றல் அலை அலையாய் வந்து உடலுக்குள் பரவுவதாகக் குறிப்பிடுகிறார்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

என்பது அருணகிரிநாதர் இறைவன் இருக்கும் நிலைக்கு வகுத்திருக்கும் இலக்கணம் ஆகும். இதில் இறைவன் பற்றிய அவரது கோட்பாட்டினைத் தெளிவாகக் காணமுடிகிறது.

தீயினுள் தெறல் நீ பூவினுள் நாற்றம் நீ
கல்லினுள் மணியும் நீ சொல்லினுள் வாய்மை நீ
அறத்தினுள் அன்பு நீ மறத்தினுள் மைந்து நீ
வேதத்து மறை நீ திங்களுள் அளியும் நீ
அனைத்தும் நீ அனைத்திலும் பொருளும் நீ ஆதலின்
உறையும் உறைவதும் இல்லையே உண்மையும்
மறவியில் சிறப்பின் மாயமா ரனையை

என்பது பரிபாடல் (பாடல் 3) தரும் இறைவனுக்குரிய அடையாளம்.

அண்டம் நீ அகண்டம் நீ ஆதிமூலமான நீ
கண்டம் நீ கருத்தும் நீ (சிவவாக்கியர் பாடல்)

என்பது சித்தர்கள் கண்ட இறைவனின் இலக்கண நெறி. இவ்வாறு பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு புலவர்களும் அறிஞர்களும் கூறியிருக்கும் கருத்துகள் வழி ஆராயும் பொழுது, "இறைவன் உருவமற்றவன், எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பவன், இயற்கை வடிவமாக விளங்குபவன், இயற்கையின் ஒவ்வொரு நிகழ்வும் இறைவனின் உருவமே என்பன போன்ற உண்மைகளே வெளிப்படுகின்றன. இச்செய்திகள் மனிதனுக்கு ஒருவகையில் ஆய்வுச் சிந்தனைக்கும் அறிவார்ந்த வாழ்க்கைக்கும் வழி வகுத்திருக்கின்றன. ஆனால் பின் வந்த பல்வேறு நம்பிக்கைகளும் சடங்குகளும் பிற உருவ வழிபாட்டுக் கூறுகளும் பூசனை நிகழ்வுகளுமே இறை வழிபாடு தொடர்பான சிந்தனைகளைத் திசை திருப்பிவிட்டிருக்கின்றன. இத்தகைய கருத்தாக்கங்களை இன்றைய சூழலில் சிந்திக்கவும் செயல்படவும் வேண்டிய காலத்தின் கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அதற்கு மகரிஷியின் அறிவார்ந்த இறைநெறிக் கோட்பாடுகளும் அறிவியல் அடிப்படையிலான வழிபாட்டுச் சடங்குகளும் வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

இறைவெளி தன்னிறுக்கத்தால் எழுந்த பொருள் விண் என்று
இருதுறைகளின் அறிஞர் விஞ்ஞானி தத்துவத்தார்
உணர்ந்தார் சொன்னார்
இறை நிலைக்கும் விண் நிலைக்கும் இடையிலுள்ள
தத்துவம்தான்
ஈதர் (Ether) என்னும் பரமாணு நுண் துகள்கள் இரண்டு
மேலாம்
துறைகளிலும் ஆழ்ந்தவர்கள் ஆராய்வில் நழுவ விட்டார்
இத்துகள்கள்
தொடர்ந்தழுத்தி உருவான தொகுப்பே தான் விண்ணாகும்
சிறைப்பட்ட இத்துகள்கள் விண்ணிலிருந்தோடுவதே
காந்தமென்று அனைத் தலைகள்
சிறப்புடைய தன் மாத்திரைகளாய் முடிவில் பரமாகும்
ஆதியந்தம்

என இறைவனைப் பற்றி மகரிஷி கூறும் இலக்கணம் முற்கூறிய புலவர்களின் கருத்துகளுடன் ஒத்துப் போவதையும் அதேநேரம்

அறிவார்ந்த நிலையில் அவர்களிலிருந்து வேறுபட்டு நிற்பதையும் காணமுடிகிறது. அறிவியல் இயக்கம் - மின் காந்த இயக்க வியலுடன் இறை ஆற்றலைத் தொடர்புபடுத்திக் காட்டி அறிவார்ந்த இறைவனை அடையாளம் காட்டுகிறார் மகரிஷி.

உலகில் உள்ள பொருட்களை நுண்பொருள், பருப் பொருள், காரணப் பொருள் என மூன்றாகப் பிரித்துப் பார்க்கலாம். மகரிஷி இம்மூன்று வகைப் பொருட்களையும் விளக்கிக் கூறி இறைவன் அருவப்பொருளாக அதாவது நுண் பொருளாக விளங்குகின்றார் என்கிறார். இறை நிலை என்பது என்ன எனக் கேட்கும் மகரிஷி அதற்கு விடை கூறுமிடத்து, 'தத்துவ ஞானிகளாலும் விஞ்ஞான அறிஞர்களாலும் உணரப் பட்ட தெளிவின்படி இப்பிரபஞ்சத்திற்குத் தோற்றுவாயாக, மூல நிலையாக, இருந்த ஒன்றே இறைநிலை என்பது தேர்ந்தெடுக்கப் பட்ட உண்மையாகும். விஞ்ஞானத்தின் இறை நிலையை Gravity என்ற வார்த்தையினாலும் Primordial state of universe என்னும் தொடராலும் விளக்கலாம் என்கிறார். இக்கருத்தின் வாயிலாக அவரது அறிவார்ந்த இறைத் தத்துவத்தை உணர முடிகிறது.

தத்துவஞானிகளோ மேற்குறிப்பிட்ட இறை நிலையைத் தெய்வம், கடவுள், எல்லாம் வல்ல முதற்பொருள், பிரம்மம் என்ற வார்த்தைகளால் விளக்கியுள்ளார்கள். ஆனால், இறைநிலை என்பது, தெய்வீகப் பாய்மப்பொருள் (Highly transparent Mighty Divine Fluid) என்றும், அதன் தன்மைகள் வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்னும் நான்கு வகைகளை உடைய ஒரு தத்துவம் என்றும் விளக்குகிறார் மகரிஷி. இக்கருத்துகள், மகரிஷியின் இறை ஆற்றல் பற்றிய கொள்கை முடிவுகளை விளக்குவதாகவும் அறிவார்ந்த நிலையில் இறைவனை அடையாளம் காணும் முயற்சியாகவும் முன்னோர் கூறிய தத்துவங்களை நுணுகி ஆராய்ந்து அதில் தம் அறிவார்ந்த கருத்துகளைச் செலுத்தி இறைவனை அடையாளம் காணும் முயற்சியாகவும் அமைந்திருப்பதைக் காண முடிகிறது.

உலகில் மிக முக்கியமான தத்துவமாகிய இறைநிலையும் அதன் ஆற்றலின் ஒழுங்கமைப்பான அறிவும் மனிதனுக்கு இன்றியமையாதன என்பதை வலியுறுத்துகிறார் மகரிஷி. இத்தத்துவ ஞானம் இல்லையென்றால் வாழ்க்கையில் வேறு

எத்தகைய அறநெறி இருந்தும் பயனில்லை என்பது அவர் தம் கருத்து. இத்தகைய இறைநிலையை ஆராய்ந்து சரியாக அறிந்து கூறியவர் இதுவரை யாரும் இல்லை என்று வருந்தும் மகரிஷி, அப்பணியைத் தானே மேற்கொண்டு வெற்றி கண்டிருப்பது மனித இனத்தின் மீதும் சமூகத்தின் மீதும் அவருக்கு இருக்கும் அக்கறையை, அன்பு நெறியைப் பறைசாற்றுகின்றன. "எண்ணிறந்த பேரறிஞர்கள் பலர் எழுதியுள்ள அதே இறைத் தத்துவத்தை இங்கு நானும் உங்கள் அனைவரின் நலம் நாடி வளம் நாடி எழுதுகிறேன்" என அவர் குறிப்பிடுவதன் வாயிலாக மேற்குறித்த கருத்து உறுதியாகிறது. இந்தப் பின்னணியில் இறை நிலையை விளக்கும் அவர், "பல பேதங்களாக உள்ள தோற்றங்களைப் பரிணாமமாகக் கொண்டது" எனக் குறிப்பிடு கிறார். "மனிதன் தனது பிறப்பு, இயக்கம், வளர்ச்சி பற்றி அறிந்து கொள்ள வேண்டும்; அது மிகவும் இன்றியமையாதது" என்பது அவர்தம் அறிவுரை.

"இறைநிலையே தன்னிறுக்க ஆற்றலால் தன்மாற்றம் பெற்று (Transformation) இறைத்துகளாகி, அவற்றில் பல கூடி, 'விண்' என்ற தோற்ற மூலக்கூறாகி, அவையிணைந்து ஓரறிவான தாவர இனம் முதற்கொண்டு ஆறறிவு உடைய மனிதன் என்ற உருவம் வரையில் பரிணாமம் அடைந்திருப்பதை உணர முடிகிறது" எனக் குறிப்பிடுமிடத்து மகரிஷியின் அறிவியல் நோக்கு வெளிப்படுவதை உணரமுடிகிறது.

இறைவன் அரூபமான தெய்வமாக விளங்குகிறான். அவன், வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்ற நான்கு வளங் களையும் உட்பொருளாகத் தன்மைகளாகக் கொண்டுள்ளான். அந்த இறைநிலையைத்தான் 'பெருவெளி' என்கிறார். அப்பெருவெளி தான் அரூபமான தெய்வநிலையாகும்.

எல்லையற்ற இறைநிலையானது தன்னிறுக்கத்தால் தானே நொறுங்கி இறைத்துகள்களாகிப் பரமாணுவாகி (Formative dust) அவற்றின் கூட்டால் விண் என்ற எல்லாத் தோற்றங்களுக்கும் மூலக்கூறாக உள்ள அணுவாகிறது. அவற்றின் இணைப்புத்தான் பிரபஞ்சத் தோற்றத்தில் காணும் எல்லாப் பொருட்களாகும் என்பது மகரிஷியின் இறைநிலை பற்றிய அறிவியல் கொள்கை முடிவு.

உலகம், அதில் தோன்றிய அத்தனைப் பொருட்களிலும் வடிவம் (Pattern), துல்லியம் (Precision), இயக்க ஒழுங்கு (Regularity) என்னும் மூன்று கருத்துகளும் உள்ளடக்கமாக, சீரான இயக்கமாக அமைந்துள்ளது. இத்தகைய மூன்று பண்புகளுமே இறைநிலையின் அடிப்படை. மேலும் அது உருவமற்ற ஓர் ஆற்றலாகவே இருப்பதனால் அது இல்லாத பொருளோ இடமோ இருக்க முடியாது. இவ்வாறு இயங்குகின்ற ஒரு பேராற்றலை, தெய்வநிலையை மனிதன் உணர்ந்து கொள்ள வேண்டியது இன்றியமையாத தேவை என்று மகரிஷி மனித இனத்திற்கு அழைப்பு விடுத்து இறைநிலையை அறிமுகப்படுத்து கிறார். இதனை ஒவ்வொருவரும் உணர்ந்து வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இயற்கை விதியை உணராமல் அதற்கு முரணாக மனிதனின் செயல் அமையும்போது அங்கு ஏற்படும் பிணக்குகள்தான் துன்பங் களுக்கும் சிக்கல்களுக்கும் காரணம் என்கிறார். இக்கருத்துகள் மகரிஷியின் இறைநிலைக் கோட்பாடு பற்றிய தெளிவினைப் படம்பிடித்துக் காட்டுகின்றன.

இயற்கையே இறைவனின் அடிப்படை

மனிதன் முதன்முதலில் இயற்கையையே இறைவனாக எண்ணி வழிபட்டான். இயற்கையோடு இணைந்து வாழ்ந்த மனிதன் இயற்கையிலிருந்தே கடவுளையும் சமயத்தையும் வழி பாட்டையும் சடங்குகளையும் உருவாக்குகின்றான். மனிதனின் வாழ்க்கையே இயற்கையுடன் கலந்துள்ளது. இயற்கை என்பது ஒரு கலை. அந்தக் கலையே மனிதவாழ்வின் அடிப்படை. இதையே மகரிஷி அறிவார்ந்த நிலையில் விளக்கி மனிதனின் சிந்தனையைத் தூண்டுகிறார். "பிற உயிர்கள் அத்தனையும் இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக அப்படியே உள்ளது உள்ளவாறு துய்க்கின்றன. ஆனால் மனிதன் மாத்திரம் ஆறாவது அறிவின் சிறப்பாலும் சிந்தனையாலும் கைத்திறனாலும் இயற்கையில் உள்ளவற்றை அழகுபடுத்தியும் உருமாற்றியும்தான் அனுபவிக்கிறான்" என்னும் மகரிஷியின் ஆய்வுச்சிந்தனை மனிதனுக்கும் இயற்கைக்கும் உள்ள தொடர்பினை இனம் காட்டுவதுடன் மனிதனின் ஆறாவது அறிவுச் செயற் பாட்டினையும் அடையாளம் காட்டுகிறது. இயற்கை வளத்தை வாழ்வின் வளமாக மாற்றும் அறிவுத்தெளிவு, திறன், நுட்பம் இவைதான் கலை என்பதை இதன் வாயிலாக அறியலாம்.

நாம் காணுகின்ற இப்பேரியக்க மண்டலமாகிய இப் பிரபஞ்சம் பலகோடி அண்டங்களை உடையது. அவை எல்லாம் அணுக்களின் கூட்டு இயக்கமாகவே உருவாகின்றன. அணு என்ற வார்த்தைக்கு இரண்டு விதமான கருத்துகள் உண்டு. விஞ்ஞானிகள் பலதுகள்கள் சேர்ந்த ஒரு கூட்டு இயக்கத்தை, 'அணு' என்று சொல்கிறார்கள். நியூட்ரான், புரோட்டான், எலக்ட்ரான் என்று மூன்று விதமான வேறுபாடுகளைக் கொண்டு ஒன்றுக்கொன்று இயங்கிக்கொண்டு இருக்கக்கூடிய ஒரு குடும்பத்தை 'அணு' என்கிறார்கள். எந்த வகையிலேயும் பிரிக்க முடியாத கடைசியான ஒரு நுண்துகள் எதுவோ அதைத்தான் 'அணு' என்று மெய்ஞ்ஞானிகள் சொல்கிறார்கள். அந்த அணு என்ற வார்த்தைக்கு நுண்ணியக்க 'மூலக்கூறு' என்பதுதான் சரியான பொருள். அதைத் தெளிவாக உணர்ந்து கொள்வதற்குப் 'பரமாணு' என்று பெயர் வைத்துள்ளார்கள். 'பரம்' என்ற சொல் அதற்குமேல் ஒன்றுமில்லை. 'பரமாணு' என்றால் நுண்ணியக்கம், அதைவிட நுண்ணியது இல்லை" என்கிறார் மகரிஷி. இக்கருத்து அணுவிற்கும் ஆண்டவனுக்கும் உள்ள தொடர்பினை அடையாளப் படுத்துகிறது. அதோடு பரமாணுவே பரம் பொருளாகிய இறைவன் எனக்கொண்டு இயற்கையையும் இறைவனையும் தொடர்புபடுத்திப் பார்க்கிறார்.

தமிழர்கள் இன்றும் இயற்கை வடிவங்களான சூரியன், சந்திரன், மரங்கள், மலைகள், மழை, நதிகள், கடல் முதலியவற்றை இறைவனாகவோ பேரதிசயமாகவோ கொண்டு வழிபட்டு வருவதைக் காணமுடிகிறது. வானம் இறைவன் இருக்கும் இடமாகக் கருதப்படுகிறது. இயற்கை வடிவங்களைக் கடவுள் படிமங்களாக வடிவமைத்து வழிபடும் பாங்கினை இன்றைய ஆலய வழிபாடுகளிலும் பண்டிகை விழாக்களிலும் காணலாம்.

பரமாணு என்னும் நுண்ணியக்கத்திலிருந்தே காற்று, நெருப்பு, நீர், நிலம் ஆகிய நான்கு இயற்கைக் காரணிகளும் உருவாயின. பரமாணுவை வானத்தோடும் பிறவற்றைப் பூமியுடனும் தொடர்புடையவையாகக் கொள்ளலாம். இப்பிரபஞ்சத்தில் நாம் பார்ப்பதெல்லாம் இந்த நுண்ணியக்கத் துகள்களின் கூட்டுதான் (Association of Energy Particles); அதனுடைய திணிவு நிலைதான். பிரபஞ்சப் பொருட்களின் தோற்றங்கள் அனைத்தும் அந்தச் சக்திக்கு முன்னதாக

ஆதாரமாக உள்ளவைதான் சுத்தவெளி வெட்டவெளி ஆகும் என்று அணுவையும் அகிலத்தையும் தொடர்புபடுத்தி அவர் கண்டு கூறிய கருத்துகள் இயற்கைக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பைக் காட்டுகின்றன.

"சுத்தவெளி என்று கூறப்படுவதுதான் பின்னப்பட்ட நிலையில் அணுவாகவும் விளங்குகிறது. பஞ்சபூதங்களையும் பற்றி வேதநூல்கள் தெளிவாக உணர்த்துகின்றன. இந்த வேதங்களுக்கு அடிப்படை பரம்பொருள், மெய்ப்பொருள் என்று கண்ட பொழுதுதான் 'வேதாந்தம்' (வேதம் - அந்தம்) என்ற பெயரைக் கொடுத்து நிறைவு உண்டாக்கியது" என்பது மகரிஷியின் கருத்தாகும்.

சுத்தவெளியே முழுமுதற்பொருளாக அமைந்துள்ளது. அதிலிருந்து உள்ளடக்கிய வேகமே நுண்ணியக்கமாகிய பரமாணு. பஞ்சபூதங்களின் இணைப்பினால் ஒரு சுழல் இயக்கம் ஏற்பட்டு அங்கே ஒரு காந்த அலை, தேக்கி வெளியிடக்கூடிய அளவுக்கு ஒரு திரவம் (Magnetive fluid) அதாவது எக்டோபிளாசம் (Ectoplasm). என்றும் DNA என்றும் சொல்லப்படுகிற அந்தத் திரவம்தான் தன்சிதைவையும் குழப்பத்தையும் தன்மையையும் உணர்ந்துகொள்கிறது. இன்பம், துன்பம், அமைநிலை என மூன்று வித உணர்வுகள் தோன்றுகின்றன. இம்மூன்றும் தோன்றும் இடத்தில்தான் அறிவு (Consciousness) இயக்கத்திற்கு வருகிறது. இந்நிலையில் சுத்தவெளி, சக்தி, திணிவு பெற்ற நிலையில் காணப்படும் பிரபஞ்சம், உணர்வு ஆகிய நான்கு காரணிகளையும் உணர்ந்து கொள்ள முடிகிறது. இந்நான்கு தவிர வேறு எந்தக்காரணியும் அறிவு இயக்கத்தோடு தொடர்புடையதாக இல்லை.

> ***ஆதியாக உள்ள சுத்தவெளி, அதிலிருந்து எழுந்த பரமாணுவின் சேர்க்கையால் ஏற்பட்ட பஞ்சபூதங்களால் ஏற்பட்ட பிரபஞ்சம் அதிலிருந்து உயிர்களாக எழுந்தபோது அதை உணரும் நிலையாக உள்ள உணர்ச்சி இந்த நான்கும் சேர்ந்ததுதான் இயற்கை***

என்று முடிவு கூறுகிறார் மகரிஷி.

பேரண்டத்தை இயக்குகின்ற பேராற்றல் எது? அதைப்பற்றிச் சிந்தித்து ஆராய்ச்சியில் ஈடுபட்ட அறிவு எது?

அறிவுக்கும் பேராற்றலுக்கம் உள்ள சம்பந்தம் என்ன? இக்கேள்வி களுக்குக் கிடைத்த விடைதான் தத்துவ ஞானம் என்கிறார்.

> சூரியன் இல்லை என்றால் நீர் ஆவியாக மேலே சென்று மழை பொழியாது. அதுபோல வெளிச்சம் இல்லையெனில் உயிர்கள் வாழ முடியாது என்ற நிலையில் சூரியனைக் கடவுளாக எடுத்துக் கொண்டான். மூச்சுக்காற்றின் முக்கியத்துவத்தினால், காற்று இல்லையானால் அசைவுக்குக்கூட இட மில்லை என்றுணர்ந்து காற்றையும் கடவுளாக்கிக் கொண்டான். காற்று எப்படி உருவானது என ஆராயும்பொழுது பரமாணுக்களை இனம் கண்டான். மூலக்கூறுகளால் ஆன பரமாணுக்கள் ஆகாயத்தின் சேர்க்கையினால் உண்டாயிற்று. அதனால் சக்தி என்னும் கடவுளாக எடுத்துக் கொண்டான். அதன்பின்பு செய்த ஆராய்ச்சியில் சுத்தவெளியை இனம் கண்டான். அதைச் 'சிவம்' என்றும் 'பூரணம்' என்றும் அதுவே முழுமுதற் பொருள் என்றும் அதற்கு ஆதியாக வேறு எதுவும் இல்லை என்றும் கண்டுபிடித்தான்

என்று இயற்கையிலிருந்து இறைவன் தோன்றினான் என்பதைத் தெளிவாக விளக்கிச் செல்கிறார் மகரிஷி.

இயற்கையின் இந்தப் பரிணாமத்தினாலேயே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், பிரம்மம் என்னும் இயற்கைக் கூறுகள் உண்டாயின. இவற்றிலிருந்து உருவானதே சமயம். பிரம்மம் என்ற ஒன்றுதான் எல்லாமுமாக இருக்கிறது. எல்லா உயிர்களாகவும் இருக்கின்றது. மனிதனாகவும் உள்ளது என்று அவன் அறிவுக்கு விளங்கிற்று எனும் கருத்து மகரிஷியின் நுணுகிய ஆய்வு முடிவினால் எழுந்ததாகும். இக்கருத்தாக்கங்கள் இயற்கையை இறைவனின் அடிப்படை என்னும் கருதுகோளை உண்மையாக்குகின்றன. இன்றைய இறைநெறி தொடர்பான சிந்தனைகள் அனைத்தும் இயற்கையிலிருந்து பரிணமித்தனவே. ஆனால் மனிதன் அதை உணராமல் அறிவுக்கு நேர்மாறான நிலையில் செயல்பட்டு வருகிறான் என்பதைச் சுட்டிக் காட்டி மனிதனை அறிவார்ந்த ஆன்மிக நிலைக்கு அழைத்துச் செல்ல முயற்சிக்கிறார் மகரிஷி.

மதக்கோட்பாடுகளும் மகரிஷியும்

மனித வாழ்க்கையில் இன்று தவிர்க்க முடியாத காரணிகளுள் ஒன்று மதம். தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளப் பின்பற்றும் ஒருவகைப் பண்பாட்டு மரபே மதம். மனிதனைப் பண்படுத்தத் தோன்றிய மதம் இன்று புண்படுத்தப் பயன்பட்டுக் கொண்டிருப்பதும் மனித சமூகத்தைப் பண்படுத்தத் தோற்றுவித்தவர்கள் இன்று அதையே ஆயுதமாக வைத்துப் புண்படுத்திக் கொண்டிருப்பதும் இன்றைய கண்கூடு. அதனால்தான்

மதம்
யானைக்குப் பிடிக்கலாம்
மனிதனுக்குப் பிடிக்கலாமா?

என்று கேட்கிறார் ஒரு புதுக்கவிஞர்.

மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும் என்று வேண்டுவது வள்ளலார் திருவருட்பா. இவ்வாறு தற்காலத்தில் மதம் என்பது மனித வாழ்க்கையில் மிகப்பெரும் பிரச்சினைகளை உருவாக்கி அமைதியற்ற சமுதாயமாக மாற்றி வருவதை எண்ணிப் பார்ப்பது அவசியம். மதம் என்பது இரு பக்கமும் கூர்மையான கத்தி போன்றது. அதனைக் கையாளுவதில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். இத்தகைய பிரச்சினையை மனத்தில் கொண்டே மகரிஷி மதத்தை அறிவியல் அணுகுமுறையுடன் சிந்தித்து ஆக்கபூர்வமான பயனுள்ள கோட்பாடுகளை வகுத்துள்ளார். மதம் பற்றிய மகரிஷியின் அறிவார்ந்த சிந்தனைகளை இனம் காண்பதன் வாயிலாக அவரது வழி பாட்டுச் சடங்குகள் தொடர்பான பண்பாட்டு மரபிற்கு அடிப் படையை விளங்கிக் கொள்ள முடியும். மதத்தைப் பின்பற்றி நடக்கக்கூடிய மக்களும் மதத்தைப் போதித்துக் கொண்டிருக்கக் கூடிய தொண்டுள்ளம் பெற்ற பெரியோர்களும் மதம் என்பதன் பொருள் என்ன? மனிதனுக்கும் மதத்திற்கும் உள்ள தொடர்பு என்ன? மனிதனுக்கு மதம் தேவையா? மதத்திற்கு மனிதன் தேவையா? என்பனவற்றை விளக்கமாக ஐயமின்றித் தெளிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்கிறார் மகரிஷி.

அறிவை ஒன்றி அறிவில் நிறுத்தி
அறிவையே அறிய ஆழ்ந்து ஆழ்ந்து
பொறிபுலன் அடக்கிப் பொறுமை யடைந்து

ஒன்றி ஒன்றி ஒருவனாய் நின்று
உட்புறம் நோக்கி உணர்ந்து முடிவில்
உருவ மனைத்திலும் ஊடே நிறைந்த
அருவ நிலையும் அவ்வவ் வுருவின்
அமைப்புச் சிறப்பும் இயக்கமு மொப்ப
அரூப இயக்கச் சிறப்பு முணரும்
பேரறி வாகிய பிம்பமே மனிதன்

(மகரிஷி: மதமும் மனிதனும், ப. 17)

என்று மனித வாழ்வு இயற்கை என்னும் பேராற்றலுடன் தொடர்புடையதாகவே அமைந்திருப்பதையும் அது பிரபஞ்சத்திலிருந்து தனித்து இயங்காமலிருப்பதையும் படம் பிடித்துக் காட்டுகிறார்.

மதத்திற்கு எந்தக் கடவுளின் பெயரும் கிடையாது. அவ்வக் காலங்களில் அந்தந்த இடங்களில் வாழ்ந்த சிந்தனை யாளர்கள் மதக் கருத்துகளைத் தொகுத்தனர். அவர்கள் பெயரால் தான் மதங்கள் வழங்கப்படுகின்றன. மதங்கள் இல்லாத, மதத்தைப் பின்பற்றாத மனிதர் வாழ்வு சீர்மைபெற்று அமைய முடியாது. உலகில் உள்ளது ஒரே மதம்தான் என்பது மகரிஷியின் கருத்து.

மதம்

இறைவழிபாடு அறநெறி

நீண்ட காலமாக உலக மதங்கள் அனைத்திற்கும் இறைவழிபாடு, அறநெறி என்ற இரண்டு கோட்பாடுகளே பொதுவானவை. எனவே இவ்விரண்டையும் கடைப்பிடிப்பதே மதம் ஆகும்.

மதத்தின் அடிப்படையான இறைநிலை எனபது உருவ மற்ற ஆற்றலாகவே இருப்பதால் இது எல்லாப் பொருள்களிலும், இடங்களிலும் இருக்கிறது. ஒரே ஆற்றலே பல பரிணாமங் களாகச் செயல்படுகிறது. பொருட்களின் ஊடே நிரம்பி அதற்கு ஏற்றவாறு இயக்கச் சிறப்புகளையும் விளைவுகளையும் அளித்துக் கொண்டே இருக்கிறது. இதனைக் காலம், வேகம், தூரம், பருமன் என்னும் நான்கு கணக்குகளுக்கு உட்படுத்தி வரையறை காண வேண்டியது அவசியம். காரணம் எல்லா மதங்களுக்கும்

உட்கருத்து மேற்குறிப்பிட்ட நான்கு வளங்களும் ஒன்றிணைந்த பெருவலி என்பதாகும். மகரிஷியின் மதம் பற்றிய இக்கோட் பாட்டுக் கருத்துகள் மனித இனத்தின் வளர்ச்சிக்கு உதவும் அறிவு வயப்பட்ட மதத்தினை அடையாளம் காட்டுவதாக அமைகின்றன.

மதம் என்பது வாழ்க்கை விளக்கம் தரும் போதனைகளைக் கொண்டது. இம்மத போதனைகளையும் சாதனைகளையும் இருபடிகளாகப் பிரிக்கிறார் மகரிஷி.

அட்டவணை உணர்த்துவது போன்று பக்திவழியும் ஞான வழியும் இரண்டு படிகளாகப் பிரிந்து பக்தி வழியில் வாழ்க்கையின் அடிப்படையை உணர்ந்து, தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் பணிகளைச் செய்கின்றன. அவை மனித வாழ்க்கை நலத்திற்குத் தேவையாக உள்ளன.

மேற்குறித்த கருத்துகள் அனைத்திற்கும் அடிப்படை இறையுணர்வே ஆகும். இறையுணர்வைப் பரப்பும் நோக்கிலேயே மதம் உருவானது. பெரியோர்களும் மதகுருமார்களும் மடாதி பதிகளும் மதத்தின் வழியாக இறையுணர்வைப் பரப்புவதையே தம் பணியாகக் கொண்டு செயலாற்றினர். அதற்காகவே மதத்தைத் தோற்றுவித்தனர். ஆனால் இன்று அவர்களும் அவர்களின் பணிகளும் வேறுபாதையில் சென்று கொண்டிருக்கின்றன. இதனை உணர்ந்தமையால்தான் மகரிஷி பொறுப்புணர்ச்சியுடன் அறிவியல் பூர்வமாக இறைநிலையை எடுத்துக்கூறி இறை யுணர்வைப் பரப்ப முயற்சிக்கிறார்.

"இறையுணர்வு என்றால் இறைவனைப் பற்றி நன்றாகத் தெளிவாக உணர்ந்து கொண்டு இறைவனே தனக்குள் அறிவாகவும் அதாவது தானாகவும் பேரியக்க மண்டலப் பொருட்கள் அனைத்திலும் இயக்க ஒழுங்காற்றலாகவும் (Order of Function) இருப்பதை அகக்காட்சியாகக் கொண்டு எண்ணம், சொல், செயல்களை அதற்கேற்றவாறு முறைப்படுத்திக் கொள்ளும் ஆன்மாவின் தூய்மையான வாழ்க்கை நிலையாகும்" (மதமும் மனிதனும், ப.61) என இறையுணர்வின் இலக்கணத்தை

உணர்த்துகிறார் மகரிஷி. மனித இன வாழ்க்கைப் பண்பாட்டில் இறைநிலை விளக்கத்தைப் புகுத்தி நலம் காண வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார். மகரிஷி இறைவனை அருட் பேராற்றல் என்று வரையறை செய்து அது பேரண்டம் முழுமையும் அகன்று பரந்துள்ளது என்கிறார். இந்தப் பேரியக்க மண்டலம் முழுமையிலும் ஊடுருவி நிறைந்திருக்கும் எந்தப் பொருளைக் காண்கிறோமோ அந்தச் சுத்தவெளியே இந்த இயற்கை என்ற பேராற்றலாகும்" எனக் கூறியிருக்கும் கருத்துகளின் வாயிலாக அவரது மதம் பற்றிய கோட்பாட்டினையும் இறை ஆற்றல், இறைஉணர்வு பற்றிய சிந்தனைகளையும் தெளிவாகக் கொள்ள முடிகிறது.

மகரிஷி அறிவுறுத்திய தெய்வ வழிபாடு

மகரிஷி அறிவுறுத்திய தெய்வ வழிபாடு அவர்கண்ட இறையாற்றல் கோட்பாட்டுடன் தொடர்புடையது. இறையுணர்வு பற்றி அவர் கூறும் செய்திகள் அவர் அறிவுறுத்திய தெய்வ வழிபாட்டை அடையாளம் காட்டுவதாக அமைகின்றன. இறையுணர்வு புலன்கள் மூலம் கிட்டாது. அதிநுட்பமான விஞ்ஞானக் கருவிகளின் மூலமாகவும் அது கிட்டாது. இத்தன்மையைப் பலரும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தெய்வத்திற்குப் புதுப்புது விளக்கமும் வர்ணனையும் கொடுத்து வருகின்றனர். தனிமனிதராகவோ குழுக்களாகவோ அமைந்து கடவுளைப் பிச்சைக்காரராக அடையாளப்படுத்தி வருகின்றனர் என்று சாடுகிறார் மகரிஷி. இந்தப் பேரியக்க மண்டலம் முழுவதும் இறைநிலையின் உடைமைதானே என்பது ஏன் அவர்களுக்குத் தெரியாமல் போனது? என இடித்துரைக் கிறார். ஞானப் பேரரசுகளாகக் காட்சியளிக்கும் மதத்தலைவர்கள் தங்கள் மக்கள் குலத்திற்கு விழிப்புநிலை ஏற்படுத்துவது அவசியம் என அறிவுரை வழங்குகிறார். இவ்வாறு மக்கள் குலத்தை நடத்துவதற்கு



எனும் அட்டவணை குறிப்பிடுவது போன்று ஆட்சி, மதம், பொருள்துறை ஆகிய மூன்று தலைமைகள் தேவைப்படுகின்றன

என்பது அவரது ஆணித்தரமான கருத்து. இம்மூன்று துறைகளின் தலைவர்களும் ஒன்று கூடிச் சிந்தனையாளர்கள் கருத்தரங்குகளை நடத்த வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

தெய்வம் பற்றிய மகரிஷி கோட்பாடுகளை அவர் எழுப்பிய இரு வினாக்களையும் அதற்கான விடையினையும் வைத்துத் தீர்மானம் செய்யலாம்.

1. தெய்வம் என்பது ஒன்றா? பலவா?

2. ஒன்று எனில் எந்தப் பேராற்றலைத் தெய்வம் என ஏற்றுக் கொள்ளலாம்?

என வினாத் தொடுத்து, இதற்கு மதத்தலைவர்கள் விடை கண்டு பணியாற்ற வேண்டும் எனக் கட்டளையிடுகிறார். இறைநிலை பற்றி விளக்குவதற்கும் கடவுள் யார் எனக் கேட்டு விளக்கம் தருவதற்கும் இக்கருத்தாக்கத்தையே எடுத்தாண்டிருக்கிறார் மகரிஷி. தெய்வம் என்ற இடத்தில் இறைநிலை, கடவுள் எனும் சொற்களை எடுத்தாள்கிறார். இதற்கு விடைகண்டு தெய்வம் அல்லது கடவுளை வழிபாடு செய்வதே சாலச்சிறந்தது என்கிறார் மகரிஷி.

இறைநிலை என்பது மறைபொருள்; புலன்களுக்கு எட்டாது. அறிவின் அலைநிலையாகிய மனச்சூழல் விரைவைப் படிப்படியாகக் குறைத்து டெல்டா அலைக்கு அதாவது வினாடிக்கு ஒன்றிலிருந்து மூன்று சுழல் வரையில் மனம் வருகின்ற போதுதான் மறைபொருள் விளக்கங்கள் கிடைக்கும் (அறிஞர்களின் கடமை, ப.13) என்பது மகரிஷியின் தெய்வம் பற்றிய சிந்தனைகளை விளங்கிக்கொள்ள துணைசெய்கிறது. "குண்டலினி சக்தியின் மீது மனம் வைத்து ஆழ்ந்த தியானப் பயிற்சி செய்பவர்கள் மாத்திரம்தான் இத்தகைய மன நிலைக்கு வரமுடியும்" என்று ஆணித்தரமாகக் குறிப்பிடுகிறார் மகரிஷி.

'இறைநிலையில் சூழ்ந்தழுத்தும் ஆற்றலால் மேலும் மேலும் இந்த விண்துகள்கள் அழுத்தப்பட்டு தற்சுழற்சி ஏற்பட்டபோது அதிலடங்கிய இறைத்துகள்களும் கணக்கிலடங்காத தற்சுழற்சி விரைவு கொண்டனவாக இயங்குகின்றன இதனால் அந்நுண்துகள்களெல்லாம் காந்த ஆற்றல் பெற்று

விளங்கும் ஆற்றலர்க மாற்றமடைகின்றன எனக் கூறுமிடத்து மகரிஷி தெய்வம் பற்றிக் கொண்டிருந்த அறிவியல் ஆய்வு அணுகுமுறையினை இனம் காணலாம். தெய்வம் பற்றிய கருத்து முடிவினைப் பெற்று அதன்வழிச் சிந்திக்க வாய்ப்பாக அமைகிறது.

மகரிஷி கண்ட ஆலய வழிபாடு

'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது ஔவை மொழி. அதனாலேயே மன்னர்கள் பலரும் விண்ணை முட்டும் கோபுரங்களை மக்களை எதிரிகளிடமிருந்து காக்கும் அரண் உடையதாகவும் அமைத்தனர். இந்த ஆலயங்களில் உருவ வழிபாடு அடிப்படையில் விக்கிரகங்கள் எழுப்பப்பட்டன. ஆகம விதிப்படி மந்திரங்கள் ஓதப்பட்டன. சடங்கு சம்பிரதாயங் கள் பூசை முறைகள் கடைப்பிடிக்கப்பட்டன. இசையுடன் கூடிய பஜனைப் பாடல்கள் பாடப்பட்டன. பல்வேறு உணவுப் பதார்த்தங்கள் படைக்கப்பட்டுப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதனால் தினமும் பக்தர்கள் பெருமளவில் ஆலய வழிபாடு செய்யத் தலைப்பட்டனர். ஆலயங்கள் மனித சமுதாயத்தினர் அனைவரிடமும் அன்பு நெறி தழைக்கச் செய்யும் இடங்களாக, மன அமைதி பெறும் இடங்களாக அமைந்திருந்தன. ஆனால் இன்று நிலைமை தலைகீழாக மாறிப்போய்விட்டது.

இந்து சமயம் உள்ளிட்ட எல்லாச் சமயங்களிலும் ஆலய வழிபாடு மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. இந்த ஆலய வழிபாட்டிற்கு மகரிஷி புது விளக்கம் அளித்து அறிவுநிலையில் சிந்தனையைத் தூண்டுபவராக விளங்குகிறார். ஆலயங்கள் மனத்தை ஒருமுகப்படுத்தும் இடமாக அமைந்திட வேண்டும். இந்த ஒருமுகப்படுத்தப்படும் செயல்பாட்டிற்கு அறிவியல் விளக்கம் தருகிறார் மகரிஷி. "புலன்களிலேயே இயங்கிப் பழகிய அறிவைப் புலன்கள் மூலமாகத்தானே முதலில் நிலைபெறச் செய்ய முடியும். அதற்காகவே உருவம், ஒலி என்ற இரண்டில் ஒன்றைத் தேர்ந்து எடுத்து அதிலேயே மனம் லயிக்கச் செய்து பழக்க வேண்டிய நிலை இருந்தது. இத்தகைய முறைக்கு ஏற்ற நிறுவனங்கள்தாம் நாம் காணும் எண்ணிறந்த கோயில்களும் மூர்த்திகளும், மந்திரம், பஜனை முதலியவைகளுமாகும். ஆலயங்களில் மணி அடிப்பது, தோல் கருவிகள் இசைப்பது,

மந்திரம் கூறுவது, கலை நிகழ்ச்சிகள் நடத்துவது முதலிய வழக்காறுகள் ஆலயங்களில் மனத்தை ஒருமுகப்படுத்துவதற் காகவே என்பது அறியத்தக்கது". "ஓர்மைநிலை பெற்ற மன ஆற்றலைக் கொண்டு எனக்கு வாழ்வில் இன்னஇன்ன பேறுகள் வேண்டுமென்றும் இவற்றை அருள்வாய் என்றும் தனக்கு அப்பாலுள்ளதாகக் கருதப்படும் தெய்வங்களை வேண்டிக் கொள்வது வழக்கமாகி விட்டது" என்றும் ஆலய வழிபாட்டின் அடிப்படையினை அளந்து தருகிறார் மகரிஷி.

ஆலயமென்றால் அறிவு ஓர்மை நிலை பெற்று
ஆன்மாவென்னும் உயிரில் அடக்கமுறும் பேறாம்
ஆலயமெனும் சொல்லில் 'ஆ' ஆன்மாவாகும்
அடுத்து வரும் லயம் அதனின் அடக்க நிலைக்குறிப்பு

என்பது அவர் கண்ட ஆலய அறிவுக் கோட்பாடு ஆகும்.

மனிதனின் மனம் பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடும்பொழுது உயிராற்றல் செலவாகிக் குறையும். இந்த இழப்பை நிறுத்தவும் இழந்த அளவை மீட்கவும் ஒரு துணை ஆற்றல் தேவையாகிறது. அத்தகைய உயிராற்றல் அலைகளைக் காந்த சக்தியினை முறையாகச் சேமித்துக் காக்கும் இடமாக ஆலயங்கள் திகழ்கின்றன. ஒலி அதிர்வு அலைகளை முறையாகப் பரப்பும் மந்திரங்கள் மூலமாக மூர்த்திகளைச் சுற்றிலும் மனித காந்த சக்தியைப் பரப்பிச் சுழல விடுகின்றனர். ஆலயங்களில் உலோகத் தகட்டில் தொடங்கிய அதிர்வுகள் மூர்த்தியைச் சுற்றிப் பரவியும் சுழன்றும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இதனால் ஒரு மூர்த்தி சிலையை ஒட்டி ஒரு மனித காந்த சுழற்களம் அமைகிறது. அது எத்தனைபேர் சுற்றி வருகிறார் சுளோ அந்த அளவிற்குக் காந்த சக்தி அழுத்தம் பெறும் எனும் கருத்துகள் வாயிலாக, ஆலயத்தையும் ஆலய வழிபாட்டு மனம் இலயித்த பாங்கினையும் விளங்கிக் கொள்ளலாம்.

ஆலயமாம் பயிற்சிமுறை தோ்ந்தாற்றிப் பழக
அறிவு உயிரை உணரும் மெய்ப்பொருளாம்
ஆலயத்தால் மனிதன் அறவழி கண்டு வாழ்வான்
அதற்கறிவின் தரமாக்க இருவழிகள் உண்டு

என்னும் பாடல் வாயிலாக மகரிஷியின் ஆலயம் பற்றிய சிந்தனைகளை உணரலாம்.

ஆலயக் கோபுரங்கள் மன்னர்களின் பெருமைகளைப் பறைசாற்றுவதாக அமைந்திருந்தன. மேலும் கிராமங்களுக்கு வழி காட்ட மிகவும் உதவியாக இருந்தன. இந்த முறையில் கோயில்கள் பராமரிப்பில் மதம், வாணிபம், அரசு மூன்றும் இணைந்து செயலாற்றின.

ஆன்மாவின் லய நிலையே ஆலயம்

ஆன்ம லயத்திற்கு ஏற்ற வழிகண்டு பின்பற்றி உயர்வடைதல் ஆலய வழிபாடு. அறிவின் உயர்வுக்கு ஏறிய ஆன்மலய முறையில் முதற்பகுதிதான், படர்க்கையில் மனம் ஒன்றும் முறைதான் சிலை வணக்கம். ஒலியெழுப்பி ஓதல் என்பது மற்றொன்று; உள்ளுணர்ந்து ஒன்றுதல் என்பதாக விளக்கம் தருகிறார். இவ்வாறு உள்ளுணர்ந்து ஒன்றும் முறையைக் குண்டலினி யோகம் என்றும் சுக்கில தியானம் என்றும் குறிப்பிடுகிறார்.

ஆலயங்களில் நிகழ்த்தப்பட்ட உற்சவ விழாக்களும் காரண காரிய அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டுள்ளன. பொருட்களை விற்கவும் வாங்கவும் வசதியாக வணிகர்கள் ஒன்று கூடி, ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாள் செலவை ஏற்றுக் கொண்டு விழாவிற்கு ஏற்பாடு செய்தனர். நகரங்களில் வணிகர்கள் பொருட்களை விற்பதற்காக மேற்கொண்ட இத்தொடர் உற்சவ விழாக்கள் பின்பு கிராமங்களிலும் பரவின. இன்று நாடு முழுவதும் பிரமோற்சவம் என்ற பெயரில் விழாக்கள் நடைபெற்று வருகின்றன என்னும் மகரிஷியின் உற்சவ விழா விளக்கம் காரணகாரிய அடிப்படையிலான உண்மையாகும்.

தெய்வத்தைப் போற்றி வழிபட்டு வாழ்வோர்
சிந்தனையும் மேற் கொண்டால் சிறந்துயர்வார்
ஐயுணர்வும் சீர்திருந்தும் ஆற்றல் ஓங்கி
அவர் தகைமை நன்குணர்வார் அறம் தழைக்கும்

என்னும் பாடல் அடிகள் வாயிலாக ஆலய வழிபாடு பற்றிய மகரிஷியின் கொள்கைகளை நன்குணரமுடியும்.

உருவ வழிபாடு பற்றிய மகரிஷியின் கோட்பாடு

மகரிஷி உருவவழிபாடு பற்றிக் கொண்டிருக்கும் கொள்கைகள் இன்றைய வழிபாடு தொடர்பான சிக்கல்களைப்

போக்கி அறிவுபூர்வமான வழிபாட்டிற்கு வழிவகுப்பதை அறிய முடிகிறது. இச்சையைத் தொழிலாக உடைய ஆன்மாவை அதன் போக்கிலிருந்து திருப்பிவிட வேண்டும். அதற்கு உளப்பயிற்சி அவசியம். இப்பயிற்சி அனுபவத்தால் வருகிறது. அதனை,

1. ஓர்மை நிலை
2. அடக்க நிலை
3. ஒடுக்க நிலை

என்னும் மூன்று பிரிவுகளில் அடக்குகிறார் மகரிஷி. அறிவு செம்மையாகி அடங்கி லயமாகும் பயிற்சியே ஆலயம் ஆகும். ஆ-லயம் (ஆலயம்) என்பதில் மனத்தை ஒருமுகப்படுத்தும் பணி நடைபெறுகிறது. இப்பணிக்கு அடிப்படை ஆலயங்களில் உள்ள விக்கிரஹங்கள் ஆகும். இவற்றை உருவப் படிமங்கள் என்பது பொருந்தும். இந்த உருவங்களை வழிபடுவது எனும் நிலை, அதன் மூலம் மனத்தை ஒருமுகப்படுத்தும் நிலை இன்று பரவலாக வளர்ந்து வந்துள்ளது. இந்த உருவ வழிபாட்டு வளர்ச்சியே சடங்குகளுக்கு அடிப்படையாகத் திகழ்கின்றது. விக்கிரக வழிபாடு எவ்வாறு வந்தது என்பது பற்றிய அவரது விளக்கம் அறிவார்ந்த நிலையில் அமைந்திருக்கிறது. மனிதன் அவனுடைய மனத்தை ஒழுங்குபடுத்துவதற்காகவோ அல்லது உயர்த்திக் கொள்வதற்காகவோ கடவுளைச் சிருஷ்டிக்க ஆரம்பித்தான். இவனுடைய எண்ணம், குணங்கள் இவை எல்லாவற்றையும் கடவுளுக்கு ஏற்றி வைத்தான். இவனது தேவைகளைக் கடவுள் தேவையாகக் கருதினான். அதனால் உருவங்களைப் படைத்து அதில் அணிகலன்களை அணிவித்துச் சடங்குகளை இணைத்து வழிபடத் தொடங்கினான் என்று அறிவுபூர்வமான விளக்கத்தைத் தருகிறார் மகரிஷி.

உடல்நலம் அறிவோடு செல்வம் கீர்த்தி
ஒழுக்கம் வீரம் அழகு காதல் ஞானம்
கடமை உணர்வினைப் பெற்று இனிது வாழ
கற்பனையால் கருத்துயர்த்த நினைத்த முன்னோர்
உடல்நலம் முதலான ஆற்றலெல்லாம்
ஒன்றிணைத்து உருவமைத்து நம்புதற்கு
கடவுள் கதைகள் பலவும் கற்பித்தார்கள்
கருத்துயர்ந் தோர்க்கு இச்சடங்கு தேவையில்லை

எனும் பாடல் வழி அறிவுபூர்வமாகச் சிந்திப்பவர்களுக்கு இவ்வுருவ வழிபாடு தேவையில்லை என்றும் வலியுறுத்துகிறார்.

ஆலயங்களில் விக்கிரக வழிபாடு இரு வகையுண்டு எனக் கூறும் மகரிஷி, அதனை அறிவியல் கண்கொண்டு ஆராய்ந்து விளக்குகிறார். பஞ்சலோகங்களினால் ஆன தகடுகளில் அட்சரங்களை எழுதித் தன் விருப்பத்தை மந்திரங்களாக எழுதி உருவேற்றிச் சிலைகளுக்கு அடியில் புதைத்துச் சுற்றிவந்து வணங்குகிறார்கள். இவ்வாறு தினமும் சுற்றிவந்து வணங்கும் பொழுது ஓர் ஆற்றல் களம் உருவாகிறது. இந்த ஆற்றல் களம் நிண்ட காலம் சுழன்று கொண்டிருக்கும். இந்த ஆற்றல் களத்தில் இன்னொரு சக்தி நுழைவது சிரமம். இவ்வாறு நுழையும் சக்தி ஒன்றுபட்டதாகவோ அல்லது நுண்ணியதாகவோ இருக்க வேண்டும். (The introducing force should be of like vibration or it should be subtler) அதுவே காப்பாகவும் அமையும் என்கிறார் மகரிஷி.

கோவிலில் ஒருவன் எந்த இடத்தில் சுற்றி வந்தாலும் அங்கே இருக்கக் கூடிய Vibrationனானது ஒருவன் பலவீனமாயிருக்கிறான் என்றால் அவனுக்குச் சக்தி அளிக்கிறது என்றும், ஒருவனுக்குச் சக்தி அதிகமாக இருக்கிறது எனில் அதிலேயிருந்து அவன் தன் சக்தியைத் தருகிறான் என்றும் பொருள். இவ்வாறு பெறுவது தருவது என்ற போது எல்லாக் கோயில்களுமே, ஓர் ஆற்றல் களம்தான் என்று சொல்ல வேண்டும் (Every temple becomes an energy bank). ஒவ்வொரு ஆலயமும் முறையாக நிர்வகிக்கப்பட்டால் ஓர் ஆற்றல் களமாகவே அமையும் என்னும் மகரிஷியின் கருத்து ஆலயங்களில் உருவ வழிபாட்டை எடுத்தியம்புவதாக அமைகிறது.

ஆலயத்திற்குள் உட்கார்ந்து கொண்டு வேண்டுதல் செய்து கொள்வது தனிமையில் இருந்து சிந்தனை செய்வது என்ற நிலையில் இருந்தால் கட்டாயம் அந்தந்த எல்லையிலே மனத்துக்கு ஒரு நுண்ணிய இயக்கம் உண்டாகும். அந்த உந்துவேக சக்தியினால் அழுத்தத்தினால் எண்ணியதை நிறைவேற்றிக் கொள்ள முடியும். இதனை யோகத்தினாலும் தவத்தினாலும் பெறலாம். இதைத்தான் Auto suggestion என்றும் தனியாகப் பிரித்துச் செய்யும்பொழுது Prayer என்றும் வேண்டுதல் என்றும் சொல்கிறோம் என்பது ஒருமுறை என்று இருவகைப்பட்ட

ஆலய வழிபாட்டு முறையினை அடையாளம் காட்டுகிறார் மகரிஷி.

மகான்கள் அடக்கம் பெற்ற ஜீவசமாதிகளில் கோயில் எழுப்பி வழிபடுவது மற்றொரு நிலை. 18 மகான்கள் (சித்தர்கள்) அடக்கம் பெற்ற தலங்கள் உள்ளன. பழனி, திருப்பதி, சிதம்பரம், வைத்தீஸ்வரன் கோயில் முதலியவற்றைச் சான்று காட்டலாம். இத்தகைய ஆலயங்களில் சக்தி குறைவதில்லை. தகடுகள் மூலம் வழிபாடு செய்யும் ஆலயங்களுக்கே சக்தி குறைகிறது. எனவே அதற்குத்தான் குடமுழுக்கு தேவை என்பன போன்ற பல அறிவியல் கண்டுபிடிப்புகளைச் கூறியிருக்கும் மகரிஷி உருவேற்றும் உருவ வழிபாடு அதிகப் பயனளிக்காது என வரையறுத்துக் கூறுகிறார். உருவ வழிபாட்டின் மூலம் இறைவனை வழிபடுவதைவிட அகத்தவத்தினால் இறைவனை வழிபடுவதே சாலச்சிறந்தது எனக் கண்டுபிடித்துக் கூறுகிறார்.

இறைநிலையே அறிவாக இருக்கும்போது
இவ்வறிவை சிலை வடிவத் தெல்லை கட்டி
குறை போக்கப் பொருள் புகழ் செல்வாக்கு வேண்டி
கும்பிட்டுப் பலன் கண்ட வரையில் போதும்
நிறை நிலைக்கு அறிவு பிரிந்துண்மை காண
நேர்வழியாம் அகத்தவத்தைக் குருவால் பெற்று
முறையாகப் பயின்றுன்னில் இறையைத் தேற
முனைந்திடுவீர் காலம் வீணாக்க வேண்டாம்

என்று அறைகூவல் விடுத்து உருவ வழிபாட்டை விடுத்து அகத்தவ நிலைக்கு மக்களை அழைக்கிறார் மகரிஷி.

வழிபாட்டுச் சடங்குகளில் அறிவியல் அணுகுமுறை

மனித இன வாழ்க்கையில் பல்வேறு நிலைகளில் பல்வேறு வகையான சடங்குகள் இரண்டறக் கலந்து வெளிப்படுவதைக் காணலாம். இச்சடங்குகள் இறைவழிபாடு தொடர்பான நம்பிக்கை அடிப்படையில் எழுந்தவையே. இச்சடங்குகளை இரண்டு நிலைகளில் அடக்கலாம். அவை,

1. வழிபாட்டுச் சடங்குகள்
2. வாழ்வியல் சடங்குகள்

என்பவையாகும். இச்சடங்குகள், காரணகாரிய விளக்கம் அறியாமல், அறிய முடியாமல் காலம் காலமாகப் போலச் செய்தல் அடிப்படையில் நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இதனால் இச்சடங்குகளைப் பலரும் கண்மூடிப் பழக்கம் என்றும் மூடப்பழக்கம் என்றும் விமர்சிக்கும் நிலையைக் காணமுடிகிறது. இவ்விமர்சனங்களால் மனிதர்களின் வழிபாட்டுப் பண்பாடு கேலிக்குரியதாக அமைந்துள்ளது. இதனால் ஏற்படும் இழிநிலையைப் போக்க வேண்டுமானால் சடங்குகளுக்கு அறிவு பூர்வமான காரணகாரிய விளக்கம் தேவை. அவற்றினுள் பொதிந்திருக்கும் அறிவார்ந்த உண்மைகள் அனைவருக்கும் தெரிவது அவசியம். இத் தேவை கருதியே மகரிஷி அறிவியல் அணுகுமுறையுடன் சடங்குகளைப் பற்றிச் சிந்தித்து விளக்கம் தேட முற்பட்டார். அதில் வெற்றியும் பெற்றார்.

தொடக்கக் காலத்தில் எழுந்த அறுவகைச் சமயங்கள் பற்றி ஆராய்ந்து அறிந்த மகரிஷி எல்லாச் சடங்குகளும் இவ் ஆறுவகை சமயங்களுக்கும் பொருந்துவதாகவே அமைந்திருப்பதை அறிவுறுத்துகிறார். எந்த ஒரு சடங்கும் ஒரு விஞ்ஞான அடிப் படையில்தான் ஏற்பட்டிருக்கிறது என்பது மகரிஷியின் கருத்து. எல்லாச் சடங்குகளும் ஏதாவது ஒருவகையில் அறிவியல் பூர்வமானதே. அதனுள் ஓர் அறிவியல் உண்மை இருக்கவே செய்கிறது.

இறைவழிபாட்டின் அடிப்படை மனத்தை ஒருமுகப் படுத்துவது ஆகும். இவ்வாறு மனத்தைச் சடங்குகள் மூலம் ஒழுங்குபடுத்த ஒருமுறையைக் கையாண்டு வந்தனர். அம் முறையை 'யாகம்' என்றனர். அதே மனத்தை உள்ளடக்கி உயிரிலேயே ஒடுக்கி அதன் மூலமாக மனத்தினுடைய உண்மைகளை எல்லாம் உணரக் கூடியதை 'யோகம்' என்றும் சொன்னார்கள். யாகம் என்பது வெளிப்படையாகச் செய்வது. யோகம் என்பது உட்புறமாகச் செய்வது ஆகும். யோகம் என்பது ஒழுக்கம். யாகம் என்பது படர்க்கை என்று விளக்கம் தருகிறார் மகரிஷி.

மனிதன் வாழ்வில் நிறைவு பெற ஏழு வகையான தத்துவங்களைக் கடைப்பிடிக்க வேண்டும் என்கிறார் மகரிஷி. அவை, உருவவமைப்பு, குணம், அறிவின் உயர்வு, கீர்த்தி, உடல் வலிவு, சுகம், செல்வம் ஆகியவையாகும். ஏழில் ஏதாவது ஒன்று குறைந்தாலும் அது வாழ்க்கையில் குறைவாகவே இருக்கும்

என்பது அவர்தம் முடிவு. இதில் எது குறைவோ அதை மனத்தினாலேயே கொண்டு வந்துவிடலாம். 'மனம் போல் வாழ்வு' என்பது மனமே அனைத்திற்கும் அடிப்படை. மனம் விரும்பும் தோற்றத்தை உருவகித்து அதன் மூலம் உருவேற்றி ஆற்றலைப் பெறலாம். இக்கோட்பாட்டின் படியே மேற்குறிப்பிட்ட அனைத்துத் தத்துவங்களையும் மனத்தில் உருவேற்றி ஒரு உருவத்தைப் படைத்து நினைத்து வணங்குகிறோம். கற்பனை வடிவத்தில் சிலைகளை வடித்து அதில் மனம் விரும்பும் சிறப்புகளை ஏற்றி வணங்குகிறோம். அவ்வாறு எழுந்ததே உருவ வழிபாடு என்பது மகரிஷியின் கருத்து. இவ்வழிபாட்டில் உள்ள சிலை வணக்கத்தில் மூன்று திட்டங்கள் உள்ளதாகக் குறிப்பிடுகிறார். அதில் முக்கியமானதாக,

என்னும் மூன்றையும் குறிப்பிடுகிறார். என்ன பலனை அடைய வேண்டும் என்பதை மனத்தில் நிறுத்தி அலை நீளத்திற்கும் எண்ணிக்கைக்கும் ஏற்றவாறு மனம் நுண்ணியக்கத்திற்கு வர மனத்தின் ஆழ்ந்த நிலைக்குக் கொண்டு வந்து உருவேற்றுவது மந்திரம் ஆகும். ஓர் ஒலி வடிவத்தின் உதவியுடன் மலர், தண்ணீர், உருவம், படம் ஏதாவது ஒன்றை வைத்து உயிர்க் கலப்புற்று அதன் பலனைப் பெறுவது யந்திரம். வேண்டுவதைப் பிரார்த்தனை மூலம் வேண்டுகோளாகக் கூறி அதாவது அறிவையோ புகழையோ கொடு என மனத்தில் கலந்துள்ள இறைவனிடம் வேண்டுவது தந்திரம் ஆகும். இதில் எவ்விதக் கடவுளை வணங்கினாலும் வணங்குபவன் தன் மனத்தையே வணங்குகிறான். தன் மனத்தை உயர்த்திக் கொள்கிறான். எனவே தன் மனத்தை வணங்குவதே இதன் சிறப்பாகும்.

இவ்வாறு இறை வழிபாட்டில் நிகழ்த்தும் சடங்குகளை மந்திரம், யந்திரம், தந்திரம் எனும் மூன்று நிலைகளில் சிந்தித்து அறிவார்ந்த பல கருத்துகளை அறியத் தருகிறார் மகரிஷி. அனைத்திற்கும் மனமும் மன ஒருமைப்பாடும் எண்ணங்களும் உருவேற்றுவதுமே காரணம் என்கிறார். எனவே வழிபாட்டுச்

சடங்குகள் மனத்தின் ஆழ்ந்த வேண்டுகோள், விருப்ப உணர்வு, இலயிப்புத் தன்மை, உருவேற்றி என இத்தகைய உண்மையினை ஆராய்ந்து அறியத்தருகிறார் மகரிஷி. அதோடு திருமணம், இறப்பு உள்ளிட்ட வாழ்வியல் சடங்குகள் பற்றியும் அவர் கொண்டிருந்த கருத்துகள் அறிவியல் பூர்வமான பல உண்மை களை உணர்த்துவதாக அமைகின்றன.

முடிவுரை

இதுகாறும் கூறப்பட்ட கருத்துகள் வழி ஆராயும் பொழுது மகரிஷி ஒரு சமூக விஞ்ஞானி என அடையாளம் காண முடிகிறது. இறை உணர்வு, இறைநெறி, தெய்வநிலை, மதக்கோட்பாடுகள், ஆலய வழிபாடு, உருவ வழிபாடு, சடங்குகள் எனப் பல நிலைகளில் அவர் மனித வாழ்வில் பரவியிருந்த பல்வேறு வழிபாட்டுப் பண்பாட்டுக் கூறுகளை அறிவியல் நோக்கில் ஆராய்ந்து புதிய கருத்துகளை இனம் கண்டு கூறியிருப்பது புரிகிறது. இதன் மூலம் கண்மூடித்தனமாகப் பின்பற்றி வரும் இறைவழிபாட்டு மரபுகளைச் சீர்ப்படுத்தி அறிவியல் அணுகுமுறையிலான நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்ற விழிப்புணர்ச்சி ஊட்டுவது புலனாகிறது. இப்பேரண்டம் முழுமையும் பரவியிருக்கும் அருட்பேராற்றலே இறைவன்; அதனை அகத்தாய்வுகள் மூலமே உணர்ந்து பிறவிப் பயனை அடைய முடியும் எனும் அறிவியல் உண்மையை இனம் கண்டு கூறியிருப்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

மகரிஷியின் இறைச்சிந்தனைகள்

முனைவர் க. இளமதி சானகிராமன்

அருள்தந்தை மகரிஷியின் அருட்பாடல்கள் சமுதாயம், இறை, சமயம், தொழில், வாழ்வாங்கு வாழும் முறைகள் எனப் பலவற்றையும் தம்முள் கொண்டவை. இவற்றுள் 'இறை' குறித்த சிந்தனை இக்காலத்தில் அருகி வருவது கண்கூடு. இந்நிலை சமுதாய வளர்ச்சிக்கு நன்மை சேர்க்காது எனும் மிகப்பெரிய அருள்நிலையில், தம் அனுபவத்தில், அறிவியல் கண்ட இறைச் சிந்தனைகளைத் தம் ஞானக் களஞ்சியத்தில் தொகுத்துத் தந்துள்ளார். அவற்றில் ஒருசிலவற்றை எடுத்தியம்புதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தெய்வம் உண்டு எனல்

இவ்வுலகில் மக்களைக் காக்கின்ற தெய்வம் உண்டு என்ற நம்பிக்கையினை மக்கள் கொள்ளுதல் வேண்டும். இதையே பட்டினத்தாரும் "தெய்வம் உண்டென்றிரு" என்பார். மகரிஷி அவர்களும்,

தெய்வநிலை மனிதரெலாம் உணர்ந்தால் அல்லால்
திருத்தமுற வாழ்வேது ஆற்றல் அற்றோர்
தெய்வம் உண்டென நம்பி தினம் வணங்கித்
தேர்வு பெற.....

எனும் வரிகளில் தெய்வ நிலையினை மனிதர்கள் உணர்ந்தாலன்றி நல்ல திருத்தமுள்ள வாழ்க்கையினை வாழ்தல் இயலாது என்று திட்டவட்டமாகக் கூறுவார். சக்தி இல்லாதவர்கள் தெய்வம் உண்டென்பதை நம்பி நாள்தோறும் வணங்கி வழிபடல் வேண்டும் என்பார். எனவே தெய்வம் உண்டென்னும் கருத்தினை

பேராசிரியர், தமிழியற்புலம், புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி–14.

அனைவரும் அடைதல் வேண்டும் என்பது மகரிஷி அவர்களின் கருத்தாகும்.

தெய்வம் ஒன்று எனல்

தெய்வம் பலப்பல சொல்லிப்
பகைத்தீயை வளர்ப்பவர் மூடர்
பாருக்குள் தெய்வம் ஒன்று – இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்

என்று பாடிய பாரதியைப் போன்றும், 'ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு' என்ற பட்டினத்தார் வழியும், 'ஒருவனென்றே தெய்வத்தை வணங்க வேண்டும்' என்ற அகத்தியரின் வழியும் உரைக்கின்றவர், எத்தனை மதங்கள் இருந்தாலும் தெய்வம் ஒன்றுதான் என்பதனை,

எண்ணிறந்த மதங்கள் உண்டு மனிதருக்கு
எனினும் தெய்வம் என்ப தொன்றே யாகும்

என்பதின்வழி உணரலாம். இறைவனை அடையச்செய்யும் மதங்களைக் குறித்தும் வெகுவாக மொழிவார்.

சமய நிலை

இறைவனை முதன்மையாகக் கொண்டவை சமயங்கள் எனும் மதங்கள். அவை மக்களை நெறிப்படுத்துவதற்காகத் தோன்றியவை. ஆனால் இக்காலத்தில் அச்சமயங்களே மக்களைப் பாகுபடுத்திப் படுகுழியில் தள்ளி வருகின்றன. மக்களிடையே வேறுபாடுகளை வளர்த்துப் பிரிவினையைத் தூண்டிப் படுகொலைகளும் செய்ய வைக்கின்றன.

சமய மாறுமடி – அகப்பேய்
தாமதமாக வந்தவடி
அமைய நின்ற இடம் – அகப்பேய்
ஆராய்ந்து சொல்வாயே

என்று அகப்பேய்ச் சித்தர் கூறுவது போன்றும்,

சமயமெல்லாம் சக்தியுண்டு சிவமுண்டு
சண்டாளர் பிரித்தல்லோ தள்ளினார்கள்

என்று சட்டை முனி கூறுவதைப் போன்றும் மகரிஷி அவர்கள் 'சமயம்' என்பது 'சமஇயம்' என்று பிரியும்; இது மனிதர்கள்

அனைவரையும் சமமாகக் கருதும் இயக்கச் சொல். இங்கே ஒருமை உணர்வே பெருகி நிற்கும். மக்கள் சூழ்நிலைக் கைதிகளாய் வாழ்கின்றார்கள். எனவே திக்குத் தெரியாமல் தமது செயல்களில் உழல்கின்ற அவர்களை நிறுத்தித் திசைகாட்டித் துணை நின்று உதவும் மதம் தேர்வீர் என்பார்.

மதங்கள் அனைத்தும் உணவு, உடை, வணக்க முறை என்னும் இம்மூன்றில் மட்டுமே வேறுபடுகின்றனவே அன்றி ஒரே கருத்தையுடையன. உணவு, உடை, வணக்கமுறை என்பன ஒவ்வொரு மனிதனும் உயர்வடைய வகுக்கப்பெற்றவையாகும். உடல்நலம், கல்வி, ஒழுக்கம், நல்லறிவு, வீரம், கடமை முதலான நலன்களைக் கருத்தாலும் செயல்களாலும் அடையவும் மக்கள் எல்லாம் அன்புடன் வாழவும் நல்ல நடைமுறைப் பயிற்சியை நல்குபவையுமே மதங்கள்.

நம்முடைய குணங்களை அடக்கி அறம், பொருள், இன்பம், வீடுபேறு முதலானவற்றைப் பெறுவதற்கு உடல், உள்ள ஒழுக்கங்களைக் கூட்டிப் பேரறிஞர் வகுத்த துறையே 'மதம்' என்று கூறுவார். எல்லா மதங்களிலும் கடவுள் என்ற கருத்தும் வணங்கும் முறைகளும் உண்டு. அவை நம்முடைய அறிவையும் புலன்களையும் பயன்படுத்தி நம்மை நல்வாழ்வு வாழச் செய்பவை. இந்தப் பண்பட்ட அறிவின் மூலம் இறைவனைக் கண்டு அவனோடு இரண்டறக் கலக்கும் தன்மை அடையலாம் என்பார்.

தத்துவம், சாத்திரம், மதம்

இயற்கை நிகழ்ச்சிகட்குக் காரணம் உணருகின்ற எண்ணத்தின் உயர்ந்த நிலையே தத்துவம். இவ்வெண்ணங்களின் தொகுப்பே சாத்திரங்களாய் வளர்ந்தது. இயற்கையின் நிலை, இயக்கம், விளைவுகளை நன்கறிந்த எண்ணத்தின் செயல் ஒழுக்க ஏற்பாடுகள் தாம் மதங்கள். இவற்றின் வாயிலாக இறை உணர்வைப் பெறவேண்டும் என்பார். எம்மதத்தையும் உயர்வென்றும் தாழ்வென்றும் காணக்கூடாது என்பது அறிஞர்களின் கருத்து. சிவவாக்கியர்,

எங்கள் தெய்வமுங்கள் தெய்வ மென்றிரண்டு பேதமோ
உங்கள் பேதமன்றியே உண்மை ஒன்றுமில்லையே

என்பதின் வழி வெவ்வேறு தெய்வங்கள் இல்லை என்பார். அதனையே மகரிஷியும், மனிதர்களே பேதங்களைக் கூறுகிறார்களேயன்றித் தெய்வத்தில் பேதமில்லை. நான்கு குருடர்கள் யானையை விமர்சித்தது போன்றுதான் இறை வடிவை முற்றிலும் அறிய முடியாத குருடர்களாய் நாம் வாழு கின்றோம். நமது சிற்றறிவிற்குப் பட்டதைப் போல் இறைவனைப் பேதப்படுத்துகின்றோம். அனைத்துச் சமயவாதிகளும் உண்மையை மறைத்தே மொழிகின்றனர். உண்மையில் இறைவனின் தன்மை என்ன என்பதை மனிதன் உணர வேண்டும் எனவே,

வற்றாயிருப்பு பேராற்றல் பேரறிவுவளம் மூன்றும்
ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வமாம்
வற்றாத இம்மூன்றும் விண்முதல் ஐம்பூதங்கள்
வான்கோள்கள் உயிரினம் உலகம் ஓரறிவுமுதல்
ஆறாம்
வற்றாது பெருகிவரும் வளர்ச்சியே பரிணாமம்
விந்தவை அனைத்திலும் சீரியக்கம் இயல்பூக்கம்
வற்றாது பெருகும் பேரண்டத்தில் உயிரினத்தில்
வழுவாத செயல்விளைவு நீதியே கூர்தலறம்

என்று விண்துகள்களின் கூட்டுதான் அனைத்தும் ஊடுருவும் ஆற்றலானவை. அந்தவெளியினை மறைத்து வடிவத் தோற்றங் களாகக் காட்சியளிக்கின்றது இறையே! என்பார்.

உயிராற்றலும் இறையும்

ஒருவன் செய்கின்ற எந்தச் செயலுக்கும் அவன் உயிராற்றலே காரணம். அவ்வுயிராற்றலின் உள்ளிருந்து அதனைச் செயல்படுத்துவது அறிவாகிய சிவமே. அதன் வெளிப்பாடு மனமாகும் என்பதை,

உயிராற்றல் என்பது விண் ஆகாசம் ஆம்
உட்பொருளாய் உள்ள சிவம் அறிவு உண்மை
உயிராற்றல் பரமாணு சூழல்கலை ஆம்
ஒரு தொகுப்பில் கோடானுகோடி கூடி
உயிராற்றல் தற்சூழலோடு இலங்கும்போது
உண்டாகும் விரிவு கலை சீவகாந்தம்
உயிர்கலைகள் புலன்கள் வழி செல்லும் போக்கை
உண்மைசிவம் உணர்வதுமே மனம் ஆம் காணீர்

என்று பாடுவதின் வழி அறியலாம். இங்கு உயிராற்றலை அறிவு, உண்மையாய்க் காண்பது, இறைவனைச் சத்து சித்து ஆனந்தமாய்க் காண்பது என்பதை நினைவுபடுத்துகின்றன.

இறைவனின் தன்மை

இவ்வுலகில் காணுகின்ற சத்து அசத்து என்னும் அனைத்துப் பொருள்களுமாய் நிற்பவன் இறைவனே. பஞ்ச பூதங்களாகவும், நானாகவும், நீயாகவும் மற்றுமுள்ள அனைத்தும் அவனே. இறைநிலையிலிருந்தே அனைத்தும் தோன்றுவன. இறை நிலை என்பது சுத்தவெளி. இதுதான் அனைத்திற்கும் பிறப்பிடம். இதனையே இருப்புநிலை என்று கூறுவோம். மறைந்து இருக்கின்ற இருப்பு நிலையே விரிவடைந்து அலை நிலைகளாய் மாறியதால் உண்டானதே விண்முதல் இவ்வுலகம் வரை உள்ளதாகும். இந்த இறைநிலையாகிய நுண்பகுதி நிலையில்லாத சுவையாகி நீள்படர்க்கையில் உணர்வால் உயிர்களாகின்றது. அவற்றோடு தன்முனைப்பும் அதன்வழி, கர்மங்களும் பதிவாகிக் குற்றம் என்கின்ற அவற்றால் கலங்கி வருந்தி அதன் பின்னர்க் கண்ட தெளிவே ஞானம் என்பது என்று உரைக்கும் மகரிஷி அவர்கள் அனைத்துமாய் நிற்கின்ற இறையின் ஒருசிறு துகளே மனிதனாகி வினைகளாற்றி அவ்வினைகளின் வழியே பிறவித் தொடர்ச்சியினைப் பெறுகின்றது என்கிறார். இது அறிவியலின் பாற்பட்டது என்று கூறலாம்.

மறைந்து நின்று அருள்பவன்

அனைத்துமாய் நிற்பவன் அவனென்றாலும் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டும் ஓரிடமின்றி அனைவற்றிலும் மறைந்து மிகப் பெரிய செயற்பாடுகளைச் செய்யும் அவனை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும் என்பதை,

இறைநிலை என்ற பேராற்றல்
எங்கும் உளது நீக்கமற
மறைவாய் இருந்து அதுஆற்றும்
மாபெரும் செயலை நினைந்திடுவோம்

(பா.334, ப.122)

என்று பாடுவதால் அறியலாம்.

இறைவனை அறியும் வழி

மறைந்திருந்து அருள்செய்யும் அவனை எவ்வாறு அறியலாம்? என்ற வினாவை எழுப்பியவர்களிடம் இறைவன் அறிவாக இருப்பவன். அவனை அறிவால் அறியலாம். இறைவனை அறிபவர்களே பெரியோர்கள் அறிவில் அவனை அறியும்பொழுதே முக்தி பெறலாம்.

சித்தமிசைக்குடி கொண்ட அறிவான தெய்வமே
பார்க்குமிட மெங்குமொரு நீக்கமற நிறைகின்ற
பரிபூரணானந்தமே

என்றவர் அறிவினை அறிந்த பின்பு வேறெந்த இச்சைகளிலும் அறிவு செல்லாது என்றும் உரைப்பார். பாரதியும், மாடனை, காடனை என்னும் பாடலில் எவை எவற்றையோ தெய்வம் என்று கொண்டு அலைபவர்களே, அறிவில்லாதவர்களே, அலையும் அறிவிலிகாள் அறிவு ஒன்றே தெய்வம் என்பதை உணர மாட்டீர்களா என்று கூறி அறிவே தெய்வம் என்பதை வெளிப்படுத்துவார். இக்கருத்து இவண் ஒப்புநோக்கத்தக்கது. எனவே அறிவாய் இலங்கும் அவனை அறிவால் அறியலாம் என்பது தெளிவு. இதனை,

அறிவானுந்தானே அறிவிப்பான் தானே
அறிவாய் அறிகின்றான் தானே

என்ற மேற்கூறிய பாடலடியும் சுட்டுவதை உணரலாம். அறிவுதான் இறை என்ற கருத்தைத் தமக்கு முன்னர்க் கூறிய ஞானியர்களையும் அடையாளப்படுத்துமுகத்தான்,

அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானார்
அகத்ததுதான் மெய்ப்பொருள் என்றெடுத்துக்கூட்டி
அறிவதனை அறிவித்தார் திருவள்ளுவர்
அவ்வறிவை அறிவதற்கு முறைகள் சொன்னார்
அறிஞர் திருமூலர் அவ்வறிவில் ஆழ்ந்து
ஆனந்தக் கவியாத்தார் இராமலிங்கர்
அறிவில் அறிவாய் நிலைத்து அறம்வகுத்தோர்
கதைவாழ்ந்து காட்டினோர் நினைவு கூர்வோம்

என்று பாடுவதை நோக்குதல் வேண்டும். மகரிஷி அவர்கள் அன்பே இறைவன் என்பதையும் இறை உணர்வை அறிந்தவர்களே அறிவர் என்பதையும் தெரிவிப்பார். இதனை,

இறை உணர்வால் அறிவடைந்த முழுமைப் பேற்றால்
இயங்கும் பல்லுயிரிடத்தும் மலரும் நட்பை
மறை உணர்ந்தோர் அன்பு என்பர் மனித உள்ளம்
மாண்பு பெற்ற நிலை இதுவே (பா. 332, ப. 179)

என்றும்,

அனைத்துயிரும் ஒன்றென்று
அறிந்த அடிப்படையில்
ஆற்றும் கடமை யெல்லாம்
அன்பின் செயல்களாகும் (பா. 335)

என்றும் பாடி அன்பினால் இறைவனை அறியலாம் என்பர். திருமூலர் 'அன்பே சிவமாவது' என்று கூறியிருப்பது இவண் ஒப்பு நோக்கத்தக்கது.

இறைவன் ஒளி வடிவானவன். அவனை அறிய வேண்டுமெனில் என்னென்ன செய்ய வேண்டும் என்பதை வெளிப்படுத்தும் முகத்தான்,

ஜோதியாம் பொருளதனை உன்னுள்ளே காணச்
சொல்லி விளக்கியது தேங்காயாலே
நீதியாம் அதையறிய நெற்றிக் கண்ணென்று
நினைவாகச் செல்லுமிடம் பொட்டு வைத்தார்
பேதமாய் விரிந்தியங்கும் ஆறறிவும்
பீடமாய் ஓரிடத்தில் நின்றறிய
நாவு ஒலி நைவேத்தியம் நறுமணங்கள்
நல்ல சந்தனப் பூச்சு இவையாம்

என்னும் பாடல் அமைகிறது.

இறைநிலை அறிவு, அகத்தவத்தாலே தான் சாத்தியம், அப்படி அறிந்தவர்கள் கூட எடுத்துக்கூற உவமையின்றி முட்டி மோதி நின்றனர் என்பதனை,

முந்தையோர்கள் அகத்தவத்தால்
முற்றுணர்ந்த போதிலும்

மொழிவதற்கு உவமையின்றி
முட்டி மோதி நின்றனர்

என்னும் பாடல் வழி அறியலாம். மேலும்,

மனமதுவே அகத்தவ ஆக்கினை துரியம் இவற்றில்
மலைப்பின்றி எட்டு முதல் பதிமூன்று வரைஆம்
மனம் சக்திகளம் நிற்க நாலுமுதல் ஏழாம்
மறைபொருளர்ம் சிவகளத்தில் ஒன்றுமுதல் மூன்றாம்

என்னும் பாடல் வழியும் அறியலாம்.

இறைவன் இருக்குமிடம்

நாபிக்கண் ணாசி நயன நடுவினுந்
தூபியோ டைந்துஞ் சுடர்விடு சோதியைத்
தேவர்கள் ஈசன் திருமால் பிரமனும்
மூவரு மாக உணர்ந்திருந் தார்களே (2000)

என்று ஆருயிர் உறையும் சீரிய உலகத்துக்குத் தொப்புள், கண், நாசி, புருவ நடு, உச்சித் தூபி என்று ஐந்திடத்தும் உயிருக்கு உயிராய் அறிவுக்கு அறிவாய் ஒளி கொடுத்தருளும் சிவத்தைச் சிந்தை தெளிந்தார் உணரும் பாங்கை எடுத்துக்காட்டுவார்.

பஞ்சேந்திரியங்களுக்கு உடம்பு நிலைக்களம். இதில் தீ, ஞாயிறு, திங்கள், நிலம், புனல், அனல், காற்று, வெளி ஆகிய எட்டும் சிவம் வெளிப்பட்டு நின்றருளும் நிலைக் களன்களாகிய திருவுருவங்கள். இதை, தானே வெளியொளி தானிருட்டாமே" என்று திருமூலர் கூறுவார்.

இறைவனைச் சிலை உருவில் காட்டுதல் கூடாது.

கலையுணர்வால் மெய்ப்பொருளாம் கண்காணா ஒன்றினைக்
கண்காது மூக்கு முகம் குணம் உருவம் புகுத்தியே
சிலையுருவில் காட்டிச் சொன்ன கதைகளில் மயங்கி நாம்
சிக்கியுள்ள வரைஉண்மைநிலை விளங்காது
உணர்வோம்

என அறிவாராய்ச்சி நிலையில் மெய்ப்பொருள் காட்சியைக் காண வேண்டுமேயன்றி இறைவனைச் சிலை உருவில் காணுதல் கூடாது.

குருநாதர் வழி அறிதல்

இறை அறிவை அறிய வேண்டுமெனில் குருநாதர் வேண்டும் என்பதை உணர்த்தும் மகரிஷி அவர்கள் இறைவனே குருவாக வருவான் என்றும் அனைத்தையும் அறிவிப்பவனும் அவனே என்றும் குறிப்பிடுவார். அவரவர் காண அவரவர்கட்கு அறிவிக்கும் குரு அவனே. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளில் யோகச் செயல்முறைகளை உரைப்பவன்; தீக்கைகள் அளிப்பவன்; சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கின்ற சீரினை அறிவிப்பவன்; நாம் எதனை நினைக்கின்றோமோ அதுவாக மாறுவோம். எனவே சிறந்த குருவினைப் பெற நாம் தியானத்தில் ஈடுபடவேண்டும் என்பார். குரு பிறவியின் முன்வினைகளை அறுத்து மெய்ப்பொருளை அடையச் செய்வார். மெய்ப்பொருளாக நிற்பது பூஜ்யம். அதுவாக நிற்பவர் குரு. அனைத்தையும் விளக்குபவர் குருவே என்பதைத் தெளிவாக விளக்குவார்.

காலமும் இறையும்

அதிவிரைவாய் தன்னிருக்கச்
சூழ்ந்த முத்தும் பேராற்றல் இதுவே பிரம்மம்
இதன் அழுத்தம் விட்டுவிட்டு இயங்குவதே அதிர்வுகாலம்
இவ்வதிர்வின் மூலமே அனைத்து மாற்றங்கள் ஆம்
பிரபஞ்சத்தில்

பேராதாரப் பெருவெளியின் தன்னிறுக்க அழுத்தம் விட்டுவிட்டு அழுத்துகின்ற அதிர்வுதான் இருக்கிறது. இதனால் காலம் என்பது இறைநிலையின் தன்மைகளில் ஒன்றாக அமைகிறது. காலம் என்ற அதிர்வுத் தொடரால் பேரியக்க மண்டலத்தில் எப்பொருளிலும் அதன் தன்மைகளில் வளர்ச்சிகளில் விளைவுகளில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இந்த நியதி தவறாது செயல் புரிகின்ற காலத்தைக் 'காலன்' என்றும் 'இயமன்' என்றும் கூறுகின்றோம் என்பார்.

இறையைக் காண

எண்ணத்தைத் தியானத்தால் பயன்படுத்தி
எங்கும் நிறை பூரணத்தின் தன்மைகண்டு
மண்ணுலகில் ஏழ்மை பஞ்ச பாதகத்தை
மாற்றி உயர்வாய் வாழும் வழியைக் காட்டும்

இறை என்பது அனுபவம். அதனை அகத்தில்தான் உணரமுடியும்.

இகம் முழுதும் பொய் எனவே ஏய்ந்து உணர்ந்தால் ஆங்கே
மிகவளர வந்த அருள் மெய்யே! அகம்நெகிழப்
பாரீர்! ஒருசொல் படியே அனுபவத்தைச்
சேரீர் அதுவே திறம் (உடல் மெய்யறிவு-10)

அத்துவிதமாய் நிற்பவன் இறைவன்

இறைவன் தான்வேறு உயிர்கள் வேறு என்றில்லாமல் அவற்றோடே உடனாக இணைந்து இருப்பவன் என்பதையே அத்துவிதமானவன் என்ற தொடர் உரைக்கும். "மனிதனுக்குள் இறை" எனவே மனிதனே இறை என்னும் தத்துவத்தைச் சித்தர்கள் உரைப்பர். சிவவாக்கியர்,

என்னிலே இருந்த வொன்றை யானறிந்த தில்லையே
என்னிலே இருந்த வொன்றை யாவர்காண வல்லரோ
என்னிலே இருந்தவொன்றை யானறிந்து கொண்டபின்
என்னிலே இருந்திருந்து யானுணர்ந்து கொண்டேனே

என்றும் எனக்குள் நீ உனக்குள் நான் இருக்குமாறதெங்ஙனே? என்றும் வியந்து பாடுவார். தேகத்திற்குள்ளே தெய்வத்தைக் காணலாம் என்றும், நடமாடும் கோயில் என்றும் ஞானியர் கூறுவதும் இக்காரணம் பற்றியே. மகரிஷியும்

மரத்தினிலே விழையும் அந்த வித்துவினில் மரம்போல்
மனிதனுக்குள் தெய்வம் அந்ததெய்வத்திற்குள் மனிதன்

என்றும்

அவனில்தான் நீ உன்னில்தான் அவன்

என்றும் பாடுவார்.

இறைவனாம் குருநாதரின் வழி உண்மையினை அறியுங்கால் மனிதனின் உணர்வுநிலை எவ்வாறிருக்கும் என்பதை,

அட்டாங்க யோகமும் ஆதாரம் ஆறும் அவத்தை ஐந்தும்
விட்டேறிப் போன வழிதனிலே வியப்பொன்று கண்டேன்
வட்டாகிச் செம்மதிப்பா லுண்டு மகிழ்ந்திருக்க
எட்டாத பேரின்பம் எனை விழுங்கி இருக்கின்றதே

என்று தான்பெற்ற அனுபவத்தைப் பேரின்பத்தைக் கூறுவார். மகரிஷியும், அனைத்து ஆசைகளும் அற்றுப்போக, அறிவின்ப ஊற்றாய்ப் பெருகப் பெற்றதை,

தெய்வமே அறிவாக தானாகத்
தெரிந்த பின்னர் தன்முனைப்பு அற்றுப்போச்சு
ஐயுணர்வும் அறுகணமும் நலம் விளைக்கும்
அருவிலையாய் மாறிப் பேரின்ப மாச்சு
மெய்யறிவால் இரசவாதம் குருவால் இட்ட
மீறிய பொன் பொருளாசை அற்றுப்போச்சு
பெய்யும் மறை உணவளிக்கப் பேராதாரப்
பெரும்பொருளே அறிவின்ப ஊற்றாய்ப் பெற்றேன்
(பா. 1559)

எனும் பாடலால் தெரிவிப்பார். இதுவே கிடைத்தற்கரிய பேறு. இப்பேற்றைப் பெறுதலே மனித வாழ்வின் குறிக்கோளாகும்.

இறைநிலையை உணர்ந்தார்க்கு

இறைநிலையை உணர்ந்தவர்கள் இறப்பதில்லை. அவர்களது உடலில் இருந்து உயிர் பிரிவதில்லை. இதனை,

இறைநிலையை உணர்ந்தார்க்கு மரணமென்பதில்லை
எனினும் போற்றலுள்ள இயற்கை நீதிகள்
மறைவதுண்மை மண்ணிலுள்ள பிறந்தவர் எல்லாரும்
மற்றபடி ஞானியர்கட்கு மரணம் எவ்வாறென்றால்
உறைய உயிர் உடலில் ஆம்! உயிர்சமாதி ஒன்று!

என்னும் பாடல் வரிகள் உணர்த்தும்.

இவற்றின் வாயிலாக, தெய்வம் உண்டு; அத்தெய்வமும் ஒன்றே; உயிர்களின் உள்ளிருக்கும் உயர் பேராற்றலே அது; அறிவே தெய்வமாக விளங்குகின்றது; உடலே இறைவன் உறையும் இடம்; இறையைக் குருநாதரின் வழியறியலாம்; இறை என்பது அனுபவம்; அதனை அகத்தில் உணருதல் வேண்டும்; அனைத்திலும் உடனாய் நின்று அவற்றோடு இணைந்து இருப்பவன்; அவனை அறிந்தவர்கட்கு இறப்பென்பதில்லை; சமாதி கூடுவர் எனும் மிகமிக அற்புதமான இறையியல் கருத்துகளை மகரிஷி அவர்கள் சமுதாய மக்கள் நலம்பெறும் பொருட்டு வழங்கியுள்ளதை நாம் அறியலாம்.

மகரிஷியின் மதக் கோட்பாடு

முனைவர் மா. இராமச்சந்திரன்

ஆன்மீக நெறிகளை அவனிக்கு அளித்த அருளாளர் பலர் அவதரித்த புண்ணிய பூமி என்ற பெருமை பாரதநாட்டுக்கு உண்டு. கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை பரந்து விரிந்துள்ள இந்த ஞானபூமியில் பல ஞானியர்கள் தோன்றியுள்ளனர். தொன்மைக்காலத்தில் மட்டுமன்றி அண்மையிலும் பல ஞானிகளைப் பாரதம் உலகுக்கு அளித்துள்ளது. இன்றும் இங்கு அருள்நெறி வளர்க்கும் ஆன்றோர் பலர் உள்ளனர். இந்த வகையில் தமிழகத்தில் தோன்றி அருள்நெறியை வளர்த்துக் கொண்டிருப்பவர்களுள் வேதாத்திரி மகரிஷி அவர்கள் குறிப்பிடத்தக்கவர் ஆவார். மதம், மனிதன், சமூக உயர்வு போன்ற அவருடைய சிந்தனைகள் உலக மக்கள் பலரை அவர்பால் ஈர்த்துள்ளன. ஆன்மீக நெறியிலும் அறிவு நெறியிலும் மனிதனின் சிந்தனையை வளப்படுத்தி, மனித வாழ்வைச் செம்மைப்படுத்தும் அருள்நெறியாளராக மகரிஷி விளங்குகின்றார். உலக மக்கள் யாவரும் ஒன்றுபட்டதோர் ஒப்பற்ற சமுதாயத்தை உருவாக்கும் வகையில் அவருடைய ஆன்மீகச் சிந்தனைகள் உள்ளன. மதம் தொடர்பாக மகரிஷி கொண்டிருக்கும் கருத்துகளைத் தொகுத்துத் தருவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இறைநிலை

எல்லாவற்றையும் உணரும் அறிவாற்றல் மனிதனுக்கு உண்டு. இந்த அறிவு அடிப்படையில்தான் மனிதன் கடவுளைக் கண்டுணர்ந்தான் என்பது மகரிஷியின் கருத்து. இந்தப் பிரபஞ்சத்தை ஒழுங்காக இயக்கிக் கொண்டிருக்கிற ஆற்றல்தான்

தமிழ்த்துறைத் தலைவர், ஆதித்தனார் கல்லூரி, திருச்செந்தூர் – 628216.

பிரம்மம் என்றுணர்ந்தவன் மனிதன். இந்தப் பிரம்மம்தான் நிலம், நீர், நெருப்பு, விண், காற்று என்று விரிந்துள்ளது. அதுவே எல்லா உயிர்களாகவும் உள்ளது. மனிதனாகவும் உள்ளது. மனிதன் வாழ்ந்த சூழலுக்கு ஏற்பக் கடவுளர்களை உருவாக்கினான். அதன் அடிப்படையிலே பலமதங்களும் தோன்றின.

உலகில் உள்ள மதங்கள் யாவும் தங்கள் இறைவனைப் பற்றி விளக்கி உள்ளன. இறைவனின் அளவிடற்கரிய ஆற்றலையும் வெளிப்படுத்தியுள்ளன. ஆனால் அவற்றால் மக்களிடையே விகற்பங்களே வளர்ந்துள்ளன என்பதை மகரிஷி உணர்ந்து கொள்கிறார். அதற்கேற்ற வகையில் இறைநிலையையும் வகுக்கிறார். மதம் ஒன்று என்று அவர் எண்ணியது போலத் தெய்வமும் ஒன்றாகத்தான் இருக்க வேண்டும் என்று தெளிவுறுத்துகிறார். இந்த இறைநிலை எல்லையற்ற ஆற்றல் உடையது என்று உணர்த்துகிறார். ''தத்துவ ஞானிகளாலும் விஞ்ஞான அறிஞர்களாலும் உணரப்பட்ட தெளிவின்படி இப்பிரபஞ்சத்திற்குத் தோற்றுவாயாக, மூல நிலையாக இருந்த ஒன்றே இறைநிலை'' (மதமும், மனிதனும், ப. 24) என்று உணர்கிறார். மேலும், ''இயற்கைக்கு மூல ஆற்றலாக மனித இனம் கண்டு கொண்டுள்ள பேராற்றலைத் தெய்வம்'' (மதமும், மனிதனும், ப. 75) என்று உரைக்கின்றார். ''இந்தத் தெய்வநிலை ஒன்று போதும்'' என்று உணர்த்துகிறார். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற திருமூலரின் கொள்கையும்; 'ஒன்று பரம் பொருள்' என்ற பாரதியின் கொள்கையும் இணைந்ததாக மகரிஷியின் இறைக்கோட்பாடு உள்ளது.

''இறைநிலையானது உருவமற்ற ஒரு ஆற்றலாகவே இருப்பதனால் இது இல்லாத பொருளோ இடமோ இருக்க முடியாது. ஒரே ஆற்றலானது இவ்வாறாக அனைத்துப் பொருள்களின் ஊடேயும் நிரம்பி அதற்கு ஏற்றவாறு இயக்கச் சிறப்புகளையும், விளைவுகளையும் அளித்துக் கொண்டே இருக்கிறது. இதனைக் கால, தூர, வேகம், பருமன் என்ற நான்கு கணக்குகளுக்கு உட்படுத்தி எல்லை கட்டி உணர்த்த முடியாது'' என்று அவர் கூறுவது இறைவனின் இயல்பைக் காட்டுகிறது.

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, காலம் என்னும் நான்கு வளங்களை உடையவனாக இறைவன் விளங்குகிறான். இந்த இறைவன் எங்கும் நிறைந்துள்ளான். ''எந்தப் பொருளிலும்,

எந்த இடத்திலும், எந்த இயக்கத்திலும் எந்தவித விளைவுகளிலும் என்னைக் காணவல்லவன் எவனோ, அவனை விட்டு நான் நீங்குவதில்லை. என்னை விட்டு அவன் நீங்குவதில்லை" என்பது பகவத்கீதை வாசகமாகும். இதன் அடிப்படையில், "இந்த இறைத் துகள்கள் இல்லாத எப்பொருளுமில்லை. இயக்கங்களும் இல்லை'' என்று கூறுகின்றார். ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு மதிப்புக் கொடுப்பதற்கு இந்த இறைக் கொள்கை வழிவகுக்கிறது. தூணிலும் துரும்பிலும் இருப்பது இறைவனுடைய இயல்பு. இவ்வாறு எல்லாப் பொருள்களிலும் இறைநிலை உள்ளது என்று உணர்பவர்கள் பொருளுக்குரிய மதிப்பைத் தர முனைவர். இதைத்தான், ''இறைநிலை விளக்கத்தோடு ஒவ்வொருவரும் அதன் சிறப்பை எல்லாப் பொருள்களிலும் எல்லா உயிர்களிடத்திலும் உணர்ந்தால்தான் மனித நல வாழ்வு உயர்வடையும்" என்று கூறுகிறார்.

பயன்தரும் பக்தி நெறி

இந்த உலகிற்கு ஆதாரமாக விளங்குகின்ற இறைவனை அடையும் வழிமுறையாகப் பக்தி நெறி உருவாக்கப்பட்டது. பாமரனும் புரிந்து கொள்ளும் வகையில் கதைகளும், போதனைகளும் கொண்டதாகப் பக்திமார்க்கம் இருந்தது. காலப்போக்கில் மூடநம்பிக்கையை வளர்ப்பன என்றும் குற்றம் சாட்டப்பட்டன. ஆனால் மனிதன் உருவாக்கிய இவ்வழிமுறை அறிவாதாரத்தின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. பக்திநெறி புகட்டும் கதைகளில் கற்பனை இருக்கலாம். அதற்காக அவை கூறும் உண்மைகளை ஒதுக்கிவிட முடியாது. "அதிலுள்ள, வாழ்வுக்கு மேன்மை தருகின்ற உண்மைகளை உணர்ந்து நலம் தரக்கூடிய போதனைகளையும், சாதனைகளையும் பின்பற்றி வாழ்வதுதான் பக்தி வழியில் விளைகின்ற நற்பலனாகும்'' (மதமும், மனிதனும், ப.46) என்பது பக்திநெறி பயனுள்ள நெறி என்னும் மகரிஷியின் சிந்தனையைக் காட்டும்.

மதம்

மதம், மார்க்கம், சமயம் என்பன ஒரு பொருள் உணர்த்தும் சொற்களாகும். மனிதன் தெய்வம் என்னும் மெய்ப் பொருளைச் சார்தற்குச் சான்றோர்கள் கண்ட வழிமுறையே மதம் எனப்படும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்

என்பது வள்ளுவர் வாக்கு. இதற்கேற்ப வாழ்வாங்கு வாழ்பவனாக மனிதனை வளர்க்கும் கருவியாகவே மதங்கள் தோற்றுவிக்கப் பட்டன. சிந்தனை, செயல் ஆகியவற்றில் வேறுபாடு கொண்ட மனிதர்களை நல்வழிப்படுத்தி உய்விக்கச் செய்யும் நெறியாக மதம் விளங்குகின்றது. இதனால் மதம் மனிதன் வாழ்வுக்கு வழிகாட்டுவதாக உள்ளது. எனவே மதம் என்பது மனிதனுக்கு அவசியமாகிறது. இதைத்தான், ''இறையுணர்வையும், அறநெறியையும் இணைத்து மனித வாழ்வுக்கு வழிகாட்டும் ஆன்மீக விளக்கமே மதம்" (மதமும், மனிதனும், ப.31, 2002) என்னும் மகரிஷியின் கூற்று விளக்குகின்றது.

மதங்களின் தோற்றம்

உலக உயிர்களுள் அறிவுநிலையில் உயர்ந்தவன் மனிதன். ஏனெனில் அவனுக்குத்தான் ஆறாவது அறிவு உள்ளது. உயிர்களுள் உயர்ந்தவனாக இருந்தாலும் மனிதனுக்கும் வாழ்வில் பல சிக்கல்கள் எழுந்தன. புலன் மயக்கத்தாலும், பழக்கவழக்கத்தாலும் மனித வாழ்வில் பல இன்னல்கள் உண்டாயின. புலன் மயக்கத்தால் தடுமாற்றம் கொண்ட மனிதனின் வாழ்வு தடம் மாறிச் சென்றது. இத்தடுமாற்றத்தை நெறிப்படுத்த வேண்டும் என்ற சிந்தனை சிலர் உள்ளத்தில் எழுந்தது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் உண்டான சிக்கலில் உழல்கின்ற மனிதர்களை உய்விக்கும் வழிமுறையை அவர்கள் நாடினர். இவ்வழிமுறையே மதமாக உருப்பெற்றது. "நீண்ட காலமாக அகன்ற உலகத்தில் அநேக இடங்களில் வசித்து வருகின்ற மக்களுடைய அனுபவங்களைத் திரட்டி, ஒவ்வொருவருக்கும் கொடுத்து அனைவரும் பயன் பெற்று வாழ ஒரு தெளிந்த, சிக்கலில்லாத வாழ்க்கை வழி மனித குலத்திற்குத் தேவைப்பட்டது. இந்தப் புனிதமான தேவையை நிறைவு செய்ய உருவாகிய கருத்துத் தொகுப்பும், செயல்விளக்கமும் கொண்டதுதான் மதம் என்னும் வாழ்க்கை நெறி" (மதமும், மனிதனும், ப.19, 2002) என்னும் கூற்று இதனைக் காட்டும். மனித ஆற்றலையும் இயற்கையின் ஆற்றலையும் விட மேம்பட்ட சக்தி ஒன்று இருப்பதைப் பலரும் உணர்ந்தனர். இவ்வாறு மனிதனையும் இயற்கையையும் கட்டுப்படுத்தும் ஆற்றல்மிகு

சக்தியை இறையெனப் போற்றினர். இந்த இறையை வழிபடும் வகையில் தங்களுக்கு உகந்த வழி முறைகளை உருவாக்கினர். இதனால்தான் இந்து, புத்தம், சமணம், கிறிஸ்தவம், இசுலாம் என்று பல மதங்கள் உலகில் தோன்றின. இவை அனைத்தும் அடிப்படையில் ஒரே தத்துவத்தைத்தான் குறிக்கின்றன. ஆனாலும் காலப்போக்கில் சிதறிப் போய்ப்பிரிந்தன என்பதை, "மனிதன் என்ற தோற்றத்தில் சிறப்பு நிகழ்ச்சியாக உள்ளது அறிவும் மனமும் ஆகும். இவ்விரண்டு தத்துவங்களும் புலன்களைக் கொண்டு உணர முடியாத மறைபொருட்கள் என்றாலும் மனித உணர்வுக்கு எட்டாதவை அல்ல. உலகம் தோன்றியதிலிருந்து இன்று வரையில் எண்ணிறந்த அறிஞர்கள் இந்தத் தத்துவங்களைப் பற்றி ஆராய்ந்தார்கள். அவர்கள் ஆராய்ச்சியில் ஒரு துல்லியமான முறையை வகுத்துக் கொள்ள முடியவில்லை. இதனால் பல அறிஞர்கள் உணர்ந்த ஒரே தத்துவம் காலத்தினால் பலப் பலவாக வேறுபாடுடையன போலக் கருத்தில் சிதறுண்டு போயிருக்கிறது" (மதமும், மனிதனும், ப.21) என்று மகரிஷி தெளிவுறுத்துகிறார்.

மகரிஷியின் மதக்கோட்பாடு

பிரம்மத்தை அறிந்த மாமனிதன் அதனை விளக்கு வதற்காக மேற்கொண்ட முயற்சியே மதம் ஆனது. மனிதன் கேட்ட கேள்விகளுக்குரிய வகையில் ஞானியர் கொடுத்த விளக்கத்தின் அடிப்படையில் மதமும் பெருகலாயிற்று. சைவம், வைணவம், சாக்தம், சௌரவம், கௌமாரம், காணபத்யம் என்று மதங்கள் பிரிவதற்கு மனிதன் கேள்விகளும் ஞானியர்களின் விளக்கங்களும் காரணமாயின. இம் மதங்கள் மனிதனை வளர்ப்பதற்காகவே தோன்றியனவாகும். இவ்வாறு தோன்றிய மதங்கள் யாவும் இறைவழிபாடு, அறநெறி என்னும் இரண்டு அமிசங்களைக் கொண்டவையாகவே உள்ளன.

"மனித வாழ்வின் வளம் பெருக்கி, நலம் காத்து, துன்பம் நீக்கி, இன்பத்தை அனுபவித்து அறிவின் வளர்ச்சி பெறத்தக்க உரிய ஒரு போதனையும், சாதனையும் ஒன்றிணைந்த பயிற்சி தான் மதம்" (மதமும், மனிதனும், ப.39) என்பதே மகரிஷி மதத்திற்குத் தரும் விளக்கமாகும். இவ்வாறு மனிதனின் வளம் பெருக்கு வதற்காக வகுக்கப்பட்ட மதங்கள் மனிதனிடையே வேறுபாட்டை வளர்த்தன. மதத் தலைவர்களின் மாண்பற்ற செயல்களினால்

மக்களிடையே மனக்கசப்பு உண்டானது. இது வாழ்க்கைப் பண்பாட்டைச் சிதைத்தது. மக்கள் நலத்தைச் சீரழித்து, 'உலக மக்கள் யாவரும் ஒன்று' என்ற உணர்வைத் தகர்த்தது. இந்த நிலை மாற வேண்டும். எல்லோரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்ற எண்ணம் மகரிஷியின் மனத்தில் உதித்தது. இதன் அடிப்படையில் 'மதம் ஒன்று போதும்' என்ற கோட்பாட்டை உருவாக்கினார். மதங்கள் என்ற பெயரில் மனிதர்களைப் பிளவுபடுத்திக் கொண்டிருப்பதை மாற்றி, 'ஒரே மதம்' என்ற பெயரில் மக்களிடையே ஒற்றுமையை வளர்க்க வேண்டும் என்று எண்ணுகின்றார். வாழ்க்கைக்கு மதம் அவசியம், அது மதமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். "தெய்வத்தின் பெயரால் அழைக்கப்படும் மதம் ஒன்று கூட இல்லை; அதை ஏற்படுத்தியவர்கள், வாழ்க்கை ஒழுக்கங்களைத் தொகுத்தவர்கள் பெயர்களைக் கொண்டு தான் மதங்களின் பெயர்கள் வழங்கப் பெறுகின்றன". (மதமும் மனிதனும், ப.75) என்பது அவர் கண்ட முடிவு. இதனால் தான் மதங்களிடையே வேறுபாடுகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. 'இதனை மாற்ற வேண்டுமானால் மதத் தலைவர்கள் எல்லோரும் ஆழ்ந்து சிந்தித்து ஒரு மதத்தை உருவாக்க வேண்டும்' என்று அறைகூவல் விடுக்கிறார். இந்த நிலை உருவானால்தான் தெய்வத்தின் பெயரால் பிளவு வளர்க்கும் வஞ்சகர்களின் வலையிலிருந்து உலகம் மீள முடியும்.

உலகப் பொது மதம்

இந்தக் காலத்திற்கு ஏற்ற வகையில் ஒரு மதம் வேண்டும். இது மனித சமுதாயத்தை உயர்த்துவதாக இருக்க வேண்டும். இதுவரையில் தோன்றிய எல்லா மதங்களின் உட்கருத்துகளையும் இணைத்துக் கொண்டு எம்மதத்திற்கும் முரண்பாடு இல்லாத மதமாக இம்மதம் இருக்க வேண்டும். கர்ம யோகம் தான் இத்தகு உலகப் பொது மதமாக இருக்க முடியும். கர்ம யோகம் என்பது நாம் செய்யும் செயலினால் இறைவனைக் காண்பது என்பதாகும். இத்தகைய செயல்களில் தான் சமுதாயம் வளர்ச்சி பெறும்.

கோயில்களும் சிலைகளும்

இச்சையைத் தொழிலாகக் கொண்டது ஆன்மா. பேராசை, சினம், கடும்பற்று, முறையற்ற பால்கவர்ச்சி, உயர்வு தாழ்வு மனப்பான்மை, வஞ்சம் என்னும் ஆறு குணங்களில்

ஆன்மா சிக்குண்டு தவிக்கிறது. இந்த நிலை அழியப் பெற்று மெய்ப்பொருளாகும் சிந்தாமணி நிலையை ஆன்மா அடைய வேண்டும். அதற்கு ஒருமைநிலை (Concentration) அவசியமாகிறது. இந்த ஒருமை நிலையைத் தருவனவாகவே கோயில்களும் சிலைகளும் உள்ளன.

புலன்களிலேயே இயங்கிப் பழகிய அறிவைப் புலன்கள் மூலமாகத்தான் முதலில் நிலைநிறுத்த முடியும். இதற்காகவே 'உருவம், ஒலி என்ற இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதில் மனத்தை இயக்கச் செய்ய வேண்டும்' என்று சான்றோர் கண்டனர். இத்தகு உருவம், ஒலிகளின் உறைவிடமாகவே கோயில்கள் விளங்குகின்றன. புலன் இன்ப உணர்வுகளில் ஈடுபடும் மனிதனின் உயிர் ஆற்றல் குறைகின்றது. இவ்விழப்பை ஈடு செய்யும் சீவகாந்த சக்தியினைத் தரும் இடமாகவே கோயில்கள் விளங்குகின்றன. முறையாக அமைக்கப்பட்ட கோயில்கள் ஆற்றல் தரும் களங்களாகவே உள்ளன.

அறிவாட்சித் தரத்தை உயர்த்திக் கொள்ளும் வழிமுறையாகவே சிலை வணக்கம் உள்ளது. தான் விரும்பும் ஆற்றலைத் தரும் சக்தியின் உருவமாகவே சிலைகள் உருவாயின. அவற்றின் முன்னின்று மனத்தை ஒருநிலைப்படுத்தி மீண்டும் மீண்டும் நினைக்கும் போது ஜீவ காந்தமாக அச்சக்தி வெளிப்பட்டு ஆட்கொள்கிறது. இந்த உளவியல் விஞ்ஞானமே சிலை வழிபாடு ஆகும். எனவே, வாழ்வின் வெற்றிக்குத் தேவையான சம்பத்துகளைப் பெறுவதற்கு உருவ வழிபாடு அவசியமாகும். ஆனால் சிலை வணக்கத்தால் இறைநிலையை அறிதல் என்பது இயலாததாகும் என்பதும் மகரிஷியின் கருத்தாகும்.

விழாக்களும் சடங்குகளும்

மதங்களின் சார்பாகப் பல விழாக்களும் சடங்குகளும் நடைபெறுகின்றன. இவையெல்லாம் சமுதாய ஒருங்கிணைப்புக்காக ஏற்படுத்தப்பட்ட நடைமுறைகளாகும். மனிதன் சமுதாயமாகக் கூடி வாழும் வாழ்வைச் சீரமைக்கும் செயல்முறைகளாகவே சடங்குகளும் கோயில் திருவிழாக்களும் உள்ளன. சடங்குகளை மூடப்பழக்கம் என்று ஒதுக்கிவிடக் கூடாது. காலப்போக்கில் சமுதாயத்தில் சில மாற்றங்கள் தோன்றின. அக்காலக்கட்டத்தில் சில சடங்குகள் வேண்டாதவையாகக் கருதப்பட்டன.

அப்படிப்பட்ட வேண்டாத சடங்குகளை நீக்குவதில் தவறில்லை. மனிதனிடம் ஊறிப் போய்விட்ட சில சடங்காச்சாரங்களைக் களைவது எளிதான செயல் அன்று. அது தனிமனிதனால் முடியாது. இத்தகைய செயல்களைச் செய்வதற்கு உலகச் சமுதாய சேவா சங்கம் தேவைப்படுகிறது. வேண்டிய சடங்குகளை வைத்துக் கொண்டு தேவையற்ற சடங்குகளை நீக்கி மனித சமுதாயம் முன்னேற வேண்டும்.

முடிவுரை

மனிதனின் அறியாமையும் அதனால் ஏற்படும் விளைவுகளும் துன்பங்களுக்குக் காரணமாக அமைந்தன. இத்துன்பங்களைப் போக்கி நலம் பெறுவதற்கு இறைநெறிக் கொள்கையினைச் சான்றோர்கள் வகுத்தனர். பல்வேறு பட்ட அனுபவங்களால் பல இறைக்கொள்கைகள் தோன்றின. இதனால் பல மதங்களும் உருவாயின. இறைச் சக்தியினைப் பெறும் இடங்களாகக் கோயில்கள் உருவாயின. அங்குள்ள சிலைகள் பல்வேறு ஆற்றல்களை மனிதனுக்கு அளிப்பனவாக உள்ளன. சடங்குகளும் விழாக்களும் சமுதாய நலன் கருதியே உருவாக்கப்பட்டன. காலத்திற்கேற்ற வகையில் இச்சடங்குகளில் மாற்றம் செய்வது சமுதாய நலன் பயக்கும். பக்தி நெறியைப் பேணுவது மனிதனுக்கு உயர்வைத் தரும். பல்சமயக் கோட்பாடு சமுதாயத்தில் பல பிணக்குகளை உருவாக்கியது. இப்பிணக்குகள் தீர்ந்து உலகச் சகோதரத்துவம் பெருக வேண்டும். இதற்கு உலகப்பொது மதம் ஒன்று அவசியமாகிறது. அந்த உலகப் பொது மதமாகக் கர்மயோகமே (தொண்டுநெறியே) இருக்க முடியும் என்பது மகரிஷியின் கொள்கையாகும்.

மகரிஷி உணர்த்தும் இறையும் சமயமும்

முனைவர் எம். பரமசிவம்

அருள்தந்தை தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஞானக் களஞ்சியமாகத் திகழும் சான்றோர். இறை குறித்தும், இறை வழிபாடு குறித்தும், மதங்கள் குறித்தும், சமுதாய அமைப்புக்குறித்தும் அப் பெருமகனார் கூறும் கருத்துரைகள் உலகோரைச் சிந்திக்க வைக்கின்றன. சமயக் காழ்ப்புகள் மறைய, ஏற்றத்தாழ்வுகள் நீங்க, உயர்வு தாழ்வுகள் இல்லாத நிலை மலர, இறையை உணர்ந்து போற்ற அச் சான்றோர் மொழியும் அருளுரைகள் மனித சமுதாயத்திற்குக் கிடைத்த பொற்குவியலாகும். அப் பெருமகனார் இறை குறித்தும் மதங்கள் குறித்தும் வெளிப்படுத்தியுள்ள கருத்துகளை எண்ணிப் பார்ப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

அருள் தந்தை அவர்கள் 'அவர் சொன்னார்; இவர் சொன்னார்' என்று எதையும் நம்பும் தன்மையர் அல்லர். வழிவழி வந்த தத்துவங்கள், முன்னோர் வரையறுத்த கோட்பாடுகள் என்று தம்மை அவற்றிற்கு அடிமைப்படுத்திக் கொள்பவர் அல்லர். எதனையும் அறிவியல் நோக்கில் ஆராய்ந்து உண்மை கண்டு தெளிபவர். ஏனெனில் அவர் ஒரு விஞ்ஞானியாவார்.

மெய்ஞ்ஞானிகள் விஞ்ஞானத்தை ஏற்பதில்லை; விஞ்ஞானிகள் மெய்ஞ்ஞானிகள் சொல்பவற்றை ஒப்புவதில்லை. அருள் தந்தையவர்கள் அறிவியல் கற்றுத் தேர்ந்து மெய்ஞ்ஞானமும் கைவரப் பெற்ற அருட்கடல். எனவேதான், உலகோரைச் சிந்திக்க வைக்கும் உயர் கருத்துகளை அவரால் வழங்க முடிகிறது.

தமிழ்விரிவுரையாளர், மலேசிய புத்ரா பல்கலைக்கழகம், மலேசியா.

மகரிஷியின் இறை தத்துவம்

'இறை' என்பது என்ன? இறையை உணர என்ன வழி? இறை வழிபாடு யாது? சமயங்கள் ஏன் தோன்றின? அவற்றின் தோற்றம் வளர்ச்சி யாவை? சமயங்களின் வழிநின்று உண்மையான இறைத் தத்துவத்தை உணர முடியுமா? சமயம், உலக மக்கள் மனத்தைப் பண்படுத்தி, உண்மையைத் தெளிவித்து ஒரிறை என்னும் உண்மையின் கீழ் உலகை ஒன்றுபடுத்த முடியுமா? என்பன போன்ற வினாக்களை எழுப்பித் துல்லியமான விடைகளையும் கூறித் தெளிவை ஏற்படுத்துகிறார்.

மகரிஷியின் இறைக் கொள்கை

மகரிஷி அவர்கள், சமயங்கள் தத்தம் போக்கில் செயல்பட்டால் உலக மக்கள் அனைவருடைய மனங்களையும் பண்படுத்தி உலகில் அமைதி நிலைக்கச் செய்ய முடியாதென்னும் கருத்துடையவர் என்பதால், இறைநம்பிக்கை அற்றவர் என்றும், சமயமே கூடாது என்னும் கொள்கை உடையவர் என்றும் எண்ணி விடக்கூடாது.

மற்றவர்கள் கூறியதைக் கேட்டோ, எழுதி வைத்துள்ளதைப் படித்தோ இறையை உணர முடியாதென்பது அவர் கருத்து. மதங்கள் கூறும் சடங்குகள், கோயில் வழிபாடுகள் மூலமும் இறைத்தத்துவத்தை உள்ளது உள்ளவாறு உணர முடியாதென்பதும் அவர் கூறும் கருத்தாகும். இது குறித்து மகரிஷி அவர்கள் கூறியுள்ள கருத்துகள் சிந்திக்கத் தக்கனவாகும்.

"இறை உணர்வு இல்லையென்றால் அறநெறி சரியாக விளங்காது. இந்த இறை உணர்வை எப்படிப் பெறுவது? அது எங்கே இருக்கிறது என்று கேட்டால், உணர்ந்தவர்கள் பலர் உணர்ந்தவாறு எழுதி வைத்திருக்கிறார்கள்; வார்த்தைகளால் விளக்குகிறார்கள்; நேரடியாகவும் சொல்கிறார்கள். யாருமே அவர்கள் சொல்லியதைக் கேட்டோ எழுதி வைத்ததைப் படித்தோ அதை அவர்கள் எவ்வாறு உணர்ந்திருக்கிறார்களோ அதே போல் உணர முடியுமா? உணர்ந்து கொண்டார்களா என்றால் இல்லை.

அந்தக் குறைபாடுதான் இன்று உலகில் உள்ளது. முறையான அகத்துவப் பயிற்சியால் மன அலைகளின் விரைவைக் குறித்து அந்த அமைதியிலே அறிவையறிந்து மேலும் அவ்வரூபமான

அறிவே தான் தெய்வநிலை என்று தானே அதுவாகிப் பெறுகின்ற அனுபவ நிலையிலே உணரப் பெறுவதுதான் இறையுணர்வு" (இறையுணர்வு அறநெறியும், 2003:4) என்பது தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் விளக்கமாகும்.

மகரிஷி அவர்கள் தம் கருத்துகளை உரைநடை வாயிலாகக் கூறுவதோடு, கவியாகவும் சுருங்கக் கூறி விளங்க வைக்கும் பெற்றியினர். இறைத்தத்துவம் குறித்த அவர்தம் கருத்துக் கோவையாக இச்செய்யுள் விளங்குகிறது.

வித்தையென்றால் பிரம்ம வித்தை உணர்வு ஆகும்
வேதாந்தம் பேசுவதால் கிட்டிடாது
அத்துவித மாகி அவன் எங்கு மாகி
அணுமுதலாய் அண்டங்க ளாகித் தாங்கும்
சுத்த வெளி சூனியமாய் நிறைந்த தன்மை
சூட்சுமமாய் அனுபவமாய் அறிந்து நிற்கும்
தத்துவத்தின் முடிவான தானே யான
தனையறிந்த வித்தையது தர்க்கம் வேண்டாம்
(இறையுணர்வும் அறநெறியும், 2003:4)

இறையை உணர்வது என்பது கற்றோ கேட்டோ பெறும் அறிவு அன்று. பகுத்தறிவால் உண்மைகளைத் தெளிந்து அனுபவபூர்வமாக உணர்வதே இறை உணர்வாகும் என்பதை மகரிஷி அவர்கள் தெளிவுபடுத்துகிறார். அதனால்தான் கட்டி வைக்கும் கோயில்கள், வெற்று வழிபாடுகள், வழிவழி நடத்தப்பெறும் சடங்குகள் இறையனுபவத்தை ஏற்படுத்துவன அல்ல என்கிறார்.

தன்னையறிந் தின்பமுற வெண்ணிலாவே – ஒரு
தந்திரம்நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே

என்னும் வள்ளலார் மொழிகள் இங்கு நினைவுக்கு வருகின்றன. ஓர் உண்மையை, தத்துவத்தைச் சொந்த அனுபவங்களாலேயே தெளிய முடியும். 'எட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது' என்பது போல, வெறுமனே கேட்கும், படிக்கும் கருத்துகள் அனுபவம் உணர்த்துவனபோல் உண்மையை உணர்த்துவதில்லை.

இறையென்று சொல்லும், நினைக்கும் ஒவ்வொரு முறையும் அறத்தையும் வலியுறுத்துகிறார். அன்பையும் எடுத்துக்கூறத் தவறுவதில்லை. அன்பே சிவம் என்பதை அழுத்தந்திருத்தமாக உணர்த்துகிறார்.

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு (குறள். 80)

என்னும் திருக்குறள் இங்கு நினைவுகூரத்தக்கது. இறைநெறியின் முதல் கூறே அறநெறிதான் என்பது இதனால் விளங்குகின்றது. அறம் சாராத சடங்குகள், வழிபாடுகள், நடவடிக்கைகள் இறையுணர்வை ஏற்படுத்தா.

ஆயிரம் குற்றங்கள் செய்துவிட்டு இறையை வழிபட்டால் பாவம் தீர்ந்து விடும் என்பதெல்லாம் ஏமாற்று வேலையாகும்; அஃது இறைவனுக்கு ஏற்படுத்தும் களங்கமாகும். வன்முறையால் செல்வம் சேர்த்து வசதிகள் பெருகியவுடன் ஒரு கோயில் கட்டிவைத்து விட்டால் இறைவன் மன்னித்து விடுவான் என்பதெல்லாம் பைத்தியக்கார உளறல்கள்; பகுத்தறிவுக்கு ஒவ்வாத வெற்றுரைகள்.

தத்துவங்கள் உணர்த்தலும் உணர்தலும்

"அலையலையாய் இயங்குகின்ற மனத்தை நிலையாக்கி நேரடியாகத் தானே அதுவாகி, அனுபவபூர்வமாக உணரக் கூடியது தெய்வ நிலை" (இறையுணர்வும் அறிநெறியும், 2003: 5) என்னும் மகரிஷி அவர்கள்,

"வேதாந்தப் பாடல்களாலும், மற்ற மத நூல்களின் போதனைகளாலும் தெய்வத்தின் மீது பக்தியும், மதிப்பும், அதன் இருப்பையும் சிந்தனையிலுயர்ந்த பெரும்பாலோர் பெறலாம். ஆயினும் அதே தெய்வநிலை எவ்வாறு அறிவாக இயங்குகிறது என்று உணர்ந்தால்தான் மனித அறிவிலே அன்பும் கருணையும் நடுநிலை நீதி உணர்வும் ஏற்படும். மனிதனை மனிதன் மதித்து உதவி வாழும் அறிவில் உயர்வும் பண்பும் உண்டாகும்" (இறை உணர்வும் அறநெறியும், 2003: 30, 31) என்று தெளிவுபடுத்துகிறார்.

அன்பும் கருணையும்

நமது உடலைப் பாதுகாக்கச் செய்யும் செயல் இறை வழிபாடு என்று உணர்த்தும் மகரிஷி அவர்கள், அதேபோல் மற்றவரும் பாதுகாக்க நாம் செய்யும் செயலும் உதவியும் இறை வழிபாடுதான் என்ற தெளிவையும் பெற வேண்டுமென்கிறார். (மேலது, 43) இதனைக் கொண்டு பார்க்கும்போது உலகில் உண்மையான இறைவழிபாடு நடைபெறுகிறதா என்று ஐயுற வேண்டியுள்ளது. குத்து, வெட்டு, கொலை, குண்டுவீச்சு, கட்டடங்கள் தகர்ப்பு, ஒரு நாட்டில் அத்துமீறி நுழைந்து

மற்றொரு நாடு போரிட்டல் போன்றவற்றால் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் பலியாதல் போன்ற கொடுமைகள் உலகை நடுங்க வைக்கின்றன. உலகில் எத்தனையோ மதங்கள் உள்ளன; வழிபாட்டுத் தலங்கள் இருக்கின்றன. சமயத் திருவிழாக்களுக்கும் குறைவில்லை. ஆனால், அறம் மீறிய அன்பு ஒதுங்கும் செயல்கள் நடந்த வண்ணமே உள்ளன. அதிலும் மதப் போர்கள் மனத்தைப் புண்படுத்துகின்றன.

இறையை உணர உருவாக்கப்பட்ட மதங்கள், வாழ்வில் அமைதி சேர்க்க வகுக்கப்பட்ட சமய நெறிகள் அந்தக் குறிக்கோளுக்கு மாறான விளைவையே ஏற்படுத்துகின்றன என்பதால், அவற்றில் ஏதோ குறைகள் இருப்பதாக எண்ணத் தோன்றுகிறது.

இறையும் மதமும்

மகரிஷி அவர்கள் மதங்கள் குறித்து ஆராய்ந்து ஆழ்ந்த சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளார். ''இறை உணர்வும், அறநெறியும் இணைந்து மனித வாழ்வுக்கு வழிகாட்டும் ஆன்மிக விளக்கமே மதம் என்ற சொல்லுக்கு விளக்கமாகு''மென்பது அவர்தம் கருத்தாகும். இது குறித்து மிக மிக விரிவாக ஆராய்ந்த மகரிஷி கூறியுள்ள முடிவுரை சிந்திக்கத் தக்கது.

"இறைஉணர்வும் அறநெறியும்தான் மதங்களின் அடிப்படை நோக்கமாகும் என்பதனை விரிவாக ஆராய்ந்துவிட்டோம். இறையுணர்வின் முதற்பகுதி பக்திவழியாகவும், பிற்பகுதி ஞான வழியாகவும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஞானவழியில் இறை உணர்வு என்பது மிக முக்கியமான கருத்து. இவ்வளவு காலமும் மதங்களில் பலவும் இறையுணர்வுபற்றிப் போதனையைக் கொடுத்து, சாதனையைச் செய்துவந்த போதிலும் மதத்தலைவர்களில் பெரும்பாலானவர்கள் தெளிவாக இறையுணர்வு பெற்றிருக் கிறார்களா என்று தெரிந்து கொள்ள முடியவில்லை" (மேலது, 51) என்று கூறும் மகரிஷி அவர்கள் "இறைநிலையை உணர்ந்திருந்தால் இரண்டு அடையாளங்கள் வெளிப்படையாக எல்லோருக்கும் தெரியவரும். ஒன்று ஒரே கடவுளை வணங்குபவராக இருப்பர்; இரண்டாவதாக மற்ற மதங்களோடு, மத போதனைகளோடு எவ் வகையிலும் கருத்து வேறுபாடு கொள்ள மாட்டார்" (மேலது, 52) என்கிறார்.

மதம் குறித்து இன்று நிலவும் குறைகள் மறைந்து, புனித வாழ்க்கைநெறி சீர்திருந்த ஐந்து நெறிகளை வகுத்துள்ளார் மகரிஷி.

1. மனித மனம் சிறப்புற அறிவின் நுண்மையோடு வாழத் தனக்கு வேண்டிய தேவைகளை முடித்துக்கொள்ள அவரவர் உழைப்பைப் பயன்படுத்த வேண்டும்.

2. பிறருடைய மனம், உடல் வருந்தாத ஒரு விழிப்பு நிலையோடு நமது வாழ்க்கைச் செயல்களை அமைத்துக்கொள்ள வேண்டும்.

3. உணவுக்காக உயிர்கொலைக் கூடாது.

4. பிறருடைய வாழும் உரிமையையும், அவர்கள் ஈட்டி வைத்திருக்கும் பொருட்களையும் நாம் மதித்துக் காத்து அவருக்கு உதவி செய்ய வேண்டும்.

5. துன்பப்படும் உயிர்களுக்கு நம்மாலான உதவியைச் செய்யத் தயாராக இருக்க வேண்டும். இந்த ஐந்தொழுக்கங்களையும் நினைத்துப்பார்த்தால் இதுவே அறநெறி என்ற ஆன்மீக அரண்மனை ஆகும் (மேற்படி, 54) என்று மொழிகிறார்.

மதச் சண்டைகள் ஒழிந்து ஒரிறையைப் பற்றி உலகம் அமைதி வழியில் உய்ய, மதம் மேற்கண்ட ஐந்து நெறிகளை உணர்த்துவதாய் அமைய வேண்டும் என்கிறார் மகரிஷி. ''மனிதனுக்கு இனி ஒரு மதம் போதும். மதத்திற்கு அடிப்படையாகத் தெய்வநிலை ஒன்று போதும். அதை அடைவதற்குத் தெய்வம் ஒன்று போதும்" என்னும் அவர், மதத் தலைவர்கள் இதற்கொரு முடிவு காண வேண்டுமென்கிறார் (மேற்படி, 76). தெய்வம் ஒன்று என்பதைப் பட்டினத்தாரும் ''ஒன்றென்றிரு'' என்று போதித்துள்ளார் என்பது இங்கு எண்ணத்தக்கது.

முடிவுரை

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் இறை குறித்தும் மதம் குறித்தும் கூறியுள்ள கடல் போன்ற விளக்கங் களிலிருந்து ஓரிரு துளிகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

வேதாத்திரி மகரிஷியின் வாழ்வியல் இறைநெறி

பேராசிரியர் பா. வல்சகுமார்

"வறுமை ஏன் ஏற்படுகிறது" என்ற முற்போக்கான, வாழ்வியலுக்கான சிந்தனையோடும், அதற்கு விடை காணும் முயற்சியோடும், சிறு வயது முதலே வாழ்ந்து வந்தார் வேதாத்திரி மகரிஷி. பின்னாளில் உயிர்சக்தியைப் பாதுகாப்பதன் மூலம் வயோதிகத்தைத் தள்ளிப்போடும் சித்தர்கள் கண்ட நெறியான காயகல்ப பயிற்சியை அளித்து வரும் மகரிஷி ஒரு சிறந்த மனிதகுல பாதுகாப்பாளர்.

உலக மக்கள் அனைவரும் அமைதியாக வாழ வழி செய்திட வேண்டும் என்ற நோக்கத்துடன் மகரிஷி அவர்கள் 1958இல் உலக சமுதாய சேவா சங்கம் ஒன்றை ஏற்படுத்தியது இவருக்குச் சமுதாயத்தின் மீதுள்ள அக்கறையை நமக்கு எடுத்துக்காட்டுகிறது. "தனி மனிதனிடம் அமைதி நிலவும் போதுதான் அது விரிந்து குடும்பம், சுற்றம், ஊர், உலகு என எல்லா இடத்தும் அமைதி நிலவும் என்பது" இச்சேவா சங்கத்தின் குறிக்கோள் ஆகும். மகரிஷி அவர்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளாக உலகச் சமதானத்தை நிலை நிறுத்துவதைத் தன் கொள்கையாகக் கடைபிடித்து வருகிறார்.

இறை உணர்வும், அறநெறியும்

"உள்ளதை உணர்ந்தால்தான் நல்லது கெட்டது தெரியும், அப்போதுதான் நல்லதைச் செய்யலாம் அல்லாததை விட்டு விடலாம். அந்த உள்ளதை உணரும் உணர்வுதான் இறைஉணர்வு" என்னும் விளக்கம் சிந்தித்து ஏற்கத்தக்கது.

பேராசிரியர், தலைவர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் கல்லூரி, பாபநாசம், நெல்லை மாவட்டம்.

இறையுணர்வு என்பது அறிவின் முழுமைப் பேறாகும். இத்தகைய அறிவில் தான் மனத்தூய்மையும், வினைத்தூய்மையும் ஒன்றிணைந்து அறநெறி இயல்பாக மலரும் என்கிறார் மகரிஷி. மிக அருமையாக உணர்ந்து சொல்லப்பட்ட கருத்து இது.

அன்பும் கருணையும்

நமது உடலைப் பாதுகாக்கச் செய்யும் செயல் இறை வழிபாடு. அது போல் மற்றவரும் பாதுகாக்க நாம் செய்யும் செயலும் உதவியும் இறைவழிபாடுதான் என்ற தெளிவை நாம் பெற வேண்டும். அன்பு என்பது ஈர்த்துப் பிடித்துக் கொண்டிருப்பது. அந்த அன்புக்கு மேலாக எல்லாம் நலமாக இருக்க வேண்டி உதவி செய்வது கருணை. அன்பை உணர்ந்தால் கருணை பிறக்கும்.

உயிர் மையத்தின் அறிவாக இருப்பதுதான் மனமாக இருக்கிறது என்ற உண்மையை உணரப்பெறும் அறிவுதான் இறைவனாக இருக்கிறது. இதனை வள்ளுவர்

ஐயப்படாது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோடு ஒப்பக் கொளல்

என்கிறார்.

இந்த விளக்கத்தைச் சான்றாக எடுத்துக் கொண்டு பயிற்சியின் மூலமாகத்தான் இறைநிலையை உணர முடியும் என்ற உண்மையை மிக அழகாக விளக்குகிறார். மகரிஷி.

இறையுணர்வு என்பதைச் சரியாகப் பெற்று விட்டோமானால் நமது வாழ்க்கையே அறநெறியாக அமையும். இறையுணர்வும் அறநெறியும் இணைந்த வாழ்வில்தான் தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் எல்லா வளங்களும் அமையும் என்கிறார் வேதாத்திரி மகரிஷி.

மகரிஷி போற்றும் பெண்மை

அன்பு, பண்பு, பரிவு, தியாகம், பாசம், பொறுமை, விட்டுக்கொடுத்தல் போன்ற மதிப்புமிக்க பண்புகள் ஒரு சேர வாய்க்கப் பெற்றவள் பெண். அதனால் தானோ என்னவோ இறைவன் குழந்தைகளைப் பெற்றெடுக்கும் பெரும் பாக்கியத்தைப் பெண் இனத்திடம் ஒப்படைத்தான். இறைத்தத்துவமாகிய கடவுளுக்கு அடுத்தநிலையில் அமையும்

பெண்மையை, அதன் பெருமையை உணர்ந்தும் மதித்தும் வாழ வேண்டும் என்று பெண்ணின் பெருமையைப் பாடிய பாரதியை விட ஒருபடி மேலே சென்று பெண்மையைப் போற்றும் மகரிஷி அவர்களை வாழ்த்தி வணங்குவோம்.

பெண்ணடிமை

ஆணுக்குப் பெண் சரிநிகராக விளங்குகின்ற இக்காலத்திலும் பெண்ணடிமை முற்றிலும் நீங்கியது என்று கூறமுடியாத நிலைதான் உள்ளது. பெண்ணடிமையை முற்றிலும் நீங்கப் பாடுபட்டவர்கள் எத்தனையோ பேர். வேதநாயகம் பிள்ளை, திரு.வி.க., பாரதியார், பாரதிதாசன், கவிமணி போன்றவர்களைக் குறிப்பிட்டுக் கூறலாம். இன்றைக்கு இவர்களைக் காட்டிலும் ஒருபடி மேலே சென்று பெண்ணடிமை நீங்கிப் பெண்கள் அனைத்து உரிமைகளும் பெற்று வாழ வேண்டும் என்று அமைதியாகக் கூறிச் சமுதாயத்தைத் திருத்த முயல்கின்றார் அருட்தந்தை மகரிஷி அவர்கள். 'பணமதை ஈந்தோ பெற்றோ' என்று வரதட்சணைக் கொடுமையையும் சாடுகிறார் மகரிஷி. 'உடன் கட்டை ஏறுதல்' என்ற சதி மற்றொரு கொடுமையான செயல். 'ஆண்கள் இறந்து விட்டால் பெண்கள் உடன்கட்டை ஏற வேண்டும் என்ற சட்டத்தை மீண்டும் கொண்டுவருவதாக இருந்தால், மனைவி இறந்தால் அவள் கணவனும் உடன்கட்டை ஏற வேண்டும் என்ற சட்டம் வர வேண்டும்' என்று கூறிச் சமயச் சான்றோர்களைத் தலைகுனிய வைத்தார் நம் மகரிஷி. கற்பைப் பற்றி ஆணுக்குக் கவலையில்லை. பெண்கள் மட்டுமே அதை ஒழுங்கென்று போற்றுகின்றார் என்று மகரிஷி சாடுகின்றார்.

பெண்ணுரிமை

பெண்ணடிமையை ஒழிப்பதற்குப் பெண்ணுரிமையை வளர்ப்பதே நல்வழியென்று நம்பினார் மகரிஷி. மகரிஷி அவர்கள் "இறைத் தத்துவமாகிய கடவுளுக்கு அடுத்த நிலையில் அமையும் சிறப்பை உடையது பெண்மை" என்று போற்றுகின்றார்.

காதல் செய்வதற்கும், காதலித்தவனையே திருமணம் செய்வதற்கும் பெண்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும் என்கிறார் மகரிஷி. காதல் மணத்திற்குப் பச்சைக் கொடி காட்டுகின்றார். பெண்களுள் பொருள் வரவு அற்றோர்

பெற்றோர் விருப்பப்படி திருமணம் செய்து கொள்ளும்படி அறிவுரை கூறுகின்றார்.

பெண்ணினத்திற்கு அடிமை நிலை நீங்கி உரிமை வேண்டும் என்று உரிமைக் குரல் கொடுக்கிறார் மகரிஷி.

உறவு முறையைப் பாராட்டும் வகையில் அன்னையர் தினம், தந்தையர் தினம், குழந்தைகள் தினம், கணவர் தினம் என்று உலகம் முழுவதும் கொண்டாடுகின்றனர். ஆனால் 'மனைவியர் தினம்' என்று ஒரு நாட்டில் கூட கொண்டாடுவதில்லை. 'மனைவி நல வேட்பு விழா' நடத்த வேண்டியது ஆண்களின் கடமை என்று உணர்த்துகின்றார். ஆகஸ்ட் 30ஆம் நாளை 'மனைவி நல வேட்பு நாளாக' மனவளக்கலை மன்றங்களில் நடத்தி வருவது போற்றுவதற்குரிய செயலாகும்.

பெண்களுக்குச் சமுதாயத்தில் சம உரிமை வழங்க வேண்டும் என்றும் பெண்களுக்குக் கல்வி, வேலைவாய்ப்பு, மரபு வழி உரிமைகள், அரசியல் மற்றும் சமயத் துறைகளில் சமமாக நடத்துதல் வேண்டும் என்றும், பொருளாதார வலுவை நிலை நாட்டும் விதத்தில் அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் பெண்களுக்காகக் குரல் கொடுக்கும் மகரிஷி அவர்களைப் போற்றி வணங்க வேண்டும்.

பொதுவுடைமைக் கோட்பாடு

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி இந்த நூற்றாண்டின் மகத்தான ஆன்மீக அறிவியல் ஞானி. அருளார்ந்த பெருங் கருணையும், அறிவார்ந்த செழுஞ்சிந்தனையும், தவஞ்சார்ந்த தூய நல்லமைதியும் ஒன்றாகக் கலந்து இயங்கும் பெருங்கடல். சாதியால், சமயத்தால், மதத்தால், மூடப்பழக்க வழக்கங்களால், பணத்தால், ஆதிக்கப் போட்டிகளால் தனிமனிதர்களும், சமூகங்களும் நாடுகளும் தத்தமக்குள் முரண்பட்டுக் கொண்டு, தம் வாழ்க்கையைத் தாமே நாசமாக்கி அழித்துக் கொண்டு - 'வாழ்தல்' என்பதன் அர்த்தமே தெரியாமல் சிதைந்து கொண்டிருக்கும் இன்றைய சூழலில், உலக அமைதியை நோக்கி மானுடப் போற்றலை அழைத்துச் செல்லும் இயற்கைப் பேராற்றலாக ஒளிகாட்டி உயிர்ப்பளிக்கும் குருவாக எழுந்தவர் மகரிஷி.

இன்றைய மானுட சமூகத்தின் பல்வேறு கொடுமைகளுக்கும், அழிவுகளுக்கும் காரணமாக இருப்பது நமது பொருளாதார அமைப்பு. பொருளுடைமையும், சொத்துடைமையும் மனிதரால் உருவாக்கப்பட்டவை. மகரிஷி அவர்களின் பொருளாதாரக் கோட்பாட்டைக் குறிப்பாக, பொதுவுடைமைப் பொருளாதாரக் கோட்பாட்டை அறிமுகம் செய்வது இக்கட்டுரையின் நோக்கம்.

பொருளாதார ஏற்றத் தாழ்வு

ஒரு சமூகத்தின் நல வாழ்வை நிர்ணயிப்பதில் மிகக் குறிப்பிடத்தக்க பங்கை வகிப்பது பொருளாதார அமைப்பாகும். ஓரிடத்தில் பணக்குவிப்பும், மற்றோரிடத்தில் வறுமையும் நிலவும் போது சமூகத்தின் சீர்நலம் அழிவுறுகிறது. செல்வன், ஏழை என்று இரு வர்க்கங்களாக மனிதர் பிளவுபடுகிறார்கள். பொருளாதார ஏற்றத்தாழ்வின் விளைவாக அருட்தந்தை அவர்கள் 1. பட்டினி 2. நோய் 3. பகை 4. வஞ்சம் 5. பஞ்சமா பாதகம் 6. ஏமாற்றுதல் 7. கடன் 8. இல்வாழ்வில் மனமுறிவு 9. கல்லாமை 10. பிச்சை 11. தேவையற்ற பொருள் தோற்றம் 12. நல்வாழ்விற்கான பொருள் உற்பத்திக் குறைவு ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார்.

பொருளாதார அமைப்பும், உழைப்பும்

சமூக இயங்கியலின் அடிப்படை, உழைப்பும் உழைப்பாளர்களும்தாம்; உழைப்புதான் பொருளாதார அமைப்பை நிர்ணயம் செய்யும் ஆற்றலாக இருக்க வேண்டும். உழைப்பு சாராத - உற்பத்தி சாராத - வணிகம் என்பது சமூகத்தில் மேலாதிக்கம் பெறுகிறது. சொத்துரிமையும், வணிகமும் "சமூகத்தின் பதர்கள்" என்பார் மகரிஷி.

மூலதனப் பொருளாதாரம்

நம்முடைய பொருளாதார அமைப்பை "மூலதனம்" என்ற தவறான கருத்தாக்கத்தால் நிர்ணயிக்கப்படும் போக்கு உருவாகிவிட்டது. மூலதனம் என்பது தனியார் உரிமையாக அமையும் போது கீழ்க்காணும் வகையில் சீரழிவுகள் ஏற்படும் என்கிறார் மகரிஷி.

1. சுயமுயற்சி / சுயஉழைப்பு இல்லாமல் போகும்
2. பிறருடைய உழைப்பைச் சுரண்டும் நிலை உருவாகும்.
3. பணம் என்பதே வாழ்வை இயக்கும் ஆற்றலாக மாறிவிடும்.

மூலதனப் போராட்டம்

மூலதனம் இட்டுத் தொடங்கப்படும் எவ்வகைத் தொழிலும், அத்தொழிலிலிருந்து கிடைக்கும் வருவாயும், மூலதனத்தின் விளைவுப்படைப்பாகக் கருத்து வடிவம் பெறுகிறது.

1. மனிதருக்கிடையே போட்டி, பகை
2. ஒழுக்கமில்லாத பொருள் குவிப்பு நெறி
3. ஆடம்பரம் X வறுமை என்ற சமூகப் பிளவு நிலை
4. பிறர் உழைப்பைச் சுரண்டும் செயல் தன்மை

"மூலதனமே, அரசை, மதங்கள் தம்மை முறை மாற்றிவிட்டுள்ளது, சிந்திப்பீரே" என்கிறார்.

தொழில்களும், பொருள் உற்பத்தியும்

அடிப்படைத் தேவைக்கான பொருள்களை உற்பத்தி செய்வதற்கான உண்மையான மூலதனமாக இருப்பது பூமியும் உழைப்பும் மட்டுமே.

பண்டங்கள் அனைத்திற்கும் மூலம் பூமி
பாடு ஒன்றே விளைவுகளைக் கொய்யும். சேர்க்கும்

என்று மிக அழகாகக் கூறுகிறார் மகரிஷி. இயற்கை விளைவுகளை வாழ்வின் வளமாக்கும் செயல்தான் தொழில் என்றும் கூறுகிறார் மகரிஷி. 'பணம்' என்ற குறியீடு சமூக வாழ்வின் மனிதவாழ்வின் - தரநிலையைக் காட்டும் அளவுகோலாகி விட்டது.

பணப்பொருளாதாரம்

மகரிஷி, "காசு என்ற கருவியினை ஒழித்துவிட்டால், கடமையிலே வழுவாமல் மக்கள் வாழ்வார்" என்கிறார். எல்லோரும் ஒன்றுபட்டு 'பணம்' என்ற அரக்கனை ஒழித்து விடவேண்டும் என்கிறார்.

வணிக அமைப்பு

சமூகத்தின் சமன்மைச் சீரமைப்பு சிதைந்து, ஏற்றத் தாழ்வுகளும் போட்டி பொறாமைகளும் மிகுவதற்குக் காரணம் என்று தனிமனித வணிக அமைப்பைக் கருதுகிறார் மகரிஷி அவர்கள். ஒரு நல்ல பொருளாதார அமைப்பு என்பது - மக்கள் நலம் சார்ந்த, பொருளாதார அமைப்பாக இருக்க வேண்டு மாயின், உழைப்புதான் அங்கே தலைமையிடம் வகிக்க வேண்டும்.

கூட்டுறவுப் பொருளாதாரம்

தொழிலும், வணிகமும் கூட்டுறவு முறையிலேயே நடைபெற வேண்டுமென்பது மகரிஷி அவர்களின் கொள்கை. பொருள்களைப் பதுக்குவதும், பதுக்குவதனால் ஏற்படும் விலையேற்றம், வறுமை, பொருள்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத அவலம் ஆகியன அறவே நீங்கும். ஒவ்வொரு கிராமத்திலும் கூட்டுறவு அமைப்பு இருக்க வேண்டுமென்று கனவு காணுகிறார் மகரிஷி.

பொது உடைமை

பொதுஉடைமைப் பொருளாதார அமைப்பு, உலகமெல்லாம் தழைக்க வேண்டும் என்று கனவு காணுகிறார் மகரிஷி அவர்கள். பொது உடைமைத் தத்துவம் என்பது, ஒரு பொருளாதாரச் சமன்பாட்டு நெறி மட்டுமல்ல, அது ஒரு சமூக நல வாழ்வுத் தத்துவம் என்பதை அருள்தந்தை அவர்கள் மிக அழுத்தமாக மனதுள் கொண்டிருக்கிறார்கள். அறநெறி சார்ந்த வாழ்வியல் - ஒற்றுமையும், பொது நலமும் சிறக்கும் வாழ்வியல் - அமைய வேண்டும் என்பது தான் அது என்பதை மகரிஷி அவர்கள் மிக அழுத்தமாக உணர்ந்துரைக்கிறார்கள்.

பொதுவுடைமை அமையும் முறை

மக்கள் நலம் சார்ந்த பொருளாதார அமைப்பு, பொதுவுடைமை வழியாகத்தான் அமைய முடியும் என்பதை அழுத்தமாக உணர்ந்துள்ள மகரிஷி அவர்கள், அதை உருவாக்குவதற்கான வழிமுறையையும் மிகத் தெளிவாகக் காட்டுகிறார்கள்.

'பணம் என்ற குறியீட்டின் ஆளுமை அகற்றப்பட்டு, ஆன்மீகமும் அறநெறியும் தழுவிய பொதுவுடைமைக்

கோட்பாட்டை, கூட்டுறவு முறையில் பொருளாக்கமும் பங்கீடும் நடைபெறும் தத்துவத்தை மிக அழுத்தமாக மகரிஷி அருளியுள்ளார்கள். அது மானுடப் பண்பாடாக மலரும் காலம் வரும்.

மனிதநேயம்

மனிதநேயம் என்பது பரந்துபட்ட பொருட்செறிவு மிக்க ஓர் உன்னதக் கோட்பாடு. மனிதநேயத்தை 'மனிதம்', 'மனிதத்துவம்', 'மானுடம்', 'மானுட நேயம்' எனப் பல பெயர்களால் குறிப்பிடுவதுண்டு. மனிதநேயம் என்பது தன்னுரிமை கொண்ட மனித மாண்பு, பகுத்தறிவு பெற்றுள்ள மனிதன் கொண்டுள்ள உண்மை, நேர்மை ஆகிய பண்புகளை மையமாகக் கொண்ட ஒரு 'மெய்யியல்' - தனிமனிதனை மேம்படச் செய்வது இதன் தலையாய நோக்கம்.

மகரிஷியின் தாரக மந்திரம்

மகரிஷி எழுதிய நூல்கள் யாவும் உலகச் சிந்தனையாளர்களின் கருத்துகளை எல்லாம் உள்ளடக்கியதாகவும் அவற்றோடு தனது அனுபவத்தையும் ஒரு முறையான அடித்தளத்தையும் அமைத்து உயர் தத்துவங்களையும் உன்னத இலட்சியங்களையும் உணர்த்துவனவாக உள்ளன. மனித குல மேம்பாடு மனித நேயம் என்ற தாரக மந்திரமே மகரிஷியின் வாழ்வும், வாக்கும் எனலாம்.

சீரிய நோக்கம்

வேதாத்திரியத்தின் பொது நோக்கம் 'துன்பத்திற்குரிய செயல்களைக் களைந்து அமைதியான வாழ்வுக்கு வழிவகுத்தல்' என்பதாகும். வேதாத்திரிய நோக்கங்களை நிறைவேற்ற ஏற்படுகின்ற தடைகளையும், சிக்கல்களையும் சுட்டி, ஏற்ற தீர்வுகளையும் முன்னிலைப்படுத்தியுள்ளார் மகரிஷி அவர்கள்.

"ஓர் இலக்கை, இலட்சியத்தை அடைய உருவாக்கும் உயர் திட்டங்களின் உயிர்த் தன்மையே வியூகம்" என்பதால் வேதாத்திரியம் உலகளாவிய நோக்கத்தை, நன்மையைக் கொண்டதாக உறுதிப் படுத்தலாம்.

தனிமனித வாழ்வின் பண்பாட்டிலும் வாழ்க்கைத் திறனிலும், வாழ்க்கை முறையிலும், சமுதாய ஒருமைப் பாட்டிலும் பல குழப்பங்கள் ஏற்பட்டுள்ளமைக்கு மனிதக் குணங்களே

காரணிகளாக உள்ளன. மனிதக் குணங்கள் யாவும் மனிதனது பழக்க வழக்கங்களிலிருந்து பிறந்தவை. பழக்கங்களை மாற்றினால் குணங்களை மாற்றி விடலாம் என்பது 'மனவியல்' தத்துவம்.

சுயக்கட்டுப்பாடு

மகரிஷியின் தாரக மந்திரத்தின் முக்கியமான கூறுகளுள் ஒன்று 'சுயக்கட்டுப்பாடு' என்பதாகும். தனிமனித சுதந்திரத்தை மதித்து, வாழ்க்கைத் தரம் உயரச் சிந்தித்துத் தொண்டு புரியக் கனிவுடன் வேண்டுகிறார். மகரிஷி வாழ்க்கை என்பது கடைசியாகப் பொய்ச் சேர வேண்டிய ஊர் அல்ல; செல்ல வேண்டிய திசை. ஐந்தொழுக்கப் பண்பாட்டின் விளக்கத்தை மகரிஷியின் நூலில் தெளியலாம்.

உலகுக்கு ஓராட்சி முறை

தனி மனிதன் சில சூழல்களில் குற்றவாளி ஆகின்ற நிலையை மாற்றி அவனுடைய தடமாற்றம், தடுமாற்றம் நீங்கிட ஜனநாயக முறையிலான ஒருலகப் பேரரசு - 'ஒருலக ஆட்சிக் குழு'வின் தேவையை இச்சமுதாயத்திற்கு முன் வைக்கிறார்.

சீர்திருத்த இறைநிலை – மதம்

"விஞ்ஞானக் கல்வி அறிவு" ஒன்றை வாழ்வின் ஊடே அறிய வேண்டுகிறார். இக்கல்வி விஞ்ஞானமும் தத்துவமும் இணைந்த ஒன்று. இதுவே மகரிஷியின் 'சீர்காந்த நிலை' பற்றிய விளக்கமாகும். மகரிஷியின் இறைநிலை பற்றிய கருத்துரை அவரது அகத்தத்துவத்தின் அகத்துணர்வாக வெளிப்படுவதுடன் இறையுணர்வு என்பது 'ஆன்மாவின் தூய்மையான நிலை' என்கிறது.

நேர்மையான வாழ்வியல்

தனிமனிதனைக் கட்டுப்படுத்தி, சமுதாயத்தைக் காத்து, துன்பம் தவிர்ந்த, நட்டம் தவிர்ந்த வாழ்க்கையை உருவாக்க நேர்மையானதொரு 'நீதிமுறையைத் தேர்ந்தெடுத்து அமுல்படுத்த பழக்கத்தின் வழியே நீதி என்ற அநீதி ஒழிக்கப்பட வேண்டும். 'ஒரே ஒரு வாழ்க்கை நல உரிமைச் சாசனம்' வழி ஓர் உலகப் பேரரசு வேண்டும் என்பது மகரிஷியின் விருப்பம்.

மனிதன் யார் எவர்

மனிதர்கள் இறைநிலைக்கும், செயல் வினைத் தத்துவமாகிய அறநெறிக்கும் உள்ள பிணைப்பை உணரச் செய்கின்றார் மகரிஷி.

'வேதாத்திரியம்' என்பது வாழ்க்கை 'தேவனாகும்' முயற்சி - அதுவே 'வானகம் இங்குத் தென்பட வேண்டும்' என்று சொன்ன பாரதியின் வாக்கின் பொருள். 'எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதும்', 'கொல்லா விரதம் குவலயம் எல்லாம் ஓங்கவும்', முன்னைப் பழமைக்கும், பின்னைப் புதுமைக்கும் வழிகாட்டும் மகரிஷியின் கருத்தியல் மனித நேயக் கருத்தியலாக எக்காலத்திற்கும் ஏற்றதாக நின்று நிலவும்.

வேதாத்திரி மகரிஷியின் இறையியல் சிந்தனைகளும் சுற்றுச்சூழல் பாதுகாப்பும்

முனைவர் இரா. சுதமதி

சமுதாயம் சீராகச் செயல்படவும் சமுதாயத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்படவும் சமுதாயத்தில் பல்வேறு அமைப்புக்கள் செயல்படுகின்றன. இவ்வமைப்புகளில் ஒன்றுதான் இறையியல் சிந்தனைகளை உள்ளடக்கிய சமயம் என்பது. சமயங்கள் உணர்த்தும் இறைக்கோட்பாடுகள் சமுதாயத்தை இறை வழிபாட்டில் ஈடுபடுத்துவதுடன் சமுதாயத்திற்குப் பயன் அளிக்கும் வகையில் செயலாற்றவும் செய்கின்றன. இவ்வகையில் வேதாத்திரி மகரிஷியின் இறையியல் சிந்தனைகள் சமுதாயத்திற்குச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தி வருவதைக் காணமுடிகிறது. இக்கட்டுரை வேதாத்திரியின் இறையியல் சிந்தனைகள் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பணியில் கொண்டுள்ள பங்களிப்பை ஆராய முற்படுகிறது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

சமுதாயத்தில் வாழ்கின்ற மக்கள் தம்மைச் சுற்றியுள்ள, இயற்கைச் செல்வங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்வதன் மூலம் தம்மை நோய் நொடியின்றிப் பாதுகாத்துக் கொள்வதைச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு எனலாம். இச்சுற்றுச்சூழல் பாதுகாப்பு சமுதாயத்திற்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை அரசும் தொண்டு நிறுவனங்களும் தன்னார்வ அமைப்புகளும் மக்களுக்குப் பெரிதும் வலியுறுத்தி வருகின்றன. வேதாத்திரி மகரிஷியும்

தமிழ்த்துறைத் தலைவர், கோவிந்தம்மாள் ஆதித்தனார் மகளிர் கல்லூரி, திருச்செந்தூர்.

இச்சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பணியில் தம் இறையியல் சிந்தனைகளை அமைத்து வருவது நோக்கற்குரியது.

வேதாத்திரியத்தின் இறையியலும் சுற்றுச்சூழலும்

மகரிஷி வேதாத்திரியின் இறையியல் கொள்கைகளும் அவரது சமூகச் சிந்தனைகளும் சுற்றுச்சூழலை மையமாகக் கொண்டு அமைந்துள்ளன. இயற்கைத் தத்துவமே அவரது இறையியல் சிந்தனைகளுக்கு அடிப்படை. இயற்கையின் ஆற்றலையும் இறைநெறியின் ஆற்றலையும் இணைத்துத் தம் ஆன்மீக அறிவியல் சிந்தனைகள் மூலம் அரிய கருத்துகளை வழங்கி வருபவர் மகரிஷி.

உலக மக்களின் வாழ்க்கை நலத்தை மையமாகக் கொண்டவர் மகரிஷி. மனிதகுலம் மனநிறைவோடும் அமைதியோடும் வாழ இயற்கையோடு இணைந்த வாழ்வே சிறந்த வாழ்வு எனக் கருதியவர் அவர். ஆகவே, மனிதன் தான் வாழும் சமுதாயத்தை நலமாக வைத்துக் கொள்ளச் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உணர்வோடு செயல்பட வேண்டும் என்பதைத் தம் இறையியல் சிந்தனைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

> **வான்கோள்கள், உலகம், உயிரினம் ஓரறிவு முதல் ஆறாம்**
> **வற்றாது பெருகிவரும் வளர்ச்சியே தன்மாற்றம்**
> **வற்றாது பெருகும் பேரண்டத்தில் உயிர்வகையில்**
> **வழுவாத செயல் விளைவு நீதியே கூர்தலறம் உண்மை,**
> **உண்மை**

என்பதே அவரது உயரிய சிந்தனை!

மகரிஷி இயற்கைத் தத்துவம்

"நில உலகில் ஒரு வித்திலிருந்து ஒரு மரம் தோன்றி வளர்ந்து பின் மறைந்து விடுதல் இயல்பு. இது போன்றே அண்டங்களும் பேரியக்க மண்டலத்தில் தோன்றி, வளர்ந்து அழிந்து போகின்றன. எனினும் எல்லையற்ற அருட்பேராற்றலான இறைவெளியிலிருந்து இடைவிடாமல் தோன்றிக் கொண்டேயிருக்கும் எண்ணற்ற கோள்களின் இயக்கமாகிய தெய்வீகக் காட்சியே பேரியக்க மண்டலம் ஆகும். பேரியக்க மண்டல இயக்கத்தை இயற்கையின் திருவிளையாடலாக உணர்ந்து பேரின்ப வாழ்வை அனுபவிக்க வேண்டிய இனம் மனித இனம்.

ஆகவே, மனிதன் தன்னைப் போலவே உயிருடல்களாக உலவி வாழும் உயிரினங்களின் மதிப்பையும் சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கும் மனிதகுலத்தின் தகைமையையும் உணர்ந்து மதிப்பளித்து ஒத்தும் உதவியும் கடமையாற்றி வாழ்தலே சிறந்தது'' என்று இயற்கையோடு ஒத்து வாழ வேண்டிய கடமையை வலியுறுத்துகின்றார் மகரிஷி. இத்தகைய இயற்கைச் சூழலையே அவர் தெய்வீகக் காட்சியாகக் காண்கின்றார்.

இயற்கையைப் புரிந்து வாழும் தன்மை மனிதனுக்கு இருந்தாலே சுற்றுச்சூழல் பற்றிய பாதுகாப்பும் உருவாகும் என்பதை மகரிஷியின் கருத்தால் அறியலாம். வேதாத்திரியின் பின்வரும் இறையியல் கொள்கை, இயற்கைத் தத்துவங்கள் மூலமாகச் சுற்றுச்சூழல் குறித்த பாதுகாப்புச் சிந்தனைகள் அவரது நூல்களில் மலிந்து நிற்பதைக் காணமுடிகிறது.

1. மனிதனும் அவன் சார்ந்த பொருட்களும்
2. இறைமையும் விஞ்ஞானமும்
3. இறைநெறியும் தூய்மையும்
4. இறைநிலையின் பெருமதிப்பு
5. நீராதாரமும் சுற்றுச்சூழலும்

இத்தலைப்புகளின் கீழ் மகரிஷியின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த சிந்தனைகள் இங்கே ஆராயப்படுகின்றன.

மனிதனும் அவன் சார்ந்த பொருட்களும்

இயற்கை தனது பரிணாம வளர்ச்சியினால் பிரபஞ்சத் திலுள்ள ஒவ்வொரு பொருளையும் மனிதனுக்கு நேரடியாகத் தந்துள்ளது. மனிதன் தனது தேவைகளையும் வேண்டியவற்றையும் சமுதாயத்தின் உழைப்பிலிருந்தும் ஒற்றுமையிலிருந்தும் பெற்றுக்கொண்டு வாழும் ஒரு சமூக விலங்கு ஆவான். அதுபோல, அவன் தயாரித்த எல்லாவிதமான பொருட்களும் சுற்றுத் தெளிந்த பலவகை அறிவும் உலகிலுள்ள எல்லா மக்களுக்கும் பரவுகின்றன. இதனால் மனிதன் தான் வாழும் நவீன சூழ்நிலைகளுக்கு ஈடுகொடுத்து வாழ்வதற்கு ஆன்மீகக் கல்வியைப் பெறுதல் அவசியம் என்று மகரிஷி குறிப்பிடுகின்றார்.

"ஐந்தறிவுள்ள உயிரினங்கள் வரை எல்லாம் இயற்கையின் வழியிலேயே வாழ்ந்து வருகின்றன. மனித இனம் மட்டுமே ஆறாவது அறிவைப் பெற்றுள்ளது. இன்றைச் சூழலில் மனித வாழ்விற்கான அத்தியாவசியப் பொருட்கள், பிற பொருட்கள் மற்றும் வாழ்க்கை வசதிகள் பெருக்கத்தால் அவற்றைப் பரவலாக விநியோகித்தலும் அதிகரித்துள்ளது. இன்றைய சமூகச் சூழ்நிலைகளும் முற்றிலுமாக மாறிவிட்டன. சிறப்பு மேம்பட்ட ஒரு வாழ்விற்குத் தற்கால வாய்ப்பு வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் நவீன கல்வி முறை சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டும். இதையே ஆன்மீகக் கல்விக்கான அடிப்படைத் தேவை" என்று மனிதன் வாழும் சூழலின் அவசியத் தேவைக்கு ஆன்மீகமே அடிப்படை என்பதை வலியுறுத்திக் கூறுகிறார் மகரிஷி.

ஆன்மீக உணர்வே மனிதனின் சுற்றுச்சூழலைச் சீராக்கும் என்பது அவர் கருத்து.

பொருள் தேவை முழுமை பெற, பாதுகாப் புடன் வாழ,
அருள்நெறியில் ஒழுக்கமுடன் அனைத்துல கும்மனிதன்
இருள் ஒழிந்து, இயற்கையதன் இனிமைநன் றாய்த்துய்க்க
பொருள்நிறைந்த ஒருலக அரசைப் பெற் றுய்வோம்

மனிதனின் வாழ்க்கை முழுமை பெற்று அருள்நெறியில் வாழ இயற்கை குறித்த பாதுகாப்பு உணர்வு தேவை என உறுதிபடக் கூறுகிறார் மகரிஷி.

தவிர மனிதன் தான் வாழும் சூழலில் தன்னைச் சுற்றியுள்ள உயிரினங்களைப் போற்றிப் பாதுகாப்பதும் அவனது இறைப் பண்புகளுள் இன்றியமையாத ஒன்று என்று மகரிஷி கூறுவது நோக்கத்தக்கது.

''மனிதனுக்கு ஆறாவது அறிவு அளிக்கப்பட்டு உள்ளதால் அவனது வாழ்க்கை அனுபவங்களையும் அறிவு வளர்ச்சியையும் கொண்டு பிற உயிருக்குத் துன்பம் உண்டாக்கும் தவறான செயல்களின் பொதுக் கருத்தைப் புரிந்து கொண்டு அறநெறியில் செயல்கள் புரிந்து கருமையத்தில் மேற்பதிவு செய்து அதைத் தூய்மையாக்கிக் கொள்ளலாம்" என்று கூறுகிறார் மகரிஷி.

ஆயினும் மனிதனைத் தவிரப் பிற உயிரினங்கள் ஒன்றையொன்று கொன்று வாழுதல் என்பது தேவையானது என்பதையும் அவர் கூறத் தவறவில்லை.

"பெரும்பாலான விலங்குகள் மற்ற விலங்குகளின் உடல் சதையைச் சாப்பிட்டு வாழ்வது தேவையானதும் வல்லமை உள்ள இயற்கையோடு ஒருங்கிணைந்ததும் ஆகும்" என்று உலக இயற்கை நியதி பற்றி அவர் கூறுவது இங்கு நோக்கத்தக்கது.

மனிதன் வாழும் உலகமும் அவன் உயிர் வாழத் தேவையான பொருட்களும் அனைவருக்கும் பொதுவானவை என்பதை மகரிஷி தமது அருளியல் கொள்கையின் மூலம் விளக்குகிறார்.

"எல்லா மனிதர்களுக்கும் ஒரே ஒரு நில உலகமே உள்ளது. நாம் இந்த ஒரு புவியை மட்டுமே நம் எல்லோரின் தேவைக்காகவும் பங்கிட்டுத்தான் ஆக வேண்டும். தண்ணீரில்லாமல் ஒருவரும் வாழ முடியாது. தனக்கே உரிமையென்று தண்ணீரை எவரும் எல்லை கட்டிக் கொள்ளவும் முடியாது. பூமியைச் சூழ்ந்து ஒரே ஒரு காற்றுதான் இருக்கிறது. இதையே எல்லா உயிரினங்களும் உள்ளே சுவாசிக்கவும் வெளியிடவும் செய்கின்றன. ஒரே ஒரு சூரியனில் இருந்துதான் எல்லா உயிரினங்களுக்கும் வெப்பமும் ஒளியும் கிடைக்கின்றன. இயற்கையின் இந்த நான்கு அடிப்படை அருட்செயல்களும் வாழ்க்கையில் உண்மையான செல்வங்கள் ஆகும்".

இதுவே மகரிஷியின் அருளியல் கொள்கை. இக்கொள்கை சுற்றுச்சூழல் பற்றிய அறிவை மனிதனுக்கு எளிமையுடன் உணர்த்தி நிற்பதைக் காணமுடிகிறது.

இறைமையும் விஞ்ஞானமும்

மகான்களின் அவதாரம் அத்திப் பூத்தாற்போல் வந்தாலும் அவர்களின் சிலரின் எண்ணங்களோ உலக மக்களின் நலத்தையும் சுற்றுச்சூழல் குறித்த அறிவியல் சிந்தனைகளையும் உள்ளடக்கித் திகழ்கின்றன. அவ்வகையில் கடந்த பல ஆண்டுகளாக இறைநிலையோடு அறிவியல் சிந்தனைகளையும் நிறைவாகச் சேர்த்து, தான் பெற்ற அதி உன்னத உண்மைகளை, இந்த உலகிற்கு எந்தவித அச்சமும் தயக்கமும் இன்றி எடுத்துக் கூறி வருபவர் வேதாத்திரி மகரிஷி அவர்கள்.

பகவத் கீதையின் சாரமும் நபிகளின் திருக்குர்ரான் நீதியும் புனித பைபிளின் போதனையும் உள்ளடக்கிய அவரது தெய்வீகக் கருத்துக்களில் பெரும்பான்மை இயற்கைத் தத்துவமும் அறிவியலும் கலந்து காணப்படுகின்றன.

"சுத்த வெளியான இறைவெளியே எல்லாம் வல்ல தெய்வம்" என்பது தத்துவஞானிகள் கருத்து. பிற்காலத்தில் வந்தவர்கள் அந்தப் பெருவெளியைச் 'சூன்யம்' என்றும் 'பூஜ்யம்' என்றும் ஒதுக்கினார்கள். ஆனால் முழுமையான பேராற்றலான இறைவெளியைச் 'சூன்யம்' என்றும் ஒதுக்காது 'முழுமுதற் பொருளான தெய்வம்' எனக்கொள்ளல் வேண்டும் என்பது மகரிஷியின் கருத்து. இந்தப் பேராற்றலைப் புரிந்து கொள்வோருக்கு ஆற்றலும் பேரறிவும் சொந்தமாகி விடும் என்பது அவர் சிந்தனை. சுருக்கமாகச் சொன்னால் "உடல் மன ஆற்றல்களை இயற்கையோடு முரண்படாத அளவிலும் முறையிலும் இணைத்து மனிதன் செயல்புரிய வேண்டும். இயற்கை ஆற்றலிடம் சரணடைந்து, அதற்கு ஒத்தபடி வாழ்வதே இறைவழிபாடு" என்று வலியுறுத்துகின்றார் அவர்.

இன்றைய காலக்கட்டத்தில் மனித குலத்தின் அறிவின் வளர்ச்சியிலும் பண்பாட்டு ஒழுங்கிலும் பொருள் உற்பத்தித் துறையிலும் விஞ்ஞானமானது பெருமை கூறிப் போற்றும் அளவுக்கு உயர்ந்துள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. எனினும் இந்த விஞ்ஞானம் சுற்றுச்சூழலைப் பாதிக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதையும் மகரிஷி அவர்கள் சுட்டிக்காட்டத் தயங்கவில்லை. இதனை அவர் பின்வருமாறு கூறுகிறார்.

"போட்டி, பொறாமை, பகை, போர் என்ற நான்கில் மனித இனத்தின் வாழ்வையே குலைத்துவிடும் அளவுக்கு விஞ்ஞானம் வந்து விட்டது. உயிர்க்கொலை, பிற உயிரின் உடலை உணவாகக் கொள்ளுதல், பிற உயிரின் வாழ்வின் சுதந்திரத்தை அழித்தல்" என்ற வன்முறைகளைத் தயக்கமின்றி அனைவரும் செய்து மகிழ ஆட்சி முறையில் சட்ட ஆதரவையும் விஞ்ஞானம் பெருக்கி விட்டது. இந்த நிலைமை மாறி மனித ஆற்றல், மனித குல வளத்துக்கே பயன்பட வேண்டுமானால் விஞ்ஞானத் துறைகள் அனைத்திலும் ஆன்மீகம் இணைக்கப்பட வேண்டும்".

அது மட்டுமின்றி, உலகம், நீர்வளம், காற்று, சூரியன் மற்றும் இயற்கை வளங்கள் அனைத்தும் இறையாற்றலின்

பரிணாமம் என்றும் இவையெல்லாம் உலகில் பிறந்த அனைவரது வாழ்வுக்கும் சொந்தமான மூலதனங்கள் என்றும் மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் பகை, பிணக்கு கொள்ளாமல் ஒத்தும் உதவியும் வாழ வேண்டும் என்றும் கூறித் தம் இறைநெறியோடு இயற்கை நெறியையும் அறிவியல் நெறியையும் இணைத்துக் கூறுவது அவரது சுற்றுச்சூழல் பாதுகாப்பு உணர்வு குறித்த சிந்தனைக்குச் சான்றாக அமைகிறது எனலாம்.

இறைநெறியும் தூய்மையும்

சுற்றுப்புறச் சூழலின் அடிப்படை தூய்மை. தூய்மையே சுற்றுச்சூழல் பற்றிய பாதுகாப்பு உணர்வை மனிதனுக்கு அளிக்கிறது. மகரிஷியும் தனது கோட்பாடுகளில் இக்கருத்தை வலியுறுத்தத் தவறவில்லை. அவரது சிந்தனைகள் மட்டுமன்றி அவரால் உருவாக்கப்பட்ட "உலக சமுதாய சேவா சங்கமும் 'தூய்மை' கொள்கையைப் பின்பற்றி வருவதை இன்றும் காணலாம்.

மனித வாழ்வின் மூன்றாவது படி நிலையாக மகரிஷி தூய்மைக்குச் சிறப்பிடம் கொடுக்கிறார்.

"தவமும் அறமும் இணைந்த ஆன்மீக வாழ்வின் மூலம் தூய்மை செய்து கொண்டு மனிதன் வாழும் அமைதிநிலை மூன்றாவது படியாகும்" என்பது அவரது சிந்தனை.

கருமையத்தைத் தூய்மையாக வைத்திருத்தலே சுற்றுச்சூழல் குறித்த பாதுகாப்புச் சிந்தனைக்கு அடித்தளமாக அமையும் என்பதை மகரிஷியின் கருத்துகளின் மூலம் அறிய முடிகிறது.

கருமையம் என்பது மனித உடலின் மத்தியில் அமைந்துள்ள ஜீவகாந்த அலையின் அழுத்த மையமாகும். இது மனிதனின் உடலுக்கு மத்தியிலே அமைந்திருந்த போதிலும் பிரபஞ்ச ரகசியங்கள் அனைத்தும் அடங்கிய ஒரு இறைநிதியாகும். இந்த கருமையம்தான் யோகியர்களால் மூலாதாரம் என்றும் அழைக்கப்படுகிறது.

"இந்தக் கருமையம் என்னும் தெய்வீகப் பெட்டகத்தை எவ்வளவு தூய்மையாக நாம் வைத்திருக்கிறோமோ அவ்வளவு அன்போடும் கருணையோடும் அமைதியோடும் நாம் வாழ

முடியும்" என்கிறார் மகரிஷி. இந்தக் கருமையத் தூய்மையே மனித வாழ்வில் இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் ஆகிய அனைத்தையும் அளிக்க வல்லது. எனவே ஒவ்வொருவரும் தனது கருமையத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்ளல் அவசியம்.

இந்தத் தூய்மை உணர்வே மனிதன் தன்னைச் சுற்றியுள்ள சூழலைப் பாதுகாப்புடன் வைத்துக் கொள்ள உதவுகிறது என்பது மகரிஷியின் கருத்து.

இறைநிலையின் பெருமதிப்பு

மகரிஷியின் இறையியல் கொள்கைகளில் இன்றியமையாதது பிற உயிர்களைப் போற்றிக் காத்தல் ஆகும். உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழும் தன்மையைப் போற்றும் மகரிஷி அத்தகைய உயிரினங்களுக்குத் தன் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்ததலே அவரது இறைக்கொள்கையின் பெருமதிப்பு எனலாம்.

''எல்லா உயிர்வகைகட்கும் உணவாகவும் மற்றும் வாழ்க்கை வசதிகளாகவும் சிக்கலில்லாமலும் வரையறை இன்றியும் தங்களது வளர்ச்சியை அர்ப்பணித்து உலகைக் காத்து வருகின்றன தாவர இனங்கள். அத்தகு தாவர வர்க்கங்களை அன்போடும் கருணையோடும் உருவாக்கி இதர உயிரினங்களுக்கு அளித்துள்ள பேரன்புக்காகவும் கருணைக்காகவும் இறைநிலைக்கு நன்றி கூறி, அப்பெருமகிழ்ச்சியான பேரின்ப வெள்ளத்தில் திளைப்போம்'' என்று இயற்கையோடியைந்த இறைநிலையின் பெருமதிப்பைத் தன் நன்றியுணர்வின் மூலம் அவர் வெளிப்படுத்தி நிற்பதைக் காண முடிகிறது.

"இயற்கைக்கு ஒரு நியதி இருக்கிறது. அதனை இறைநீதி என்கிறோம்" எனக் குறிப்பிடும் மகரிஷி "இயற்கையிலிருந்துதான் மனிதன் தோன்றினான். அதன் வளங்களைக் கொண்டு வாழ்ந்து வருகிறான். இயற்கையின் நீதிக்கு இணங்கி மனிதன் வாழ வேண்டும். இயற்கையிலிருந்துதான் மனிதனுக்குத் துன்பங்கள், நோய்கள், வாழ்க்கைச் சிக்கல்கள் தோன்றுகின்றன. இதன் விளைவுகள் பரந்து விரிந்த சமுதாயத்தில் நீண்ட காலம் தொடர்கின்றன. இந்தச் சிக்கல்களின் தொடர் விளைவுகள்தான் போர்களும் வறுமையும் பகைமையும் ஆகும். எனவே மனிதன்

இந்த இறைநீதியை மதித்து நடப்பதே மேலானது என்று இயற்கையின் பெருமதிப்பை உணர்த்துகிறார் அவர்.

நீராதாரமும் சுற்றுச்சூழலும்

மகரிஷியின் கொள்கைகளுள் ஒன்று இயற்கைப் பொருட்களை மனிதனுக்குப் பொதுவுடைமை ஆக்குவது.

பாரதியின்

வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்

என்ற நீர்வளப் பயன்பாடு குறித்த கனவு மகரிஷியிடமும் காணப்படுவதைக் காணலாம்.

"ஒரு நாட்டின் சீதோஷ்ண நிலைமையால் மழை சிறிது அதிகமாக இருக்கலாம். அங்குள்ள மக்களின் தேவைக்கு மேலாகவே நீராதாரம் செழிப்பாக இருக்கலாம். இயற்கையின் கருணையோ அந்த நீரை அங்கேயே நிறுத்தி வைப்பது இல்லை. ஆறுகள் என்ற பெயரில் நீரோட்ட அமைப்புகள் மூலம் நீர் எங்கெங்குத் தேவையோ அங்கெல்லாம் போய்ச் சேர்ந்து விடுகிறது.

பூமியின் தன் முனைப்பால் தவறான மனநிலையால் போட்டுக் கொண்ட எல்லைக்கோடு இந்த நீராதாரத்தை, அதன் உபயோக உரிமையைத் தடை செய்கிறது. பூமியின் மீது போட்ட உரிமைக்கோடு நீராதாரத்தையும் பாதிக்கின்றது. இன்றைய காலக்கட்டத்தில் சிந்தனையாளர்களும் சமுதாய நல நோக்க அறிஞர் பெருமக்களும் பெருகி இருக்கின்றார்கள். அவர்கள் அனைவரும் மக்களின் சிந்தனையை உயர்த்திப் பூமியில் மனிதன் போட்ட எல்லைக் கோடுகளைக் கலைத்துவிட வழி காண வேண்டும்" என்று நீராதாரத் தேவைக்கு மகரிஷி குரல் கொடுப்பதைக் காண முடிகிறது. இதனால் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் அவர் கொண்டுள்ள அக்கறையை அறியலாம்.

முடிவுகள்

மனிதன் தன் அறிவாற்றலால் இயற்கை வளங்களை வாழ்வின் வளமாக உருமாற்றி, அழகுபடுத்தி வாழும் ஆற்றல்

பெற்றவன். இத்தகைய இயற்கை வளங்களை மனிதன் வாழ்வின் வளமாக மாற்றுகின்றபோது இயற்கையின் பரிணாமச் சிறப்பும் அதன் இயக்க நியதிகளையும் அறிந்த அளவிலேதான் அவை வாழ்வுக்கு நலம் பயப்பனவாக அமையும். மனிதன் இதனை அறிந்து கொள்ளும் அறிவையே சுற்றுச்சூழல் குறித்த பாதுகாப்பு உணர்வு எனலாம். மகரிஷியின் இறையியல் கோட்பாடு களிலிருந்து சுற்றுச்சூழல் குறித்த கீழ்க்காணும் செய்திகளை அறியலாம்.

1. இயற்கை நியதியே இறைநீதி. இதனை மீறாதிருத்தலே மனித வாழ்வுக்கு நல்லது.
2. பிற உயிரினங்களைப் புரிந்து மதித்து, உதவி செய்து வாழ்தலே தெய்வீகக் காட்சி ஆகும்.
3. பிற உயிர்களுக்குத் துன்பம் உண்டாக்கும் தவறான செயல்களை மனிதன் செய்தல் கூடாது.
4. மனிதன் வாழும் உலகமும் அவன் உயிர் வாழத் தேவையான பொருட்களும் அனைவருக்கும் பொதுவானவை.
5. சுற்றுச்சூழலைப் பாதிக்கும் விஞ்ஞானத்தை ஆன்மீக உணர்வால் மாற்ற வேண்டும்.
6. கருமையத்தைத் தூய்மையாக வைத்திருத்தலே சூழல் பாதுகாப்புக்கு அடிப்படை.
7. ஒன்றையொன்று சார்ந்து வாழும் உயிரினங்களைப் போற்றுதல் மனிதனின் கடமை.
8. பூமியில் மனிதன் போட்ட எல்லைக்கோடுகளைக் கலைத்து நீர்வளத்தை ஒருங்கிணைத்தால் சுற்றுச்சூழல் சிறப்படையும்.

துணை நூல்கள்

வேதாத்திரி மகரிஷியின்

1. உலகச் சமுதாய வாழ்க்கை நெறி
2. மதமும் மனிதனும்
3. செயல் விளைவுத் தத்துவம்
4. அறிஞர்களின் கடமை
5. வாழ்க்கை வளர உயர்வுப்படிகள் ஐந்து
6. இறையுணர்வும் அறநெறியும்.

வேதாத்திரி மகரிஷியின் படைப்புகளில் நடையியல் சிந்தனைகள்

முனைவர் ஆர். வேல்முருகன்

ஆன்மீகத்தில் ஆழங்கால் பதித்து அறிவியல் உண்மைகளைத் தெளிவாக அறிந்து மதமும் அறிவியலும் வேறுபாடின்றி ஒன்றுக்கொன்று தொடர்புடையன என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டியவர் மகரிஷி அவர்கள். அறிவியல் இயற்கையையும், மதம் மனிதனையும் விளக்கும் நிலையில் இரண்டுமே ஒன்றையொன்று முழுமைப்படுத்திக் கொள்வனவாகவே அமைகின்றன. மகரிஷியின் படைப்புகள் மனித வாழ்வின் வளத்திற்கும், மேன்மைக்கும் உரிய கல்வியையும், ஞானக் கல்வியையும், வாழ்க்கை வளக்கல்வியையும், பல்வேறு கோணங்களில் விளக்குகின்றன. இத்தகைய அரிய கருத்துகள் மக்களைச் சென்று சேர வேண்டுமெனில் 'மொழிநடை' இன்றியமையாத ஒன்றாக அமைகிறது.

மகரிஷியின் நடை மக்களின் நடை என்றால் அது மிகையில்லை. பாமர மக்களும் படித்துப் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நடை. மகரிஷியின் படைப்புகள் பலவற்றுள் காணக்கிடைக்கும் மணிமகுடம் போன்ற கவிதை வரிகளை நடையியல் நோக்கில் ஆய்கிறது இக்கட்டுரை.

மொழிநடை

ஒரு மொழியின் அமைப்பினையும் அதன் பயன்பாட்டினையும், உணர்ச்சிக் கூறுகளையும் ஆழமான

Assistant Professor, Asian Language and Culture, National Institute of Education, Nanyang Technological University, Singapore - 637616

கருத்துகளையும் நடையியல் உத்திகளின் துணைகொண்டு விளக்குவதே மொழி நடை எனப்படும்.

நடையியலார் மொழி பற்றிய நடையியல் உத்திகளை மூன்று நிலைகளில் விளக்குவர்.

1. ஒலி நடை
2. சொல் நடை
3. தொடர் நடை

ஒலி நடை

படைப்பின் சிறப்பினைப் பாங்குடன் உணர்த்த, கவிதைகளில் ஒலிகள் தனித்தும், பிற ஒலிகளோடு இணைந்தும் பயன்படுவது ஒலி நடை எனப்படும். நடையியலாளரின் அணுகுமுறைகளில் ஒலி நடை மிகச்சிறந்த உத்தியாகப் பயன்படுத்தப்படுகிறது. ஒலி நடைக் கூறுகளாக எதுகை, மோனை, வண்ணம், இயைபு, ஒலிக்குறிப்புச் சொற்கள் முதலியன விளக்கப்படுகின்றன.

எதுகை

ஒலி நிலையில் எதுகை இன்றியமையாத இடத்தைப் பெறுகிறது. அதற்கு முக்கியக் காரணம், செய்யுளின் ஒவ்வோர் அடியிலும் முதல் சொல்லில் வரும் இரண்டாம் எழுத்து திரும்பத் திரும்ப அமைந்து முழுப்பாடலையும், அதன் கருத்துகளையும் எளிதாக நினைவிற் கொள்ளும் முகத்தான் அமைக்கப் பட்டிருப்பதாகும்.

இறையாற்றலின் தன்மைகளையும், சிறப்புகளையும் அறியாமலும், அலட்சியம் செய்தும், தன்முனைப்போடு செயல்பட்டும், மன ஆற்றல் அளவு மீறியும், முறை மாறியும் செயல்பட்டால் அதற்கேற்றபடி பின்விளைவுகளை அனுபவிப்பர் என்ற கருத்தினைக் கூற வந்த மகரிஷி,

தப்புக் கணக்கிட்டுத் தானொன்றை எதிர்பார்த்தால்
ஒப்புமோ இயற்கை விதி? ஒழுங்கமைப்பிற் கேற்றபடி
அப்போதைக்கப்போதே அளிக்கும் சரிவிளைவு
எப்போதும் கவலையுற்று இடர்ப்படுவார்
இதையுணரார்

இச்செயலில் தப்பு, ஒப்பு, அப்போது, எப்போது போன்ற சொற்களில் உள்ள இரண்டாம் எழுத்து ஒன்று போல் அமைந்து செய்யுளின் இனிமைக்கும், எளிமைக்கும், எளிதில் நினைவில் கொள்ளும் தன்மைக்கும் வழிவகுப்பதாக அமைகிறது.

மோனை

செய்யுளில், முதல் சொல்லின் முதல் எழுத்தைப் போலவே அடுத்த அடிகளில் வருகின்ற சொல்லின் முதல் எழுத்து அமைந்திருப்பின் அதனை மோனை என அழைப்பர். செய்யுள் வரிகள் மீது நாட்டம் கொள்ளவும், எளிதில் மனனம் செய்யவும், இனிமையான ஓசைக்காகவும் மோனை அமைப்பினைப் பயன்படுத்தி மக்களின் மனம் கவரும் பாக்களை இயற்றியுள்ளார் அருட்தந்தை மகரிஷி அவர்கள்.

செய்யுள் வரிகள் மோனை அமைப்பில் அமைந்திருக்கிறது என்பதை விடத் தாம் சொல்ல வந்த ஆழமான கருத்தினை இலகுவாக வெளியிடுவதில் கை தேர்ந்தவராக இருப்பதை அவரது பாடல்கள் வழிக் காண முடிகிறது. சான்றாக,

உலகம் என்ற மண்மீது அனைவரும் பிறந்தோம்
உயிர்காக்கும் காற்று ஒன்றே மூச்சு விடுவதற்கு
உலகெங்கும் ஒளிவீசும் சூரியனும் ஒன்றே
உள்ளகடல் ஒன்றேநீர் ஆவியாகப் பொழிய
உலகில் உள்ளோர் எவரும்இதில் ஒன்றும் செய்ததில்லை
ஒவ்வொருவரும் பிறந்து வாழ்ந்து செத்துப்போவார்
உலகில் ஒரு பகுதியினர் மற்றவரைக் கொன்று
உயிர்வாழ்தல் நீதியெனில் கொலைஞர்களே மிஞ்சும்

என்ற வரிகளில் இயற்கை நமக்கு வாரி வழங்கியிருக்கும் கொடையையும், உலக மக்களின் பங்கு இவற்றில் ஒன்றுமே இல்லை என்பதையும், இவற்றை எல்லாம் அனுபவிக்கப் பிறந்தவர்களே மக்கள் என்பதையும், தெளிவாக எடுத்துக் கூறுவதோடு, போரினால் ஒரு பகுதி மக்கள் அழிவதும் மற்றவர்கள் உயிரோடு வாழும் கொலைஞர்கள் எனவும் தம் கருத்தை ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார். செய்யுள் வரிகளின் முதல் எழுத்து ஒரே ஓசை உடையதாக அமைந்திருப்பதும், காற்றினை, உயிர்காக்கும் காற்று என்றும், சூரியனை, ஒளி வீசும்

சூரியன் என்றும், கடலினை, உள்ள கடல் என்றும் அடைமொழி கொடுத்து விளக்கியிருப்பது மேலும் மெருகூட்டுவதாகவே அமைகிறது. போரை விடுத்து அமைதியான வாழ்க்கை வாழ வேண்டும் என்ற நற்கருத்தினை நயம்பட விளக்குகிறார் நம் கவிஞர்.

வண்ணம்

ஒலி நிலையில் காணப்படும் மற்றுமொரு உத்தி வண்ணம் எனப்படும். ஒரே ஒலி அல்லது அதற்கினமான ஒலிகள் ஓர் அடியிலோ செய்யுள் முழுவதுமோ இடம் பெறுவதை வண்ணம் என்பர். வல்லெழுத்துக்கள் இடம் பெற்றால் வல்லெழுத்து வண்ணம் என்றும், மெல்லினம் பயின்று வந்தால் மெல்லெழுத்து வண்ணம் என்றும், இடையினம் பயின்று வந்தால் இடையெழுத்து வண்ணம் என்றும் விளக்குவர்.

மகரிஷியின் இடையெழுத்து வண்ணம் அமைந்த செய்யுள் வரிகளை இங்கே காண்போம்!

வாழவேண்டும் என்றெண்ணி உலகமீது
வந்ததில்லை எனினும் நாம் பிறந்துவிட்டோம்
வாழவேண்டும் உலகில் ஆயுள் மட்டும்
வாழ்ந்தோர்கள் அனுபவத்தைத் தொடர்ந்து பற்றி
வாழவென்ற உரிமை எல்லோர்க்கும் உண்டு
வாழ்வோர்க்குச் சாதகமாய் வாழுமட்டும்
வாழஉள்ள அனைவருமே ஒன்று கூடி
வகுத்திடுவோம் ஒருதிட்டம் வளமாய் வாழ

சொற்சிலம்பாடும் சுதந்தரராய் மகரிஷியின் பாடல்கள் அமைந்திருப்பது கற்போர் நெஞ்சங்களைக் கவினுறச் செய்யும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. கம்பராமாயணத்தில் இராமபிரானின் அம்பு இராவணன் உடலுக்குள் புகுந்து சீதாபிராட்டியாரின் நினைவு எந்தப் பகுதியிலாவது இருக்கிறதா என்று உடல் முழுக்கச் சுற்றி வந்து மறுபக்கம் வெளியேறியதாக விளக்குவார் கம்பர். இராவணன் உடல் முழுக்கச் சுற்றி சுற்றி வந்த அம்பைப் போல அருட்தந்தையின் அமுத வரிகளில் 'வாழ' என்ற சொல், செய்யுள் வரிகளின் முதலிலும், இடையிலும், இறுதி வரியின் முடிவிலும் சுற்றி வந்து சிறப்புச் சேர்க்கின்றது. வளமாய் வாழவேண்டும் என்பதையே தம் களமாய் அமைத்துக்

கொண்ட மாமேதையின் கருத்துகள் உலகமெல்லாம் பரவும் போது போரில்லாப் புது உலகம் புதிதாகத் தோன்றிவிடும்.

இயைபு

ஒலி நிலையில் இயைபு என்பது இன்னொரு உத்தியாகும். தமிழ் மொழியமைப்பில் இயைபு (Concord) இன்றியமையாததாக அமைந்திருப்பது மொழியின் சிறப்பிற்கு வலு சேர்க்கிறது. அது போன்று செய்யுளின் முதல் சொல்லின் ஈற்றெழுத்தும் அவ்வரியின் இறுதிச் சொல்லின் ஈற்றெழுத்தும் ஒன்று போல் இயைந்து வருவது இயைபு எனப்படும். ஈற்றெழுத்து இயைந்து வருவதை ஈற்றியைபு எனலாம்.

அருட்தந்தையின் வரிகளில் சில ஈற்று இயைபோடு அமைந்திருப்பதைக் காணலாம்.

உலகமெலாம் பருவமழை ஒத்தபடி பெய்யட்டும்
உழவரெலாம் தானியத்தை உவப்புடனே
பெருக்கட்டும்

என்ற வரிகளிலும்,

இயந்திரங்கள் இயக்குமுறை தொழில்நுட்பங்கள்
இயற்கை எழில் விநோதங்கள், அகண்ட வானில்

என்ற வரிகளிலும் இயைபு உத்தியைப் பயன்படுத்திப் பாடல் வரிகளை இனிமையாக்கியதோடு ஏழை எளியவரும் உவகையோடும், உவப்போடும் வாழ வேண்டும் என்ற கருத்தினை, எல்லோரும் எல்லாமும் பெற வேண்டும் என்ற வகையில் விளக்கி மக்கள் மத்தியில் சிறப்புடன் விளங்கி நிற்கிறார்.

சொல்நடை

படைப்பு சிறப்படைய படைப்பாளர் பயன்படுத்தும் சொற்கள் மிக இன்றியமையாத ஒன்றாக அமைகின்றன. சொற்களைத் தேர்வு செய்யும் முறையும், அவற்றைச் செய்யுள் வரிகளில் பயன்படுத்தும் முறையும் நடையியல் உத்திகள் எனப்படும்.

மகரிஷியின் சொல்தேர்வு கற்போரை மனத்தில் கொண்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. அடிக்கடிப் பயன்படுத்தப்படும் சொற்களைத் தகுந்த இடத்தில் அமைத்து, சந்த நயத்தோடு

உருவாக்கி எல்லோரும் எளிதில் புரிந்து கொள்ளும் வண்ணம் செய்யுள் வரிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கடவுள் என்ற பெயரில் சில உருவங்களையும், குணங்களையும் கற்பித்து அடிக்கடிப் போற்றிப் புகழ்வதனால் மனித இன வாழ்வுக்கு அவசியமான மன உறுதிப்பாடு ஏற்படுவதை,

எப்பொருளை எச்செயலை எக்குணத்தை
எவ்வுயிரை எவரொருவர் அடிக்கடி நினைத்தாலும்
அப்பொருளின் தன்மையாய் நினைப்போர் ஆற்றல்
அறிவினிலும் உடலினிலும் மாற்றம் காணும்
இப்பெருமை இயல்பூக்க நியதி யாகும்
எவரொருவர் குவை மதித்து ஒழுகினாலும்
தப்பாது குருவுயர்வு மதிப்போர் தம்மைத்
தரத்தில் உயர்த்திப் பிறவிப்பயனை நல்கும்

என்ற செய்யுள் வரிகளில் அடிப்படைத் தத்துவத்தை உட்பொருளாகக் கொண்டது தான் உருவ வழிபாடு என்பதை எப்பொருளை, எச்செயலை, எக்குணத்தை, எவ்வுயிரை, எவரொருவர் என எளிய சொல்லாட்சி கொண்டு இனிமையாக விளக்குகிறார்.

மனித வாழ்வில் நான்கு ஒழுக்க மேம்பாடும், ஐந்து வாழ்க்கைப் பண்பாடும் அவசியம் என்பதைக் கவிதை வரிகளில் பாலொடு தேன் கலந்தாற் போல் பக்குவமாய்க் குழைத்துத் தருகிறார். கவிதை வரிகளுக்குள் எண்களிட்டுக் கவிஞர்களில் தனிக்கவியாய் வலம் வந்து கொண்டிருக்கிறார். இதோ. . . .

புதியதொரு பண்பாடு உலகுக்கு வேண்டும்
போதை, போர், பொய், புகைஒழித்து அமுல்
செய்வோம்
அதிகசுமை ஏதுமில்லை, 1) அவரவர்தம் அறிவின்
ஆற்றலினால் உடல்உழைப்பால் வாழ்வதென்ற
முடிவும்,
2) மதிபிறழ்ந்து மற்றவர்கள் மனம்உடல் வருந்தா
மாநெறியும், 3) உணவுக்குயிர் கொல்லாத நோன்பும்,
4) பொதுவிதியாய்ப் பிறர்பொருளை வாழ்க்கைச்
சுதந்திரத்தைப்

போற்றிக் காத்தும், 5) பிறர்துன்பம் போக்கும்
அன்பும் வேண்டும்

என்ற வரிகளில் போதை, போர், பொய், புகை முதலியவற்றை ஒழிக்க வேண்டும் என வலியுறுத்தி, வாழ்க்கைப் பண்பாடுகளை,

1. தனிமனிதன் சிறப்புற, அமைதியோடும் அறிவோடும் வாழ, தனக்கு வேண்டிய தேவைகளை முடித்துக் கொள்ள அவரவர் உழைப்பைப் பயன்படுத்த வேண்டும்.

2. பிறருடைய மனம், உடல் வருந்தாத அளவில் வாழ்க்கைச் செயல்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

3. உணவுக்காக உயிர்க்கொலை கூடாது.

4. பிறருடைய உரிமையையும், அவர்களது பொருட்களையும் மதித்து நடக்க வேண்டும்.

5. துன்பப்படுவோர்க்கு நம்மாலான உதவியைச் செய்யத் தயாராக இருக்க வேண்டும்.

என ஐந்து வகையாக விளக்கி மக்களை நல்வழிப்படுத்துகிறார். கவிதை வரிகளில் பின்பற்றப்பட்டிருக்கும் உத்தி, செய்யுளின் மூன்றாம் வரியில் 'அதிக சுமை ஏதுமில்லை' என எளிமையாக விளக்கி மக்களிடம் நேரடியாகப் பேசுவது போன்று அமைத்திருக்கும் பாங்கு, சொல்தேர்வு முதலியன படிப்போர் நெஞ்சங்களில் ஆழப் பதியும் என்பதில் ஐயமில்லை.

பெண்களின் சிறப்பினை உணர்ந்து மதிக்கவேண்டும் என வலியுறுத்தும் கவிஞர்,

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் – புவி
பேணி வளர்த்திடும் ஈசன்

என்ற பாரதியின் வரிகளைப் போல, மகரிஷியின் உள்ளத்தில், காலம் காலமாகப் பெண்கள் அடிமைப்பட்டு வாழ்வதை அகற்ற வேண்டும் என்ற நல்லுணர்வு வேரூன்றியிருக்கிறது. பெண்ணினத்தின் மகத்துவத்தை விளக்கும்போது, உலகில் வாழும் எல்லா உயிரினங்களையும் கருத்தரித்தது முதல் வளர்த்து வழிகாட்டுவதில் பெண் இனத்திற்குத் தான் இறையாற்றல் தன் அருளை ஒரு பெருமையாக அமைத்துக் கொடுத்திருக்கிறது என விளக்குகிறார். இக்கருத்தினை,

எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன் திருவுள்ளமென்ன?
எவ்வுயிரும் தோன்றுதற்கு ஏற்றதொரு திருவழியாய்
வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான்
அற்புதமே
வாழுகின்ற மக்களில் வளமறிந்தோர் எத்தனை பேர்?

என ஏற்றம் மிகுந்த சொற்களைக் கொண்டு கவி அமைத்துப் பெண்களின் ஈடு இணையற்ற புகழினை உலகிற்கு எடுத்துரைக்கிறார்.

போரினால் மக்கள் அடையும் துன்பங்களைத் தம் சொற்சித்திரத்தால் நகைச்சுவை உணர்வோடும் அவல உணர்வோடும் நயம்பட விளக்குகிறார் அருட்தந்தை அவர்கள்.

காலில் சிறு முள் குத்தினால் கூட கண்ணீர் விடும் நாம், போரில் உயிரிப் பலியோடு உறுப்புகளையே இழந்து தவிக்கும் மக்களைப் பற்றி எண்ணிப் பார்க்கத் தவறுகிறோம் என்பதற்காகவே,

உடலில் சிறு காயமோ உறுப்புகளில் அடியோ
ஒருவருக்கு ஏற்பட்டால் உடன்வாழ்வோர் எல்லாம்
கடலுலகில் படும்துன்பம் காண்கின்றோம் போரில்
கணக்கின்றி கணப்பொழுதில் மக்கள் மடிகின்றார்
படமுடியாத் துயரோடு பருவுடலின் உறுப்பு
பல இழந்தும் பதைப்பதைத்துத் துன்பமுறக்
காண்போம்
நடந்து செல்லும் பிணங்களல்ல நாம் இவற்றைப் பார்த்து
நமது கடமை தேர்ந்து நலம் செய்யாதிருக்க

என்ற வரிகளில் போரின் கொடுமையைத் தேர்ந்த சொற்களால் விளக்கிப் போரில்லா ஓருலகம் உருவாக வேண்டும் என்றும், அதில் மக்கள் அனைவரும் மகிழ்வுடன் வாழ வேண்டும் என்றும் எடுத்தியம்புகிறார்.

தொடர் நடை

படைப்பாளர் தாம் கூற வந்த கருத்துகளை குறிப்பிட்ட தொடர் அமைப்புகளைப் பயன்படுத்தி விளக்கும் உத்தியே தொடர்நடை உத்தி எனப்படும்.

குற்றமற்றவர்கள் பல இடங்களில் தண்டிக்கப்படு கிறார்கள். அத்தண்டனை அவர்களின் வாழ்க்கை இன்பத்தையும் வாழ்வின் நோக்கத்தையும் பாழ்படுத்தி வாழ்நாள் முழுக்க அல்லல்பட வைக்கிறது என்பதை விளக்க வந்த அருட்தந்தை அவர்கள்,

கொலைசெய்தான், ஒரு மூர்க்கன் அறிவிழந்து
கொலையுண்டான், நீதிபதி அளித்த தீர்ப்பால்
கொலைக்குக் கொலை நீதியெனில், குற்றம் செய்த
கொடுமைக்கே தண்டனைகள் என்றும் சொன்னால்
கொலையுண்டோன் மனைவி மக்கள் பெற்றோர் செய்த
குற்றம் என்ன? குடும்பத் தலைவன் ஆங்கே
கொலையுண்ட நிகழ்ச்சி அன்னார் வாழ்வில் என்றும்
கொடுந்துன்பம் தரவில்லையா? நீதி எங்கே?

என்ற வரிகளில் செய்தான், கொலையுண்டான், கொலைக்குக் கொலை, கொலையுண்டோன் மனைவி, கொலையுண்ட நிகழ்ச்சி போன்ற தொடர்களைச் சிறப்பாக எடுத்தாள்வது அவரது மொழிப்புலமைக்குச் சான்றாக அமைகிறது.

இவ்வாறாக மகரிஷியின் படைப்புகளில் மொழி நடை, மொழிப்புலமை, சொல் தேர்வு முதலியன இடம் பெற்றுப் படித்தவரும் பாமரரும் பயன்பெறும் வகையில் உருவாக்கப் பட்டிருக்கின்றன. அறிவியல் பற்றியும், மதம் பற்றியும் கற்பவர்கள் நன்கு அறிந்து வாழ்வினை மேம்படுத்திக் கொள்ள அருட்தந்தையின் படைப்புகள் ஓர் அரிய பொக்கிஷம் என்றால் அது மிகையில்லை.

வேதாத்திரி மகரிஷியின் கவிதைகள் : யாப்பு நலன்கள்

முனைவர் ய. மணிகண்டன்

தமிழில் பக்தி இலக்கியப் பனுவல்களும் சித்தர்களின் ஞானப் பனுவல்களும் தனிச்சிறப்பான இலக்கியத் தொகுதிகளாகத் திகழ்கின்றன. வாழ்க்கையின் மெய்ம்மைகளைக் கண்டுணர்ந்து மனிதர்கள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டும் இலக்கியங்களாக அவை விளங்குகின்றன. திருமூலர், பட்டினத்தார், சிவவாக்கியர், தாயுமானவர், இராமலிங்க அடிகள் என்று தொடங்கித் தொடரும் இலக்கிய மரபில் இக்கால மெய்ஞ்ஞானியாக மிளிரும் வேதாத்திரி மகரிஷியின் ஞானப் பனுவல்களும் போற்றுதலுக்குரிய இடத்தைப் பெற்றுப் பொலிகின்றன.

பக்தி இலக்கியங்கள், சித்தர் பாடல்கள் ஆகியவற்றின் யாப்புமரபும் நடையமைப்பும் தனித்துக் கவனத்தில் கொள்ளத்தக்க நிலையில் அமைகின்றன. இசைப்பண்புடையன, எளிய யாப்புவகைகள், நெகிழ்ச்சிகளோடு கூடிய கட்டமைப்பு என இவை யாப்பமைதி கொண்டு விளங்குகின்றன.

பல்லாயிரம் பாடல்களைப் பாடிய வேதாத்திரி மகரிஷியின் பாடல்கள் "ஞானக் களஞ்சியம்" என்னுந் தலைப்பில் இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவ்விரண்டினுள்ளும் அடங்காமல் பல கவிதைகள் பிற நூல்களிலும் இடம் பெற்றுள்ளன. இப்பாடல்கள் அனைத்தையும் ஒருங்கு தொகுத்து நோக்கி ஆராய்கையில் வேதாத்திரி மகரிஷி கவிதைகளின் யாப்பு நலன்கள் குறித்த பல அருஞ்செய்திகள் புலனாகின்றன.

விரிவுரையாளர், தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

எதுகை, மோனை முதலியவற்றின் தெளிவான, பொருத்தமான ஆட்சியினை மகரிஷியின் கவிதைகளில் எல்லா இடங்களிலும் கண்ணுற இயல்கின்றது. தலையாகு எதுகையைப் போன்ற தனிச்சிறப்பான யாப்பியல் ஆட்சிகளையும் காணமுடிகிறது. அதே வேளையில் இயைபுத்தொடை போன்ற அலங்கார யாப்புக் கூறுகளை அவர்தம் கவிதைகளில் மிக அருகியே காணமுடிகின்றது. பாவின வடிவங்களின் ஆட்சியையே மிகப் பெரும்பாலும் காணநேர்கின்றது. பாவினங்களுள்ளும் விருத்தங்களே அவர்தம் படைப்புகளில் பேரிடம் பெறுகின்றன. பாவகைகளில் அகவலின் ஆட்சியை மட்டுமே ஓரளவு காணமுடிகின்றது. வெண்பா போன்ற இறுக்கமான கட்டமைப்புடைய வடிவங்கள் மகரிஷி கவிதைகளில் இடம்பெறவில்லை. இத்தகு யாப்புநலன்களை விளக்கமாக இனி இவண் காணலாம்.

தொடை நலன்கள்

"தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்" என்பது பழமொழி. தமிழ் யாப்பில் எதுகையும் மோனையுமே அடிப்படையான, இன்றியமையாத தொடைக்கூறுகளாகும். மகரிஷியின் பாடல்கள் அனைத்துமே எதுகைநலன் எழில் செய்ய அமைந்து விளங்குகின்றன. இயல்பான எதுகை அமைப்போடு பரவலாகத் தலையாகு எதுகைகளின் ஆட்சியினையும் அவர்தம் பாடல்களில் காண இயல்கின்றது. மேலும் சில இடங்களில் பல அடிகளை ஒரே எதுகை அமையப் படைத்துள்ள சிறப்புறு திறத்தையும் காண இயல்கின்றது.

தலையாகு எதுகை

பாக்களில் அடிதோறும் முதற்சீர்கள் சீர்முழுதும் ஒன்றுமாறு அமைக்கப்படுதல் தலையாகுஎதுகை எனப்படும்.

தலையாகெதுகையினை யாப்பருங்கல விருத்தியுரை 'எதுகைத் தொடையிற் சீர்முழுதும் வருவது தலையாகெதுகை' (யாப்பருங்கலம் நூ. 37 இன் உரை) என வரையறுத்து விளக்கும்.

'சீர்முழுதொன்றில் தலையா கெதுகை'

என்பது யாப்பருங்கல விருத்தியுரை காட்டுகின்ற ஒரு மேற்கோள் நூற்பாவாகும். இத்தலையாகெதுகையின் இலக்கணம் பொருந்த

மகரிஷி அவர்கள் பல பாடல்களைப் படைத்துள்ளார். அவற்றுள் இரு பாடல்களை இவண் காணலாம்.

உடைஒழுக்கம் உள்ளத்தின் நிலைமை காட்டும்
ஒருசிலரே சாராதோர் அந்த உண்மை
நடைஒழுக்கம் நன்றாக வெளிப்ப டுத்தும்
நல்லறிவின் நாட்டமுடன் நடப்போர் தங்கள்
விடைஒழுக்கம் சான்றாகும் வீராப் புள்ள
வீணர்களோ தற்புகழ்ச்சி வேண்டி நிற்பர்
படைஒழுக்கம் அரசாங்கத் திறமை காட்டும்
பகுத்தறிவால் யூகித்துப் படித்துக் கொள்வோம்.
(ஞானக். II, பா. 1039)

எரிகின்ற விளக்கினிலே வெளிச்சம் போலே
இயங்குமுடற் றனிலிருந்து, ரத்த சக்தி,
சொரிகின்ற கதிர் அலைகள் அறிவு ஆகும்.
சோர்வடைந்து உடல்பலமும் குறையும் போது,
விரிகின்ற எண்ண அலை வேகம் குன்றும்,
விவேகத்தைப் பயன்படுத்தப் பழகி விட்டால்,
தெரிகின்ற ரகசியமே, அறிவ தெல்லாம்
தன்பொருளே என்றபே ருண்மை யாகும்.
(ஞானக். II, பா. 314)

இத்தகைய தலையாகெதுகை ஆட்சிகள் பா வடிவங்களுக்குத் தனித்த அழகை வழங்குவன ஆகும். பாடல்களைப் பயில்வோரையும் மனனம் செய்வோரையும் ஈர்த்துப் பிணித்துப் பாடல்களுள் ஈடுபட வைப்பனவாகும்.

ஓரேதுகை அமைப்பில் பல அடிகள் அமைதல்

தமிழ்ப் பாடல் மரபில் ஈரடிகளோ நான்கடிகளோ ஓரே எதுகை பெறுதல் வழக்கம். ஈரடிகளுக்கு அல்லது நான்கடிகளுக்கு ஓரெதுகையை அமைப்பதற்கே பல பாவலர் இடர்ப்படுவர். மேலும் அவர்கள் அதன் பொருட்டு உயிரெதுகை, இன எதுகை, வருக்கஎதுகை என முதன்மைத் தகுதியற்ற எதுகைகளையும் அமைப்பர். மகரிஷியின் தகுதியற்ற எதுகைகளைப் பெரிதும் பாடல்களிலோ முதன்மைத் தகுதியற்ற எதுகைகளைப் பெரிதும் காண நேர்வதில்லை. மேலும் மிகச் சரளமாக, மிக எளிதாக ஓரே எதுகை அமையப் பல அடிகளை அவர் அடுத்தடுத்துத்

தொடுத்துத் தருகின்ற பாங்கு வியப்பூட்டுவதாகவும் போற்றத்தகுவதாகவும் அமைகின்றது. அவர்தம் யாப்பியலின் தனித்திறத்தையும் தேர்ச்சியையும் இவ்வாறான பகுதிகள் இனிது எடுத்து உணர்த்துகின்றன. எடுத்துக்காட்டாகப் பின்வரும் பகுதியை நோக்கலாம்.

நித்திய அநித்திய நிலைமற வாத
ஒத்த உயர்வில் உலகை நோக்கும்
தத்துவ ஞானம் தவத்தின் வலிமை
சுத்தமாய் இரத்தம் சுழலும் ஆரோக்கியம்
உத்தம வாழ்விற்கு உகந்தநற் செல்வம்
எத்தகைய உயிரின் துன்பமும் போக்கும்
சித்தமும் செயலில் கடமை யுணர்வும்
இத்தனை யும்பெற் றினிதே வாழ்வேன்.

(ஞானக். I, பா. 514).

மோனை நலன்

பாடல் அடிகளில், சீர்களில் முதலெழுத்து அல்லது அவற்றுக்குரிய கிளையெழுத்துகள் ஒன்றி அமைந்து ஒலிநலன் ஊட்டுவது மோனைத்தொடை எனப்படும். இலக்கணிகளால் மோனை இருவகைப்படுத்தப்படும். அடிமோனை, சீர்மோனை என்பனவாகும் அவை. தமிழ்க் கவிதை மரபில் சீர்மோனை ஆட்சியே வழக்கிலுள்ளது. அடிமோனை குறித்து இலக்கணநூல்கள் பேசுகின்ற போதிலும் அடிமோனையின் ஆட்சி அருகிய வழக்கே. அடிமோனை என்பது பாடலின் ஒவ்வொரு அடியின் முதலெழுத்தும் மோனை ஒன்ற அமைவதாகும். இவ்விலக்கணம் பொருந்திய பாடல்களை நாம் உரையாசிரியர்களின் எடுத்துக்காட்டுகளிலிருந்தே பெரிதும் அறிகின்றோம். இக்காலப் புதுக்கவிதைகளிலும், ஐக்கூ, லிமரைக்கூ முதலிய வடிவங்களிலும் அடிமோனை ஆட்சியைப் பரவலாகக் காண்கின்றோம். இத்தகு இலக்கிய, இலக்கணச் சூழலில் மகரிஷியின் மரபுக் கவிதைகள் ஆங்காங்கு அடிமோனைத்தொடை ஆட்சியுடன் அமைந்துள்ளமை விதந்து சுட்டத்தக்கனவாய் விளங்குகின்றன. பின்வரும் பாடற்பகுதி அடிமோனைத்தொடை அழகுற அமைந்துள்ளமைக்குச் சிறந்த காட்டாகும்.

உணர்ச்சிப் பெட்டியாம் உடலுயிர் கட்கு
உட்பொரு ளாகவும் முன்உயிர் உடல்களாய்
உள்ளஎன் அன்னையை, தந்தையை மதிப்பொடு
உள்ளத்தில் வைத்து வணங்கினேன் உருக்கமாய்
உயிரையும் அறிவையும் என்னுளே செலுத்தி
உயர்தவ முறையை உணர்த்திய ஞான
ஆசான் அவர்களை அன்போடு வணங்கினேன்
அன்னவர் உணர்த்திய ஆக்கினைச் சக்கர
அசைவில் சுழலில் அறிவைப் பொருத்தஎன்
அறிவு ஓர்மையில் நிலைத்து அமர்ந்தது
என்நிலை மறந்து நான் இனிஎச் செயலையும்
எங்கும் எப்போதும் இயற்றா திருக்கவும்
முன், நிகழ், பின்எனும் முக்காலத் தையும்
முறையாய் இணைத்து நினைக்கவும் பேசவும்
செய்யவும் ஏற்ற திறன்வளர் கின்றது.
உய்யநல் லறிவின் ஒளிமிகு கின்றது.

(ஞானக். II, பக். 560, 561)

இத்தகைய அடிமோனை ஆட்சிகள் மட்டுமல்லாமல் நாற்சீர் அடிகளில் பொழிப்பு மோனையைத் தவறாது அமைக்கும் தகுதிறத்தை மகரிஷி கவிதைகளில் பெரிதும் காண முடிகின்றது. கழிநெடிலடிகளால் ஆன பாக்களில் மோனை எந்தெந்த இடங்களில் அமையவேண்டும் என்பதற்கு இலக்கண நூல்கள் விதி எதுவும் கூறவில்லை. எனினும் இலக்கிய மரபில் எந்தெந்த இடங்களில் மோனையை அமைக்க வேண்டும் என்பதற்கு எழுதப்படாத விதியொன்று தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது. தமிழ்க் கவிதைப் பாரம்பரியத்தில் இவ்வெழுதப்படாத விதி சற்றும் வழுவாத நிலையில் பின்பற்றப்பட்டு வருகின்றது. இலக்கண நூல்களில் விதிகள் இல்லாத போதிலும் முன்னை இலக்கியப் பயிற்சியால் மகரிஷி அவர்களும் சற்றும் வழுவின்றித் தம் பாடல்களில் இம்மோனை அமைக்கும் மரபை அடியொற்றி யுள்ளார். காட்டாக இவ்வாறு மோனையமைந்த எண்சீர் ஆசிரிய விருத்தப் பாடலொன்றை இங்குக் காணலாம்.

உற்றார்கள் மனம்ஒத்த, சமூகம் ஏற்ற
ஒழுக்கமும்சூழ் நிலைக்கிசைந்த ஆண்பெண் நட்பு

வற்றாது ஒளிர்காந்த விளக்கி னுள்ளே
வந்திணையும் இருவிதமின் கம்பி கள்போல்
சற்றேனும் களங்கமிலா நலம்ப யக்கும்
சன்மார்க்க நட்பொழுக்கம் இதுவே யாகும்
மற்றான முறைநட்பு, அக்கம்பி கள்போய்
மத்தியிலே ஒன்றிட்ட விளைவை ஒக்கும்.

(ஞானக். II, பா. 962)

காய் காய் மா தேமா என்ற வாய்பாடு கொண்ட எண்சீர் ஆசிரிய விருத்தத்தில் மறியடிகளில் (அடுத்த அரையடியில்) மோனை அமைதல் மரபு. இம்மரபு போற்றப்பட்டுள்ளமையை இப்பாடலால் அறியலாம்.

இயைபுத்தொடை நலன்

இயைபுத்தொடை என்பது அடிதோறும் அல்லது அரையடிதோறும் ஈற்றுச்சீர்கள் ஓசை ஒன்ற அமைவதாகும். இதனை ஈற்றெதுகை என்று குறிப்பிடும் மரபும் உண்டு. மகரிஷி கவிதைகளில் இயைபுத்தொடை அமைப்பினைப் பெரிதும் கண்ணுற இயல்வதில்லை. மிக அருகியே இயைபுத்தொடை நலன் அமைந்துகிடக்கிறது. இயைபுத் தொடை அமையப் பெற்ற ஒரு பாடலைக் கீழே நோக்கலாம்.

அருள்துறையில் நிறைவுபெற்று
அன்புஎங்கும் ஓங்கட்டும்
பொருள்துறையில் நிறைவுபெற்றுப்
புவிமுழுதும் பொங்கட்டும்
மருள்ஒழிந்து மனிதகுலம்
மதிவழிவாழ்ந் துய்யட்டும்
இருள்ஒழிந்து நல்விளக்கம்
எங்கெங்கும் பொங்கட்டும்

(ஞானக். I, பா. 706)

அகவற்பாவில் அருந்திறம்

மிடுக்கார்ந்த நடையிலான அகவற்பாக்களை மகரிஷி கவிதைகளில் ஆங்காங்கு காணமுடிகிறது. 167 அடிகளில் அவர் படைத்துள்ள அகவற்பா தனித்துச் சுட்டத்தக்கதாக அமைகிறது. அவ்வகவலில் இருந்து ஒரு பகுதியை இவண் காணலாம்.

பூரணப் பொருளே புதுமை யடைந்து
ஆரண மான அணுவாய் விரிந்து
அணுவின் கூட்டம் இயக்கம் பக்குவம்
அசைவாய் இசைவாய் அண்ட கோடிகளாய்
ஓரறி வினம்முதல் ஐயறி வினம்வரை
ஊனாய் உயிராய் உருவபே தங்களாய்
தானாய் விரிந்த தத்துவ மாகிய
சுவைமுதல் ஐந்தையும் சுகிக்கவும் அறியவும்
கர்ம ஞானக் கருவிகள் பெற்று
அறிந்தும் வாழ்த்தும் அரூப நிலையாம்.

(ஞானக். I, பா. 167)

இவ்வகவலில் பெரும்பாலான அடிகள் பொழிப்பு மோனை பெற்று இவ்வகவலுக்குத் தனித்த அழகைத் தருகின்றன. இவ்வகவலின் அடிகள் சில இடங்களில் முற்றுமோனையையும், சில இடங்களில் இணைமோனையையும், பல இடங்களில் கூழைமோனையும் பெற்றுச் சிறக்கின்றன. மகரிஷியின் மோனை ஆட்சியில் கூழைமோனை பல இடங்களில் அமைந்து அகவற்பாவுக்கு அழகூட்டுவது விதந்து குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வகவலில் மோனையழகு சிறந்து நிற்கும் பகுதிகளை வகைப்படுத்தி இவண் நோக்கலாம்.

இணைமோனை

நாற்சீரடிகளின் முதலிரு சீர்களில் மோனை ஒன்றி அமைவது இணைமோனை எனப்படும். இணைமோனை கொண்ட அடிகளும் ஆங்காங்கு பயில்கின்றன.

எ.டு:

'விருப்பும் வெறுப்பும் எவையெனக் கண்டு'
'வாழ்க்கை வசதிகள் தேடிய முறையும்'

(ஞானக். I, பா. 167)

கூழைமோனை

நாற்சீரடியில் முதல் மூன்று சீர்களில் மோனை சிறத்தல் கூழைமோனை எனக் குறிக்கப்பெறும். கூழை மோனை சிறக்க அமைந்த இவ்வகவலின் அடிகள் சில வருமாறு:

'பூரணப் பொருளே புதுமை யடைந்து'
'ஊனாய் உயிராய் உருவமே தங்களாய்'
'அவ்வித அறிவின் ஆட்சியே மனிதன்'
'நெறியில் நிலைத்த நினைப்பின் சக்தியால்'
'ஐம்புலன் அறிவால் ஆராய்ச்சி தன்னால்'
'ஊரார் உலகோர் உள்ளம் விரும்பும்'
'உலகில் உயர்ந்த உருவமே மனிதன்'
'எவ்வுரு இயல்பும் இனிதே உணர்ந்து'
'அமைந்த அறிவின் ஆட்சியே மனிதன்'
'ஆன்மா அறிவின் ஆறாம் நிலையில்'
'என்றும் இருப்பது ஏன்இவற் றிற்கு'
'இருப்பிடம் எங்கே என்றா ராய்ந்து'
'ஒன்றி ஒன்றி ஒருவனாய் நின்று'

(ஞானக். I, பா. 167)

முற்றுமோனை

நாற்சீரடியின் அனைத்துச் சீர்களிலும் மோனை அமைந்து சிறப்பின் அது முற்றுமோனை எனப்படும். அவ்வாறு அடிமுழுதும் அமைப்பது அருஞ்செயலாகும். முற்றுமோனைத் தொடை சிறக்கவும் மகரிஷியின் கவிதைகள் விளங்குகின்றன. இவ்வகவலிலும் அத்தகைய ஆட்சிச் சிறப்புடைய அடிகளைக் காணலாம்.

எ.டு:

'யூகம் யுக்தி யோசனை யோடு'
'அனைத்தும் அறிந்துபின் அறிவையும் அறிந்ததால்'

(ஞானக். I, பா. 167)

இணைஎதுகை – இணை எதுகையணி

நாற்சீரடியொன்றின் முதலிரு சீர்கள் தொடைக் கூறுபாட்டால் ஒத்து அமையின் அது 'இணை' என்று கூறப்படும். 'இணைமோனை', 'இணைஎதுகை', 'இணைமுரண்' என இவை அமையும். நாற்சீரடியொன்றின் முதலிரு சீர்கள் எதுகைத் தொடையால் ஒன்றி அமையின் அது இணைஎதுகை என அழைக்கப்பெறும். யாப்பியலின் ஒரு கூறாக அமையும்

இணைஎதுகை என்பது பிற யாப்புக்கூறுகளினும் ஒரு கவிதைக்குக் கூடுதல் அழகை வழங்குவதால் அணிஇலக்கண நூலார் அதனை இணை எதுகையணி என விதந்து போற்றுவர். குறிப்பாக மாறனலங்கார ஆசிரியர் (நூ. 180) இதுகுறித்து இலக்கணமே செய்துள்ளார்.

இவ்வாறு போற்றப்பெறும் இணைஎதுகை அமையவும் மகரிஷி அவர்கள் இவ்வகவலில் (பிற கவிதைகளிலும்) சில அடிகளைப் படைத்துள்ளார்.

எ.டு. :

'அசைவாய் இசைவாய் அண்ட கோடிகளாய்'

(ஞானக். I, பா. 167)

விருத்த வடிவங்கள்

'விருத்தம் எனும் ஒண்பா' எனச் சிறப்பிக்கப்படும் வடிவம் விருத்தமாகும். தமிழ்ப்பா வடிவங்களிலேயே படைப்பார்க்கும் பயில்வார்க்கும் ஒருசேர எளிமையானதாக விளங்கும் வடிவமும் இதுவேயாகும். இவ்விருத்த யாப்பானது பல்வேறு உள்வகைகளைக் கொண்டது. பாக்களின் இனங்களாகக் கூறப்பெறும் வைப்பு முறையால் ஆசிரிய விருத்தம், வெளிவிருத்தம், கலிவிருத்தம், வஞ்சி விருத்தம் எனவும், சீர்களின் எண்ணிக்கை அடிப்படையில் அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், எனவும் வகைப்படுத்தப்பெறும். மேலும் ஒவ்வொரு வகையும் வாய்பாட்டு அடிப்படையில் பல உள்வகைகளைப் பெறும்.

மகரிஷி அவர்களின் கவிதைகள் பெரும்பாலும் விருத்த யாப்பிலேயே அமைந்துள்ளன. தம்நெறியினைக் கடைப்பிடித்து ஒழுகும் பலநிலை அன்பர்களையும் கருத்தில் கொண்டு பயில்வார்க்கு எளிதான இந்த யாப்பை மகரிஷி தேர்ந்து கொண்டார் என எண்ணத் தோன்றுகின்றது. விருத்த வகைகளில் ஆசிரியவிருத்தத்தையும் கலிவிருத்தத்தையுமே அவர் கையாண்டுள்ளார்.

மகரிஷி கையாண்ட ஆசிரிய விருத்த வகைகள்

(அ) அறுசீர் ஆசிரிய விருத்தம்

1. விளம் மா தேமா
   விளம் மா தேமா

2. மா மா காய்
மா மா காய்

(ஆ) எண்சீர் ஆசிரிய விருத்தம்

1. காய் காய் மா தேமா
காய் காய் மா தேமா

2. காய் காய் காய் காய்
காய் காய் காய் காய்

3. காய் காய் காய் மா
காய் காய் காய் மா

(இ) இரட்டை ஆசிரிய விருத்தம்

I. பன்னிரு ஆசிரிய விருத்தம்

1. மா மா காய்
மா மா காய்
மா மா காய்
மா மா காய்

2. காய் காய் காய் காய்
மா தேமா
காய் காய் காய் காய்
மா தேமா

3. இயற்சீர்களும் காய்ச்சீர்களும்
வரையறையின்றிக் கலந்து வருவது.

II. பதினாறுசீர் ஆசிரிய விருத்தம்

1. எல்லாச் சீர்களும் காய்ச்சீர்களாக வரல்.
2. காய் காய் காய் மா **x** 4

விருத்த வகைகளில் மகரிஷி படைத்த பாக்களுள் பருக்கைப் பதமாக வகைக்கொரு பாடலை இவண் நோக்கலாம்.

(அ) அறுசீர் ஆசிரிய விருத்தம்

1. விளம் மா தேமா
விளம் மா தேமா

இறைவனை மனதில் கொண்டு
ஏழ்மையில் வாழ்க்கை செய்து
மறைபொருள் உணரத் தக்க
மகனைவேண்டித் தவம்செய் தென்னை
நிறைவாகப் பெற்றெ டுத்து
நேர்மையாய் வளர்த்த பெற்றோர்
அறவடி தொழுது இந்த
அரியநூல் எழுது கின்றேன்.
(ஞானக். II, பா. 1663)

2. மா மா காய்
மா மா காய்

அவனின் இயக்கம் அணுவாற்றல்
அணுவின் கூட்டுப் பக்குவம்நீ
அவனில் தான்நீ, உன்னில்அவன்
அவன்யார்? நீயார்? பிரிவேது?
அவனை மறந்தால் நீசிறியோன்
அவனை அறிந்தால் நீபெரியோன்
அவன்நீ ஒன்றாய் அறிந்தஇடம்
அறிவு முழுமை அதுமுக்தி
(ஞானக். I, பா. 2)

(ஆ) எண்சீர் ஆசிரிய விருத்தம்

1. காய் காய் மா தேமா
காய் காய் மா தேமா

உருவெடுத்து அறிவியங்கிக் கண்ட எல்லாம்
உடலழியும் மட்டேதான் நிலைத்தி ருக்கும்.
உருவியக்கி அறிவாற்றல் பயன்ப டுத்தி
உலகினிலே செய்தசெயல் விளைவ னைத்தும்
உருவெடுத்து வாழ்ந்துவரும் மனிதர் வாழ்வில்
உண்டுபண்ணும் நன்மைதீமை அளவிற்கேற்ப,
உருவழிந்து விட்டபின்னும் உலக மீது
உள்ளவர்க ளைத்தொடர்தல் கண்டு வாழ்வோம்
(ஞானக். II, பா. 855)

2. காய் காய் காய் காய்
காய் காய் காய் காய்

உடலெடுத்து உயிர்வாழும் ஒவ்வொரு மனிதருக்கும்
உலகினிலே வாழ்வதற்கும் புலன்இன்பம்
துய்ப்பதற்கும்
உடல்உயிர் அறிவுபரம் உணர்ந்துநிறை வெய்துவதற்கும்
ஒத்தபொருள், சூழ்நிலைகள், பிறர்உதவி
இவைவேண்டும்
உடலெடுத்த பெருநோக்கம் இயற்கைஇயல்
பரம்இவற்றை
ஒவ்வொருவ ரும்உணர்ந்து பிறர்உரிமை
காத்திடுவோம்
உடல்உயிர் வாழ்க்கையறம் உலகெங்கும்
தழைத்தோங்க
உலகிணைந்த பேரரசு உறுதிசெய்யக்
கண்டிடுவோம்
(ஞானக். II, பா. 1051)

3. காய் காய் காய் மா
காய் காய் காய் மா

உயிரினங்கள் அனைத்திலுமே மனிதஇனம் உயர்வு
உருஅமைப் பும்அறிவின் சிறப்பும்சான் றாகும்
உயிர்களிலே ஈரறிவு முதல்ஐந்து வரையில்
ஒன்றைஒன்று கொன்றுதின்று வாழும்வழி
இயல்பு
உயிர்களிலே ஐயறிவு விலங்குஇனம் இரண்டின்
உடல்உறவால் முதல்மனிதன் உருவானான்
அதனால்
உயிரினங்கள் அனைத்திலும் உள்ளகுணம் யாவும்
உட்பதிவாய் மனிதனிடம் உளஅதனை
யறிவோம்
(ஞானக். II, பா. 1442)

(இ) இரட்டை ஆசிரிய விருத்தம்

I. பன்னிருசீர் ஆசிரியவிருத்தம்

1. மா மா காய்
மா மா காய்
மா மா காய்
மா மா காய்

அறிவிற் சிறந்த விஞ்ஞானி (உன்)
அறிவின் வேக நுட்பமதை
உருவிற் சிறந்த நீயார்? என்
றொன்றை யறியத் திருப்பிக்கொள்!

குறிப்பிற் சிறந்த குருவாலே,
கொண்ட உருவின் காரணமாம்
கருவிற் றோன்றும் கனலறிவாய்,
கனவில் தோன்றும் விளைவறியாய்!

பொறியும் சிறந்த புலன்களாக
பூண்ட வேடம் தனையறிவாய்,
திரியில் தீபத் தொளிபோன்று,
தெளிவாய் உந்தன் நிலையறிவாய்.

நெறியிற் சிறந்த நிலையறிவாய்.
நினைப்பின் மூலம் முடிவறிவாய்
விரிவிற் சிறந்த விஞ்ஞானம்,
வெகுவே கத்தில் முடிவடையும். (ஞானக். II, பா. 1093)

2. காய் காய் காய் காய்
மா தேமா
காய் காய் காய் காய்
மா தேமா

இறையறிவால் வடிவமைத்து எண்ணற்ற தலைமுறையாய்
வித்து நாதம்
எனும்கருவில் தொடராக இயங்கிவரும் மதிப்புடைய
உடலை யும்அவ்

இறையாற்றலே பரமஅணு ஆகிப்பல பதிவுகளை
உள்ள டக்கி
இயங்குகின்ற உயிரினங்கள் பலவற்றில் உயிராக
இயக்கச் சீராய்

இறைநிலையே உயிர்களிலே இன்பதுன்பம் அறிவாயும்
இயங்கி நிற்கும்
இரகசியங்களை அறிகின்ற தகுதியுள்ள ஆறாவ
தறிவாய் உள்ளோம்

இறைநிலையும் அதனுடைய ஆற்றலையும் எழும்தோற்றம்
விளைவு எல்லாம்
எண்ணிஎண்ணி இன்புற்றும் இல்லறத்தில்
கடமைசெய்தும்
இனிதாய் வாழ்வோம் (ஞானக். II, பா. 806)

3. இயற்சீர்களும் காய்ச்சீர்களும் வரையறையின்றிக் கலந்து வருவது.

உலகப் பொதுஆட்சி யென்ற உயர்திட்டம்
ஒன்றுதான் போர் எழாமல்
ஒவ்வொரு நாட்டை அதனின் மக்கள்தமை
அச்சமின்றி பாதுகாக்கும்.
(முதலடி மட்டும் காட்டப்பட்டுள்ளது) (ஞானக். II, ப. 1049)

II. பதினாறுசீர் ஆசிரிய விருத்தம்

1. எல்லாச் சீர்களும் காய்ச்சீர்களாக வரல்.

ஆன்மிகத் துறையென்ற அகலவழிப் பாதையிலே
அடிவைத்து மென்மேலும் முன்னேறிப் போகுங்கால்
அறிவுபெறும் அனுபவங்கள் வியப்பாகும், இனிமையாம்
ஆன்மஒளி சுடர்விட்டு உள்ளுணர்வுப் பேறாகும்.

ஊன்உருவ மானஉடல் ஊர்தியென் னும்ஊடே
உயிர்என்ற சூக்குமமே "நான்" என்ற உணர்வுவரும்
ஒடுங்கஒடுங் கக்காணும் உண்மையோ அறிவதுவே
உயிரிலிருந் தோங்கியெழுந் துடல்உலகம் வெளிவிரியும்.

"நான்" அதுவே இருப்புநிலை மெய்ப்பொருள் தெய்வமெனும்
நன்முடிவு விளக்கமாம் அந்தமுழு முதற்பொருளே
நல்லஒழுங் காற்றலாய் நல்லுணர்வாய் அறிவறியும்
நல்ஊற்றாய்த் திருவருளாய் நல்லின்ப வெள்ளமாய்.

தேன்பொழியும் பேரின்பம் திகட்டாது சலிக்காது
திருத்தங்கள் எண்ணம்சொல் செயல்களிலே மலர்ந்துவரும்
செருக்கொழிந்து தான்அடங்கித் தெய்வநிலை எங்கெதிலும்
திருவருளின் காட்சியாம் திரும்புங்கள் உட்புறமாய்.
(ஞானக். II. பா. 1363)

2. காய் காய் காய் மா x 4

உலகத்தில் பெரும்பாலோர் உணவுடை வீடு
ஒழுக்கபழக் கம்பொருட்கள் உற்பத்தித் திறமை
உற்றவய தில்இனிய திருமணம்மெய் யறிவு
உள்நாட்டு வெளிநாட்டு எழில்காணும் வாய்ப்பு.

(முதலடி மட்டும் காட்டப்பட்டுள்ளது.) (ஞானக்.I பா. 646)

முதலில் இடம்பெற்ற பதினாறுசீர் ஆசிரிய விருத்த வகையினின்று வேறுபட்ட வகையில் இப்பாடல் வடிவம் அமைந்துள்ளது.

இத்தகைய அமைப்புடைய பதினாறுசீர் விருத்தங்கள் தமிழ்ச் செய்யுள் மரபில் மிகமிக அரிதாகவே ஆளப் பெற்றுள்ளன. அதனைக் கருத்தில் கொண்டு நோக்குகையில் இப்பாடல்களின் அமைப்புகள் அரிதான ஒன்று என்பதையும் புதுவடிவ முயற்சி என்றே சொல்லத்தக்கது என்பதையும் உணரலாம்.

ஐந்தடி விருத்த முயற்சிகள்

விருத்தப் பாக்கள் ஒரெதுகையால் தொடுக்கப்பெற்ற நான்கடிகளால் அமைவனவாகும். தமிழ்ச் செய்யுள் மரபில் அரிதினும் அரிதாக விருத்தப் பாக்கள் ஐந்தடிகளாலும் சில புலவர் பெருமக்களால் அமைக்கப்பெற்றுள்ளன. இலக்கண உரைகளும் இத்தகு பாடல்களை எடுத்துக்காட்டி இவையும் விருத்தத்துள்ளேயே அடங்கும் என அமைதி கூறியுள்ளன. சித்தர் பாடல்களிலும் தனிப்பாடல்களிலும் ஏன் இருபதாம் நூற்றாண்டின் பெருங்கவிஞராகிய பாரதிதாசன் பாடல்களிலும் ஐந்தடிகளாலான சில விருத்தப்பாடல்கள் புதுமையாக இடம்பெற்றுள்ளன. இப்பாடல்கள் கட்டற்றுப் பாய்ந்து உணர்ச்சி கொப்பளிக்கும் கவிஞனின் மன ஓட்டத்தின் விளைவு எனலாம். இத்தகு பாடல்கள் ஒன்றிரண்டை மகரிஷியின் கவிதைகளிலும் காண முடிகின்றது. சான்றாகப் பின்வரும் ஐந்தடிகளாலான எண்சீர் ஆசிரிய விருத்தப் பாடலொன்றைக் காணலாம்.

உளவியலை ஆராய்ந்தால் அறுகு ணங்கள்
உடலில்நோய் பலவிளைத்தல் அறிந்து கொள்வோம்
அளவிலா விருப்புகடும் பற்றி ரண்டும்
அல்லல்தரும் குன்மநோய் உண்டு பண்ணும்.

பிளவுசெய் சினம்குருதி அழுத்தம், மார்நோய்,
பித்து, புண், கண்நோய்கள், தாது மூளை
வளமழிவு செய்யும், மிகை மோகம் குட்ட
வகைகண்ணோய், நீரிழிவு, செய்யும் வஞ்சம்
உளஅமைதி, உடல்வலிவு, போக்கி மார்நோய்
உண்டாக்கும் தொடர்புநோய் பலவும் காட்டும்.

(ஞானக். II, பா. 1420)

கலிவிருத்த வடிவங்கள்

இயற்சீர்களை வாய்பாட்டு வரையறையோடும் வரையறை யின்றியும் கலந்தமைத்துப் பல வடிவங்களைக் கலிவிருத்த யாப்பில் அவர் கையாண்டுள்ளார் என்பது அறியத்தக்கதாகும்.

அண்டத்தில் கடவுளாய் அழைக்கப் படுபவன்
பிண்டத்தில் உயிரெனப் பேசப் படுகிறான்
கண்டத்தின் மேலே கருவில் நிலைத்தவன்
அண்டத்தும் பிண்டத்தும் அவனையே காண்கின்றான்.

(ஞானக். II, பா. 1174)

தெய்வ அறிவே திருந்திய அறிவாம்
உய்யும் நல்வழி உள்ளுணர் தவமே;
செய்யும் வினைகளைச் சீர மைத்திட
ஐய மில்லை அறும்பிற வித்தொடர்.

(ஞானக். II, பா. 1337)

இக்கலிவிருத்த வடிவங்கள் வரையறுக்கப்பட்ட வாய்பாடுகளைப் பின்பற்றவில்லை. நாற்சீரடிகள் நான்கால் தொடுக்கப்பெறுபவை கலிவிருத்தம் எனப்படும். அவ்விதிக்கேற்ப அமைந்துள்ள இவை இயற்சீர்களால் பெரிதும் பிணைக்கப்பட்டுள்ளன. முதற்கலி விருத்தத்தின் முதற்சீர்கள் காய்ச்சீர்களால் அமைக்கப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. வாய்பாட்டு வரையறை இல்லாதபோதிலும் இவற்றின் வடிவம் பாடலைப்படிப்போர் நெஞ்சை ஈர்க்கும் வித்மாக ஒலி நலம் திகழ அமைந்துள்ளமை சுட்டத்தக்கது.

தரவுகொச்சகக் கலிப்பாக்கள்

கலிவிருத்தங்களைப்போல நாற்சீரடிகள் நான்கால் தொடுக்கப்பெறுவனவே தரவுகொச்சகக்கலிப்பாக்கள் ஆகும்.

கலிவிருத்தங்கள் பல்வேறு வாய்பாட்டு அமைப்பில் அமையும். தரவுகொச்சகக் கலிப்பாக்களோ காய்ச்சீரினாலேயே அமையும். குறிப்பாக நிரையில் தொடங்கும் காய்ச்சீர்களையே பெரிதும் பெறும் (கலித்தளை அமையும் வண்ணம்), நல்ல ஓட்டமுடைய தரவுகொச்சகக் கலிப்பாக்களை மகரிஷி புனைந்துள்ளார்.

(எ-டு)

செல்வத்தால் செழிப்புடையோர் செல்வத்தின் துணைகொண்டே
இல்லாரைச் சுரண்டுகின்றார் அது அறமோ? சுதந்திரமோ?
இல்வாழ்வில் இன்னல்பல ஏற்படுத்தி மக்களுக்குத்
தொல்லைதரும் தனிவுடைமை தொலைத்தின்பம் காத்திடுவோம்.

(ஞானக். II, பா. 140)

ஈரடிப் பாக்கள்

குறுமையான ஈரடிப்பா வடிவங்கள் பலவற்றை மகரிஷி படைத்துள்ளார். குறள்வெண் செந்துறை, கண்ணி, பரணிக் கலித்தாழிசை ஒத்த வடிவின என வகைப்படுத்தத்தக்கனவாய் இவை விளங்குகின்றன.

குறள்வெண்செந்துறை வடிவின

நாற்சீரடிகள் இரண்டு ஒரெதுகையால் தொடுக்கப் பெறுவதே குறள்வெண்செந்துறை என்னும் யாப்பு வடிவமாகும். அடிகளில் இடம்பெறும் சீர்கள் இயற்சீர்களாகவே (ஈரசைச் சீர்கள்) அமைதல் இவ்வடிவின் தனி இயல்பாகும்.

(எ-டு)

உண்ணும் உணவு உனக்குக் கிடைத்தவகை
எண்ணி யுண்ணிடல் என்றும் உன்கடன்

(ஞானக். II, பா. 205)

கண்ணி வடிவின

வெண்டளை பெற்ற / பெறாத நாற்சீரடிகள் இரண்டு ஒரெதுகையால் தொடுக்கப்பெறின் அவ்வடிவம் கண்ணி எனப்படும். தாயுமானவரின் பராபரக்கண்ணி இவ்வகையில் குறிப்பிடத்தக்கது. கண்ணி வடிவிலான மகரிஷியின் பாடல் சிலவற்றினை இவண் காணலாம்.

செயலிலே விளைவாக தெய்வஒழுங் கமைப்பிருக்கப்
பயனென்ன தவறிழைத்துப் பரமனைப்பின் வேண்டுவதால்?

(ஞானக். II, பா. 1158)

பகுத்தறிவின் உயர்வினிலே பலப்பலவும் பேசுகின்றீர்
வகுப்புவெறி நெஞ்சத்தில் வைத்திருத்தல் முரணன்றே?

(ஞானக். II, பா. 1372)

பரணிக்கலித்தாழிசை ஒத்த வடிவின

அறுசீர், எழுசீர், எண்சீர் ஆசிரிய விருத்தங்களின் பாதி வடிவங்களாக, ஈரடி வடிவமாக இவை அமைகின்றன.

(எ-டு)

அறுசீர்வடிவம் :

வீட்டுக் கணக்கைப் போட்டுப்பின்
விடைகள் சரியா எனப்பாரீர்
நாட்டுக் குழைத்த நல்லோரின்
நினைவை என்றும் மறவோமே!

(ஞானக். II, பா. 334)

அறுசீர் வடிவம்:

என்றென்றும் மாறாத, அளப்பரிய, உவமையிலா,
இயற்கை வேகம்,
அன்றன்றும் வாழ்க்கையிலே நினைந்துநினைந்து அனுபவிப்பான்
அறிவு றிந்தோன்.

(ஞானக். II, பா. 1347)

எண்சீர்வடிவம்:

உணர்ச்சிக்கு எட்டுகின்ற தோற்றம் யாவும்
உண்மையிலே பொருளல்ல நிகழ்ச்சி யேதான்
உணர்ச்சியோ உயிராற்றல் உயிரோ தெய்வ
உவப்புதான் உண்மைநிலை தெய்வ மேதான்.

(ஞானக். II, பா. 1163)

கீர்த்தனை

இசையோடு பாடுவதற்கு ஏற்ற இசைப் பாடல்களையும் மகரிஷி எடுப்பு, தொடுப்பு, முடிப்புப் (பல்லவி, அனுபல்லவி, சரணம்) பகுதிகள் அமைய ஆங்காங்குப் படைத்துள்ளார்.

(எ-டு)

அன்பர்களே, வாரீர்
அறிவின் இருப்பிடம்
அறிந்து இன்பமுற (அன்பர்களே)

இன்பநிலையதை ஏகநிலையதை
அன்புநிலையதை
அறிந்திடலாம் இன்று (அன்பர்களே)

தின்று திரிந்து உறங்கவோ பிறந்தோம்
என்று நினைந்ததால் ஏனென உணர்ந்தோம்
அன்றாட வாழ்வை அறிந்தனுபவிக்க
இன்றேனும் விரைந்து எழுச்சிபெற் றுய்வீர்
(அன்பர்களே)

(ஞானக். II, பா. 1420)

(இதனைத் தொடர்ந்து மேலும் மூன்று சரணங்கள் இடம்பெற்றுள்ளன)

முடிவுரை

தமிழ்ப் பக்தி இயக்க - இலக்கிய வரலாற்றில் இராமலிங்க அடிகள், தாயுமானவர் முதலியோரின் யாப்பு மரபை அடியொற்றுவனவாக மகரிஷி அவர்களின் பாடல்கள் அமைந்து சிறக்கின்றன. பல்வேறு நிலைகளில் திகழும் அன்பர்கள் யாவரும் தனது சிந்தனைகளை உணர்ந்து பயிலவும், ஓதவும் ஏற்ற வண்ணம் இனிய எளிய யாப்பு வடிவங்களையே மகரிஷி அவர்கள் பெரும்பாலும் பயன்படுத்தியுள்ளார். அவர்தம் பாடல்களில் அகவல், பல்வேறு ஆசிரிய விருத்த வடிவங்கள், கலி விருத்த வடிவங்கள், தரவு கொச்சகக் கலிப்பாக்கள், கண்ணி, குறள் வெண் செந்துறை முதலிய குறுமையான வடிவங்கள் ஆகியவற்றைப் பரவலாகக் காணமுடிகின்றது. விருத்தங்களில் சில புது வகைகளையும் கண்ணுற இயல்கின்றது. அவர்தம் பாடல்கள் அனைத்திலும் மோனையெழில் சிறக்க அமைந்து திகழ்கின்றது. தலையாகு எதுகை, இணை எதுகை, கூழை மோனை, முற்று மோனை, இயைபுத் தொடை முதலிய தொடை நலன்களும் ஆங்காங்கு இடம்பெற்றுக் கற்போர்க்கு இன்பமூட்டுகின்றன. அவர்தம் பாடல்களின் வடிவ நலன்களும் தொடைநலன்களும் அவர்தம் பாடல்களின் செழுமைக்கும் சிறப்புக்கும் உறுதுணையாக அமைந்து ஒளிர்கின்றன. சிறிதளவே கற்றோரையும் நிரம்பிய

புலமையாளரையும் ஒருசேர ஈர்க்கும் வகையில் தம் பாட்டுப் பனுவல்களில் யாப்பு வடிவங்களைத் தேர்ந்து திறம்பட ஆண்டுள்ள மகரிஷியின் மேதமை, அவர்தம் கவிதைப் படைப்புகளின் வெற்றிக்கு அடிப்படையாக அமைகின்றது.

துணை நூல்கள்

1. அமிதசாகரனார், யாப்பருங்கலக்காரிகை, கழகம், சென்னை, 20ஆம் பதிப்பு, 1996.
2. அமிதசாகரனார், யாப்பருங்கலம், கழகம், சென்னை, மறு பதிப்பு, 1976
3. திருக்குருகைப்பெருமாள் கவிராயர், மாறன் அலங்காரம், ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்சிரமம், ஸ்ரீரங்கம், 2005.
4. யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி, ஞானக் களஞ்சியம் II, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, விரிவுப் பதிப்பு, 2000.
5. யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி, ஞானக் களஞ்சியம் II, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, விரிவுப் பதிப்பு, 2000.

கோளும் குறிக்கோளும்

க.ப. வித்தியாதரன்

மண்ணில் நல்ல வண்ணம் சமூகம் வாழ்வதற்கு வள்ளுவர் தொடங்கி, வள்ளலார் வரை எத்தனையோ பெரியோர்கள் தோன்றி அனைவரும் சமுதாய நெறிகளை மானுட நெறியோடு இணைத்து மனிதம் மேம்பட அரிய சிந்தனைகளாகத் தந்துள்ளனர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்கு நெறிமுறைகளைத் தந்து வாழ்க்கையின் வெற்றி, வாழ்கின்ற முறையிலேதான் அமைகின்றது என்பது இவர்கள் தம் துணிபு. இயற்கையின் இயக்கத்தைக் கணித்து, அறிவியல் பூர்வமாக அரிய சிந்தனைகளைத் தந்தவர்களும் ஆன்மிக நெறியின் உயர்வை உணர்ந்து மானுட வாழ்வுச் சிறப்புகளை மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

சமுதாயம், மானுடத் தோற்றம் கண்ட தொடக்க காலத்தில் பொதுமையான வாழ்நெறிகளைக் கொண்டிருக்கக் கூடும். காலமும் வரலாறும் மனித சமுதாயத்தைப் பல்வேறு நிலைகளில் மாறுபாடு கொண்டுள்ளவையாக மாற்றி இருக்கின்றன. சமயம், ஆட்சி, பொருள், புகழ் ஆகிய கூறுகளால் மானுடநேயம் மாசுபட்டுள்ளது. மானுடத் தோற்றத்தில் ஒருங்கிணைப்புத் தன்மையை இன்று இழந்து துன்புற்றுக் கொண்டுள்ளது.

சமயம் சார்ந்த சான்றோர்கள் பலர் இத்தமிழ் மண்ணில் தோன்றியுள்ளனர். ஆயின் 'சமரச சன்மார்க்கம்' என்ற பொருண்மையில் ஒரு தோழமை யோகத்தை வலியுறுத்தியவர் வள்ளல் பெருமான். அவ்வள்ளல் பெருமானுக்குப் பின் இருபதாம் நூற்றாண்டின் மானுடம் சிறக்க, தனிமனித வாழ்வின்

முனைவர் பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை – 600 113.

மேம்பாட்டிற்குரிய சிந்தனைகளையும் உலகச் சமய மேம்பாட்டிற்குரிய சிந்தனைகளையும் அருள் உரையாக இன்றைக்கு உலகளாவிய அளவில், இயற்கையின் ஆற்றலையும் இறைநெறியின் ஆற்றலையும் இணைத்து, ஆன்மீக அறிவியல் சிந்தனையாக மக்களுக்கு எடுத்துக் கூறிவரும் மகரிஷி அவர்கள் வெள்ளுடை அணிந்த வெள்ளைச் சித்தராகவே வாழ்ந்து வருபவர்.

இராமலிங்க அடிகள் மக்களுக்குக் குறிப்பாக ஏழை மக்களுக்கு உணவும் மருத்துவமும் தந்து ஆன்மீகம் கண்டவர். சீவ காருண்யத்தை வலியுறுத்தி உயிர்க்கொலை தடுத்தவர். அவரைப் போன்றே மகரிஷி அவர்களும் இச்சமூகத்திற்கு உலகளாவிய சிந்தனைகளை நல்கியவர். எளிய மக்களுக்கு மருத்துவ சேவையும் கண்டவர். சமூகத்தைச் சீரழிக்கும் குறைகளை மட்டும் எடுத்துப் பேசிச் செல்லாமல், அதற்குரிய தீர்வுதனையும் எடுத்துக்கூறியவர். மண்ணிற் பிறந்த இப் பெருமகனார் உலகளாவிய புகழுக்கும், உயரிய ஆன்மீகச் சிந்தனைகளுக்கும், சமூக சேவைக்கும் எல்லோரும் நலம் வாழ நாளும் சிந்தித்ததற்கும் அடிப்படையாக அவரது கோள் அமைப்புகள் எவ்வண்ணம் துணைநின்று சிறப்புச் சேர்த்தன என்பதை அவரது வாழ்க்கை வரலாற்றில் காணும் நிகழ்வுகளைக் கொண்டு ஒப்பிட்டு ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஈர்ப்புச் சக்தியே பிரபஞ்சத்தின் இயக்க சக்தியாக அமைகிறது. இயற்பியல் அறிஞர்கள் கூறும்போது எல்லா இயக்கமும் ஈர்ப்பு, மற்றும் உந்து விசைகளின் அடிப்படையிலேயே இயங்குகின்றன என்பர். வானவியலாரும் சோதிட வியலாரும் இக்கருத்தில் மாற்றுக் கருத்துக் கொண்டார் இல்லை. இவ்ஈர்ப்புச் சக்தி பற்றிச் சிந்தித்த வேதாத்திரியார் இவ்வாறு விளக்கம் தருகிறார்.

அணுவின் கூட்டால் Molecule என்ற பேரணுவும், அதனுடைய கூட்டால் இந்தப் பேரியக்க மண்டலத் தோற்றங்கள் எல்லாமும் உண்டாயிற்று என்று உணர்ந்து கொண்டால் பேரியக்க மண்டலப் பரிணாம ரகசியங்கள் அனைத்தும் விளங்கி விடும். அந்தச் சுத்த வெளியிலே எந்தச் சக்தி பிறந்ததோ அந்தச் சக்திதான் விண்சுழல் அலை. அந்தச் சுழல்அலை சுழலும்போது அது சுற்றிலுமுள்ள சுத்த வெளியிலே மோதும்போது விரிவலை

உண்டாகிறது. அப்படி உண்டான விரிவலை சுத்த வெளியிலே சென்று தானே அமையும். இப்படிச் சேரும்போது இந்த விரிவலையும் சுத்த வெளியாக உள்ள சிவநிலையும் சேர்ந்து காந்தம் என்ற சக்தியாகிப் பேரியக்க மண்டல முழுமையும் நிறைந்துள்ளது. காந்தத்தில் இரண்டு விதமான இயக்க ஆற்றல்தான் உண்டு. ஒன்று தள்ளும் ஆற்றல் சக்தி. இது விரிவலையால் உண்டாகிறது. மற்றது கொள்ளும் சக்தி. இது இருப்புநிலையாகிய இறைவெளியால் அமைகிறது (Repulsive force & Attractive force). இந்த இரண்டும் தான் காந்தம். எங்கும் எந்த இடத்திலும் ஈர்ப்பு ஆற்றல் வேறுபடுவது இல்லை. விரிவலை அழுத்தத்திற்கு ஏற்ப தள்ளும் ஆற்றல்தான் வேறுபடும்.

இயற்கையாகவே கூட அணுக்கூட்டங்கள், கோள்கள் இவற்றின் சுழற்சியால் பரவலாக வான்காந்தம் அங்காங்கே குவியப் பெற்று அக்காந்தத்திலுள்ள வேகம் அதன் முதல் நிலைக்கும் பரவும்போது விரியும் வேகத்தில் அழுத்தமாக, ஒலியாக, ஒளியாக, சுவையாக, மணமாக ஜீவ இனங்களிலே மனமாகத் தன்மாற்றம் (Physical Transformation) பெறுகிறது.[1]

கோள்களின் காந்த அலைகள் பிரபஞ்சத்தின் உள்ளே உந்தும் போது, பிரபஞ்சத்தின் அண்டமான பூமியின் ஈர்ப்பு விசையின் செயல்திறனால், பூ உலகில் தோன்றும் ஒவ்வொரு ஆன்மாவும் (உயிரும்) ஒரு வகை உந்து விசையைப் பெறுகிறது. அத்தகைய காந்த சக்தியே கோள்களின் ஆற்றலாகக் கருதப்படுகிறது. ஒவ்வொரு உயிரும் இம்மண்ணுலகில் வாழ்க்கையின் போக்கில் காணும் உயர்வு-தாழ்வு, ஏற்றம்-இறக்கம், புகழ்ச்சி-இகழ்ச்சி, துன்பம்-இன்பம் போன்ற மன உணர்வுகளுக்குக் காரணமாகக் கோள்களின் காந்த சக்தியே அடிப்படையாகிறது என்று சோதிடவியலார் கருதுகின்றனர். இதனை மகரிஷி அவர்களும் வற்புறுத்துகிறார். அவ்வகையில் மகரிஷியின் வாழ்க்கைத் தடத்தில் காணும் பல்வேறு நிகழ்வுகளை அடிப்படையாக வைத்து அவர் ஏற்றமிகு வளர்ச்சிக்குக் காரணமான அவரது சாதக அமைப்பு பற்றி இனிக் காணலாம்.

நிகழும் விரோதிகிருது வருடம், ஆடி மாதம் 30ந்தேதி திங்கள்கிழமை (14-8-1911) கதிருதயாதி நாழிகை 1.40க்கு, அமர பட்சத்து, சதுர்த்தி திதியில் பாலவ நாமகரணம், திருதிநாம யோகத்தில் தெய்வக் குழந்தை 'வேதாத்ரி' சுப ஜனனம்.



பிறவி நட்சத்திரம்: உத்திரட்டாதி நான்காம் பாதம்
இராசி: மீனம்
சனிதிசை இருப்பு: வரு-3, மா-5, நாள்-5

ஆயில்யம்	4ல்	117:31:47	- சூ
உத்திரட்டாதி	4ல்	344:03:33	- சந்
பரணி	4ல்	025:43:20	- செ
பூரம்	4ல்	144: 53:07	- புத
சுவாதி	3ல்	194:35:10	- குரு
உத்திரம்	3ல்	154:36:21	- சுக்
கார்த்திகை	1ல்	027:15:41	- சனி
அசுவினி	4ல்	011:54:11	- ராகு
சுவாதி	2ல்	191:54:11	- கேது
மூலம்	3ல்	248:36:22	- குளி
மகம்	3ல்	128:18:13	- உயிர்

மகரிஷியின் கோள்நிலை வரைபடமே மேலே காண்பது. மகரிஷி அவர்களின் இராசி மற்றும் நவாம்ச கட்டங்களை நோக்கினால் கருவிலே திருவுடையாராக அவர் இறையாசி பெற்றுள்ளதுடன் பெரிய குடும்பம்; பாசமிகு பெற்றோர்; தனித்த சிந்தனை;. எதிலும் ஈர்ப்புக் கொள்ளும் மனம்; விரைந்து முடிவு எடுக்கும் ஆற்றல்; உயரவேண்டும் அதன் வழி வறுமையை அகற்ற வேண்டும் என்ற விடாப்பிடியான நோக்கு; தாய் தந்தையரிடம் மிகுந்த மரியாதை; குரு வணக்கம்; நட்பைப் போற்றும் பண்பு; எண்ணிய எண்ணியாங்குச் செய்தல்; தன்னைச் சுற்றியுள்ள சமூகம் பற்றிச் சிந்தித்தல்; பொதுவுடைமைச் சிந்தனையில் நாட்டம்; அறிவியற் சிந்தனை; ஆன்மீகத்தேடல்; இறையாற்றல் எண்ணி வியத்தல்; ஏன்? எப்படி? எவ்வாறு? என்ற வினாக்களை எந்த ஒரு செயலுக்கும் அல்லது நிகழ்வுக்கும் கொண்டு கூட்டிப் பார்த்தல்; மன உறுதி; தியானம்; யோகம் போன்றவற்றை மனவலிமைக்கும் பயன்படுத்துதல்; புலால் உணவு தவிர்த்தல்; பிரபஞ்சத்தைத் தத்துவார்த்தமாக நோக்குதல் போன்ற குணநலன்களைக் காணமுடிகிறது.

இனி விரிவாக அவரது வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் 'எனது வாழ்க்கை விளக்கம்' என்ற நூலின் துணைகொண்டு அவர் வாழ்க்கையின் வெற்றிக்கான காரணங்களை ஆராயலாம்.

பாலப்பருவம்

மகரிஷி, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 14.8.1911 அன்று திருமதி சின்னம்மாள், திரு. வரதப்பன் என்பார்க்கு ஏழாவது புதல்வராகப் பிறந்தார். இவர் பிறந்த ஊர் சென்னை - செங்கற்பட்டு சாலைக்கு இடைப்பட்ட கூடுவாஞ்சேரி என்ற சிற்றூர் ஆகும். மாதுர் ஸ்தானாதிபதி, செவ்வாய், சனி சேர்க்கைப் பெற்றதால் இவர் அன்னை சிகர எழுத்தை முன்வைத்தவராக சின்னம்மாள் என்ற பெயருடையவராக அமையப் பெற்றார். சூரியன் திருமால் கிரகமான புதனின் சாரம் பெற்றதால் திருமாலின் பெயர்களில் ஒன்றாகிய 'வரதன்' என்ற பெயர் இவர் தந்தைக்குரிய பெயராயிற்று.

ரிக், யஜூர், சாம, அதர்வன என்னும் நான்கு வேதங்களும் செறிந்து கிடக்கும் கடல் வீடான, சக்தி வீடான கடகத்தில்

லக்னாதிபதி சூரியன் நின்றதாலும் வேதத்தின் கோளான குரு, ஞான கிரகமான கேதுவுடன் அமரப்பெற்றதால் வகர ஏகார எழுத்து முதலெழுத்தாக வரவேண்டும் என்ற சோதிடவியலின் கருத்துப்படி, வேதாத்திரி அதாவது 'வேத வேழம்' என்று போற்றும்படியாகப் பிற்காலத்தில் வேத ஞானத்தில் நுண்மாண் நுழைபுலம் பெற்றவராக விளங்குவார் எனக் கருதி, அன்றே இவருக்கு வேதாத்திரி என்ற பெயரிட்டு இவரது பெற்றோர் மகிழ்ந்தனர்.

எளிய ஊரான கூடுவாஞ்சேரியில் தோன்றுவதற்குக்கூட, அவரது பிறப்பு சாதகத்தில் சந்திரன் சனி சாரம் பெற்றதுதான் எனச் சோதிட வல்லுநர்கள் கருதுகின்றனர்.

இவருக்கு முன்பிறந்த சகோதரர்கள் மறைந்ததற்கு வலுவான காரணமாக அமைவது இவரது சாதக அமைப்பே. சகோதர வீட்டிற்குரிய சுக்கிரன் நீச்சம் பெற்றும் சகோதரகாரகன் செவ்வாய், சனி, ராகுவெனும் பாவ கிரகங்களுடன் சேர்ந்ததுமே இழப்பிற்குக் காரணமாகிறது. இவ்வாறான இழப்பு ஒரு பக்கம் இருந்தபோதும் இவரது வாழ்க்கைத் தடம் இதனால் பிறழ்ந்து விடவில்லை.

முறையான கல்வி இவரது பெற்றோரால் தரப்படுகிறது. சோதிட மரபுப்படி விசயதசமி அன்று பள்ளியில் சேர்க்கப்படுகிறார்.

> **1916ஆம் ஆண்டு விஜயதசமி தினத்தை என் தந்தையார் எதிர்பார்த்திருந்தார். அவருக்கு ஒரு சோதிட நண்பர் எதிர் வீட்டில் இருந்தார். அவரிடம் சென்று நேரம் குறித்துக் கொண்டார்**[2]

இப்படி முதன்முதல் பள்ளிக்கூடப் பயணம் ஒரு சோதிடரின் வழிகாட்டல் மூலமே நடைபெற்றுள்ளது என்பது அவரது வாய்மொழி வழியாகவே அறியலாம்.

ஏழ்மைச் சூழலில் பிறந்ததால் அவரது மனம் வெம்பி விடாமல் ஏழ்மையை அகற்றுவதற்கான அல்லது ஏழ்மையில் காணும் வறுமையைப் போக்குவதற்கான தீர்வு என்ன என்ற நோக்கில் தன் சிந்தனையைச் செலுத்தி அதன் பயனாக, தெரிந்த ஓர் தொழிலை உடன் தேர்ந்தெடுத்துக் கொள்வதே வறுமைக்கு மாற்று எனக் கண்டறிந்தார். அதன்படியே பெற்றோர்க்குத்

துணையாகவும் தனது செலவுகளைத் தானே பார்த்துக் கொள்ளும் அளவிற்கு ஏழு வயதிலேயே நெசவுத் தொழிலை கற்கத் தொடங்கினார். இதுபற்றி அவர் கூறும்போது,

> ஐந்து வயதில் பள்ளி சென்றேன்; எட்டு
> ஆண்டில் மூன்றாம் வகுப்பு முடித்து விட்டேன்;
> நொந்து வறுமை மீறிப் பருத்திப்பஞ்சு
> நூல் நெசவில் எனைப் பெற்றோர் பழக்கி வைத்தார்;
> இந்தத் தொழிலைச் செம்மையாகக் கற்று
> ஏதோ ஓர் அளவுக்குக் கூலி பெற்றேன்.[3]

மகரிஷி அவர்களின் பிறப்புக் கோள்நிலையை நோக்கும் போது தீர்க்கமான, துணிச்சலான முடிவுகளை எடுக்கக்கூடியவர் என்பது தெரியவருகிறது. தாய், தந்தையர் பழகி வந்த தொழிலை இவர் போற்றிக் கொண்டதற்குச் சாதக ரீதியாகப் பார்த்தால் துணிக்குரிய கிரகம் சுக்ரன் தொழில்வீட்டிற்கு அதிபதி ஆனதுடன் தனத்துக்குரிய வீட்டில் நின்றதால் அத்தொழில் வழியாகவே இவர் தன் வாழ்க்கைக்குரிய பெருஞ் செல்வத்தைப் பெறுவதற்கான வாய்ப்பு அதிகமாக இருப்பதைக் காண முடிகிறது. அவ்வகையில் அவர் அவ்இளம்பருவத்திலேயே அத் தொழிலில் நல்ல வருமானத்தைக் கண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

> வறுமையைப் போக்க ஊக்கத்தோடு உழைத்தேன். காலை ஆறு மணிக்குத் தறிக்குழியில் இறங்கினால் இரவு ஒன்பது மணிவரையில் தொடர்ந்து நெசவு நெய்வேன். மத்தியில் தறியில் இருந்த படியே காலை உணவு கொள்வேன். கேழ்வரகுக் கூழ், அதை இரண்டு நிமிடங்களில் குடித்து விடுவேன். பகல் உணவு கொள்வதற்காகத் தறியைவிட்டு எழுந்து வருவேன். இருபது நிமிடங்களில் சாப்பாடு, ஓய்வு எல்லாம் முடிந்துவிடும், கண்ணா அதிகமாக நெசவு செய்யாதேடா உடல் இளைத்துவிடும் 'உன்னைப் பெற்ற அருமை, எங்களுக்குத் தானே தெரியும்' என்பார்கள். அவர்களுக்கு உருக்கமாகவும் பணிவாகவும் பதில் சொல்வேன். தறி நெய்வதில் எனக்கு மிகவும் ஆசை இருந்ததை எடுத்துக்காட்டி, 'அந்த ஆசை நம்

குடும்பத்துக்கு நன்மைதானே அம்மா தருகிறது' என்பேன்.[4]

என்ற வரிகள் வழியாக இளமைப் பருவத்திலேயே வறுமையின் வீரியத்தையும் அதை அழிப்பதற்கு ஆக்கபூர்வமான உழைப்பே சரியான மருந்து என்பதையும் மகரிஷியின் நடைமுறை வாழ்விலிருந்தே அறிய முடிகிறது.

பருவத்திற்கேற்ற அறிவு என்பது அறிவியல் சித்தாந்தம். ஒவ்வொரு ஆண்டும் ஒரு மனிதனுக்கு ஒவ்வொரு வகையான பட்டறிவைத் தருகிறது. வேதாத்திரியின் மனதில் வறுமை என்ற சொல் மிக ஆழமாக்வே பதிந்துவிட்டது. அதனைப் போக்க வேண்டுமென்றால் நெசவுத் தொழிலால் மட்டுமே பயனில்லை என்ற கருத்துக்கு வருகிறார். இந்தக் கருத்து அவரது பன்னிரெண்டாம் வயதில் ஏற்படுவதாகத் தெரிகிறது. ஏதேனும் ஒரு உத்தியோகம்தான் இந்த வறுமையை அகற்ற ஏற்றப்பிடிப்பு எனக் கருதுகிறார்.

ஆங்கிலம் படித்தால்தான் ஒரு நல்ல பணி கிடைக்கும் என்பதில் மகரிஷி ஆழமான நம்பிக்கை கொண்டிருந்தார். கூடுவாஞ்சேரிப் பள்ளி ஆசிரியர் ஒருவரை அணுகி ஆங்கிலம் கற்கத் துணிந்தார். ஆசிரியருக்கு மாத ஊதியமாக எட்டணா தர வேண்டி இருந்தது. மாலைச் சிற்றுண்டிக்காகத் தந்தையார் தரும் காலணாவை முப்பது நாட்களுக்குச் சேர்த்து, ஏழரை அணாவாகப் பெருக்கிக் கொண்டு தந்தையிடம் அரையணா வாங்கிக் கொண்டால் ஆசிரியர் ஊதியம் தந்துவிடலாம் என முடிவெடுத்தார். அதன்படி ஆங்கிலமும் கற்கலானார்.

பிறப்புக் கோளின் விதிப்படி இக்காலக்கட்டத்தில் வறுமையான சூழல் நிலவிய போதும் புதன் இலக்னத்தில் நின்றதாலும் அன்னிய மொழியான ஆங்கிலம் கற்பதற்குச் சந்திரனுக்கு வாக்கு வீட்டில் சனி நின்றதாலும் இவருக்கு யாருடைய துணையுமின்றி அவரே தன் கல்விப் பாதையை அமைத்துக் கொள்வதற்கான சூழல் அமைந்திருப்பதைக் காணலாம்.

இவருடைய மேன்மைக்கு உறுதுணையாக இருந்தது அவரது இறைதேடலே என்றால் மிகையாகாது. வினாயகப் பெருமான் பொதுவாகக் குழந்தைகளின் தெய்வம் எனப்

பாராட்டப்படுபவர். பிள்ளைகளுக்குப் பிடித்ததால் பிள்ளையார் எனத் தமிழ் இவரைப் பாராட்டும். ஔவையாரும் பிள்ளையாரைக் குழந்தைகள் தெய்வமாகவே சுட்டிக் காட்டுவார். மகரிஷி அவர்கள் பிள்ளையாரிடத்துத் தானாகவே பக்தி கொண்டார். அதன் காரணமாக அச்சிறு வயதிலேயே பூசாரிபோல கோவிலில் பணியாற்றியுள்ளார்.

> **பிள்ளையார் வணக்கம் எளிதில் எல்லா வெற்றிகளையும் அளிக்கும் எனக் கேள்விப்பட்டிருந்தேன்**[5]

இந்தக் கொள்கையே பிள்ளையாரிடத்து இவரை நெருக்கம் பெறச் செய்தது. அதற்குக் காரணம் இவரது சாதக அமைப்பில் பக்தி இடமான, மூன்றாவது வீட்டில் குருவும் கேதுவும் இணைந்திருத்தலே எனக் கூறலாம். அதோடு ஆன்மீக நெறிக்கு அடிப்படையாகக் கருதப்படும் சீவகாருண்யம், புலால் உணவு மறுத்தல் என்பன இவரது கொள்கைகளாகவே அமைகின்றன. இதற்கு வலுவான ஆன்மீக கிரகங்களான குருவும், கேதுவும் உணவுக்குரிய வீடான மூன்றாம் இடத்திலேயே அமையப் பெற்றும் அவரது பதினாறு வயதான அக்காலக் கட்டத்தில் புதன்தசையில் குரு புத்தி நடைபெற்றதும் காரணம் எனலாம்.

இனி சிறப்புக் கூறுகளாக, **தனிமனிதச் சிந்தனை, சமூகச் சிந்தனை, ஆன்மீகச் சிந்தனை, இறையியல் சிந்தனை, மனிதநேயச் சிந்தனை** என்ற வகையில் இவர் வாழ்க்கையில் கண்ட வெற்றிகளைத் தொகுத்துக் காணலாம்.

தனிமனிதச் சிந்தனை

மனதுக்காரகனும், உடற்காரகனுமாகிய சந்திரன் சிம்ம லக்னத்திற்கு எட்டாம் வீடான குருவின் மீன வீட்டில் சனியின் நட்சத்திரத்தில் அமர்ந்த காரணத்தால்தான் இவருக்கு இளம் வயதிலேயே உடல்நலம் காத்தல், மனநலம் பேணுதல் போன்றவற்றில் நாட்டம் ஏற்பட்டு உடல்நலம் பேண மூலிகை மருந்துகள் தயாரிக்கும் பணிகளில் ஈடுபாட்டை ஏற்படுத்தியதுடன் மனநலம் பேண எளிய தியான முறைகளான குண்டலினி யோகத்தை, அவயகங்களை வருத்தாத உடற்பயிற்சி போன்றவற்றை அவர் அறிய முடிந்தது.

மகரிஷி அவர்கள் தன் குடும்பச் சூழல் ஒரு பக்கம் இடர்ப்பாடு கொண்டதாக இருந்தபோதும், அவர் அச்சூழல்

மாற என்ன செய்யவேண்டும் என்று எண்ணுவதைவிட ஒரு தனிமனிதன் இத்தகைய துன்பத்தை எப்படிக் காண்கிறான், அவன் எவ்வாறு தீர்வு காண வேண்டும் என்பதிலேயே அதிகக் கவனம் செலுத்தியுள்ளார். இதற்குக் காரணம் சமூகம், உடலுழைப்பு. தனிமனிதன் சார்ந்த சமூக முன்னேற்றச் சிந்தனைகளுக்குக் காரகனாகிய சனியின் ஆளுமை நீச்சபங்க ராச யோகமாக அமைந்ததால் இவருக்குத் தன் குடும்பத்தைக் காட்டிலும் சமூகம் சார்ந்த சிந்தனையே அதிகமாக அமையப் பெற்றது எனலாம்.

அதன் வெளிப்பாடாக அவர் சிந்தனையில் முகிழ்த்த நூலே 'வாழ்க்கை வள உயர்வுப் படிகள்' என்ற நூலாகும். இந்நூலில் ஒவ்வொரு மனிதனும் மனவளக்கலை என்னும் வாழ்க்கை வளக் கல்வியை அறிந்திருத்தல் வேண்டும். அக்கல்வியை அறிவதற்கு ஐந்து படித்தளங்கள் உள்ளன என்பார். அவை வருமாறு:

1. உடல் நலம் காத்தல் (இலக்கினாதிபதி சூரியன் 12ல் நின்றால் உடல்நலம் பற்றிய அக்கறை; ஆராய்தல்; சூரியன் இத்தகைய எண்ணங்கள் வழங்கும்).

2. மன இயக்கத்தை எண்ணங்களைச் சீர் அமைத்து மனவளம் காத்தல் (மனோகாரகன் எட்டில் சென்று மறைந்ததால் மனவளம் காக்கவேண்டிய விழிப்புணர்வும், அந்தச் சந்திரன் குருவின் வீட்டில் நின்றதால் மன ஓட்டத்தைச் சீரமைக்கும் ஆற்றலும் கிட்டுதல்).

3. கூடி வாழும் மக்களிடையே ஒத்தும் உதவியும் இனிமை காத்து வாழும் நட்பு நலம் காத்தல் (இலக்கினாதிபதி நட்சத்திரத்தில் சுக்கிரன் அமர்ந்திருப்பதால் உறவு, நட்பு போற்றுதல்).

4. பழைய வினைப் பதிவுகளால் தரம் குறைந்துள்ள கருமையத்தை நலம்பயக்கும் செயல்முறைகளைத் திட்டமிட்டுச் செய்து, தூய்மை செய்தல் (செவ்வாய் ஆட்சி பெற்று திரிகோணம் (ஒன்பதாமிடம்) பெற்றதால் பழையன கழிதலும், புதியன புகுதலுமான சிந்தனை பெறல்).

5. பேரியக்க மண்டலத்தின் உற்பத்தி, இயக்கம், விளைவுகள் அனைத்துக்கும் மூல ஆற்றலான இறைநிலையையும் அறிவையும் உணர்தல் என்பனவாகும் (ஞானகாரகன் கேது இராகுவின் நட்சத்திரத்தில் சூட்சும பரிவர்த்தனை பெற்றிருப்பதால் அண்ட வெளியில் இயக்கம் பற்றிய ஆர்வமும் உணர்வும் மேலோங்கும்).[6]

இதனை அடிப்படையாகக் கொண்டே சுய முயற்சியின் மூலமே வாழ்க்கையின் முன்னேற்றம் அமையும். அதற்கு நான்கு வகையான கோட்பாடுகள் ஒவ்வொரு மனிதனும் அறிய வேண்டும் அவை முறையே,

"தியான முறையில் சிறந்ததான எளிய முறைக் குண்டலினி யோகம், அவயவங்களை வருத்தாத உடற்பயிற்சி, தளராத தற்சோதனை, உயிர்ச் சக்தியைப் பாதுகாப்பதன் மூலம் வயோதிகத்தை தள்ளிப் போடும் சித்தர் கண்ட நெறியான காயகல்ப யோகம்" என்பனவாகும். இவற்றை முறையாகப் பின்பற்றி வருவோமெனில் மனிதனுக்கு துன்பம், இடர் போன்ற சோதனைகள் பெரும் மலையாகத் தோன்றாது.

சமூகச் சிந்தனை

சோதிடவியற்படி சமூகம், அரசியல், பொருளியல் போன்றவற்றிற்கு அதிபதியாக விளங்கும் சுக்கிரன், இவருடைய சாதகத்தில் லக்னத்திற்கு இரண்டில் நீசம் பெற்று சந்திரனின் பார்வையால் பலம் பெற்றதுடன் லக்னாதிபதி சூரியனின் நட்சத்திரத்தில் அமர்ந்ததால் இவருக்குச் சமூகம் உயரவேண்டு மென்ற சிந்தனையும், மக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வு அகல வேண்டுமென்ற நோக்கும், அரசியலில் உலகளாவிய ஓரரசு அமைய வேண்டுமென்ற சிந்தனையும் இவர் மனதில் ஏற்படக் காரணமாக அமைகிறது. அதுபோலச் சமூகச் சிக்கல்களுக்கான தீர்வுகளைத் தரவல்ல செவ்வாய் மகரிஷியின் சாதகத்தில் ருச்சுக, சுகபாக்ய மாளிகா யோக பலத்துடன் விளங்குவதால்தான் அவர் நல்முறையில் சிந்தித்துத் தீர்வுகளைத் தர முடிகிறது.

மனிதன் சமூகச் சூழலில் தன்மானம் காக்கும் பொறுப்புடைய ஓர் உயிரினமாக இருப்பதால், அவன் எப்பொழுதும் சமுதாய

வாழ்வில் ஊடுருவி நிலவி வரும் பழக்கத்திற்கும் தன்னிடம் ஓங்கி விளங்கும் அறிவுபூர்வமான சிந்தனையால் காணும் விளக்கத் திற்கும் இடையே போராடி வருகிறான். அவனால் பழக்கங்களை மாற்ற முடிவதில்லை. பெற்ற விளக்கங்களை மறந்தாலும் முடிவதில்லை. எனவே அவனால் அவனது வாழ்க்கையில் அவ்வப்போது நிகழும் சிக்கல்களை எளிதில் தீர்க்க முடியவில்லை.

மகரிஷி அவர்கள் உலகளாவிய அளவில் சிந்தனைகளைச் செலுத்தும் போது பல்வேறுபட்ட எண்ணங்களில் அதனை வடிவமைக்கிறார். சமுதாயத்திலுள்ள சில முக்கிய சிக்கல்களைச் சுட்டிக்காட்டி அவற்றிற்குத் தர்க்க முறையிலான தீர்வுகளையும் தருகிறார். இவ்வகையான சிந்தனை அவருக்குத் தோன்றக் காரணம் அவரது சாதக நவாம்சத்தில் சுக்கிரனும் குருவும் ஒன்றாக இணைந்து இருப்பதால் தான் இத்தகைய பன்னிரெண்டு விதமான சமூகச் சிக்கல்களை வரிசைப்படுத்துகிறார். ஒவ்வொரு தீர்வுக்கும் எத்தகைய கிரகச் சூழல் அடிப்படையாக அடையப் பெற்றது என்பது அடைப்புக்குறிக்குள் விளக்கப்பட்டுள்ளது.

"1. இயற்கை அறியாமை: நுண்விண் துகள்கள் முதல் உயிரற்ற சடப்பொருட்கள், உயிருள்ள சில இனங்கள், வானுலவும் கோள்கள் இவ்வையனைத்தின் செயல் பாடுகளை அறியாமை. பார்வைக்குப் புலப்படாத இயற்கையின் ஆற்றலும், செயலொழுங்கும் அறியாத காரணத்தால் மனித இன வாழ்வில் தடுமாற்றமும், தடமாற்றமும் ஏற்பட்டுப் பல துன்பங்களும், சிக்கல்களும் தோன்றுகின்றன, பெருகுகின்றன (நவாம்சத்தில் சூரியன் குருபிவன் வீடான மீனத்தில் அமர்ந்து தசம கேந்திரம் பெற்றதால் இயற்கையின் சூட்சும இயக்கத்தை உணரும் ஆற்றல் பெறல்).

2. எல்லாம் வல்ல இறைநிலையைப் பற்றியும், அதன் உளதாம் தன்மை மற்றும் ஆற்றலைப் பற்றியும் குழப்பம் (இராகுவானவர் கேதுவின் நட்சத்திரத்தில் அமர்ந்ததால் எல்லாம் வல்ல பரம்பொருள் எங்கும் நிறைந்திருத்தல் என உணரும் அறிவு பெற்றமை).

3. மனித உடலும் மனமும் சார்ந்த செயல்களையும் மதிப்புகளையும் அறியாமை; இன்ப துன்பத்தின் இயல்பு; அவற்றிற்கான உண்மைக் காரணங்கள்; மனதின் தன்மையும் அதன் அகநிலை மற்றும் புறநிலைச் செயல் வல்லமைகளையும் அறியாமை (நவாம்சத்தின் சந்திரன் நீசபங்க ராசயோகம் அடைந்ததால் மனதின் செயல்பாடுகளைத் தத்துவார்த்த முறையில் அறிதல்).

4. இயற்கையின் தெய்வீகத் தன்மையையும் மனித வாழ்க்கையின் மதிப்பையும் பிறவியின் நோக்கத் தையும் அறியாமையினால் பிறரை மதிக்காத தன்மை (இலக்கினம் கேதுவின் நட்சத்திரமான மகத்தில் அமைந்ததால், பிறவி எடுத்து வருவதற்கான காரண காரியங்களை அறிதல்).

5. தேவையற்ற பொருட்கள் மீது ஆசையும், தேவை யற்ற செயல்கள் மற்றும் சடங்கு முறைகளைப் பயன்படுத்துதலும் (பற்று நீங்கிய கேது பகவான் நவாம்சத்தில் எட்டாம் வீட்டில் நிற்பதால் தத்துவார்த்தமாகப் பொருள்கள் செயல்களின் நிரந்தர மற்ற நிலைமை உணர்தல்)

6. பொருளாதார ஏற்றத் தாழ்வு (செவ்வாய் சுக்கிரன் நட்சத்திரம் பரணியில் அமர்ந்ததால் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் பற்றி ஆய்தல்).

7. அரசியல் குழப்பங்களும் லஞ்ச ஊழலும் (சனியும் செவ்வாயும் மூன்று பாகைக்குள் நெருங்கி இருப்பதால் அரசியல் குழப்பம் லஞ்ச ஊழலைப் பற்றிச் சிந்தித்தல்).

8. உண்மையைத் தெளிவாக உணராமையினால் உண்டாகும் சமயத் தொடர்பான சகிப்புத் தன்மையின்மை (சுக்கிரன் இலக்கினத்திற்கு இரண்டாம் வீட்டில் நின்று லக்கினாதிபதி சூரியனுக்கு மூன்றில் அமர்ந்ததால் சமய சகிப்புத்தன்மை உணரும் ஆற்றல் அமைதல்).

9. பிறப்பிற்கு முன்னும் இறப்பிற்குப் பின்னும் உயிர் மற்றும் ஆன்மாவின் இருப்புத்தன்மையை அறியாமை (குருவும் கேதுவும் ஜோதி நட்சத்திரமான சுவாதி நட்சத்திரத்திலேயே அமர்ந்ததால் ஆன்மாவின் செயலை உணரும் திறனைப் பெறல்).

10. பெண்மையின் மேன்மையைப் புறக்கணித்தல் (பெண் கிரகங்களான சந்திரனும் சுக்கிரனும் சமசப்தம சாயலாய்ப் பார்த்துக் கொள்வதால் பெண்மையின் பேராற்றல் உணரும் திறனைப் பெறல்).

11. போர்க்கருவி உற்பத்தி மற்றும் போர்களின் பெருக்கம் (நவாம்சத்தில் தேள் வீட்டில் போர்க் கிரகமான செவ்வாய் ஆட்சி பெற்றதால் போர் குறித்த சிந்தனைகள் வலுப்பெறல்).

12. மனித வளத்தின் மேன்மையையும், முன்னேற்றத் தையும் பேணிக் காப்பதற்கான முழுமையான ஆன்மீகக் கல்வி இல்லாத நிலை (புத இலக்கினத்தில் அமர்ந்ததுடன் (சிம்மம்) சூரியனுக்கும், சுக்கிரனுக்கும் நடுவில் அமர்ந்ததால் முறையான ஆன்மீகக் கல்வி பற்றிய சிந்தனைச் சூழல்)."[7]

இப்பன்னிரெண்டு நிலைகள் சமூகத்திற்குச் சவாலாக விளங்குகின்றன. மகரிஷி அவர்கள் இதற்கான தீர்வைச் சொல்லும் போது பதினான்கு வகையான தீர்வுகளை முன் வைக்கிறார். இப்பதினான்கு நெறிகளையும் ஒரு சமூகம் கடைபிடித்து வருமேயானால் அச்சமூகத்தில் பகை, போர், பஞ்சம், பசி, பட்டினி போன்ற சமூக நோய்கள் அண்டாது என அறுதியிட்டுக் கூறுகிறார்.

'1. இறைவெளி என்ற தூய வெளியின் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலை (Self Compressive Surrounding Pressure Force) உணர்தல்

2. போரில்லா நல்லுலகம்

3. பொருளாதாரத் துறையில் சமநீதி

4. நேர்மையான நீதி முறை

5. சீர்செய்த பண்பாடு

6. சிந்தனையோர் வழி வாழ்வு
7. சிறப்புணர்ந்த பெண் மதிப்பு
8. தெய்வ நீதி வழி வாழ்தல்
9. தேர்த் திருவிழா தவிர்த்தல்
10. சீர்காந்த நிலை விளக்கம் உணர்தல்
11. பார் முழுதும் உணவு நீர் பொது ஆக்கல்
12. பல மதங்கள், பல கடவுள் பழக்கம் ஒழித்து உண்மை ஒன்றைத் தேர்ந்திடுதல்"[8]

இவ்வகையாகச் சமூகத்தில் காணும் சிக்கல்களுக்குத் தீர்வினைக் கண்டு சொல்லும் இவர் உலகளாவிய மனிதநேயச் சிந்தனையை வளர்க்கவல்ல உணர்வுகளே சமுதாயத்தில் காணும் ஏற்றத் தாழ்வுகளை நீக்கிச் சமத்துவத்தைத் தரவல்லதாக அமையும் எனக் கூறுகிறார்.

ஆன்மீகச் சிந்தனை

இவரது பிறப்புக்குறிப்பின் வழிப் பார்க்கும்பொழுது இவர் சூரியனின் ஆட்சி வீடாகிய சிம்மலக்னத்தில் பிறந்ததுடன் சூரியன் சக்தி வீடாகவும், சர வீடாகவும் அமையப் பெற்ற கடகவீட்டில் அமரப் பெற்றதால்தான் பூரணப் பொருள்பற்றிய சிந்தனையும், கோள்களின் காந்த ஈர்ப்புப் பற்றிய சிந்தனைகளும் இவரிடம் மேலோங்கி நிற்கிறது. அதனால்தான் இவருடைய ஆன்மிகச் சிந்தனை பிற ஆன்றோர்களின் சிந்தனைகளிலிருந்து வேறுபட்டு அமைகிறது. அது வருமாறு:

பல மதங்கள், பல கடவுள் பழக்கம் ஒழிந்து உண்மை ஒன்றைத் தேர்ந்திடுதல். இறையுணர்வு என்பது பெரும் மதிப்புடைய அறிவின் முதுமை நிலை. பேரியக்க மண்டல உற்பத்தி, இயக்க நியதி, விளைவுகள், பயன் இவையனைத்தும் அறிந்த அறிவின் முழுமைப் பேறாகும் அது.

பேரியக்க மண்டலத் தோற்றத்திற்கு எல்லாம் வல்ல ஒரு பூரணப் பொருளே இறைநிலையாகும். இறை நிலையை இயற்கை என்றும் சொல்லலாம். இயற்கையை நான்கு வகையாகப் பிரித்தும் காணலாம். இத்தகையதோர் சிந்தனை அவருக்குத் தோன்றக் காரணம், அவரது சாதகத்தில்,

'சூரியன் ஆயில்ய நட்சத்திரத்தில் அமர்ந்ததுடன்
சூரியனின் நட்சத்திரத்தில் சுக்கிரனும் சனியும்
இடம்பெற்றதால் கீழ்க்காணும் நான்கு நிலைகளில்
இயற்கையை அவர் உணரும் ஆற்றால் பெற்றார்'

என்ற அமைப்பில் கிரக நிலை அமையப்பெற்றதே ஆகும்.

1. உயிருள்ள ஜீவன்கள்
2. பிரபஞ்சத்திலுள்ள கோள்கள், உலகம்
3. விண்ணிலை எல்லாவற்றையும் பிரித்துப்பிரித்துப் பார்த்தல் அனைத்தும் விண்துகள்களின் கூட்டாக அமையும். (இதனைப் பரமாணு என்பர்).
4. இருப்பு நிலையாக உள்ள இறைவழி.[9] இவ்விறை வழியிலிருந்து சுழல் அலையாகப் பிறந்ததுதான் விண் என்ற நுண் துகள் (Energy Particle).

இந்த விண் பற்றி அறிவதுதான் விண்ணறிவு. இது காந்தத்தோடு தொடர்புடையது. காந்தம் என்பது காணும் உலகத்திற்கும், காணாத கடவுளுக்கும் இடையே ஒரு இணைப்புச் சக்தியாய் விளங்குவது (Medium). இதனை ஆங்கிலத்தில் Magnetism என்பர். காந்தத்துடைய இருப்பை விளக்குகிற போது Gravitational force, Electromatic Force, Weak Force and Strong Force என்று நான்கு வகையாக இருப்பதுதான் காந்த ஆற்றலென விஞ்ஞானம் எல்லை கட்டிக் கூறுகிறது. ஆகவே வற்றாத பேராற்றலாக, பேரறிவாக, காலமாக, வற்றா இருப்பாக, எது அமைகிறதோ அதுவே உண்மை. அந்த உண்மையை அறிதலே ஆன்மீகத்தின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதைப் பின்வரும் பாடலால் விளக்குகிறார்.

வற்றாயிருப்பு, பேராற்றல், பேரறிவு, நாம் எனும்
வளம் நான்கும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வமாம்
வற்றாத இந்நான்கும் விண்முதல் ஐம்பூதங்கள்
வான் கோள்கள், உலகம், உயிரினம் ஓரறிவுமுதல் ஆறாம்
வற்றாது பெருகிவரும் வளர்ச்சியே தன் மாற்றம்
வந்தவை அனைத்திலும் சீரியக்கம் இயல்பூக்கம்
வற்றாது பெருகும் பேரண்டத்தில் உயிர் வகையில்
வழுவாத செயல் விளைவு நீதியே கூர்தலறமாம் உண்மை,
உண்மை[10]

இறையியல் சிந்தனை

இவரது பிறப்புக் கோளில் கடவுள் பற்றிய சிந்தனை, பிரபஞ்ச நோக்கு, உடல் தத்துவார்த்த வினாக்கள், ஆன்மீகத்திற்கு அடிப்படையாக அமையும் வேதபாடங்கள், இறைத்துதி நூல் கற்றல் போன்ற செயன்மைகளைத் தரவல்ல ஐந்தாம் வீடானது வேதகல்விக்கு ஆசானாக விளங்கும் குரு பகவானின் வீடாக அமைவதாலும் அவர் ஞானக்காரகனாகிய கேதுவோடு, இணையப் பெற்றதாலும்தான் இறையியல் பற்றிய சிந்தனைகள் இவருக்கு மிகுந்திருப்பதைக் காணமுடிகிறது. அவ்விரு கோள்கள் சனி, செவ்வாய், ராகு ஆகிய கோள்களால் சப்தம சாயலாய் நோக்கு வதன் பயனாய் இவர் ஏழு வயதைத் தொட்டபோதே இவருக்கு இத்தகைய சிந்தனைகள் எழுந்துவிட்டதுடன் சாயா கிரகங் களான ராகுவும் கேதுவும் தங்களுக்குள் நட்சத்திர பரிவர்த்தனை பெற்று அமர்ந்ததுடன், கேது திரிகோணாதிபதி மற்றும் திரிகோணாதிபதி சேர்க்கையும் பெற்றதால் இவருக்குத் தத்துவ விசாரம் கீழ்க்கண்டவாறு விரிவடைகிறது.

> *"1. நான் யார்? உயிர் என்பது என்ன? உயிர் உடலில் எவ்வாறு இயங்குகின்றது? நோயும் முதுமையும் ஏன் உண்டாகின்றன? எப்படி உண்டாகின்றன?*
>
> *2. கடவுள் யார்? பிரபஞ்சத்தை ஏன் அவர் படைத்தார்?*
>
> *3. இன்ப துன்பம் என்னும் உணர்ச்சிகள் யாவை? இவற்றின் மூலமும் முடிவும் என்ன?*
>
> *4. ஏழ்மை ஏன்? எப்படி உண்டாயிற்று? அதைப் போக்குவது எப்படி?"*[11]

என்ற இந்த நான்கு வினாக்களே வேதாத்திரியை ஆன்மீக விழிப்புணர்வு கொள்ளச் செய்து இறைவனைப் பற்றிச் சிந்திக்க வைத்தது. இது பற்றி மகரிஷி அவர்கள் கூறும்போது வடமொழியில் கூறப்படும் பிரம்ம ஞானமே தமிழ் மொழியில் இறையுணர்வு எனப்படுகிறது. பேரியக்க மண்டல இயக்கங்களில் மறை பொருட்களாக உள்ளவை இறைநிலை, உயிர்நிலை அல்லது நுண்துகள், காந்தநிலை என்ற மூன்று பொருண்மை களின் தன்மை அளவு சுருதி, யுக்தி, அனுபவம் என்ற மூன்று வழிகளின், துணைகொண்டு சுத்த வெளியாகிய எல்லையற்ற இறைவெளியை உணர்வதே இறையியல் சிந்தனை ஆகும் எனக் கூறுகிறார்.

மனம் என்பது காந்த அலைகளால் ஆனது உடலில் ஏற்படும் உணர்வுகளிலிருந்து மன அலைகள் பிந்துப்படிகளாகத் திறனில் உயர்கின்றன. அவை உணர்ச்சி, தேவை, முயற்சி, செயல், விளைவு, அனுபோகம், அனுபவம், ஆராய்ச்சி, தெளிவு, முடிவு என்பனவாகும். இவ்வகையில் திறன் பெற்ற மன்மானது சீவகாந்த இயக்கத்தோடு இணைந்து சுத்த வெளியைக் காணுகிறது. ஆகவே ஒவ்வொரு மனிதனும் மனதின் எண்ணத்தைச் சுத்த வெளியோடு இணைக்க முயலும்போது அவன் இறைவனை உணருகிறான். என்பது மகரிஷியின் துணிபு.

மனிதநேயச் சிந்தனை

பண்புடன் புந்தி நிற்க
நண்புடன் பிரிய வாக்கி[12]

என்ற சோதிட விதிப்படி இவரது சாதக அமைப்பில் புதன் லக்னத்தில் அமர்ந்ததுடன் சுக்கிரனின் சாரத்தில் நின்றதால் நட்பில் விருப்பும், எல்லோரும் கூடி வாழவேண்டுமென்ற எண்ணமும், உலக ஒருமைப்பாட்டுச் சிந்தனையும், சீவகாருண்ய சிந்தனையும் இவர் உள்ளத்தில் மேலோங்கி வருவதற்கு அடிப்படையாக அமைகின்றது. பழமையை நீக்கிப் புதுச் சிந்தனைகளைக் கைக்கொள்ள வேண்டும் என்ற இவரது கொள்கை சோதிட ரீதிப்படி இராகு யோக வீடான மேடத்தில் வீற்றிருப்பதால் வலுவாக இவர் மனதில் பதிந்துள்ளது. இவற்றின் ஒட்டு மொத்த வெளிப்பாடே ஈண்டு தொகுத்துத் தரப் பட்டுள்ளது.

மகரிஷி அவர்கள் வள்ளலாரின் சீவகாருண்ய கோட்பாட்டில் மிகவும் ஈடுபாடு உடையவர். வள்ளலாரை அறிவதற்கு முன்னரே புலால் உண்ணுதலைத் தவிர்த்தவர். எல்லா உயிரிடத்தும் பேரன்பு பூண்டவர். இன்றைய உலகம் யுத்த பூமியாகக் காட்சியளிக்கிறது. இதற்குக் காரணம் மதம், ஆட்சி, பொருளாதாரம் என்னும் மூன்றும் ஆகும். மனிதநேயம் மிக்க உலகச் சமுதாயம் அமைய மகரிஷி அவர்கள் கூறுவன வருமாறு:

தேவையில்லாத துன்பமே தருகின்ற கருத்துக்களையும், செயல்களையும் விட்டுவிட வேண்டும்

ஆட்சிமுறை, பொருளாதார நிர்வாக முறை ஒரே மாதிரியாக மனிதகுலத் தேவைக்குத் தக்கவாறு அமைத்துக் கொள்ள வேண்டும்.

அறிஞர் பெருமக்கள் கூடி ஓர் ஐம்பதாண்டுக் காலத் திட்டம் வகுத்து, படிப்படியாகத் தேவையில்லாதவற்றைத் தவிர்க்கவும் தேவையுள்ள அனைத்தையும் புகுத்திக் கொள்ளவும் வழி வகுத்துக்கொண்டு வாழவேண்டும்.

வாழ்வின் இனிமைக்குத் தக்க சீர்திருத்தம் செய்து கொள்ள வேண்டும். மக்கள் குலம் மனஒருமையோடு முயற்சி செய்து இயற்கையின் இருப்பையும் அன்பையும் கருணையையும் உணர்ந்துகொண்டு பயன்பெற வேண்டும். அதாவது இயற்கையோடு இணைந்த வாழ்வுதான் சிறந்த வாழ்வாக அமைய முடியும் என உணரவேண்டும்.

அனைத்து மதங்களுமே இறைசார்ந்த அறநெறி வாழ்வையே வற்புறுத்துகின்றன. எனவே மதத்தின் பெயரால் பிரிவினையையும் வெறுப்பையும் வளர்க்காமல் மக்களிடையே ஒற்றுமையையும் அன்பையும் பரப்ப வேண்டும்.

ஒரே மதம் ஒரே கடவுள் என்ற நியதியின்படி வாழ முயற்சிகள் செய்ய வேண்டும். இதற்கு அனைத்து மக்களையும் காக்கும் உலகப்பேரரசு அமைதல் வேண்டும். உலகம் முழுதும் உணவு, நீர் ஆகிய வற்றைப் பொதுவுடைமை ஆக்க வேண்டும். மனிதகுல நன்மையைப் பாதுகாக்கின்ற அறநெறி சார்ந்த ஒரே ஆட்சிமுறை வேண்டும். கட்சி ஆட்சிமுறையை ஒழித்து, மனித உரிமைச் சாசனத்தின்படி ஆட்சிமுறை அமைத்திட வேண்டும்.

இவ்வாறாக மனிதம் தழைக்க, மானுடம் சிறக்க, மனிதநேயம் சிறப்புற்று ஓங்க மகரிஷி காட்டும் வழிகள் பல. அவற்றை உண்மையில் கடைப்பிடித்தால் சமூகம் உலகளாவிய அளவில் சிறப்புற்று தமிழகம் சிறக்கும்.

முடிவுரை

ஆறு போவது கிழக்கு
அரசன் சொல்வது வழக்கு

என்பது தமிழ்ச் சமுதாயம் கண்ட மரபுத் தொடர். அதுபோல கோள்களின் வழியே மாந்தனின் விதி என்பது பக்தி இலக்கிய

காலம் கண்ட ஆன்மீக மரபுத் தொடர். கோள்களின் இயக்கமே மண்ணிற் பிறந்த ஒவ்வொருவரையும் இயக்கி வருவதாக ஒரு நம்பிக்கை இன்று வரை உண்டு. ஒவ்வொருவரும் இன்ன வகையான வாழ்க்கையைப் பெறுவர் எனப் பிறந்த நேர கோள்நிலை இருப்பை வைத்துச் சோதிடவியலார் வகுத்துக் கூறுவர். அவ்வகையில் மகரிஷி அவர்களின் தொடக்க கால வாழ்க்கை, இடைக்கால வாழ்க்கை, அவரது உயரிய சமூக ஆன்மீகம் சார்ந்த சிந்தனைகள் முதலியவை முற்பகுதியில் சொல்லப்பட்டது.

மகரிஷியின் இத்தனைச் செல்வாக்கிற்கு அவரது அறிவியல் பூர்வமான ஆக்கச் சிந்தனைகள் ஒரு பக்கம் அமையப் பெற்றாலும் அதனினும் மேலாகத் தெய்வீகக் காரணமாக அமைந்தது அவரது பிறப்புக் கோள்களின் அமைப்பே எனலாம்.

சிம்ம லக்னத்தில் பிறந்த இவர் இறைப் பிரியராகவும், தரும சிந்தனையாளராகவும், வல்லமைமிக்க புத்திமானாகவும், பல்தொழில் பிரியராகவும் விளங்குகிறார்கள். அவ்வகையில் இவர் அவரது வாழ்க்கைப் பாதையில் ஆசிரியராகவும், தறி நெய்பவராகவும், துணி வியாபாரியாகவும், அஞ்சல்துறைப் பணியாளராகவும், சித்த, ஆயுர்வேத வைத்தியராகவும் இன்னும் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டவராகவும் அவரால் விளங்க முடிந்தது.

உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களைப் பற்றிக் குறிப்பிடும் போது,

நீதி பொன் பிறர்க்கு உபகாரி
வித்தை தாம்பூலப் பிரியன் சஞ்சாரன்
விரிவுள காது மார்புடையவன்
புத்திமான்.....
உத்தமர்க்கு இனியன் வழக்கினில் பலவான்
உத்திரட்டாதி நாளானே[13]

எனக் குறிப்பிடுகிறது. மகரிஷியை உற்று நோக்கும்போது சிறந்த கொடையாளராகவும், நல்லார்க்கு இனியராகவும், ஆன்மீக வாக்கு பலம் பெற்றவராகவும், அகன்ற மார்பு, விரிந்த செவிகளைப் பெற்றவராகவும் காண முடிகிறது.

பொதுவாக மகரிஷி அவர்களின் வாழ்க்கை சமாதானமான வாழ்க்கை அல்ல. வறுமை, செழுமை, தேவை, தேவைக்கான

போராட்டம் என வாழ்க்கை அமைந்ததற்குக் காரணம் இவருக்கு அமையப் பெற்ற சகட யோகமே எனலாம்.

அகடின் மன்னனுக்கு ஆறெட்டொரு வியத்
திகடி லாமதி யெய்தி யிருந்திடின்
சகட யோகடம் இதிற் பிறந்தார்க்கெல்லாம்
விகட துன்பம் விளையும் அரிட்டமே[14]

இவரது பிறப்புக் கிரக அமைப்பில் லக்னத்திலிருந்து மூன்று வீடுகளில் தொடர்ந்து கிரகங்கள் நின்றதன் பயனாய்ச் சூல யோகம் அமையப் பெற்றுள்ளதைக் காண முடிகிறது.

"உள்ளதோர் மூன்று வீட்டில் உற்றிடிற் சூலயோகம் மெள்ளவே பலன் அனேக வித்தையுள்ளவன்". இவையன்றி, இவரது பிறப்புக் கோளமைப்பில் சந்திரனுக்கு இரண்டில் சனி அமர்ந்திருப்பதால் இவர் வாழ்க்கையில் இவர் தந்தையாரால் இவருக்குச் சொத்து சேர்த்துத் தர இயலாது. பூர்வீகச் சொத்தும் கிடையாது. ஆனால், தானே தனது உழைப்பால் சுய அறிவால், பெருஞ்செல்வம் சேர்ப்பான் என்பது சுனபா யோகத்தின் விதி. இன்றைக்குத் துறவரசராக வாழ்வதைக் கொண்டு நாம் உணரலாம். மேலும் இவரது பிறப்புக் குறிப்பின் அடிப்படையில் செவ்வாய் ஆட்சிபெற்று சிறப்புடன் இருப்பதால் ருச்சுக யோகமும், சுக பாக்கிய மாளிகா யோகமும் இதன் பயனாய்ப் பொதுவுடமைச் சிந்தனையும் குரு சனி பார்வையால் குரு சண்டாள யோகமும், இதன் பயனாய்த் தான் அறிந்தவற்றைச் சமூகம் அறியப் பகிர்ந்து கொள்ளும் பண்பும், குருவும் செவ்வாயும் சமசப்தமமாக அமர்ந்து அதன் பயனாய்க் குருமங்கள யோகமும், இதனால் அறிவுத்திருக்கோயில் அமைப்பதற்கான வாய்ப்பும், சூரியனுக்கு இரண்டில் புதன் அமரப் பெற்றதால் சுபவேசி யோகமும், இதன் பயனாய் நல்ல பட்டறிவும், எட்டுக்குரிய குரு மூன்றில் நின்றதால் ஏற்பட்ட விபரீத ராசயோகப் பயனாய் உலகெங்கும் சென்று தமது ஆன்மீக கொள்கைகளை நிறுவியும், நீசச்சனி நீசபங்க ராசயோகம் நல்கியதின் பயனாய் நீண்ட ஆயுளும், காலத்தால் அழிக்க முடியாத கோட்பாடுகளை எளிய மக்களும் அறியும் வண்ணம் தரவல்ல வல்லமையும் பெற்றுப் பூரணமாக விளங்குகிறார்.

உள்ள மீனத்தி லிந்தை
..... தெள்ளிய வெள்ளிக்காண பண்டிதன்[15]

என்ற விதிப்படி இவரது சிந்தனை அத்தனையுமே கவிதையாக மலர்ந்தது. இவரது சாதகத்தில் மாதுர்காரகன் சந்திரன் முழு சுபவீடான மீனத்தில், குருவின் வீட்டில் அமர்ந்ததுடன் பன்னிரண்டாம் வீட்டிற்குரிய சந்திரன் இலக்கினத்திற்கு எட்டாம் வீட்டில் விபரீத ராசயோகம் பெற்று அமர்ந்ததால் தாயுமானவரை இவர் குருவாகத் தன் சிந்தையில் நிறுத்தி அவரின் பாடலில் அடிக்கடி மெய் மறந்தார்.

பூசம், அனுசம், உத்திரட்டாதி இம்மூன்றும் சனியின் நட்சத்திரங்களாகும் உத்திரட்டாதியில் தோன்றிய இவரிடத்து, பூசத்தில் ஜோதியாய்ப் பூரணம் கண்ட வள்ளல் இராமலிங்கப் பெருமகன் இவரை ஆளுமை செய்வதைக் காணமுடிகிறது. இத்தனைச் சிறப்புமிக்க மகரிஷி அவர்கள் ஆன்மீக நெறிக்கு வளமை சேர்த்து வையகம் வாழ்வாங்கு வாழ உழைத்துவரும் அவரது பணி நீடு சிறக்க நவகோள்கள் என்றும் நல்லாசி நல்கட்டும்.

அடிக்குறிப்புகள்

1. இறையுணர்வும் அறநெறியும், தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, ப. 11.
2. சமூகச் சிக்கலுக்கான ஆய்வுத் தீர்வுகள், தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, பக். 6-7.
3. எனது வாழ்க்கை விளக்கம், தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, ப. 10.
4. மேலது, ப. 15.
5. மேலது, ப. 19.
6. வாழ்க்கை வள உயர்வுப் படிகள் ஐந்து, தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, முன்னுரை viii
7. சமூகச் சிக்கலுக்கான ஆய்வுத் தீர்வுகள், தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, பக். xiii - xiv
8. உலக சமுதாய வாழ்க்கை நெறி, தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, ப. 15
9. இறையுணர்வும் அறநெறியும், தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, ப. 6.

10. சமூகச் சிக்கலுக்கான ஆய்வுத் தீர்வுகள், தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, ப. 7.

11. எனது வாழ்க்கை விளக்கம், தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, ப. 16.

12. சாதக அலங்காரம், ப.

13. மேலது, ப.

14. மேலது, ப.

15. மேலது, ப.

துணைநூல்கள்

1. **இறையுணர்வும் அறநெறியும்**, 'தத்துவஞானி' வேதாத்திரி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, முதற்பதிப்பு: 1991, ஐந்தாம் பதிப்பு: 2003.

2. **உலக சமுதாய வாழ்க்கை நெறி**, தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, 2003.

3. **எனது வாழ்க்கை விளக்கம்**, தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, 1981.

4. **சமூகச் சிக்கலுக்கான ஆய்வுத் தீர்வுகள்**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, 2002.

5. **மதமும் மனிதனும்**, தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, 2002.

6. **வாழ்க்கை வள உயர்வுப் படிகள் ஐந்து**, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, 2004.

சித்தர் பாடல்களும் வேதாத்திரி மகரிஷியின் பாடல்களும்

அருள்நிதி ப. பரமசிவம்

தான் உணர்ந்தவற்றைப் பிறருக்கு உணர்த்த வேண்டும் என்ற உந்துதல் எழுந்தபோது அது மொழியாக வளர்ச்சி பெற்றது. உலகில் எத்தனையோ மொழிகள் உள்ளன. அவற்றில் நமது தமிழ் மொழிக்குக் காலத்தாலும் சரியான இலக்கணத்தாலும் எடுத்துக் கூறும் பொருளாலும் உச்சரிப்பாலும் பல்வேறு சிறப்புக்கள் உள்ளன. ஒரு மொழியின் வளமானது அம் மொழியில் புதிது புதிதாய்க் காலத்திற்கேற்ப படைக்கப் பெறுகின்ற நூல்களாலேயே உயர்வு பெறும்; நீடித்து நிற்கும் என்பது அறிஞர் கருத்து. அந்த வகையில் கவிதைகள் எப்போதுமே மொழிக்கு அழகும் வலிவும் சேர்ப்பனவாக அமைகின்றன.

தமிழ் மொழியின் முக்கிய சிறப்பு தமிழில் உள்ள சித்தர் பாடல்கள். சித்தர்கள் சாதாரண மக்களோடு மக்களாக வாழ்ந்து கொண்டு அதேசமயம் மிக உயர்ந்த அறிவு நிலை பெற்றவர்களாக விளங்கினர். தமிழில் அகத்தியர், திருமூலர், போகர், யாகோப், கந்தரானந்தர், இடைக்காடர், சட்டைமுனி, கருவூரார், வான்மீகர், மச்சமுனி, சுப்பிரமணியர், பாம்பாட்டிச் சித்தர், ஔவையார், சிவவாக்கியர், குதம்பைச் சித்தர், கொங்கணர், புலிப்பாணி, திருவள்ளுவர் போன்றோரது பாடல்கள் சித்தர் பாடல்களாகத் தொகுக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பிற்காலத்தில் தாயுமானவர், வள்ளலார், மஸ்தான் சாகிபு போன்றோரது பாடல்களும் சித்தர்கள் பாடல்களோடு ஒப்பிட்டுப் பேசப்படுகின்றன. பொதுவாகச் சித்தர் பாடல்களில் உடலை நன்றாக வைத்திருப்பது, சமுதாயத்தில் உள்ள ஒழுங்கீனங்களைக் களைந்து நல்ல சமுதாயத்திற்கு வழி சொல்வது,

மனவளக்கலை பேராசிரியர், ஈரோடு

இறை அனுபவம், இறைஉணர்வு பெறுவது ஆகியவை சொல்லப் பட்டுள்ளன. சித்தர்களின் பாடல்களில் மருத்துவம், யோகம், ஞானம், ஜோதிடம், ரசவாதம், கற்ப சாதனைகள், சமாதி நிலை அடைதல், மந்திரங்கள் போன்ற பல்வேறு செய்திகள் விளக்கப் பட்டுள்ளன. உலகியல் வாழ்க்கையில் நன்கு வாழவும் நீடித்த வாழ்க்கை வாழவும் ஆன்ம ஞானமும் இறைஞானமும் பெற்று உய்வதற்கும் ஏற்ற விவரங்கள் அவர்கள் பாடல்களில் உள்ளன.

பொதுவாகச் சித்தர் பாடல்களை இரண்டு வகையாக்க் கூறலாம். ஒன்று மிகவும் எளிமையாகப் பாமரரும் புரிந்துகொள்ள ஏற்றது; ஞாபகம் வைத்துக்கொள்ள ஏற்ற சந்தங்களில் அமைந்து இருக்கும். மற்றது சாதாரண மக்களுக்குப் புரியாத நடையில், மேலோட்டமாகப் பார்க்கும்போது ஒரு கருத்தும் அத்துறை வல்லுநர்களின் பார்வைக்கு வேறு கருத்தும் புலப்படுமாறு பரிபாசைப் பாடல்களாக எழுதப்பட்டிருக்கும்.

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதி கெட்டு போன திசை
எல்லார்க்கும் கள்வனாய் ஏழ்பிறப்பும் தீயோனாய்
நல்லார்க்கும் பொல்லானாம் நாடு

என்ற ஔவைப் பிராட்டியின் பாடலுக்குப் பொதுவாக ஆனமுதல் என்பதற்கு வியாபாரத்தின் முதலீடு என்று பொருள் கொள்வர். ஆழ்ந்து சிந்தித்து ஆன முதல் என்பது வித்து சக்தியைக் குறிக்கும்- அதனைப் போற்றிப் பாதுகாப்பதன் மூலம் எவ்வளவோ நன்மைகளைப் பெறலாம் என வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறுகிறார்கள்.

வித்துஅது அளவழுத்தம் தூய்மை யெய்த,
வேண்டுஅள வில்உடலில் உயிரும் தங்கும்,
சத்தான உயிர்அளவு நிறைந்தி ருந்தால்,
சரீரத்தில் சீவகாந்த ஆற்றல் ஓங்கும்.
சித்துருவாய் ஒளிர்சீவ காந்தம் ஓங்க,
செல்கள்அணு அடுக்குடலில் சீர மைத்து,
ஒத்தியங்கும் நோய், முதுமை, முரணம் தள்ளி
ஒதுங்கிவிடும் விரும்புங்கால் சமாதி கிட்டும்

மனதைக் குறித்துச் சித்தர்கள் பல்வேறு பாடல்களில் கூறியுள்ளனர். திருமூலரும் மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம் என்று கூறியுள்ளார். வள்ளுவர்,

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற

என்று கூறியுள்ளார்.

வேதாத்திரி மகரிஷி அவர்கள்,

மனம் புலன் உணர்வினில் மயங்கிட மாயை ஆம்
மனம் உயர் வெளியினில் மருவித் தோய்ந்திட
மனம் விரிந்தறிவெனும் மாபதம் எய்திடும்
மனம் அறிவாகிய மனிதனும் தெய்வமே.

மனம் மாய என்பார்கள் மனநிலை மாற்றத்தை
மனமே மாய்வதே இல்லை மனம் மெய்ப் பொருளாகி
மனமே அறிவாக மறுபிறப்பு எய்திடும்
மனம் அறிவான பின் மரணமில்லா நிலை.

மனமது இயற்கையின் மாபெரும் நிதியலோ
மனமதைத் தாழ்த்திட மயக்கத்தால் துன்பமே
மனமதை உயர்த்தினால் மட்டில்லா இன்பமாம்
மனத்திலே உள எல்லாம் மற்றெங்குத் தேடுவீர்?

என்று பாடியுள்ளார். சித்தர் இறையை உணர்ந்த வெளியைப் பல்வேறு வகைகளில் கூறுகின்றனர்.

வெளியை அறிந்து வெளியினடுவே
ஒளியை அறியினுளி முறியாமே
தெளிவை அறிந்து செமுநந்தியாலே
வெளியை அறிந்தனன் மேலறியேனே (819)

எனத் திருமந்திரத்தில் திருமூலர் கூறுகின்றார். வேதாத்திரி மகரிஷி அவர்கள் இறை நிலை உணர இன்றைய காலத்திற்கு ஏற்ப காந்தத்தைப் பற்றிய ஞானம் உதவும் எனக் கூறுகின்றார்.

எந்த ஒன்றறிந்திடில் இறைவன் முதல் உயிர்வரை
எல்லாவற்றையும் உணர்த்துமோ அதுவே காந்தமாம்
முந்தையோர்கள் அகத்தவத்தால் முற்றுணர்ந்த போதிலும்
மொழிவதற்கு உவமையன்றி முட்டி மோதி நின்றனர்
இந்த நாள் விஞ்ஞானமோ ஏற்றம் பெற்றதாலதை
இயங்கிடும் மின்சாரம் மூலம் எல்லார்க்கும் உணர்த்தலாம்
அந்தமாம் மெய்ஞ்ஞானத்தோடு அணுவின் ஞானம் இரண்டையும்
அறிந்து உய்ய பாலம் போன்ற ஆக்க ஞானம் காந்தமே

மகரிஷி அவர்கள் பெண்களை மிகவும் போற்றி மதித்துப் பாடியுள்ளார்.

எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன் திருவுள்ள மென்ன
எவ்வுயிரும் தோன்றுதற்கு ஏற்றதொரு திருவழியாய்
வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான் – அற்புதமே
வாழ்ந்துவரும் மக்களில் இவ்வளமறிந்தோர் எத்தனை பேர்?

எந்த உயிருக்கும் தாய் பெண் தானே, பெண்கள் போற்றி மதிக்கப்படும் சமுதாயமே சிறந்த சமுதயாமாக விளங்கும் என்பது அறிஞர்கள் கருத்து. வேதாத்திரி மகரிஷி அவர்கள் சமுதாய வளம் பெருக ஓர்உலக ஆட்சி வர வேண்டும். அதற்காக அனைவரும் சிந்திக்க வேண்டும். செயல்பட வேண்டும் என்று அனைவரையும் அழைக்கிறார்.

ஓருலக ஆட்சியின்றி உலகில் போர் ஒழியா
உலகில் போர் நிகழுமட்டும் மனிதவளம் உயரா
பாருலகில் போர் மூலம் பலவளமும் கெட்டால்
பயன் என்ன? யாருக்குப் போர் வேண்டும் உலகில்
போருக்கு ஆயுதங்கள் செய்வோர்கள் உரிற்சோர்
பொன் விளைப்பார் கோடி கோடி மக்கள் வாழ்வு நச்சாம்
நேருக்கு நேர் நலனைக் காட்ட வல்ல முறையில்
நிலஉலகின் அமைதி காண நினைந்து நலம் செய்வீர்

போரில்லா நல்லுலகம் பொருள்துறையில் சமநீதி
நேர்மையான நீதிமுறை நிலவுலகுக்கோர் ஆட்சி
சீர் செய்த பண்பாடு சிந்தனையோர் வழி வாழ்வு
சிறப்புணர்ந்த பெண் மதிப்பு நீதி வழி வாழ்தல்
தேர்திருவிழா தவிர்த்தல் சிறுவர்கட்கே விளையாட்டு
செயல் விளைவு உணர்கல்வி சீர்காந்த நிலை விளக்கம்
பார் முழுதும் உணவு நீர் பொதுவாக்கல் பல மதங்கள்
பல கடவுள் பழக்கம் ஒழித்துண்மை ஒன்றே தேர்ந்திடுதல்

சித்தர்களின் பாடல்களும் அவற்றில் அடங்கியுள்ள அறிவும் வாழ்நாள் முழுவதும் கற்றுப் பயன் பெற வேண்டியவை. அதுபோல வேதாத்திரி மகரிஷி அவர்களின் கவிதைகளும் வாழ்நாள் முழுவதும் கற்றுப் பொருளுணர்ந்து பின்பற்றத் தக்கவை.

VETHATHRI MAHARISHI'S VIEWS ON SOCIAL CONTROL

Dr. T. Kamali

Social control is the control of society over the individual. It creates conditions in which man can be socialised and be prevented from performing anti-social activities. It is the sum total or rather the whole of cultural patterns, social customs, collective spiritual meanings, values, ideas and ideals, as well as acts and processes directly connected with them, whereby inclusive of society, every particular group and every participating individual member regularise their lifestyle and take steps for new creative efforts.

Shri Vethathri Maharishi is an Indian philosopher who is recontextualizing human life in the world. Epistemologically achieving perfection in its most complete form through meditation, Kundalini yoga, self actualization and Kayakalpa. Born in 1911 at Guduvanchery a village nearby Chennai city, he himself asked many questions like, Who is God? What is meant by living? Why and how poverty happens in this world? and got answers for them. He had started 'World Social Service Association' in 1958 which has many branches all over the world and rendering service to society. He is a scientific philosopher. According to all religions that which is everywhere and in everything is God. The space is everywhere and is in everything. So the space is God for Maharishi. For Vethathri Maharishi space, gravity and God are all equivalent terms. 'Long

Dept. of Tamil, Mother Teresa Women's University, Research and Extension Centre, Chennai - 15

Live World; Long live with all blessings in life' *(வாழ்க வையகம்; வாழ்க வளமுடன்)* are his sayings make us to feel the divine spirit's presence within ourselves. This paper focuses on Vethathri Maharishi's views on social control.

Direct social control generally excercised upon the individual by the reactions of the people living in proximity. Such control is found existing in the family, neighbourhood, play group, and other primary groups. An individual is deeply influenced by the opinions and views of his/her parents. Colleagues and those who work with him/her. His/her behaviour is determined or controlled by their criticism, derogation, praise, suggestion or persuasion etc.,

பார்த்தும் கேட்டும் பழக்கத்தாலும்
தானும் அறிந்து தக்க பலன் பெறும்
செவ்விய அறிவின் சிறப்பே மனிதன்
(வேதாத்திரி மகரிஷி, மதமும் மனிதனும், ப. 15. . .)

Some inherests are almost universal among human beings. These include interest in religion in the human body in self and in life.

குலமுதலாய் பேதங்கள் கொள்ளும் நிலைமாற்றி
பலரும்கூடி உழைத்துப் பகிர்ந்துண்டு வாழ்ந்திடுவோம்!
உலகில் பிறந்துவிட்ட ஒவ்வோர் மனிதனுக்கும்
நிலஉலகம் சொந்தமென்ற நீதிநிலை நாட்டிடுவோம்
(வேதாத்திரி மகரிஷி, மதமும் மனிதனும், ப. 79)

Social differences are imposed to human life from outside. It lies in the field of 'having' not in that of 'being'. The 'being' in a state of 'becoming' at each different stage and in varying circumstances is the true subject matter of life.

Indirect social control exercised upon the individual by factors which are separated from him/her. Its prominent means are traditions, institutions, customs, rationalised behaviour, charges in situation and social mechanism etc. The means of social control is invisible and stable. In the existing complex society, the influence of education, law, communal codes, religion, art, social ideals, etc. is conveyed in this way.

இயந்திர விஞ்ஞான வளம் உலக மக்கள்
எண்ணிக்கை இவை மிகுந்த இக்காலத்தில்
அந்தந்த நாட்டவர் தம் எல்லை காக்க
அடுத்த நாட்டைத் தாக்க சேனை வைத்து
எந்தச் சமயத்திலும் பயந்து கொண்டே
இருப்பதெனில் மனிதரது வாழ்வென்னாகும்?
இந்த நிலைமையை மாற்றி அறத்தைக் காக்க
ஏற்படுத்த வேண்டும் ஓர் உலக ஆட்சி"

Vethathri Maharishi emphasises on setting up of one Government for the whole world which costs the role of guardian of mankind.

தத்துவம், வேதாந்தம், விஞ்ஞானம் மூன்றும்
தனித்தனியாம் வெவ்வேறு பிரிவென்பார்கள்
தத்துவமோ இயற்கை யதன் உண்மை கூறும்
. . . . . .
தத்துவத்தைத் தெளிவாக்கும் கலை வேதாந்தம்.
வாழ்வை வளப்படுத்தும் சகலமுறைகளும் விஞ்ஞானமாம்
(வேதாத்திரி மகரிஷி, தத்துவம், வேதாந்தம், விஞ்ஞானம், ப. 80)

Education

Education teaches man the use of the various capacities, intelligence etc, bestowed upon him by nature. Education gives him the ability to succeed in his struggle for existence. Education is the art of adaptation. For man, adaptation is more social than natural. Hence, education adapts man to society. In this way education is an important means of social control.

கல்விக்கு நாயகனாய் மக்கட் பண்பைக்
காத்துயர்த்தும் செயலால் ஆசிரியர் மேலோர்
நல்வாழ்விற்கே கல்விநலம் கண்டு பயன்கொள்வோம்
நாடும் வீடும் உயரும் நாம் இனிதாய் வாழ்ந்திடலாம்
(வேதாத்திரி மகரிஷி, ஆசிரியர் பெருமை, 16-12-1964)

The key elements of the educational strategy have been,

* to establish a nexus between education and development whereby education is viewed as an instrument to

facilitate and promote economic growth and social change and citizens are imparted a sense of their responsiblities as well as rights.

* removal of regional disparities and promotion of educational facilities in backward regions so as to bring them to national level.

* growth of creativity and critical appreciation which are necessary for a sustainable rise in productivity.

அறிந்த அனைத்தையும்
அறிவித்தோர் இல்லை;
அறிவித்த அனைத்தையும்
அறிந்தோரும் இல்லை;
அறிந்த பலரிடம்
அறிந்ததும் அனுபவ
அறிவும் இணைந்ததே அறிவின் வளர்ச்சியாம்
(வேதாத்திரி மகரிஷி, அறிவின் வளர்ச்சி, 30-12-62)

Hence is in the family, school, office, playground, in fact everywhere. At every place the individual is taught something and socialized. In the family, in school, in the playground, the child learns to obey the rules of the family, use of polite behaviour, to respect the various values, to imitate the various patterns, to respect the opinion and advice of others and to comply with the traditions and mores. Theoretical education, viz. reading and writing serves to form the intellectual basis for all this and with practical education one learns to put this into practice. The organisation or system of society is disrupted when the educational systems contradict or when the activity of education does not function correctly and social control fails to function. Hence education is a necessary condition for the proper excercise of social control. In the absence of an appropriate and organised education social control remains merely an arbitrary pressure which cannot continue for long.

உலகமே ஒரு பெரிய பழைய பள்ளி
ஒவ்வொருவருக்கும் தினம் புதிய பாடம்,

பலகலைகள் கற்றோர்க்கும், பாமரர்க்கும்
பகிர்ந்து தரும் இன்பதுன்பம் எனும் பரிசு
(வேதாத்திரி மகரிஷி, சிறந்த கலாச்சாலை, 3-1-1957)

Education makes social control normal. It makes self control and the individual does not experience its burden. It is another thing that an educated person cannot easily be persuaded to a wrong or incorrect mode of social control.

ஆக்கத் துறையில் அறிவைச் செலுத்து
ஊக்கமுடன் உழை, உயர்வு நிச்சயம்
(வேதாத்திரி மகரிஷி, ஞானக்களஞ்சியம், 250)

Maharishi proposes a learning society in which the whole existence of man centred on education as a positive humanistic response.

பெருத்துவரும் பழிச்செயல்கள் மாறி உலகுய்ய
பேருலகம் இணைந்த ஆட்சி கல்வி இவை வேண்டும்
- - - - - - - - -- - - - - - - - - - - - - - - - - - -
கல்வியிலே உயர்ந்த அருட்கல்வி இல்லையானால்
கற்றபெற்ற அத்தனையும் சுயநலமாம்
(வேதாத்திரி மகரிஷி, ஞானமும் வாழ்வும், 287)

Education as a moral or intellectual system that should regards the interests of mankind as of supreme importance in contradistinction to individualism.

அறிவுநிலை அறிந்தோர்கள் அனந்தம் பேர்கள்
அவ்ரவர்க்கு அமைந்த சூழ்நிலைகள் வேறு
பொறிபுலன்கள் திறனறியும் இயல்பு காணும்
போராட்டத்தில் பலநாள் கழித்தோர் உண்டு
நெறிமுறையால் வாழ்ந்தபல அறிஞர் சொன்ன
நீதிநூல் படித்துப் பயன்பெற்றோர் உண்டு
சிறியஒரு சந்தர்ப்ப நிகழ்ச்சி மூலம்
சிந்தனையில் உயர்ந்தோரும் உண்டு உண்டு
(வேதாத்திரி மகரிஷி, அறிவறியும் முறைகள் பல, 37)

Education is the perception that concerns human beings striving to comprehend a world of human experience by the

resources of human minds. It demands that man's complete satisfaction shall be the conclusion must aim at that education shall not cut itself loose from the real problems of life by making initial abstractions which are false and would not be admirable, even if they were true.

Maharishi recognizes the ultimate purpose of educating people as being that of achieving for them the characteristics of educatedness. There are no sharp lines, only blurred areas, in anybody's case, and partly because people learn at different rates and some may be slower than others in reaching the blurred areas. Some may never reach it, although we may still want to call them partially educated, since they have travelled some way along the same road as others. So there are no sharp demarcation lines that mark off the point of arrival that is educatedness. Only 'very blurred areas' that individuals will reach at different times in their lives. Hence education is a life long process, and not as something belonging only to youth, then we might as well drop the concept of the educated man; there is no line to be crossed; the journey goes on for ever;

எக்கல்வியால் வாழ்வை
இனிதாக்கி உள்ளத்திலெழும்
அக்கேள்வி கட்கெல்லாம்
அறிவு விடை கண்டிடுமோ
இக்கல்விதான் இயற்கை
இயல்பறியும் தத்துவமாம்
சிக்கல்கள் வாழ்வில் எழா
சிந்தனையும் சிறப்படையும்
(வேதாத்திரி மகரிஷி, சிறந்த கல்வி, 10-1-1966)

Hence education should be mainly concerned with man and his welfare as an end in itself; and it is scientific to the extent that its humanistic content remains defined - and thereby enriched by the continuing new contributions of science to the field of knowledge about man and the world. Its core is a supreme faith in human reason - its ability to confront and solve the many problems that humans face; Its ability to rearrange both the world of nature and

the affairs of man and women so that human life will prosper. Education will acquire a new social dynamic; from being merely a preparation for life, it will become an integral part of life, an instrument of man's evolution. It should emphasise man's capacity to improve his condition in his earthly life through his own efforts.

Law

Law is a prominent means of social control. The state enacts laws to control the behaviour of the individuals in the society. Disobedience of the laws and their infringement is punishable by the government. In this way the control of the law and its administrative power vested in the government. Laws are enforced with the help of the court, the police, and sometimes the armed forces.

கொலை செய்தான் ஒரு மூர்க்கன் அறிவிழந்து – அவன்
கொலையுண்டான் நீதிபதி அளித்த தீர்ப்பால்
கொலைக்குக் கொலை நீதியென்றும் குற்றம் செய்த
கொடுமைக்கே தண்டனைகள் என்றும் சொன்னால்
கொலையுண்டோர் மனைவி மக்கள் பெற்றோர் செய்த
குற்றமென்ன? குடும்பத்தின் தலைவன் ஆங்கே
கொலையுண்ட நிகழ்ச்சி அன்னார் வாழ்வில் என்றும்
கொடுந்துன்பம் தரவில்லையா? நீதி எங்கே?

(வேதாத்திரி மகரிஷி,
தண்டனையில் நீதி வேண்டும், 31-12-1958)

Law is the most specialized and lightly furnished engine of social control employed by society. Law has two functions: (1) to crush completely some of the homicidal activities of individuals and (2) to persuade the individual both to pay attention to the rights of others and to act co-operatively. Law, on the one hand, limits the field of activity of the criminals while on the other it prevents other people from criminal activities by threatening punishment.

சமுதாய அமைப்பினிலே உள்ள குறைபாடே
தனிமனிதன் குற்றங்கள் அனைத்திற்கும் மூலம்
சமுதாயம் தனியாரைத் தண்டித்து மேலும்
தவறிழைக்கும் செய்கையினை நீதியெனில் நன்றோ?

சமுதாய அமைப்புமுறை சீர்திருந்திப் பொருட்கள்
சமத்துவமாய் அனைவருக்கும் கிட்டுமெனில், உலக
சமுதாயத்தில் குற்றம் நிகழ இடமேது?
தண்டனைக்கு என வகுத்த சட்டங்கள் ஏனோ?
(வேதாத்திரி மகரிஷி, 'குற்றங்கள் ஒழிய வழி' 4-1-59)

The way by which law protects society or ensure its existence is not at all enough, rather it should contributes to its welfare. The modern state should be a welfare state. In contemporary world, Law enters into all the aspects of life.

குல முதலாய் பேதங்கள் கொள்ளும் நிலை மாற்றி
பலரும் கூடி உழைத்து, பகிர்ந்துண்டு வாழ்ந்திடுவோம்.
உலகில் பிறந்துவிட்ட ஒவ்வோர் மனிதனுக்கும்
நில உலகம் சொந்தம் என்ற நீதிநிலை நாட்டிடுவோம்
(வேதாத்திரி மகரிஷி, 'உலக சமுதாயம்', 16-12-55)

We should work hard and earn money which should be shared by all without any differential attitudes. Everyone should be considered as the owner of everything in the world. Thus law should control the conduct of the people of the state and to grant everyone the opportunity to progress.

Leadership

The leaders have always shown the way for the masses to follow. The path followed by great man is the path to be followed by others. In this way leaders in the religious, social, political, and other fields have great influence upon the lives of people.

வாழ்வை வளப்படுத்தும்
வழக்க பழக்கங்கள் எனும்
ஒழுக்கங்கள் எல்லாம்
ஆழ்ந்த சிந்தனையாளர்
அன்பினால் உலகுக்கு
அளித்த பரிசு ஆகும்
(வேதாத்திரி மகரிஷி, 'நல்லோர் தந்த பரிசு', 7-1-57)

Vethathri Maharishi, Mahathma Gandhi, and Karl Marx converted the lives of millions of people.

சீர்திருத்த நோக்குடையாய்!
சிந்தனை செய். புவிவாழ்வை
யார் திருத்தம் செய்துள்ளார்
இதுவரையில்? – பார்
. . . . . நீ
விவேகமுடன் அவ்வழி செல்
(வேதாத்திரி மகரிஷி, 'நல்லோரைப் பின்பற்று', 9-1-57)

Vethathri Maharishi asks people to think and get signals from leaders that in its drive towards self determination each leader insists on making use of its own traditional experiences as embedded in social structures, economic patterns, art forms and religious beliefs. Thus consensus added to consensus will gradually help to build a comprehensive moral code for the entire planet, eliminating distrust and enlarging harmony.

எவரொருவர் குருவை மதித்து ஒழுகினாலும்
தப்பாது குருவுயர்வு மதிப்போர் தம்மைத்
தரத்தில் உயர்த்திப் பிறவிப்பயனைத் தரும்
(வேதாத்திர மகரிஷி, மதமும் மனிதனும், ப. 50)

It is clear that Vethathri Maharishi would support the need for 'Guru' or a leader and respect them throughout the life are good things to have in life, which itself in its entirely provides a guideline for an ethical mode of life.

இந்த அரும்பிறவியில் முன்வினையறுத்து
எல்லையில்லா மெய்ப்பொருளை அடைவதற்கு
வந்த ஒரு உதவி குரு உயிரின் சேர்க்கை
வணங்கி குரு திருவடியை வாழ்த்தி வாழ்வேன்
(வேதாத்திரி மகரிஷி, குருவின் சேர்க்கை, ப. 151)

Whatever faults this life may possess, we can follow the moral codes endorsed by Gurus of goodwill, is the way to get rid of Karma and attainment of perfection in life.

Social Ideals

The activities of individuals are effected by the social ideals. Social ideals are subject to change, and are relevant in their own

context. But in every country most of the people endeavour to mould their lives according to these social ideals. In modern times, the conduct and behaviour of people of democratic countries has been influenced by democratic ideals of liberty, equality and fraternity. While the conduct of the communist population has been swayed by communist ideals.

வீடு விளைநிலம் தொழிற்சாலை வியாபாரம் ஆகிய
நாலும்
நாடு முழுதும் கூட்டுறவில் நடத்து முறையினை அமுலாக்க
ஓடும் வறுமை, பொருள் பெருகும், உழைப்பிற்கே நன்
மதிப்புண்டாம்
ஈடு வட்டி, கடன், கோர்ட் ஏது அங்கே? சிந்திப்பீர்'
(வேதாத்திரி மகரிஷி, 'கூட்டுறவு' 23-12-1957)

In our own country, the manifesto of cooperative society, 'one for all and all for one' has aroused hopes. It has been recommended by Vethathri Maharishi as a tool for understanding economic behaviour and human relations and even as a reliable method of determining what moral policy it is best to adopt for the empowerment of people.

பெருத்துவரும் பழிச்செயல்கள் மாறி உலகுய்ய
பேருலகம் இணைந்த ஆட்சி கல்வி இவை வேண்டும்
(வேதாத்திரி மகரிஷி, 'உலகிணைந்த ஆட்சிமுறை
கல்விமுறை வேண்டும், பா. 286)

It is apparent that people today are almost as widely dispersed in different countries as the 'community' of world disparities. According to Vethathiri Maharishi the unity of global government and global education that are characteristic of a global society held in common.

தனி மனிதர் சொத்துரிமை வியாபாரங்கள்
தனித்தனியே நாடு பிரித்தரசு செய்தல்
இனிமேலும் நீடித்தால் மனித வர்க்கம்
எவ்விதத்தும் வாழ முடியாது
(வேதாத்திரி மகரிஷி, ஒருலக அரசு, 107)

In point of fact, for Vethathri Maharishi people do share a number of 'emphases' in common but being only emphases the

positions they hold individually, concern for the importance of human fulfilment, a measured freedom, the dignity of the Individual and a broad spectrum of human rights should form the corner stone of social structure.

Communal Codes

Communal codes include all those laws of the community by means of which the community exercises its control over the individual. Customs, folkways, mores, morals and rituals etc are enumerated under it.

Custom

Bacon has called custom "the principal magistrate of man's life", custom has the potential control. Disobedience of custom brings social disgrace. Custom has great utility from the social standpoint. It is a kind of social necessity.

பிறர் பொருள் பிறர் மனை
ஆசைகொள்ளார்
பிறவியிலேயே தூய்மை
அமையப் பெற்றோர்
பிறர்பொருள் பிறர்மனை
மதித்து வாழும்
பேரொழுக்கம் அன்பு அருள்
பெருகச் செய்யும்

(வேதாத்திரி மகரிஷி, 'இச்சையில் ஒழுக்கம், 24.12.65)

Sex-role stereotypes are considered by customary law. Constellations of meanings associated with members of the male and members of the female sex. These meanings relate to the approved appearance and body build of the individual the approved type of clothing, speech and behaviour the approved and the approved way to earn a living during the adult years.

Folkways

Folkways are law of behaviour in society: e.g. people greet each other in India by putting the palms together vertically upward, Folkways develop the society unaided by the law of trial and error.

Activities which violates them is not punishable but other people in society look upon such behaviour as degenerate and ridicule it. The fear of social ridicule acts as a large measure of control of an individual.

இல்லம் கொண்டு பொருட்கள் ஈட்டிக் காத்துத் துணையாம்
நல்லாளோடு இன்புற்று நாட்டுக்கு ஈகை புரிந்து
பல்லுயிரும் இன்புற ஆம் பரந்த நினைவில் வாழும்
நல்ல வாழ்வு இல்லறமாகும்

The trend toward changes in marital role for both men and women and the different concepts of these roles held by different social classes and religious groups but Maharishi prescribed the role of marital life in this manner.

Mores

Mores are those folkways which are considered essential for the welfare of the group. Society exhibits greater sternness in its efforts to win compliance to these folkways. The person who violates mores is turned out of the particular class of society to which he\she belongs, people do not converse with him\her and even show a disinclination to marry into his\her family. An example of a more is the prohibition of the cow slaughter in Hindu society.

உலகம் முழுவதிலும் உணவிற்கு ஊன் வேண்டி
உயிர்க் கொலைகளை மனிதர் ஓயாமல் புரிகின்றார்
பலவகையாம் கொலை முறையில்
பார்வைக்கே சகிக்காத
பாபமுறைத் தூண்டில் கொண்டு
பதைபதைக்க மீன் பிடித்தல்
(வேதாத்திரி மகரிஷி, 'கொடுமையில் கொடுமை' 4.1.66)

பல்லாயிரம் புழுக்கள்
பதைபதைக்க வதைத்தெடுத்த
பட்டு என்னும் கொடிய
பாப குறிப்பை உடுத்தி
சொல்லாயிரம் கோத்துத்
துதிபாடி தெய்வத்தை
சொர்க்கலோகம் வேண்ட
சொல்லெங்கே? செயலெங்கே?
(வேதாத்திரி மகரிஷி, 'சொல்லெங்கே-செயலெங்கே' 6-1-66)

Religious beliefs are for the most part, meaningness to women who wear silk sarees which are outcome of killing silkworms in millions althrough they may show some interest in religious observance. Maharishi is not for fishing, eating other animals flesh as food,

ஐயறிவு மாடெனினும்
அதன் கன்றுக் குணவூட்டி
அன்போடு வளர்ப் போர்க்கோர்
அளவு பால்தந்துதவும்
ஆறறிவு மனிதனோ
அதன் கன்றைப் பட்டினியால்
அழித்ததிகம் பால்பெறும் இவ்
வநியாயம் ஒழிவதெப்போ?
(வேதாத்திரி மகரிஷி, 'நன்றி கொன்ற செயல்' 5.1.66)

Thus Maharishi has provided a clear guidance for every one of us in society. He guides us in our struggle for existence.

Rituals

Rituals are those form of socially accepted behaviour which are important in times of festivals and religious celebrations. These rituals are to be followed as a matter of duty. Among the Hindus, there are many rituals to be followed as a matter of duty. Among the Hindus, there are many rituals to be performed at every festival such as Holi, Diwali etc.

கடவுள்தான் அனைத்தையுமே படைத்தான் என்றேன்
கண்காது மூக்குவைத்துக் கதைகள் சொன்னேன்
கடவுள் என்று கற்சிலையை அறையில் வைத்துக்
கதவு அடைத்துப் பூட்டியும் வைத்தேன் பின்அந்தக்
கடவுளுக்குப் பசிதீர்க்கப் பால் நெய் தேங்காய்
கனிவகைகள் கற்சிலைமுன் படைத்தேன் ஆனால்
கடவுள்நிலை அறிந்தபோது என் செய்கை எல்லாம்
கண்டுவிட்டேன் சிறுபிள்ளை விளையாட்டாக
(வேதாத்திரி மகரிஷி, 'சிறுவயதில் கொண்ட பக்தி, பா. 8)

With the attainment of maturity the search for logic, truth and scientific belief, faith, drove these superstitutional beliefs of

childhood days where the sense of fear became empty virtues and with the same stroke made its allied ideal of self-sufficiency through social involvement a remote and unattractive one. The understanding of 'சிறுபிள்ளை விளையாட்டு' could accomodate the ideal of intellectual and moral self-sufficiency, accompanied by an understanding of human society as part of the established or divine order of things. The task of the virtuous individual, it came to be thought must be, in some way, to come to terms with this fact rather than seek to escape it; Hence the restoration of the sense of duty as a central virtue.

பழக்கமென்றும் பழமையென்றும் பகுத்தறிவுக் கொவ்வா
பலசெயல் கடமை மாற்றிப் பண்பாட்டை
வளர்ப்போம்
ஒழுக்கமது துன்பம் எழா அளவு முறையோடு
உணர்ச்சிகளைச் சீர்செய்து வாழும் முறையாகும்
அழுக்காறு, அவா, வெகுளி, ஆகாது போக்கி
அன்பிரக்கம், தொண்டு, தவம் அறிவின்
விழிப்பேற்போம்
பகுத்தறிவு முழுமை பெறும் பர உணர்வு கிட்டும்
பற்றறிந்து பலனுணர்ந்து பண்புடனே வாழ்வோம்
(வேதாத்திரி மகரிஷி, சிறந்த பண்பாடு, பா. 25)

Discipline is society's way of teaching moral behaviour approved by the social group. Maharishi insists us to think and know what behaviour is approved and what is disapproved and to motivate us to behave in accordance with these standards.

Religion

The control of religion is very strong in the social sphere. Every religion has determined some laws of behaviour the obedience of which is considered compulsory. At the base of these religious laws is the fear of divine displeasure and the sufferings of hell, coupled with a love and respect for some invisible power. The individual feels the pressure of this belief even more than the pressure exerted by the state and the society. In this way religion is a powerful weapon of social control.

எம்மதத்தும் கடவுள் என்ற குறிப்பு உண்டு
எண்ணி வணக்கம் செலுத்தும் முறைகளுண்டு
நம்மறிவைப் புலன்கள் தமைப் பண்படுத்தி
நல்வாழ்வைத் தரும் வழிகள் இவைதாமாகும்
(வேதாத்திரி மகரிஷி, 'மதங்களின் முடிவு' 43)

உணவு, உடை, வணக்க முறை தள்ளிப் பார்க்க
ஒன்றாகும் கருத்து பல மதங்களிலும்
உணவு, உடை, வணக்கமுறை பேத மாங்காங்கு
உள்ள வெப்ப தட்ப நிலைக்கேற்ற மாற்றம்
உணவு, உடை, வணக்கமுறை மனிதர்களெல்லாம்
உயிர் வாழ உயர்வடைய அவசியமாகும்
உணவு உடை வணக்கமுறை சீர் அறிந்தே
உத்தமர்கள் வகுத்துள்ளார் மத ஒழுக்கம்'
(வேதாத்திரி மகரிஷி, மதங்களின் கருத்தில் பேதமில்லை, பா. 142)

The human spirit is now fortified by the attitudes and fruits of science and a new assertion of religion. The religion of the past was based upon man's discovery of himself, follwed by liberation from taboos and dogmas accepted in fear and supersition.

கடவுள் யார் என அறிய ஆர்வம் கொண்டு
கருத்துடனே ஆராயும் அன்பர் கேளாய்
கடவுள் ஒன்றே பூரணமாம் உவமை இல்லை
கருத்தொடுங்கிக் கருத்தறிந்த நிலையில் மௌனம்
கடவுள் அணு, ஒலி, ஒளி, ஈர்ப்பு இவையாய் உள்ளான்
கண்டிடலாம் அவனை எங்கும் இயற்கையாக
கடவுளே அணு, அண்ட பிண்ட மானான்
கருத்தானான் அந்நிலையே நீயும் நானும்"
(வேதாத்திரி மகரிஷி, கடவுள், ப. 44)

The religion of tomorrow seeks to substitute love for power. Stresses the brotherhood of man and his common humanity and probes toward a new relationship of man with the cosmos. It aims at an act of transcendence which is within the reach of man who is now more than ever the maker and arbiter of his destiny. The final aim of religion is transcendence from the confused and troubled

state of contemporary man to a new humanism, both human and cosmic, free, wise, compassionate and loving.

Recreational Group

In the recreational group a person undergoes socialization and learns the methods of behaviour towards other people. By supervised play children learn by experience that the civilized life is far superior for all concerned than savagery". Games are based upon laws without following which the game cannot be played. In this way, games instill in man the habit of remaining in control and obeying law. Game makes a person to obey the rules and orders of the leader to co-operate with other people. As a result the sense of group responsibility is awakened in the participants.

உலகக் குழந்தைகள்
எல்லோரும் ஓரினமாய்
இலர், உடையார் எனும் பேதம்
இல்லாமல் குருகுலத்தில்
பலகலைகளைப் பயின்று
பண்பால் உலகைத் திருத்தி
நலம் பெருக்கும் நன்னாளே
நாடனைத்தும் பொங்கும் நாள்

(வேதாத்திரி மகரிஷி, குழந்தைகள் மூலம் உலக மேன்மை, 14-1-1957)

Moral development in early childhood is on a low level. The reason for this is that young children's intellectual development has not reached the point where they can learn or apply abstract principles of right and wrong. Neither do they have the necessary motivation to adhere to rules and regulations because they do not understand how these benefit them as well as the members of the social group. Because of their inability to comprehend the whys and wherefores of moral standards young children must learn moral behaviour in specific situations. They merely learn how to act without knowing why they do so. Children may be told not to do something one day but, by the next day or even the day after that they may have forgotten what they were told not to do. Thus what

may appear to be evilful disobedience to adults is often only a dose of forgetting.

பெற்றோர்கள்வழி வாழ்க்கை முறை தொடர்ந்து
பிள்ளைகளின் உடல்வளமும் அறிவும் ஆகும்
பெற்றோர்கள் நலம் அமைந்த மக்கள் வேண்டில்
பிழைநீக்கும் தவமும் அறமும் ஆற்றல் வேண்டும்
(வேதாத்திரி மகரிஷி, பெற்றோர்தவம் பிள்ளைகள் நலம், 22-12-69)

Children obey rules automatically without using reason or judgement and they regard adults in authority as omnipotent. They also judge all acts as right or wrong in terms of their consequences.

Art

Art also controls the behaviour of people. Poetry, folksongs, drawing, sculpture, music, etc. have their effect on emotions and sentiments. Art is a pleasant social control. Its influence is universal. Folksongs are important in every society. Music makes human tendencies refined. Community feeling is enhanced by communal singing and dancing.

மலரே மலரே நீயார் உன்
வண்ணமும் மணமும் அழகும் என்
பலவாறான நினைவகற்றிப்
பார்க்க உன்னில் ஆழ்ந்து விட்டேன்
இயற்கை அழகை ரசிக்கும் உன்
எண்ணம் மிகமிக உயர்ந்துளது
செயற்கை மயக்கம் தெளிந்தறிவு
செம்மைபெற என் கதை சொல்வேன்
(வேதாத்திரி மகரிஷி, மலர்வழியே விளங்கும் மறைபொருள், 304-305)

Vethathri Maharishi deliberately refers to beauty, nature, art etc as a religion where religion consists of those pleasant things, purposes and experiences which are humanly significant.

மலரே நீயார் எனக்கேட்டாய்
மறைபொருளான தெய்வமே நான்
சிலரே அறிவார் இவ்வுண்மை
சிந்தனை செய்ய வல்லவர்கள்

பரம அணுக்கள் பல கோடி
பண்பாய்க் கூடி ஒரு கூத்து
கரம் கோர்த்தாடும் நாடகத்தோர்
கூட்டம் எந்தத் தோற்றமும் ஆம்!
இறைவன் என்ற ஆதிபரம்
எடுத்த பலப்பல கோடிஉரு
நிறைந்த பெரிய மண்டலமே
நெடிய விரிந்த பேரண்டம்

(வேதாத்திரி மகரிஷி, மேலது, 306-308)

Different forms of artistic expression arise from the fact that the presence of Godlines transcends both national and cultural borders. To be truly artistic it needs to apply to all persons in all societies, it needs to be an ethics of the human race. In short, it needs to assume the existence of a human community.

Artistic expression and art in general aim at standard for mankind rather than local moralities. But this ideal of a morality for all mankind as a whole is still largely theoratical, for mankind is not a whole. And yet it is an ideal that is clearly still alive among spiritual leaders.

Fashion

In the present day, fashion has become an important means of social control. In civilized societies the determinant in the field of thought and conduct, dress, belief, opinions, reactions, jewellery, adornment of the house, way of talking, literature, music, art, in brief, all kinds of life, is mainly fashion. With the increase in the means of transport and communication, the influence of fashion spreads over a great range. Fashion is constantly changing but the people are ever desirous of changing with it.

கவர்ச்சி தரும் அலங்காரம் யாருக்காக?
காண்பவர்கள் நெஞ்சத்தில் என்ன தோன்றும்?
கவர்ச்சியினால் அடைய உள்ள பயன்தான் என்ன?
கண்ணியமாம் உடை ஒழுக்கம் கடைப்பிடிப்போம்

(வேதாத்திரி மகரிஷி, அலங்காரம் ஏன்? 10-1-1957)

Vethathiri Maharishi argues, the need for selection should prevail over pedagogical considerations, and failure is at the cost of senselss wastage of intellectual and monetary investment. Decency in dress, behaviour, should Vethathiri says allow every individual to develop in accordance with his / her own nature and as a function of learning capacities that are his / her own, not in terms of ready - made models suited for one kind of personality, that of the dominant powerful elite people who follow easily and does not question its utility value.

ஒரு ஆண் தன்பால் வேட்பைத் தீர்த்துக் கொள்ள
உதவும் ஒரு கருவியாய் உடல் கொடுக்க
ஒரு பெண் தன் உடலினையே அர்ப்பணித்து
உணவு உடை வாடகைபோல் பெற்றுலாவும்
ஒரு கிழிந்த அடிமைநிலை பெண் இனத்திற்கு
உலகினிலே இனி வேண்டாம் ஒவ்வோர் பெண்ணும்
ஒரு தொழிலைச் செய்து பொருள் ஈட்டிக் காத்து
உண்டுடுத்துக் கடமை செய்யும் உரிமை வேண்டும்
(வேதாத்திரி மகரிஷி, பெண்ணுரிமை, 7-1-63)

Vethathiri Maharishi argues against the use of female body as object - relations and approches logically its equation of masculinity, objectivity and rationality. He deconstructs binary oppositions and stressing for a job to work and thus earn money to look after themselves. His criterian for women's right, the ability to work and live on their own depended on a different model.

Morals

Morals are laws concerning concepts of goodness and badness. In Civilized societies non-violence, truth, justice, equality etc., are considered moral and conduct violationg them is condemned. Behind morals, there is the force of the conscience. It is based on the social consciousness of good and bad. These conceptions of good and bad change according to their context. But in every country the current ethical concepts govern the social behaviour of the individuals.

கள்ளம், சோரம், கடன், குடி, பெரும்பாலும்
மெள்ள அதிகரிக்கும் விஷமொக்கும் இயல்புடைத்து
உள்ள சுகம் போக்கும், உயிரையும் பலி கொள்ளும்
கிள்ளி எறிவோம் கிளைக்கும் போதே இவற்றை
(வேதாத்திரி மகரிஷி, முளைக்கும் போதே கிள்ளி விடு, 31-12-1953)

Wants give rise to the various kinds of economic activity. The farm labourer, the factory worker, teacher, doctor, dancer all of them are engaged in economic activities. They make efforts in order to earn money. Money, they earn, in order to satisfy their wants like food, clothing and shelter. Thus wants make people to work. They give rise to the various kinds of economic activity. Goods that satisfy our wants are to be produced. They are produced with the help of the available resources. But their availbility is limited or scarce. The numerous human wants are to be satisfied by utilising the limited resources. If a person goes for illegal means or cheating or availing loans or consuming liquor to forget everything etc. those habits increase in due course and kill like poison. Hence let us cut them in their budding stage itself is the advice given by Vedathri Maharishi for all of us.

திருவாசகமும் வேதாத்திரியமும்

முனைவர் ச. சிவகாமி

வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யான்எனது என்று அவர் அவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே

(திருவாசகம், 19)

இறையுணர்வு, இறைச்சிந்தனை, இறை நம்பிக்கை என்பன மிகத் தொன்மையானவை. ஆன்றோர் பலர் தம் வாழிடம், காலம், அனுபவச் சூழல்களுக்கேற்ப பல்வகைச் சமயங்களைத் தோற்றுவித்தனர். பின் வந்தோர் தமக்கு ஏற்புடை வகையில் அவற்றை வளர்த்துச் சென்றனர். அவ்வகையில் உலகின் மிகப் பழமையான சமயங்களுள் சிவனைப் பரம்பொருளாகப் போற்றும் சைவ சமயமும் ஒன்று. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்க இலக்கியத்துள் 'ஆலமர் செல்வனாக'ச் சிவன் போற்றப்பட்டுள்ளமை சான்றாகும். கால மாற்றத்தில் தமிழகத்தில் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டளவில் பக்தி இயக்கம் தோன்றி வளம் பெற்றது. திருமூலரும் காரைக்கால் அம்மையாரும் சைவப் பயிர் தழைக்கத் துணை நின்றனர். அதுமுதல் சைவ சமயக் குரவர்களாலும், சித்தாந்தச் சிற்பிகளாலும் அது தமிழகத்தில் பெருநிலை கண்டுள்ளது. காலந்தோறும் அருளாளர்கள் தம் படைப்புகளால் சைவசமயப் பணியைச் சிறப்புற ஆற்றியுள்ளனர். இதன் வளர்ச்சியில் இருநிலைகளைக் காண்கிறோம். ஒன்று இறைவனை அடைதலையே முழுமுதல் நோக்காகக் கொண்டு செயல்படுதல் ஆகும். அப்பர், சம்பந்தர், சுந்தரர், தாயுமானவர் போன்றோர் இதற்குச் சான்றாவர். சமயச் சீர்திருத்தத்தையும் சமூக மேம்பாட்டினையும் கருத்துட்

இணைப்பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113.

கொண்டமை பிறிதொன்றாகும். திருமூலர் முதலான சித்தர்கள் இதன்பாற்படுவர்.

இங்கு முதற்கூறின்பாற்படுபவராகத் திருவாசகம் படைத்த மணிவாசகரும், மற்றதன் சார்பாளராக வேதாத்திரியம் கண்ட வேதாத்திரி மகரிஷியும் அமைகின்றனர். இவ்விருவரின் பாதைகள் வேறாயினும் பயணத்தின் நோக்கமும் நிறைவும் ஒன்றே. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டினராகக் கருதப்படும் மணிவாசகரின் திருவாசகத்தையும், இன்றைய அருளாளரான வேதாத்திரி மகரிஷியின் வேதாத்திரியத்தையும் ஒப்புநோக்குவது இக் கட்டுரையின் நோக்கமாகும். இதனால் சைவ சமயமாம் தமிழ்ச் சமயத்தின் அன்றைய, இன்றைய இயல்பினையும், இன்று கண்டுள்ள வளர்ச்சியினையும் அறுதியிட முடியும் என்ற கருதுகோளில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

மணிவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்

இரு படைப்புகளை ஒப்பிடுகையில் அவற்றின் படைப் பாளரையும் படைப்புச் சூழலையும் உணர்ந்துகொள்ளுதல் இன்றியமையாததாகும். அவரவர் படைப்புக் கோட்பாட்டிற்கு அவர்தம் படைப்புப் பின்புலமும் அடிப்படையாதல் எண்ணத் தக்கது. எனவே முதலில் மணிவாசகர், வேதாத்திரி எனும் இருபெரும் அருளாளர் பற்றிய சிற்றறிமுகம் இங்கமைகிறது.

மணிவாசகர், மாணிக்கவாசகர், ஆளுடைய அடிகள் என்றழைக்கப்படும் சிவனருட்செல்வரின் இயற்பெயர் வாதவூரர். பிறந்த ஊரின், இறைவனின் பெயரே இயற்பெயராய் இவர்க்கமைந்தது. யோகிராஜ், தத்துவஞானி, மகரிஷி, அருட்தந்தை எனப் பலவாறாகப் போற்றப்படும் வேதாத்திரியாரின் இயற்பெயரும் அதுவே. இருவருமே தம் படைப்புகளின் பெருமையால் சிறப்புப் பெயர் பெற்று பொலிகின்றனர். சுமார் 1200 ஆண்டுகால இடைவெளி இருவருக்குமிடையே அமைவதும் கூறத்தக்கது. தம் அறிவாற்றலால் பாண்டிய மன்னன் அவையில் அமைச்சராக உயர்நிலை பெற்றவர் மணிவாசகர். வறுமைச் சூழலில் குழந்தைப் பருவத்திலேயே குலத் தொழிலாம் நெசவுத் தொழிலை மேற்கொண்டு தம் அறிவுத் திறத்தாலும் பலரின் உதவிகளாலும் பொருளாதாரத்தில் உயர்நிலை கண்டவர் வேதாத்திரியார்.

அரசுப்பணி மூலம் சமூகப்பணி புரிந்தவரைத் திருப்பெருந்துறையில் குருவாக வந்து ஆட்கொண்டான் இறைவன். ஏழுவயது முதலே ஞானவேட்கை கொண்ட வேதாத்திரியாருக்கு முதற் குருவாய் அவரது தந்தை அமைந்தார்; மற்றும் எஸ். கிருஷ்ணராவ், பரஞ்சோதி சுவாமிகள் போன்றோர் வழிகாட்டுதலுடன் தம் ஆழ்சிந்தனையின் விடாமுயற்சியால் இறைமையை உணர்ந்தார். இதனை அவரே,

அறிவைப் புலன்களில் அதிகநாள் பழக்கினேன்
அதன்பயன் உணர்ச்சிகள் அறிவை வென்றன
அறிவை யறிவால் ஆராயப் பழகினேன்
அந்த நிலையிலும் புலன்களை இயக்கினேன்
அறிவு அகண்டா காரத்தில் நிலைபெற
அதிக விழிப்பும் பழக்கமும் பெற்றது
அறிவு புலன்களை அறிந்தது வென்றது
அங்கு வாருங்கள் அமைதி விரும்புவோர்

எனப் பதிவு செய்துள்ளார் (எனது வாழ்க்கை விளக்கம், ப. 93).

தன்னனுபவ வெளிப்பாடு, தன்னிரக்கம், இறைவேட்கை என்பன மணிவாசகரின் மாணிக்க மொழிகளில் செய்யுட்களாக வடிவெடுத்துக் கற்பாரைக் கரைய வைத்தன. இறையருளுக்கு ஏங்கி ஏங்கி உருகியதில் இறையன்பர் வரிசையில் இடம்பெற்றார். கடும் முயற்சியில் இறையருள் பெற்ற வேதாத்திரியார் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதில் அசையா ஊக்கங் கொண்டவர். எனவே படிக்கத் தெரிந்த ஆர்வலர் அனைவரும் பயன்கொள்ளும் வகையில் செய்யுளாகவும் உரைநடையாகவும் தம் எண்ண ஊற்றுக்களை ஆக்கியளித்தார். உலக மக்கள் அனைவரையும் உள்ளடக்கிய அன்பு வேலியாதலின் யாவரும் பயன்கொள்ளும் வகையில் உலகப் பொதுமொழியான ஆங்கிலத்திலும் அவற்றை ஏற்றியுள்ளார். மெய்ஞ்ஞானம் பெற்ற மகிழ்வில் மூழ்கி முன்னவர் திளைக்க, பின்னவர் அதனை விஞ்ஞானத்துடன் இணைத்து உலகத்தவரும் இன்புற வழிகாட்டுதலையே பெரும்பேறாகக் கொண்டுள்ளார்.

கல்லாத புல்லறிவில் கடைப்பட்ட நாயேனை
வல்லாளனாய் வந்து வனப்பு எய்தி இருக்கும் வண்ணம்
பல்லோரும் காண என்றன் பசுபாசம் அறுத்தானை
எல்லோரும் இறைஞ்சு தில்லை அம்பலத்தே கண்டேனே
(476)

எனத் தேடாமலே அவனருள் கிடைத்ததில் மணிவாசகர் தமக்குத் தாமே அனைத்தும் அறிந்தவராக, உணர்ந்தவராக அமைகிறார். சிறுவயது முதலே இறைவனைத் தேடிய வேதாத்திரியாருக்குத் திருமூலர், திருவள்ளுவர், தாயுமானவர், இராமலிங்க சுவாமிகளாகிய வள்ளலார் ஆகியோர் தம் படைப்புகள்வழி வழிநடத்தியுள்ளனர்.

திருப்புகழாய் உன் பெருமை உணர்ந்த முன்னோர்
தெளிவாகப் பிறர் உணரப் பாடியுள்ள
தெய்வமொழி என் உள்ளத்தில் புகுந்து தூண்ட
தெவிட்டாத இன்பத்தில் திளைத்தேன்

(இறையுணர்வும் அறநெறியும், ப. 1)

என அவரே இதனை மொழிந்திருப்பது கூறத்தக்கது. அவர் அழுது அடியடைந்த அன்பர் எனில் இவர் உலகநல அருள் தொண்டராவார்.

திருவாதவூரில் மணிவாசகரைத் தந்த பெருமைக்குரியவர்கள் சம்புபாதாசிரியரும் சிவஞானவதியாரும் ஆவர். கூடுவாஞ்சேரி வரதப்பரும் சின்னம்மாளும் வேதாத்திரியாரை இம்மண்ணுக்களித்த பெருமையாளராவர். காலப் பழமைக்கேற்ப முன்னவர் மரபாளராகிறார். கால மாற்றத்திற்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் ஏற்ப பின்னவர் புத்துலகச் சிற்பியாக உள்ளார். இருவரையும் இணைத்துக் காண்பது மணிவாசகரின், 'முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே' (163) எனும் கூற்றினை விரித்துரைப்பதாகலாம். காலத்திற்கேற்ப சமயங்கள் தம்மை வளர்த்துக் கொள்வதே அவற்றின் நிலைபேற்றிற்கு அடிப்படையாவதும் புலனாகும்.

திருவாசகமும் வேதாத்திரியமும்

'சொற்பதம் கடந்த தொல்லோன்' (3:110) புகழ் பாடும் திருவாசகம் எட்டாந்திருமுறையாகப் பன்னிரு திருமுறையுள் இடம்பெற்றுள்ளது. உபநிடதம், ஏகான்ம வாதம் என்று போற்றப்படுவது (ப. அருணாசலம், பக்தி இலக்கியம், ப. 266). 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்ற முதுமொழி, தூய ஆன்மா பேரின்ப நிலை காண இறையருள்

வேண்டி ஏங்கிய ஏக்கத்தின் இயல்பினை வெளிப்படுத்தக் காணலாம். இதனால்தான் சிவப்பிரகாசர் நால்வர் நான்மணி மாலையுள், வேதங்களை விட உயர்ந்ததாக இதனைப் போற்றுவார். அதிவீர ராம பாண்டியர் இதன் சாரத்தைக் குட்டித் திருவாசகம் எனப் புகழப்படும் திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதியுள் அளித்துள்ளார். மெய்கண்டாரின் சிவஞான போதத்தின் எட்டாம் சூத்திரமும் திருவாசகத்தின் பிழிவாகக் கருதப்படுகிறது (வாழ்வியல் களஞ்சியம், தொகுதி - 10, ப. 542). ஆன்மாக்களின் மாசினைக் களைந்து உய்தியளிக்கவல்ல ஞான நூலாகத் திருவாசகத்தைப் பாராட்டும், வேதாத்திரியாரின் ஞானச் சுடரான வடலூர் வள்ளலார்,

வான்கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து என்
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

எனத் தம் ஆளுடை அடிகள் அருள்மாலையுள் போற்றியுள்ளார்.

இறையருளாளர்கள் மட்டுமின்றி இறையன்பர்களாலும் திருவாசகம் சிறப்பிக்கப்பட்டதை, "பெருஞ் சிறப்பிற்குரியதாகத் திருவாசகம் இருப்பதையுணர்ந்த சோழமன்னர்கள் - முதற் குலோத்துங்கன், விக்கிரம சோழன், இரண்டாம் இராசராசன், இரண்டாம் இராசாதிராசன் ஆகியோர் தங்கள் ஆட்சிக் காலத்தில் திருவாசகப் பாடல்களை ஓதச் செய்யவும், மணிவாசகருக்கு விழா எடுக்கவும் அளித்த நன்கொடைகளைக் கல்வெட்டுகள் கூறுகின்றன" என்பர் (வாழ்வியற் களஞ்சியம், தொகுதி - 10, ப. 543).

இன்றும் இது தன் சிறப்பால் சைவ சமயத்தாரிடையே தமிழ் வேதமாக முழங்கிக் கொண்டிருக்கிறது. புறச்சமயத்தவரான ஜி.யு. போப் திருவாசகத்திற்கு உருகி, கண்ணீர் மல்க ஆங்கிலத்தில் மொழிபெயர்த்திருப்பது ஒன்றே இதன் உலகளாவிய புகழுக்குப் போதுமான சான்றாகும்.

வேதாத்திரியாரின் உயர்சிந்தனைகளின் கருவூலம் வேதாத்திரியமாக உருவெடுத்துள்ளது. மணிவாசகர், 'ஆலமுண்டான் எங்கள் பாண்டிப்பிரான் தன் அடியவர்க்கு மூல பண்டாரம்

வழங்குகின்றான் வந்து முந்துமினே' (525) என உரைத்த மூலபண்டாரம் வேதாத்திரியம் என யாவருக்கும் வெளிப்பட பெருகி நிற்பதாகக் கொள்ளலாம்.

"இல்வாழ்க்கையினை நடத்திக்கொண்டே கடமைகளைச் செய்துகொண்டு அறிவிலே தெளிவடைந்து, முழுமை பெற்று, அமைதியான மகிழ்ச்சியான நிறைவான வாழ்க்கை வாழும் வழிகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளலாம். இல்வாழ்க்கையில் இருந்துகொண்டு முழுமைப்பேறு அடையலாம்" (எஸ்.கே.எம். மயிலானந்தன், எனது வாழ்க்கை விளக்கம் - பதிப்புரை);

"தனிமனிதன் மன அமைதியடைவதன் மூலமே உலக அமைதி ஏற்படும் என்று வலியுறுத்தி ஒவ்வொருவரும் தன்னைத்தான் அறிந்து, மெய்யுணர்வு பெற்று உலகத்திற்குத் தான் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்து பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்துகிறது. ஒருலக ஆட்சி, உயர் ஒழுக்கம் இவற்றையே உலக சமுதாய சேவா சங்கம் போதிக்கிறது" (எம்.இ. துரைசாமி, மேற்படி, ப. 143);

"இவர் போதனையில் முக்கியமாகக் காணப்படுவது தன்னைத்தான் உணர்ந்து விழிப்போடு செயலாற்ற வேண்டு மென்பதும் எல்லாவற்றையும் தன் சொந்த முயற்சியிலேயே பெறவேண்டும் என்பதும்தான்" (எம்.இ. துரைசாமி, மேற்படி, ப. 150);

"திரு. வேதாத்திரி சுவாமிகள் டெல்லி சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தில் பேசியதைக் கேட்டபோது இராமலிங்க அடிகளாருடைய கருத்தையே அதே எளிமையோடும் அதே தூய்மையோடும் இவர் எடுத்துச் செல்வதாகவே எனக்குத் தோன்றியது. இந்திய தத்துவ ஞானத்தின் வழிவந்த தலைசிறந்த ஒரு பெரியாராக இவரைக் கொள்ள வேண்டுமென்றே எனக்குத் தோன்றியது.... இராமலிங்க அடிகளைப் போல் இவரும் உலகச் சகோதரத்துவத்தை வளர்க்கவே பாடுபட்டு வருவது எனக்கு மேலும் பன்மடங்கு மகிழ்ச்சியளித்தது. உலகச் சகோதரத் துவத்திற்கு அடிப்படையாக வேண்டுவது எல்லோரிடத்தும் தூய அன்போடு பழகுதலாகும்.... இவருடைய தத்துவ ஞானம் ஹிந்து சமுதாயத்திற்கு மட்டுமல்லாமல் எல்லாச் சமயத்தவர்க்கும் எல்லா நாட்டவர்க்கும் பொருந்தியதாக இருக்கிறது." (அருள்நிதி முருகேசன், மேற்படி, ப. 145);

"இவருடைய யோக மார்க்கத்தைப் பின்பற்றுவதன் மூலம் சீக்கிரமே ஆன்மீக முன்னேற்றம் அடைவது உறுதி" (அருட்செல்வர் சேஷன், மேற்படி, ப. 148) எனும் கூற்றுகள் வேதாத்திரியத்தின் அடிப்படைகளை எடுத்துக்காட்டுகின்றன.

பக்தியியக்கத்தின் இடையிலும், இன்றுமாக முறையே தோற்றம் கண்டுள்ள திருவாசகத்தையும் வேதாத்திரியத்தையும் ஒப்புநோக்கும்பொழுது கீழ்க்கண்ட நான்கு நிலைகள் தென்படுகின்றன.

1. ஒன்று படுநிலை
2. வளர்த்துச் செல்லும் நிலை
3. மாறுபடுநிலை
4. தனிச்சிறப்பு

இனி இவற்றை 'ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதமாக' ஓரிரு சான்றுகள்வழி விரித்துரைக்கலாம்.

ஒன்றுபடுநிலை

இரண்டிற்கும் இடையேயான காலவெள்ளம் கருத்து வளர்ச்சிக்கு முதன்மைச் சிறப்பளித்திருப்பினும் இறை நம்பிக்கையான பக்தியின் அடிப்படை வேர்கள் ஒன்றாகவே அமைகின்றன. அவ்வாறு ஒன்றாக அமையும் கூறுகள் இங்கு எண்ணப்படுகின்றன. 'கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச் சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று பிறந்த பிறப்பறுக்கும் பெம்மான் ஆன சிவனே பரம்பொருள்' என்றும் 'வேறு வேறுருவும் வேறு வேறியற்கையும் நூறு நூறாயிரம் இயல்பினதாகி ஏறுடை யீசன்" (2: 23-25) என்றும்,

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்று எழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறியவாகிப் பெரியோன் தெரியின் (3: 1-6)

என்றும் இறைவன் தன்மை திருவாசகத்துள் சிறப்பிக்கப் பட்டுள்ளது. இதே கருத்தை வேதாத்திரியம், 'சிவம் என்ற அந்தப்

பூரணப் பொருள்' என்றும் அது இருப்புநிலை, ஆதி, அநாதி, தூயவெளி, பிரம்மம், பூரணம், முற்றறிவு, தெய்வம், மெய்ப்பொருள், சிவம், எல்லாம் வல்ல முழுமுதற்பொருள், திருவருள் என்ற சொற்களால் விளக்கப்படும் அருள்நிலையாகும் என்றும் விரித்துரைக்கிறது (இறையுணர்வும் அறநெறியும், ப. 26, 25). இதே சிந்தனையை, "பேரியக்க மண்டலத்தோற்றத்திற்கு மூலமான எல்லாம் வல்ல ஒரு பூரணப் பொருளே இறைநிலை ஆகும். இறைநிலையை இயற்கை என்றும் சொல்லலாம். இயற்கையை நான்காகப் பிரித்துக் கொள்ளுங்கள்.

"1. உயிர் உள்ள ஜீவன்கள்

2. பிரபஞ்சத்திலுள்ள கோள்கள், உலகம்

3. விண்நிலை எல்லாவற்றையும் பிரித்துப்பிரித்துப் பார்த்தால் அனைத்தும் விண்துகளின்கூட்டே இதனைப் பரமாணு எனவும் கூறுகிறோம்.

4. இருப்பு நிலையாக உள்ள இறைவெளி" (மேற்படி. ப. 6)

எனவும் விளக்கியுள்ளது வேதாத்திரியம்.

மறுபிறப்பில் திருவாசகமும் (1: 84-88) வேதாத்திரியமும் (ஞானக்களஞ்சியம் - 2, ப. 309) நம்பிக்கை கொண்டுள்ளன. பல்பிறவிகளிலும் இவற்றிற்கு நம்பிக்கை உண்டு. எனவே உயிரின் வேட்கை பிறவாப் பேரின்பம் என்பதிலும் ஒன்றுபடுகின்றன (திருவாசகம் 31, 32; வேதாத்திரியம் - எனது வாழ்க்கை விளக்கம், ப. 86).

இவ்விரண்டிலும் அவரவர் இறையனுபவம் வெளிப்படுத்தப் பட்டிருப்பதும் இவண் சுட்டற்பாலது. மணிவாசகரின் இறையனுபவம் திருவாசகத்துள் பன்முறை கூறப்பட்டிருப்பினும் அதன் திருவாசகப்பகுதியில்,

தடக்கையின் நெல்லிக்கனி எனக்காயினன்
சொல்லுவது அறியேன் வாழ் முறையோ
தரியேன் நாயேன் தான்எனைச் செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்கு
அருளியது அறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்ல கில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரை வித்து

உவாக்கடல் அள்ளுநீர் உள்ளகம் ததும்ப
வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுடல் அகத்தே
குரம்பை கொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புதமான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவது
உள்ளங் கொண்டோர் உருச் செய்தாங்கு எனக்கு
அள்ளுறு ஆக்கை அமைத்தனன் (3: 162-177)

எனக் கிடைத்தற்கரிய அப்பேரின்பம் மகிழ்ச்சி வெள்ளப் பெருக்காகக் காட்சிப்படுத்த முனைந்துள்ளது.

மணிவாசகரின் ஆர்ப்பாட்டமான இந்நிலை வேதாத்திரியத்தில்,

அழுத்தமெனும் உந்தாற்றல் ஒன்றைக் கொண்டே
அணுமுதலாய் அண்டகோடி அனைத்துமாக்கி
வழுத்தும் ஓரறிவுமுதல் ஐந்தும் ஆறும்
வகைவகையாய் உயிரினங்கள் தோற்றுவித்து
முழுத்திறனுடன் காத்து முடிக்கும் மேலாம்
முழுமுதற் பொருளே நம் அறிவாய் ஆற்றும்
பழுத்தநிலை வரும்வரையில் நீ நான் என்றோம்
பதமடைந்தேன் ஒன்றானோம் பரமானந்தம்

என அமைதியாகக் காட்டப்பட்டுள்ளது (இறைநெறியும் அறவுணர்வும், ப. 8). அனுபவம் ஒன்றாயினும் அவரவர் இயல்பிற் கேற்ப அது வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை இங்குக் காண்கிறோம்.

வளர்த்துச் செல்லும் நிலை

திருவாசகத்துள் இடம்பெறும் கருத்துகளை மேலும் சிறப்புற வளர்த்துச் செல்லும் வேதாத்திரியச் சிந்தனை இங்கு எண்ணப்படுகிறது. சான்றாகப் பெண்மை பற்றிய கருத்தாக்கங்களை நோக்கலாம்.

இறைவனை அடையத் தடையாய் நிற்பனவற்றைப் பண்டைப் பெரியோர் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை என மூன்றாகப் பகுத்தனர். இதனால் பக்திப் பனுவல்களில்

பெண்களை இழித்துரைக்கும் பாங்கினைக் காணலாம். திருவாசகத்துள்ளும், 'செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற் பன்னாள் விழுகின்ற என்னை விடுதி கண்டாய்' (109) என அமைந்துள்ளது. எனினும் பெண்மைக்குப் பெருமை யளிக்கும் விதமாகத் திருவெம்பாவை, திருச்சாழல், திருப்பூவல்லி, திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூசல், திருவம்மானை போல்வன அமைகின்றன. இவை பெண்களின் நோன்பு, தொழில் மற்றும் விளையாட்டுகளை முன்னிறுத்தி அவற்றின் வழி பெண்கள் இறைவனின் பெருமை பேசுவதாகவும் அவன் அருள் வேண்டி நிற்பதாகவும் சிறக்கின்றன.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்க வேண்டும்
மாவின் வடுவகிர் அன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமின் எங்கோன் எங்கூத்தன்
தேவியும் தானும் வந்து எம்மையாளச்
செம்பொன் செய் சுண்ணம் இடித்து நாமே (196)

எனும் திருப்பொற்சுண்ணப் பாடலைச் சான்றாக்கலாம்.

ஆணாதிக்கச் சமுதாயத்தினின்றும் பெண்ணின் விடுதலையை மேன்மையைப் பெரிதும் வேண்டுகின்ற தன்மை வேதாத்திரியத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. பெண்ணினத்துக்குப் பெருமை தரும் வகையில் திருவாசகம், அவர்தம் தொழில், நோன்பு, ஆடல் பாடல் வழி இறையுணர்வை, இறையருளை வெளிப்படுத்த, வேதாத்திரியம் பெண்ணின் பெருமையை விளங்க வைத்துள்ளதுடன் இறைமையுடனும் இணைத்துப் பார்த்துள்ளது. சமுதாயத்தில் அவர்களுக்குரிய இடத்தினையும், உரிமை யினையும் விதந்தோதியுள்ளமையால் இப்பண்பு திருவாசகத்தின் வளர்ச்சி நிலையாகக் காட்டப்பட்டுள்ளது.

அரசியல், பொருளாதாரம், மதம் என்ற மூன்று துறைகளிலும் பெண்களின் மதிப்பு குறைக்கப்பட்டே கூறப்பட்டிருக்கிறது எனக் கவலும் வேதாத்திரியம், "சிந்திக்கும் ஆற்றலுடைய மனிதர் எவரென்றாலும் பெண்மையின் மதிப்பை உணரவேண்டியது மிகவும் அவசியம். எல்லா வயதிலும்

மனிதர்கட்கு உதவியும், தியாகமும் செய்து உலகைச் செழிப்பாக வைத்துக் கொள்வதற்கு ஏற்றபடி இறையாற்றல் பெண்மை யாகவும் மலர்ந்துள்ளது... இறைநிலையின் பெருமையை அதன் பேரறிவின் தன்மையை எடுத்துக்காட்டுகின்ற இயற்கையின் வெளிச்சுடர் பெண்மை ஆகும்... சாதாரணமாகப் பெண்மைக்கு நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்று நான்கு குணங்களை வர்ணிப்பார்கள். மேலும் ஒரு தெய்வீகக் குணம், தியாகம் என்பது பெண்மையிலேயே இயல்பாக அமைந்திருக்கிறது என்பதையும் நினைவு கொள்ள வேண்டும்.

இத்தகைய பெண்ணினத்திற்கும் பொருளாதாரத் துறையில் சமத்துவம் அளிக்காமல் எக்காலத்தும் அடிமையாகவே நடத்துகின்ற ஆண்மக்களின் செய்கை இறைநிலைக்கே செய்யக் கூடிய முரண்பட்ட காரியம், பாவ காரியம் ஆகும்... மனித குலத்தில் நன்றி என்ற உணர்வு நல்ல பயனை அளிப்பதாகும். இந்த அடிப்படைத் தத்துவத்தில் பெண்மையின்பால் நன்றியோடு இருப்பது ஆண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமையாகும்... சென்ற காலத்தை நினைத்து வருந்த வேண்டாம். எவரையுமே குறைகூற வேண்டாம் பெண்மையின் மதிப்பு உணர்ந்து அதற்கேற்றவாறு மதநூல்கள், சட்ட நூல்கள், அறிவு நூல்கள் இவற்றையெல்லாம் திருத்த வேண்டிய பொறுப்பு சமுதாயத்தில் சிந்தனையாளர்கள், அறிஞர் பெருமக்கள் இவர்களின் தவிர்க்க முடியாத கடமை ஆகும்." எனப் பெண் முன்னேற்றம் பற்றி ஆழமாகவும் சிந்தித்துள்ளது.

சிந்தனையைச் செயலாற்றும் வேகத்திலும் காட்டி வேதாத்திரியம் மேன்மை பெறுகிறது. இதனைப் பின்பற்றுவோரின் கூட்டமைப்புகளான மனவளக்கலை மன்றங்களில் ஆண்டுதோறும் மனைவி நல வேட்பு விழா நடைபெறுவது போற்றத்தக்கது. அவ்வேளையில் கணவன் மனைவிக்குப் பூச்செண்டு கொடுத்து,

பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்த ஊரைவிட்டுப்
பிரிந்து வந்து பெருநோக்கில் கடமையறம் ஆற்றப்
பற்றற்றத் துறவியெனக் குடும்பத் தொண்டேற்றுப்
பண்பாட்டின் அடிப்படையில் எனைப் பதியாய்க்
கொண்டென்
நற்றவத்தால் என்வாழ்க்கைத் துணையாகிப் பெண்மை

நலநோக்கில் அன்போடு கருணையிவை கொண்டு
மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான் மதிக்கின்றேன் வாழ்த்தி
மகிழ்கின்றேன்

எனப் பாராட்டி நிற்கவும் வேதாத்திரியார் கவி புனைந்தளித் திருப்பது எண்ணி மகிழத்தக்கதாம் (அறிஞர்களின் கடமை, பக். 39-48). "பெண்ணினத்தின் பெருமதிப்பை உணர்ந்தே உள்ளேன். பேருலகில் வாழுகின்ற மக்கள் எல்லாம் பெண்ணினத்தின் அன்பளிப்பே எனில் வேறென்ன பெருமை இதைவிட எடுத்துச் சொல்லுதற்கு?" (ஞானக்களஞ்சியம் - 2, ப. 333) எனும் இவரின் பெண் மேம்பாடு பற்றிய சிந்தனைகள் ஐம்பது ஆண்டுகட்கு முன்பே தோன்றி வளர்ந்துள்ளன என்பதும் இவண் குறிக்கத் தக்கதாம்.

மாறுபடுநிலை

இருபெரும் சிந்தனைச் சிகரங்களுக்கிடையே அறியப் படும் முரண்பட்ட எண்ணங்கள் இங்குக் கருதப்படுகின்றன. இறைவனின் திருவருட்பேற்றில் திளைத்த மணிவாசகர்,

உற்றாரை யான்வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தா உன் குரை கழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே (556)

என்று இறை உணர்விலேயே நீந்திக் களிப்பதைத் திருவாசகம் காட்டுகிறது. 'இறைவா இன்று நான் நிறைவு பெற்றேன்' என்று இறையருள் கூடிய வேதாத்திரியார்,

அன்பும் கருணையுமாய் அகன்ற நிலையில் உள்ளாய்
என்மனதை விரித்து இணைத்துக் கொண்டாய் உன்னுள்ளே
கன்ம வினைகள் எல்லாம் கழிந்தன உணர்கின்றேன்

உன்னை உணர்ந்து உய்ய உலகோர்க்குத் தொண்டு செய்வேன்
(எனது வாழ்க்கை விளக்கம், ப. 118)

என்று சமூகப் பணிக்குத் துணிகிறார்.

எதிர்பாராது தேடாதே கிடைத்த பேரின்பப் பெருங் கருணையால் உளம் நெகிழ்ந்த மணிவாசகருக்கு, அதுவரை செய்து வந்த பொதுப் பணியினின்றும் விடுபட்டு அருள்பாலித்த

அண்ணலோடு ஒன்றுவது மட்டுமே பெருநோக்கானதைத் திருவாசகம் காட்டுகிறது. ஏழ்மைச் சூழலில் பல்வேறு இன்னல்களுக்கிடையே வாழ்ந்துகொண்டு, இறைவனைத் தேடிய முயற்சியில் அடைந்த வெற்றி, தன் போன்று இச் சமுதாயமும் ஈடேற வேண்டும் என்ற அரியதொரு பெருநோக்கை விதைத்தது. அதுவே இன்று வேதாத்திரியம் எனும் 'கற்பகக்கா'வாக உலகோர்க்குக் கிடைத்துள்ளது.

இவ்வுலக வாழ்விலிருந்து விடுபட்டு இறைவனை அடைவதை, பிறவாப் பேரின்பம் பெறுவதைத் திருவாசகம் இலக்காகக் கொண்டுள்ளது. இறையுணர்வுடன் இவ்வுலக வாழ்வைச் சுவைத்துக் கொண்டே, பிறருக்கும் துணை நின்று நாடும் வீடும் நலம்பெறக் கண்டு முழுவாழ்வின் நிறைவில் இறையடியடைதலை வேதாத்திரியம் வேண்டுகிறது. 'மக்கட் தொண்டே மகேசன் தொண்டு' எனும் முன்னோர் மொழியை இது புதுப்பித்துள்ளது; அதன் மெய்ப்பொருள் பேசுகிறது எனலாம். வேதாத்திரியாரைப் பாமர மக்களின் ஞானியாகப் போற்றுவதற்கும் இதுவே காரணமாகும்.

இறைவனிடம் தன்னை முழுமையாக ஒப்புக் கொடுத்தல் திருவாசகம் காட்டும் இறைநெறி, பக்தி நெறி. இங்கு அறிவிற்கு வேலையில்லை. இதனை,

வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே (499)

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக்கு உண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செவ்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே (500)

எனும் பாடல்கள் உணர்த்துகின்றன. எண்ணம், சொல், செயல் அவற்றின் விளைவுகள் என அனைத்துமே இறைவன் வழிப்பட்டதாக, அவனின் இயக்கமாகிறது. இதனால் அங்கே விருப்பு வெறுப்பற்ற மனநிலை, இறைவனுக்கும் பக்தனுக்கும் இடையே இடைவெளியற்ற நிலை, இருவரும் ஒன்றான நிலை உருவாகிறது. திருவாசகத்தின் 'உங்கையிற்பிள்ளை உனக்கே அடைக்கலம்' (173) என்ற இவ்வடைக்கலப் பண்பு, வேதாத்திரியத்தில் அறிவாக உணர்த்தப்படுகிறது. உயிரும் இறையும் கலந்த நிலையை,

அறிவறிந்தோர் சிவமாவார்; அன்பு ஊறும்
அறம் செழிக்க அவ்வறிவே நல்லுரம் ஆம்
அறிவினது ஆற்றல் ஐம்புலன்கள்
அனுபவத்தில் சிக்கிவிட வேண்டாப் பற்றாம்
அறிவறிய மனத்துக்கும் செயலுக்கும் ஓர்
அரணாகும் பக்தி, யோக நெறி இரண்டும்
அறிவறிந்து அவ்வழியில் செயல்களாற்றும்
அகன்ற பேரறமே மெய்ஞ்ஞானமாகும்
(ஞானக் களஞ்சியம் -2, ப. 392)

என வேதாத்திரியம் காட்டுகிறது. இங்கு அனைத்திற்கும் அறிவு முன்னிற்கிறது.

இங்குக் காலச் சூழலால் நிகழ்ந்துள்ள தேவையான கருத்து மாற்றமும் சுட்டப்படுவது இன்றியமையாததாகும். 'அத்தேவர் தேவர் அவர் தேவர் என்று இங்ஙன் பொய்த் தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே... நான் பற்றி நின்ற மெய்த் தேவர்க்கே' (219), 'உவலைச் சமயங்கள் ஒவ்வாத சாத்திரமாம் சவலைக் கடலுள்' (251); 'புத்தன் முதலாய புல்லறிவில் பல்சமயம்' (318) என்பன போன்று திருவாசகத்துள் காணப்படும் புறச்சமயக் காழ்ப்பு, வேதாத்திரியத்துள் சமயப் பொதுமையாக, பொறையாக மாற்றங் கண்டுள்ளது அனைவரும் அறிய வேண்டியதாகும்.

ஒன்று உயிர் என்றறியும் உள் நாட்டத்தை
ஒவ்வொருவரும் பழக வசதி செய்வோம்
அன்று அன்று அறிஞர் பலர் சத்சங்கத்தில்
ஆன்ம தத்துவம் விளக்கும் கடமை செய்வார்

தொன்று தொட்டுப் பல பெரியோர் தோற்றுவித்த
சுத்த சன்மார்க்க நெறிமுறை விளக்கும்
இன்றுவரை விரிந்துள்ள மதங்கள் எல்லாம்
இந்நிலையில் ஒன்றுபடும் பேதமற்று

(ஞானக்களஞ்சியம் - 2, ப. 331)

என்பது இக்கருத்தை விளக்கும் கவியாகும். இதுவே 1986 சனவரி முதல் நாள் உலகப் பொது அருள்நெறி சமயம் என்ற உலகச் சமயம் நிறுவ இடனாயிற்று. "கடவுள் என்பதைப் பக்தியினால் அறிந்துகொள்வதால் மட்டும் மனித அறிவுக்கு அமைதி கிட்டாது. தெய்வம் என்ற ஒரு பூரணப்பொருளே அறிவாகவும், உயிர்களிடம் மலர்ச்சி பெற்று இயங்குகின்றது என்ற உண்மையைத் தெளிவாக விளக்கி உலகப் பொது அருள்நெறி சமயம் என்ற நூலை ஆங்கிலத்தில் (World Order of Holistic Unity) என்ற பெயரில் எழுதினேன். அந்தக் கருத்து உலகில் பரவவும் எல்லா மதங்களும் ஒரே சமயத்தின் கீழ் இணைந்து ஒன்றுபட்டு ஒருலகப் பொதுச் சமயமாக ஏற்றுக்கொண்டு ஒற்றுமையுணர்வு பெறவும் ஏற்றவாறு இறையுணர்வை விஞ்ஞான முறையில் தெளிவுபடுத்தி ஒழுக்கம், கடமை, ஈகை என்ற மூன்று வாழ்க்கை நலச் செயல்களைத் தெளிவாக விளக்கிக் காட்டியிருக்கிறேன். விருப்பமுடையோர் எல்லோரும் இந்த உலகச் சமயத்தில் சேர்ந்து கொள்ளலாம். இதற்காக அவரவர்கள் மதச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் விட்டுவிடத் தேவையில்லை" என்று அதனை விளக்கியுள்ள வேதாத்திரியார் கர்மயோகம் என்ற பெயரில் உலகப் பொதுச் சமயத்தில் சேர விரும்புவோர் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் பத்தினையும் வரையறுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தகுந்தது (எனது வாழ்க்கை விளக்கம், பக். 253-260).

தனிச்சிறப்பு

காலத்தாலும் கருத்தாலும் திருவாசகமும் வேதாத்திரியமும் தம்முள் பெருமளவு வேறுபட்டாலும் தமக்கெனத் தனிச்சிறப்பு களும் கொண்டுள்ளன. இறைவனைத் 'தாயிற் சிறந்த தயாவான தத்துவனே' (1:61) எனத் தாயாகவும் தம்மை 'நாயிற் கடையாய்க் கிடந்த அடியேன்" (1:60) எனத் தாழ்த்தியும் காண்பது மணிவாசகர் நெறி. 'தந்தது உன் தன்னை, கொண்டது என் **தன்னைச்** சங்கரா ஆர் கொலோ சதுரர்; அந்தம் ஒன்றில்லா

ஆனந்தம் பெற்றேன் யாது நீ பெற்ற தொன்று என்பால்' என்பது போன்ற (595) பெருமித உரை காணப்படினும்,

> **யானேதும் பிறப்பஞ்சேன் இறப்பதனுக்கு என் கடவேன்**
> **வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்**
> **தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனே எம்பெருமான் எம்**
> **மானே உன்னருள் பெறுநாள் என்றென்றே வருந்துவனே** (16)

என்பது போன்ற தன்னிரக்க, தன்னுணர்வுச் சிந்தனைகளே மிகுதியும் இடம்பெறக் காணலாம். பக்தியில் குழைந்து உருகி உருகி வடிக்கப் பெற்ற திருவாசகம் கற்பார் ஊனையும் உயிரையும் உருக்கும் வல்லமை பெற்றது. இவ்வுருக்கமே இன்றும் பக்தர் உள்ளத்தில் நீங்கா இடம்கொளக் காரணமாயிற்று.

பக்திநெறியை அறிவின் வழிச் செலுத்தும் வேதாத்திரியம் சமூகநலத் தொண்டின் மூலமாக இறையுணர்வு பெறத் தூண்டுகிறது. இதன் முதல்நோக்கு, சமூகப்பணி என்பதில் ஐயமில்லை. தன்னையுணர்ந்து பிறர்நலம் பேணி இறைவனை அடைதல் இதன் உயிர்நாடியாகும். இதன் விளைவாகவே 'உலக சமுதாய சேவா சங்கம்' 1958இல் உருவானது (எனது வாழ்க்கை விளக்கம், பக். 130-133). இதன் மற்றொரு வெளிப்பாடே உலக மக்கள் அமைதியாகவும் மனநிறைவுடனும் வாழ உலகச் சமுதாய அமைப்பையும் அதன் செயற்பாடுகளையும் அதன் அங்கத்தினர்களின் இயல்பையும் கடமையையும் விளக்கி நிற்கும் ஞானக்களஞ்சியம். இது ஒரு இன்பக் கனவுலகச் சமுதாயமாகத் (Utopia) தோற்றம் தரினும் வேதாத்திரியம் உலகிற்கு வழங்கியுள்ள இணையற்ற நன்கொடை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

ஆலய வழிபாட்டிலும் மதச் சடங்குகளிலும் உள்ள தேவையற்ற செயல்களை விலக்கி அவற்றை ஒழித்துத் தெளிவோடு வாழ வேண்டும் என்ற சமயச்சீர்திருத்த எண்ணமும் வேதாத்திரியத்தின் தனிச்சிறப்பாம். இது,

> சந்தர்ப்ப சூழ்நிலைகளால் என்றென்றோ
> சர்வ தேசங்களிலும் மனிதர் கொண்ட
> எந்தெந்தச் செயல்களோ, காரணமே இன்றி
> இன்று பல சடங்குகளாய் வழக்கமாகி
> வந்துள்ளவைகளிலே பல நம் வாழ்வின்
> வளமிழக்கும் நச்சாகி இருக்கக் கண்டோம்

சிந்தித்தோர் முறை வகுப்போம், தேவையற்ற
தொல்லைதரும் சடங்குகளை ஒழித்துக்கட்ட
(ஞானக்களஞ்சியம், ப. 315)

என வெளிப்பட்டுள்ளது.

பக்தியியக்கம் சமூக மேம்பாட்டு இயக்கமாக வளரும் பொழுது அது மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெறும் என்பதற்கு வேதாத்திரியம் இன்று உலகெங்கும் தன் ஆர்வலரால் பரவி நிற்பது சான்றாகும்.

நிறைவுரை

இடைக்காலத்தே வீறுடன் செயல்பட்டுப் பின் புறச் சமயங்களின் தாக்குதல் முதலானவற்றால் பின்தங்கிய பக்தியியக்கம் இப்பொழுது வேதாத்திரியத்தால் மீண்டும் மறுமலர்ச்சி கண்டுள்ளது எனலாம். பொதுநிலையில் உள்ளத் தூய்மையோடு இறைவனுக்காக ஏங்கி நிற்றலை அன்றைய பக்தி நெறியாகத் திருவாசகத்தின்வழி உணரலாம். இறையுணர்வோடு சமூக மேம்பாட்டுணர்வுடன் வாழ்தலை இன்றைய பக்திநெறியாக வேதாத்திரியம் வலியுறுத்துகிறது. பக்தி உணர்வும் சமூகநல உணர்வும் இரண்டறக் கலந்து வாழ்வியல் நோக்கமாகச் செயல்பட அறிவுறுத்தும் சமயமே இன்று வெற்றி பெறும் என்ற உண்மையும் வேதாத்திரியத்தால் இங்கு வெளிப்படக் காணலாம்.

திருமூலர், திருவள்ளுவர், தாயுமானவர், வள்ளலார் போன்ற பெரியோர்களின் எண்ணங்களை எளிமைப்படுத்தி அவற்றை வாழ்வியல் நெறியாக்கித் தந்துள்ளது வேதாத்திரியம். 'கடைவிரித்தேன் கொள்வாரில்லை' என வருந்திய வள்ளலாரின் கனவு இன்று வேதாத்திரியத்தால் உலகளாவிய வெற்றி பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாம். சுருங்கக்கூறின் தனிமனித மேம்பாடு அன்றும், தனிமனித மேம்பாட்டுடன் இணைந்த சமூக முன்னேற்றம் இன்றும் எனப் பக்திநெறி கனிந்துள்ளது வரவேற்கத் தக்கதாம்.

அழுக்காறு அவா வெகுளி
கடுஞ்சொற்கள் எனும் நான்கு வேண்டாவற்றை
அத்தனையும் மாற்றிவிட்டுத்
தூய்மைப் பேறடைந்த பயன் அறிவறிந்தேன்

பழுத்தமனம் அருளாற்றல்

கணம் மறவா விழிப்புநிலை பிறழ்வதில்லை
பண்பட்டதென் எண்ணம்

சொல், செயல் இவைவிளைவாய் நலம் காண்கின்றேன்
ஒழுக்கமுடன் கடமை பிறர்க்கு

உதவி செய்யும் ஆற்றல் இவை வாழ்வில் ஓங்கி
ஒளிவீசப் பாருலக

மக்கள் நலநாட்டத்தில் தொண்டனானேன்
மும்முழுத்திறமை வளர்கிறது

கொடுப்பதன்றிக் கேட்பதில்லை எதிர்பார்ப்பில்லை
முதிர்ந்து வரும் அறிவு

சிவக்காட்சியென உள்ளுணர்ந்து நிறைவாயுள்ளேன்

(எனது வாழ்க்கை விளக்கம், ப. 74)

துணை நூல்கள்

திருவாசகம், திருவாவடுதுறை ஆதீனம், திருவாவடுதுறை, 1971.

வேதாத்திரியம்

அறிஞர்களின் கடமை; வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, மு.ப. 2002.

இறையுணர்வும் அறநெறியும்; வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, ஐ.ப. சூலை 2003.

எனது வாழ்க்கை விளக்கம்; வேதாத்திரி பதிப்பகம்; ஈரோடு, எ.ப. சூன் 2004.

ஞான்க்களஞ்சியம் – 1, 2; வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, இ.ப. 2000.

மகரிஷியும் ஞானநெறியும்

ரெ. சொர்ணபிரபா

உலகியலை அறிவது பட்டறிவு எனப்படும். பட்டறிவை அறிவதற்குப் பயன்படும் ஊடகமாக விளங்குவது கல்வியறிவு எனப்படும். ஆயின் பிரபஞ்சத்தின் தன்மையையும் அதில் மனிதன் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றித் தெளிவுறத் தெரிந்து கொள்வது ஞான அறிவு எனப்படும். ஞானம் என்பது பிரபஞ்சத்தை இயக்கும் சீர்காந்த அறிவு என மகரிஷி கூறுகிறார்.

காந்தம் என்பதற்கு ஈர்ப்பு என்பது பொருள். உந்து விசையும், கொள்ளும் விசையும் ஆகிய இரு செயல்பாடுகளைச் செய்யவல்ல சக்தியே ஈர்ப்புவிசை எனப்படுகிறது. இதனை இணைப்புச் சக்தி (Medium) எனக் கூறுவர். விஞ்ஞானம் இவ்வீர்ப்பு விசையில் நான்கு நிலைகளைக் காண்கிறது.

1. ஈர்ப்பு சக்தி (Gravitational force)
2. மின்னணு விசை (Electromatic force)
3. நலிந்த சக்தி (Weak force)
4. வலிமை மிகுந்த சக்தி (Strong force)

எனக் காந்த ஆற்றலை எல்லைகட்டி விளக்குகிறது.

காந்த ஆற்றல் தன்மாற்றத்தால் அழுத்தமாக, ஒளியாக, ஒலியாக, சுவையாக, மணமாக, மனமாக, விரியவும் செய்யும். அவ்வாறு விரிந்த அந்த ஆறு தன்மைகளையும் காந்தம் தனக்குள்ளாகச் சுருக்கி அடக்கிக் கொள்ளவும் முடியும். இப்படி விரியும் வேகத்தில் அழுத்தமாக, ஒளியாக, ஒலியாக, சுவையாக,

---

முனைவர் பட்ட ஆய்வாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 113.

மணமாக, மனமாக ஜீவ இனங்களிலே தன்மாற்றம் (Physical transformation) ஆக நடைபெறுவதாக வேதாத்திரியார் விளக்குகிறார்.

இவ்வாறு ஐம்புலன்கள் மூலமாக உணரக்கூடிய காட்சிகள் எல்லாம் புலனுணர்வுக்கும் (Perception), அப்படிப் புலன் உணர்வாகப் பார்க்கக்கூடியதிலே மூன்று செயல்கள் உண்டு. அவை:

1. உருபொருள் உணர்தல் (Cognition)
2. தன்னையறிதல் (Experience)
3. வேறுபட அறிதல் (Discriminate)

அதாவது உரு அறிதல் என்றால் அங்கே ஒரு பொருள் இருக்கிறது என்பதை உணர்தல். அப்படி உணர்கிறபோது அந்த உருவம், செயல் நம் ஜீவகாந்தத்தில் படுகின்றபொழுது, அந்த அலை இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் என்ற நான்கில் ஏதோ ஒரு உணர்வைப் பெறுகிறது.

தன்னையறிதல் (experience) என்பது நான் யார்?, எங்கே எப்படி இருக்கிறேன்?, என்ன செய்ய வேண்டும்?, ஏன் செய்ய வேண்டும்? என்று தன்னைப் பற்றி ஆராய்தலும், இயற்கையில் நடைபெறுகின்ற வியத்தகு நிகழ்ச்சிகளுக்கு எந்த ஆற்றல் காரணம் என்று ஆராய்தலும் ஆகும். அவ்வாறு ஆராயும்போது இயற்கை நிகழ்ச்சிகளைக் காணுதலால் ஓர் உவப்பு, மகிழ்ச்சி, நிறைவு ஆகியவை உண்டாகின்றன. அதுதான் பேரின்பம், துன்பம், இன்பம், அமைதி (pain, pressure, peace, ecstasy) என விளக்கப்படுகிறது. இந்த நான்கு உணர்வுதான் மனித மன உணர்வுகள்தான் அனுபவம் எனப்படுகின்றன.

வேறுபட உணர்தல் என்பது நேற்றுப் பார்த்த ஒன்றுக்கும், இன்றைக்குப் பார்க்கப்படும் பிறிதொன்றிற்கும் உள்ள வேறுபாடுகளை இன்ன அளவு எனக் கண்டுகொள்வது. ஆக இந்த அடிப்படை உணர்வுகளை வைத்துதான் மனிதன் இறை உணர்வைத் தேட முடியும். எது சூனியம், வெளி, சக்தியற்றது என்று கருதி வருகிறோமோ அதுவேதான் வான் காந்தம் எனும் சீவகாந்தம் எனப்படுகின்றது.

பேரான்மா

இது வான்காந்தமாகும். இறைநிலையும், விண்ணிலிருந்து எழும் விரிவலையும் கூடிய புலன்களுக்கெட்டாத பேராற்றலுள்ள அலைநிலை. இந்த அலைநிலைக்குள்தான் பேரியக்க மண்டலத் தோற்றங்களும் அவற்றின் இயக்க நிதிகளும் எல்லா உயிரினங்களின் அனுபவப் பதிவுகளும் அடங்கியுள்ளன. இதனைத் திருவருளாற்றல் (cosmic, consciousness), அர்த்தநாரி, பிரணவ சொரூபம், அதிர்ஷ்டமூலம் என்ற பெயர்களால் கூறுகிறோம்.

நிலை பொருள், சிவம், தெய்வம், பூரணம். ஆனால் அதன் அலை விரைவுதான் நிகழ்ச்சி, மனம். எனவே மனதை அறிந்தால்தான் அறிவை அறியலாம். அறிவை அறிந்தால் அறிந்த அவ்விடத்திலேயே சிவத்தையும் அறியலாம்.

ஞானமும் தமிழும்

தமிழ்மொழியை இருவகையாகக் கையாளலாம். ஒன்று புலமை மற்றொன்று ஞானம். புலமையென்பது இலக்கிய நோக்குடையது. அதுவே சிற்றின்பமாகும். ஞானம் பெருநோக்குடையது அதுவே பேரின்பமாகும்.

கவிதை அழியாது. அதுபோலவே ஞானிகள் இயற்றிய செய்யுளும் அழிவதில்லை. ஆகவே பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தால் புலமை பெறலாம். புலவர்களின் சொல்லும் எழுத்தும் கற்றவர் மத்தியில் மட்டும் உழலும். ஆனால் ஞானிகள் எழுத்தும், சொல்லும் கற்றார் மத்தியிலுமுழலும். பாமரர் மத்தியிலும் உழலும். இது கண்கூடு. ஆகவே பல நூல்களைக் கற்று நாம் புலமை பெற்றிருந்தாலும் ஞானம் பெறவில்லையாயின் நாம் பேரின்பமடைவதென்பது எட்டாக்கனியாகும். இதைப் பல முன்னோர்களைக் கொண்டு தெளியலாம்.

எது எவ்வாறிருப்பினும் தமிழைக் கையாளுபவர்கள் புலவர்களாக இருந்தால் தான் இறந்தும் தன் தமிழாகிய எழுத்துக்களை என்றும் உலவவிடுகின்றனர். ஞானிகள் தானும் மக்கள் மத்தியில் வாழ்ந்து, தான் யாத்த செய்யுள்களையும் உயிருடன் வாழ வைக்கின்றனர். எனவே முதலில் புலமை பெற்றுப் பின்பு ஞானம் பெறுவதென்பது எல்லோரும் கடைப்பிடிக்க

வேண்டியதாகும். ஒருவர் புலவர் என்பதும் ஞானி என்பதும் அவரவர் படைக்கும் நூல்களால் வெளிப்படும். அதாவது அவரவர்கள் எச்சத்தால் காணப்படும் என்பதாம். எனவே ஞானம் பெறுதலே முழுமையான தமிழாகும்.

முக்திப்பேறு அடையும் வழியைப் பெரியவர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்று கூறுகின்றனர். இவ்வழிகளில் சரியையில் சரியை, சரியையில் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என்றும், கிரியையில் சரியை, கிரியையில் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம் என்றும், யோகத்தில் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம் என்றும், ஞானத்தில் சரியை, ஞானத்தில் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்றும் பதினாறு படிநிலைகள் உள்ளன. இவ்வாறுள்ள பதினாறு படிநிலைகளையும் கடந்த பின்னரே முக்திப் பேறடைய முடியுமென்று முன்னோர் கூறுகின்றனர்.

வேதாத்திரியின் ஞான விளக்கம்

பொதுவாக ஊழ்வினையின் செயல்பாட்டையும், தன்வினையின் செயல்பாட்டையும் முறையாக அறிந்து அவற்றிலிருந்து விடுபடுவதற்கான மார்க்கத்தை ஞான நெறி என்று கூறுவோம். ஞானம் என்பது பிரம்ம ஞானம், ஆத்ம ஞானம், விஞ்ஞானம் எனப் பல நிலைகளில் அமையும்.

பிரம்மஞானம் என்பது அசுத்தவத்தால் அலைநிலையான மனநிலையையறிந்து, அம்மனதுக்கு நிலைப்பொருளாகவும், உட்பொருளாகவும் உள்ள இறைநிலையை உணர்வதே பிரம்ம ஞானம் ஆகும். மனதை நேர்படுபொருளாக அறிய முடியாது. ஆனாலும் அதன் ஆற்றல் செயல்படும் வித்தை, விளைவு இவற்றைக் கொண்டு உணர்வதே ஆத்ம ஞானம் ஆகும்.

விஞ்ஞானம் என்பது உணர்ந்த ஒன்றினைக் கோட்பாடாகக் கொண்டு அதன்வழி ஒரு தீர்மானத்திற்கு வரும் அறிவாகும். இவ்விஞ்ஞான அறிவெல்லாம் புவியியல் சார்ந்த ஆய்வுகளுக்குப் பயன்படுமேயன்றி மனித மனங்களை ஆய்வு செய்யப் பயன்படாது. இது குறித்து மகரிஷி கூறும்போது,

தத்துவம், வேதாந்தம், விஞ்ஞானம் மூன்றும்
தனித்தனியாம் வெவ்வேறு பிரிவென்பார்கள்
தத்துவமோ இயற்கை யதன் உண்மைகூறும்
தரம் பலவாய் அதன் நிலையைப் பிரித்துப்பேசி
தத்துவத்தைத் தெளிவாக்கும் கலை வேதாந்தம்
தாரணியில் பல பொருளாய் உள இயற்கைத்
தத்துவத்தை அறிவை, வாழ்வை வளப்படுத்தும்
சகல வழிமுறைகளும் விஞ்ஞானமாகும்

இப்பாடலில் தத்துவத்தை வேதாந்தமும், வேதாந்தத்தை விஞ்ஞானமும் ஒன்றையொன்று விலக்கி நிற்கும் என்று கூறுகிறார். எந்தப் பொருளிலும் இறைத்தன்மை உண்டு என்று சிந்திப்பதே உண்மை ஞானத்தின் உட்பொருளாகும்.

தனித்தனியாய்த் தோன்றும் எந்தத் தரமுடைய பொருளிலும்
தத்துவமாம் தெய்வம் உள்ள தன்மையும் விளங்கிடும்
கனிந்த அந்தப் பேரறிவில் கருத்துணர்ந்த ஞானிகள்
கண்ட உயர் பிரம்மஞானம் காட்டினார் மறைகளில்

மனிதன் எச்செயலைச் செய்தாலும் அதிலிருந்து வரும் காந்த அலைகள் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் இவையாக மாற்றம் பெற்று, அவற்றினது உரசலால் இன்பம், துன்பம், அமைதி, பேரின்பம் என்பனவற்றை அளித்து, இவையெல்லாவற்றையும் சுருக்கி, இருப்பாக்கி வினைப் பதிவுகளாகக் கருமையத்தில் வைத்து விடுகிறது. கருமையத்தில் அடங்கியுள்ள வினைப் பதிவுகளின் கூட்டுத் தன்மைக்கேற்ப, அம்மனிதனின் அறிவாட்சித் தரம் அமைகின்றது. இந்த இருப்பு எத்தனை காலமானாலும் மாறாது; அழியாது.

அறிவைப் பற்றிச் சொல்லும்போது அதிலும் குறிப்பாக மெய்யறிவு எனப்படுவது,

ஆதிநிலை வெட்டவெளி
அதுதான் மெய்ப்பொருளாகும்
அசையும் நிலை அணுகாந்தம்
அதை உயிர் என்று
உரைக்கின்றோம், சோதி, சப்தம், சுவை, மணங்கள்
சொரூபம் இவை அணுமின் சக்தி
தொடர்ந்தியங்கும் நிகழ்ச்சிகளாம்
சுய உணர்வே அறிவாகும்

ஞானம் எனும் அறிவைப் பெற்ற மனிதன் கடவுளுக்கு இணையாவான். கடவுள் இன்னது என்று உணர்வதாலும் அனைத்தையுமே கடவுளாக எண்ணுவதாலும் நீக்கமற நிறைந்திருக்கும் பொருளே கடவுளாகிறது என்ற உணர்வு வலுத்து நிற்கும் மனதையுடைய மனிதனைப் பிறர் கடவுளாகக் காண்கின்றனர். கடவுள் இவ்வண்ணத்தினன், இச்செயலுடையவன், இன்ன குணம் உடையவன் எனக் கடவுளின் கல்யாண குணங்களை உணர்ந்து கடவுளைப் பற்றிப் பல நூல்கள் எழுதிக் கடவுள் பற்றிய உண்மைகளை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதால் ஞானி கடவுளுக்கு இணையாவான். இதனை,

கடவுள் எனப் படுபவனே மனிதனானான்
கருத்தியங்கிக் கருத்துயர்ந்து கருத்தறிந்தான்
கடவுளாய் அனைத்தையுமே கண்டுவிட்டான்
காண்பவனே ஆதியந்த மாகி நின்றான்
கடவுள் நிலை யறிந்தவனே அறியாதோர்க்குக்
கருத்துணர்த்தும் நூல்கள் பல எழுதிவைத்தான்
கடவுள் இரகசியம் அதனை வெளியாய்க் காட்டும்
கடமையே சிறந்த தெனக் கண்டான் ஞானி

என்ற பாடல் வலியுறுத்தும்.

பொதுவாக 'நான்' என்பது அகந்தை எனத் தமிழ்த் தத்துவ வாதிகள் கூறுவர். ஆனால் 'நான்' என்பது 'இயக்கம்' என மகரிஷி விளக்கம் தருகிறார். அவரவர் அறிந்த அறிவின் திறமே இதற்குக் காரணம் என்கிறார். இதனை,

உருவங்கள் அனைத்திற்கும் ஊடே உண்டு
ஒரு சக்தி என்ற உண்மை எவரும் ஏற்பர்
அருவமாய் உள்ள அதே கடவுள் என்றும்
அது இயக்கும் உருவமே 'நான்' என்பான் பக்தன்
ஒருவனாய் உள்ள அந்த அரூபமே 'நான்'
உருவனைத்தும் என் தோற்றம் என்பான் ஞானி
இருவருமே சொல்லுகின்ற கருத்து ஒன்றே
எனினும் அவரவரறிந்த அளவே பேதம்

என்ற பாடல் உணர்த்தும்.

ஞான அறிவு என்பது மெய்ப்பொருளோடு இயைபுடையது. மெய்ப்பொருளுக்கு எல்லை கிடையாது என்பதனை,

துவக்கமுண்டு முடிவுண்டு பருஉடற்குத்
துவக்கமுண்டு முடிவில்லை உயிர் ஆற்றற்குத்
துவக்கமில்லை முடிவுமில்லை பரநிலைக்குத்
துவக்கம் இயக்கம் முடிவு உண்மை தேர்வீர்

மெய்ப்பொருளுக்கு விளக்கம் தரும்போது மோன நிலையே மெய்ப்பொருள் என விளக்கம் தருகிறார்.

இல்லாததே இருந்தது இயம்பொணாத மௌனமாய்,
நில்லாததும் நின்றதும் நின்ற ஒன்றெழுந்ததால்
பொல்லாததும் நல்லதும் புலன் விரிந்த பின்னரே
கல்லாவிதம் கற்றனம் கருத்தினால் கருத்துளே

ஞான அறிவினை மனதை மாசுபடுத்தும் எண்ணங்களைச் செதுக்கித் தள்ளும் உளியாக வருணிக்கிறார் மகரிஷி. நீர் நிறைந்த பாண்டத்தில் காற்றுப் புகாது. மெய்ப்பொருளால் நிறைந்த உள்ளத்தில் இவ்வுலகியல் கூறுகள் உள் நுழையாது. மனம் சீராக வைக்கப்படுமேயானால் மனத்தில் நிறைவு நிலவும் என்ற ஞானத்தின் உட்பொருளை,

நீர் நிறைந்த பாண்டத்தில் காற்றேறாது
நித்தியமாம் மெய்ப்பொருளால் நிறைந்த உள்ளம்
ஊர் உலகப்பொருள் கவர்ச்சி உணர்ச்சி ஏதும்
உள் நுழையா இப்பேறு தவத்தாலன்றி
யார் பெறுவர் யார் தருவர் அறிவு ஓங்கி
அதுவேதான் மெய்ப்பொரு ளென்றறியும் பேற்றைச்
சீர் நிலையில் மனம் வைத்து வேண்டாப் பற்றைச்
செதுக்கிக் கொண்டேயிருக்கும் விழிப்பு வேண்டும்

என்ற பாடல்மூலம் விளக்கிக் காட்டுகிறார்.

உயரை அறிவதே ஞானம்

எப்பொருளையும் அறிவியல் கண்ணோட்டத்தோடு நோக்குவது மகரிஷியிடத்துக் காணப்படும் குறிப்பிடத்தக்கதோர் பண்பாகும். உயிரை அறிவதே ஞானம் என்றும் அறிய இயலாத நிலை அஞ்ஞானம் என்றும் விளக்கம் தருகிறார். இதுபற்றி,

உயிர் அறிந்தால் அறிவறியும் உண்மை தோன்றும்
உலகமெலாம் உயிருக்குள் இருக்கக்காணும்
உயிரறிந்த அறிவாலே உலகை நோக்க
உயர்வு தாழ்விலாத சமநிலை சித்திக்கும்;

உயிரறியா அறிவு நிலை மாயையாகும்
ஒப்பற்ற உயிரறிய ஞானமாகும்
உயிராயும் அறிவாயும், தெய்வமாயும்
ஓங்குமுயர் மறைபொருள் 'நான்' உண்மை தேர்வோம்

என்ற பாடலில் கூறியுள்ள செய்தி குறிப்பிடத்தக்கது.

தூய ஞானம் பெறுவதற்கு மனநிறைவு, எண்ணமே இன்பம் என்ற சிந்தனை, கவலைமறத்தல், அகத்தவத்தால் நலம் பேணல், இறையுணர்வு மேலோங்கல், உட்பொருளே அறிவு என உணர்தல், அறிவுவழி வாழ்தல் ஆகிய நிலைகளை உணர்தல் தேவை.

குண்டலினி யோகிகள் அதாவது மூலாதாரத்தை அடிப்படையாக வைத்து யோகப் பயிற்சியைச் செய்வோர் ஞான நெறி காண வேண்டுமானால் பத்து விதமான நெறிகளைக் கைக்கொள்ள வேண்டும் என வரிசைப்படுத்துகிறார் மகரிஷி. அப்பாடல் வருமாறு:

உத்தமமாம் உயர்ஞானக் குண்டலினி தவம் ஏற்ற
உணர்வாளர்கட்கு
பத்துவித ஒழுக்கநெறி பணித்தபடி சொல்லுகிறேன்
எண்ணெய் ஸ்நானம்,
வித்துகெடும், விபசாரம், மதுபானம், புகைபிடித்தல்,
உயிர்கள் இம்சை,
சித்து விளையாடலொடு சினம் கொண்டு சபிப்பதுவும்,
சிறந்த நிட்டை
மத்தவர்கள் தாமறியும் மனதுடனே செய்தல், குரு
உபதேசத்தைச்
சத்துகெட வெளியிடுதல் சபலமுடன் மதம்மாறல்
கட்சி சார்தல்
வெத்துடம்பாய்த் தானிருந்து வெளிதிரிதல், இவை
நீக்கி வீரமுடன்
பத்துவருடம் தொடர்ந்து பழகக் குண்டலினி யோகம்
பரம் உணர்வோம்

வெறும் ஏட்டறிவால் ஞானம் பெற முடியாது என்பதைப் பாடல் 1369 மூலம் திட்டவட்டமாகக் கூறுகிறார். வாழ்வின் வளத்திற்கு ஞானமே அவசியமாகிறது என்பதை,

ஈரறிவுமுதல் ஆறு அறிவுடைய உயிர்கள் வரை
இதுவரையில் செய்ததென்ன இனி செய்யப் போவதென்ன?
நேரறிய உணவு உறைவிடம் மற்றும் பாலுறவில்
நிறைவுபெற எடுத்த பல முயற்சிகளும் தடைப்படுங்கால்
பேரறிவால் காரணங்கள் யூகித்து உணர்ந்தவழி
பின் இவற்றை மற்றவர்க்குப் போதனைகள் செய்தவைதான்
யாரறிவும் இன்ப துன்ப உணர்விற்கப்பாலாக
இல்லையதனால் வாழ்வின் நலத்திற்கே ஞானமென்றேன்

என்ற பாடல்மூலம் நிறுவுகிறார்.

ஞானம் என்பது ஏதோ பேரின்ப வீடு, உம்பர் உலகம், இந்திர லோகம் என்றெல்லாம் வர்ணிக்கப்படும் ஒன்றன்று என்பது மகரிஷியின் கருத்து. ஞானமுடையவன் பிறர் இன்பமோடு வாழவேண்டும் என்ற அக்கறை கொண்டவனாக இருப்பான். ஞானநெறியில் செல்பவன் கூட்டு வாழ்க்கைக்கு முக்கியத்துவம் தர வேண்டும். இதனை,

உணவு உடை வீடு இவை மூன்றைக் கொண்டே
உலகினிலே மனிதரெல்லாம் வாழ வேண்டும்
உணவு உடை வீடிவற்றை உண்டு பண்ணும்
உழைப்பாளிகள் மிடியால் வருந்தல் ஆகா
உணவு உடை வீடு இவை மக்கட்கெல்லாம்
ஒழுங்காக கிடைக்க வழி காண வேண்டும்
உணவு உடை வீடிவற்றை உண்டு பண்ணும்
உழைப்பாளி அன்பர்களே ஒன்று சேர்வீர்!

என்ற பாடல்வழி நமக்குப் புலப்படுத்துகிறார்.

மகரிஷியின் ஆன்மீகப் பார்வை ஏனைய பக்தி நெறியில் காணப்படும் ஆன்றோர்களிலிருந்து சற்று வேறுபட்டதாகவே காணப்படுகிறது. தத்துவம் என்றாலும் தர்க்கம் என்றாலும் கருத்தளவில் மட்டும் நின்றுவிடக் கூடாது. அந்தச் சிந்தனை சமுதாயத்திற்கு ஏதேனும் ஒரு வகையில் பயன்பட வேண்டும் என்பது வேதாத்திரியின் அடிப்படைக் கோட்பாடாகும். அவ்வகையில் ஞான நெறியையும் பொருளாதாரம், அரசியல், சமுதாயம் என்ற பார்வையிலே பார்ப்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

மூலதனமும் உழைப்பும்; பருவத்திற்கேற்ற கடமை; பொதுவுடைமையால் உலகம் தழைக்கும்; உலகத்திற்கேற்ற பொதுவான பொருளாதாரம்; பொருளாதார சமத்துவம்; மூலதனம்; மூலதனத்திற்கான போராட்டம்; மூலதன வேட்கை தணிய வேண்டப்படும் சிந்தனைகள்; மூலதனச் சுரண்டலை ஒழிக்க வேண்டப்படும் சிந்தனைகள்; உழைப்பாளர் நலம் காக்கும் பொருளாதாரம்; பொருளாதாரத்திற்கான விழிப்புணர்வு; தேவையும் உழைப்பும் போன்ற பல்வேறு நிலைகளில் பொருளாதாரம் பற்றிப் பேசி அதில் ஓர் ஞான நெறியை வகுத்துக் காட்டுகிறார்.

வாணிபத்தால் ஏற்பட்ட விளைவுகள் (பாடல் 58), பொருள் துறையில் திருப்பம் (59), பொதுத்துறை வாணிபம் (60), தனிமனித வாணிபமே தீங்கு (61), கூட்டுறவுப் பொருளாதாரம் (63), கூட்டுறவில் காணும் ஊழல்கள் (65) போன்ற நிலைகளிலே அவர் சிந்திப்பது பொருளாதாரத்தில் அவர் காணும் ஞானமார்க்க மாகவே தோன்றுகிறது. அதுபோலத் தொழில் பற்றியும் விரிவாகச் சிந்திக்கிறார். தொழிலும் பணியும் (99), நெசவுத் தொழில் (104), நெய்தல் தொழிலின் இயல்பு (107), முதல் தொழிலும் உழவும் சான்றுகளாய் அமைகின்றன. இதே போன்று அரசியல் பற்றிச் சிந்திக்கும் போது சிறந்த ஆட்சி (110), ஆட்சியின் நேர்மை (111), வாணிபமும் அரசியலும் (114), முதலாளித்துவ ஆட்சி (118), கொடுங்கோலாட்சி (120), உலகத்தின் எதிர்காலம் (125), வறுமை தீர்ந்ததா ஆகியன சான்றுகளாகின்றன. சமுதாயம் பற்றி உரிமைத் தத்துவம், மதம், ஜாதி முதலிய பேதங்கள், மனிதனின் முன்னேற்றம், வாழ்க்கைக்கு மூலதனம், ரசாயன அமைப்பும் மாற்றமும் என்ற நிலைகளில் இவர் ஞான மார்க்கத்தைப் பார்ப்பது புதிய சிந்தனையாகும்.

நிறைவுரை

தன்னையறிந்து இன்பமுடன் வெண்ணிலாவே
ஒரு தந்திரமே சொல்ல வேண்டும் வெண்ணிலாவே

என்று வள்ளல் பெருமான் ஞானத்தின் சிறப்பை உணர்ந்து அதுதரும் பேற்றைக் கருதி மனதைப் பக்குவப்படுத்துவதற்கு கட்டுக் கயிறாக விளங்கவல்லது ஞானம் என்பார். அவர் வழி நின்ற மகரிஷி அவர்கள், ஞானம் என்பது ஒரு துறைசார்ந்த அறிவாகக் கருதுவது அத்தனை பொருத்தமில்லை என

உணர்ந்தார். ஞானம் உலகியல் வாழ்வோடு போட்டியிடும் மனிதனுக்கு அவன் எண்ணும்போதெல்லாம் கேடயமாக இருந்து காக்கவல்ல ஓர் அறிவாக இருந்து விளங்க வேண்டுமென விரும்புகிறார்.

அரசியல், பொருளாதாரம், சமூகம், கல்வி முதலான எத்தனையோ துறைகளில் மனிதன் வெற்றி கொள்வதற்குப் புலமையால் கிடைத்த பட்டறிவு மட்டும் போதாது. அதனையும் விஞ்சிய தேடுதலாக அமைந்த ஞான அறிவு தேவை என்பது அவரது புதுமைச் சிந்தனை. அகநோக்கில் காணும்போது, பக்தி நெறி வழியாகப் பண்பட்டுக் கிடைத்த பட்டறிவுதான் பேரின்ப நிலையான சத், சித், ஆனந்தம் எனப்படும், அகண்ட பேரெல்லையைத் தொட்டு மகிழ உதவும் என்பது தத்துவத்தார் கருத்து.

மகரிஷி அவர்கள் காந்தமென்னும் ஈர்ப்பு விசையை அறிந்து கொண்டார். சக்தியின் மூன்று விதமான வெளிப்பாடுகளை நம்மால் உணர இயலும். தன்னையறிதல் வாயிலாக உருபொருள் உணர்ந்து தன்னையறிதலுக்கும், உருபொருளுக்கும் உள்ள தொடர்பின் வேறுபாடுகளை மனம் அறியும் காலத்து அங்கே ஞானம் தானே முகிழ்க்கும் என்பது மகரிஷியின் கொள்கை. மனமானது சிவத்தைத் தெளிவாக அறிந்துகொண்டால் அதாவது இயங்கிக் கொண்டிருக்கும் மூலக்கூறைப் புரிந்துகொண்டால் அதன் வழி மேன்மேலும் பேரின்பத்தை நோக்கிச் செல்ல ஏதுவாகும். இயற்கையோடு மனம் இயைந்து அதனை அறிந்து மனித செயலாக்கத்திற்கு அதன் ஆற்றலைப் பயன்படுத்தும் படியாகத் தானே கனிந்து அமைவது ஞானமாகும்.

அறிவின் தெளிவு, அறிவின் முதிர்ச்சி, அறிவின் இயக்கம், இவற்றைப் பாங்குற அறிந்து கொள்ளும் பயிற்சியினைப் பெற்ற மானிடனே ஞானியாவான் என மகரிஷி கூறுகிறார். ஞானம் என்பது மகரிஷியின் கருத்துப்படி புறநிலையில், சமூகத்திற்குப் பயன்படும்படியான செய்கைகளைச் செய்ய வல்லதும், அக நோக்கில் இறைவனையும், மானுடனின் மனத்தையும் இணைக்கும் இணைப்புப் பாலமாக செயல்படுவதுமாகும். அத்தகைய ஞானத்தை மகரிஷியின் நூல்கள் இன்றும் போற்றுகின்றன. ஞானத்தைத் தேடிப் பயணிக்கும் மனத்திற்கு மகரிஷியின் பனுவல்கள், இவ்வுலகத்தின் கற்பகத் தரு என்றால் மிகையாகாது.

முதன்மை நூல்கள்

1. ஞானக்களஞ்சியம் - 1, யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி, ஈரோடு, முதற்பதிப்பு - 1991.

2. செயல் - விளைவுத்தத்துவம், யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி, ஈரோடு, முதற்பதிப்பு - 1997.

துணை நூல்கள்

1. **ஞானக்களஞ்சியம் – II**, யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி, ஈரோடு, முதற்பதிப்பு - 1991.

2. **இறையுணர்வும் அறநெறியும்**, யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி, ஈரோடு, முதற்பதிப்பு - 1991.

3. **எனது வாழ்க்கை விளக்கம்**, யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி, ஈரோடு, முதற்பதிப்பு - 1991.

4. **மதமும் மனிதனும்**, யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி, ஈரோடு, முதற்பதிப்பு - 2002.

திருக்குறளும்
வேதாத்திரி மகரிஷியின் கவிதைகளும் ஒப்பாய்வு

முனைவர் கஸ்தூரி ராஜா

உலகில் ஒவ்வொரு காலக் கட்டத்திலும் உத்தமர்கள் தோன்றி அருளுரைகளை வழங்கி வருகிறார்கள். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறளை எழுதிய திருவள்ளுவர் முக்காலத்திற்கும் பொருந்தும் கருத்துகளை, எம்மதத்தவரும் ஏற்கும் வகையில் எழுதியுள்ளமை அனைவரும் அறிந்த ஒன்றாகும். தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் அவ்வப்போது எழுதியுள்ள கவிகளும் எல்லோருக்கும் வழிகாட்டு வனவாக அமைந்துள்ளன.

இன்றைய அறிவியல் உலகத்தில் மனிதன் கண்டதே காட்சி, கொண்டதே கோலமென வாழ்ந்து கொண்டிருக்கிறான். இளைஞர்களில் சிலர் சீரழிவை நோக்கிச் சென்று அழிகின்றனர். இக்காலக்கட்டத்தில் தத்துவ ஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களின் கருத்துகள் உலகளாவிச் சென்று மக்களின் மனத்தினைச் சீராக்கி வருகிறது. திருக்குறள் தோன்றிய காலத்தை ஒட்டி, முதலில் திருக்குறளையும், பின்பு வேதாத்திரி மகரிஷியின் கவிதைகளையும் ஒப்பிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமெனலாம்.

வள்ளுவம் இன்று பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதால் உலகளாவிச் சென்று அனைவரும் படித்துப் பயன் பெறுகின்றனர். வேதாத்திரி மகரிஷியின் கருத்துகளும் அவ்வாறே சென்று பயனளித்து வருகிறது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

அண்ணா ஆதர்ச மகளிர் கல்லூரி, சென்னை

திருக்குறள்மீது மதிப்பு கொண்ட மகான்கள் பலர். அவர்களில் வேதாத்திரி மகரிஷியும் ஒருவர் என்பதைக் கீழ்வரும் அவர்தம் பாடல் உணர்த்தும்.

உத்தமியாள் அறிவுடையாள் பதியாய்த் தன்னை
உவந்தேற்பாள் ஒருவளைத் தேர்ந்திட 'வள்ளுவர்'
பித்தனைப்போல் மணல் முடிச்சுடன் திரிந்தார்
பேரறிவால் 'வாசுகி' யூகித்தறிந்தாள்
வித்தையெனப்பலர் முன்னே மணல் கைக்கொண்டாள்
வீசியெறிந்தாள் மறைவில் அரிசிச்சாதம்
சித்தம்மகிழ்ந்தே படைத்துச் சூழ்ந்தோர்க் கெல்லாம்
சிந்தை நிலையறிவித்தாள் எனநான் சொன்னேன்
(எனது வாழ்க்கை விளக்கம், ப. 88)

என்ற பாடலை 'அறிவின் திறனால் உணர்த்திய காதல்' என்ற தலைப்பில் மகிரிஷி அவர்கள் எழுதியுள்ளார். திருக்குறள்மீது வேணவா கொண்ட மகரிஷி அவர்களின் கவிதைகளும் வள்ளுவர் வழி அமைந்துள்ளன.

தனி மனிதன், குடும்பம், சமுதாயம், நாடு, உலகம் என்ற தலைப்பில் இவ்விரு மகான்களின் கவிதைகளை இனி பார்ப்போம்.

எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி
நல்லை வாழிய நிலனே

என்ற புறநானூற்று அடிகளின் வழி, நாடு நல்லவர் வழி அமையும் என்பதனை உணரமுடிகிறது.

இவ்வுலகில் பிறந்த ஒவ்வொரு உயிரும் உன்னதமானது. இந்தப் பிறவியில் ஆண் பெண் என்ற பிரிவு என்பது உடலுறுப்புகளால் மட்டுமேயன்றி எந்தவித உயர்வு தாழ்வுக்கும் இனங்காண்பதற்காக அல்ல என்பதனை முதலில் தெளிதல் வேண்டும். இதனை நன்குணர்ந்த இயற்கை/இறை ஆண், பெண் தோற்றத்தை உருவாக்கியது.

திருவள்ளுவரும், இருவரும் ஒருவருக்கொருவர் துணையென்ற கருத்தை உடையவர் என்பதனைக் கீழ்வரும் குறட்பாக்கள் உணர்த்துவதை அறியலாம்.

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை (41)

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (51)

ஆண், பெண் உற்ற வயது அடையும்போது அவர்களுக்குத் துணை வேண்டுமென்று வள்ளுவர்வழி, மகரிஷி அவர்கள் மொழிகிறார். இதனை,

மனிதனுக்கு உணவு உடை வீடு வேண்டும்
மற்றவர்கள் கருத்தறிய மொழியும் வேண்டும்
இனியும் ஒருவர் உற்ற வயதடைந்தால்
ஏற்றபடி வாழ்க்கைக்கோர் 'துணை'யும் வேண்டும்
(சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத்தீர்வுகள், ப. 47)

என்ற அடிகளின் மூலம் ஆண் உயர்வு என்றோ, பெண் உயர்வு என்றோ வலியுறுத்தாமல் 'துணை' வேண்டும் என்றுகூறி இருபாலரையும் சமமாக்கிப் பார்ப்பதை அறியலாம்.

பெண்

பத்து மாதங்கள் கருவினைச் சுமந்த பெண்ணை மகரிஷி அவர்கள் போற்றுகிறார். இதனை,

எல்லையற்ற ஆற்றலுள்ள இறைவன் திருஉள்ள மென்ன
எவ்வுயிரும் தோன்றுவதற்கு ஏற்றதொரு திருவழியாய்
வல்லமையாய்ப் பெண்ணினத்தை வடிவமைத்தான் அற்புதமே
வாழ்ந்துவரும் மக்களில் இவ்வளம் அறிந்தோர்
எத்தனைபேர்?
(சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள், ப. 94)

என்ற பாடலின் மூலம் பெண்ணினத்தின் பெருமையை உணர்ந்து போற்றி வாழ்தல் வேண்டும் என்று திரு.வி.க. அவர்களின் வழி கூறுவதை உணரலாம். மனைவி நல வேட்பு நாளை ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் 30ஆம் தேதி கொண்டாடி ஆண் தன் மனைவிக்கு நன்றி கூற வேண்டும் என்றும் விழைகிறார். இதனை,

பெற்றோரைப் பிறந்தகத்தை பிறந்த ஊரைவிட்டு
பிரிந்துவந்து பெருநோக்கில் கடமையறம் ஆற்ற

பற்றற்ற துறவியெனக் குடும்பத் தொண்டேற்ற
பண்பாட்டின் அடிப்படையில் எனைப்பதியாய்க்
கொண்டேன்
நற்றவத்தால் என்வாழ்க்கைத் துணையாகிப் பெண்மை
நலநோக்கில் அன்போடு கருணை இவைகொண்டு
மற்றவர்க்கும் அறம் ஆற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான் மதிக்கும் இந்நாள் வாழ்த்தி
மகிழ்கின்றேன்

(சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத்தீர்வுகள், ப. 100)

என்கிறார். மேலும், பெண்மைக்குத் தொண்டு செய்ய உலகோரை அழைக்கின்றார். இதனை

பெண் வயிற்றி லுருவாகிப் பின்னு மந்த
பெண் கொடுத்த பால் உண்டே வளர்ந்து; மேலும்
பெண் துணையால் வாழுகின்ற பெருமை கண்டு
பெண்மைக்கே பெருமதிப்பு தந்து உள்ளோம்
பெண்ணினத்தை எங்கெவரும் எவ்விதத்தும்
பெருமைகுன்ற அவமதித்தால் சகிக்க மாட்டோம்
பெண்மைக்கு நமது கடன் ஆற்றவாரீர்
பெருந்திரளாய் கூடி ஒரு முடிவு செய்வோம்

(எனது வாழ்க்கை விளக்கம், ப. 30)

என்ற பாடலின் மூலம் பெண் வயிற்றில் பிறந்து, அவள் தந்த பாலால் வளர்ந்து, அவள் துணையால் வாழ்கின்ற நிலையையும் எடுத்துக்காட்டியுள்ளமையை உணரலாம்.

தனிமனிதனுக்கு வேண்டிய பண்புகளாக வள்ளுவர் ஒழுக்கத்தை வலியுறுத்துகிறார். இதனை,

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் (131)

என்ற குறட்பாவால் அறியலாம். மகரிஷி அவர்கள் ஒழுக்கத்தை அறமாகவே கருதுகிறார். இதனை,

இயற்கை துன்பங்கள் எனும் வெப்ப தட்ப
ஏற்றங்கள் பசி உடலின் கழிவு உந்தல்
முயற்சியால் காலா காலத்தில் தீர்க்க
முடையற்ற வாய்ப்புதான் சுதந்திரம் ஆம்

செயற்கையில் ஒருவர் பிறர் சுதந்திரத்தை
சீர்குலையச் செய்யாத முறையில் வாழும்
பயிற்சியும் நல்நடத்தையும் ஒன்றிணைந்த
பண்பாடே ஒழுக்கம், அறம் நீதியாகும்
(எனது வாழ்க்கை விளக்கம், ப. 38)

என்ற பாடலால் அறியலாம். மேலும், மனிதன் அன்புடையவனாகவும், அருளுடையவனாகவும் விளங்க வேண்டும் என்கிறார் (அதி. 8, 25). இவை போன்ற பல உடைமைகளை உடைமைகளாக்கிக் கொள்ள வேண்டுமென்கின்றனர் திருவள்ளுவரும் மகரிஷியும். அன்புடையார் செயல்களைக் கீழ்வரும் குறட்பாக்கள் மூலம் அறியலாம்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (72)

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ்? ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும் (71)

இதனையே, மகரிஷி அவர்கள் 'உலக சமுதாய வாழ்க்கை நெறி' என்ற நூலில் கீழ்வருமாறு வற்புறுத்துகிறார்.

புதியதொரு பண்பாடு உலகுக்கு வேண்டும்
.....
.....
பிறர் துன்பம் போக்கும் அன்பு வேண்டும் (ப. 43)

என்கிறார்.

பகுத்துண்டு வாழ்தல்

காக்கை போன்ற உயிரினங்கள் தனக்குக் கிடைத்ததைப் பகுத்துண்டு வாழும்போது பகுத்தறிவு பெற்ற மனிதன் தனக்குக் கிடைத்ததை இல்லாத வறியவர்க்கும் ஈந்து வாழ்வதே இயல்பான ஒன்றாகும். இதனை,

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை (322)

என்ற குறட்பாவால் அறியலாம். இதே கருத்தினைச் 'சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள்' என்ற நூலில் மகரிஷி அவர்கள்,

உடலெடுத்து உயிர்வாழும் ஒவ்வொரு மனிதருக்கும் (ப. 66)

என்று தொடங்கும் கவிதையில் பிறருக்கு உதவி வாழ வேண்டுமென்பதைத் தெளிவாக விளக்கியுள்ளார்.

கல்வி

மாக்களிடமிருந்து பிரித்து நம்மை இனங்காட்டுவது 'கல்வி' என்ற புணையாகும். இந்தக் கல்வியே நம்மை அறவழிப் படுத்துவது. கல்வியின் சிறப்பினைப் பற்றியும் (அதி. 40), கல்லாதார் படும் துன்பங்களையும் (அதி. 41) வள்ளுவர் விளக்கியுள்ளார். இதனை,

யாதானும் நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு (397)

என்று கூறி, கல்வியில் சிறந்தவருக்கு எந்த நாடும் அவருக்குச் சொந்த நாடாகும் என்று விளக்குவதை உணரமுடிகிறது. மேலும், கல்லாதவனை மாக்கள் என்றும் (410) மண்ணால் செய்யப்பட்ட பொம்மை என்றும் (407) வசை பாடுகிறார். அவர்கள் உவர் நிலத்திற்குச் சமம் என்பதனை,

உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர் (406)

என்றும் பழிக்கிறார்.

மகரிஷி அவர்கள் அறிவை வளர்க்கும் கல்வியோடு, மனத்தினைச் செம்மைப்படுத்தும் ஆன்மீகக்கல்வியும் தேவை யென்பதைக் கீழ்வருமாறு நவில்கிறார்.

கல்வி செல்வம் பொருளுடைமை மக்கள் பலம் நட்பு
'கண்ணியமாம் ஆளுமைப்பே ரனைத்துமிருந்தாலும்
கல்வியிலே உயர்ந்த அருட்கல்வியில்லை யானால்
கற்றபெற்ற அத்தனையும் சுயநலமாம் அன்புக்
கல்வியெனும் சமநோக்கு நேர்நிலை உணர்வு
கருத்தினிலே உருவாகா பிறர் பொருள் சுரண்ட
கல்வியெல்லாம் பயனாகும். கனிவு அன்பு நீதி
கடமையினை மறைத்து நிற்கும் தன்முனைப்பே ஓங்கும்
(சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள், ப. 109)

மெய்யுணர்தல்

இவ்வுலகில் பிறந்ததன் பயனை அடைய வேண்டுமானால் மெய்யுணர்தல் வேண்டும். மனித உடலும் மனமும் சார்ந்த செயல்களை உணர்ந்துவிட்டால் மனிதனது மதிப்புயரும். அதாவது அவனுடலில் உள்ள உயிர் உய்வு பெற்றுவிடும். இதனை,

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு (358)

என்ற குறட்பாவழி செம்பொருள் காண மெய்யுணர்தல் வேண்டுமென்பதை உணரலாம். இதனையே, வேதாத்திரி மகரிஷி அவர்கள் 'சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள்' என்ற நூலில்

எந்த ஒன்றறிந்திடில் இறைவன் முதல் உயிர் வரை
எல்லாவற்றையும் உணர்த்துமோ அதுவே காந்தமாம்
முந்தையோர்கள் அகத்தவத்தால் முற்றுணர்ந்த போதிலும்
மொழிவதற்கு உவமையின்றி முட்டிமோதி நின்றனர்
இந்தநாள் விஞ்ஞானமோ ஏற்றம் பெற்றதாலதை
இயங்கிடும் மின்சாரம் மூலம் எல்லார்க்கும் உணர்த்தலாம்
அந்தமாம் மெய்ஞானத்தோடு அணுவின் ஞானம் இரண்டையும்
அறிந்து உய்ய பாலம்போன்ற ஆக்க ஞானம் காந்தமே
(ப. 11)

என்கிறார். மனிதன் இவ்வுலகையுணர்ந்து, உலகயின்பத்தைத் துய்த்து வாழ்ந்தபின் மேலான வீடுபேற்றினைப் பெற வேண்டும். இதனையுணர ''உன் அருளால் உன் தாள் வணங்கி'' என்பதற்கேற்ப இறையருளைப் பெற வேண்டும். இதனை,

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார் (10)

என்ற குறட்பாவால் அறியலாம். மகரிஷி அவர்கள் இறை நிலையைப் பற்றியும், அதன் இருப்பு, இயக்கம் மற்றும் ஆற்றலைப் பற்றியும் மிகத் தெளிவாகக் கீழ்வருமாறு நவில்கிறார்.

வற்றாயிருப்பு பேராற்றல் பேரறிவு
வளம் மூன்றும் ஒன்றிணைந்த பெருவெளியே தெய்வமாம்
வற்றாத இம்மூன்றும் விண்முதல் ஐம்பூதங்கள்
வான்கோள்கள் உயிரினம் ஓரறிவு முதல் ஆறாம்

வற்றாமல் பெருகிவரும் வளர்ச்சியே பரிணாமம்
வந்தவை அனைத்திலும் சீரியக்கமே இயல்பூக்கம்
வற்றாது பெருகும் பேரண்டத்தில் உயிர்வகையில்
வழுவாத செயல் விளைவு நீதியே கூர்தலறம்

உண்மை, உண்மை

(சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள், ப. 7)

எவ்வளவுதான் கற்றிருந்தாலும் மனிதன்,

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார் (140)

என்கிறார் வள்ளுவர். இதனையே, மகரிஷி அவர்களும் 'செயல் விளைவுத் தத்துவம்' என்ற நூலில் கீழ்வருமாறு மொழிகிறார்.

நில உலகில் மனிதரிடம் அமைந்துள்ள உண்மை
நேர்முகமாய்க் கருமையத் தூய்மை உணர்ந்தாற்றிப்
பலனடைய அகத்தவத்தால் பரமுணர்ந்து அறத்தின்
பாதையிலே ஒத்துதவி வாழும் முறை போதும்

அருள்

வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார் வள்ளலார். நம் வள்ளுவரும் தவம் (அதி. 27) என்பதனைத் தெளிவாகப் பின்வருமாறு கூறுகிறார்.

உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு (261)

தனிமனிதனுக்கு வேண்டிய பண்புகளாக வள்ளுவர், மகரிஷி கூறியுள்ள கருத்துகளில் ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போல சில கருத்துகள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளன.

தனிமனிதன் தள்ள வேண்டியவைகள் யாவை என்பதனை வள்ளுவர் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். இன்னா செய்யாதே (அதி. 32), கூடாநட்பு (அதி. 83), கொடுங்கோன்மை (அதி. 56), கொல்லாமை (அதி. 33), சிற்றினஞ்சேராமை (அதி. 46), தீ நட்பு (அதி. 82), பயனில சொல்லாமை (அதி. 20), வெகுளுதல் (அதி. 31) போன்ற பல்வேறு தவறுகளைச் சுட்டிக்காட்டி அதிலிருந்து மீண்டு வாழ்க என அறிவுறுத்துகிறார். எடுத்துக்காட்டாக,

காமம் வெகுளி மயக்கம்; இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய் (360)

என்ற குறட்பாவைச் சுட்டலாம். மகரிஷி அவர்களும் தம் பல்வேறு கவிதைகளின் மூலம் மனிதன் தள்ள வேண்டியவைகளைக் கீழ்வருமாறு கூறுகிறார்.

பிறர் செயலில் வாழ்க்கையினில் குறுக்கிட்டேதன்
பெருமையினைத் தன்முனைப்பை வளர்க்க வேண்டாம்
பிறர் ஏழ்மை எளிமையிலே வாழ்ந்தபோதும்
பேராற்றல் மன அலைக்கு உண்டு உண்டு
பிறர் உள்ளம் வருத்தச் செய்துலகில் வாழும்
பேதைமனம் பெற்றவர்க்கு அமைதி கிட்டா
பிறர் மகிழத் தான்மகிழ்ந்து சலிப்பில்லாத
பேரின்ப வாழ்வடையும் நோன்மை ஏற்போம்
(எனது வாழ்க்கை விளக்கம், ப. 38)

சுற்றம்

தலைவன், தலைவி இருவரும் தன்னைச் சார்ந்த சுற்றத்தினரைப் பேணிப் பாதுகாக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர், இதனை,

அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி (506)

என்ற குறட்பாவால் அறியலாம். வேதாத்திரி மகரிஷி அவர்கள் பெண்ணைப் பேண குடும்பம் சீர்படும் என்ற பொருளில் கீழ்வருமாறு கூறுகிறார்.

பெற்றோரைப் பிறந்தகத்தைப் பிறந்த ஊரைவிட்டுப்
பிரிந்து வந்து பெருநோக்கில் கடமையறம் ஆற்றப்
பற்றற்றத் துறவியெனக் குடும்பத் தொண்டேற்றுப்
பண்பாட்டின் அடிப்படையில் எனைப்பதியாய்க்
கொண்டென்
நற்றவத்தால் என வாழ்க்கைத் துணையாகிப் பெண்மை
நலநோக்கில் அன்போடு கருணையிவை கொண்டு
மற்றவர்க்கும் தொண்டாற்றும் மாண்புமிக்க எந்தன்
மனைவியை நான் மதிக்கின்றேன் வாழ்த்தி
மகிழ்கின்றேன்
(உலக சமுதாய வாழ்க்கை நெறி, ப. 51)

சமுதாயம்

பல குடும்பங்கள் சேர்ந்தது சமுதாயமாகும். சமுதாயம் சீராக இயங்க அரசாட்சி நன்றாக அமையும். நாடுகள் சிறப்புற அமையின் உலகம் மலர்ச்சியுறும். எனவே, சமுதாயத்தில் நட்புணர்வுடன் வாழவேண்டும். பிறர் பொருளைத் தன் பொருள்போல் பேண வேண்டும். அப்படி வாழ்பவர் பொருள், அறத்தையும் இன்பத்தையும் நல்கும். இதனையே,

அறனினும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் (754)

என்ற குறட்பாவின் மூலம் வள்ளுவர் விளக்குகிறார்.

நாடு/அரசியல்

மன்னன் என்பவன் மக்களைக் கண்களாகவும், உயிராகவும், உடலாகவும் எண்ணுதல் வேண்டும் என்பதைச் சான்றோர் நவின்றனர். இக்கால அரசியலுக்கும், ஆட்சியாளர்களுக்கும் இதுவே சாலவும் பொருந்தும் எனலாம். இறைமாட்சி (அதி. 39) என்ற அதிகாரத்தில் மக்களாட்சி நடப்பின் நாடு நலமுறும் எனும் பொருளில்,

படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு (381)

பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து (738)

என்கிறார். வேதாத்திரி மகரிஷி அவர்கள், 'உலக சமுதாய வாழ்க்கை நெறி', 'சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள்' ஆகிய நூல்களில் குடும்பம், சமுதாயம், நாடு, உலகு எவ்வாறு அமைய வேண்டு மெனத் தெள்ளிதின் விளக்குகிறார். இன்றைய உலகில் நிலவி வரும் எல்லாவிதமானக் குறைகளையும் போக்கும் ஆன்மீகக் கல்வியைச் செயலுக்குக் கொண்டுவர வேண்டுமென்பதைக் கீழ்வருமாறு விளக்குகிறார்.

பிள்ளைகளைப் பெற்றோர்கள் உடலை விட்டால்,
பெரும்பாலும் அவருயிர்கள் கருத்தொ டர்ஆம்
பிள்ளைகளோ டிணைந்துவிடும். இயற்கை நீதி,
பெற்றோர்கள் தவம் ஆற்றி, அறமும் செய்தால்,

பிள்ளைகளை வழிவழியாய் இப்பே ராக்கம்
பின்தொடர்ந்து குலக்கொடியைத் தூய்மை யாக்கும்
பிள்ளைகளும் பெற்றோரும் வினைத்தொ டர்ஆம்
பேரிணைப்பில் எப்போதும் ஒன்றே யாவார்
(சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள், ப. 92)

சமுதாயத்தில் வாழ்கின்ற வணிகர்கள் எவ்வாறு வாழவேண்டுமென்பதை வள்ளுவரும் மகரிஷி அவர்களும் கீழ்வருமாறு மொழிகிறார்கள்.

வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோற் செயின் (120)

அரசியலும், வாணிபமும், மக்கள் தம்மை
அடக்கிடவும் உறிஞ்சிடவும், ஏற்ற தாச்சு.
அரசியலே இவ்விரண்டில் முதன்மை என்று
அறிந்திட்டார் சிலர். அதனால் திட்ட மிட்டு,
அரசியலைத் தந்திரத்தால், ஒழுங்கீ னத்தால்
அடையமுயல் கின்றார்கள், போட்டி யிட்டு.
அரசியலே முரடர்களின் சொத்தாய் மாறும்
அவலநிலை யைமுதலில் மாற்ற வேண்டும்
(சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள், ப. 66)

மகரிஷி காண விழையும் சமுதாயம்

மகரிஷி அவர்கள் மக்களிடம் பரவ வேண்டியவைகளைத் தெளிவாக விளக்குகிறார். இதனை,

இறைவா நற்கர்மயோகம் உலகசமயம் என்ற
எண்ணத்தை என்னுளத்தே எழுப்பிவிட்டாய் அறிவேன்
உறைவாய் என்னுளந்தறிவாய் உனக்கு எனைதந்தேன்
ஒருசிறிய கருவியாக எனையுலகுக்காக்கு
முறையாகத் தலைவர்களை அறிஞர்களை இணைத்து
முழு அளவில் மனிதகுலம் உணர்ந்து ஏற்கச் செய்வாய்
மறைவாக மாந்தருள்ளே அறிவாக உளநீ
மண்ணுலகில் மக்களிடம் பரவவிடல் வேண்டும்
(சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள், ப. 119)

என்ற பாடலின் மூலம் அறியலாம்.

உலகம்

திருவள்ளுவர் உலகந்தழுவிய பார்வையுடையவர் (425) அதனால்தான் 'உலகத்தோ டொட்ட ஒழுகல்' (140) என்றும், உலகத்தார் (850) என்றும் கூறுகிறார். எடுத்துக்காட்டாக,

எவ்வ துறைவ துலகம், உலகத்தோ
டவ்வ துறைவ தறிவு (426)

என்ற குறட்பாவைச் சுட்டலாம். இக்குறள் மூலம் உயர்ந்தோர் எவ்வூரில் வாழ்ந்தாலும், அவர்தம் கருத்தை ஏற்று நடத்தலே அறிவு என்று மொழிவதை உணரமுடிகிறது. இதனையே,

இயந்திரவிஞ் ஞானவளம், உலக மக்கள்
எண்ணிக்கை, இவை மிகுந்த இக்கா லத்தில்
அந்தந்த நாட்டவர் தம் எல்லை காக்க,
அடுத்தநாட் டைத்தாக்கச் சேனை வைத்து
எந்தச்சம யத்திலுமே பயந்து கொண்டே
இருப்பதெனில் மனிதரது வாழ்வென் னாகும்?
இந்த நிலை யைமாற்றி அறத்தைக் காக்க
ஏற்படுத்த வேண்டும் ஓர் உலக ஆட்சி

உலகப்பே ரரசு இன்றிப் போர்நிற் காது
உடைமைசமு தாயத்தின் பொதுவா காமல்,
பல வகையில் தனிமனிதர் குழுக்க ளுடே
பரவிநிற்கும் அவ்வப்போ கிளைத்துத் தோன்றும்
கலகங்கள் ஓய்ந்திடா, உலக மக்கள்
கருத்துயர்ந்து அவ்வழியே செயல்தி ருந்தி
குலமுதலாய் பேதமற வென்றால் ஆட்சி
குழந்தைவளர்ப் பினை ஏற்றால் அன்றி ஆகா
(சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள், ப. 108)

என்ற பாடல்களின் மூலம் மகரிஷி அவர்கள் உணர்த்துவதை அறியலாம். இவ்வுலகில் உள்ள அனைத்தும் மனிதனுக்குக் கிட்டினாலும், அதனைத் துய்க்க அவனுக்கு வினைப்பயனும், இறையருளும் வேண்டும். நம்மினும் மீறிய ஒன்று உண்டு என்பதனை யாரும் மறுக்க இயலா.

திருவள்ளுவர் அனைத்து மதத்தினரும் போற்றும் வகையில் கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தை அமைத்துள்ளார்.

ஆதி பகவன், வாலறிவன், மலர்மிசை ஏகினான், வேண்டுதல் வேண்டாமை இலான், இருவினையும் சேரா இறைவன், பொறிவாயில் ஐந்தவித்தான், தனக்குவமை இல்லாதான், அறவாழி அந்தணன், எண்குணத்தான், இறைவன் என்றே சுட்டுவதை யெண்ணியெண்ணி மகிழ்வோம். மகரிஷி அவர்கள், புலன்களை வென்றால் அறிவை உணரலாம் என்ற நிலையில் கீழ்வருமாறு கூறுகிறார்.

அறிவைப் புலன்களில் அதிக நாள் பழக்கினேன்
அதன்பயன் உணர்ச்சிகள் அறிவை வென்றன
அறிவை யறிவால் ஆராயப் பழகினேன்
அந்த நிலையிலும் புலன்களை இயக்கினேன்
அறிவு அகண்டா காரத்தில் நிலைபெற
அதிக விழிப்பும் பழக்கமும் பெற்றது
அறிவு புலன்களை அறிந்தது வென்றது
அங்கு வாருங்கள் அமைதி விரும்புவோர்

(எனது வாழ்க்கை விளக்கம், ப. 93)

வீடுபேறு

இறைவனையடைய திருவள்ளுவர்,

பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு (350)

என்கிறார். மகரிஷி அவர்கள்,

எண்ணம் சீவகாந்தத்தில் எழுகின்ற அலை நிலை
எண்ணமதில் நிலைபொருள் இறைவன் உண்மைதேர்வோம்
எண்ணமொடு சொல் செயல் இம்மூன்று அலைகளை
இறுக்கியும் சுருக்கியும் இருப்பு வைக்கும் காந்தமே
எண்ணிப்பார் தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்த ஆற்றலே
எங்கும் நிறை காந்தத்திற்கு இருப்பு நிலை தெய்வமாம்
எண்ண விண் சுழலலையின் இயக்க நிலை காந்தமிது
இருப்பியக்கம் இரண்டுமாய் எங்கும் நிறைந்துள்ளதே

காந்தச் சுழல் ஈர்ப்பு மையம் உயிர் வித்து மூன்றும்
கலந்து செயல் புரியும் கருமைய உண்மை தேர்வோம்
காந்தத்தில் இறைநிலையும் உயிர் அறிவு மனமும்
கருத்தாலே உணர்வதற்கு அகத்தவமே வழியாம்
காந்தமது ஐவகைத் தன்மாத்திரையாய் மனமாய்
கர்மங்கள் பதிவு செய்து பலன் விளைக்கும் நெறியாய்

காந்தமதே கருமையம் பிறப்பிறப்பு வாழ்வாய்க்
கண்டு கொண்டால் பேரியக்க மண்டலமே உன்னுள்
(செயல்விளைவுத் தத்துவம், ப. 20)

என்கிறார். மனத்தினைத் தூய்மையுடன் வைத்துக் கொள்ளுதலே அனைத்தறன்களிலும் மேன்மையானது என்பதனை இருபெருஞ் சான்றோர்களும் மொழிகின்றனர். இதனை,

மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற (34)

மனித மனதைப் பற்றி மனிதர் அறியாமல்
மயங்குகிறார், மயக்குகிறார், உண்மை எங்கு காணும்
மனம் என்றால் சீவகாந்த அலையன்றி வேறோ
மனம் நிலைத்தால் அறிவு அதே இறைவெளிமெய்ப்
பொருளாம்

மனம் ஆற்றும் வினைகளெல்லாம் மறுமுனையில் தெய்வம்
மாறாமல் சுருக்கிக் கருமையத்தில் வைக்கும்
மனம் அறிவு உயிர் தெய்வம் காந்தம் இவை உணர
மாய நிழல்விண் ணறிவு மனிதருக்குத் தேவை
(செயல்விளைவுத் தத்துவம், ப. 19-20)

என்ற பாடல்களால் அறியலாம்.

தனிமனிதன், குடும்பம், சமுதாயம், நாடு, உலகு ஆகியவற்றைப் பற்றி வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த, வாழ்கின்ற இருபெரும் சான்றோர்கள் கருத்துகளும் ஒப்புமையுடையனவாக உள்ளன. வேதாத்திரி மகரிஷி அவர்கள் இந்த 21ஆம் நூற்றாண்டில் உள்ள சிக்கல்களை களையும் விதத்தில் ஒருலக அரசைப் பெற விழைகிறார். இதனை,

பொருள் தேவை முழுமை பெற, பாதுகாப் புடன்வாழ,
அருள் நெறியில் ஒழுக்கமுடன் அனைத்துல கும்மனிதன்
இருள் ஒழிந்து, இயற்கையதன் இனிமைநன் றாய்த்துய்க்க,
பொருள் நிறைந்த ஒருலக அரசைப்பெற் றுய்வோம்

நேர் வழியில் விஞ்ஞானம் ஆக்கத் துறைகட்கே
நீடித்துப் பயனாக உலக விரியாக
நிலஉலகில் பல அரசும் கூடிஒப்புக் கொள்ள
நிலையான உயர்கருத்தைப் பரப்பிடுவோம் வாரீர்
(சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள், ப. 108:136)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (50)

என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க, இருபெரும் வித்தகர்கள் மொழிந்த கருத்துகளின்படி வாழ்வை நடத்த, இந்தியா உலக அரங்கில் முதன்மை பெறும் என்பது வெள்ளிடைமலை.

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களின் நூல்கள்

1. மனவளக்கலை, பாகம் ஒன்று
2. மனவளக்கலை, பாகம் இரண்டு
3. மனவளக்கலை, பாகம் மூன்று
4. எளியமுறை உடற்பயிற்சி
5. எனது வாழ்க்கை விளக்கம்
6. ஞானமும் வாழ்வும்
7. பாடு பாப்பா
8. மகரிஷி மணிமொழிகள்
9. உலக சமுதாய சேவா சங்கம்
10. காந்தத் தத்துவம்
11. உலக சமாதானம்
12. அருட்பேராற்றலின் அன்புக் குரல்
13. வான் காந்தத் தத்துவம்
14. திருக்குறள் உட்பொருள் விளக்கம்
15. இறையுணர்வும் அறநெறியும்
16. ஜீவகாந்தம்
17. அருள்தந்தையின் பதில்கள், பாகம் - I
18. அருள்தந்தையின் பதில்கள், பாகம் - II
19. பிரம்மஞானம்
20. இன்பமாக வாழ
21. குடும்ப அமைதி
22. வாழ்க்கை வள உயர்வுப்படிகள் ஐந்து
23. செயல்விளைவுத் தத்துவம்
24. மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து
25. சமூக சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள்

26. மனம்
27. ஞானக் களஞ்சியம், I, II
28. வாழ்க்கை மலர்கள் (நாள் ஒரு நற்சிந்தனை)
29. வேதாத்திரியம்
30. பிரம்மஞான சாரம்
31. ஆன்மீக விளக்கு
32. அணுவிஷம்

Books by
THATHUVAGNANI VETHATHIRI MAHARISHI
in English

1. The World Order of Holistic Unity
2. Bliss beyond Words & Other Poems
3. Simplified Physical Exercises
4. Karma Yoga
5. Bio Magnetism
6. Yoga for Modern Age
7. Life Before Birth & After Death
8. Philosophy of Universal Magnetism
9. Unified Force
10. Highlights of Vethathiri Model of Unified Force
11. Journey of Consciousness
12. Prosperity of India
13. Logical Solutions for the Problems of Humanity
14. Mind
15. Genetic Centre - The Secrets of the Soul
16. Five Steps for Realization of Truth
17. Automic Poison

மகரிஷி வாழ்க்கை காட்டும் வாழ்வியல் நெறிகள்

முனைவர் தி. மகாலட்சுமி

தற்காலத்து மனிதர்களின் துன்பியல் நிறைந்த வாழ்வை இன்பமாக மாற்றிக் கொள்வதற்குப் பலரும் பலவழிகளில் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர். அவ்வகையான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களுள் ஒருவரான வேதாத்திரி மகரிஷி மனத்தின் வலிமையால் துன்பத்தை வெல்லலாம் என்கிறார். அதற்கான பல நடைமுறைப் பயிற்சிகளையும் கூறுகிறார். இம்மகானின் வாழ்க்கை வரலாறும், அதன்வழி அவர் பெற்ற தத்துவ விளக்கமும், அதனால் மக்கள் பெற்ற பயனும் பற்றியதாக இக்கட்டுரை அமைகின்றது.

இளமைக்காலம்

சென்னைக்கு அருகாமையிலுள்ள கூடுவாஞ்சேரி கிராமத்தில் 1911 ஆம் ஆண்டு எளிய நெசவாளிக் குடும்பத்தில் பிறந்தார். தந்தை வரதப்ப முதலியார். தாய் சின்னம்மாள். ஆறு சகோதரிகள். ஏழாவது ஆண் பிள்ளை ஏழு வயதில் இறந்தது; வேதாத்திரி எட்டாவது குழந்தை; தம்பி தெய்வசிகாமணி. 1916இல் கிறித்துவ மிசினைச் சேர்ந்த பள்ளியில் படித்தார். தந்தைக்கு நெசவுத் தொழிலில் உதவ வேண்டி இருந்ததால் எட்டு வயதில் மூன்றாம் வகுப்போடு படிப்பு நின்றது.

ஏழு வயது முதலே காலை மாலையில் பாவு போடவும், நூல் இழைக்கவும் செய்தார்; படிப்பை விட்டபின் நெசவு நெய்யவும் கற்றார். வறுமை ஒழிய வேறு வேலை தேட எண்ணினார். 18 வயது வரை இரவுப்பள்ளியில் ஆங்கிலம், தமிழ், கணக்கு ஆகியவற்றைக் கற்றார்.

ஆராய்ச்சி உதவியாளர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை – 600 113.

பணி

சென்னை, மயிலாப்பூரிலுள்ள மூத்த அக்காவின் கணவர் சண்முக முதலியாரின் முயற்சியால் ராயல் ரேசிங் கிளப்பில் மாதம் ஐம்பது ரூபாய் சம்பளத்தில் வேலைக்குச் சேர்ந்தார். குதிரைப் பந்தயச் சூதாட்டத் தடைச் சட்டம் காரணமாகக் குறுகிய காலத்தில் இந்த வேலை இல்லாமல் போனது. மவுண்ட் ரோடிலுள்ள போஸ்டல் ஆடிட் அலுவலகத்தில் அதுபோது காலியாக இருந்த கடைநிலை ஊழியர் வேலையில் மாதம் ரூ. 15க்குச் சேர்ந்தார். பின் ரூ. 23க்கு நல்ல பணிக்கு மாற்றப்பட்டார். திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்றில் பகுதிநேர ஆசிரியராக வேலை செய்து ரூ. 7 பெற்றார்.

வியாபாரம்

கூடுதல் வருவாய் பெற ஒரு தறி அமர்த்திக் கொண்டு காலை மாலை தறி நெய்து ரூ. 10 ஈட்டினார். வைத்ய பூபதி எஸ். கிருஷ்ணராவிடம் கற்றுக்கொண்ட ஆயுர்வேதப் பாடங் களாலும், தன் மாமா ஆயுர்வேத மருத்துவர் என்பதாலும் பலவகையான சூரணம், பற்பம், எண்ணெய், இலேகியம் போன்றவற்றைச் செய்யக் கற்றுக் கொண்டார். பல்பொடியும் தாம்பூல மாத்திரையும் தயாரித்துத் தான் வேலை செய்யும் அலுவலகத்தில் விற்று வந்ததன் பயனாய் மாதம் ரூ. 50 வருவாய் அதிகரித்தது; இதனால் ஆசிரியர் வேலையை விட்டார்.

புக் பைண்டிங் கற்றுக் கொண்டு தான் வேலை செய்யும் போஸ்டல் ஆடிட் அலுவலகத்திற்குத் தேவையான அட்டைக் கோப்புகளைச் (Card Files) செய்து கொடுக்கும் ஒப்பந்தத்தைப் பெற்றார். ஆண்டுக்கு 600 வரை வருமானம் கிடைத்ததால் இரண்டு ஆண்டுகளில் கூடுவாஞ்சேரியில் வீடு வாங்கிப் பொருளாதார முன்னேற்றத்தில் முதல் வெற்றி பெற்றார். கோப்பு செய்வதால் உயர்ந்த வருவாயில் சென்னை, அங்கப்ப நாயக்கன் தெருவிலுள்ள மௌலானா லுங்கிக் கம்பெனியில் நெசவுக்கு ஒப்பந்தம் செய்து லுங்கி உற்பத்தி விற்பனையைத் தொடங்கினார். அதற்குத் தம்பியை நியமித்துத் தானும் கவனித்துக் கொண்டார்.

இவரது அலுவலகம் கோவைக்குச் சென்றதால் ஆறு மாதங்கள் விடுப்பு எடுத்தார். அக்கா குடும்பத்தினரும் இவருடன் வந்து சேர்ந்தனர். எனவே அனைவருக்கும் வருவாய்க்கும்

தொழிலுக்கும் வழிகாண வேண்டித் தனியாக லுங்கி வியாபாரம் தொடங்கினார். ஒருமுறை அலுவலகத்தில் உயர் அதிகாரி தன் அதிகாரம் காரணமாக முறையற்றதைச் செய்யப் பணித்தார். அதுபோது வியாபாரம் நல்ல வருவாயைத் தந்ததால் போஸ்டல் ஆடீட் ஆபிஸ் வேலையை மறுதலிப்பு (இராஜிநாமா) செய்தார். அலுவலக வேலையை விட்டபின் 1, 20, 000 க்கு மாத விற்பனை உயர்ந்தது. குடும்பத் தேவைக்குக் கிணறு, பம்பு செட்டோடு ஐந்து ஏக்கர் நிலம் வாங்கினார்.

இவரது 45ஆம் வயதில் துணிகள் விற்பனை ஆகாததால் நாளுக்கு நாள் தொழிலில் பெரும் சரிவு ஏற்பட்டது. 2000 தொழிலாளர்களின் நலன் கருதி, தொடர்ந்து செய்ய முயன்றதன் விளைவாகக் குடியிருந்த வீடு உட்பட அனைத்தையும் 1960 திசம்பரில் இழந்தார். பின் முதல் மனைவிக்குத் தெரிந்த குழாய் பிட்டுச் செய்து விற்றதால் ஏழு மாதம் குடும்பத்தை ஓட்ட முடிந்தது. மீண்டும் அரிசி வியாபாரம் செய்து வருவாய் குறைவிலிருந்து குடும்பத்தை மீட்டார்.

குடும்ப வாழ்க்கை

23 வயதில் இவர் விரும்பிய அக்கா மகளை மணமுடித்து வைக்கத் தந்தை முயன்றார். மாமா வசதியான இடத்தில் பெண்ணைக் கொடுக்க விரும்பியதால் முயற்சி தடைபட்டது. தந்தை இறந்த ஆறுமாதத்திற்குப் பின், கூடுவாஞ்சேரியில் எதிர் வீட்டிலிருந்தோர் இவர் மீது கொண்டிருந்த அன்பு காரணமாய் மாமாவை ஒரு வழியாகச் சம்மதிக்க வைத்தனர். இவருக்கும் இவரது தம்பிக்கும் ஒரே நாளில் சிக்கனமாகத் திருமணம் நடந்தது. 18 வயதுக்குப் பின் சென்னையில் அக்கா வீட்டில் தங்கி இருந்த வேதாத்திரி வேறு வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டு குடும்பத்துடன் வாழ்க்கையைத் தொடங்கினார்.

திருமணம் நடந்து எட்டு மாதங்களில் தம்பிக்குக் குடல் இறக்க நோய் வந்தது; தறி நெய்ய முடியவில்லை. குடும்பப் பெருக்கம் காரணமாக உழைப்பைக் கடுமையாக்கினார். கிராம வாழ்வில் செலவு குறையுமெனக் கூடுவாஞ்சேரிக்குக் குடும்பத்துடன் குடிபோக எண்ணினார். அங்குள்ள இன்னொரு அக்கா வீட்டில் தங்கினார். கூடுவாஞ்சேரியில் இருந்து 2படி பால் வாங்கி வந்து அதைத் தன் அலுவலகச் சிற்றுண்டிச்

சாலையில் கொடுத்து வந்ததில் மாதம் ரூ. 15 பெற்றார். அதை இரயில் வண்டிச் செலவுக்கு ஒதுக்கினார். மேலும் 4 படிக்கு ஆர்டர் கிடைத்தபின் குடும்பத்தைக் கூடுவாஞ்சேரிக்கு அழைத்துக் கொண்டார்.

இவரது மனைவி லோகாம்பாள் கண்ணுக்கும் கருத்துக்கும் ஒத்த மனைவியாக, இவரது உள்ளத்தைப் புரிந்து கொண்டவளாக, உயர்ந்த பண்பும், சிறந்த அறிவும் உடையவளாக, இலட்சிய வாழ்க்கை நடத்துவதற்கேற்ற வாழ்க்கைத் துணைவியாக, பெருநிதியாக விளங்கினார். இரவு பகலாகப் பொருள் துறையை வளமாக்குவதில் இவருடன் நன்கு உழைத்தார். இவளது பெற்றோர் முதலில் நல்ல வசதியுடனும், இவள் திருமணத்திற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் வசதியற்றும் இருந்தனர். தொடக்கக் காலத்தில் செல்வச் செழிப்போடு வளர்ந்த தன் மனைவி திருமணத்திற்கு முன்னும், பின்னும் வறுமையை அனுபவிப்பது வேதாத்திரிக்கு மனவருத்தத்தைத் தந்ததுண்டு. ஆயின் இவரது மனைவி சோர்வோ சலிப்போ குறையோ வெளிக்காட்டிக் கொண்டதில்லை.

இத்தகைய மனைவியின் துணையுடன் எளிய வாழ்க்கை யிலும் அனைத்தும் உடையவர்கள் என்ற மனநிலையோடு குடும்பத்தினருக்கு வேண்டிய கடமைகளை நன்கு ஆற்றினார்.

இவருக்கு 32 வயதாகியும் குழந்தைப் பேறு கிட்டவில்லை. ஊராரின் துன்பத்திற்கு ஆளான மனைவியின் தொடர் வற்புறுத்தலும், தற்கொலை செய்து கொள்வாளோ என்ற அச்சமும் இவரை இரண்டாம் திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்தது. விபத்தால் இவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுச் சரியான போதிலும் அவ்வாண்டு திருமணம் தள்ளிப் போனது. பின் கூடுவாஞ்சேரிக்கு அடுத்த நந்திவரம் கிராமத்தில் உள்ள, இலட்சுமி என இவர்களால் பெயர் மாற்றம் செய்யப்பட்ட கண்ணம்மா என்ற பெண்ணை 13-6-1943இல் மணம் புரிந்து கொண்டார்.

தன்னைப் புறக்கணித்து இவர் எந்தச் செயலையும் செய்கிறார் என இருவரில் ஒருவர் நினைத்து விட்டாலும், பின்னர் அதனை ஒழுங்கு செய்வது கடினம் என நாளும் மிக விழிப் போடும், பொறுப்போடும் செயல்பட்டார். குடும்பத்திலுள்ள ஒருவர் மனமும் நோகாமல் நடந்து கொண்டார்.

இரண்டாம் திருமணமாகிப் பத்து ஆண்டுகளாகியும் குழந்தைப் பேறு இவருக்குக் கிட்டவில்லை. இவருக்கு 2ஆம் திருமணமாகி ஆறு ஆண்டுகள் கழித்துத் தம்பிக்குப் பெண் குழந்தை பிறந்தது. பிறந்த மூன்று மாதத்தில் தாய்க்குக் கடினமான நோய் கண்டது. அன்று முதல் குழந்தையை வேதாத்திரியும் அவரது மனைவியரும் வளர்த்து வந்தனர். ஞானாம்பிகை என்ற அப்பெண் இரண்டு மனைவியரின் பிள்ளையில்லாக் குறையை நீக்கினாள்.

அதன்பின் பல ஆண்டுகளுக்குப் பின் இவரும் இவரது மனைவி லோகாம்பாளும் சேர்ந்து செல்வி உமாவைச் சட்டப்படி கோவை ஜில்லா நீதிமன்றத்து அனுமதிப்படி மகளாகத் தத்து எடுத்துக் கொண்டனர். இம்மகள் இவரது நலம் நாடி இவரை நல்லமுறையில் கவனித்து வருகின்றாள்.

வழிகாட்டிகள்

பெற்றோர்

சிறு வயதிலேயே தந்தை சில துதிப்பாடல்களைச் சொல்லி வைத்திருந்தார். பெற்றோர் கூறிய பல கற்பனைக் கதைகளை இவர் ஏற்க மறுத்தார். வேதாத்திரியின் மனநிலையை உணர்ந்த அவரின் தந்தை தான் மனப்பாடம் செய்து வைத்திருந்த அறப்பளீசுர சதகம், தண்டலையார் சதகம், குமரேச சதகம் ஆகியவற்றைச் சொல்லிக் கொடுத்தார். இவருக்கு எழுதப்படிக்கத் தெரிந்தபின் அறநூல்களையும் வாங்கிக் கொடுத்தார்.

ஒழுக்கம், சத்தியம் தவறாமை, பொய் பேசாமை, பிறர் மனம் நோகப் பேசாமை, ஊருக்கு இலவச மருத்துவம் முதலான பொதுத்தொண்டுகள், கடின உழைப்பு போன்ற பெற்றோரின் பண்பு நலன்கள் இவரது நல்வாழ்விற்கு அடிக்கல்லாக அமைந்தன.

ஏ. பாலகிருஷ்ணன்

பத்து வயதில் இவரைப் பக்திமார்க்கம் ஆழமாக ஈர்த்தது. அதுபோது 75 வயதான ஏ. பாலகிருஷ்ணன் என்ற குரு கிடைத்தார். சுத்த அத்வைத தத்துவம் பேசிய இவரது போதனையால் ஒழுக்கம், அடக்கம், நற்சிந்தனை போன்றன கைவரப் பெற்றார். அவர் விளக்கும் கருத்துகளின் அடிப்படை உண்மைகளை அறிய எப்போதும் சிந்தித்துக்கொண்டே இருந்தார்.

இன்பதுன்பம் யாவை, முடிவு என்ன, உயிர் என்பது என்ன, நான் யார், கடவுள் யார், ஏழ்மை ஏன் என 12 வயதிற்குள் இவரது உள்ளம் பல வினாக்களை எழுப்பிக் கொண்டே இருக்கத் தொடங்கியது. குரு போதித்த பஜனைப் பாடல்களும், சதகங்களும் இவரது வினாக்களுக்கு உள்ளொளி விளக்கங்கள் கிடைக்க உதவின.

வைத்தியபூபதி எஸ். கிருஷ்ணராவ்

தம் 14ஆம் வயதில் கடவுளை அறியவும், வருவாய் தரும் தொழிலைத் தேடவும், ஒரு ஞானகுருவைப் பெறவும் எண்ணி அதற்கேற்பச் செயலாற்றத் தொடங்கினார். தம் 18ஆம் வயதில் ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவர் வைத்திய பூபதி எஸ். கிருஷ்ணராவ் ஆசானாகக் கிடைத்தார்.

அவரிடமிருந்து ஆயுர்வேதத்தை முறையாகவும், சித்த மருத்துவத்தை ஓரளவும் கற்றார்; சரக சம்ஹிதை, சுச்ருத சம்ஹிதை, மாதவ நிதானம், அஷ்டாங்க ஹிருதயம், ரசரத்ன சமுச்சயம் முதலான சமஸ்கிருத நூல்களின் மொழிபெயர்ப்பு களையும், தத்துவ விளக்கத்தையும், புருவத்திடையே தியானம் செய்யும் யோக முறையையும் பயின்றார். இதன் பயனாய் இரண்டாண்டுகளில் தேர்ந்த மருத்துவ அறிவும், தத்துவத் தெளிவும், தியானத்தில் பற்றும் பெற்றுச் சிறந்த மனிதரானார்.

இந்த ஆசானின் தூண்டுதலால் வைத்திய விசாரதா என்ற மருத்துவச் சான்றிதழும் பெற்றார். நான்கு ஆண்டுகள் அதற்கென அமைந்த ஆயுர்வேதக் கல்லூரிகளில் படித்தவர்களே அத்தேர்வில் தேற இயலும்.

22க்குப் பின் உயிர், கடவுள், வறுமை பற்றிய சிந்தனைகள் வலுக்க 35 வயதுக்குள் தெளிவான விளக்கங்களைக் கண்டார்.

பரஞ்சோதி

லுங்கித் தொழில் மேன்மையுற்று நடந்த காலத்தில் பரஞ்சோதி என்பவரின் சென்னையில் உள்ள உலக சமாதானம் என்ற ஞானசபையில் உறுப்பினர் ஆனார். குண்டலினி யோக தீட்சை முறை, சாந்தி யோகமெனும் இறங்குபடி முறை ஆகிய சிறப்பான பயிற்சிகளில் ஒழுங்கான முறையில் தீட்சை பெற்றார். மனத்திற்கு ஒத்ததாக இருந்த இம்முறையுடன் தாம் அறிந்திருந்த

தத்துவ விளக்கம், தியானமுறை போன்றவற்றை இணைத்து ஆராய்ந்தார். கூட்டுத் தவம் பயின்றார்; அங்கு வந்த நண்பர் பலரிடம் தம் கருத்துகளை விளக்கினார்.

உயர்ந்த சிந்தனைகள்

சிறு வயது தொடங்கி, படிப்படியாக, சிறுசிறு நிகழ்வுகளிலும் காணப்பட்ட பல நற்குணங்கள் இவரை உயர்த்தியதோடு பிறரையும் உயர்த்தத் துணை நின்றன. அவற்றுள் சில காண்போம்.

ஒரு நாள் உணவைப் பெற முடியாத அளவு பெற்றோருக்கு வறுமை இருக்கிறது என்பதை உணர்ந்து வறுமையை நீக்க அதுமுதல் தன் நெசவு வேலையை இருமடங்காக்கிக் கொண்டார். பிற்பகுதியில் பணக்கஷ்டம் வந்தபோது கிடைத்த பண உதவியைக் கூட, என்னால் முடியும்போது தந்தால் வாங்கிக்கொள்ள வேண்டும் என்ற ஒப்பந்தத்திற்குப் பின்தான் பெற்றுக் கொள்கிறார்.

நெசவுத் தொழில் வறுமையை ஒட்டாது என உணர்ந்து வேறு வேலை தேடிக் கொண்டார். அதற்காகத் தமிழ், ஆங்கிலம், கணிதம் ஆகியவற்றை இரவுப் பள்ளியில் கட்டணம் கட்டிப் படித்தார். இக்கட்டணத்திற்காகத் தான் காசு கொடுத்துச் சாப்பிட்டு வந்த தயிரையும், தோசையையும் சாப்பிடாமல் நிறுத்தினார். செருப்பு தைக்கும் தொழிலாளி இரவு முதல் பகல் வரை வருமானம் இல்லாததால் சாப்பிடவில்லை என அறிந்து அதுமுதல் இரவு நேர உணவை விட்டார். புலால் உணவின் கேடுகள் என்ற நூலைப் படித்ததால் புலால் உணவைத் தவிர்த்தார்.

வேலையில் சேர்ந்த பின் மாத வருமானம் 75ஐ பெற்றோருக்கு 10, சீட்டுக்குப் 10, மாமாவின் வீட்டில் தங்கியிருந்ததால் மாமாவுக்கு 10 என்றவாறு கொடுத்தது, தன் திருமணத்திற்கு ஆகும் செலவு இருநூறில் நூறைச் சீட்டுக் கட்டிச் சேர்த்தது என்று பலவகைகளிலும் பணத்தைப் பொறுப்புணர்ந்து பயன்படுத்தினார்.

கூடுதல் வருவாய்க்காக ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைத் தேடிக்கொண்டார். பால் வியாபாரத்தை விட நினைத்த போது அதை வேறு ஒருவருக்குக் கொடுத்து உதவினார்.

சட்டத்திற்குப் புறம்பாக, பணி செய்ய விரும்பாது பணியிலிருந்து விலகுகிறார். விலகாதீர்கள் உங்களுக்காக, படிப்புக்

குறைவிலுள்ள தடை நீக்கச் சட்டத்தின் வழி நிரந்தர பதவி உயர்வு வழங்க ஆணை வாங்கியிருக்கிறோம் என உயர் அதிகாரி கூறியும் எடுத்த முடிவில் உறுதியாக இருந்தார். இதுபோன்ற புறம்பான செயற்பாடுகளை உடனடியாகத் தீர்த்துவிட முடியாது. மனம் விரும்பாத இப்பணியைச் செய்வதைவிட மனம் விரும்பும் பணியைச் செய்தால் தனது உழைப்பு சிறக்கும் என நினைத்தார். பிறருக்குத் துன்பம் செய்பவர் தனக்கே செய்து கொள்கிறார்கள் என்ற தெளிவு அவருக்கு இருந்தது. எனவே அதிகாரச் சட்டங்களை முறைகேடாகக் கையாள்பவர்கள் பின்னால் பழிவாங்கப்படுவார்கள் என நம்புகின்றார்.

தன் வறுமை ஒழிந்தபின் சமுதாய வறுமை நீங்க வழிகாண முயன்றார். முதற்படியாகத் தன்னிடம் வேலை செய்த நெசவுத் தொழிலாளிகளுக்கு, அதிகப்படியான கூலி, இலாபத்தில் 25 சதவீதம் போனஸ், பெற்றோர் இறப்பு, மனைவியின் குழந்தைப் பேறு போன்றவற்றிற்கு உதவித்தொகையும் மற்றும் அவசர உதவிக்குக் காரும் வழங்கினார்.

போர் அச்சம் மிகுந்திருந்த இரண்டாம் உலகப் போர்க்காலத்தின் போது, சமுதாயத்திற்குப் பயனுள்ள முறையில் தொண்டாற்ற, போஸ்டல் ஆடிட் ஆபிஸ் செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் குண்டு வீச்சுப் பாதுகாப்பு ஆகிய இருதுறைகளில் பயிற்சிப் பெற்றார்.

வாழ்க்கைப் பொறுப்பேற்றவர் சிக்கல்களிலிருந்து விடுபட முடியாது என உணர்ந்தார். தான் சிக்கல்களை மாறி மாறி அனுபவித்தபோது வருந்தினாலும் சிந்தித்துத் தெளிவும் துணிவும் பெற்றார்.

தம் 22 வயதில் உயிர் நண்பன் கடலில் மூழ்கி கண்முன் இறந்ததால் பல நாள் வருந்தினார். வாழ்க்கைத் துயரங்களைத் தாண்டிவிட்ட அவனை நினைத்து, அதில் சிக்குண்டுள்ள நாம் ஏன் வருந்த வேண்டும் என தம்மைத் தேற்றிக் கொண்டார்.

சரியாகப் படிக்காத பள்ளிச் சிறுவனைச் சினம் கொண்டு பிரம்பால் அடித்தது, குளிர்காலத்தில் பச்சைத் தண்ணீரில் குளிக்க இருந்தபோது குளிர் போகுமென வாளிநீரை இரண்டாம் மனைவி தன் தலையில் ஊற்றக் கோபத்தால் அவள் தலையில் வாளிநீரைக் கொட்டியது ஆகிய நிகழ்வுகள் மனத்தை மிகவும்

வருத்தியதால் சினம் வராமல் இருக்கப் பல வழிமுறைகளைப் பின்பற்றினார்.

இப்படி மனிதருக்குள்ள நற்பண்புகள் பல அவருக்கு இயல்பிலேயே இருந்தன. அத்துடன் தம் அனுபவத்தையும், தாம் கற்றதையும் நாளும் சிந்தனைக்குட்படுத்தி மனத்திற்குள் கேள்விகள் எழுப்பி விடை கண்டதால் உலகம் போற்றும் மகானாக மாறினார். **அவரது சிந்தனைத் துளிகள் சில:**

சிறு வயது முதலே மெய்ப்பொருளோடு இணைந்து இலயமாகும் பேறு கிட்டியது. அங்கிங்கெனாதபடி எனும் தாயுமானவர் பாடல் கடவுள் உருவமற்றவர் என்ற தெளிவைத் தந்தது. பதினாறு வயது முதல் அவர் செய்யும் ஒவ்வொரு செயலுக்கும் காரணம் காண முனைந்தார். 18 வயது வரை கேள்விகள் கேட்டும், விளக்கங்கள் கேட்டும் பெற்றோரைத் திணரச் செய்தார்.

ஒருமுறை தாய் சூரியனுக்கு உப்பில்லாமல் அடை சுட்டுப் படைத்ததைப் பார்த்தார். முன்பொரு காலத்தில் உப்புப் போட மறந்து மாமியார் சுட்ட அடையில் மருமகள் உப்பில்லையே என்று கேட்க, உப்பில்லாமல்தான் படைக்க வேண்டும் என்ற பொய்யான சமாளிப்பே இன்றுவரை உண்மையாகி விட்டது என்றார். மகனின் சிந்தனைப் பூர்வமான விளக்கத்தால் மகிழ்ந்த தாய் அதன்பின் உப்பிட்டே படைக்கத் தொடங்கினார்.

ஒரு முறை அறிவுக் கூர்மைமிக்க தம்பி மகள் ஞானாம்பிகை திருவள்ளுவர் கதையைக் கேட்டபின் மணலைக் கொண்டு உணவு சமைத்ததை நம்ப முடியாது என்றாள். மணலை வாங்கிக் கொண்டு சாதம் சமைத்து அளிக்கும் நல்லாளை வள்ளுவர் தேடினார். வாசுகி அறிவு நுட்பத்தால் மறைபொருளை உணர்ந்து, மணலை வாங்கிக் கொட்டி விட்டு அரிசியில் சமைத்துச் சாப்பாடு போட்டாள். தன்னை விரும்பி ஏற்கும் அறிவிற் சிறந்தவளை அறிவதற்கு வள்ளுவர் கையாண்ட உத்தி என்று தம் கருத்தை வேதாத்திரி விளக்கினார்.

குழந்தை இல்லையே என்ற குறை வேதாத்திரிக்கு இருந்தது. நாளுக்குநாள் குறைந்து வந்த குறை, மக்கட் பேறின்மைக்கு மூன்று காரணங்களை அறிந்தபின் முற்றிலும் நீங்கியது.

1. இளமையில் திருமணம் மறுத்துச் சன்யாசம் கொள்ளுதல்

2. உடல்நலக் கேட்டால் விந்து கெடுதல்

3. வினைகள் கழிக்கப் பெற்றுப் பரம்பொருளோடு உயிர் இணைந்து நிற்கும் தவசித்தி.

இவற்றில் தனக்குக் குழந்தை மூன்றாம் காரணத்தினால் தான் பிறக்கவில்லை என உணர்ந்தார்.

பகலில் உடல் உழைப்பு, இரவில் அயராத சிந்தனை என தம் வாழ்நாட்களைக் கழித்ததன் விளைவாகச் சிறுவயது முதல் அவருள் எழுந்த கடவுள் யார்? உயிர் என்றால் என்ன? பிறப்புக்கு முன், இறப்புக்குப் பின் உயிர் எவ்வாறு இருக்கிறது, வறுமையை ஒழிப்பது எப்படி, உலக ஒற்றுமையை ஏற்படுத்துவது எப்படி, மனத்தின் ஆற்றல் எத்தகையது போன்றவற்றிற்கு மரபுவழி கருத்துகளுடன் தம் கருத்துகளையும் இணைத்துப் பல தெளிவான விளக்கங்களைக் கண்டார். அவற்றை மக்கள் பயன்படுத்தும் வகையிலும் நடைமுறைப்படுத்தினார். இத்தகைய செயல்பாடுகளின் சில இன்றியமையாச் செய்திகளைக் காண்போம்.

கடவுள் – காந்தம்

பிரபஞ்சமும் அதில் ஊடுருவி உள்ளதும் சுத்தவெளி **(இறைவெளி) இத்தூய வெளியே கடவுள்**, இது அனைத்திலும் அடக்க நிலையில் உள்ளது; புலனறிவால் உணரப்படுகிறது. பூரணம், பேராற்றல், பேரறிவு, காலம் ஆகியவற்றின் செயல்பாட்டால் இத்தூயவெளி நொறுங்கித் துகளாகிறது. இவை இணைந்து வேதானாகிச் சுழல்கிறது சுழலும் போது காந்தம் வெளிப்படுகிறது. இக்காந்தம் தள்ளும் ஆற்றலையும், ஈர்ப்பு ஆற்றலையும் உடையது.

பிரபஞ்சத் தோற்றங்களும், செயல்பாடுகளும் காந்த வெளிப்பாட்டால் சீரமைக்கப்படுகின்றன. ஐம்பூத ஒழுங்கமைப்பும் இக்காந்தமே. இதுவே முறையாக இணைந்து உயிரினமாகத் தன்னிலை மாற்றம் பெற்றுள்ளது. ஓரறிவு நிலையில் காந்தத்தை உணர்வாற்றலாகக் கொண்டு சீவன் வாழ்கிறது. பின் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் எனும் ஐம்பூத வெளிப்பாடான வான்காந்தத் துணையுடன் ஐம்புலன்கள் தோற்றம் பெற்றன. இந்த ஐம்புலன்களால் உடல் தேவை நிறைவுபெற்றது.

மனம்

பின் தன்னைப் பற்றி அறியக் கூடிய மனமாகக் காந்தம் மலர்ந்தது. பரம்பொருளே ஆகாசமென்ற உயிர்த்துகள்கள். அதன் திரட்சித் தோற்றமே உடல், உயிர், உடல் கூட்டு இயக்கத்தால் உணர்ச்சி, தேவை, முயற்சி, அனுபோக, அனுபவ ஆராய்ச்சி, தெளிவு, முடிவு என்ற உயிரின் பத்துப் படித்தளப் படர்க்கை இயக்க ஆற்றலான மனமாய் இயங்கும் மறைபொருள். இம்மனத்தைக் கொண்டு ஒரே பொருள் எல்லாமாக இருக்கிறது என்று சிந்தித்துத் தெளிவு பெற்றால் இதனை நிகழ்த்துவது இறைவெளியே என்ற உண்மை விளங்கும்.

ஆன்மா

நம் உணர்வுக்கும், எண்ணத்திற்கும், மனத்திற்கும் காரணமாகிய, நம் உடற் கருவிகளை இயக்கும் சக்தியாகிய சீவகாந்தத்தில் இறுக்கும் ஆற்றல், விரிக்கும் ஆற்றல் என இரட்டை ஆற்றல் உள்ளது. சீவகாந்தச் செலவில் ஏற்பட்ட விளைவும், பெற்ற அனுபவமும் சுழலும் சீவகாந்த ஆற்றலின் மையப் பகுதியில் சுருக்கி இறுக்கி இருப்பாக வைக்கப்படுகிறது. இதுவே கருமையம் அல்லது ஆன்மா எனப்படுகிறது. இக்கருமையப் பதிவே வினைப்பதிவு இந்த ஆன்மாவை நல்வினையாற்றித் தூய்மையாக வைக்காவிட்டால் நாமும், கருத்தொடராக எதிர்காலச் சந்ததியும் துன்பக் கடலில் ஆழ்ந்து போகும்.

ஆன்மா பஞ்சபூதங்களாகி ஓரறிவு முதல் ஆறறிவு வரை வித்துவின் வழித் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. உடலின் மையத்தில் உயிர் அமைந்து விந்துவை ஆதாரமாகக் கொண்டு இயங்குகிறது.

முன்னோர் செய்த முன்வினைக்கும், நாம் செய்த தன் வினைக்கும் ஏற்பவே இன்பதுன்பங்கள் நிகழ்கின்றன. ஒரு வினையின் காலம் கனியாத போது அவ்வினையின் விளைவு ஒருவனுக்கு வராமலும் போகலாம். அது அவனின் வித்துத் தொடரான மக்களைச் சென்று சேரும். துன்பப்படுபவனுக்கு ஏற்கெனவே சேர்த்த வினை கழிந்து கொண்டு இருக்கிறது. அவன்

ஆன்மத் தூய்மை அடைகிறான். பிறரை ஏமாற்றி நன்றாக வாழ்பவனுக்கு அவனது புண்ணியம் தீர்ந்து கொண்டே வருகிறது. அதனால் அவன் துன்பத்தை அனுபவிக்கும் காலம் நெருங்கிக் கொண்டே இருக்கும். அக்காலம் வருமுன் அவன் உயிர்நீத்தால் அது அவன் விந்துவில் உருவான சந்ததியைப் போய்ச் சேரும்.

இயற்கை யாரையும் தண்டிப்பதில்லை. முரணான செயல்களால் ஆன்மா களங்கம் அடைகிறது. களங்கத்தைப் போக்கித் தூய்மைபெறும் அறிவின் செயலே தண்டனையாக வெளிப்படுகிறது. துன்பம் அடைந்தவர் பெருந்தன்மையோடு மன்னித்தாலும், துன்பம் செய்தவரின் உள்ளுணர்வான அறிவு பதிவு செய்து வைத்து வினையைக் காலத்தால் அளித்துவிடும்.

சில நேரங்களில் சமுதாய வினையும் தனி மனிதனைப் பாதிக்கும். ஏனெனில் சமுதாய உழைப்பான உணவு, உடை, உற்பத்திப் பொருள்களை அவன் அனுபவிக்கிறான். எனவே தனிமனித வினை சமுதாய வினைக்கு உட்பட்டே செயல்படும்.

மறுபிறவி

ஒரு பிறவிக் கருவின் உடல் தொடர்பு பெற்றோரால் உண்டாகிறது. இருப்பினும் அத்தனை உயிரினங்களின் தன்மை களையும், குணங்களையும் தன் உயிரில் அடக்கமாகப் பெற்றுள்ளது. அதாவது பல இலட்சம் பிறவிகளிலும் பெற்ற அனுபவங்கள் ஓர் உயிரின் கருத்தொடரில் பதிவுகளாக இருக்கின்றன.

எனவே இயற்கை என்ற முழுமையின் ஒரு பகுதியான மனிதன் மீண்டும் பிறவி எடுக்க வாய்ப்பில்லை. தாய் வயிற்றில் வளரும் கருவுக்கு உயிர் கிடையாது. ஏழாவது எட்டாவது மாதங்களில் தான் உயிர் வந்து புகுகிறது. ஒவ்வொரு உடலும் தோன்றும்போதே தாய், தந்தை, விந்துக்கிருமி நிலையிலேயே உயிரோடுதான் தொடர்கிறது.

எனவே உயிரினங்களின் பரிணாமத் தொடரில் ஒரு தலைமுறையின் வடிவம், தன்மை, இயக்க ஒழுங்கு என்ற மூன்றும் வித்திலே கருவமைப்புப் பதிவுகளாகச் சுருங்கியும், மீண்டும்

அடுத்த தலைமுறையில் விரிந்து வெளிப்பட்டுக் காட்சிக்கு வருவதும் சீவகாந்த ஆற்றலால்தான்.

துன்பம் விளைக்கும் தீய பதிவுகளை நீக்கி ஆன்மாவைத் தூய்மை செய்து கொண்டு வாழ்க்கை இன்பங்களை அனுபவித்து இறைநிலையை உணர்ந்து அதோடு இணைப்புற்று முடிவுபெற வேண்டுமென்பதே மனிதப் பிறவியின் நோக்கம்.

உயிர்

வாழுங் காலத்து உயிர் உடலில் எவ்வாறு இருக்கிறது, பிறப்புக்கு முன் உயிரின் நிலை என்ன என அறிந்த வேதாத்திரி இறப்பிற்குப்பின் உயிரின் நிலை பற்றிப் பின்வரும் மூன்று வகையான விளக்கங்களைத் தருகிறார்.

நெடுநாள் வியாதியால் உயிர்த்தொகுதியானது தன் அளவிலே குறைந்து உடலை நடத்த முடியாமலும், தொடர்ந்து இயங்க முடியாமலும் வெளியேறுவது ஒருவகை இறப்பு. இந்த உயிரின் அளவும் அழுத்தமும் மிகக் குறைவாக இருக்கும்.

கொலை, தற்கொலை, விபத்து போன்றவற்றால் ஏற்படும் திடீர் இறப்பில் உயிர்த்தொகுதியின் அளவும் அழுத்தமும் நிறைவாக இருக்கும். இதற்கு வாழும் மனித உடலோடு இணையும் வேகம் அதிகமாக இருக்கும்.

வாழ்வாங்கு வாழ்ந்து, அறிவில் முழுமை பெற்று, ஆசைப் பதிவுகளை நீக்கி, நிறைமனம் பெற்றுத் தவத் தொடர்பால் இனி அறிவின் வளர்ச்சிக்கு உடல் தேவையில்லை என உயிர் பிரிவது மூன்றாம் வகை.

இச்சைப்பதிவு, பழக்கப் பதிவு காரணமாக உயிர்கள் உடலை விட்ட உடனே நிலவுலகை விட்டு நீண்ட தூரம் விலக முடியாது. இறப்பால் பிரிந்த உயிர் வான்காந்தத்தில் தங்கி, ஒத்த அறிவுடைய ஆன்மாவோடு இணைந்து இயங்கித் தனித்தனியே அணுஅணுவாகப் பிரிந்து தனது தொகுதிநிலை இழந்து, அவர் ஆற்றலுக்குத் துணையாகவும், தன் பதிவுகளைத் தூய்மை செய்து கொண்டும், மற்ற ஆன்மாக்களுக்குத் தனது தன்மைகளைக் கலக்க விட்டுக் கொண்டும் கடைசியாக வான்காந்தம் எனும் பேரான்மாவோடு கலந்துவிடும்.

இப்படி இறந்த உயிர்த்தொடர்பு கிட்டும் மக்களின் ஆற்றல் பெருகும், மேலோங்கும். இவை பெரும்பாலும் நன்மை தரினும் சில சமயம் முரண்பாடுகளையும் தீமைகளையும் தந்துவிடும்.

சில இறந்த உயிர்களின் தொகுதி தாம் சேர்ந்த உயிரின் மயக்க நிலை அறிந்து அது சமயம் தனது நல்ல - தீய இயக்கங்களை வெளிப்படையாக நடத்தும். குறிசொல்லுதல், பினாத்தல், வலிபோலக் கைகால்கள் இழுத்தல், மயக்கமாகக் கிடத்தல் போன்றவை இவ்வடிப்படையில் நிகழ்வனவே. இவை பேச்சுக் கொடுப்பின் பிறரோடு உரையாடவும் செய்கின்றன.

இவரது வாழ்வில் நடந்த இருநிகழ்வுகள் இறந்த உயிர்த்தொகுதிகளின் இயக்கம் வாழும் உயிரோடு சேர்ந்து இயங்கி அவர்கள் வலிமையை மிகுவிக்கின்றன என்பதற்கு நல்ல காட்டுகளாக அமைகின்றன.

வள்ளலாரின் ஆவி

இவரது 42ஆம் வயதில் ஒரு பௌர்ணமி இரவு திண்ணையில் படுத்திருந்தவர் கண் விழித்தார். இவர் அருகில் நின்றிருந்த வள்ளலார், "நான் உன்னோடு பத்தாண்டு இருக்கப் போகிறேன்" என்று கூறி மறைந்தார். அந்தப் பத்தாண்டுகளும் இவர் எழுதிய தத்துவமயமான கவிதைகளையும், கட்டுரை களையும், வள்ளலாரின் உடல் வழி முடிக்காமல் விட்டு வைத்துத் தம் உடல் வழி முடித்தவையே என்கிறார். வள்ளல்ார் உடனிருந்து வழிகாட்டிச் செயலாற்றியதைப் பலமுறை தாம் அனுபவமாகக் கண்டதாகக் கூறுகிறார்.

மகானின் ஆவி

இவர் மனைவி லோகாம்பாளுக்கு ஒரு மகானுடைய ஆவி தொடர்பு இருந்ததால் சிலபோது மயக்கமடைந்து சாய்ந்துவிடுவார். அதன் பிறகு அம்மகானின் ஆவி பேசத் தொடங்கும். பல முறை இவர் இந்த ஆவியுடன் உரையாடி இருக்கிறார். இந்த ஆவியால் குடும்பத்திற்குப் பல நன்மைகளும், பாதுகாப்பும் கிடைத்ததாக வேதாத்திரி கூறுகிறார்.

அன்னை தந்தையர் உயிர்களின் கலப்பே குழந்தை களாகப் பிறக்கின்றன என்ற உண்மைக்கு ரஷ்ய உயிராய்வு,

மனோதத்துவ வல்லுநர்கள் கூடி நடத்திய பரிசோதனை பற்றிச் செய்தித்தாளில் வந்த பின்வரும் விபரம் நல்ல காட்டாக, இருக்கிறது. மூளை அலை அதிர்வு அளப்புக் கருவியோடு ஒரு தாய் முயலை இணைத்தனர். மிகத் தொலைவான பகுதியில் இருந்துகொண்டு அதன் குட்டிகளில் ஒன்றைக் கொன்றனர். கொன்ற நேரத்தில் தாயின் உயிர் அதிர்வு மூளை அலை அதிர்வுக் கருவியில் தெரிந்தது. மீண்டும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மற்றும் ஒரு குட்டியைக் கொன்றனர். மீண்டும் தாய் மூளையில் அலையதிர்வு காணப்பட்டது. இதுபோல் பல தடவைகள் செய்து தாய்க்கும் குட்டிகளுக்கும் உள்ள உயிர்த்தொடர்பை உணர்த்தினர் (எனது வாழ்க்கை விளக்கம், ப. 184).

மனத்தின் ஆற்றல்

சிறுவயது முதற்கொண்டே தத்துவ விளக்க ஆராய்ச்சியில் ஈடுபட்ட இவர் 40 முதல் 50 வயது வரை எண்ணத்தின் ஆற்றல் பற்றி ஆராய்வதில் அதிகமாகக் கவனம் செலுத்தினார். யோகம், தவம், தத்துவ ஆராய்ச்சி போன்றவற்றின் விளைவாக மனத்தைப் பற்றிய முழுவிளக்கத்தையும், எண்ணத்தின் ஆற்றலையும் தெரிந்துகொள்ளும் வகையில் இவரது வாழ்வில் பல நிகழ்ச்சிகள் நடந்தன.

ஒருமுறை இவர் 9.30க்குப் பிடிக்க வேண்டிய புகைவண்டிக்காகச் சென்று கொண்டிருந்தபோது, உடன் வந்தவர் தாமதமாகி விட்டதால் வண்டியைப் பிடிக்க முடியாது என்றார். இவருக்குப் புகைவண்டியைக் கூட எண்ணத்தால் நிறுத்த முடியும் என்று தோன்றியது. இதைச் சோதிக்கத் தம் எண்ணத்தை உறுதியாகச் செலுத்தினார். உடன் வந்தவரிடம் நாம் போய்ச் சேரும் வரை வண்டி நகராது என்றார். 9.50க்கு எழும்பூர் வந்தனர். சரியான நேரத்திற்குப் புறப்பட்டும், வண்டியின் இயந்திரத்தின் இன்ஜெக்டர் குழாய் உடைந்ததால் அரைமணி தாமதம் என்று தெரியவந்தது. இதன்வழி ஆற்றலைப் பெரிய நிகழ்வுகளுக்கும் பயன்படுத்த முடியும் என்று அறிந்தார். வண்டி நின்று, பலருக்குத் துன்பத்தைத் தரும் இது போன்ற எண்ணங்களைப் பயன்படுத்தாது, விளைவறிந்து விழிப்போடு

நினைவாற்றலைச் செலவிட வேண்டும் எனவும் தெரிந்து கொண்டார்.

ஐநா. சபையில் நேரு பேசிய பேச்சில் கலக்குமாறு முறைப்படி கருத்தலைகளை நேருவுக்கு எட்டுமாறு பரப்பிவிட்டார். நான்காம் நாள் பத்திரிகையில் இவர் கோர்வை செய்தனுப்பிய வார்த்தைகள் அத்தனையும் நேருவின் உரையில் இருந்தன. செய்தியை அனுப்பும் முன்பே நண்பர்களிடம் சொல்லிச் செய்ததன்வழி தொலைவில் இருப்பவர்களுக்கும் நினைவாற்றலால் கருத்தைத் தெரிவிக்க முடியும் என்பதைப் பலர் அறியுமாறு செய்தார்.

இவரது 45ஆம் வயதில் லுங்கி வியாபாரத்தால் இழப்பு ஏற்பட்டுக் கடன் தொல்லைகளுக்கு ஆளானார். 1959இல் **"இன்னும் ஓராண்டுக்குள் எனது கடன்கள் எல்லாம் தீர்ந்து விட வேண்டும்"** என்ற சொற்களை நாளும் காலைமாலையில் சங்கற்பமாகக் கூறிவந்தார். 1960 திசம்பரில் கடன்கள் அனைத்தும் தீர்ந்தன. அத்துடன் அனைத்துச் சொத்துகளும் போய்விட்டன.

இரயிலை நிறுத்திய நிகழ்ச்சியின்வழிப் பின் விளைவறிந்து நல்ல சங்கற்பங்களைச் செய்யவேண்டும் என இவர் அறிந்திருந்தார். இருப்பினும், கடன்கள் அடியோடு தீரவேண்டும் என்று மட்டுமே சங்கற்பம் இவர் செய்யக் காரணமாய் இருந்தது இவர் மனத்தில் ஆழப்பதிந்திருந்த ஐம்பது வயதுக்குமேல் உலகச் சமுதாயச் சேவை என்ற இலட்சியம் தான். வியாபாரம் செழிப்பாகவே இருந்திருப்பின் அதை விட்டுச் சமுதாயப் பணிக்கு எளிதாகச் செல்ல முடியாது. எனவே இலட்சியம் நிறைவேறத்தான் வியாபார முடக்கம் ஏற்பட்டிருக்கிறது.

அதன்பின் தவத்தின் முடிவில், "**உடல்நலம், அறிவோடு செல்வம், புகழ் ஆகியவை உயர்வடைந்து மேன்மேலும் சிறப்பாய் வாழ்வேன்**" என்ற நல்ல சங்கற்பம் உருவாயிற்று. அத்துடன் **வாழ்க வையகம், வாழ்க வளமுடன்** எனும் தாரக மந்திரமும் சங்கற்பமாக உருப்பெற்றது. இந்தப் பொதுவான வாழ்க்கை நலச் சங்கற்பம் இவரிடம் தீட்சை பெற்ற அருட்செல்வர்கள் அனைவருடைய மனங்களிலும் ஒலித்துக்

கொண்டிருக்கிறது. இந்த நன்மந்திரம் கருவில் பதிவதால் ஒதுவோர் சந்ததிகளுக்குப் பல தலைமுறைகளுக்கும் நலமளிக்கும்.

மனத்தின் வலிமையால் ஒவ்வொருவரும் எண்ணியது எண்ணியாங்கு எய்த முடியும் என்கிறார். தனிமனித முன்னேற்றம் சமுதாய முன்னேற்றமாக உலக முன்னேற்றமாக மாறி உலக சமாதானம் நிலவும் என்கிறார். மனத்தின் வலிமைக்கு உறுதுணைபுரிய எளிய முறைக் குண்டலினி யோகம், உடற்பயிற்சி, தளராத தற்சோதனை, உயிர்ச் சக்தியைப் பாதுகாத்து முதுமையைத் தள்ளிப்போடும் காயகல்ப யோகம் ஆதியாம் கருவைப் புருவத்திடை உணர்த்தி இறைநிலையை அடைதல் ஆகியவற்றைப் போதித்து வருகிறார்.

அத்வைதத்தையும், இராஜயோகத்தையும் மக்கள் உணரும் வகையில் இவர் கற்பிக்கும் உளப்பயிற்சி முறை உள்ளது. தற்சோதனை எனும் அகத்தாய்வில் அறுகுணச் சீரமைப்பு முறை இறை உணர்வை அடையத் துணைபுரிகிறது. சினத்தைப் பொறையுடைமையாகவும், கடும்பற்றை ஈகையாகவும், முறையற்ற பாலுணர்வைக் கற்பாகவும், உயர்வுதாழ்வு மனப்பான்மையை நேர்நிறை உணர்வாகவும், வஞ்சகத்தை மன்னிப்பாகவும் சீரமைத்துக் கொள்ளத் தற்சோதனை முறை உதவுகிறது. இல்லறத்தில் இருந்தே வீட்டின்பத்தை அடைவதற்கான பயிற்சி அளிக்கப்படுகிறது. நன்மையைக் கருத்திலும் செயலிலும் நிரப்பிக் கொண்டால் தீமை இருக்க இடமிருக்காது. கருத்தொடராக வரும் முன்னோர்களது துன்பப் பதிவுகள் நீங்கும்.

இவர் 1958இல் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம் இன்று இந்தியா, மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது. இதன்வழிப் பின்வரும் பல நல்ல கருத்துகளை நாளும் போதித்து வருகிறது.

அனைத்து மதங்களும் அறிவு எனும் ஒரே கடவுளைப் பின்பற்ற வேண்டும். மனித இனத்தின் பன்முக வளர்ச்சிக்காக உலகம் முழுதும் ஒரே மொழி வழக்குப் பின்பற்றப் படவேண்டும்.

பொருள் அனைத்தும் உலகப் பொதுவுடைமை ஆக்கப்பட வேண்டும்.

எவ்வித அச்சமும் இன்றி அனைத்து நிலைகளிலும் நிறைவு பெற்று வாழ உலகளாவிய அளவில் அரசியல் கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டும்.

மக்களிடையே நிலவும் உறவுநிலை உண்மையாக இருக்க வேண்டும்.

படைப்புகள்

உலக மக்கள் தங்கள் வாழ்க்கைச் சிக்கல்களுக்குத் தாமே தீர்வு கண்டு மனநிறைவு அடைவது கடினம் என உணர்ந்து, இத்தகையோருக்கு வழிகாட்டும் முயற்சியாகவே வேதாத்திரி தமது படைப்புகளை வழங்கியுள்ளார்.

மத்மும் மனிதனும், செயல்விளைவுத் தத்துவம், திருக்குறள் உட்பொருள் விளக்கம், வேதாத்திரியம் முதலான 40க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவற்றிலுள்ள போரில்லா நல்லுலகம், பொருட்துறைச் சமநீதி, நேர்மையான நீதி, நல்லாட்சி, சீர்ப்பண்பாடு, நற்சிந்தனையாளர் வழி வாழ்வு, பெண்மைக்கு மதிப்பு, தெய்வநீதி வழி வாழ்வு, தேர்த் திருவிழா தவிர்த்தல், விளைவு உணர் கல்வி, சீர்காந்த நிலை, உணவு-நீர் பொதுமை, கடவுள், மதம் ஒன்றெனத் தெளிதல் போன்ற சமூகச் சிக்கல்களுக்கான ஆய்வுத் தீர்வுகள் வாழ்வியல் முன்னேற்றத்திற்கு வழிகாட்டுவன. கூறியது கூறாமை, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் எனும் வகையில் இனிவரும் படைப்புகள் அமையின் பெரிதும் பயனுடையதாய் அமையும்.

கவிதை

தம் படைப்புகளை உரைநடையிலும் கவிதை வடிவிலும் தந்துள்ளார். இவர் சிறுவயதில் இருந்தே கவிதை எழுதும் ஆற்றல் உடையவர். ஒவ்வொரு இரவும் தவம், தத்துவ ஆராய்ச்சி செய்ததன் விளைவால் தனக்குக் கிடைக்கும் வாழ்வியல் அனுபவங்களை அவ்வப்போதே கவிதைகளாக எழுதிவிடுவார். இவரது **மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து** எனும் கவிதை

நூலில் பொருளாதாரம், அரசியல், சமுதாயம், அறிவியல் பற்றிய கருத்துகள் பாடுபொருளாக உள்ளன. உலக சமாதானம் என்ற நூலுக்குத் தாமே உரை எழுதியுள்ளார். இவரது கவிதைகளில் மனிதநேயம், ஆளுமை வளம், சமாதானம், உலக சமாதானம், ஒற்றுமை போன்ற உயர்ந்த நெறிகள் சமரச நோக்கோடு கூறப்படுகின்றன.

பன்னாள் ஆராய்ச்சியால், அனுபவத்தால் கண்டறிந்த உண்மைகளைச் சுருக்கிச் சொல்லிப் படிப்பவரின் சுய அறிவைத் தூண்டி விழிப்படையச் செய்வனவாய் உள்ளன. எதார்த்தமாகத் தன் மனத்தில் தோன்றியவற்றை எதுகை, மோனை, முரண், இயைபு, உவமை, உருவகம், சொல்லாட்சி போன்ற அலங்காரங்களோடு விளக்குகின்றார். இவரது கவிதைகள் கருத்துச் செறிவுள்ளவை; மொழிக் கட்டமைப்பு கொண்டவை. மரபு மற்றும் புதுமணம் கொண்டவை; சமூக விழிப்புணர்வு தருபவை; தூய்மை உணர்வோடு இன்பம் துய்க்கச் செய்பவை.

இவர் இரண்டாம் திருமணம் செய்து கொண்டவராயினும் அது முறையற்றது என நம்பினார். அதற்கான கருத்துகளைப் பன்னிரண்டு கவிதைகளில் எழுதினார். அதுபோது நண்பர் ஒருவர் தனது இரண்டாம் திருமணம் குறித்துக் கருத்துக் கேட்க வேதாத்திரியிடம் வந்தார். வந்த நோக்கம் தெரியாமலே இவரது கவிதைகளைப் படித்துப் பார்க்கச் சொன்னார். அதைப் படித்து விட்டு, நன்றாக இருக்கிறது என்று மட்டும் கூறிச் சென்று விட்டார். சென்றவர் தனக்கு ஏற்பாடு செய்துகொண்டிருந்த இரண்டாம் திருமணத்தை நிறுத்தி விட்டார். தம் கவிதையால் ஏற்பட்ட பயனை அறிந்து மகிழ்ந்த இவர் மற்றவர்களுக்கும் பயன்படட்டுமே என்று கருதி 2000 படிகள் அச்சிட்டு வழங்கினார். இப்படி அனுபவங்களால் கிடைத்தவையே உலக சமாதானம், ஞானக்களஞ்சியம் போன்ற நூல்கள்.

1956இல் பெண்களுக்கு இழைக்கின்ற அநீதியையும் குறைபாடுகளையும் விளக்கி **ஆண்களோ பெண்டிழந்தால் அவர் மறுமணமே கொள்வார்** என்று தொடங்கும் ஒரு

கவிதையை எழுதிச் சுதேசமித்திரனுக்கு அனுப்பினார்; பலர் இவர் கருத்தை எதிர்த்தனர். அதன்பின் 25 ஆண்டுகளுக்குப் பின் சில அமைச்சர்களும் பிறரும் இவரிடம் வந்து வெள்ளையர் ரத்து செய்த சதியை மீண்டும் சட்டமாக்கும் திட்டத்திற்குத் தங்களின் அனுமதியும் ஆசியும் வேண்டுமென்றனர். இதை நான் தடுக்க முடியாது, தடுக்கவும் கூடாது என்று கூறிய அவர், இச்சட்டத்தில் மனைவி இறந்தால் கணவரும் உடன்கட்டை ஏறவேண்டும் என்ற சிறுதிருத்தம் செய்ய வேண்டுமென விரும்புகிறேன் என்றார். திரும்பிச் சென்ற இவர்களின் எதிர்ப்பால் இச்சட்டம் நிறைவேற வில்லை (அறிஞர்களின் கடமை, பக். 45-47).

முடிவுரை

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு மனவலிமையையும் நினைவாற்றலையும் பெருக்குங்கள் என்பது வேதாத்திரி மகரிஷியின் தாரக மந்திரம். இதனை நடைமுறையில் செயல்படுத்துவதற்காகக் காரண காரிய வகையில் விளக்குகிறார். தற்காலத்தார் ஏற்றுக்கொள்ளும் வகையில் காந்தம், அணுக்கொள்கை போன்ற அறிவியலின் துணையுடன் ஆன்மீக நெறியைத் தெளிவுபடுத்துகின்றார்.

மனிதனின் துன்பத்திற்குத் தன்னல மயக்கம்தான் காரணம் என்கிறார். தன்னலத்துடன் பிறர்நலம் வேண்டுவதற்கு மனத்தை வலிமையானதாக மாற்றிக் கொள்ளவேண்டும் என்கிறார். நமது மரபார்ந்த முன்னோர்களின் சிந்தனைகளை அறிந்துகொண்டு, அவற்றைத் தன் மன ஆய்வுக்குட்படுத்தித் தற்காலத் தேவைக்கு ஏற்ப வழங்கியுள்ளார்.

சுயமுயற்சியால் முன்னேறிய இவர் சிறுவயது முதல் வறுமையை ஒழிப்பது எப்படி? கடவுள் யார்? உயிர் என்றால் என்ன? அது எப்படி இருக்கிறது எனச் சிறுவயது முதல் எழுந்த கேள்விகளுக்குப் பல ஆண்டுகள் சிந்தித்து ஆராய்ந்து விடைகளைத் தானுணர்ந்து உலகிற்கும் உணர்த்தினார். இத்தகு சிறப்புகளால் அருள்தொண்டராய், தத்துவ ஞானியாய் உலகத்தாரால் போற்றப்பட்டார்.

வேதாத்திரி மகரிஷியின் நூல்கள்

1. அறிஞர்களின் கடமை, ஈரோடு, 2002.
2. இறையுணர்வும் அறநெறியும், ஈரோடு, 1991.
3. எனது வாழ்க்கை விளக்கம், ஈரோடு, எட்டாம்பதிப்பு 2004.
4. உலக சமுதாய வாழ்க்கை நெறி, ஈரோடு, 2003.
5. வாழ்க்கை வள உயர்வுப் படிகள் ஐந்து, ஈரோடு, எட்டாம் பதிப்பு 2004.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

ஏ.என். சிவராமனின் பத்திரிகை உலகம்	30.00
தமிழிலக்கிய வகைமையியல் - 3 தொகுதிகள்	395.00
தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல், தொழில்நுட்பம் - 2 தொகுதிகள்	190.00
மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண்	40.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி..பி. 1851-2000	180.00
தமிழர் கண்ட தாவரவியல்	40.00
இதழாளர் பெரியார்	160.00
திராவிட இயக்க இதழ்கள் தொகுதி 1	60.00
சைவசித்தாந்தத்தில் ஆன்மக் கொள்கை	65.00
பெரியபுராணம் - திருமுறைகளின் கவசம்	55.00
காஞ்சிபுரம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன்	65.00
திருவாவடுதுறைப் புராணம்	250.00
மகாவித்துவான் ரா. ராகவையங்கார்	30.00
சித்தாந்தச் செல்வர் க. வெள்ளைவாரணனார்	25.00
தமிழ் உரைநடையும் கிறித்தவர் பங்களிப்பும்	20.00
திருக்குறளில் பொதுநிலை உத்திகள்	30.00
தமிழிலக்கியத்தில் மனிதநேயம்	115.00
தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம்	30.00
தமிழில் பிறதுறைக் கோட்பாட்டாய்வுகள் வரலாறும் மதிப்பீடும்	25.00
வஉசி. பன்முகப் பார்வை	25.00
இஸ்லாமியத் தமிழ்ப் புதினங்கள் சித்திரிக்கும் அறியப்படாத வாழ்வும் பண்பாடும்	40.00
பாரதியின் சமுதாயச் சிந்தனைகள்	25.00
சமூகத்திலும் இலக்கியத்திலும் ஊனமுற்றோர்	80.00
தே.பொ. மீனாட்சி சுந்தரனாரின் தமிழ்த்தொண்டும் மொழியியல் பங்களிப்பும்	25.00
சங்கத் தமிழரின் மனிதநேய மணிநெறிகள்	45.00
மக்கள் நேயச் சுயமரியாதை	30.00

554. வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள் 130.00